சங்க இலக்கியத்தில்

# விலங்கின விளக்கம்

திரு பி எல் சாமி

கழக வெளியீடு: ௧௩௬௫

# சங்க இலக்கியத்தில்

# விலங்கின விளக்கம்

★

ஆசிரியர் :

திரு பி எல் சாமி, பி. எஸ்ஸி,

★

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை-1
திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
1970

© பி. ஓரர்து சாமி (1925)

1970 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed 1 August 1970

O31,1A : g (KZ)
N70

SANGA ILAKKIATHIL
VILANGINA VILAKKAM

Appar Achakam, Madras-1. (I/2)

# பதிப்புரை

தமிழன்னையின் தலைசிறந்த அணிகளாகத் திகழ்வன சங்க நூல்கள். இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த செந்நாப் புலவர்களின் விழுமிய கருத்துக் கனிக ளாய் மிளிரும் பாடல்கள் சங்க நூல்களிலுள்ளன. அப் புலவர்கள் நுண்மாண் நுழைபுலம் மிக்கவர்கள் என்பதை அப் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன. இயற்கையோடு இரண்டறக் கலந்து தம்மைச் சுற்றியிருந்த உலகத்திற் கண்ட உண்மைகளையெல்லாம் பாடல்களில் வடித்துக் கொடுத்துள்ளார்கள் அச் செந்நாப் புலவர்கள்.

கற்பனை வளம்மிக்க தமிழ்ப் புலவர்களாக அவர்கள் விளங்கியபோதும் இயற்கையையும் சூழலையும் உற்று நோக்கித் தாம் கண்ட உண்மைகளைத் தத்தம் பாடல்களில் பொதிந்து வைத்துள்ளனர். மொழிப் புலமை பெற்றோர்க்கு வேறு இயற்புலமை இருக்காது என எண்ணம் பரவியுள்ள இன்றைய சூழலில் சங்கப் புலவர்கள் பாடல்களில் பொதிந் துள்ள விலங்கின விளக்கத்தைப் பயின்று அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள் இன்றைய விலங்கியல் கருத்துக் களோடு எங்ஙனம் இணைந்துள்ளன என்பதை இவ் வுலகுக்கு எடுத்தியம்பவே இந்நூல் எழுந்துள்ளது.

சங்கப் புலவர்கள் மொழிப்புலமை மட்டும் பெற் றிருக்கவில்லை. விலங்கியல், செடிகொடி யியல், வானியல் போன்ற பல இயல்களிலும் சிறந்து விளங்கினர் என்பதைச் சங்கப் பாடல்கள் விளக்குகின்றன. ஐவகை நிலத்திலும் நீரிலும் வாழ்ந்த விலங்குகளை உற்றுநோக்கி அவற்றின் இயல் பறிந்து, வாழ்க்கை முறை அறிந்து அவற்றைத் தாம் எடுத்துக்கொண்ட பாட்டின் பொருளுக்கேற்ப உவமை யாகவோ அல்லது நிலவருணனையாகவோ சேர்த்துப்

புலவர்கள் கொடுத்துள்ளனர். ஒவ்வொரு விலங்கைப் பற்றியும் பழந்தமிழ்ப் புலவர்கள் அளிக்கும் உருவ விளக்கம், அவற்றின் பழக்க வழக்கங்கள், ஊண் முதலியன இக்கால விலங்கியல் அறிஞர்கள் அளிக்கும் விளக்கங்களோடு ஒத்துள்ளன. இன்றைய விலங்கின அறிஞர்கள் புலவர்க ளல்லர். ஆனல் அன்றையப் புலவர் பெருமக்கள் விலங் கியல்பற்றிய உண்மைகளை யறிந்து வைத்திருந்தனர்.

சங்கப் பாடல்களில் காணப்படும் இத்தகைய சிறப் புக்களை எடுத்துத் தொகுத்துத்தர வேண்டுமென்ற நோக்கத் துடனேயே இந்நூல் வெளிவருகின்றது.

தமிழகத்தின் இன்றையக் கல்வி அமைச்சராக விளங்கும் மாண்புமிகு நாவலர் இரா நெடுஞ்செழியன் அவர்கள் 1962 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 3 ஆம் நாள் கழக வழி நடைபெற்ற சூளாமணி வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் "சங்க இலக்கியத்தில் எடுத்தாளப் பெற்றுள்ள மலர்கள், செடிகொடிகள், விலங்கு கள், பறவைகள் போன்ற பல்வகைப் பொருட்களைப் பற்றிப் படங்களுடன் கூடிய நூல்கள் வெளிவருதல் வேண்டும். அத்தகைய நூல்களைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தான் வெளியிட முடியும் அதனுலேதான் திரு சுப்பையா பிள்ளையை மீண்டும் மீண்டும் அதனைச் செய்து நிறை வேற்றும்படி வற்புறுத்திக் கூறுகிறேன்'' என்ருர்கள்.

கழக ஆட்சியாளர் திரு சுப்பையா பிள்ளை அவர்கள் அவ் விழாவின் நன்றி யுரையில் "அன்பர் நெடுஞ்செழிய னவர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவை யெல்லாம் என் மனத்திலும் உண்டு. அவற்றைச் செயலாக் குவதற்குத் தக்க புலவர்களும் சூழ்நிலையும் அமையாமை யால்தான் அவை நிறைவு பெறவில்லை. ஆனல் சில ஆண்டு களாக இறைவன் யான் எண்ணிய எண்ணங்களைக் காலந் தாழ்த்தேனும் நிறைவேறும்படி செய்தருளுகின்ருன். எனவே அவர்கள் கூறிய கருத்துக்களும் விரைவிலே முற்றுப் பெறும் என நம்புகிறேன்'' என்று கூறினர்.

அவர் தம் எண்ணம் திண்ணியதாதலின் எண்ணியாங்கு அறிவியலறிஞரும் சங்கத் தமிழில் நன்கு தோய்ந்த புலவருமாகிய திரு பி. எல். சாமி அவர்களின் தொடர்பு அவர்கட்குக் கிட்டியது. அறிவியற் பாடத்தில் இளங்கலைப் பட்டம் (B. Sc.) பெற்ற அவர்கள் புதுவை அரசில் பொறுப்பான பணியை ஏற்றுள்ளவரெனினும் ஓய்வு கிடைத்த போதெல்லாம் அறிவியற் கண் கொண்டு சங்க இலக்கியங்களைக் கற்று வந்தார். இக்கால அறிவியற் கருத்துக்கள் சங்க இலக்கியங்களிலே இலைமறை காய்போற் பொதிந்து கிடப்பதைக் கண்டு கழிபேருவகை எய்துவர். அங்ஙனந் தாம் காணும் ஒப்புமைக் கருத்துக்களைக் கொண்டே முதலில் செடி கொடிகளைப் பற்றிச் 'செந்தமிழ்ச் செல்வி'க்குக் கட்டுரைகள் எழுதி வந்தனர். அவற்றையே தொகுத்துச் 'சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம்' என்ற நூல் அச்சிடப் பட்டது. *31-12-1967* இல் சென்னையில் நடைபெற்ற அந்நூல் வெளியீட்டு விழாவிலே மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியனவர்கள் அதனை மிகவும் பாராட்டி வெளியிட்டார்கள்.

அதைத் தொடர்ந்து சங்க இலக்கியங்களிற் காணப்படும் விலங்குகளைப் பற்றிக் கட்டுரைகள் எழுதிவரலானார். அக்கட்டுரைகளின் தொகுப்பே 'சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்' என்ற இந்நூலாகும். இதனைத் தொடர்ந்து 'சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்' என்ற நூல் வெளியிடப் பெறும்.

கழக ஆட்சியாளர் விரும்பியபடி இவ்வரிய நூலை எழுதித் தந்த அறிஞர் பி. எல். சாமி அவர்கட்குத் தமிழுலகு பெரிதும் கடப்பாடுடையது.

வெவ்வேறு கலை நூல்களைப் பயின்றவர்கள் தாம் துறை போகக் கற்ற கலைகளின் கண் கொண்டு சங்க இலக்கியங்களைத் துருவி ஆய்ந்து கலை நூல்களைத் தமிழில் எழுதுவதற்குத் திரு பி. எல். சாமி அவர்கள் வழிகாட்டியவராவார்கள்.

திரு பி. எல். சாமி அவர்கள் மேலும் பல கலை நூல்களைத் தமிழில் ஆக்கித் தமிழுலகுக்கு வழங்கும்படி திருவருள் புரிக, வெனக் கழகம் வாழ்த்துகின்றது. இத்தகைய கலை நூல்கள் மேன்மேலும் வெளிவரக் கல்விக்கூடங்களும் பொது நூலகங்களும் முன்னர் வெளிவந்த செடி கொடி விளக்கத்தையும் இவ்விலங்கின விளக்கத்தையும் வாங்கி யுதவுவார்களாக. இத்தகைய நூல்களை அச்சிடுவதற்குத் தமிழக வரசும் பொருளுதவி செய்வது இன்றியமையாத தாகும்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.



தமிழகக் கல்வி அமைச்சர்
மாண்புமிகு நாவலர் இரா. நெடுஞ்செழியன்

# அணிந்துரை

மாண்புமிகு. நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.,
தமிழகக் கல்வியமைச்சர்.

பண்டைத் தமிழரின் நாகரிகத்தையும், பண்பாட்டையும், பழந்தமிழின் இலக்கியப் பாங்கையும், தொன்மைத் தமிழ்ப் புலவர்களின் நுண்மாண் நுழைபுலத்தையும் சிறப்பாகவும், செம்மையாகவும் எடுத்துக்காட்டும் சங்க இலக்கியத்திலிருந்து விலங்கினம் பற்றிய விளக்கத்தைத் திரு. பி. எல். சாமி அவர்கள் ஒரு நூல் வடிவில் தமிழ் உலகுக்குத் தந்திருப்பது மிகவும் போற்றிப் பாராட்டுதற் குரியதாகும்.

பண்டைத் தமிழ் மக்களும், சங்க காலத்துச் சான்றோரும் பல்துறை பற்றிய அறிவு நூல்களைக் கற்றிருந்தனர் என்பதற்கும், அத்தகைய அறிவுத் துறை நூல்கள் பல அந்தக் காலத்தில் மிகவும் பெருகியிருந்தன என்பதற்கும் இந்நூல் சிறந்த சான்றாகும்.

சங்கச் செய்யுட்கள் என்று இன்று நமக்குக் கிடைத்திருக்கும் பாடல்கள் எண்ணிக்கையில் மிகமிகக் குறைவானவையாகும். சங்க காலப் புலவர்கள் பாடிய பாடல்களில் அவர்கள் பாடியனவாக ஒரு சில பாடல்கள் மட்டுமே நமக்குக் கிடைத்திருக்கின்றன. நமக்குக் கிடைக்கப் பெறுமல் அழிந்துபட்ட பாடல்களின் எண்ணிக்கையைக் கூர்ந்து எண்ணிப்பார்க்கும்போது, அவை எண்ணிறந்தனவாக இருந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கும். அந்தப் பாடல்களெல்லாம் நமக்குக் கிட்டியிருக்குமாயின், எத்தனையோ அரிய நுண்பொருள் கருத்துக்களை நாம் அறிந்திருக்க இயலும். கிடைத்தவற்றிலுள்ள

சிறப்பினைக்கொண்டு, கிடைக்காதவற்றின் சிறப்பினை நினைந்து மகிழ வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சங்கப் பாடல்களிடையே பரவலாகக் காணப்படும் செடி கொடிச் செய்திகளைப்பற்றி இந்நூலாசிரியர் 'சங்க இலக்கியத்தில் செடிகொடி விளக்கம்' என்ற நூலை முன்னர் வெளியிட்டார். அது பல்லோராலும் போற்றிப் பாராட்டி வரவேற்கப்பட்டது. அதுபோன்ற பழந்தமிழ்ப் பாடல்களில் பொதிந்து கிடக்கும் விலங்குகள் பற்றிய செய்திகள் அனைத்தையும் தொகுத்துப் பகுத்து முறைப்படுத்தி, இந்நூலில் நமக்கு அளித்துள்ளார். இதிலிருந்து அக்காலப் புலவர்கள் எவ்வாறு இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர் என்பதும், இயற்கை பற்றிய அறிவியல் தன்மையை எப்படியெல்லாம் அவர்களால் உணரமுடிந்தது என்பதும், இயற்கையை எவ்வாறு நுண்ணிய நோக்குடன் கண்டறிந்தனர் என்பதும் புலப்படுகின்றன. விலங்கினங்களின் வாழ்க்கை முறையை நன்குணர்ந்து, அதனை உவமையாகவும், உள்ளுறையாகவும் அவர்கள் விளக்கிக் காட்டியுள்ளனர். விலங்கினங்களின் உறுப்புக்களை விளக்கிடும்போது இக்கால விலங்கியலறிஞர்கள் எவ்வாறு விளக்குவரோ, அவ்வாறு நுணுக்கமாக விளக்கியுள்ளனர். இந்நூலாசிரியர், பல இடங்களில், புலவர்கள் தந்துள்ள விளக்கத்தையும் இன்றைய விலங்கியலறிஞர்கள் கொடுக்கும் விளக்கத்தையும் இணைத்துக்காட்டி இரண்டும் ஒன்றுயிருப்பதைச் சுட்டிக் காட்டிப் பெருமிதம் அடைகின்றனர்.

இத்தகைய அரிய ஆராய்ச்சி நூல்களே இன்றைய தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தேவை. தமிழ் வளர்ச்சிக்குத் தேவையானவற்றை அறிந்து, காலத்தால் உணர்ந்து, கடமை ஆற்றிவரும் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் இதுவரை 1400க்கு மேற்பட்ட அரிய நூல்களை வெளியிட்டுள்ளனர். அறிவியல் துறைகளைத் தமிழில் கற்க முடியுமா என்ற வினவை இன்னமும் சிலர் எழுப்பி வருகின்றனர். இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு

வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் தனிப் பாடல்களிலேயே இவ்வளவு நுண்ணிய விலங்கியல் உண்மைகள் இடம் பெற்றுள்ளன என்றால் இன்றுள்ள அறிவியலுக்குத் தமிழ் மொழி இளைந்து, குழைந்து கொடுக்காது என்று எவ்வாறு கூற இயலும்? இத்தகைய நூல்களைக் கழகம் மேலும் மேலும் வெளியிட்டுத் தமிழுலகிற்கு வழங்குவதாக!

இந்நூலையடுத்து, 'சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம்' என்ற நூலை இந்நூலாசிரியர் வெளிக்கொண்டுவர இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ் மொழியின் பழம்பெருங் கருவூலம் 'சங்க இலக்கியம்'. அக் கடலில் மூழ்க மூழ்க முத்துக்கள் கிடைத்துக் கொண்டேயிருக்கும். அவ்வாறு முத்துக் குளித்துப் பழந்தமிழின் பெருமையை உலகுக்கு எடுத்துக்காட்டும் இந்நூலாசிரியரின் பணியை மிகவும் பாராட்டுகிறேன். அவருடைய தமிழ்த் தொண்டு மேலும் மேலும் வளர்ந்து சிறந்த வெற்றி பயப்பதாக!

தமிழ் அறிஞர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் போன்றவர்களின் கைகளில் தவழவேண்டிய இந்நூல் தமிழகத்துக் கல்லூரி, பள்ளி, பொது நூலகங்கள் அனைத்திலும் இடம் பெறவேண்டுமென்பதே எனது அவா.

———

# முன்னுரை

சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள அறிவியற் செய்திகளை வெளியிட வேண்டுமென்ற நோக்கத்துடன் முதலில் செடி கொடி விளக்கம் என்ற எனது நூல் கழகத்தின் வழி வெளிவந்தது. அப்போதே கழக ஆட்சியாளர் திரு. சுப்பையா பிள்ளையவர்கள் சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள விலங்கு களையும் பறவைகளையும்பற்றி விளக்கமாக நூல்களை எழுத வேண்டுமென்று கேட்டுக் கொண்டார் அதன்படி இந்த 'விலங்கின விளக்கம்' நூலாக வெளிவருகின்றது.

சங்க நூல்களில் சொல்லப்பட்டுள்ள விலங்குகளையும் அவைகளைப் பற்றிய செய்திகளையும் அறிவியல் அடிப்படை யாக ஆராய்ந்து விளக்கமாகக் கூற இந்த நூலை எழுதியுள் ளேன். சங்க நூல்களில் முப்பத்தைந்து விலங்குகளைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. அந்தச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டே அறிவியல் ஆராய்ச்சி செய்து அந்த விலங்குகள் விலங்கு நூற்படி எவை எவை என்பதை அறுதியிட்டுள்ளேன். சங்க நூல்களில் வரும் விலங்கு நூற் செய்திகள் பெரும்பாலும் சங்க நூற் புலவர்கள் நேரிற் கண்டு கூறிய அறிவியற் செய்திகளாகும். பண்டைத் தமிழகம் இன்றைய கேரள நாட்டையும் கொண்டிருந்த தால் இன்று மேற்குத் தொடர்ச்சி மலைக்காடுகளில் சங்க நூல்களில் கூறப்படும் விலங்குகளை மிகுதியாகக் காண கிறோம். இன்று தமிழ்நாடு, கேரள நாடு ஆகிய நாடுகளின் காடுகளில் காணப்படும் சில சிறு விலங்குகளைத் தவிர மற்ற எல்லா விலங்குகளைப்பற்றியும் சங்க நூல்களில் செய்திகள் வருவது வியப்பைத் தருகின்றது. ஆனல் இந்த விலங்குகள் இவை என்று கண்டும் கேட்டுமறியாத தமிழ் மக்கள் இன்று பலர் உளர்.

அண்மையில் *ஒரு தமிழ் நாட்டு அறிஞர் ஓர் அறிவியல் வரலாற்று ஆராய்ச்சி மாநாட்டிலும், பம்பாயிலிருந்து வெளிவரும் சிறந்த அறிவியல் ஆராய்ச்சி இதழிலும் தப்பும் தவறுமாகச் சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள விலங்குகளைப்பற்றி எழுதினார். சங்க இலக்கியத்தில் விலங்குகள், பறவைகள் பற்றிச் சில செய்திகளே காணப்படுவதாகவும், அச்செய்திகளும் இயற்கைக்கு ஒவ்வாத கற்பனைகளுடன் கலந்திருப்பதாகவும் எழுதியுள்ளார். சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள மரையானை விலங்கு என்று உணராது மரையான் நெல்லிக்காயைத் தின்னும் ஒருவகைக் கொக்கு என்று எழுதினார்! எட்டுக் காலையுடைய வருடை மானைப்பற்றிக் குறுந்தொகை கூறியிருப்பதாக உறுதியாகச் சொல்லியிருக்கிறார். மற்றும் சங்க இலக்கியத்தில் காணாத கற்பனைச் செய்திகளையும் புராணச் செய்திகளையும் சங்க நூல்களில் கண்டதாக எழுதியுள்ளார். சங்க நூல்களில் போதிய புலமையில்லாக் காரணத்தால் இத்தகைய போலியான ஆராய்ச்சிகளை அறிவுலகில் உலவவிடுகின்றனர். ஆதலின் கற்றறிந்த தமிழர் சங்க நூல்களில் கூறிய விலங்குகளைப் பற்றி நன்கு உணர்ந்து அவைகளைத் தமிழ் நாட்டுக் காடுகளிலும் விலங்குக் காட்சிச்சாலைகளிலும் கண்டுகளிக்க வேண்டும். தமிழ்நாட்டு விலங்கு நூலறிஞர்களும் சங்க இலக்கியத்தில் கூறிய அரிய பெரிய அறிவியற் செய்திகளை உணரவேண்டும். அப்போதுதான் சங்கப் புலவர்கள் சிறந்த இயற்கை ஆராய்ச்சியாளர்கள் (Naturalists) என்பதை அறிவர்.

இந்த நூலில் பெயர் குறிப்பிடாமல் ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்ட மேற்கோள்கள் பம்பாய் இயற்கை வரலாற்று ஆராய்ச்சிக் கழகத்தார் வெளியிட்டுள்ள இந்திய விலங்குகள் (The Book of Indian Animals) என்ற நூலிலிருந்து எடுத்து ஆளப்பட்டவை. இந்த நூலில்

* H. Srinivasa Rao in Symposium on History of Sciences of India, 1968 and in Journal of the Bombay Natural History Society, 1957.

வெளிவந்துள்ள படங்களில் பெரும்பாலானவை புதுவை ஓவியர் சந்தனசாமி அவர்கள் வரைந்தவை. அவர்க்கு எனது நன்றி. மற்றும் அவ்வப்போது நான் எழுதிய கட்டுரைகளைப் படியெடுத்து உதவிய வில்லியனூர் இலக்குமி நாராயணன் அவர்களுக்கும் எனது நன்றி. இந்த நூல் வெளிவந்தது கழக ஆட்சியாளர் திரு. சுப்பையா பிள்ளையவர் களின் தளரா முயற்சியால் என்று நான் சொன்னால் அது மிகையாகாது. அவருடைய அயராத் தூண்டுதற்கும், அன்பிற்கும் நான் எனது நன்றியைச் செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன். கற்றறிந்த தமிழுலகம் இந்நூலை வரவேற்கு மென்று நம்புகின்றேன்.

—பி. எல். சாமி.

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| க. | குரங்குகள் (Monkeys) | 1 |
| உ. | வருடை (Nilgris Tahr) | 51 |
| ங. | ஆமான் (The Gaur or Indian Bison) | 67 |
| ச. | மான்கள் (Antilopes and Deer) | 85 |
| ரு. | கேழல் (The Indian Wild Boar) | 141 |
| சா. | நரி, கோநாய், தீநாய் (The Jackal, The Wolf, The Hyena) | 163 |
| எ. | செந்நாய் (The Wild Dog) | 180 |
| அ. | கரடி | 196 |
| கூ. | வெருகு (The Jungle Cat) | 214 |
| க0. | புலி | 226 |
| கக. | யானை | 277 |
| கஉ. | நீர் நாய் (The Smooth Indian Otter) | 373 |
| கங. | எலி | 381 |
| கச. | அணில் | 389 |
| கரு. | முயல் (The Indian Hare) | 394 |
| கசா. | முளவுமா (Porcupine) | 402 |
| கஎ. | மலைவாழ் விலங்குகள் | 410 |
| கஅ. | கடல்வாழ் விலங்குகள் (Marine Mammals) | 429 |
| ககூ. | பறக்கும் விலங்கு (Indian Flying fox) | 442 |
| உ0. | வளர்ப்பு விலங்குகள் (Domesticated Animals) | 444 |
| உக. | கவரிமா | 458 |

# விலங்கு வரிசை

| | தமிழ்ப் பெயா | ஆங்கிலப் பெயர் | அறிவியற் பெயர் |
|---|---|---|---|
| 1. | செம்முகமந்தி | Bonnet Monkey | Macaca Radiata |
| 2. | மாமுகமுசு | Common Langur | Presbytis Entellus |
| 3. | நரைமுகஊகம் | Lion-tailed Monkey | Macaca Silenus |
| 4. | கருங்கலே(அ)காார் | Nilgris Langur | Presbytis Johnii |
| 5. | வருடை (அ) வரையாடு | Nilgris Tahr | Hemitragus Hylocrius |
| 6. | ஆமான் | Indian Bison | Bos Gaurus |
| 7. | இரலே | Black Buck | Antilope Cervicapra |
| 8. | நவ்வி | Indian Gazelle | Gazella Gazella |
| 9. | மரையான் | Blue Bull | Boselaphus Tragocamelus |
| 10. | கலேமான் (அ) உழை | Spotted Deer | Axis Axis |
| 11. | கடமா | Sambar | Cervus Unicolor |
| 12. | கேழல் | Indian Wild Boar | Sus Scrofa |
| 13. | கணநரி | Jackal | Canis Aureus |
| 14. | கோநாய் | Wolf | Canis Lupus |
| 15. | தீநாய் | Hyena | Hyaena Hyaena |
| 16. | செந்நாய் | Indian Wild Dog | Cuon Alpinus |
| 17. | எண்கு | Sloth Bear | Melursus Ursinus |
| 18. | வெருகு | Jungle Cat | Felis Chaus |
| 19. | வரிப்புலி | Tiger | Panthera Tigris |
| 20. | புள்ளிப்புலி | Panther or Leopard | Panthera Pardus |

| | தமிழ்ப் பெயர் | ஆங்கிலப் பெயர் | அறிவியற் பெயர் |
|---|---|---|---|
| 21. | யானை | Indian Elephant | Elephas Maximus |
| 22. | நீர்நாய் | The Smooth Indian Otter | Lutra Perspicillata |
| 23. | இல்லெலி | Common House Rat | Rattus Rattus |
| 24. | கருப்பை | Metad | Millardia Meltada |
| 25. | வெள்ளெலி | Mole-Rat | Bandicota Bengalensis |
| 26. | அணில் | Three-stripped palm Squirrel | Funambulus Palmarum |
| 27. | வெளில் | Indian Giant Squirrel | Ratufa Indica |
| 28. | முயல் | Indian Hare | Lepus Nigricollis |
| 29. | முளவுமா | Indian Porcupine | Hysterix Indica |
| 30. | தீர்வை | The stripe-necked Mangoose | Hespestes Vitticolis |
| 31. | மகண்மா (தேவாங்கு) | Slender Loris | Loris Tardigradus |
| 32. | பன்மயிர்ப் பேரெலி | Weasel or Marten | — |
| 33. | பெருமீன் (அ) பனைமீன் | Whale | Cetacea |
| 34. | வாவல் | Indian Flying Fox | Peteropus Giganteus |
| 35. | கவரிமா | Yak | Bos Grunniens. |

# எடுத்தாளப்பெற்ற மேற்கோள் நூல்கள்

## (தமிழ்)

அகநானூறு
அறநெறிச்சாரம்
இறையனார் அகப்பொருள்
ஐங்குறுநூறு
ஐந்திணை யெழுபது
கந்தபுராணம்
கம்பராமாயணம்
கலித்தொகை
களவழி நாற்பது
குறிஞ்சிப் பாட்டு
குறுந்தொகை
கைந்நிலை
சிலப்பதிகாரம்
சிறுபாணாற்றுப்படை
சீகாளத்திப் புராணம்
சீவகசிந்தாமணி
தணிகைப் புராணம்
திணைமாலை நூற்றைம்பது
திருமுருகாற்றுப்படை
தொல்காப்பியம்
நற்றிணை
நாலடியார்
நெடுநல்வாடை
பட்டினப்பாலை
பதிற்றுப்பத்து
பரிபாடல்
பழமொழி நானூறு
பன்னிருபாட்டியல்
புறநானூறு
புறப்பொருள் வெண்பாமாலை
பெருங்கதை
பெரும்பாணாற்றுப்படை
மணிமேகலை
மதுரைக் காஞ்சி
மலைபடுகடாம்
முல்லைப் பாட்டு
யாப்பருங்கல விருத்தி

# மேற்கோள் நூல்கள்

## (BIBLIOGRAPHY)

### (ஆங்கிலம்)


1. Prater S. H. ...The Book of Indian Animals
2. Augustus Somerville ...The Passing of Forest Gods
3. Kenneth Anderson ...This is the Jungle
4. Kenneth Anderson ...The Tiger Roars
5. Gree E. P. ...The wild Life of India
6. Lieut-colonel. Pollack A. J. O ...Sporting Days in Southern India
7. Jim Cobbett ...Man-eating Tigers of Kumaon
8. Ivan T. Sanderson ...The Dynasty of Abu
9. Richard Carrington ...Elephants
10. Ramesh Bedi ...Elephant
11. Champion H G. . Forestry
12. Bor N. L. . Manual of Indian Forest Botany
13. Dr. Verrier Elwin ...Myths of Middle India
14. Indian Forester-November, 1928
15. Indian Farming-February, 1961



கருங்கஉல (அல்லது) நீலகிரிமுசு



மூசுக்குரங்கு


ஊகம்
மந்திக்குரங்கு



வெருகு



எண்கு



செந்நாய்



சிறுத்தைப்புலி



வரிப்புலி

# சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்

## க. குரங்குகள்
## (MONKEYS)

விலங்குகளில் முதன்மையான இனத்தில் குரங்கினைச் சேர்த்துக் கூறுவர். மனிதன் இந்த முதல் இனத்திற்குத் (Primates) தலைமை தாங்குகின்றான். இந்த முதன்மையான விலங்கினத்தில் குரங்கினத்தைப் பற்றிப் பல செய்திகள் சங்கநூல்களில் தெளிவாகவும், நுட்பமாகவும் கூறப்பட்டுள்ளதைக் காணும்போது பெரும் வியப்பெழுகிறது. இந்தியாவில் வாழும் குரங்கினத்தில் தமிழ் நாட்டிலே காணப்படும் நான்குவகைக் குரங்கினத்தைப் பற்றியும் சங்க நூல்களில் செய்திகளைக் காண்பது குறிப்பிடத்தக்கதாகும். சங்க இலக்கியத்தில் வடநாட்டில் காணப்படும் குரங்கு வகைகளைப் பற்றி யாதொரு செய்தியும் காணோம். சங்க இலக்கியத்தில் மூன்று குரங்கு வகைகளை நன்கு பிரித்து உணர்ந்திருந்தனர் என்பது தெரிகின்றது. அவை தொல்காப்பியத்தில் மரபியலில் பிரித்துக் கூறப்பட்டுள்ள "குரங்கு, முசு, ஊகம்" என்பவையாகும். இந்த மூன்றுவகைகளைத் தவிர நீலகிரியில் வாழும் ஒருவகைக் குரங்கு பற்றியும் சில செய்திகள் வருவதைப் புலவர் பலரும் தெரிந்திலர். சங்க இலக்கியத்தில் குரங்கு என்ற

சொல் பொதுப் பெயராகக் குரங்கு இனத்தையே குறித்துப் பலவகைக் குரங்குகளுக்கும் வழங்குவதைக் காண்கிறோம். ஆனால் அதே சொல் ஒரு குறிப்பிட்ட தனித்த குரங்கு வகைக்கும் சிறப்புப் பெயராக வழங்குவதைக் காணலாம். 'குரங்கு முசு ஊகமும் மந்தி' என்று வரும் தொல்காப்பிய மரபியல் 622ஆம் சூத்திரத்தில் குரங்கு என்ற சொல் ஒருவகைக் குரங்கிற்கே சிறப்பாக வழங்கிவருவதைக் காண்கிறோம். பேராசிரியரும் மரபியலுரையில் குரங்கு என்ற சொல் பொதுப் பெயராகவும் சிறப்புப் பெயராகவும் வழங்குவதை நன்கு உணர்ந்து குரங்கின் பிறப்புப் பகுதி என குரங்குக் குட்டி, முசுக்குட்டி, ஊகக்குட்டி என்று கூறினர். இக்குரங்கு வகைகள் விலங்குநூற்படி எவையென ஆராய்வோம்

தமிழ்நாட்டில் எங்கும் எளிதாகக் காணப்படும் குரங்கு, மக்களிடம் பெரிதும் பழகும் ஒருவகைக் குரங்கு வகையே என்பது தெளிவு. அதே பெயர் பின்னர்ப் பொதுப் பெயராகப் பிற குரங்கு வகைகளையும் குறித்த தெனலாம். தமிழ் நாட்டில் அன்றும் இன்றும் பொதுவாக எங்கும் எளிதில் காணப்படும் குரங்குவகை, மக்களிடம் நெருங்கிப் பழகும் குரங்கு வகை சங்க இலக்கியத்தில் 'செம்முகமந்தி' என்றும் 'செம்முகப் பெருங்கிளை' என்றும் அழைக்கப்பட்ட குரங்கு வகையே. இந்த வகைக் குரங்கிற்கு முகம் இளம் சிவப்பாக முக்கியமாகக் குளிர்காலத்தில் காணப்படும். வெயில்காலத்தில் வெண்மை நிறம் கலந்து இதன் முகம் காணப்படும். இதன் காரணமாக இக்காலத்தில் சிலர் இதை "வெள்ளைமந்தி" என்றும் கூறுவர்.

" கனிகவர்ந் துண்ட கருவிரற் கடுவன்
செம்முக மந்தியொடு சிறந்து சேண்விளங்கி
—புறம். 200

" சிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாஅங்கு "
—புறம். 378.

" கருவிரல் மந்திச் செம்முகப் பெருங்கிளை "
—நற்றிணை. 334.

" செம்முக மந்தி ஆரும் நாட "
—நற்றிணை. 355.

" செம்முக மந்தி ஆரும்
நன்மர மருங்கின் மலையிறந் தோரே "
—அகம். 241.

மேலே காட்டிய சங்கநூற் பாடல்கள் இந்த வகைக் குரங்கின் சிவந்த முகத்தைப் பற்றிக் குறிப்பாகக் கூறு வதைக் காணலாம்.

" அதவத் தீங்கனி யன்ன செம்முகத்
துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்க "
—நற்றிணை. 95.

அத்திப்பழத்தின் இளஞ்சிவப்பான பழத்தைப் போன்று இக்குரங்கின் முகம் காணப்பட்டதாகக் கூறியது அழகிய இனிய உவமையாகும். விலங்கு நூலார் கூறிய செய்திகளின் அடிப்படையாக ஆராய்ந்தால் 'செம் முகம்' என்று குறிப்பாகச் சுட்டிக்காட்டிய இக்குரங்கு வகை எதுவென எளிதில் கண்டுணரலாம். சங்க நூல்களே இந்தச் செம்முகமுடைய குரங்கை மிக அழகாக, நுட்பமாகப் பிரித்துணர்த்துகின்றன. செம் முகக் குரங்கிற்கு எதிராகப் பிற இருவகைக் குரங்கு களையும் கருமுகம், நரைமுகம் உடையனவாகக் கூறிச்

சுருங்கச்சொல்லி விளங்கவைத்த அருமை போற்றத் தக்கது. குரங்கு இனத்திலே சிறிது சிவந்த நிற மான முகத்தையுடைய குரங்கு 'Bonnet Macaque' என்பது விலங்கு நூலார் யாவரும் கண்டறிந்த எளிய செய்தியாகும். செம்முகத்தானன்றி இக்குரங்கு வகையைத் தலைமயிரொழுங்காலும், உணவை வாயில் அடக்கி உண்ணும் குணத்தாலும் மற்ற குரங்கு வகை களிலிருந்து பிரித்துக் காணலாம் என்பர். இவ்வகைக் குரங்கிற்குக் 'குல்லாய்' போட்டாற்போன்று தலையில் அரைவட்டமாக மயிர் அமைந்திருக்குமென்பர். இக் குரங்கிற்குத் தலையில் வளையமான விளிம்பில் (Whorl) குறுமயிர் பல திக்குகளிலும் நீட்டிக் கொண்டிருப் பதையே 'துய்த்தலை மந்தி' என்று சங்கநூல்கள் கூறு கின்றன. இந்த வகைக் குரங்கிற்குத் தலையில் அரை வளையமாக உள்ள மயிர் நெற்றியின் நடுவில் வகிடு எடுத்தாற்போல் பிரிந்திருக்கும் என்று விலங்கு நூலார் கூறுவர். (The bonnet of hair does not quite cover the forehead where the hairs are short and neatly parted in the centre.)

'............ ............ ............ கடுவன்
முறியார் பெருங்கிளை அறிதல் அஞ்சிக்
கறிவளர் அடுக்கத்தில் களவினில் புணர்ந்த
செம்முக மந்தி செல்குறி கருங்கால்
பொன்இணர் வேங்கைப் பூஞ்சினைச் செலீஇயர்
குண்டுநீர் நெடுஞ்சினை நோக்கிக் கவிழ்ந்துதன்
புன்தலைப் பாறுமயிர் திருத்துங்
குன்ற நாடன் இரவி னானே.

—நற்றிணை. 151.

ஆண் குரங்கொடு கலவியில் ஈடுபட்டுக் கலைந்த தலைமயி ரொழுங்கை மந்தி சுனை நீரில் கண்டு பாறிய தலைமயி

ரைத் திருத்தியதாக நற்றிணை கூறுவது, இக்குரங்கின் மயிரொழுங்கைக் குறிப்பாகக் கண்டறிந்தே சொல்லியதாகத் தோன்றுகின்றது. இதன் தலையில் அரைவட்டமாக உள்ள நீண்டதும் குறுகியதுமான மயிரை 'முச்சி' என்று உரையாசிரியர்கள் கூறுவர். இதையே 'துய்த் தலை' (நற்றிணை 57, 95, அகம். 241, புறம். 158) என்று சங்கநூல்கள் கூறும். இளஞ்சிறுவர்களுக்குத் தலைமயிரை அரைவட்டமாக வெட்டும் வழக்கம் பழங் காலந்தொட்டுத் தமிழ்நாட்டில் இருந்து வந்தது. இதை முற்காலத்தில் 'முச்சி மயிர்' என்பர். இதே போன்று இக்குரங்கிற்கும் (Bonnet of hairs radiating in all directions from a whorl) மயிர் இருந்ததால் சிறுபாணாற்றுப் படை 'மகாஅர் அன்ன மந்தி' (வரி 56) என்று சிறுவர்களை இக்குரங்கு வகைக்கு ஒப்பிட்டுக் கூறியது. இக்குரங்கு வகையை இன்னும் தெளிவாகப் பிரித் துணர சங்க இலக்கியத்தில் பிறிதொரு செய்தியும் துணைபுரிகின்றது. இந்தியாவில் உள்ள குரங்கினத்தில் ஒரு சாதி குரங்கிற்கு (Macaques) வாயில் இருபக்கத் திலும் பைகள் உண்டு. ஆனால் வயிற்றில் அறைகளுடைய இரைப்பை கிடையாது. இப்பைகள் உணவை விரைவில் நிறைய உண்டு அடக்கிவைத்துப் பின்னர் ஓய்வாக உண்ண உதவுகின்றன. ஆனால் வேறொரு சாதிக்குரங்குகளுக்கு (Langurs) இப்பைகள் வாயில் கிடையாது. ஆனால் வயிற்றில் உண்டு. தமிழ் நாட்டில் உள்ள குரங்குவகைகளில் செம்முகக் குரங்கு வாயில் அடக்கித்தின்னும் குணமுடைய தென்பதை விலங்கு நூலார் தெளிவாகக் கூறியுள்ளனர்.

"அவரை யருந்த மந்தி பகர்வர்
பக்கிற் றேன்று நாடன் வேண்டிற்

பசுப்போல் பெண்டிரும் பெறுகுவன் ''
—ஐங்குறுநூறு 271.

" கொடிச்சி காக்கும் அடுக்கற் பைந்தினை
முந்துவிளை பெருங்குரல் கொண்ட மந்தி
கல்லாக் கடுவனொடு நல்வரை யேறி
அங்கை நிறைய ஞெமிடிக் கொண்டுதன்
திரையணற் கொடுங்கவுள் நிறைய முக்கி
வான் பெயல் நனைந்த புறத்த நோன்பியர்
தையூ ணிருக்கையில் தோன்று நாடன் ''
—நற்றிணை 22.

அவரைக் காயை வாய் நிறைய அமுக்கிக் கொண்டு இருந்த மந்தியின் வாய் பண்டவாணிகருடைய பையைப்போலத் தோன்றிற்று என்று ஐங்குறுநூறு கூறுவதைக் காணலாம். காவலை அஞ்சித் தினைக் கதிரைப் பறித்துக் கையால் நெமிட்டித் திரைத்த தன்னுடைய வளைந்த கவுளில் வாய்நிறைய மந்திக் குரங்கு அடக்கிக் கொண்டது நீரில் மூழ்கி எழும் தை நோன்பு இருப்போர் வாயில் அவலை அடக்கிக்கொண்டதுபோல இருந்ததாக நற்றிணை கூறுவதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். இந்தக் குரங்கு வகையின் (Macaques) வாயின் அடைப்பை (Pouched mouth) 'திரையணற் கொடுங்கவுள்' என்று சுருக்கமாக அழகாக நற்றிணை கூறியது மிகவும் பொருத்தமாகும்.

(Indian monkeys belong to two families Macaques and langurs. Macaques have cheek pouches and langurs have none)

சங்க இலக்கியத்தில் கூறப்பட்ட 'செம்முகம்', 'துய்த்தலை', 'திரையணல் கொடுங்கவுள்' ஆகிய செய்திகளைக் கொண்டு இக் குரங்கு வகை விலங்குநூலாற்

கூறும் Bonnet Macaque அல்லது Macaca Radiata என்பதை அறுதியிட்டுக் கூறலாம்.

இக்குரங்கைப் பற்றிவரும் பிற செய்திகளும் விலங்குநூலார் கூறுவதோடு ஒத்தே வருகின்றன. "நோன் பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த மகாஅர் அன்ன மந்தி" என்று சிறுபாணாற்றுப்படை கூறுவதிலிருந்து மந்திகளை மக்கள் வளர்த்து வந்தது தெரிகின்றது. அழும் குழந்தைகளுக்குக் குரங்குக் குட்டிகள் கிலுகிலுப்பை ஆட்டிக் காட்டுவதாகச் சிறுபாணாற்றுப்படை கூறுவதையும் நோக்குக. இக் குரங்குகள் மனிதர் சோர்வுற்றிருந்த காலத்தில் உணவுப் பொருளைக் கவர்வதைப் பற்றிக் குறுந்தொகையும் (335) பெரும்பாணாற்றுப்படையும் (395) கூறுவதிலிருந்து சங்ககாலத்திலேயே மனிதருடன் பழகிய குரங்கு வகை இதுவென்று தெரிகின்றது.

> " இருங்கல் வியலறைச் செந்தினை பரப்பிச்
> சுனைபாய் சோர்விடை நோக்கிச் சினையிழிந்து
> பைங்கண் மந்தி பார்ப்பொடு கவரும் "
>
> - குறுந்தொகை 335.

பாறையில் காயவைத்த தினையை மகளிர் நீராடும் போது குட்டிகளுடன் கவர்ந்ததாகக் கூறுவதைக் காணலாம். விலங்குநூலார் ஆராய்ந்ததில் மற்றவகைக் குரங்குகள் மனிதருடன் நெருங்கிப் பழகாதவை, அஞ்சி ஓடுபவை.

சீதையைத் தூக்கிக்கொண்டு இராவணன் சென்ற போது கீழேபோட்ட அணிகலன்களை மந்திகள் மாறி மாறி அணிந்து பார்த்ததாகப் புறநானூறு கூறுவது இக்குரங்குகளின் விளையாட்டுத் தன்மையை எடுத்துக் காட்டவேயாகும். இந்தக் குரங்குகளில் காட்டிலேயே

விரும்பி வாழ்பவை மனிதரிடமும் நெருங்கிப் பழகா என்பர். ஊர் அருகாமையிலும் நகர்ப் புறங்களிலும் வாழ்பவையே நெருங்கிப் பழகும். காட்டில் வாழ்பவை மரங்களிலேயே வாழும்.

"மந்தியும் அறியா மரம்பயில் இறும்பில்"

—அகம். 92.

"குரங்கறி வாரா மரம்பயில் இறும்பில்"

—அகம். 368.

மரங்களிலேயே பயின்று (arboreal) வாழ்வதாக அகநானூறு கூறுவதைக் கவனிக்கலாம்.

சங்க நூல்களில் (புறம், 158, 200, அகம், 352, 378) இக்குரங்குகள் தோட்டங்களிலும் காடுகளிலும் பலாப்பழத்தை விரும்பி உண்டதாகக் கூறப்பட்டுள்ளது. வாழை மடலில் சேர்ந்த நீரை மந்தி குடித்ததாக நற்றிணை (355) கூறுகிறது. ஐங்குறுநூற்றில் 'குரக்குப் பத்து' என்று வரும் பத்துப் பாடலும் இந்தக் குரங்குவகையைப் பற்றியே பாடுவது கருதத்தக்கது. இந்தக் குரங்குகள் மலைகளிலும் குன்றுகளிலும் மேகஞ் சூழ்ந்த இடத்திலும், மூங்கிற் காடுகளிலும் காணப்பட்டதைச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன. பாறையில் இவர்ந்து செல்லும் இத்திமரத்தின் விழுது வழியாக மேலேறுவதும் மூங்கில் கழையின் நுனிவரை ஏறி வளைத்துக் குதிப்பதுவும் தேனீக்களைக் கலைத்து விடுவதும் ஆகிய குரங்கின் செயல்கள் கூறப்பட்டுள்ளன. 'உண்டோ குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு' என்ற செய்யுள் வரி இக்குரங்கிற்குப் பொருத்தமானதாகும். சங்க இலக்கியத்தில் இக்குரங்குகளுக்கு மனித உணர்ச்சியையும் மனிதச் செயல்களையும் கற்பனையாக ஏற்றிக்

கூறுவது வழக்கம். இக்குரங்கு விளையாட்டுக் குண முடையதென்பதை உணர்ந்த சங்கப் புலவர்கள் நெல் லிக் காயைக் கழங்குபோலப் போட்டு ஆடும் என்றும் நறைக்கொடி கொண்டு மேகத்தைப் புடைக்கும் என் றும் மழைபெய்து தோன்றும் நீர் மொக்குகளைச் சூரல் கோலால் அடிக்கும் என்றும் கூறியுள்ளனர். இந்தக் குரங்கின் ஆணைக் கடுவன் என்றும் பெண்ணை மந்தி யென்றும் அழைத்தனர். பழகிய இக்குரங்கின் ஆண் பால், பெண்பாற் பெயர்களைப் புலவர்களும் தரித் திருந்தனர். கடுவன் மள்ளனுர், ஆதிமந்தியார் என்ற பெயர்கள் சங்க நூல்களில் வருகின்றன.

சங்க நூல்களில் செம்முகக் குரங்கு வகைக்கு அடுத்துப் பல பாடல்களிலும் பேசப்படும் குரங்கு வகை 'முசு' என்றழைக்கப்பட்டுள்ளது. முசு என்ற சங்ககாலப் பெயர் இன்றும் திராவிட மொழிகளில் மறையவில்லை. கன்னடத்தில் "முசு" என்றும் "முசுவா" என்றும், தெலுங்கில் 'குமுத முசு' என்றும் இக்குரங்கு வகை அழைக்கப்படுகின்றது.

திவ்யப் பிரபந்த விளக்கத்தில் மாட்டுவால் போன்ற வால் உள்ள குரங்கு என்றும் 'கொண்ட முசுரு' என் றும் மலைக் குரங்குகள் என்றும் இது கூறப்பட்டுள் ளது. இக்குரங்கின் பெயர் இன்றும் மறையவில்லை யாதலால் விலங்குநூற்படி எது என்று அறிவது எளிதேயாகும். முசுக்குரங்குகளைப் பற்றிச் சங்க நூல் களில் தெளிவான செய்திகள் வருவதைக் காணலாம்.

"மைபட் டன்ன மாமுக முசுக்கலை
ஆற்றப் பாயாத் தப்ப லேற்ற
கோட்டொடு போகி யாங்கு நாடன்"

—குறுந்தொகை. 121.

" மைபட் டன்ன மாமுக முசுக்கலை
பைதறு நெடுங்கழை பாய்தலின் ஒய்யென "
—அகம். 267.

" ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்ப "
—திருமுருகாற்றுப் படை. 303.

" கருமுக முசுவின் கானத்தானே "
— அகம். 121.

" கருமுக முசுக்கலை கதுமெனத் தோன்ற "
—பெருங்கதை 2 : 16 : 109-110.

மையூசியது போல முசுக்குரங்கின் முகம் இருப்பதாகக் கூறப்பட்டதிலிருந்து பிறவகைக் குரங்கு வகைகளிலிருந்து முசுவினத்தைப் பிரித்துணரலாம். முகத்தில் மட்டும் கருமையாக இருப்பதைக் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பதைக் காணலாம். முசுக்குரங்கை விலங்கு நூலார் ('The common langur') என்று அழைப்பர். இதற்குச் சிறிது மெலிந்த உடலும், மிக நீண்ட வாலும் கைகால்களும் உண்டு என்பர். முசுக்குரங்குகள் பெரும்பாலும் காடுகளில் வாழும். ஊர்க்கருகாமையிலும் காணப்படுவதுண்டு. மரங்களிலேயே பயின்று வாழும் தன்மையது. சில பகுதிகளில் குன்றுகளிலும் மலை உச்சியிலும் பாறைகளிலும் (rocks and cliffs) வாழ்வதுண்டு. முசுக்குரங்குகள் கிளைக்குக்கிளை தாவிப் பாய்வதும் குதிப்பதும் பார்ப்போருக்கு வியப்பையூட்டும் என்று விலங்கு நூலார் கூறுவர்.

(The agility of the langur in the tree tops, its stupendous leaps and bounds and the precision with which it makes are astonishing)

''பலவிற் சேர்ந்த பழமா ரினக்கலை
சிலைவிற் கானவன் செந்தொடை வெரீஇச்
செருவுறு குதிரையிற் பொங்கிச் சாரல்
இருவெதிர் நீடமை தயங்கப் பாயும்
பெருவரை யடுக்கத்துக் கிழவ னென்றும்

—குறுந்தொகை. 385.

''குன்றக் கூகை குழறினு முன்றிற்
பலவி னிருஞ்சினைக் கலைபாய்ந் துகளினும்

—குறுந்தொகை. 153.

மேலே காட்டிய 385ஆம் குறுந்தொகைப் பாட்டிலும் 121, 153 ஆம் குறுந்தொகைப் பாடல்களிலும் கிளை முறியும்படி பாய்ந்த முசுக் குரங்கைப் பற்றியும், மூங்கிலை வளைத்துக் குதித்துப் பாயும் முசுக்கலையைப் பற்றியும், கிளையில் பாய்ந்து குதிக்கும் கலையைப் பற்றியும் கூறியிருப்பதைக் காணலாம். முசுக்குரங்குகள் மகிழ்ச்சியுடன் இருக்கும்போது கிளைக்குக்கிளை தாவி (whoomp) என்ற ஓசையுடன் குரலிடும் என்று விலங்கு நூலார் கூறுவர்.

கணக்கலை இருக்குங் கடுங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டி யாழாக
இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்க —அகம். 82.

அகநானூற்றுப் பாடலில் ஆண்முசுக் குரங்குகள் மகிழ்ச்சியால் வெளியிடும் தூம்புக் குரலொடு வண்டொலியையும் அருவியோசையையும் கேட்டுப் பெண் முசுக் குரங்குகள் மருண்டு நோக்கின என்று கூறப்பட்டிருப்பது நோக்குக. ஆண்முசு வெளியிடும் குரல் ''தூம்பு'' என்று ஒலிக்குறிப்புச் சொல்லாகக் குறிப்பிடப் பட்டது, whoomp என்று வேட்டையாளர் கூறும் முசுக்குரங்குகளின் மகிழ்ச்சிக்குரலை ஓசையில் ஒத்திருப்

பது எண்ணி இன்புறத்தக்கது. இந்த முசுக்குரங்கு களின் ஆண் கலை யென்று அழைக்கப்படும் என்று தொல்காப்பியம் மரபியல் சூத்திரம் 601 கூறுகின்றது. இந்தக் கலையெனும் ஆண்முசு பற்றிய செய்திகள் சங்க நூல்களில் வருகின்றன. இதைக் கலை யென்றும் முசுக்கலை யென்றும் கணக்கலை யென்றும் சங்க நூல் கள் அழைக்கின்றன. முசுக்குரங்குகள் காடுகளில் பெரும்பாலும் காணப்படுவதைச் சங்க நூல்களி லிருந்து வரும் செய்திகள் வழி அறியலாம். ஆனால் இக்குரங்குகள் எப்போதும் நீரருகாமையிலே வாழும் என்று விலங்கு நூலார் கூறுவர்.

"......... ......... ......... படப்பை
இன்முசுப் பெருங்கலை நன்மேயல் ஆரும்
பன்மலர் கான்யாற்று உம்பர்க் கருங்கலை"

—நற்றிணை. 119.

நற்றிணைப் பாடலில் மலைநாட்டு ஊரில் கொல்லை யில் முசுக்குரங்கு மேய்வதாகவும் கான்யாற்று அருகில் காணப்பட்டதாகவும் கூறப்பட்டதைக் கவனிக்க வேண்டும். இந்தக் கலைக்குரங்குகள் காடுகளில் பலாப் பழத்தை மிகவும் விரும்பிக் கவர்ந்து உண்டதாகச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன.

கலைகை தொட்ட கமழ்சுளைப் பெரும்பழம்
காவல் மறந்த கானவன் ஞாங்கர்க்
கடியுடை மரந்தொறு படுவலை மாட்டும்
குன்ற நாட தகுமோ பைஞ்சுனை

குறுந்தொகை. 342

"கறிவள ரடுக்கத் திரவின் முழங்கிய
மங்குன் மாமழை வீழ்ந்தெனப் பொங்கு மயிர்க்
கலைதொட விழுக்கிய பூநாற பலவுக்கனி

—குறுந்தொகை. 90,

"ஆய்சுளைப் பலவின் மேய்கலை யுதிர்த்த
துய்த்தலை வெண்காழ் பெறூஉங்
கற்கெழு சிறுகுடிக் கானவன் மகளே"

—அகம். 7.

"கலையுணக் கிழித்த முழவுமருள் பெரும்பழம்
சிலைகெழு குறவர்க் கல்குமிசை வாகும்
மலைகெழு நாட மாவண் பாரி"

—புறம். 236.

மேற்காட்டிய பாடல்களில் முசுக்குரங்குகள் பலாப் பழத்தை விரும்பிக் கவர்வதும் அதைத் தடுக்கக் கானவர் மரத்தில் வலை போட்டுப் பாதுகாப்பதுவும் பலாப்பழத்தைக் கிழித்துக் கொட்டைகளை உதிர்ப்பதுவும் சுளைகளை விட்டுவிடுவதும் ஆகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. முசுக்குரங்கினம் 'கானத்திலும்,' 'மலைகெழு நாட்டிலும்,' 'கற்கெழு சிறுகுடியருகிலும்,' 'குன்ற நாட்டிலும்' இருப்பதாகக் கூறியது விலங்கு நூலார் முசுக்குரங்குகள் மலைக்காடுகளிலும், காடுகளிலும், பாறைகளிலும், குன்றுகளிலும் பெரும்பாலும் காணப்படுமென்று கூறியதொடு ஒத்திருக்கின்றது.

முசுக்குரங்குகளைப் பற்றி மிக அரிய சிறந்த செய்தியொன்று சங்கநூல்களில் கூறப்பட்டுள்ளது மிக்க வியப்பை அளிக்கின்றது. காடுகளில் வாழும் குரங்குகளுக்கு முக்கிய எதிரி சிறுத்தைப் புலியாகும். சிறுத்தைப்புலி (Panther) குரங்குகளைத் திடீரென்று மரத்தின் மேல் ஏறிப்பிடித்து உண்ணும். ஆதலின் சிறுத்தைப் புலி, வேங்கைப்புலி ஆகிய விலங்குகளுக்குக் குரங்குகள் மிகவும் அஞ்சுமென விலங்கு நூலாரும் வேட்டையாளரும் (Hunters) கூறுவர். குரங்குகள் கடிய உரப்

பான ஓசை கேட்டாலும் அஞ்சி ஓடுமெனக் கூறுவர். (In India the arch enemy of the monkey is the panther which waits in hiding for or rushes up a tree to seize its victim............................Highly strung creatures they are obviously affected by loud and sudden sounds......The alarm calls of langurs and macaques when fear or suspicion is aroused by the sight of a tiger, leopard of other animals are well-known and are used by human hunters to locate a tiger. A warning cry from any langur will send the whole troop bolting, none stopping to discuss the cause of disturbance.)

" அலங்குகழை நரலத் தாக்கி விலங்கெழுந்து
கடுவளி உருத்திய கொடிவிடு கூரெரி
விடர்முகை அடுக்கம் பாய்தலின் உடனியைந்து
அமைக்கண் விடுநொடி கணக்கலை அகற்றும்
வெம்முனை அருஞ்சுரம் நீந்திக் கைம்மிக "

—அகம். 47.

" உறுகண மழவர் உருள்கீண் டிட்ட
ஆறுசெல் மாக்கள் சோறுபொதி வெண்குடைக்
கனைவிசைக் கடுவளி யெடுத்தலின் துணைசெத்து
வெருளேறு பயிரும் ஆங்கண்
கருமுக முசுவின் கானத் தானே "

— அகம். 121.

அகம் 47-ஆம் பாட்டில் சூறாவளிக் காற்று எழுந்து மூங்கிலில் தீ பற்றி எரிவதைக் கண்டு முசுக்குரங்குகள் ஒன்று கூடி உடனியைந்து மூங்கிலை வளைத்துப் பாயும்போது ஓசையெழுப்பி அவ்விடத்தை விட்டு விரைவில் விலகிய காட்சி விளக்கப்பட்டுள்ளது. கடிய ஓசைக்கும் திடீர் ஒலிக்கும் அஞ்சுமென்று (affected by loud and sudden sounds) விலங்கு நூலார் கூறிய அதே செய்தியை அகநானூறு 121-ஆம் பாடல் கூறுகின்றது. வழிபோக்கர்கள்

போட்ட சோற்றுப்பொதிகளின் வெறும் ஓலைக் கூடைகள் சூறுவளிக் காற்றில் எழுந்து செல்லும் விரைவையும் ஓசையையும் கேட்டுப் பயந்து போய்த் தன் துணைக் குரங்கை நினைத்து ஆண் முசுக்குரங்கு கூப்பிடும் கானம் என்று கூறியிருப்பது நேரில் கண்டு கூறிய செய்தி போலத் தோன்றுகின்றது. 'வெருளேறு' என்று குறிப்பாகக் கூறியது கவனிக்கத்தக்கது. இதைவிட அரிய செய்தியும் சங்கநூல்களில் காணப்படுகின்றது.

"புலியுரி வரியதள் கடுப்பக் கலிசிறந்து
நாட்பூ வேங்கை நறுமலர் உதிர
மேக்கெழு பெருஞ்சினை யேறிக் கணக்கலை
கூப்பிடூஉ உகளுங் குன்றகச் சிறுநெறி"

—அகம். 205

"ஈன்றணி வயவுப்பிணப் பசித்தென மறப்புலி
ஒளிநோந்து மருப்பின் களிறட்டுக் குழூஉம்
கணக்கலை இகுக்கும் கறியிவர் சிலம்பின்
மணப்பருங் காமம் புணர்ந்தமை அறியார்"

—அகம். 112.

"............ ............ ............ கலைக்கணம்
வேங்கை வெரூஉம் நெறிசெலிய போலும் என்
பூம்பாவை செய்த குறி"

—நாலடியார். 399.

"மந்திக் கணவன் கல்லாக் கடுவன்
ஒண்கேழ் வயப்புலி குழுமலின் விரைத்துடன்
குன்றுய ரடுக்கங் கொள்ளு நாடன்.

ஐங்குறுநூறு. 274.

அன்று பூத்த மஞ்சள் நிறமான வேங்கைப் பூக்கள் கரிய பாறையில் உதிர்ந்து கிடப்பது வரியுடைய புலித்தோல் போலத் தோன்றவே புலி என்று எண்ணி ஆண்முசுக் கூட்டம் மேலே எழும்பிக் கிளைகளில் ஏறி மற்றுக்

குரங்குகளையும் கூப்பிட்டுத் தாவுமென்று அகநானூறு 205 ஆம் பாடலில் சொல்லியிருப்பது வேட்டையாளரும் விலங்கு நூலாரும் கூறிய உண்மைச் செய்திகளுடன் ஒத்திருக்கின்றது. புலியைப் பார்த்தாலோ புலி வெகு தொலைவில் உருமும் குரல் கேட்டாலோ ஒரு குரங்கு எச்சரிக்கையாகக் கூக்குரலிடும். உடனே மற்றக் குரங்குகள் எல்லாம் மேய்வதை விட்டுக் கிளைகளின் உச்சிக்குத் தாவி வேறு குரங்குகளை அழைக்கக் கூக்குரலிடும். வேட்டையாளர் கூறிய இதே செய்தியைச் சங்கநூல் கூறுவது எண்ணி இன்புறத்தக்கதாகும். புலி வெகு தொலைவில் வருவதைக்கூட அல்லது புலி நெருங்கிப் பதுங்கி வருவதைக் கூடக் காட்டில் முசுக்குரங்குகளின் கூப்பிடும் எச்சரிக்கைக் குரலிலிருந்து (Alarm call) வேட்டையாளர் கண்டு கொண்டு புலியை வேட்டையாடுவார்களாம். அகநானூறு 112 ஆம் பாட்டுப் புலி உருமும் ஒலியைக் கேட்டு, முசுக்குரங்குக் கூட்டம் மிளகுக் கொடியில் தாவி மலைக்கு ஏறுவதைக் கூறுவதைக் காணலாம். நாலடியார் பாடலிலும் முசுக் கூட்டம் பூத்த வேங்கையைக் கண்டு வேங்கைப் புலியென்று அஞ்சி வெருளும் என்று சொல்லியிருப்பதைக் காணலாம். விலங்கு நூலார் முசுக்குரங்குகளுக்கும் (Langurs) செம்முகக் குரங்குகளுக்கும் (Macaques) இந்த அச்சம் இருப்பதைக் கண்டுள்ளனர். ஐங்குறுநூறு 274ஆம் பாடல் இந்த அச்சம் செம்முகக் குரங்குகளுக்கும்இருப்பதைக் குறிப்பிடுகின்றது. புலியின் உருமலைக் கேட்டுக் குன்றுயர்ந்த அடுக்கத்தில் விரைந்து ஏறிய கடுவன் குரங்கைப் பற்றிக் கூறியுள்ளது.

"ஓங்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் கிளையொடு
நெடுவரை யியம்பு மிடியுமிழ் தழங்குகுரல்

கைக்கோண் மறந்த கருவிரன் மந்தி
யருவிடர் வீழ்ந்ததன் கல்லாப் பார்ப்பிற்கு
முறிமே யாக்கைக் கிளையொடு துவன்றிச்
சிறுமை யுற்ற களையாப் பூசல் "

—மலைபடுகடாம் வரி. 311-314.

மலைபடுகடாத்தில் குரங்கின் அச்சத்தைக் காட்டும் ஓர் அரிய செய்தி வருகின்றது. யானையைப் புலிதாக்கிற்று அதனால் யானை இடிபோல் பிளிறச் சடுதியில் புலி பாய்வதையும் யானையின் இடியோசையையும் கண்டு கேட்டுக் குட்டியைக் கையில் வைத்திருந்த மந்தி கை தவறி விட்டுவிடக் கீழே மலைப்பிளப்பில் விழுந்த குட்டியைக் காப்பாற்ற முடியாமல் மரத்தில் மேய்ந்து கொண்டிருந்த குரங்குக் கூட்டம் ஒன்றுகூடிக் கூக்குர லிட்டதாக மலைபடுகடாம் விளக்கும் காட்சி உண்மை யான செய்தியாகவே தெரிகின்றது. திடீர் ஓசையைக் கேட்டாலும் புலி பாய்வதைப் பார்த்தாலும் குரங்கு தன் கைப்பிடியை விட்டுக் கீழே விழும் என்று விலங்கு நூலார் கூறியிருப்பதையே மலைபடுகடாம் நிகழ்ந்த ஒரு செய்தியாகக் கூறியுள்ளது. (Even the sudden roar of panther may send a monkey hurtling down its perch) புலி பாய்ந்ததும் (Sudden rush of panther) யானையின் இடிக்குரல் கேட்டதும் கைப்பிடியிலிருந்து விடுபட்ட குட்டி வீழ்ந்ததாகச் சங்கநூல் கூறியது அரிய செய்தி யாகும்.

முசுக்குரங்குகளைச் சங்கநூல்களில் 'கணக்கலை' என்று கூறியிருப்பதைக் காணலாம்.

" மேக்கெழு பெருஞ்சினை யேறிக் கணக்கலை "

—அகம், 205.

" கணக்கலை இருக்கும் கறியிவர் சிலம்பின் "

—அகம், 112.

" அமைக்கண் விடுநொடி கணக்கலை அகற்றும்"

—அகம், 47.

" கணக்கலை இருக்கும் கடுங்குரல் தூம்பொடு "

—அகம், 82.

" பலவிற் சேர்ந்த பழமா ரினக்கலை "

—குறுந்தொகை, 385.

கணக்கலை என்ற சொல் ஆண் முசுக்களின் திரளையே, கூட்டத்தையே குறிக்கின்றது. முசுக்குரங்கின் மந்தியைவிட, பெண் முசுவைவிட ஆண் முசுக் கூட்டத்தைப் பற்றியே சங்கப் பாடல்கள் குறிப்பிடுவதன் காரணம் என்ன? விலங்கு நூலார் பல சமயங்களில் முசுக் குரங்குகளின் கூட்டத்தை ஆராய்ந்து பார்த்ததில் சில கூட்டங்கள் ஆண் முசுக்களின் கூட்டமாகவே இருப்பதைப் பார்த்திருக்கின்றனர். அந்த ஆண்முசுக்கள் முசுக்குரங்குகளின் கலப்புக் கூட்டத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டு ஆண் முசுக்களாகவே அமைந்த கூட்டமெனக் கருதுகின்றனர். (Finally there in the troop consisting only of males, probably animals which have been driven out of the harems on attaining maturity). இந்த ஆண் முசுக்களால் அமைந்த கூட்டத்தைக் கண்டு பட்டறிவால் அறிந்த சங்கப் புலவர்கள் தெளிவாகக் 'கணக்கலை' என்று பெயரிட்டனர். இதுவே குறுந்தொகையில் 'இனக்கலை' என்று அழைக்கப்பட்டது. நாலடியார் (199) 'கலைக்கணம்' என்று அழைத்தது. 'கலைக்கணம்' என்ற சொல்லின் பொருளாழத்தை நன்கு உணராத பிற்கால உரையாசிரியர்கள், அகநானூறு 82ஆம் பாடலிலும் நற்றிணையிலும் கலைமான் கூட்டம் என்று பொருள் கொண்டு உரை எழுதினர். கணக்கலை இருக்கும் தூம்புக் குரல்

கலைமானுக்கு இல்லை என்பதுவும் கலைமானை மந்தி நல்லவை பார்க்க வேண்டிய பொருத்தம் இல்லை என்பதையும் உணர்ந்தோர் அகம் 82ஆம் பாட்டில் கலைமான் என்று பொருள் கொள்ளார். 'இருக்கும்' என்ற சொல் அகப் பாடல்களில் (82, 112) கணக்கலையின் குரலைக் குறிக்கத் தனியாகச் சங்க நூல்களில் வழங்குவதைக் காணலாம். பிங்கலந்தை அழைத்தலுக்கு 'இருத்தல்' என்று பொருள் கூறியுள்ளது. சங்க நூல்களே இருத்தல் என்ற சொல்லைப் போலவே 'கூப்பிடூஉ', 'பயிரும்' என்ற சொற்களையும் பயன் படுத்தியதிலிருந்து இதன் பொருள் தெளிவாகின்றது. முசுக் குரங்குகள் ஆணும் பெண்ணும் குட்டிகளும் சேர்ந்த கூட்டங்களாகவும் காண்பதுண்டு. "கருமுகக் கணம்' என்று இக் கூட்டத்தைப் பரிபாடல் (19 : 39) அழைக்கிறது. மற்றும் முதிய ஆண்முசுவும் கூட்டத்தி லிருந்து விரட்டப்பட்டுத் தனியாக வாழ்வதுண்டு. சங்கப் பாடல்கள் பலவற்றிலும் கலையென்ற தனியான ஆண் முசுவின் செய்திகளைக் கூறுவதைக் காணலாம். முசுக்குரங்குகள் காடுகளில் மரங்களில் மேயும்போது செம்முகக் குரங்குகளோடு சேர்ந்து கலந்து மேயும் என்றும், ஆனல் இரவில் தனித் தனிக் கூட்டமாகப் பிரிந்து செல்லும் என்றும் விலங்கு நூலார் கண்டுள்ளனர்.

" கருவிரல் மந்திச் செம்முகப் பெருங்கிளை
பெருவரை அடுக்கத்து அருவி ஆடி
ஓங்குகழை ஊசல் தூங்கி வேங்கை
வெற்பணி நறுவீ கற்சுனை உறைப்பக்
கலையொடு திளைக்கும் வரையக நாடன் "

—நற்றிணை, 334

மேலே காட்டிய நற்றிணைப் பாடலில் செம்முகக் குரங்குக் கூட்டமும், ஆண் முசுக்கலையும் வேங்கை மரத்தில் விளையாடித் திளைத்ததாகக் கூறியதிலிருந்து இந்த இரண்டு வகைக் குரங்குகளையும் சங்கப் புலவர்கள் சில சமயங்களில் ஒரே இடத்தில் கண்டனர் என்பது தெளிவு. முசுக்குரங்குகள் வடநாட்டில் மனிதருடன் நெருங்கிப் பழகுகின்றன. ஊர்களிலும் கோயில்களி லும் குளங்களிலும் காணப்படுகின்றன. வடநாட்டில் இதை 'அனுமான்' குரங்கு என்றழைக்கின்றனர். இந்தியில் 'அனுமான்' என்றே பெயர் வழங்குகிறது. இதைத் துன்புறுத்துவதில்லை. வடநாட்டில் கடவு ளாக வழங்கும் அனுமானின் உருவத்திற்கு முகத்தில் கருமை பூசுகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் அனு மான் உருவிற்கு முகத்தில் சிவப்பைப் பூசுகிறார்கள். வடநாட்டில் அனுமானை மாமுக முசுவாகக் கொண்ட னர். தமிழ்நாட்டில் செம்முகக் குரங்காகக் கொண்ட னர். காரணம் தமிழ்நாட்டில் நெருங்கிப் பழகும் குரங்கு செம்முகக் குரங்கே யாகும். ஆனால் பரிபாடல் காலத்திலேயே இந்த இரு குரங்கு வகைகளும் மனித ருடன் பழகினதாகத் தெரிகின்றது.

" குரங்கருந்து பண்ணியங் கொடுப் போரும்
கரும்பு கருமுகக் கணக்களிப் போரும்."

—பரிபாடல், 19 : 38—39.

குரங்குக்குப் பண்டங் கொடுத்ததாகவும், கரும்பை முசுத்திரளுக்கு உண்ணக் கொடுத்ததாகவும், செம் முகக் குரங்கையும் முசுவையும் தனித் தனியாகப் பரி பாடல் கூறுவதைக் காணலாம். முசுக் குரங்கிற்குக் கை கால்கள் நீண்ட வென்றும், வால் மிக நீண்ட

தென்றும் விலங்கு நூலார் கூறுவர். சங்க இலக்கியத்தில் இதன் கையைப் பற்றியும், பொங்கு மயிர் போர்த்திய தன்மையைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இது தன் நீண்ட வாலை மேலாக வளைத்துத் தொங்கவிட்டிருப்பதைக் குறிப்பாக உணர்ந்தே 'முசுரு வாலெடுத்தாற் போலக் கிளர்ந்து' என்று திவ்யப் பிரபந்த உரையில் கூறினர். 'கிளர்ந்த வால்' என்று முசுவின் வாலை அழைக்கலாம். மாட்டு வால் போன்ற வாலுள்ள குரங்கு என்றது நீண்ட வாலைக் குறித்ததாகலாம். முசுக்கணங்கள் முசுகு என்றும் திவ்யப்பிரபந்தத்தில் பயில்கின்றது. உரையில் முசுரு என்று பொருள் கூறப்பட்டுள்ளது. இது பேச்சு வழக்குச் சொல்லாகும். இந்த முசுக்குரங்கை ஆங்கிலத்தில் The common langur அல்லது Hanuman Monkey என்பர். அறிவியற் பெயர் Presbytis entellus என்பதாகும்.

குரங்கு வகைகளில் முசுவிற்கு அடுத்துச் சங்க நூல்களில் குறிப்பிடப்படும் குரங்கு ஊகம் என்றழைக்கப்படுகிறது. செம்முகக் குரங்கையும் கருமுகக் குரங்கையும் கூறிய சங்கப் புலவர்கள் அவற்றினின்றும் பிரித்துக் காட்டவே அழகாக, பொருத்தமாக, நுட்பமாக "நரைமுக ஊகம்" என்று ஊகக் குரங்கை விளக்கினர். தமிழ்நாட்டுக் காடுகளில் அடர்ந்த பகுதிகளில் கருமையான உடலுடன் முகத்தில் பிடரி மயிர் போன்று நீண்ட நரைத்த கற்றை மயிர்கள் உடைய ஒருவகைக் குரங்குகள் உண்டு. அவையே ஊகமெனச் சங்க நூல்களில் அழைக்கப்படுகின்றது. இதன் முகத்தைச் சுற்றி நரைமயிர்க் கற்றை (Grey hairs) தொங்குவதால் இதை 'நரை முக ஊகம்' என்று கூறினர்.

" இனமயி லகவு மரம்பயில் கானத்து
நரைமுக வூகம் பார்ப்பொடு பனிப்பப்
படுமழை பொழிந்த சார லவர்நாட்டுக்
குன்ற நோக்கினென் றோழி
பண்டை யற்றோ கண்டிசி னுதலே."

—குறுந்தொகை, 249.

" குறுமுலைக் கலமரும் பாலார் வெண்மறி
நரைமுக வூக மொடு கெளும் வரையமல......"

— புறம், 383.

மலையில் பெய்த மழையில் நனைந்த குட்டிகளோடு நரைமுக ஊகம் காட்டில் நடுங்கியதாகக் குறுந்தொகை கூறுகின்றது. புறநானூற்றிலும் 'நரை முக வூகம்' என்று பயின்று வருவதைக் காணலாம். இந்தக் குரங்கின் முகத்தில் உள்ள நரைத்த மயிரே இதைப் பிற குரங்கு வகைகளிலிருந்து தெளிவாகப் பிரித்துக் காட்டுவதாக விலங்கு நூலார் கூறுவர். (Distinguished from all other species of macaques firstly by a great mane of long dark grey or brownish grey hairs from the temples and cheeks and also by its glossy black coat.) விலங்கு நூலார் எதைக் கொண்டு இதைப் பிரித்துணர்ந்தனரோ அதையே சங்க நூலாரும் கொண்டு பிரித்தறிந்ததையே 'நரை முக ஊகம்' என்ற விளக்கம் தெளிவாக்குகின்றது.

ஊகக் குரங்கு உயர்ந்த மலைகளிலும் குன்றுச்சிகளிலும் அடர்ந்த காடுகளிலும் காணப்பட்டதாகச் சங்க நூல்கள் கூறுகின்றன.

" ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமல ருதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல் "

—திருமுருகாற்றுப்படை, வரி 301-303.

" இருவெதி ரீங்கழை தத்திக் கல்லெனக்
கருவிர லூகம் பார்ப்போ டிரிய."
—மலைபடுகடாம், வரி 207 - 208.

" வெருள்புடன் நோக்கி வியலறை யூகம்
இருடேங் கிறவரை யூர்பிழி பாடும்" —கலித்தொகை 43

" ......... ......... ......... .........நீடுமயிர்க்
கடும்ப லூகக் கறைவிர லேற்றை
புடைத்தொடு புடைஇப் பூநா று பலவுக்கனி
காந்தளஞ் சிறுகுடிக் கமழும்
ஓங்குமலை நாடனொ டமைந்தநந் தொடர்பே"
—குறுந்தொகை, 373.

மேலே வரும் சங்க நூற் பாடல்களில் ஊகம் வாழும் சூழ்நிலை உயர்ந்த மலைக் காடுகளிலும் நீர் வீழ்ச்சி விழும் குன்றின் உச்சிகளிலும் இருள் தூங்கும் காடுடைய மலைகளிலும் (கலி. 43) கூறப்படுவதைக் காணலாம். விலங்கு நூலாரும் 2,000 அடியிலிருந்து 3,500 அடிவரை உள்ள அடர்ந்த, தனித்த பசுங்காடு களில் மலைக்காடுகளில் ஊகக் குரங்குகள் காணப்படுவ தாகக் கூறுவர். (The lion tailed macaque inhabits the dense lonelier forests where it keeps to the evergreen belt between 2,000 to 3,500 ft. with its dark colouring and shy and seclusive habits there is little wonder it is seldom seen in these dimly lit forests) செம்முகக் குரங்குகளும் முசுக் குரங்குகளும் ஒருங்கே காணப்பட்டதைச் சங்கப் பாடல்கள் கூறுவது ஏற்கனவே விளக்கப்பட்டது. அதுபோன்றே ஊகமும் முசுவும் ஒருங்கே காணப் பட்ட செய்தியும் வருகின்றது.

" ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப்........"
—திருமுருகாற்றுப்படை வரிகள் 303 - 306

ஊகத்துடன் முசுக்கலை அருவி நீரின் குளிர்ச்சியில் நடுங்கியதாகக் கூறப்பட்டுள்ளது. புறநானூறு 383ஆம் பாடல் கூறும் ஒரு செய்தியிலிருந்து ஊகம் வாழும் சூழ்நிலை, இடத்தின் உயர மட்டம் ஆகியவைகளை உய்த்துணரலாம்.

"குறுமுலைக் கலமரும் பாலார் வெண்மறி
நரைமுக வூகமொ டுகளும் வரையமல்
......... ......... குன்றுபல கெழீஇய
கான்கெழு நாடன் கடுந்தே ரவியனென"

—புறம், 383.

பாட்டில் ஒருவரி மறைந்து போய்விட்டது. இருப்பினும் பொருளை உணர முடிகின்றது. குறுமுலைக் கலமரும் பாலார் வெண்மறி என்றது வருடையாட்டின் குட்டிகளே யாகும். மலையில் குதிக்கும் ஊகக் குரங்குகளுடன் காணப்படக்கூடிய ஆட்டுக்குட்டிகள் வருடையாட்டின் குட்டிகளாகவே இருக்க முடியும். மற்ற ஆட்டினத்தை மலையில் இயற்கையாகக் காணமுடியாது. வருடையாடு வரையாடு என்றும் மலை ஆடு என்றும் வழங்கும். இந்த வரையாடு (Nilgiris Tahr) விலங்கு நூலார் கண்டறிந்து எழுதியுள்ள செய்திப்படி 2,000 அடியிலிருந்து 3,000 அடி உயரத்தில் மலையில் காணப்படும். ஆதலின் நரைமுக ஊகமும் அதே சூழ்நிலையில், அதே உயர மட்டத்தில் மலையில் காணப்படும் என்பதை உய்த்துணரலாம். இதே உயரத்தில்தான் ஊகம் வாழ்வதாக விலங்கு நூலாரும் கூறுகின்றனர். உயர்ந்த மலைச் சூழ்நிலைகளில்கூட எந்த விலங்குகள் எந்தச் சூழலில் காணப்பட்டன என்பதைக் கண்டு கூறிய சங்கப் புலவர்களின் அறிவுக் கூர்மை மிகவும் போற்றத் தக்கது. ஊகக் குரங்குகளைத் தனித்துக்

காணப்படும் மலைக்காடுகளில் மனிதர் காண்பது அரி தாகையால் சங்க நூல்களிலும் இக்குரங்குகளைப்பற்றிச் சில செய்திகளே வருகின்றன. ஊகக் குரங்கிற்கு முகத் திலிருக்கும் நீண்ட மயிரை 'நீடுமயிர்க் கடும்பலூகம்' என்று வரும் வரியில் குறிக்கப்பட்டுள்ளது. இதன் விரல் மிகக் கருமையாக இருப்பதால் 'கறைவிரல்' என் றும் இதன் ஆண் குரங்கு 'ஏற்றை' என்றும் கூறப்பட் டுள்ளது. இது மிகவும் அஞ்சி மிரளும் தன்மையுடைய தாதலால் 'வெருள்புடன் நோக்கி' என்று கலித் தொகை கூறிற்று. 'இருள் தூங்கு இறுவரையில்' ஊகத்தைக் கண்டு கலித்தொகை கூறியதையே விலங்கு நூலார் (In dimly lit dense forests) என்று கூறினர். ஊகக் குரங்குகள் குட்டிகளுடன் இருப்பதைத் திருமுரு காற்றுப்படை கூறுகின்றது. ஊகக் குரங்குகள் கூட்ட மாகவே (troops) காணப்படுமென்பர். மரங்களின் உச்சிகளிலேயே பயிலும் ஊகக் குரங்குகளைக் காண்பது எளிதன்று.

"ஊகம் உகளும் உயர்பெருஞ் சினைய"

—இலாவாண காண்டம், 15 : 5

என்று பெருங்கதை கூறுகின்றது.

குரங்குகளுக்குப் பாம்பைக் கண்டால் மிகவும் அச்சம் என்று விலங்கு நூலார் கூறுவர். மலைப் பாம்புகள் மரத்தில் விழுதுகள்போல் தொங்கிக் குரங்கு களைப் பிடித்துக் கொன்று உண்டுவிடு மென்பர். இதன் காரணமாகவே குரங்குகளுக்குப் பாம்பைக் கண்டால் உள் நடுக்கமும் அச்சமும் ஏற்படுகின்றன என்று கூறுவர். (Monkeys and apes recognise and have an instinctive dread of snake, a recognition and fear not

displayed by other wild animals) இச்செய்தி சங்கநூலார்க்குப் புதியதன்று.

" பைங்கண் ஊகம் பாம்புபிடித் தன்ன
அங்கோட்டுச் செறிந்த அவிழ்ந்துவீங்கு திவவின்"
— சிறுபாணாற்றுப் படை, 221-222.

ஊகக் குரங்கு பாம்பிற்கு அஞ்சிப் பாம்பைப் பிடித்துக் கொண்டு, விட்டுவிட்டால் கடித்து விடுமோ என்று அஞ்சிப் பிடித்த பிடியைத் தளர விடாமல் இறுக்கிப் பிடித்துக் கொள்ளுமாம். குரங்கு பாம்பைப் பிடித்துக் கொண்டு அல்லற்படும் காட்சியொன்று விசயநகர் மன்னர்களின் அழிந்த தலைநகரான அம்பியில் (Hampi) இன்றும் காணலாம். சிறுபாணாற்றுப் படை கையாண்ட உவமைச் செய்தி பிற்காலத்துச் சிலையாகக் காணப்படுவது வியப்பே. குரங்கின் இந்த இறுக்கிய பிடியைக் கருதியே குரங்குப்பிடி என்ற வழக்குத் தோன்றிற்றுப் போலும். பாம்பிற்குக் குரங்குகள் அஞ்சும் என்பதை வேறொரு சங்கநூற் பாடலும் குறிப்பிட்டுள்ளது.

" அருவரை யிழிதரும் வெருவரு படாஅர்க்
கயந்தலை மந்தி உயங்குபசி களைஇயர்
பார்ப்பின் தந்தை பழச்சுளை தொடினும்
நனிநோய் ஏய்க்கும் பனிகூர் அடுக்கத்து"
—அகம், 288.

*பாம்பைப் போன்று போலி உருவுடைய பாம்புச் செடியைக் கண்டு பயந்த குரங்கு பலாப்பழச்சுளையைத் தோண்டினும் பாம்பென்று பயந்து துன்புறும் என்று அகநானூறு கூறுகின்றது. பாம்பைக் கண்டு அஞ்சும்

* 'சங்க இலக்கியத்தில் செடிகொடி விளக்கம்' என்ற இவ் வாசிரியன் நூலில் பார்க்கவும்.

குரங்கின் அச்ச உணர்வைச் சங்கநூற் புலவர்கள் நன்கு தெரிந்திருந்தனர். ஊகக் குரங்கிற்குப் பாம்பின் நஞ்சைக் கூடக் கண்டுபிடிக்கக் கூடிய சக்தி உண்டு என்று சிந்தாமணி கூறுவதைக் கவனிக்கவேண்டும். இச்செய்தி உண்மையா என்பதை ஆராய்தல் வேண்டும். இஃது உண்மையான செய்தி என்றே தோன்றுகின்றது.

> " வண்ணப்பூ மாலை சாந்தம்
>   வாலணி கலன்க ளாடைக்
> கண்முகத் துறுத்தித் தூய்மை
>   காண்டலாற் கொள்ள வேண்டா
> அண்ணலம் புள்ளோ டல்லா
>   வாயிரம் பேடைச் சேவல்
> உண்ணுநீ ரமிழ்தங் காக்க
>   யூகமோ டாய்க வென்றான்"
>
> —சீவகசிந்தாமணி, 1893.

நஞ்சையுடைய நீரையோ உணவையோ ஊகக் குரங்கின் முகத்தில் காட்டினால் உண்ணாது என்றும், அதைக் கொண்டு நஞ்சறியலாம் என்றும் சீவக சிந்தாமணி கூறுகின்றது. இதே செய்தியைப் பெருங்கதையும் கூறுகின்றது.

> " மறுப்பிய லூகமும் மந்திப் பிணையொடு"
>
> — பெருங்கதை, உஞ்சைக் காண்டம், 58 : 87-88.

'மறுப்பியல் ஊகம்' என்பதற்கு மறுவைப் பிடரியிலே யுடைய கருங்குரங்கு என்று உரை கூறப்பட்டுள்ளது. இது தவறான உரையாகும். சிந்தாமணிச் செய்தியை நோக்கின் நஞ்சை மறுக்கும் இயல்புடைய ஊகம் என்றே பொருள்கொள்ள வேண்டும். ஊகக் குரங்கிற்குப் பிடரியிலே மறுவொன்றுமில்லை. பெருங் கதையில் ஊகத்துடன் கூறப்பட்டுள்ள 'மந்திப்பிணை'

செம்முகக் குரங்கு வகையைக் குறிப்பதாகும். பெருங்கதையில் பின்னரும் 'யூகமும் மந்தியும்' என்று கூறப்பட்டுள்ளது. மந்தி என்ற சொல் பிற்காலத்தில் செம்முகக் குரங்கிற்குப் பொதுப் பெயராக வழங்கியதைக் காணலாம். ஊகம் என்ற சொற்குப் பொருள் கூறிய உரையாசிரியர்கள், நிகண்டாசிரியர்கள் கருங்குரங்கெனக் கூறினர். ஊகம் கருமையான நிறமுடையதென்பதைத் தெளிந்திருந்தனர். ஆனால் சங்க நூல்களிற் குறிப்பிடப்படும் கருங்குரங்கு ஊகக் குரங்கு அன்று, அது தனிப்பட்ட பிறிதொரு வகைக் குரங்காகும். ஊகக் குரங்கு மனிதருடன் பழகும் குணமுடையதன்று. வளர்த்தாலும் கடிக்கும் கொடிய தன்மை வாய்ந்தது. சிலப்பதிகாரத்தில் எதிரிகளை இறுக்கிப் பிடிக்கும் ஒரு பொறிக்கு 'ஊகப்பொறி' என்று பெயர் கூறப்பட்டுள்ளது.

பிற்காலத்தில் ஊகத்தைக் கருங்குரங்கு என்று கருதி மயங்கினரேனும், சங்க காலத்தில் ஊகக் குரங்கைக் கருங்குரங்கு என்று கருதவில்லை என்பது தெரிகின்றது. சங்க நூல்களில் மிக அருமையாகச் சில செய்திகள் நீலகிரியில் வாழும் கருங் குரங்கைப் பற்றிக் காணப்படுகின்றன. ஆனால் இச் செய்திகள் வருமிடங்களில் பாடல் வரிகளுக்குப் பிற்காலத்தில் உரை யெழுதிய ஆசிரியர்கள் பொருந்தாப் பொருளைக் கூறிச் சென்றனர். இயற்கையில் வாழும் விலங்குகள், பறவைகள், செடி கொடி மரங்கள் ஆகியவை பற்றிய அறிவு பிற்காலத்தில் புலவர்களிடையே குறைந்துவிட்டதால் இத்தகைய பொருந்தா உரைகள் எழலாயின. நற்றிணை 119 ஆம் பாடலில் 'கருங்கலை' என்ற

பெயரில் குறிப்பிடப்படும் நீலகிரிக் கருங் குரங்கைக் 'கரிய கலைமான்' என்று கொண்டு பொருள் எழுதி யுள்ளனர்.

" ... ... ... ... படப்பை
இன்முசுப் பெருங்கலை நன்மேயல் ஆரும்
பன்மலர்க் கான்யாற்று உம்பர்க் கருங்கலை
கடும்பாட்டு வருடையொடு தாவன உகளும்
பெருவரை நீழல் வருகுவன் குழவியொடு
கூவிளந் ததைந்த கண்ணியன் யாவதும்"

—நற்றிணை, 119.

நற்றிணை 119 ஆம் பாட்டில் மலையில் காணப்பட்டதாக 'இன் முசுப் பெருங்கலையும்,' 'கருங் கலையும்', கடும்பாட்டு வருடையும்' கூறப்பட்டுள்ளன. இன் முசுப் பெருங்கலை யென்பது கருமுகமுசுவின் ஆண் குரங்கு என்பது தெரிந்ததே. கருமுக முசுக்கலை யானது குறிஞ்சி நிலத்தூரில் கொல்லையில் மேயும் கான் யாற்றுக்கும் மேலே, உயரத்தில் கருங்கலை கடும் பாட்டு வருடையொடு தாவிப் பாயும் பெரிய மலை என்று நற்றிணை கூறுகின்றது. அத்தகைய மலையுயரத்தில் கலைமான்களைக் காண முடியாது. கலைமான்கள் கரிய நிறமுடையன அல்ல. மற்றும் வருடையாடு தன் சுற்றத்தோடு தாவி உகளும் என்று கூறியிருப்பதால் வருடை வாழும் சூழ்நிலையில் 'கருங்கலை' காணப்பட்டதைச் சங்கப் புலவர் தெளிவாகச் சுட்டிக் காட்டி யுள்ளார். வருடை என்பது நீலகிரி மலையில் வாழும் ஆட்டினத்தைச் சார்ந்த ஒருவகை விலங்காகும். இந்த வருடை பெரும்பாலும் நீலகிரி மலையில் மலையுச்சி களிலும் செங்குத்தான மலைச்சரிவுகளிலும் வாழு மென்று விலங்கு நூலார் கூறுவர். நீலகிரி, ஆனைமலை

களில் 4,000 அடியிலிருந்து 6,000 அடிவரை உள்ள உயரத்தில் நீலகிரித் தகர் (Nilgris tahr) எனப்படும் இவ் வருடை வாழ்கின்றதென்று விலங்கு நூலார் கூறுவர்.

ஆகவே கருங்கலை என்ற விலங்கும் அதே உயரத்தில் வருடையுடன் வாழும் விலங்கு என்று கூறப்பட்டிருப்பதால் அது கலைமானாக இருக்க முடியாது. கலை என்ற சொல் முசுக்குரங்கின் ஆணிற்கும் வழங்குமாதலால் முசுக் குரங்காக இருக்கலாம். ஆனால் அதே பாட்டில் முசுக் குரங்கின் ஆண் ஏற்கனவே 'முசுப் பெருங்கலை' என்று கூறப்பட்டு விட்டதால், இது வேறு ஒரு குரங்கு வகையாகத் தான் இருக்க வேண்டும். அந்தச் சூழ்நிலையில் காணக் கூடிய குரங்கு ஊகமாகவும் இருக்கலாம். ஆனால் ஊகத்திற்குக் கலை என்ற சொல் வழக்கு இல்லை. ஆதலின் கருங்கலை என்பது முசுவு மன்று. ஊகமுமன்று. செம்முகக் குரங்கு மன்று. ஆதலின் கருங்கலை என்பது தமிழ்நாட்டின் மலைகளில் காணப்படும் வேறொருவகைக் குரங்காகவே இருக்க வேண்டும்.

நீலகிரி மலையிலும் பிற உயர்ந்த மலைகளிலும் அரிதாகக் காணப்படும் வேறொருவகைக் குரங்கு, கருங் குரங்கு என்று தற்காலம் அழைக்கப்படும் நீலகிரிக் கருங் குரங்கே யாகும். இதை விலங்கு நூலார் நீலகிரி முசுக் குரங்கு (Nilgris langur) என்று அழைப்பர். முசுவின் இனத்தைச் (langur) சேர்ந்தது. ஆனால் முசுக் குரங்கிற்கு முகத்தில் மட்டும் கருமை யுண்டு. நீலகிரிக் குரங்கிற்கு உடல் முழுவதும் கருமையானது. முசுச்சாதிக்கு உருவிலும் தோற்றத்திலும் நெருங்கிய கருங் குரங்கின் ஆணை முசுவின் ஆணிற்கு உரிய கலை என்ற பெயரொடு

கருமையைக் குறிக்கும் அடைமொழி கொடுத்துக் கருங்கலை யென்று சங்கப் புலவர்கள் நுட்பமாகக் கூறியதை உணராது, பிற்காலத்தார் தடுமாறிப் பொருள் கூறினர்.

தற்காலத்தில் தமிழிலும் மலையாளத்திலும் கடப மொழியிலும் பேச்சு வழக்கில் கருங் குரங்கு என்று குறிப்பிடுவது இந்த நீலகிரிக் குரங்கையே. ஆனால் உரையாசிரியர்கள் ஊகத்தைக் கருங் குரங்கு என்று கொண்டு பொருள்கூறினர். ஊகமும் உடலில் கருமை யானதுதான். ஆனால் ஊகத்திற்கு நரைமுகம் உண்டு. நீலகிரிக் கருங் குரங்கிற்கு நரைமுகம் இல்லை. கரிய முகமே உண்டு. ஆதலின் உரையாசிரியர்கள் காலத்தில் ஊகத்திற்கும் கருங் குரங்கிற்கும் வேற்றுமை தெரியாது போகவே ஊகத்தைக் கருங்குரங்கு என்று தவருகக் கூறினர். ஆனால் தற்காலம் கருங் குரங்கு இரசாயனம், லேகியம் ஆகியவைகளில் குறிப்பிடும் கருங்குரங்கு நீலகிரிக் கருங் குரங்கே யாகும். ஊகமன்று ஆதலின் தற்காலப் பேச்சு வழக்கில் வழங்கும் கருங் குரங்கே சங்க காலக் கருங் குரங்கு. அதுவே சங்க காலக் 'கருங்கலை'. ஊகம் செம்முகக் குரங்கின் சாதியைச் (Macaque) சேர்ந்தது. ஆதலின் விலங்கு நூற்படி ஊகம் நீலகிரிக் கருங் குரங்கோடு சேர்க்க முடியாத குரங்காகும்.

முசுக் குரங்கிற்கு இனமானது கருங் குரங்கு என்பதை விலங்கு நூலார் கண்டறிந்தது போன்றே சங்க நூலாரும் ஒற்றுமையைத் தெளிந்தே முசுக்கலை, கருங்கலை என்று கலைப்பெயர் கொடுத்துக் கூறினதின் நுண்மாணுழை புலத்தைப் போற்றிப் புகழ வேண்டும். விலங்கு நூலாரும் கருங் குரங்கு ஊகக் குரங்கு போல

உடல் முழுவதும் கருமைநிற மாயினும் நரை முகத்தைக் கொண்டு ஊகக் குரங்கைப் பிரித்து உணரலாம் என்று கூறுவர். இந்த நீலகிரிக் கருங் குரங்கு 3,000 அடியிலிருந்து 7,000 அடிவரை உள்ள மலைக்காடுகளிலும் சோலைகளிலும் வாழ்வதாக விலங்கு நூலார் கூறுவர். அஃதாவது வருடை வாழும் சூழ்நிலையே. இந்த நீலகிரிக் கருங் குரங்கைத் தமிழில் 'நீலகிரி முசு' என்று விலங்கு நூலார் (Nilgris langur) கூறுவதுபோல் தமிழிலும் பெயரிட்டழைக்கலாம்.

இந்த நீலகிரி முசுவைப் பற்றி இரு குறிப்புகள் சங்க நூல்களில் காணப்படுகின்றன. ஆனால் உரையாசிரியர்கள் அவைகளுக்குப் புரியாது பொருளெழுதினர்.

> " நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
> திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே"
>
> —புறம், 109.

> " நீனிற வோரி பாய்ந்தென நெடுவரை
> நேமியிற் செல்லு நெய்க்க ணிறூஅல்"
>
> —மலைபடுகடாம், வரி 524-525.

மலையில் கட்டிய தேன் கூடுகள் 'ஓரி' பாய்ந்து தேன் சொரிந்தன என்ற செய்தி மேலே காட்டிய பாடல்களில் கூறப்பட்டுள்ளது. ஓரி என்ற சொற்குத் தேன் முதிர்ந்தாற் பரக்கும் நீலநிறம் என்று பொருள் கொண்டு உரை எழுதினர் பழைய உரையாசிரியர்கள். முசுக்கலை எனினும் அமையும் என்றும் கூறினர். முசுக்கலை என்று கூறியது ஓரளவு பொருத்தமெனலாம். ஆனால் நீலநிறம் என்று பொருள் கொண்டது சங்கநூல் வழக்குப்படியோ அறிவியற்படியோ ஆராய்ந்து பார்த்தால் பொருத்தமாகத் தோன்றவில்லை.

தேன் முதிர்ந்தால் நீலநிறம் பாயுமென்பதோ, அழிந்து தேன் சொரியுமென்பதோ அறிவியற்படி காணப்பட்டதன்று. மலைபடுகடாத்தில் நெய்க்கண் தேனிறாலே சக்கரம்போல நெடிய மலையில் உருண்டு சென்றதாகக் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். நீலநிறம் பரவினால் தேனிறாலே உருண்டு விழுவதாக அறிவியலார் கண்டு கூறவில்லை. ஆதலின் இச்செய்தி உரைகூறினாரின் கற்பனையே. ஆனால் ஓரியென்பது குரங்கைக் குறிக்கும் என்று கொண்டால் புறப்பாட்டு 109-ம், மலைபடுகடாமும் கூறும் செய்தி பொருத்தமானதாக அமையும். குரங்குகள் மலைகளில் தேனிறாலை அழித்து உண்ணும். சங்கநூல்களும் பிறநூல்களும் குரங்குகள் தேனிறாலைத் தேடுவதைப்பற்றிச் சில செய்திகள் கூறுகின்றன.

" கலைகை யற்ற காண்பி னெடுவரை
நிலைபெய் திட்ட மால்புநெறி யாகப்
பெரும்பயன் றொகுத்த தேங்கொள் கொள்கை "
—மலைபடுகடாம், வரி. 315-317.

" கருவிரன் மந்திக் கல்லா வான்பறழ்
அருவரைத் தீந்தே னெடுப்பி யயல
துருகெழு நெடுஞ்சினைப் பாயு நாடன் "
—ஐங்குறுநூறு, 272.

' இனக்கலை தேன்கிழிக்கு மேகல்சூழ் வெற்ப "
—பழமொழி, 187.

" ......... ......... ......... தீந்தேன்
முசுகுத்தி நக்கும் மலைநாட " —பழமொழி, 57.

மேற்காட்டிய பாடல்களில் குரங்கு மலையில் கட்டிய தேனிறாலைக் கிழிக்கும் என்பதுவும், குத்தும் என்பதுவும், தேனீயை எழுப்பிவிட்டுப் பாயுமென்பதுவும் கூறப்பட்டுள்ளன. முசுக்கலை கையால் அழித்துப் பெற முடியாத தேனிறாலைக் கண்ணேணி மூலமாகக்

குறவர் ஏறிக் கொள்ளுவர் என்று மலைபடுகடாம் கூறு வதைக் காண்க. ஆதலின் மலைபடுகடாத்தில் 524, 525 ஆம் வரிகளில் 'ஓரி பாய்ந்தென' என்ற தொடர்க்கு ஓரிக்குரங்கு பாய்ந்து கைக்கு எட்டி வாய்க்கு எட்டாது போன தேனிறால் மலையில் உருண்டு சென்றதையே பொருளாகக் கொள்ளவேண்டும். அதுபோன்றே புற நானூற்றுப் பாடலில் அணிநிற ஓரி பாய்ந்து மீதழிந்து தேன் சொரிந்தது என்பது அழகிய நிறமுடைய ஓரிக் குரங்கு பாய்ந்து தேனிறால் அழிந்ததையே குறிக்கும் என்பதை உணரவேண்டும். சங்கநூல் வழக்குப்படி யும் ஓரியென்பதற்கு இந்த இரு பாடல்களிலும் குரங்கு என்றே பொருள் கொள்ள வேண்டும் என்பது தெளிவு.

ஐங்குறு நூற்றில் (272) செம்முகக் குரங்கு தேனீயைக் கிளப்பி மரக்கிளைமேல் பாய்வதாகக் கூறப் பட்டுள்ளது. பழமொழியிலும், மலைபடுகடாத்திலும் முசுக்குரங்குகள் தேனிறாலைக் கவர்வதாகக் கூறப்பட் டுள்ளது. இச்செய்திகளை நுண்ணிதின் ஆராய்ந்து பார்த்தால் ஓரி என்பது நீலகிரிக் கருங்குரங்கே என்று தெரிகின்றது. ஓரி என்ற சொல் முசுவின் ஆணிற்கு வழங்கும் என்று சேந்தன் திவாகரமும் பிங்கலந்தை யும் கூறுகின்றன. நரிக்கும் வழங்குமாயினும் இங்கு அது கருதவேண்டியதில்லை. முசுவின் ஆணிற்கு ஓரி என்ற பெயர் ஓரளவே பொருந்தும். 'அணிநிற ஓரி' 'நீனிற ஓரி' என்று அழைக்கப்பட்டதிலிருந்து ஓரியின் உடல் அணிநிறம் உடையதென்றும், நீலநிறமுடைய தென்றும் தெளிவாக்கப்பட்டுள்ளது. அழகிய நிற முடைய, அழகிய மயிர்த்தோலையுடைய முசுப்போன்ற

குரங்கு நீலகிரிக் கருங்குரங்கேயாகும். இதன் அழகிய மயிர்த் தோலுக்காகவே இதை மிகவும் வேட்டை யாடிச் சில காலமாக அழித்து வந்தனர். (The beauty of their fur and the supposed medicinal value of their flesh, blood and organs have caused them to be hunted more than any other species of Indian monkey and have made them the most wary and unapproachable of all their tribe) நீலநிறமென்பது நீலகிரிக் குரங்கின் பள பளப்பான கருநிறத்தையே குறிக்கின்றது. நீலத்தைக் கருநிறமென்றும் கருநிறத்தை நீலநிறமென்றும் குறிப் பிடுவது சங்கநூல் வழக்கு. விலங்குநூலார் இதன் தோலின் கருநிறத்தை (glossy jet black) என்று கூறுவர். அணிநிற ஓரி யென்பது கருங்குரங்கின் ஆண் என்பது தெளிவாகும். ஆண்கருங் குரங்குகளைப் பற்றியே இரண்டு பாடல்களிலும் கூறப்பட்டிருப்பது ஏன் என்று ஆராய்ந்தால் விலங்கு நூலார் கூறிய ஒரு செய்தி துணை புரிகின்றது. இக் கருங்குரங்குகளின் ஆண்கள் தனியாக மலைக்காடுகளில் காணப்படுவதை விலங்கு நூலார் கண்டு கூறியுள்ளனர். (From the fact that solitary males much scarred with fighting are sometimes observed it may be deduced that their social organisation is based on the usual principle of male dominance) இப்படித் தனியாகக் கண்ட ஆண் கருங்குரங்குகளையே 'ஓரி' யென்று சங்கநூற் புலவர்கள் குறிப்பிட்டதாகத் தெரி கின்றது. 'ஓரி' என்ற சொல் தனிமை என்ற பொரு ளில் சங்கநூல்களில் வழங்கியுள்ளது. 'ஓர்' என்ற வேர்ச்சொல் அடிப்படையில் தோன்றியது பிற் காலத்துத் திவாகரம், பிங்கலந்தை போன்ற நிகண்டுகள் அச் சொல் வழக்கை உணர்ந்து முசுவின் ஆண் 'ஓரி' என்று கூறப்படும் என்றன. ஆனால் முசுவின் ஆண்

அன்று ஓரி முசுப்போன்ற நீலகிரி முசுவின் ஆணை ஓரி என்பதாகும். இதே நிகண்டுகளில் 'கார்' என்ற சொல்லால் கருங்குரங்கின்பெயராகக் காட்டப்பட்டிருக்கின்றது. கார் என்ற சொல் கருமையைக் குறிக்கும். சங்க காலத்தில் 'கார்' என்ற பெயரே கருங்குரங்கிற்கு வழங்கியிருக்கலாம். அதனடிப்படையாகவே 'கருங்கலை' என்ற சொல் கருங்குரங்கின் ஆணைக் குறித்துச் சங்க நூல்களில் வழங்கியிருக்கும். குறுந்தொகை 69ஆம் பாட்டில் 'கருங்கட்டாக் கலை' என்று வரும் பெயர் இந்தக் கருங்கலையையே குறிப்பதாகத் தோன்றுகின்றது. ஆனல் அதைக் குரங்காகக் கொண்டு பேராசிரியர் பொருள் கூறியுள்ளார். கலை என்ற சொல் முசுவிற்கு நிலைபெற்ற தெனவே அத்துணை நிலை பேறின்றிக் குரங்கிற்கு வருவனவும் கொள்க என்று கூறி, அவ்வாறு வருவதற்கே 'கருங்கட்டாக்கலை' என்று வரும் வரியைப் பேராசிரியர் காட்டியிருக்கின்றார். இதிலிருந்து பேராசிரியரும் 'கருங்கட்டாக்கலை' முசுக் கலை அன்று என்பதை உணர்ந்தே எழுதியுள்ளது தெளிவாகின்றது. ஆனல் அவர் கருங்கட்டாக்கலை செம்முகக் குரங்கிற்கு வரும் என்று கூறியது தவறு. அதற்குக் காரணம் 'கருங்கலை' கருங்குரங்கைக் குறிப்பதையும், கருங்குரங்கு சங்கநூலார் அறிந்த குரங்கென்பதையும் பேராசிரியர் அறியாததே. ஓரி என்பதே 'கருங்கலை' 'கருங்கட்டாக்கலை' என்பதை உணர வேண்டும். கருங்கட்டாக்கலை என்ற சொற்றொடர் கருங்கண் தாக்கலை என்று பிரிக்கப்படும். தாக்கலை என்பது தாக்கணங்கு என்பதுபோல் அதே பொருளில் வருவது. கருங்குரங்கின் முதிய ஆண்கள் தனியாக இருப்பதுவும், போரிட்டுப் புண்ணுற்றுக் காணப்படு

வதும் (Solitary male much scarred with fighting) விலங்கு நூலார் கூறிய செய்தியே. அத்தகைய கருங்குரங்கின் முதிய ஆணே 'தாக்கலை என்றழைக்கப்பட்டது.' கருங் கண்' என்பதிலிருந்து இக்குரங்கு கரியதென்பதையும் உய்த்துணர முடிகின்றது.

நிகண்டுகள் 'காருகம், ஊகம் கருங்குரங்காகும்' என்று கூறின. ஊகத்தையும் கருங்குரங்காகக் கொண்டது இதிலிருந்து தெரிகின்றது. ஊகத்தை ஒருவகைக் கருங்குரங்காகவும், நீலகிரிக் கருங்குரங்கை மற்றொரு வகைக் கருங்குரங்காகவும் கொண்டு அதற்குக் காருகம் என்று பெயர் வழங்கியதாகத் தெரிகின்றது. ஆனால் 'கார்' என்பதே பொருத்தமான பெயராகத் தெரிகின்றது. கருங்குரங்கை ஓரளவு நிகண்டாசிரியர்களும் தெரிந்திருந்தனர்.

சங்க இலக்கியத்தில் தமிழ்நாட்டில் உள்ள நான்கு வகைக் குரங்குகளே சொல்லப்பட்டுள்ளன. இந்தியாவில் உள்ள ஏனைய குரங்குகளைப்பற்றிச் சங்க நூல்கள் யாதொரு செய்தியும் சொல்லவில்லை. ஆனால் தொல்காப்பிய உரைகளிலும் பிற இலக்கணங்களின் உரைகளிலும் வடநாட்டில் வாழும் ஒருவகைக் குரங்குபற்றி அரிய செய்தி காணப்படுகின்றது. தொல்காப்பியச் சொல்லதிகாரச் சூத்திரம் 'அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்' என்பதற்கு எடுத்துக்காட்டாகக், 'கருமுக மந்தி செம்பினேற்றை' என்ற வரி கூறப்பட்டுள்ளது. பேராசிரியரும் மரபியலில் (சூ. 622) முசுவின் பெண்பால் மந்தி எனப்படும் என்பதற்கு இதே வரியைக் காட்டினார். இவ் வரி பழைய பாட்டின் வரியாக இருக்கலாம். ஆனால் பேராசிரியர் முசு என்று கொண்டது பொருத்தமில்லை. ஏனென்றால் முசுவிற்கு

(Common langur) சிவப்பான பின்பாகம் (பிருட்டபாகம்) கிடையாது. இருந்தால் சங்க நூல்களிலும், விலங்கு நூல்களிலும் சொல்லப்படாமல் இருக்காது. ஆதலின் 'செம்பின்' உடைய குரங்கு தமிழ்நாட்டில் உள்ள நான்கு குரங்கு வகைகளில் எதுவுமில்லை. ஆனால் கோதாவரிக்கப்பால் வடநாடு முழுவதும் ஊர்களிலும் நகர்ப்புறங்களிலும் எளிதாக, மிகுதியாகக் காணப்படும் ஒரு குரங்கு வகைக்குச் 'செம்பின்' (Red Rumps) இருக்கின்றது. இக்குரங்கு வகையை 'Rhesus macaque என்று விலங்கு நூலார் அழைப்பர். இக்குரங்கு தமிழ் நாட்டில் எங்கும் காணப்படும் செம்முகக் குரங்கின் சாதியைச் சேர்ந்தது. வடநாட்டில் குரங்கென்றால் (Bandar) இதையே குறிக்கும். இந்தக் குரங்கின் மந்திக்கு இணைகூடும் காலத்தில் (Mating Season) பின் பாகம் நல்ல சிவப்பு நிறமாக மாறுகின்றது. ஆண் குரங்கிற்கு அழைப்பு விடுக்கவே விளம்பரமாகச் 'செம்பின்' ஏற்படுகிறது என்று விலங்கு நூலார் கூறுகின்றனர். (The Rhesus macaque females advertise their condition by bright red rumps) விலங்கு நூலார் கூறும் இந்தச் செம்பின் பாகத்தையே கருமுக மந்தி செம்பின் என்றனர். கருமுக மந்தியின் 'செம்பினை'ப் பார்த்துக் கவரப்பட்ட ஏற்றை (ஆண்) என்பதே பாட்டின் பொருள். மொழிபெயர் தேயத்தில் கண்ட ஓர் இடக்கர் அவயவத்தின் பெயரை அவையல் கிளவியாகக் கொண்டது வியப்பை யூட்டுவதாகும். தற்காலப் பேச்சு வழக்கில்கூட இஃது இடக்கர்ச் சொல்லே. இன்றும் இடக்கரை அடக்கும் சொற்களாக வட மொழிச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் தமிழில் பயன்படுத்துவதைக் காணலாம். 'நீரல்

ஈரத்தை' மூத்திரம் என்று சொல்வதைக் காணலாம். மந்தியின் 'செம்பின்' இடக்கர்ச் சொல்லாகவும் அவையல் கிளவியாகவும் கருதப்பட்டதுபோலவே அமெரிக்காவிலே இன்றுங்குரங்கின் 'செம்பின்' இடக்கர் மொழியாகக் (Slang) கையாளப்படுகின்றது நகைப்பை யும் வியப்பையும் தருகின்றது. *(Monkey's pink butt) பழந்தமிழ்ப் புலவர்கள் மந்தியின் செம்பின்னைக் குறிப் பிட்டுக் கூறியதுபோலத் தற்கால அமெரிக்க எழுத் தாளர் ஒருவரும் கூறியுள்ளது கவனிக்கத் தக்கதாகும்.

குரங்குகளைப் பற்றிச் சில பொதுவான செய்தி களும் சங்க நூல்களில் சொல்லப்பட்டுள்ளன. குரங்கு கள் சைவ உணவையே விரும்பி உண்ணுமென்பர். முசுக்குரங்குகள் சைவ உணவைத் தவிர வேறெவற் றையும் உண்ணுவதில்லை. செம்முகக் குரங்குகள் சைவ உணவே மிகுதியாகக் கொண்டாலும் புழுப் பூச்சிகளையும் பறவை முட்டைகளையும் உண்ணும்.

" கறிவள ரடுக்கத் தாங்கண் முறியருந்து
குரங்கொருங் கிருக்கும் பெருங்கல் நாடன் "

—குறுந்தொகை, 288.

" அதிர்குரல் முதுகலை கறிமுறி முனைஇ
உயர்சிமை நெடுங்கோட் டுகள உக்க
கமழ்தழ் அலரி தாஅய் வேலன்
வெறியயர் வியன்களம் கடுக்கும் " —அகம், 182.

" குளவி மேய்ந்த மந்தி துணையொடு "

—ஐங்குறுநூறு, 279

" மந்திக் காதலன் முறிமேய் கடுவன்
தண்கமழ் நறைக்கொடி கொண்டு வியலறைப்
பொங்கல் விளமழை புடைக்கு நாட "

—ஐங்குறுநூறு, 276

* The oscar — Richard Sale.

" முறிமே யாக்கைக் கிளையொடு துவன்றிச் "
—மலைபடுகடாம், வரி 313.

" அத்தச் செயலைத் துப்புற ழொண்டளிர்
புன்றலை மந்தி வன்பற ழாரும் "
—ஐங்குறுநூறு, 273.

அசோகு, மிளகின் கொழுந்துகளை உண்பதாகவும் மரஞ் செடிகளின் தளிர்களை மேய்வதாகவும் சங்கப் பாடல்கள் கூறுவதைக் காணலாம். (Monkeys eat leaves, flowers and fruit. This is their chief food) சங்கப் பாடல்களில் குரங்குகள் மரங்களில் மேயும்போது பூக்களையும், தளிர்களையும், பழங்களையும் உதிர்ப்பதாகவும் கூறியிருப்பதைக் கவனிக்கலாம்.

" புலிக்கேழ் உற்ற பூவிடைப் பெருஞ்சினை
நரந்த நறும்பூ நாண்மலர் உதிரக்
கலைபாய்ந்து உகளும் கல்சேர் வேங்கைத்
தேங்கமழ் நெடுவரை பிறங்கிய
வேங்கட வைப்பிற் சுரன்இறந் தோரே "
—அகம்.

" ஆய்சுளைப் பலவின் மேய்கலை உதிர்த்த
துய்த்தலை வெண்காழ் பெறூஉங்
கற்கெழு சிறுகுடிக் கானவன் மகளே "
—அகம் 7.

" ......... ......... ......... கடுவன்
ஊழுறு தீங்கனி யுதிர்ப்பக் கீழிருந்
தேற்பன வேற்பன வுண்ணும்
பார்ப்புடை மந்திய மலையிறந் தோரே "
—குறுந்தொகை, 278.

குரங்குகள் தளிர், பூ, காய் ஆகியவைகளை உதிர்த்து மான்களை ஊட்டும் (Commensal) என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். மரத்தில் மேயுங் குரங்குக் கூட்

டங்களை நிலத்திலிருக்கும் மான் கூட்டங்கள், உணவுக்காகப் பின் தொடருமாம். மேலே காட்டிய பாடல்களிற் குரங்குகள் பூக்களை உதிர்ப்பதாகவும், பலாப் பழத்தின் கொட்டையை உதிர்ப்பதாகவும், கீழே இருந்த தன் குட்டிகளுக்கு முற்றிய மாம்பழத்தை உதிர்க்க, அவை தின்றதாகவும் கூறியிருப்பதை நோக்குக.

" கான மஞ்ஞை யறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை யுருட்டும்
குன்ற நாடன் கேண்மை யென்றும் "

—குறுந்தொகை, 38.

குறுந்தொகை 38ஆம் பாட்டில் முசுக்குரங்கு காட்டுமயில் இட்ட முட்டையை விளையாட்டாக உருட்டும் என்று கூறியதைக் கவனிக்கவேண்டும். முசுக்கள் முற்றிலும் சைவ உணவையே உண்ணுவன. அதனால் மயில் முட்டையை உண்ணவில்லை. அதுவே செம்முகக் குரங்காயின் முட்டையை உண்டுவிடும்.

குரங்குகள் மழைக் காலத்தில் குளிரில் நடுங்குமெனச் சங்க நூல்கள் கூறுகின்றன.

" மாமேயன் மறப்ப மந்தி கூர"

—நெடுநல் வாடை, 9.

" நரைமுக ஊகம் பார்ப்பொடு பனிப்ப"

—குறுந்தொகை, 249.

" ... ... ... ...ஊகமொடு
மாமுக முசுக்கலை பனிப்ப"

—திருமுருகாற்றுப்படை, 302-303.

சங்க நூல்களில் மூவகைக் குரங்குகளும் மழையில் குறுகி யொடுங்கி நடுங்குவதாகக் கூறப்பட்டுள்ளது.

குரங்குக் குட்டிகள் தாய்க் குரங்கைத் தழுவிக்கொண்டு போகும். குரங்குகள் உயரக் குதித்தாலும் குட்டிகள் விழாதபடி தழுவிப் பிடித்துக் கொள்ளும். இத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு தத்துவ நூலில் 'மர்க்கட நியாயம்' என்ற ஒரு கொள்கை கடவுள் வழிபாட்டில் கூறப்படுகின்றது.

" பெரிதா லம்மநின் பூச லுயர்கோட்டு
மகவுடை மந்தி போல
அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே"

—குறுந்தொகை, 29.

குட்டியால் தழுவப் பெற்றுச் செல்லும் மந்தியைக் குறிப்பாகக் காட்டியிருப்பதைக் காணலாம்.

குரங்கின் குடும்ப வாழ்க்கையைப் பற்றிச் சங்கப் புலவர்கள் சில செய்திகள் கூறியுள்ளனர். விலங்கு நூலார் குரங்குகள் ஆண், பெண்ணாக இணைவதையும் ஆணும் பெண்ணுமாக வாழ்வதையும் கூறியுள்ளனர். ஆனால் ஓர் ஆண் பல பெண் குரங்குகளைத் துணையாக வைத்திருப்பதையும் கண்டுள்ளனர். குரங்கினத்தில் ஒருதார மணமும், பலதார மணமும் நிலவுகின்றது என்பர்.

" மந்திக் காதலன் முறிமேய் கடுவன் "

—ஐங்குறுநூறு, 276.

" மந்திக் கணவன் கல்லாக் கடுவன் "

—ஐங்குறுநூறு, 274.

ஐங்குறுநூற்றிலும் பிற சங்க நூல்களிலும் பெண்குரங்கு கணவனுடன், காதலனுடன் இருப்பதாகக் கூறுவதைக் காணலாம். ஆனால் பெரும்பாலும் குரங்குகள் ஒருதார மணவாழ்க்கையைப் (Monogamy)

பின்பற்றுவ தில்லை. குரங்குக் கூட்டம் என்பது சில பெண் குரங்குகள், குட்டிகள் இளமையான ஆண் குரங்குகள் சேர்ந்த கூட்டமாகக் காணப்படும் (Troops) என்று கூறுவர். இந்தக் கூட்டத்திற்கு வலிமையும் ஆற்றலும் பொருந்திய ஆண்குரங்கு தலைமை தாங்குமாம். இந்தத் தலைமைக் குரங்கு மற்ற ஆண் குரங்குகளை அடக்கி ஆளும். அல்லது கூட்டத்தை விட்டு விரட்டி ஓட்டும். அவ்வாறுவிரட்டப்பட்ட ஆண்குரங்குகள் தனியாகவோ அல்லது ஆண் குரங்குகளாலாகிய கூட்டமாகவோ காணப்படும். தலைமை தாங்கும் இந்த ஆண் குரங்கைப் பற்றிச் சங்கநூலார் தெரிந்திருந்தனர்.

'' குரங்கின் தலைவன் குறுமயிர்க் கடுவன்''
—ஐங்குறுநூறு, 275.

'' பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன் ''
—அகம், 352.

குரங்குக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் ஆண் குரங்கை (Dominant Male) அறிந்தே கூறியுள்ளனர். சங்க நூல்களிற் குரங்குகளிடையே காணப்படும் இத் தகைய கூட்டங்களைக் 'கிளை' என்று கூறியுள்ளனர்.

'' கருவிரல் மந்திச் செம்முகப் பெருங்கிளை '
—நற்றிணை, 334.

'' செம்முகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாஅங்கு ''
—புறம், 378.

'' பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன் ''
— அகம், 352.

'' முறிமேய யாக்கைக் கிளையொடு துவன்றிச்''
—மலைபடுகடாம், வரி 313.

'' கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி''
—குறுந்தொகை, 69.

மேலே காட்டிய சங்கப்பாடல்களிற் கிளை என்ற சொல் குரங்குக் கூட்டத்தைக் குறித்து வருகின்றது. கிளை என்ற சொல் பொருட் செறிவுடன் குரங்குக் கூட்டத்தைக் குறிக்க வழங்கியுள்ளது.

கூட்டத்தில் உள்ள குரங்குகள் உறவின் முறையாரைப் போன்று பிறப்பிலே உறவுடையன என்பதையும் கிளை என்ற சொல் சுட்டிக் காட்டுகின்றது. இக்குரங்குக் கூட்டங்களின் உறவின் நெருக்கத்தையும் கட்டுப்பாட்டையும் உணர்ந்தே 'முறிமேய் யாக்கைக் கிளை' மலைப்பிளப்பில் விழுந்த குட்டியைக் காப்பாற்ற முடியாமல் கையற்றுக் கூக்குரலிட்டன என்று மலைபடுகடாம் கூறிற்று. யாக்கை என்ற சொல் குரங்குகளுக்குள் இருந்த நெருக்கமான உறவுத் தொடர்பையும் கட்டுப்பாட்டையும் குறிக்கின்றது. இம் முறையாகக் கூட்டங்கள் ஊர்ப்புறங்களிலும் உணவு நிறையக் கிடைக்கும் சூழலிலுமே குரங்குகளிடையே உண்டாகின்றன என்று விலங்கு நூலார் கண்டுள்ளனர். சங்க நூல்களிலும் ஊர்களின் சூழ்நிலையில் காணப்படும் செம்முகக் குரங்குகளுக்கே 'கிளை' என்ற பெயர் கூறியிருப்பதைக் காணலாம். குறுந்தொகை 69ஆம் பாட்டில் மட்டும் கருங்குரங்குகளுக்குக் 'கிளை' என்ற பெயர் கூறியதாகத் தெரிகின்றது. வலிய குரங்கு ஒன்று கூட்டத்திற்குத் தலைமை தாங்குவது இயல்பு. ஆனால் சில சமயங்களில் போரிட்டு வென்று பல கூட்டங்களையும் தன்னதாக்கி ஒரே குரங்கு அதற்குத் தலைமை தாங்குவதுண்டு என்பதை விலங்கு நூலார் எழுதியுள்ளனர்.

(The temporary assemblage of families may live as n dependant unit, distinct in all essential relationship and

mingling with the other members of the Colony only for purposes of feeding or participating in communal quarrel, the extent of such association depending upon the relationship of the dominant overlord.)

பல கூட்டங்களின் தலைமைக் குரங்குகளைத் தாக்கிப் போரிட்டு வென்று பல கிளைகளுக்கும் தலைவனான குரங்கையே, 'பல்கிளைத் தலைவன்' (Dominant overlord) என்று அகநானூற்றுப் பாடல், 352 கூறுவதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். குறுந்தொகை 69ஆம் பாட்டில் கருங்குரங்குகளின் தலைவனையே 'தாக்கலை' என்று கூறியதாகத் தெரிகின்றது. தாக்கும் கலைக் குரங்கு இறந்துபோகவே அதன் மந்தி தன் குட்டியைக் 'கிளைமுதற்' சேர்த்து உயிரை மாய்த்ததாகக் கூறப்பட்டுள்ளது. தன்னுயிரை மாய்த்துக் கொள்ளுமுன் தன் குட்டியை அதற்குரிய கிளையில் சேர்த்ததாகக் கூறியது அரிய செய்தி. கிளையின் அடிப்படைத் தன்மையைச் சங்கப்புலவர்கள் நன்கு உணர்ந்தே பாடியுள்ளனர். ஆனால் பெண்குரங்கு ஆண்குரங்கின் இழப்பைத் தாங்காது உயிர்விட்டது என்பது கற்பனையாக மனித உணர்ச்சியைக் குரங்கின்மேல் ஏற்றிக் கூறியதே யாகும். குரங்குகளுக்கு அத்தகைய முதிர்ந்த அன்புணர்ச்சி கிடையாது. குரங்குகளிடையே உள்ள உறவுகள் பாலுணர்ச்சி (Sex instinct) முதலிய அடிப்படை உணர்வுகளில் (Basic instincts) தோன்றியவையே. குட்டிகளோடு கூடிய மந்திகளைப் பற்றிய செய்திகள் சங்க நூல்களில் வருகின்றன. ஊகம் பார்ப்பொடு (குறுந்தொகை 249) இருப்பதையும் செம்முக மந்தியும் கடுவனும் பார்ப்பொடு காணப்பட்டதையும் (குறுந்தொகை 278) கூறியுள்ளனர். உணவு தேடி

உண்ணும் காலத்தில் கூட்டமாக இருப்பதையும், 'முறியருந்து குரங்கு ஒருங்கு இருக்கும்' என்று குறுந்தொகை (288) கூறியதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். குரங்குக் கூட்டங்களில் ஆண்களே தனியாக அமைந்த கூட்டத்தையும் கண்டு விலங்கு நூலார் எழுதியுள்ளனர். இவை பெரும்பாலும் கூட்டத்திலிருந்து விரட்டப்பட்ட ஆண் குரங்குகள் என்று கூறுவர். இத்தகைய ஆண் குரங்குக் கூட்டங்களை முசுக் குரங்குகளிடையே சங்க நூலார் அடிக்கடி கண்டதன் காரணமாகவே இந்த முசுத் திரளுக்குக் 'கணக்கலை,' 'இனக்கலை' என்று பெயரிட்டனர். இத்தகைய ஆண் முசுக் கூட்டத்தைக் கண்டதினால் முசுவின் ஆணிற்கு அதற்கே உரிய பெயராகக் கலை என்ற சொல் தோன்றிற்றுப் போலும். பேராசிரியர் மரபியலுரையில் கலை என்ற பெயர் முசுவிற்கு நிலைபேறுடையது என்று கூறியதைக் காணலாம். குரங்குகளில் தனியாகவே மேய்ந்து வாழும் ஆண் குரங்குகளையும் விலங்கு நூலார் கண்டுள்ளனர். இவை குரங்குக் கூட்டத்தின் தலைமைப் பதவியிலிருந்து போரிட்டு விரட்டப்பட்ட முதிய ஆண் குரங்குகளாக இருக்கலாம் என்று விலங்கு நூலார் கூறுவர். ஏன் எனின் இவை கடிபட்ட புண்களுடனும் காயங்களுடனும் காணப்படுகின்றன. இந்தத் தனித்த ஆண் குரங்குகளை முசுக்குரங்கு வகையிலும், கருங் குரங்கிலும் சங்க நூலார் கண்டதாகத் தெரிகின்றது. கலைக் குரங்குகளைத் தனியாகச் சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. 'அதிர்குரல் முதுகலை'யைப் பற்றி அகநானூறு (182) கூறுவதிலிருந்து முதிய கலையே தனித்து வாழ்ந்ததாகத் தோன்றுகின்றது. கருங்குரங்குகளில் இம்முறையாகத் தனி

யாகத் திரியும் வயது மிக்க ஆண் குரங்குகளை விலங்கு நூலார் கண்டுள்ளனர். இதையே சங்க நூலார் 'ஓரி' யென்றும் 'தாக்கலை' என்றும் குறிப்பிட்டனர் என்பது முன்னர் விளக்கப்பட்டது. ஓரியென்ற பெயர் முதுநரிக்கும் வழங்கியுள்ளது. கலையும் ஓரியும் நரியையும் முசுவையும் குறிக்குமென நிகண்டுகள் கூறும். ஓரி என்ற பெயர் முதுகலையைக் குறித்தே சங்க நூல்களில் வழங்கியதாகத் தெரிகின்றது. ஓரி என்ற பெயர் சூடாமணியில் கிழ நரியையும் ஆண் முசுவையும் குறித்து வழங்குவதைக் காணலாம்.

தொல்காப்பியத்தில் மூன்று வகைக் குரங்குகளைப் பற்றியும் மரபியல் சூத்திரம் கூறுவதைக் கவனிக்க வேண்டும். தொல்காப்பியர் காலத்திலேயே இந்த மூன்று வகைக் குரங்குகளையும் மிகத் தெளிவாகப் பிரித்து உணர்ந்திருந்தனரென்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால் பிற்கால நூல்களில் இந்த மூன்று வகைக் குரங்குகளையும் பிரித்து உணர்ந்ததாகத் தெரியவில்லை. எல்லா வகைக் குரங்குகளையும் பொதுவாகக் குரங்கென்றே கூறிச் சென்றனர். 'கோடுவாழ் குரங்கும் குட்டி கூறுப' என்று வரும் மரபியல்-கூ-ஆம் சூத்திரத்தில் தொல்காப்பியர் குரங்கு என்ற சொல்லைக் குரங்கினத்தையே குறிக்கும் பொதுச் சொல்லாகக் கொண்டுள்ளது தெரிகின்றது. பேராசிரியர் குரங்கின் பிறப்புப் பகுதியாகக் குரங்குக் குட்டி, முசுக்குட்டி, ஊகக் குட்டி என்று கொண்டுள்ளார்.

> "குரங்கு முசுவும் ஊகமு மூன்றும்
> விரம்ப நாடி னப்பெயர்க் குரிய"
>
> —தொல் - மரபியல். 22

" குரங்கு முசுவும் ஊகமு மந்தி "

— தொல் - மரபியல். ௬௮

இந்த இரண்டு மரபியில் சூத்திரங்களும் குரங்கினத்தின் மூன்று வகைக் குரங்குகளைத் தெளிவாகக் கூறியுள்ளன. மந்தியென்பது மூன்று வகைக் குரங்குகளின் பெண்பாலைக் குறித்தது என்று மரபியலில் கூறப்பட்டிருப்பினும் சங்க காலத்திலேயே மந்தி என்ற சொல் செம்முகக் குரங்கின் பெண்பாலிற்கே பெரும்பாலும் வழங்கியுள்ளது. பிற்காலத்தில் நூல்களிலும் நிகண்டுகளிலும் மந்தி என்ற சொல் பெண்பாலை மட்டுமின்றிப் பொதுவாகச் செம்முகக் குரங்கு வகையையே குறிப்பிட்டு வழங்கிற்று. மரபியல் நூற்பா ௬௬ 'குரங்கி னேற்றினைக் கடுவனென்றலும்' என்று செம்முகக் குரங்கின் ஆணைக் 'கடுவன்' என்று கூறும் வழக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதென்று கூறிற்று. முசுவின் ஆணிற்குப் பெயராகக் கலையென்ற சொல் நிலைபேறுடையதென்பதை 'நிலையிற்றப் பெயர் முசுவின் கண்ணும்' என்று வரும் ௪௯ஆம் நூற்பா விளக்குகின்றது. நீலகிரிக் கருங்குரங்கு சில மலைகளிலேயே மிக அரிதாகக் காணப்பட்டதால் அதைப் பற்றித் தொல்காப்பியர் கூறவில்லை போலும். நிகண்டாசிரியர்கள் கருங்குரங்கை உணர்ந்திருந்தாலும் ஊகத்தையும் கருங்குரங்கையும் ஒன்றாகச் சிலவிடங்களில் கருதினர். ஆனால் 'யூகம்' என்ற பெயரை நிகண்டுகளில் பெண் குரங்கின் பெயராகக் கொண்டது மிகவும் தவறு. குரங்கின் பெயராக நிகண்டுகளில் வழங்கும் பெயர்களில் சிலவே தமிழ்ப் பெயர். பிற வடமொழிப் பெயர்கள். 'வலிமுகம்' முகத்தின் கடுமை காரணமாக வந்தது. 'கவி' என்ற சொல் கன்னடத்தில்

மட்டும் இன்று வழங்குகின்றது. 'கோடரம்' என்ற சொல் மரக் கோட்டில் வாழும் விலங்கு என்று கருதிய தால் வந்த பெயர். முசுவின் பெயராக 'மைம்முகன்' என்ற புதிய பெயர் காணப்படுகின்றது. 'கோலாங் கூலம்' என்று வரும் முசுவின் பெயர் வடமொழிப் பெயர். இதுவே 'லங்கர்' என்று ஆங்கிலத்திலும் இந்தி மொழியிலும் வழங்குகின்றது.

சங்க இலக்கியத்தில் நான்கு வகைக் குரங்குகளைப் பற்றிச் செய்திகள் கண்டோம். ஆனால் இந்த நான்கு வகைக் குரங்குகளையும் ஒரே சங்க நூற் பாட்டுக் கூறி யிருப்பது மிக்க வியப்பை அளிக்கின்றது. மலைபடு கடாம் மலையையும் மலைசார்ந்த காடுகளையும் ஆராய்ந்து அவற்றின் இயற்கை நிலையைப் படம் பிடித்துக் காட்டு வது போன்று பாடப்பட்டுள்ளது. ஆதலின் மலைபடு கடாத்தில் இந்த நால்வகைக் குரங்குகளும் கூறப்பட் டிருப்பது எதிர்பார்க்கக்கூடியதே.

"இருவெதி ரீர்ங்கழை தத்திக் கல்லெனக்
கருவிர லூகம் பார்ப்போ டிரிய"

—வரிகள் 207—208.

"கடும்பறைக் கோடியர் மகாஅ ரன்ன
நெடுங்கழைக் கொம்பர்க் கடுவ னுகளினு"

—வரிகள் 236—237.

"கலைதொடு பெரும்பழம் புண்கூர்ந் தூறலின்
மலைமுழுதுங் கமழு மாதிரந் தோறும்"

—வரிகள் 292—293.

"கைக்கோண் மறந்த கருவிரன் மந்தி
பெருவிடர் வீழ்ந்ததன் கல்லாப் பார்ப்பிற்கு
முறிமே யாக்கைக் கிளையொடு துவன்றிச்
சிறுமை யுற்ற களையாப் பூசல்" —வரிகள் 311—314.

" நீனிற வோரி பாய்ந்தென நெடுவரை
நேமியிற் செல்லு நெய்க்க ணிறுஅல் "

— வரிகள் 524—525.

மேலே எடுத்தாளப்பட்ட மலைபடுகடாம் பாட்டு வரிகளில் முதலில் ஊகக் குரங்கும், அதற்கடுத்துச் செம் முகக் குரங்கும், அதற்கும் பிறகு முசுக் குரங்கும், பின்னர்த் திரும்பவும் செம்முகக் குரங்கும், இறுதி யாகக் கருங்குரங்கும் சொல்லப்பட்டிருப்பது மிக அரிய செய்தியாகும். சங்கப் புலவர்களின் விலங்கியல் அறிவு நுண்மாணுழைபுலம், அறிவாற்றல் எல்லாம் காட்ட மலைபடுகடாத்தில் வரும் இச்செய்தியே போது மானது. இதுவரை விளக்கியதிலிருந்து சங்க நூல்களில் தமிழ்நாட்டில் உள்ள நான்கு வகைக் குரங்குகளும் சொல்லப்பட்டுள்ளன என்பது தெரிந்ததே. இந் நான்கைத் தவிரத் தமிழ் நாட்டில் வேறு குரங்குகள் விலங்கு நூற்படி கிடையாது. சங்க நூல் வழியாக நாம் அறியும் செம்முகக் குரங்கும், மாமுக முசுவும், நரைமுக ஊகமும், கருங்கலையுமே (அணிநிற ஓரி) விலங்கு நூலாரும் தமிழ் நாட்டில் கண்டவை. அவை விலங்கு நூற்படி முறையே The Bonnet Macaque (Macaca radiata), The Common langur (Presbytus entellus), The Lion-tailed Macaque (Macaca Silenus) The Nilgris Langur (Presbytis Johnii) எனப்படும்.

## உ. வருடை

## (NILGRIS TAHR)

வருடை என்னும் விலங்கைப் பற்றிய செய்திகள் சங்கநூல்களில் காணப்படுகின்றன. இவ்விலங்கு வாழும் சூழ்நிலை, இடம் தெளிவாகச் சங்கநூல்களில் கூறப்பட்டுள்ளன. இச்செய்திகளிலிருந்தே விலங்கு நூல் படித்த எவரும் வருடை என்பது என்ன விலங்கு என்பதை எளிதில் தெரிந்து கொள்வர்.

"செவ்வரைச் சேக்கை வருடை மான்மறி
சுரைபொழி தீம்பா லார மாந்திப்
பெருவரை நீழ லுகளு நாடன்"

—குறுந்தொகை, 187.

"நெடுவரை மிசையது குறுங்கால் வருடை"

—ஐங்குறு நூறு, 287.

"வேறுவே றினத்த வரைவாழ் வருடை"

—அகம். 378.

"வழைவளர் சாரல் வருடை நன்மான்"

—கலி. 50.

"மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம் போல"

—பட்டினப்பாலை. 138-139

"அண்ணலங் குன்றின்மேல் வருடைபாய்ந் துழக்கலின்"

—சிந்தாமணி. 1899

"மருவி மால்வரை உம்பரில் குதிக்கின்ற வருடை"

—கம்பராமாயணம்.

குறுந்தொகை கூறும் 'செவ்வரைச் சேக்கை செங்குத்தான மலைச்சாரலைக் குறிக்கின்றது. சேக்கை என்ற சொல் விலங்குகள், பறவைகள் வாழுமிடத்தை தங்குமிடத்தைக் குறிக்கும். வருடையானது செங்குத்தான மலையை வாழுமிடமாகக் கொண்டது என்பதைத் தெளிவாகக் குறுந்தொகை சொல்லுகின்றது. மற்றும் 'பெருவரையில்' குதிப்பதாகவும் கூறுவதை நோக்குக. பெரிய மலையில் காணப்பட்டதைக் குறுந்தொகை கூறியது போல், ஐங்குறுநூறு 'நெடுவரை' யின் மேல் வருடை யிருந்ததாகக் கூறுகின்றது. 'அண்ணலங் குன்றின் மேல்' வருடை உழக்கியதாகச் சிந்தாமணி சொல்லுகின்றது. 'மழையாடு சிமைய மால் வரைக்கவாஅன்' மேல் வருடை வாழ்வதாகப் பட்டினப்பாலை படம் பிடித்தாற் போன்று விளக்கியிருப்பது அரிய செய்தியாகும். முகில்கள் சூழ்ந்துள்ள உச்சியையுடைய பெரிய மலையின் செங்குத்தான சாரலில் வருடை இருப்பதாகக் கூறியிருக்கின்றது. மற்றும் 'வரைவாழ் வருடை' (அகம். 373, மலைபடு கடாம்.503) 'சாரல் வருடை' (கலி 50) என்று பிற சங்க நூல்களும் கூறுகின்றன. 'சிலம்புபாய் வருடை' என்று சிந்தாமணி கூறுகின்றது. செங்குத்தான மலையிலும் மலையுச்சியிலும் வாழும் ஆடு போன்ற ஒருவகை விலங்கு தமிழ்நாட்டில் நீலகிரி முதலிய மலைகளில் காணப்படுவதை விலங்கு நூலார் குறிப்பிட்டுள்ளனர். இதை விலங்கு நூலார் (Nilgris Tahr) என்பர். தமிழில் 'நீலகிரித் தகர்' என்று கூறலாம். இந்த நீலகிரித் தகர் நீலகிரி மலையிலும் ஆனைமலை முதலிய மேற்குத் தொடர்ச்சி மலையடுக்கத்தில் உயரமான மலைகளிலும் 4,000 அடியிலிருந்து 6,000 அடி உயரம் வரை காணப்

படுகின்றது என்று விலங்கு நூலார் கூறுகின்றனர். மலைகளில் காடுகளுக்கு மேலே அப்பால் உள்ள மலை உச்சிகளிலும், மலை முகடுகளிலும் செங்குத்தான சரிவுகளிலும் வருடை வாழுமென்று விலங்கு நூலார் கூறியுள்ளனர். (The preferred habit of Tahr in the Nilgris is the scarps and crags which rise above forest level) சங்க நூல்களில் வருடை வாழும் சூழ்நிலையையே விலங்கு நூலார் நீலகிரித் தகர்க்குக் கூறியிருப்பதைக் காணலாம். தமிழ் நாட்டில் இத்தகைய உயரமான மலைச் சூழ்நிலையில் காணக்கூடிய ஆடுபோன்ற விலங்கு மான்போன்ற விலங்கு நீலகிரித் தகரென்பதை விலங்கு நூலார் அறிவர். இந்த விலங்கே வருடையென்று சங்க நூல்களில் அழைக்கப்படுகின்றது. வேட்டையாளர்கள் இந்த வருடையைக் கொல்லுவது மிகவும் கடினம் என்பர். வருடை நன்கு குதித்துப் பாயக்கூடியது. பாறைக்குப் பாறை எளிதில் பாய்ந்து மலையுச்சியிலும் மலைச்சரிவிலும் மறைந்து விடும். மலையுச்சியில் மேகஞ் சூழ்ந்துள்ள இடத்தில் சென்று மறைந்து விட்டால் இதைச் சுடவே முடியாதென்பர். வருடை செல்லும் செங்குத்தான சரிவில் மனிதன் நடக்க முடியாது. வருடை ஒரு சிகரத்திலிருந்து அருகிலிருக்கும் சிகரத்திற்குப் பாயும். அப்படிப் பாயும்போது கீழே விழாதபடி அதன் கால்கள் பாறையைப் பிடித்துக்கொள்ளும். (The Tahr disappeared into the mist bounding from crag to crag in a marvellous way and were standing close to each other on a pinnacle enveloped in fog. The climbing was level climbing on a slope of about five degrees) வேட்டையாளர் கூறியது போலவே மேகஞ் சூழ்ந்த சூழ்நிலையில் உயர்ந்த பெரிய மலையின் செங்குத்தான சரிவில் வருடை காணப்

பட்டதையே பட்டினப்பாலை 'மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்' என்று கூறியதை நோக்குக. கலித்தொகையில் இருள் தூங்கும் மலைகளில் காணப் பட்டதாகவும், இருள் தூங்கும் சோலையில் இறங்கி வந்து தூங்கினதாகவும் கூறியதைக் கவனிக்க வேண்டும்.

> "இருடூங் கிறுவரை யூர்பிழி பாடும்
> வருடைமான் குழவிய வளமலை நாடனை"

—கலி. 43.

> "மூங்கில் மிசைந்த முழந்தா ளிரும்பிடி
> ... ... ... ...
> வருடை மடமறி யூர்விடைத் துஞ்சும்
> இருள் தூங்கு சோலை இலங்குநீர் வெற்ப"

—கலி 50.

மலையில் சரிவிலும் உச்சிகளிலும் நிழலில் தூங்குமென்று விலங்கு நூலார் கூறுவதற்கேற்பக் கலித்தொகை 'இருள் தூங்கு இறுவரை' என்று கூறியுள்ளது. இருள் தூங்குமிடம் நிழலுடைய இடம் என்பது தெரிந்ததே. இருள் தூங்கும் பாதுகாப்பான இடத்திலிருந்து இழிந்து காலையிலும் மாலையிலும் வருடை கீழேயுள்ள புல் நிறைந்த சோலைகளில் மேயுமென்றும் நடுப்பகலிலும் இரவிலும் மேலே சென்று மறைவான பாறை இடத்தில் தங்குமென்றும் விலங்கு நூலார் கூறுவர். (They retire to rest in the shelter of crags and rocks......As with ibex and the wild goats they retire to rest above their feeding grounds trusting to inaccessibility of their shelter) இருள் தூங்கும் மலையிலிருந்து வருடை ஊர்ந்து இழிவதாகக் கலித்தொகை 43ஆம் பாடல் கூறுவதை நோக்குக.

வருடையின் குட்டி இருள் தூங்கும் சோலையில் தூங்குவதாகக் கூறுவதையும் கவனிக்க வேண்டும். சோலை என்பது தமிழ் நாட்டுக் காடுகளில் புல்தரைகளுடன் காணப்படும் குறுங்காடுகளாம். இந்தச் சோலைகளே வருடையின் மேய்ச்சல் நிலமென் பதை விலங்கு நூலார் கூறியிருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

வருடை மலையுச்சிகளில் வாழ்வதைச் சங்கநூல்கள் இவ்வளவு தெளிவாகக் கூறியிருந்தும் பிற்காலத்தார் இந்த விலங்கை நன்கு தெரிந்து கொள்ளாது புராண விலங்காக்கினர். இதைப் புராண விலங்கு என்று (Mythical animal) கருதி இன்றும் அதையே பலரும் எழுதிச் செல்கின்றனர். இதற்குக் காரணம் 'மீ மிசைக் கொண்ட கவர் பரிக் கொடுந்தாள் வரைவாழ் வருடை' என்ற மலைபடுகடாம் வரிக்கு நச்சினார்க்கினியர் கொண்ட தவறான உரையேயாகும். நன்னனின் கோபுர வாயிலில் காணப்படும் கையுறைப் பொருள்களாக ஆமானின் கன்று, யானைக்கன்று, கரடிக் குட்டி, கீரிப் பிள்ளை, மரையான் குழவி, உடும்பு, வருடை ஆகிய விலங்குகளை மலைபடுகடாம் கூறுகின்றது. இவை யாவும் மலைச்சூழலில் காணப்படும் விலங்குகளே. இவை உண்மையில் இன்றும் இயற்கையில் காணக் கூடிய விலங்குகளே. இதில் ஒன்றைமட்டும் எட்டுக் கால் உள்ள புராண விலங்காகக் கருதவேண்டியதில்லை. கம்பர்கூட மால்வரை உம்பரில் குதிக்கின்ற வருடையைப் புராண விலங்காகக் கொண்டனரல்லர்.

"மீமிசைக் கொண்ட கவர்பரிக் கொடுந்தாள்
வரைவாழ் வருடை வன்தலை மாத்தகர்"
—மலைபடுகடாம். வரி. 502-503

மேலேயுள்ள மலைபடுகடாம் வரிகளுக்கு நச்சினார்க்கினியர் முதுகிடத்தே கொண்ட நிலத்தைக் கைக்கொள்ளும் செலவினையுடைய, வளைந்த காலையுடைய வரையிடத்தே வாழும் எண்கால் வருடையின் வலிய தலையினையுடைய பெரிய கிடாய் என்று பொருள் கூறியுள்ளார்.

நிகண்டுகளில் எண்காற் புள்ளென்பது 'வருடை' என்று கூறப்பட்டுள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டு நச்சினார்க்கினியர் எண்கால் வருடை என்று மலைபடுகடாம் வரிக்குப் பொருள் கூறினார். நிகண்டுகளில் சேந்தன் திவாகரமும் பிங்கலந்தையும் எண்காற் புள்ளென்பதைப் பறவை வகையாகவே கொண்டு புள்வகைக்கு அடியில் சேர்த்துக் கூறினர். அதே நிகண்டுகளில் வருடையை விலங்குவகையென்று கொண்டு 'வருடை சரபம் வரையா டாகும்' என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் நச்சினார்க்கினியர் எண் கால் வருடை என்று கொண்டு அதற்கு முதுகிடத்தேயும் நான்கு கால்கள் இருப்பதாகக் கொண்டார். முதுகில் நான்கு கால்களையுடைய விலங்கு அன்றும் இன்றும் என்றுமே இருந்ததில்லை. 'மீ மிசைக் கொண்ட' என்ற வரிக்கு நேரிய பொருள் இருக்க நச்சினார்க்கினியர் நிகண்டுச் செய்திகளை மனதிலிருத்தி வலிந்து 'முதுகிடத்தே கொண்ட கால்கள்' என்று அதற்கு உரை யெழுதினார். 'மீ மிசை' என்றது தெளிவாக மலையின் உச்சியைக் குறிப்பிடுகின்றது.

"நெடுவரை மிசையது குறுங்கால் வருடை" என்று ஐங்குறு நூறு கூறுவதில் 'மிசை' என்ற சொல் பயில்வதைக் காணலாம். உயரிய மலையிடத்தில் காலைவைத்துப்

பற்றிக் கவர்ந்து பிடியை விடாதுபாயும் வளைந்த அடிகளையுடைய மலையில் வாழும் வருடை என்று வரும் நேரிய பொருத்தமான பொருளைவிட்டு நச்சினார்க்கினியர் இதைப் புராண விலங்காக்கி விட்டார். விலங்கு நூலார் வருடையின் நடையை 'active and sure footed in precipitous ground' என்று கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். மலைபடுகடாத்தில் வருடையுடன் கூடக் கூறப்படும் விலங்கெல்லாம் உண்மை விலங்காயிருக்கும் போது இதைமட்டும் புராண விலங்காகக் கருதவேண்டியதில்லை. எண்கால் வருடையை வடமொழிச் சரபம் என்று கொண்டதால் இப்புராணச் செய்தியைக் கூறினதாகத் தெரிகின்றது. 'வாளுடும் பரியாயும் அரிணமாயும் வண்கேழற் களிறுயும் எண்காற் புள்மான் தாளுயும்' என்று நீலகேசி கூறுவதில் எண்காற் புள் மான் என்றொரு பறவையும் விலங்கும் கலந்து வரும் ஓர் உயிர் வகை வருகின்றது. காஞ்சிப் புராணத்திலும் சரபத்தின் உருவம் கூறப்பட்டுள்ளது. பிருமாண்ட புராணத்திலும் 59, 60 அத்தியாயங்களில் சரபத்தின் உருவம் சிற்ப நூற்படி விளக்கப்பட்டுள்ளது. கீழே நான்கு கால்களும் மேலே நான்கு கால்களும் நான்கு கைகளும் பறவையின் அலகும் இறக்கையும் விலங்கின் வாலும் கூர்மையான நகங்களையும் கோரைப் பல்லையும் உடையதாகச் சிற்பங்களில் சரப உருவம் காணப்படுகின்றது. பறவையின் உறுப்புகளும் விலங்குகளில் ஊன் உண்ணும் கொடிய விலங்காகவும் காட்டப்பட்டுள்ள சரப உருவம் சங்கநூல்களில் கூறப்படும் வருடைமானிற்கு எம்முறையில் பொருத்தம் ஆகும். நச்சினார்க்கினியர் நீலகேசி கூறும் செய்தியையும் சரப சிற்பத்தில் காணும் உருவையும்

அடிப்படையாகக் கொண்டு முதுகில் காலுடைய விலங்காக வருடையைக் கருதினர் போலும். பேராசிரியரும் எண்கால் வருடையை விலங்காகக் கொண்டு தொல்மரபியலில் (சூ 587) எண் காலவாயினும் மாவெனப்படுதலின் வருடை நாற்கால் விலங்குக்குக் கிளையாயிற்று என்று எழுதினர். ஆனால் வருடை சங்க நூல்களில் காணும் செய்திப்படி இத்தகைய புராண விலங்கன்று என்பதை யாவரும் தெளிந்து கொள்ளவேண்டும். வடமொழியில் மாபாரதத்தில் புலி, யானை, சிங்கம் ஆகிய விலங்குகளைக் கொன்று உண்ணும் கொடிய விலங்காகச் சரபம் சொல்லப்பட்டிருக்கின்றது. சைனர்கள் தமிழிலக்கியத்தில் முதலில் சரப விலங்கை நிகண்டுகளில் புகுத்தியதாகத் தெரிகின்றது.

வருடை விலங்கினத்தில் வெள்ளாட்டினத்தைச் சேர்ந்தது என்று விலங்கு நூலார் கருதுவர். மலைகளில் இயற்கையாகக் காணும் வெள்ளாட்டினங்களில் (Wild goats) தென்னிந்தியாவில் ஒரே ஓர் இனம், வருடை இனம் என்பது நீலகிரி முதலிய மலைகளில் வாழ்கின்றது. மற்ற மலையில் வாழும் வெள்ளாட்டினங்கள் (Wild goats) வடநாட்டில் நீலகிரி மலையைவிட இன்னும் மிக உயர்ந்த மலைகளிலேயே இயற்கையாகக் காணப்படுகின்றன. வருடையின் உடலில் வெள்ளாட்டின் கெடுநாற்றம் அடிப்பதை விலங்கு நூலார் கூறியுள்ளனர். விலங்கு நூலார் கருதினது போலவே சங்க நூலாரும் வருடையை ஆட்டினமாகவே கருதினரென்று தெரிகின்றது.

> "ஓங்கு மால்வரை வரையா டுழக்கவி னுடைந்துகு
> பெருந்தேன்"
>
> — சீவகசிந்தாமணி, 1559

சிந்தாமணியில் 'வரையாடு ஓங்கு மால்வரையில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. வருடை என்ற சொல்லும் சிந்தாமணியில் வருகின்றது. அதற்கு வரையாடென்று பொருள் கூறப்பட்டுள்ளது. ஆதலின் வருடை என்பதும் வரையாடு என்பதும் ஒரே விலங்கே. ஆட்டினத்தைச் சேர்ந்தது என்று கருதியே மலை ஆடு என்ற பொருளில் வரையாடு என்ற பெயர் ஏற்பட்டிருக்கும். இப்பெயர் இன்றும் மறையவில்லை. கன்னடத்திலும், தமிழ் நாட்டின் சில விடங்களிலும் 'வரையாடு' என்று இதை இன்றும் அழைக்கின்றனர். மலையாளத்தில் மலை ஆடு என்றழைப்பர். வருடைக்கு வரையாடு என்று பெயர் இருப்பதை உணராமல் பட்டினப்பாலையில் 'வரையாடு வருடைத் தோற்றம் போல' என்று வரும் இடத்தில் வரையாடு என்பதற்கு 'வரையில் ஆடும் வருடை' என்று தவருகப் பொருள் கூறினர். அதேபோல 'வரையாடு வருடையும் மட மான் மறியும்' என்று வரும் சிலப்பதிகார வரிக்குப் பொருள் கூறுங்கால் மலையில் பாய்ந்து விளையாடுகின்ற வருடை என்று கூறினர். 'வரையாடு வருடை' என்பது வரையாடாகிய வருடை என்றே பொருள்தர வேண்டுமென்பதை உணரவேண்டும். பட்டினப்பாலையில் வருடையை ஏழகத் தகரோடு உவமித்ததைக் காணலாம். ஏழகத் தகரும் வருடையும் உருவில் ஒப்புமையுடையன. வரையாடும் துருவாட்டின் கிடாயும் உருவிலும் கொம்பிலும் ஒத்திருப்பதால் மேடராசியைப் பரிபாடல் (11 : 5) வருடை என்றே பெயரிட்டழைத்தது. 'வருடையைப் படிமகன் வாய்ப்ப' என்று வரும் பரிபாடல் வரிக்குச் செவ்வாய் மேடத்தைச் சேர என்று உரை கூறியிருப்பதைக் காணலாம்.

பிங்கல நிகண்டு 'வருடைச் சரபம் வரையா டாகும்' என்று தெளிவாக வரையாடு என்ற பெயரைக் கூறியுள்ளதிலிருந்தும், பட்டினப் பாலையிலும் சிலப்பதிகாரத்திலும் 'வரையாடு வருடை' என்றதற்கு வரையாடாகிய வருடை என்றே பொருள் கொள்ள வேண்டும். வரையாடு என்பதுபோல 'வரையா' என்ெருரு விலங்கும் சங்க நூல்களில் கூறப்படுவதை இது சார்பாக நினைக்கவேண்டும். பட்டினப்பாலையில் வரையாட்டை ஆட்டின் தகரோடு ஒப்பிட்டுக் கூறியதைக் காணலாம். ஆட்டின் தகருக்கும் வரையாட்டுக்கும் உள்ள ஒப்புமை காரணமாகவே இந்த உவமை கூறப்பட்டுள்ளது. துருவாட்டின் ஆண் தகரென்று பெயர் பெறும் என்று நிகண்டுகள் கூறுவதைக் காணலாம். வருடையின் கொம்பு துருவாட்டின் அஃதாவது செம்மறியாட்டின் ஆணிற்கு இருப்பது போலிருந்தாலும் வருடை, ஆட்டினத்தில் வெள்ளாட்டினத்தைச் சேர்ந்தது என்பதை நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும். சேரன் செங்குட்டுவனுக்கு வேட்டுவர்கள் கொண்டு வந்த காணிக்கைப் பொருளாக 'வரையாடு வருடை' கூறப்பட்டுள்ளது. அன்றைய சேர நாட்டு மலைகளில்தான் இன்றும் வருடை காணப்படுகின்றது. நீலகிரி முதலிய மலைகள் சேரநாட்டைச் சேர்ந்து இருந்தன. ஆதலின் செங்குட்டுவனுக்கும் ஏழில் மலை நன்னனுக்கும் மலை ஆடான வருடையை அரிதினில் முயன்று பிடித்துக் கொண்டுவந்து காணிக்கையாகத் தந்தது கூறப்பட்டுள்ளது. ஆனல் மற்ெருரு சேரமன்னன் வருடையைக் கொண்டுவந்ததாகப் பதிற்றுப்பத்து ஆரும்பதிகம் கூறும் வருடையைப் பிற்காலத்தில் சரிவர உணராது வெறும் ஆடுகளாகக் கொண்டுவிடவே

இக்காலத்திலும் ‘ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் என்ற பெயருக்குப் பகையரசரிடமிருந்து ஆட்டுமந்தையைப் பிடித்துக் கொண்டுவந்த சேரன் என்று பொருள் எழுதுகின்றனர். ஆடும் மாடும் பிடித்துப் பகைவரை வெல்வது எல்லா மன்னருக்கும் பொதுவான நிகழ்ச்சியாகும். இதைச் சிறப்பான செய்தியாகக்கொண்டு ‘ஆடு கோட்பாட்டுச் சேரலாதன்’ என்று பெயர் கொடுத்தால் அப்பெயர் சேரலாதனை இழிவுபடுத்துவதாகுமே தவிரப் பெருமைப்படுத்துவதாகாது. இதையுணராது ஆட்டுமந்தையைக் கவர்ந்த சேரலாதன் என்று இன்றும் கதைக்கின்றனர். பதிகம் தெளிவாகத் தண்டகாரணியத்துக் கோட்பட்ட வருடையைத் தொண்டியில் கொண்டுவந்ததாகக் கூறுகின்றது. வருடை என்பதற்குப் பதிற்றுப்பத்துப் பழைய உரை தெளிவாக ‘மலையாடு’ என்று பொருள் கூறுகின்றது. மலையாடு என்பதே வருடைக்கு இன்றும் வழங்கி வரும் இன்றைய சேரநாட்டுப் பெயர். ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் பெயரில் வரும் ஆடு மலையாடென்பது தெளிவு. இச் சேரலாதனின் பெயரை இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் என்ற பெயரிலிருந்து பிரித்துணரவே ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் என்றனர். இச்சேரலாதன் தண்டகாரணியம் எனும் காட்டிற்குச் சென்று அந்நாட்டை வென்று அந்நாட்டில் உள்ள ஒரு வகை மலையாட்டைக் கொண்டுவந்து மேற்குக் கடற்கரை ஊரான தொண்டியில் விட்டான் என்பதே இங்கு வரும் அரியசெய்தி. மலையாட்டைப் பிடிப்பது மிகமிகக் கடினமானது. வேட்டையாளர் துப்பாக்கியால் கூட இதைச் சுடுவது எளிதன்று எனக் கூறுவர். வருடை அவ்வளவு விரைவும், பாய்வும் உடையது.

அவை வாழும் எட்டாச் சூழ்நிலையும், கிட்டா உயரமும் அதற்குக் காரணம். இத்தகைய அருமையான ஒரு வகை மலையாட்டைத் தண்டகாரணியத்தில் கண்ட சேரலாதன் தன்னுடைய மலைநாட்டுக்கு அதைப் பிடித்துக் கொண்டு வந்ததால் 'ஆடு கோட் பாட்டுச் சேரலாதன்' என்று பெயர் பெற்றான் என்பதை யாவரும் தெளிந்து கொள்ள வேண்டும். 'வருடை மான்' என்று சங்க நூல்களில் இரண்டு பாடல்களில் வருகின்றது. வளர்ந்த வருடையாடு மானைப்போன்று நிறமொத்துக் காணப்படுவதால் 'மான்' என்று கருதினர் போலும். ஆனால் மான் என்று வரும் சொல் இவ்விடங்களில் விலங்கு என்ற பொருளிலும் வரக் கூடியதே. ஆதலின் வருடையை விலங்கு என்றும் பொருள் கொள்ளலாம். வருடை ஆட்டினத்தைச் சேர்ந்தது. மானினத்தைச் சேர்ந்ததன்று.

வருடை மலைகளில் காடுகளுக்கும் அப்பால் மேல் மட்டத்தில் வாழ்ந்தாலும் உணவிற்காகக் கீழே மலையிலுள்ள புல் வெளிகளுக்கு வந்து மேய்வதுண்டு. ஆறு அல்லது ஏழு வருடையாடுகள் மந்தையாக மேய்வதைக் காணலாம். சில சமயங்களில் மந்தைகள் ஒன்று சேர்ந்து பெரிய மந்தையாகக் காணப்படுவதுமுண்டு. வருடை மந்தையாக வாழ்வதைச் சங்க நூலார் கூறியுள்ளனர்.

"..........................................படப்பை
இன்முகப் பெருங்கலை நன்மேயல் ஆரும்
பன்மலர்க் கான்யாற்று உம்பர்க் கருங்கலை
கடும்பாட்டு வருடையொடு தாவன உகளும்
பெருவரை நீழல் வருகுவன் குளவியொடு
கூவிளந் ததைந்த கண்ணியன் யாவதும்"

— நற்றிணை. 119.

"வேறுவே றினத்த வரைவாழ் வருடைக்
கோடுமுற் றிளந்தகர்ப் பாடுவி றந் தியல"

— அகம் 378.

நற்றிணை 119ஆம் பாடலில் கான்யாற்றுக்கும் மேலே கருங்குரங்கோடு வருடை தாவிக்குதிக்கும் என்று கூறியிருப்பதைக் காணலாம். கருங்குரங்கு வாழும் சூழ்நிலையில் வருடை காணப்பட்டதாகக் கூறியது அரிய செய்தி. தமிழ் நாட்டு மலைகளில் மலைக் காடுகளில் வாழும் விலங்குகளாக ஊகத்தையும் கருங்குரங்கையும் விலங்கு நூலார் கண்டுள்ளனர். அந்த மலைக் காடுகளுக்கும் மேலே உயரத்தில் வருடையும் மலை வாழ் நீர்நாயும், 'மார்ட்டன்' (Marten) என்ற விலங்கும் வாழுமெனக் கூறுவர். கருங்குரங்கு வருடையுடன் காணப்பட்டதாகக் கூறிய செய்தி அரிய நுட்பமான செய்தியாகும். நற்றிணைப் பாடலில் 'கடும்பாட்டு வருடை' என்று கூறப்பட்டிருப்பதைக் காணலாம். சுற்றத்துடன் கூடிய ஆட்டு வருடைகள் என்று நற்றிணை கூறும் விளக்கம் வருடையுடைய மந்தையைக் குறித்ததே. அகம் 373 ஆம் பாடலும் 'வேறு வேறு இனத்த வரைவாழ் வருடை' என்று சொல்வதைக் கவனிக்க வேண்டும். வேறுவேறு இனம் என்பது தனித் தனியாக வருடை மந்தைகள் காணப்படுவதைச் சுட்டியே என்பது தெளிவாகும். வருடையாடுகளின் கிடாய்கள் பெண் ஆடுகளைக் கவரப் போரிடுவதுண்டு. கொம்புகளால் முட்டிப் போரிடும். 'கோடுமுற்றிளந் தகர் பாடு விறந்தியல' என்று அகநானூறு கூறுவது கொம்புகள் முற்றிய இளமையான தகர்கள் போரிட்டு ஓசையெழுப்புவதைக் குறித்து என்பதை உணர வேண்டும்.

"..................................அவன் மலைப்
போருடை வருடையும் பாயாச்
சூருடை அடுக்கத்த கொயற்கருந் தழையே."

— நற்றிணை. 359

நற்றிணை 359 ஆம் பாடலும் போரிடுதலைச் செய்யும் வருடையைக் குறிப்பிடுகின்றது. தலைவன் தலைவிக்குக் கொய்த தழை வருடை கூடப் பாயாத மலையுச்சியில் எடுக்கப்பட்ட தழை என்று கூறியது இனிய செய்தியாகும். போரிடுங்கால் வருடைத் தகர்கள் மலைப் பிளப்பில் வீழ்ந்து மாண்டு போவதும் நிகழ்வதுண்டு என்று கூறுவர். மலைபடுகடாம் 'வன்றலை மாத்தகர்' என்று கூறுவதற்குக் காரணம் முதிர்ந்த ஆண் வருடை போரிடக் கூடிய வலிய தலையை யுடையது என்று கருதுவதே. இளந்தகர் என்றும் மாத்தகர் என்றும் வருடையின் பருவநிலைகளையும் பிரித்துக் கூறுவதைக் காணலாம். கோடைக்காலத்தில் பெண்வருடையாடுகள் குட்டிகள் ஈன்ற பின் மந்தையில் உள்ள முதிய ஆண் வருடை மந்தையை விட்டு விலகித் தனித்து வாழ்வதை விலங்கு நூலார் கண்டுள்ளனர். (The old bucks desert the herds during the hot weather and at this time more often than not are found solitary) வருடையினத்திலும் தீர்தல் நிகழ்ச்சி உண்டு என்பதைச் சங்க நூலாரும் தெரிந்திருந்தனரென்று தோன்றுகின்றது.

"வார்கோட்டு வயத்தகர் வாராது மாறினுங்
குரூஉமயிர்ப் புருவை யாசையி னல்கு
மாஅ லருவித் தண்பெருஞ் சிலம்ப"

— ஐங்குறுநூறு. 238.

'வார்கோட்டு வயத்தகர்' என்று ஐங்குறுநூறு கூறுவது வருடையாட்டின் ஆணையேயாகும். இதற்கு வெள்

ளாடு என்று பொருள் கொண்டது தவறு. மாலருவி வீழும் மலையில், பெருஞ் சிலம்பில்: தங்கும் ஆடு வருடையாடாகத்தான் இருக்க முடியும். மனிதர் வளர்க்கும் வெள்ளாடாக இருக்கவே முடியாது. மாலருவிச் சூழ்நிலையில் வெள்ளாட்டை இயற்கையில் காணமுடியாது உயர்ந்த மலையில் காணக்கூடிய ஆட்டினத்தை யொத்த விலங்கு வருடையே. அதனால் வருடையின் ஆணிற்குத் 'தகர்' என்றும் பெண்ணிற்குப் புருவை என்றும் ஆட்டினத்தின் பெயர் வழங்கப்பட்டதை உணர வேண்டும். வலிமைமிக்க தகர் வராது மாறிப்போய் விட்டாலும் குருமயிர்ப்புருவைத் தகரின் மேலுள்ள ஆசையால் மாலருவிக்கருகில் தங்கி இருக்கும் என்று ஐங்குறுநூறு கூறுவதைக் கவனிக்க வேண்டும். வலிய தகர் வராது மாறிவிட்டதென்று கூறுவது வருடை ஆண்மந்தையை விட்டு விலகும் செய்தியைக் குறித்தேயாகும். மனிதர் வளர்க்கும் வெள்ளாட்டிற்கு இச்செய்தியைக் கூறமுடியாது. ஆதலின் ஐங்குறுநூறு கூறும் 'வயத்தகர்' வருடையாட்டின் ஆண் என்பதில் ஐயமில்லை. வருடைத்தகரின் கொம்பு நேராகப் பின்சென்று (rise parallel for some length, then diverge and curve downwards in a bold sweep.) கீழ்நோக்கி வளையும் இதன் கொம்பை 'வார்கோடு' என்று கூறுவதை நோக்குக. புருவையின் நிறம் 'குருமயிர்' என்று கூறப்பட்டுள்ளது. குருநிறம் என்பது இதன் கரும் பழுப்பு (Deep brown) நிறத்தைக் குறித்தேயாகும். வருடையின் கால்கள் நீண்டவையல்ல. நீளமாயின் மலைக்குவடுகளில் குதிப்பது இயலாது. 'குறுங்கால் வருடை' என்று ஐங்குறுநூறு (287) கூறுகின்றது. வருடையை அணுகுவது எளிதன்று என்பதை

வேட்டையாளர் அனைவரும் தெரிந்துள்ளனர். வருடை மிகவும் கூரிய பார்வையும் பாதுகாப்புணர்ச்சியும் (Watchful and wary) உடையது என்பர். சிறிய ஓசை கேட்டாலும் குதித்தோடி ஒளிந்து கொள்ளுமென்பர்.

"நெடுவரை மிசையது குறுங்கால் வருடை
தினைபாய் கிள்ளை வெரூஉ நாட"

—ஐங்குறுநூறு. 287.

கிளிகள் தினைக் கொல்லையில் பாய்ந்த ஓசையைக் கேட்டாலும் வருடை அஞ்சும் என்று கூறியுள்ளதைக் காணலாம். வருடை யாடுகள் துள்ளிக் குதிப்பதையும் தாவிப்பாய்வதையும் உகளுமென்றும் தாவன உகளுமென்றும் பாயும் என்றும் கூறியுள்ளனர்.

"வழைவளர் சாரல் வருடை நன்மான்
குழவி வளர்ப்பவர் போலப் பாராட்டி"

—கலி 50.

வருடையின் குட்டிகளைப் பேணி வளர்ப்பதுண்டு என்பதையும் கலிப்பாடல் கூறுவதைக் காணலாம்.

வருடையின் குட்டிகளைச் சங்க காலத்தினர் வளர்த்தனர். வருடையின் தகரைப் பிடித்து அரசர்க்குக் கையுறைப் பொருளாகக் கொடுத்தனர். ஒரு சேரன் வருடையைப் பிடித்துக் கொண்டுவந்து தொண்டியில் விடுவித்தனன். சங்க காலத்தில் வருடையை இவ்வளவு நன்றாகத் தெரிந்திருந்தும் பிற்காலத்தில் புராண மனப்பான்மை பெருகியதால் வருடையைப் புராணச் செய்தியாக்கிப் பகுத்தறிவுக் கொவ்வாத புராண விலங்காக்கினர்.

## ௯. ஆமான்

(The Gaur or Indian Bison)

ஆமான் என்றொரு விலங்கைப் பற்றிய செய்திகள் சங்க நூல்களில் வருகின்றன. இதை ஆமாவென்றும் அழைப்பர். இஃது ஆவைப் போன்றது என்று பழந் தமிழர் கருதினர். தொல்காப்பிய உவம இயலில் பேரா சிரியர் உவமத்தாலும் பொருளைப் புலப்படுத்தல் எப்படி என்பதற்கு, "ஆபோலும் ஆமா என்றக்கால் ஆமா கண்டறியாதான் காட்டுட் சென்றவழி அதனைக் கண்டால் ஆபோலும் என்னும் உவமையேபற்றி ஆமா இதுவென்று அறியுமாகலா னென்பது" என்று எழுதி யுள்ளார். 'ஆபோலும் ஆமா' என்று தொன்றுதொட்டு வழங்கிய உவமையை உணர்ந்தவன், ஆமாவைக் கண் டறியாதவன் காட்டில் அதைக் கண்டதும் இதுதான் ஆவைப் போலிருக்கிறது, ஆதலின் இதுவே ஆமா என்று கண்டறிவான் என்று கூறியிருப்பதிலிருந்து ஆமா எது வென்று நாம் உற்றுணரலாம். ஆனால் இன்று 'ஆபோ லும் ஆமா' என்ற உவமையைத் தெரிந்தும் காட்டில் ஆமாவைக் கண்டறிய வல்லவர் மிகச் சிலரே. விலங்கு களைப்பற்றி அந்த அளவு அறிவு இன்று காணமுடியாது. ஆபோன்று, பசுமாட்டைப் போன்று இன்றும் காட்டில் காணப்படும் விலங்கை விலங்கு நூலார் "The Bison" என்பர். இது மாட்டினத்தைச் (Oxen) சார்ந்த காட்டில் வாழும் மாடு (Wild Oxen) என்பர். உரையாசிரியர் களும் காட்டுப்பசு, காட்டு எருது, காட்டா என்று பொருள் கூறியிருப்பதைக் காணலாம். 'ஆபோலும்

ஆமா' என்ற உவமையைப் புரியாத இன்றைய ஆசிரியர்கள் ஆமாவை ஒருவகை மான் என்றும் ஏதோ ஒரு விலங்கு என்றும் கூறினர். விலங்கு நூலார் ஆபோன்ற விலங்கே ஆமான் எனக் கூறுவர். (Wild Oxen are easily recognizable by their general similarity in form to domestic cattle.) ஆமானைப்பற்றி வரும் செய்திகள் கீழ்க்கண்ட சங்கச் செய்யுட்களில் காணப்படுகின்றன.

"பனைமருள் எருத்திற் பல்வரி இரும்போத்து
மடக்கண் ஆமான் மா திரத்து அலறத்
தடங்கோட்டு ஆமான் அண்ணல் ஏஎறு
நனந்தலைக் கானத்து வலம்படத் தொலைச்சி
இருங்கல் வியலறை சிவப்ப ஈர்க்கும்
பெருங்கல் நாட பிரிதி யாயின்" —அகம். 238.

"தடங்கோட் டாமான் மடங்கல் மாநிரைக்
குன்ற வேங்கைக் கன்றொடு வதிந்தெனத்
துஞ்சுபதம் பெற்ற துய்த்தலை மந்தி
கல்லென் சுற்றங் கைகவியாக் குறுகி
வீங்குசுரை ஞெமுங்க வாங்கித் தீம்பால்
கல்லா வன்பறழ்க் கைந்நிறை பிழியும்
மாமலை நாட!......................... —நற்றிணை, 57.

"அமர்கண் ஆமான் அருநிறம் முள்காது
பணைத்த பகழிப் போக்குநினைந்து கானவன்"
—நற்றிணை, 165.

"வயலக நிறையப் புதற்பூ மலர
மனைத்தலை மகவை யீன்ற அமர்கண்
ஆமா நெடுநிரை நன்பு லாரக்"
—புறம். 117.

"கொடுங்கோட் டாமா னடுங்குதலைக் குழவி
புன்றலைச் சிறுஅர் கன்றெனப் பூட்டும்"
—புறம். 319.

"புலிப்பாற் பட்ட வாமான் குழவிக்குச்
சினங்கழி மூதாக் கன்றுமடுத் தூட்டும்"

—புறம். 323.

"கண்ணி மருப்பி னண்ண னல்லேறு
செங்கோற் பதவின் வார்குரல் கறிக்கும்
மடக்கண் வரையா நோக்கி வெய்துற்றுப்
புல்லரை யுகாஅய் வரிநிழல் வதியும்"

—குறுந்தொகை, 363.

"அமர்க்க ணுமா னஞ்செவிக் குழவி
கானவ ரெடுப்ப வெரீஇ யினந்தீர்ந்து
கான நண்ணிய சிறுகுடிப் பட்டென"

—குறுந்தொகை, 322.

"தொழுதி போக வலிந்தகப் பட்ட
மடநடை யாமான் கயமுனிக் குழவி"

—மலைபடுகடாம், 499-500.

"....................................கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென விழிதரு மருவி..."

—திருமுருகாற்றுப்படை, 314-316.

"புழற்கோட் டாமான் புகல்வியுங் களிறும்"

—குறிஞ்சிப்பாட்டு, 253.

"தேமா மேனிச் சில்வளை யாயமொ
டாமான் சூட்டி னமைவரப் பெறுகுவிர்"

—சிறுபாணாற்றுப்படை, 176-177.

"ஆமா சிலைக்கும் அணிவரை ஆரிடை
ஏமான் சிலையார்க் கினமா இரிந்தோடும்"

—கைந்நிலை. 18

"காந்தளங் கண்ணிக் கொலைவில் வேட்டுவர்
செங்கோட் டாமா னூனொடு காட்ட"

—பதிற்றுப்பத்து, 30

"மன்றப் பலவின் சுளைவிளை தீம்பழ
முண்டுவந்து மந்தி முலைவருடக்—கன்றமர்ந்
தாமா சுரக்கு மணிமலை நாடனை
யாமா பிரிவ திலம்"

—ஐந்திணை யெழுபது, 4

"ஆமான் அனைய மென் னேக்கி"

—இறையனுர் அகப்பொருள்-மேற்கோள்.

சங்கச் செய்யுள்களிலே ஆமானைப்பற்றி வரும் முக்கிய செய்தி மலையினும் குன்றிலும் உள்ள காடுகளில் ஆமான் காணப்பட்டதாகக் கூறுவது. நற்றிணை 57ஆம் பாட்டு 'குன்றத்திலும்' 'மாமலையிலும்' ஆமான் காணப் பட்டதைக் குறிப்பிடுகின்றது. 'இருங்கல் வியலறை' 'நனந்தலைக் கானத்து' ஆமானைப் புலிகொன்று இழுத் ததாக அகம் 238ஆம் பாடல் கூறுகின்றது. மேலும் குறிஞ்சிப்பாட்டிலும், சிறுபாணாற்றுப்படையிலும், பதிற்றுப்பத்திலும் காடும் குன்றும் சேர்ந்த குறிஞ்சியி லேயே ஆமானைப் பற்றிப் பாடியிருப்பதைக் காணலாம். கானகத்தில் வேட்டுவரும் கானவரும் ஆமான் குட்டியை எடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப் படையில் இன்னும் தெளிவாக ஆமானைக் கண்ட விடம் குறிக்கப்பட்டுள்ளது. அருவிகள் வீழும் மிக உயரமான செங்குத்தான மலையில் ஆமான் ஏறு குர லிட்டதாகக் கூறியுள்ளது. ஆமான் குன்றில் வாழும் விலங்கு என்று விலங்கு நூலார் கூறுவர். குன்றுகளில் உள்ள காடுகளில் 6,000 அடி வரை மேலே ஏறி வாழும் என்று கூறுவர். மிகப் பெரிய உடலைப் பெற்றிருந் தாலும் இவை குன்றுகளில் மிக நன்ருக ஏறும். (The gaur are essentially hill animals............Forests are essential for the existence of gaur. Gaur are admirable climbers

ascending the steepest slopes with speed and facility often discovered in precipitous spots more suitable for Tahr than any other animal)

"......................................கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென விழிதரு மருவிப்..........."

—திருமுருகாற்றுப்படை, 313-316.

திருமுருகாற்றுப்படை கூறும் செய்தி விலங்கு நூலார் கூறுவதோடு எவ்வளவு ஒத்துள்ளது! குறுந்தொகை 363ஆம் பாடலில் ஆமா 'வரையா' என்று அழைக்கப் பட்டுள்ளது. ஆமா குன்றுகளில் வாழ்வதைக் கண்டே 'வரையா' என்று அழைத்தது மிகப் பொருத்தமானது. மலைப்பசு என்றே உரையாசிரியர் பொருள் எழுதி யுள்ளார். நாலடியாரிலும் "நிரையாமா சேக்கு நெடுங் குன்ற நாட" என்று கூறுமிடத்தில் ஆமாக்கள் நிரையாக நெடுங்குன்றில் வாழ்வதாகக் கூறியிருப்பது அரிய செய்தியாகும். நாடனை விளிக்க வந்த வரியில் இயற்கையில் கண்ட உண்மைச் செய்தியைக் கூறுவது வியப்புக்குரியது. தொல்காப்பிய எழுத்ததிகாரச் சூத்திரம் 142க்கு எடுத்துக்காட்டாக 'குன்றேறுமா' என்பது கூறப்பட்டுள்ளது. குன்றேறு+மா என்றும் குன்றேறு+ஆமா என்றும் பிரிக்கப்படும். குன்றேறு மாவுளதாயினும் ஆமா குன்றேறும் என்பதைக் குறிப் பாகக் காட்டியுள்ளமை போற்றத்தக்கது.

ஆமானின் கொம்பை மிகச் சிறந்ததாகவும், அரிய தாகவும் விலங்கு நூலாரும் வேட்டையாளரும் கருதுவர். மாட்டுக் கொம்புகள் போலன்றி இதன் கொம்புகள் ஒரே சீராக வளைந்து உள்பக்கமாகத் திரும்பித் தடித்துக் காணப்படும். உள்ளே துளை

யுடையதாக இருக்கும். இதன் கொம்பைச் சங்கப் புலவர்கள் பொருத்தமாக விளக்கியுள்ளனர். 'தடவு கோட் டாமான்' (நற்றிணை. 57, 238) என்றும் 'கொடுங்கோட் டாமான்' (புறம். 319) என்றும் குறிப் பிட்டுள்ளனர். குறுந்தொகை 363 ஆம் பாடலில் ஆமானின் எருத்திற்குக் 'கண்ணி மருப்பு' இருப்பதாகக் கூறியுள்ளதைப் பார்க்கலாம். கண்ணி என்பது வளை வான ஒரு தலைமாலை. அதுபோல நன்கு வளைந்திருப்ப தாகக் கூறியிருப்பதை நோக்குக. 'புழற்கோட் டாமான்' (குறிஞ்சிப்பாட்டு) என்று அதன் உட்டுளை யுடைய கொம்பையும் குறிப்பாகக் கூறியுள்ளதைக் காணலாம். இரலை மானின் கொம்பை, 'திரிமருப் பிரலை' (spiralled horn) என்றும் கலைமானின் கொம்பை 'கவைமருப் பெழிற்கலை' என்றும் (branched horn), ஆமானின் கொம்பை 'தடவுகோட் டாமான்' என்றும் கூறியதைக் கவனிக்கவேண்டும். அழகிய, சிறிய சொற்களால் இவ்விலங்குகளின் கொம்பை விளக்கி யிருப்பது போற்றற் குரியது. பதிற்றுப்பத்தில் ஆமானின் கொம்பை 'செங்கோட் டாமான்' என்று கூறியிருப்பதைக் காண்க. பருவத்தில் இருந்த ஆமானின் ஊனையே வேட்டுவர் உண்ணக் கொடுத்த தாகக் கூறப்பட்டுள்ளது. பருவ ஆமான் (Young gaur) கருஞ்சிவப்பு நிறமாக அல்லது 'காப்பி' (coffee) நிறமாக இருக்கும் என்று கூறுவர். முதிய ஆமானின் ஊனை விரும்பி உண்பது வழக்கமன்று. பருவ ஆமானைக் குறிக்கவே 'செங்கோட்டாமான்' என்று கூறினர். திருமுருகாற்றுப்படையில் 'கருங்கோட்டா மான்' குரலிட்டது கூறப்படுகின்றது. 'சிலைத்தல்' எனுஞ் சொல் இசைப் பொருளைக் குறிக்கும் சொல்

என்று தொல்காப்பியம் (சூ. 358) கூறும். காளைமாடு மகிழ்ச்சியுடன் வெளியிடும் ஒலியையே சிலைத்தல் என்று சங்க நூல்கள் வழங்கும். மாட்டினத்தைச் சேர்ந்ததாகக் கருதப்பட்டு வந்த ஆமானின் குர லெடுப்பும் சிலைத்தல் எனப்பட்டது. 'கருங்கோட் டாமான் நல்லேறு' குரலிட்டது தனது நிரையைக் கூப்பிடவே யாகும் எனக் கொள்ள வேண்டும். ஆமான் நிரைக்குத் தலைமை தாங்கும் 'நல்லேறு' முதிய ஆமானாகவே இருக்கும் என்று விலங்கு நூலார் கூறுவர். இது மிகக் கருமையாக இருக்கும் என்று கூறுவர். கரிய, முதிய எருதைக் குறிக்கவே 'கருங்கோட்டா மான்' எனக் கூறினர். ஆமானின் பிறந்த கன்று பொன்னிறமாகக் காணப்படும் என்று விலங்கு நூலார் கூறுவர். (A newly born gaur is light golden yellow which soon changes to fawn, then to light brown and so to coffee or reddish brown, the colour of the young bulls and cows. Old bulls are jet black) சிந்தாமணியில் ஆமானின் கன்றின் நிறம் குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

"மெல்விரன் மெலியக் கொய்த குளநெல்லும் விளைந்த வாம்பல்
அல்லியு முணங்கு முன்றி லணில்விளித் திரிய வாமான்
புல்லிய குழவித் திங்கட் பொழிகதிர்க் குப்பை போலு
நல்லெழிற் கவரி யூட்ட நம்பியை நினைக்கு மன்றே."

—சிந்தாமணி, 355.

நிலாவொளியின் தொகுத்த கதிர்க்கற்றை போன்ற நிறமாக ஆமானின் குழவி இருந்ததாகக் கூறு வதைக் காணுங்கால் விலங்கு நூலார் கூறியதோடு ஒத்து வருவதின் பொருத்தம் விளங்குகின்றது. பழந் தமிழ்ப் புலவர்கள் ஆமானின் பலபருவ நிறத்தை நன்கு உணர்ந்திருந்தனரென்று தெரிகின்றது.

ஆமான்கள் கூட்டமாக வாழ்வது வழக்கம். எட்டு முதல் பன்னிரண்டு வரை ஒரு நிரையில் ஆமான்கள் காணப்படுமென்பர். ஆமானின் 'நெடுநிரை' நன்புல்லை மேய்ந்ததாகப் புறப்பாடல் (117) கூறுவதைக் காணலாம். "தடங்கோட் டாமான் மடங்கல் மாநிரை" குன்றிலிருந்த வேங்கை மரத்தடியில் கன்றொடு வதிந்ததாக நற்றிணை (57) கூறுகின்றது. 'மடங்கல் மாநிரை' யென்றது படுத்து முடங்கியிருந்த பெரிய நிரையையே. சேந்தன் திவாகரம் மடங்கல் என்ற சொற்கு நுணங்கே, முடங்கல் என்று பொருள் கூறியதை நோக்குக. மடங்கல் என்பது சிங்கமெனக் கொண்டு "சிங்க முதலாகிய விலங்கின் கூட்டம் நெருங்கிய மலையின் ஆமான் கன்றொடு தங்கியதாக" நற்றிணை உரையாசிரியர் கூறியது தவறான உரையாகும். ஏனெனில் தமிழ்நாட்டுக் காடுகளில் சிங்கம் என்றுமே வாழ்ந்ததில்லை. சிங்கம் தென்னாட்டுக்குரியதன்று. சங்க நூல்களில் சிங்கம் வாழ்ந்ததைப்பற்றி எந்தச் செய்தியும் கூறப்படவில்லை. ஆதலின் ஆமான் படுத்துறங்கும் செய்தியையே நற்றிணைப் பாடல் கூறுகிறது. ஆமா குன்றுகளில் நிரை நிரையாக இடம்பிடித்து வாழும். "நிரையாமா சேக்கு நெடுங்குன்ற நாட" என்று நாலடியார் கூறுவதைக் கவனிக்க வேண்டும். சேக்கை என்ற சொல் சங்க நூல் வழக்குப்படி தங்குமிடத்தையே குறிக்கும். ஆமான் நிரையாக வாழ்ந்தாலும், பாலுணர்ச்சி தோன்றிய காலத்து முதிய எருதுகள் தமக்குள் போரிடும். வென்ற ஆமான் ஏறு நிரையைத் தன்னதாக்கிக் கொள்ளும். அந்த நிரைக்குத் தலைமை தாங்கும். அந்த நிரையில் பெரும்பாலும் ஆமான் பசுக்களும் கன்றுகளும் இருக்கும். இந்த

ஆமானஏறு முதியதாகவும், வலிமை மிக்கதாகவும் மிகக் கரியதாகவும் இருக்கும். பாலுணர்ச்சியற்ற காலத்துப் பல எருதுகள் கலந்து ஒரே நிரையில் காண் பதுண்டு. நிரையில் தலைமை வகிக்கும் ஆமான் ஏற்றை (Master Bull) சங்க நூல்கள் 'அண்ணல் ஏறு' (அகம், 238, குறுந்தொகை, 363) என்றும் 'நல்லேறு' (முருகு-315) என்றும் குறிப்பாக அழைப்பதைக் கவனிக்க வேண்டும். அண்ணல் என்பது தலைமையைக் குறிக்கும் சொல்லாகும். சங்க நூல்களில் யானை, மான் முதலிய விலங்குகளுக்குத் தலைமை என்ற பொருளில் இச்சொல் பயின்று வருகின்றது. ஆதலின் 'ஆமான் அண்ணல் ஏறு' ஆமான் நிரைக்குத் தலைமையான ஆமான் ஏறு என்பதில் ஐயமில்லை. இதை ஆமான் நிரைக்குப் பொலி காளை (Master Bull) எனலாம்.மற்றும் 'நல்லேறு' என்று கூறுவதையும் கவனிக்க வேண்டும். நல்லேறு என்பதும் இதே பொருளில் வழங்குகின்றது. 'நன்று பெரிதாகும்' (தொல். 343) என்றபடி பெரிய ஏறு என்பதே இதன் பொருள். நிரையில் பெரிய, வலிய ஏறு தலைமை கொள்ளுவது வழக்கம். 'நல்லேறு' என்ற சொல்லும் சங்க நூல்களில் பொலியெருது என்ற பொருளுடன் வழங்கியிருப்பதைக் காணலாம். பிற்காலத்தில் இதே சொல் 'நல்லெருது' என்று சாசனத் தமிழில் பொலி காளைக்கு வழங்கியது. ஆமானின் நல்லேறு நிரையைவிட்டுத் தனியாக வாழும் போது மரையான் (Nilgai) ஏற்றுடன் போரிட்டதை மலைபடுகடாம் பாடல் குறிப்பிட்டுள்ளது. மழைக் காலம் கழிந்தபின் புல் வெளியில் அறுகம்புல்லைத் தின்று செருக்குற்ற நடையோடு நீரைப் பருகுவதை அகப்பாடல் 341 குறிப்பிட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

"இனத்தில் தீர்ந்த துளங்கிமில் நல்லேறு
மலைத்தலை வந்த மரையான் கதழ்விடை
மாறு மைந்தி னூறுபடத் தாக்கிக்
கோவலர் குறவரோ டொருங்கியைந் தார்ப்ப
வள்ளிதழ்க் குளவியுங் குறிஞ்சியுங் குழைய
நல்லேறு பொருஉங் கல்லென் கம்பலை".

—மலைபடுகடாம், 330—335.

"மழைகழிந் தன்ன மாக்கால் மபங்கறல்
பதவுமேயல் அருந்து துளங்கிமில் நல்லேறு
மதவுநடை நாக்கொ டசைவீடப் பருகிக்
குறுங்காற் காஞ்சிக் கோதை மெல்லிணர்ப்
பொற்றகை நுண்டாது உறைப்பத் தொக்குடன்
குப்பை வார்மணல் எக்கர்த் துஞ்சும்
யாணர் வேனில் மன்னிது."

—அகம், 341.

துளங்கிமில் நல்லேறு என்று குறிப்பிட்டுள்ளது ஆமானின் நல்லேற்றிற்குக் காணப்படும் உயர்ந்த திமிலைக் (High wither) குறித்தே யாகும். இனத்தில் தீர்ந்த நல்லேறு என்றது இணைசேரும் காலம் முடிந்து நிரையை விட்டுத் தனியாகச் செல்லும் நல்லேற்றைக் குறித்தே என்பது கவனிக்கவேண்டிய செய்தியாகும். தீர்ந்த என்ற சொல்லாட்சியையும் கவனிக்கவேண்டும். இந்த இடத்தில் நச்சினார்க்கினியர் இடபம் என்று துளங்கிமில் நல்லேறு என்பதற்குப் பொருள்கொண்டது பொருந்தாது. இனத்தில் தீர்ந்த ஏறு மனிதர் வளர்க்கும் இடபத்திற்குப் பொருந்தாது. மனிதர் மேய்க்கும் மந்தையில் உள்ள இடபம் அல்லது பொலிகாளை தானாக இனத்தைவிட்டுத் தீர்தல் கிடையாது. ஆனால் இணை சேர்வதற்காகவே மந்தையில் நல்லேறு சேர்க்கப்படும். காடுகளில் வேறு வேறு இன விலங்கு

களின் ஆண்கள் திடுமென்று தலைப்பட்டு முட்டிப் போரிடுவதை விலங்கு நூலார் கண்டுள்ளனர். இதை அரியதொரு காட்சியாகக் கொண்டு படம் பிடிப்பர். இத்தகைய ஒரு போர் ஆமானின் ஏற்றிற்கும் மரை யானின் ஏற்றிற்கும் நிகழ்ந்ததையே கோவலரும் குறவரும் கண்டு ஆரவாரித்ததாகக் கூறியுள்ளனர். ஆமான் ஆவைப் போன்றதால் கோவலர் அது வெல்லும் என்றனர். மரையான் மலைத்தலை வந்த விலங்காதலால் குறவர் அது வெல்லும் என்று ஆரவாரித்தனர். இந்த இரு நல்லேறுகளும் போரிட்டுத் தேய்த்ததால் குளவியும் குறிஞ்சியும் குழைந்தன. ஆமானும் மரையானும் மாட்டினத்தைப் போன்ற விலங்குகளாதலால் இரண்டின் ஆணும் ‘நல்லேறு’ எனப்பட்டன.

ஆமான் காட்டில் வாழும் விலங்குகளில் பெரிய விலங்கானதால் வரிப்புலியைத் தவிர வேறெந்த விலங்கும் ஆமானை ஊறுசெய்ய நெருங்கா என்று விலங்கு நூலார் கூறுவர். ஆமானின் எதிரி வரிப்புலி யாகும். சங்க நூலிலும் பனைபோன்ற பெரிய கழுத்தை யுடைய வரிப்புலி ஆமானின் எருதைக் கொன்று அகன்ற பாறை சிவக்கும்படி இழுத்துச் சென்றதாகக் கூறியிருப்பது, தாம் கண்டதைப் புலவர் உண்மை யாகக் கூறியதாகும். இத்தகைய காட்சியைக் காடு களில் கானப் பாதுகாப்பு அலுவலர் (Forest Officials) கண்டுள்ளனர். புலியும் கூட ஆமானைத் தனித்துக் காணும்போதோ, நிரையிலிருந்து ஆமான் பிரிந்து மேயும்போதோ அடித்துக் கொல்லுமாம். ‘புலிப்பாற் பட்ட ஆமான் குழவியைச் சினம் கழிந்த மூதா கன்று மடுத்தூட்டும்’ என்று.புறநானூறு (323) கூறுவதைக்

கவனிக்கவும். நிரையில் காணப்படும் கன்றைச் சில சமயங்களில் புலி தாக்குவதுண்டு. ஆனால் நிரையி லுள்ள ஆமான்கள் புலியை எதிர்த்துத்தாக்கிக் கன்றை மீட்டுவிடும். ஆமானின் கன்றை மீட்க ஒரு மூதா சினத் தோடு தாக்கிப் புலியிடமிருந்து மீட்டுச் சினந் தணிந்து கன்றுக்குப் பால்கொடுத்ததாகப் புறப் பாடல் கூறுவது உண்மையாக நடந்த நிகழ்ச்சி யெனவே தெரிகின்றது. பாதுசா (M. A. Badsha) என்ற தமிழ்நாட்டு விலங்குநூல் அறிஞர் ஆமானைப் புலி கொன்று இழுத்துச் சென்றதையும், ஆமான் குட்டியைப் புலி தாக்கியதையும் நேரில் கண்டு எழுதிய செய்தியை இதுசார் பாகப் படித்து மகிழலாம். (In Mudumalai wild life sanctuary (Madras State) a fight between a fully grown tiger and a huge bull gaur (Indian bison) lasted for a day before the gaur fell. The scene of fight bore unmistakable proof of their prowess. The surrounding vegetation was smeared with blood...............
..........................................................................................

On the 28th July 1963. I saw a calf in a herd of 46 gaurs with a ghastly wound on his right thigh with a piece of flesh hanging down. The mother gaur who was also licking this wound had also an injury on her right leg. The story is that, this calf was rescued from the tiger by the herd and in the bargain the mother gaur also was wounded.—(The Hindu, September 29, 1963)

இவ்வறிஞர் கூறும் இந்த இரண்டு செய்திகளைப் போலவே சங்க நூற் செய்திகள் காணப்படுவது மிகுந்த வியப்பையும் மகிழ்ச்சியையும் தருமென்பதில் ஐயமில்லை.

> "பனிமருள் எருத்திற் பல்வரி இரும்போத்து
> மடக்கண் ஆமான் மாதிரத்து அலறத்

தடக்கோட் டாமான் அண்ணல் ஏஎறு
நனந்தலைக் கானத்து வலம்படத் தொலைச்சி
இருங்கல் வியலறை சிவப்ப ஈர்க்கும்
பெருங்கல் நாட பிரிதி யாயின்'' —அகம், 238

மேற்காட்டிய அகப்பாடலில் பல வரிகளையுடைய ஆண் புலியானது ஆமான் அலறும்படி மிகப் பெரிய ஆமான் எருதைக் கொன்று கருமையான பெரிய அகன்ற பாறை சிவக்கும்படி இழுத்துச் சென்றதாகக் கூறியது சங்கப் புலவர் கண்ட உண்மையான செய்தி யாகும். நனந்தலைக் கானத்தில் கொன்றதாகக் கூறு வதை நோக்குக. அகன்ற பெரிய காட்டில் கொன்ற தையே கூறுகிறார். ஆமானின் குருதி செடியில் கறைப் பட்டிருப்பதை அறிஞர் கூறியிருப்பது போலவே பாறையில் ஆமானின் குருதி கறைப்படும்படி புலி இழுத்ததாகக் கூறியதைக் காண்க. ஆமானின் கன்றைப் புலி தாக்குவதை அறிஞர் கூறியதுபோலவே புறநா னூறும் புலியால் தாக்கப்பட்ட கன்றை மீட்டுச் சினந் தணிந்த மூதா பால் கொடுத்ததைக் கூறுகின்றது.

ஆமானைக் கானவர் கொன்று அதன் ஊனை விரும்பி உண்டதாகக் கூறப்பட்டுள்ளது. கானவன் அம்பு ஆமானின் மார்பில் பாயாது தவறியதாக நற்றிணை (165) கூறுவதைக் கவனிக்கவேண்டும். ஆமா னின் உடலில் அம்பு பாய்வது எளிதன்று. ஆமானின் கன்றைக் கானகத்தருகில் வாழும் மக்கள் கவர்ந்து சென்று பசுவின் கன்றைப்போல வளர்த்ததாகக் குறுந் தொகை (322), மலைபடுகடாம் (499–500), புறம் (319) ஆகியவை கூறுகின்றன. ஆமானின் கன்றை வளர்த்தா லும் அஃது எளிதில் பழகுவதில்லை என்று விலங்கு நூலார் கூறுவர். அசாம் (Assam) காடுகளில் நாட்டுப்

பசுக்களைக் காட்டிலே விட்டு அவைகளை ஆமான் எருது களோடு இயற்கையாகக் கூடச் செய்து பிறக்கும் கன்று களை எடுத்து வளர்ப்பதுண்டு. அக்கன்றுகள் ஆமானைப் போல வலிமை பொருந்தியதாகவும் சிறந்தும் இருக்கு மென்று கூறுவர். புறநானூற்றில் (117) ஓர் அரசனின் ஆட்சியில் கண்ட அமைதியை விளக்க ஒரு புலவர் தூம கேது விழுதல் போன்ற அபசகுனங்கள் தோன்றிலு லும், ஆமான் மனிதர் வாழும் மனைத்தலையில் குட்டி போட்டு நிரையுடன் புல் மேய்ந்ததாகக் கூறுகின்றார். ஆமான் நிரை அமைதியாகப் புல் மேய்வது ஒரு நாட்டின் அமைதிக்கே அறிகுறியாகக் கொண்டனர் போலும். ஆமானின் கண்ணை "அமர்கண்' என்று பல சங்கப் பாடல்கள் கூறுவது கவனிக்கவேண்டியது. மாடு களின் கண்களைப் போல ஆமானின் கண்ணும் அமைதி தங்கும் கண்களாதலால் 'அமர்கண்' (Bovine look) என்று கூறப்படுகிறது. 'ஆமான் அனைய மென்னோக்கி' என்று கூறுவதையும் காண்க.

ஆமானைப் பற்றிப் பிற்கால நூல்கள் கூறும் ஒரு செய்தி ஆராயத்தக்கது. சீவக சிந்தாமணியில் (189) ஆமான் நாக்கால் நக்கும்போது பெறும் இன்பத்தை உவமித்துக் கலவியின்பத்தைக் கூறியுள்ளார்.

> ' ஆமாபோல் நக்கி அவர்கைப் பொருள்கொண்டு
> சேமாபோற் குப்புறாம் சில்லைக்கண் அன்பினை''
>
> —நாலடியார், 377

இனிமை தருவது போல ஒருவரை நக்கி அவர் கைப்பொருளைக்கொண்டு ஆமாவானது பொலி எருது போல் ஓடிவிடும் என்று உரை கூறியுள்ளனர். இது பொருத்தமில்லாத உரையாகும். இங்கு உவமிக்கப்

பட்ட செய்தி பரத்தையரின் பொய்மையான அன்பாகும். சிறிது காலம் அன்பைக் காட்டிக் கைப்பொருளைப் பறித்த பின் நீங்கும் பரத்தையரைப் போன்று ஆமான் நக்கி இன்பம் கொடுத்து விலகுவதாகக் கூறியுள்ளனர். ஆமானின் ஏறு பாலுணர்ச்சிக் காலத்தில் (Mating Season) பசுக்களைத் தழுவி வாழ்ந்து, பின்னர்ப் பசுக்களின் நிரையை விட்டு நீங்கித் தனித்து வாழும் தன்மையுடையது என்று விலங்கு நூலார் கூறுவர். இதையே நாலடியார் கூறுவதாகத் தெரிகின்றது. இதுவே பொருத்தமாகவும் தோன்றுகின்றது. ஆமானுடன் சிறிது காலம் இன்பம் பெற்றுப் பின்னர் ஆமானைத் துறக்கும் ஆமான் ஏறுபோலப் பரத்தையரும் சிறிதுகாலம் இன்பந்தந்து ஒருவர் கைப்பொருள் கொண்டு விட்டு விடுவர் என்பதே பொருத்தமான பொருளாகும். சங்கப் புலவர்கள் ஆமானைப் பற்றி அறிந்தவையைப் பார்க்குங் கால் நாலடியாரில் கூறியதும் ஆமானைப் பற்றிக் கண்டறிந்த உண்மையான செய்தியே என்று தெரிகின்றது. இந்தத் தவறான உரையைப் பின்பற்றிய மிகப் பிற்காலத்துப் புலவர் "நாவின் புறநக்கிக் கொல்லுங் கவயமாபோல்" (நீதிநெறி) என்று நாக்காலே நக்கியே ஆமா ஆளைக் கொன்றுவிடும் என்று ஒரு புராணக் கதையைப் படைத்தார். நாலடியாரில் காணாதது இக் கதை. ஆமான் 'சேமாபோல் குப்புறூஉம்' என்றே நாலடியார் கூறிற்று. அஃதாவது பொலிகாளைபோல் ஓடிவிடும் என்றே கூறப்பட்டது. சேமா என்பது பொலிகாளை. பொலிகாளைபோல் சிறிதுகாலம், சில்லைக் கண் இன்பம் தந்து நீங்கிவிடும் ஆமா ஏறு என்றே கூறப்பட்டுள்ளது. ஆமா நாவினால் நக்கிக்கொல்லும் என்பது பிற்காலத்தில் புனைந்த புராணக் கூற்று. சீவக

சிந்தாமணி ஆமான் நக்குவது இன்பம் பயப்பது என்றே கூறியது. நாலடியார் நக்கி இன்பம் பயந்து நீங்குவதைக் கூறிற்று. நீதி நூல் ஆசிரியரோ நக்கி இன்பம் பயந்து கொல்வதாகவே கூறிவிட்டார். புறநானூறு ஆமான் புல்லருந்திக் கன்றை ஈனுவதை ஒரு நாட்டின் அமைதிக்கே அறிகுறியாகக் கூறுகிறது. தலைவனின் அன்பு குறைந்ததைச் சுட்டிக்காட்ட "ஆமா சுரக்கும அணிமலை நாடன்" என்று ஐந்திணை எழுபதில் (4) கூறப்பட்டிருப்பதை இளம்பூரணர் எடுத்துக்காட்டி யுள்ளார். ஆமா அன்பு சுரப்பது என்று சங்ககாலத்தில் கருதினர் என்பது தெளிவு. அமைதிக்கும் அன்புக்கும் அறிகுறியான 'அமர்கண்' ஆமாவை ஆளை ஏமாற்றிக் கொல்லும் 'ஆட்கொல்லியாக' ஆக்கியது பிற்காலப் புராண மனப்பான்மையால் என்பதைக் காணும்போது சங்ககாலப் புலமையின் பிற்காலப் புலமை என்னே விழ்வு பெற்றது என எண்ணவேண்டியிருக்கின்றது.

ஆமாவைக் காட்டுப்பசுவென்றும், காட்டா என்றும் பிற்காலத்தார் கூறினர். இந்தி மொழியில் 'கவுர்' (guar) என்று கூறினர். மராத்தியில் 'கவியா', கவா' என்று கூறினர். தமிழில் பிற்காலத்தில் 'கவயமா' என்று வழங்கின சொல் வடமொழியில் இருந்து வந்தது. கவயமா நாக்கால் நக்கிக் கொல்வது வடமொழியில் இருந்து வந்த கருத்தெனத் தோன்று கின்றது. கன்னடத்தில் 'காட்டு எருது', 'காட்டீ' என்று கூறுவர். காட்டு எருது, காட்டா என்பதன் மறு உருவே அப்பெயர்கள். மலையாளத்தில் 'காட்டுப் போத்து' என்பர். தொல்காப்பியத்தில் ஆவினத்திற்கு ஆண்பாற் பெயர் போத்து என்பதும் ஒன்று எனக் கூறப்பட்டுள்ளது. ஆவைப் போன்ற ஆமாவின்

ஆணிற்குப் போத்தென்று கூறியதில் பொருத்தமுண்டு. அதுபோலவே காலியினத்திற்கு, பசுக்கூட்டத்திற்கு நிரை யென்ற பெயர் திவாகரத்தில் கூறப்பட்டுள்ளது. சங்கப்பாடல்களும் நிரையென்ற சொல்லை ஆமான் கூட்டத்திற்குப் பயன்படுத்தியதைக் காணலாம். தமிழில் தற்காலத்தில் ஆமாவைக் 'காட்டு எருமை' என்றும் அழைக்கின்றனர். இந்தச் சொல் வழக்கு நகைப்பையும் வியப்பையும் தருகின்றது. ஏனெனில் அமெரிக்காவில் (America) இதே இனக் காட்டெருதை மாட்டினப்பெயரால் அழைக்காமல், எருமையினப் பெயரால் (Wild buffalow) தவறுக அழைக்கின்றனர். எருமை யினத்திற்கும் ஆமானினத்திற்கும் நெருங்கிய தொடர்பு இல்லை. மாட்டினமே ஆமானிற்கு நெருங்கிய தொடர்புடையது. இன்று காணப்படும் மாடு ஆமானின் இரத்தக் கலப்புடன் கூடியது என விலங்கு நூலார் கூறுவர். காட்டில் வாழும் ஆமான் மாட்டைப்போலவும், பசுவைப்போலவும் காணப்பட்ட தாலே ஆவைப்போன்ற விலங்கு என்ற பொருளில் ஆமா என்று பெயர் பெற்றது. இதை மணிமேகலையும் அழகாகக் காண்டற்பொருளால் காணுததை உணர் வதற்கு எடுத்துக்காட்டாகக் கூறியது.

> "காண்டற் பொருளாற் கண்டில துணர்த
> லுவம மாவ தொப்புமை யளவை
> கவய மாவாப் போலுமெனக் கருத"
>
> (மணிமேகலை. 27: 40-42)

என்று கூறியிருப்பதையே பேராசிரியர் தம் உரையில் எடுத்தாண்டதாகத் தெரிகின்றது. காட்டில் வாழும் எவ்விலங்கும் நாட்டில் வாழும் விலங்குகளில் காட்டா

வானது பசுவைப்போலிருப்பதுபோல் அத்தகைய நெருக்கமான ஒப்புமை உடையதன்று. அதன் காரணமாகவே ஆமாவிற்கும் ஆவிற்கும் காணும் ஒப்புமையையே உவமையாகக் கொண்டனர். தொல்காப்பியத்தில் மாவென்ற சொல்லும் மானென்ற சொல்லும் விலங்கைக் குறிக்குமென்று சொல்லப்பட்டுள்ளது. ஆபோலும் விலங்கு என்ற பொருளில் ஆமாவெனும் சொல் தோன்றிற்று. சிலர் ஆமா வென்பதும் ஆமான் என்பதும் வெவ்வேறு விலங்கெனக் கருதினர். அது தவறு. 'ஆ' 'மா' என்று வரும் சொற்கள் 'ன்' பெற்று, சொற்களோடு சேர்ந்து வருதலைத் தொல்காப்பியர் (எழுத்ததிகாரம் 231) குறிப்பிட்டுள்ளார். ஆனால் சங்ககாலத்தில் அப்படிச் சேர்ந்த 'ன்', சொற்களின் உறுப்பாக நிலைத்துவிட்டமையைக் காண்கிறோம். ஆமா என்ற சொல் 'ன்' பெற்றுப் பின்னர் ஆமான் என்றாயிற்று. இதை உணராது சிலர் 'மான்' என்ற சொல்லை விலங்கைக் குறிக்கும் பொதுச் சொல்லாகக் கொள்ளாமல் புள்ளிமான் போன்ற மானினத்தைக் குறிக்கும் சொல்லாகக்கொண்டு ஆமானை ஒரு மானென்று மயங்கினர். ஆமானை, விலங்கு நூலார் 'Bos gaurus' என்றழைப்பர். அஃது ஆங்கிலத்தில் Indian Bison என்றழைக்கப்படும்.

## ௪. மான்கள்

(Antilopes and Deer)

சங்க இலக்கியங்களில் ஐந்து வகை மான்களைப் பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. அவை இரலை, நவ்வி, மரையான், உழை, கடமா என்பனவாகும். விலங்கு நூலறிவோடு இந்த மான் வகைகளைப் பற்றிய செய்திகள் இங்கு ஆராயப்படும். விலங்கு நூற்படி மான்களில் இரு இனங்கள் தெளிவாகப் பிரித் துணரப் படும். இரலை இனம் (Antilope) என்றும், கலை இனம் (Deer) என்றும் பிரிக்கப்படும். இந்த இரு இனங்களையும் தமிழில் 'மான்' என்று பொதுவாக அழைப்பதுபோல் விலங்கு நூலார் பொதுப் பெயரால் அழைப்பதில்லை. தமிழில் இவ்விரு இனங்களையும் மான் என்றே அழைப்பதால் இவைகளைப் பிரித் துணர்வது இன்றியமையாதது. இரலை இனமான்களின் கொம்புகள் உள்துளை யற்றவை. துளையற்று உள்ளே கெட்டியாக இருக்கும். மற்றும் இரலை இன மான்களின் கொம்பு கீழே வீழ்ந்து புதியகொம்பு திரும்பவும் முளைப்ப தில்லை. கலை மானினத்தின் கொம்புகள் உள் துளையுடையவை. கீழே வீழ்ந்து புதிய கொம்பு திரும்பவும் முளைக்கும். இரலை இன மான்களின் கொம்பில் கிளைகள் இல்லை. கலைமானின் கொம்புகளில் கிளை கள் உண்டு. இந்த அடிப்படை வேற்றுமையைக் கொண்டு மான் வகைகளை இரலை யினமா, கலையினமா என்று எளிதில் பிரித்து விடலாம்.

இரலே :—(Black Buck) சங்க இலக்கியங்களில் இரலே யினத்தைச் (Antilope) சார்ந்த மூன்று வகை மான்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை இரலே, நவ்வி, மரையான் என்பனவாகும். மானினத்தில் மிகச் சிறந்ததும் மிக அழகியதுமான மான்வகை இரலேயாகும். இந்த இரலே மானின் சிறப்புக் கருதி இதற்குரிய பெயரை இதைச் சேர்ந்த இனத்திற்கே பொதுப் பெயராகப் பயன்படுத்தி யிருக்கின்றேன். இந்தியாவில் உள்ள மான்களில் மிகச் சிறந்ததாகவும் மிகவும் அழகியதாகவும் இரலே மானேக் கருதுகின்றனர். இதன் ஆண் தான் அத்தகைய அழகுடையது. இதன் காரணமாகவே சங்க இலக்கியங்களிலும் இரலேமானேப் பற்றிய செய்திகள் மற்றமான்களேப்பற்றிய செய்திகளே விட மிகவும் பரவலாகவும் கூடுதலாகவும் காணப்படுகின்றன. இரலேமானே இந்தியாவுக்கே உரியதாகவும் (Typical) இந்தியாவுக்கே சிறப்புத் தருவதாகவும் விலங்கு நூலார் கருதுவர். (The black buck is the sole representative in India of the genus 'Antilope'. Its striking Colour and its beautiful spiralled horns give it an elegance rarely equalled by any antilope) ஆண் இரலேமானின் மேற்புறம் கருநிறமுடையதாகக் காணப்படும். அதனுல் தான் தேவாரத்தில் இரலேமான் கருமான் என்றழைக்கப்பட்டது. தேவாரத்தில் சிவபெருமான் கருமானின் தோலே அணிந்ததாகவும் கருமானே உகந்து கையிலேந்தி யிருப்பதாகவும் பாடப்பட்டிருக்கின்றது. இரலேமான் கருநிற மானது என்பதை,

" ...................... ......................இருங்கேழ்
இரலே சேக்கும் பரலுயர் பதுக்கை" என்று வரும் அகப்பாடல் (91) வரிகளில் "இருங்கேழ்" என்ற சொல்

குறிப்பிடுகின்றது. இருங்கேழ் என்ற சொல் அழகிய கருமையைக் குறிக்கும். இரலை கருமையாயிருப்பினும் கீழ்ப்புறம் வெண்மையாகவே இருக்கும். ஆனால் கழுத்துப்புறம் கருமையாக இருக்கும். "வெண்புறக் குடை திரிமருப்பிரலை" என்றுவரும் அகப்பாடல் (139) வரி இரலையின் வெண்மையான அடிப்பகுதியைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

> "தண்ணறும் படுநீர் மாந்திப் பதவருந்து
> வெண்புறக் குடைய திரிமருப்பு இரலை
> வார்மணல் ஒருசிறைப் பிடவவிழ் கொழுநிழற்
> காமர் துணையொடு ஏமுற வதிய"
>
> —அகம். 139.

கார்காலத்து மழைநீரை அருந்தி இரலையின் ஆண்மான் பிடவ மரத்தின் நிழலில் தன்னுடைய துணைமானுடன் பயமின்றித் தங்கியிருந்ததை அகப்பாடல் கூறுகின்றது. இரலைமான் ஓய்வெடுக்கும்போது சாய்ந்துபடுத்து அசைபோடும். அந்தச் சமயத்தில் ஆண் இரலைமானின் வயிற்றுப்புறம் வெண்மையாகத் தெரிவது இயல்பே. இதையே அகநானூறு குறிப்பிட்டுள்ளது. ஆண் மானிற்கு முதுகுப்புறம் கருப்பாகவும் வயிற்றுப்புறம் வெண்மையாகவும் இருப்பதையே விலங்கு நூலாரும் சுட்டிக் காட்டியுள்ளனர். இந்த வெண்மையான அடிப்புறம் பெண்மானுக்குக் கிடையாது. அகப்பாடலிலும் ஆண்மானுக்கே வெண்மையான அடிப்புறம் இருப்பதாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். இதன் கழுத்துக் கருமையானது என்பது "மாயெருத்திரலை" என்று நற்றிணைப் பாடல்களிலும் (69, 256) குறுந்தொகைப் பாடலிலும் (232) கூறப்பட்டுள்ளது.

'மாமுக முசுக்கலை' என்றது போல 'மாயெருத்திரலை' என்பது சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றது.

இரலைமானின் கொம்புகளைப் பற்றிச் சங்க நூல்களில் பல பாடல்களில் கூறப்படுகின்றன. இரலை மானின் கொம்பு முறுக்கி முறுக்கி நேரிதாக வளரும். கிளைகள் கிடையாது.

"சிறுதலைப் பிணையிற் றீர்ந்த நெறிகோட்
டிரலை மானையுங் காண்பர்கொ னமரே"

—குறுந்தொகை 183.

இரலையின் கொம்பு முறுக்கி நேராக வளர்வதால் 'நெறி கோடு' என்று அழைக்கப்பட்டது.

"தொடுதோற் கானவன் கவைபொறுத் தன்ன
இருதிரி மருப்பின் அண்ணல் இரலை"

—அகம். 34.

செருப்பின் முன் காணப்படும் இரண்டு தோல் வார்கள் பிரிந்து முறுக்கிக் காணப்படுவதுபோல இரண்டு கொம்புகள் இரலைக்கு இருப்பதாகக் கூறப்பட்டிருப்பதும் மிகப் பொருத்தமானதாகும். இரலை முறுக்குடைய கொம்பை உடையதாகப் பல பாடல்களில் கூறப்பட்டிருக்கின்றது. அகநானூற்றில் மட்டும் ஆறு பாடல்களில் " திரி மருப்பிரலை " (Twisted horns) என்று அழைக்கப்படுகின்றது.

"அங்காட் டாரிடை மடப்பிணை தழீஇத்
திரிமருப் பிரலை புல்லருந் துகள
முல்லை வியன்புலம் பரப்பிக் கோவலர்"

—அகம். 14.

"மறியுடை மடப்பிணை தழீஇப் புறவில்
திரிமருப் பிரலை பைம்பயிர் உகள" —அகம். 314.



வருடை



ஆமான்



கடமா



கலைமான்



மரையான்



நவ்வி



இரலை



தீநாய்



கேழல்



கணநரி



கோநாய்

"புன்கண் கொண்ட திரிமருப் பிரலை"

—அகம், 371.

"வரிமரற் கறிக்கும் மடப்பிணைத்
திருமருப் பிரலையங் காடிறந் தோரே"

—அகம், 183.

"வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
றிரிமருப் பிரலையொடு மடமா னுகள"

—முல்லைப்பாட்டு, 98-99.

"திரிமருப் பிரலை யண்ண னல்லே
றரிமடப் பிணையோ டல்குநிழ லசைஇ"

—குறுந்தொகை, 338.

'திரி மருப்பிரலை' என்று பல பாடல்களில் பாடப் படுவதிலிருந்து இரலையின் கொம்பை எவ்வளவு நன்றாகச் சங்கப் புலவர்கள் கவனித்திருந்தார்கள் என்பது தெளிவாகின்றது. இரலையின் கொம்பு முறுக்கி இருப்பதாகக் கூறியதோடு எந்தத் திசையில் முறுக்கியிருந்தது என்பதையும் தெளிவாகக் கூறியிருக்கின்றனர்.

"சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
வலந்திரி மருப்பின் அண்ணல் இரலையொடு
அலங்குசினைக் குருந்தின் அல்குநிழல் வதிய"

—அகம், 304.

இரலையின் கொம்பு வலப்புறமாகத் திரிந்து இருப்பதாக கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

"எருத்து வலிய எறும்நோக் கிரலை
மருப்பிற் றிரிந்து மறிந்துவீழ் தாடி
உருத்த கடுஞ்சினத் தோடா மறவர்"

—கலி, 15.

இரலையின் கொம்புபோல மறவரின் மீசை முறுக்கி விடப் பட்டிருந்ததாகக் கலித்தொகை கூறுவது இரலை

யின் கொம்பின் உருவை நன்கு எடுத்துக்காட்டுகின்றது. இரலை மானின் கொம்பு முறுக்கியிருப்பது மிக அழகாகக் காணப்படும். (Beautifully Spiralled horn) என்று விலங்குநூலார் கருதுகின்றனர்.

"............ ............ ............குவிமுகை
வாழை வான்பூ ஊழுறு புதிர்ந்த
ஒழிகுலை யன்ன திரிமருப் பேற்றொடு
கணைக்கால் அம்பிணைக் காமர் புணர்நிலை"

...அகம், 134.

"இரலை நன்மான் இனம்பரந் தவைபோல்
கோடுடைத் தலைக்குடை சூடிய விளைஞர்"

—அகம், 194.

வாழைப் பூவில் பூக்கள் முதிர்ந்து விழுந்தபின் காணப்படும் குலைக்காம்பைப் போல இரலைக் கொம்பு திரிந்து காணப்படுவதாக அகம் 134ஆம் பாடல் கூறுவது அரிய விளக்கமாகும். பூக்கள் உதிர்ந்து விழுந்த இடத்தில் காம்பில் காணப்படும் விளிம்புடைய தழும்புகள் போல முறுக்குடைய இரலைக் கொம்பில் குறுக்கு வாட்டத்தில் விளிம்புடைய வளையங்கள் காணப்படும். இரலையின் பெண்மானுக்குக் கொம்புகள் கிடையா. இரலை மான்களில் ஆண்களுக்கே கொம்பு உண்டு. சங்க நூல்களில் இரலையின் ஆண்மானை இரலை யென்றே அழைப்பதையும் பெண்மானை 'துணை' 'பிணை' என்று அழைப்பதையும் காணலாம். இரலை யெனக் கூறப்படும் ஆண் மானுக்கே கொம்பிருப்பதாகச் சங்க நூல்களும் கூறுகின்றன.

இரலைமான்கள் பொதுவாகச் சமவெளிப் பகுதியில் வாழ்வதாகக் கூறுவர். அவற்றை வறட்சியான பாலைப் பகுதியிலும் (Desert and Scrub) புல் வெளிகளிலும்

(Grassy plains) குறுங்காடுகளிலும் வயற் புறங்களிலும் காணலாம். திறந்த புல் வெளிகளிலும் வறட்சியான சூழ்நிலையிலும் இரலைமான் இயற்கையில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இது விலங்கு நூலார் கண்டறிந்த தாகும். சங்க இலக்கியத்திலும் இரலை பாலையிலும் முல்லையிலுமே பாடப்பட்டிருப்பது மிக மிகப் பொருத்தமே. முல்லையில் புல்வெளிகளும் (Grassy lands) குறுங் காடுகளும் (Parklands) அடங்கியிருக்கின்றன. பாலையில் வறட்சியான பகுதிகள் அடங்குகின்றன. ஆதலில் சங்கப் புலவர்கள் இரலை வாழும் சூழ்நிலையை நுண்ணி தின் உணர்ந்தே பாலையிலும் முல்லையிலும் கூறினர். இரலை வாழும் முல்லை நிலத்தில் குறுங்காடுகளும் புல் வெளிகளும் கானாறுகளும் காணப்படும். வெயிற் காலத்தில் பாலையைப்போலக் குறுங்காடுகளும் புல் வெளிகளும் வறண்டு வாடித் தோற்றமளிக்கும். ஆனால் மழை காலத்தில் பச்சைப் பசேர் என்று தோற்றமளிக் கும். சங்க நூல்களில் இந்த இரு சூழ்நிலைகளிலும் இரலையை வைத்துப் பாடியிருக்கின்றனர். இரலை மான் கள் வறட்சியான பாலைப் பகுதியிலும் புல் வெளியிலும் வறண்ட குறுங்காடுகளிலும் காணப்பட்டாலும், இவை விரும்பி வாழ்ந்த சூழ்நிலை திறந்த புல்வெளி களும் உப்புக் கலந்த மண்ணுடைய களர்ப்பாலை நிலங் களுமேயாகும். (Although the Black buck is found in desert, grass land, scrub field and forest, it showed a special preference for certain areas of open grass land and semi-saline desert country S. R. S. Dharma Kumara Sinhji-Illustrated Weekly of India 10th October 1965)

"திணைக்கள் ளுண்ட தெறிகோல் மறவர்
விசைத்த வில்லர் வேட்டம் போகி

முல்லைப் படப்பைப் புல்வாய் கெண்டும்
காமர் புறவி னதுவே.''

—அகம், 284.

''கானன் மேய்ந்து வியன்புலத் தல்கும்
புல்வா யிரலை நெற்றியன்ன''

—புறம், 374.

''புலப்புல்வாய்க் கலைப் பச்சை''

—புறம், 166.

''அதளெறிந் தன்ன நெடுவெண் களரின்
ஒருவ னாட்டும் புல்வாய் போல
ஓடி யுய்தலுங் கூடுமன்''

—புறம், 193.

''கழிப்பெயர் களரில் போகிய மடமான்
விழிக்கண் பேதையொடு இனனிரிந் தோடக்
காமர் நெஞ்சமொடு அகலாத்
தேடூஉ நின்ற இரலை ஏறே.

—நற்றிணை, 242.

''வெண்களர் அரிமணல் நன்பல தாஅய்
வண்டுபோ தவிழ்க்கும் தண்கமழ் புறவில்
கருங்கோட் டிரலை காமர் மடப்பிணை
மருண்ட மான் நோக்கங் காண்டொறும் நின்னினைந்து''

—அகம், 74.

''ஊன்கிழித் தன்ன செஞ்சுவல் நெடுஞ்சாள்
வித்திய மருங்கின் விதைபல நாறி
இரலை நன்மான் இனம்பரந் தவைபோல்
கோடுடை தலைக்குடை சூடிய வினைஞர்''

—அகம், 194.

சிவந்த மண்ணுடைய மேட்டுப் பகுதியில் வித்திய பயிர்களின் நாற்றை உண்ண வந்த இரலைமான்கள்

இனமாகப் பரந்து காணப்பட்டதாகக் கூறுவதைக் காணலாம். இரலை மான்கள் கூட்டமாகக் காணப் படுவதையே இனம் 'பரந்தவை' என்று அகநானூறு சொல்லுகின்றது. முல்லைப் புல்வெளியில் புல்வாயைக் கண்டதைச் சங்கப் பாடல்கள் குறிப்பிட்டுள்ளன. இரலை விரும்பி வாழும் சூழ்நிலையான களர் நிலத்தை யும் தெளிவாகக் கூறியுள்ளனர். உப்புப் போட்டுப் பதனிடும் தோலை வீசி வைத்தாற்போல இருந்த நெடிய களர் நிலத்தில் புல்வா யெனப்படும் இரலைமானை ஒருவன் துரத்திய தாகப் புறநானூறு கூறுவதைக் காணலாம். 'கழிப்பெயர் களரி' போகியதாக நற்றிணை 242 ஆம் பாடலும் 'வெண்களர் அரி மணலில்' நன்கு பலவாகப் பரந்து இரலைமான்கள் இருந்ததாக அக நானூறு 74 ஆம் பாடலும் தெளிவாகக் குறிப்பிடுவது விலங்கு நூலாரும் போற்றக்கூடிய செய்தியாகும்; புல் வெளியிலேயே இரலைமானைச் சிறப்பாகக் கண்டதால் 'புலப் புல்வாய்' என்ற பெயரைப் புறநானூறு வழங்கிஉள்ளது. காட்டில் மேய்ந்து 'வியன் புலத்தில்' தங்குவதாக மற்றொரு புறநானூற்றுப் பாடல் கூறுகின் றது. முல்லை நிலத்தில் பரந்தகன்ற புல் வெளியில் கண்டதாக அகநானூற்றுப் பாடலில் (14) 'முல்லை வியன்புலம் பரப்பி' என்று சொல்லியிருப்பதைக் காணலாம். இரலைமான்கள் கூட்டம் கூட்டமாகப் புல் வெளியில் பரந்து மேய்வதைக் கண்டதால் 'பரப்பி' 'பரந்தவை' 'நன் பலதாஅய்' என்று சங்க நூல்கள் இரலைமானைப் பற்றிக் கூறுகின்றன. புல்வெளியிலே சிறப்பாக, மிகுதியாகக் காணப்படும் மான் இரலைமானே என்பதால் இதற்குப் 'புல் வாய்' என்ற பொதுப் பெய ரும் தொல்காப்பியத்திலும் சங்க நூல்களிலும் வழங்

கக் காண்கிறோம். புல்வாய் என்பது இரலை மான் என்பதை நன்கு மனத்திலிருத்திக்கொள்ளவேண்டும். இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் ஒருகாலத்தில் இரலைமான்கள் சமவெளிப் பகுதிகளில் கூட்டம் கூட்டமாக நிறையக் காணப்பட்டன. இரலை மான்கள் மனிதர்களால் வேட்டையாடப் பட்டதாலும் புல் வெளிகள் நகர்ப்புறங்களாக மாறியதாலும் தற்காலத்தில் இரலை மான்களைக் காண்பது மிக மிக அரிதாகி விட்டது. இப்பொழுது கிண்டிப் பூங்கா (Guindy Park) போன்ற குறுங்காடுகளில் இரலைமான் அரசினரால் பாதுக்காக்கப்படுகின்றது. சங்க நூல்களில் இரலைமான்கள் 'அரலையங் காட்டிலும்' (Scrub) பரலவலிலும் (அகம்-4) வரகு விளையும் வன்னிலத்திலும் காணப்பட்டதாகக் கூறியிருப்பதும் உண்மையான செய்தியாகும். பரலவல் என்பது காஞற்றுப் பகுதிகள். இந்தக் காஞற்றுப் புல் வெளிகளில் இரலை விரும்பி வாழ்வதாகவும் விலங்கு நூலார் கூறுவர்.

> ''பழமழைக் கலித்த புதுப்புன வரகின்
> இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை
>
> —குறுந்தொகை, 220.

> '' ... ... ... ஈரிலை வரகின்
> கவைக் கதிர் கறித்த காமர் மடப்பிணை
> அரலை யங்காட் டிரலையொடு வதியும்
>
> —நற்றிணை, 121.

இரலைமான் வரகின் கதிரைக் கறிப்பதாக நற்றிணை கூறுகிறது. இரலைமான்கள் பலபுற்களையும் அறுகம் புல்லையும் மேய்வதாகக் கூறப்பட்டிருக்கின்றது.

"அங்காட் டாரிடை மடப்பிணைத் தழீஇத்
திரிமருப் பிரலை புல்லருந் துகள
முல்லை வியன்புலம் பரப்பிக் கோவலர்"

—அகம், 14.

"இருதிரி மருப்பின் அண்ணல் இரலை
செறியிலைப் பதவின் செங்கோல் மென்குரல்
மறியாடு மருங்கின் மடப்பிணை யருத்தி

—அகம், 34.

"தண்ணறும் படுநீர் மாந்திப் பதவருந்து
வெண்புறக் குடைய திரிமருப்பு இரலை"

—அகம். 139.

இரலைமான்கள் கானலில் மேய்ந்து விளை நிலத்தில் தங்குவதாகப் புறம் 374ஆம் பாட்டில் கூறப்பட்டிருக்கின்றது. இரலைமான்கள் விளைநிலங்களில் பயிர்களையும் மேயும் என்று விலங்கு நூலார் கூறுவர். (They feed on grass and cereal crops)

"வீததை வியலரிற் றுஞ்சிப் பொழுது செலச்
செழும்பயறு கறிக்கும் புன்கண் மாலை"

—குறுந்தொகை. 338.

"திரிமருப் பிரலை பைம்பயிர் உகள"

—அகம், 314.

இரலை விளைநிலத்தில் பைம்பயிரில் காணப்படுவதாகவும் செழும்பயறு கறிப்பதாகவும் கூறுவதை நோக்குக.

"மறியுடன் றழீஇய மடமா னம்பிணை
துன்ளுநடை யிரலையொடு வெள்ளிடைக் குழும"

—பெருங்கதை, 54. 38-9.

இரலைமான் திறந்த புல் வெளிகளை (open grassy plains) விரும்புவதாக விலங்கு நூலார் கூறுவதற் கேற்பப்

பெருங்கதையும் 'வெள்ளிடையில்' காணப்படுவதாகக் கூறுவதைக் கவனிக்கவும்.

இரலைமான்கள் காலைநேரங்களில் மேய்கின்றன. பிற்பகலில் நிழலைத் தேடி ஓய்வெடுக்கின்றன. சங்க நூல்களில் "குருந்தின் அல்கு நிழல் வதியும்" என்றும் "அல்கு நிழலசையும்" என்றும் கூறப்பட்டிருக்கின்றது. இரலைமான்கள் மந்தையாக மேயும் போதோ துள்ளிக் குதிக்கும் போதோ காணும் காட்சி போன்ற இனிமையான வேறொரு காட்சியை இயற்கையில் காண முடியாது என்று ஒரு விலங்கு நூலறிஞர் கூறுகின்றார். இரலைமானின் இனிய அழகுக் காட்சியைத்தான் சங்க நூலறிஞர்கள் பல பாடல்களில் பாடிச் சென்றனர். கார் காலத்தில் தலைவன் வினை முடிந்து திரும்புகின்றான். அப்போது இரலைமான் தன் துணையுடன் புல் வெளியில் மேயும் காட்சியைப் பார்த்ததும் அவனுக்குத் தலைவியின் நினைவு வருகிறது. இரலைமானைத் துணையுடன் காணும் காட்சியையே சங்கநூல்களில் பல பாடல்கள் வர்ணிக்கின்றன. சில பாடல்களில் இரலைமான் துணையுடனும் குட்டிகளுடனும் காணும் காட்சியும் கூறப்பட்டிருக்கின்றது. இரலைமான்கள் பொதுவாக மந்தையாக வாழும். ஒரு மந்தையில் 20 முதல் 30 மான்கள் வரை காணப்படும். பாலுணர்ச்சி தோன்றும் காலத்தில் இரலை ஆண்கள் பெண்மானைக் கவர்வதற்காகத் தங்களுக்குள் முட்டிப் போர் புரியும். போரில் வெற்றி பெற்ற இரலையாண் பெண்மானுடன் மந்தையை விட்டு விலகித் தனித்து வாழும். குட்டி போடும் வரை அவ்வாறு தனித்து இணையாக இரண்டாக வாழும். இந்தக் காலத்திலே கண்ட காட்சியையே

தலைவன் கண்டதாகச் சங்கப் புலவர்கள் பாடினர். போரில் வென்று பெற்ற தலைமையொடு செருக்குற்றுத் துணை மானொடு வாழும் ஆண் இரலையையே 'அண்ணல் இரலை' என்று சங்கப் பாடல்கள் கூறும்.

"மறியாடு மருங்கின் மடப்பிணை யருத்தி"

—அகம், 34.

"சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
வலந்திரி மருப்பின் அண்ணல் இரலையொடு"

—அகம், 304.

"மறியுடை மடப்பிணை தழீஇப் புறவில்
திரிமருப் பிரலை பைம்பயிர் உகள"

—அகம், 314.

"கணையிடக் கழிந்ததன் வீழ்துணை உள்ளிக்
குறுநெடுந் துணைய மறியுடை யாடப்
புன்கண் கொண்ட திரிமருப் பிரலை"

—அகம், 371.

மேற்காட்டிய அகப்பாடல்களில் இரலைமான் தன் துணையுடன் மட்டுமின்றிக் குட்டிகளுடன் காணப்படுவதாகக் கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

இரலை ஆண்கள் கார்காலத்தில் துணையுடன் காணப்படுவதாகப் பல சங்கப் பாடல்களில் கூறப்பட்டிருக்கின்றது. கார்காலமான ஆகஸ்டு-செப்டம்பர்த் திங்களில் தமிழ் நாட்டில் தென் மேற்குப் பருவக் காற்று வீசி மழை பெய்யும். இந்தக் காலத்தில்தான் இரலை மான்கள் துணைதேடுவதாகக் கூறப்பட்டிருக்கின்றது.

"கார்பெயல் செய்த காமர் காலை
மடப்பிணை தழீஇய மாஎருத் திரலை

காழ்கொள் வேலத் தாழ்சினை பயந்த
கண்கவர் வரிநிழல் வதியும்''

—நற்றிணை, 256.

''வானம் வாய்ப்பக் கவினிக் கானம்
கமஞ்சூல் மாமழை கார்பயந்து இறுத்தென
...... ... ... ... ... ... ... ... ...
ஒழிகுலை யன்ன திரிமருப் பேற்றொடு
கணைக்கால் அம்பிணைக் காமர் புணர்நிலை
கடுமான் தேரொலி கேட்பின்
நடுநாள் கூட்டம் ஆகலும் உண்டே''

— அகம், 134.

கார் காலத்திறுதியில் இரலைமானின் ஏற்றொடு பெண் மான் நடுஇரவில் இனச்சேர்க்கை கூடுமாதலால் தேரை ஓசையுடன் ஓட்டாதே என்று பாகனுக்குக் கூறியதாக வரும் அகப்பாடல் இயற்கையில் காணும் உண்மைச் செய்தியைத் தலைவனின் உணர்ச்சியுடன் சேர்த்துக் கூறியமை போற்றத்தக்கது. தலைவியை நாடிவரும் தலைவனுக்கு இரலைமான்கள் இணை கூடுவதைக் கெடுக்க மனமில்லை என்று கூறியது சங்கப் புலவர்களின் நுண்ணிய மன வுணர்வைக் காட்டுகின்றது. இணை சேரும் காலத்தில் (Mating season) ஆணும் பெண்ணுமாக வாழுமாயினும் குட்டிகள் ஈனும்காலத்து ஆண் இரலை பெண்ணை விட்டுவிட்டுச் சென்றுவிடும்.

'சிறுதலைப் பிணையிற் றீர்ந்த நெறிகோட்
டிரலை மானையுங் காண்பர்கொல் நமரே'

—குறுந்தொகை, 183.

மேலே காட்டிய குறுந்தொகைப் பாட்டில் கொம்புடைய இரலையின் ஆண்மான் பிணையுடன் சேர்ந்து இருக்கும் கார்காலம் கடந்து, பிணையை விட்டுத் தீர்ந்த

காலம் வந்ததைத் தலைவர் கண்டாரோ என்று தலைவி கூறுவதாகச் சொல்லியிருப்பதைக் காணலாம். "தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட்டாகும்" என்று தொல்காப்பியச் சூத்திரம் (சொல்லதிகாரம் 318) தீர்தல், தீர்த்தல் என்ற சொற்கள் விடுதலாகிய குறிப்புணர்த்தும் என்று சொல்லி யிருப்பதைக் காணலாம். விலங்குகளில் சில இனங்களில் குறிப்பிட்ட காலங்களில் ஆண் பெண்ணுக இணைவதும் அதன் பின்னர் ஆண்மான் தன் துணையையும் குட்டிகளையும் கவனிக்காது விட்டுச் செல்வதும் உண்டு என்பதை விலங்கு நூலார் கூறியுள்ளனர். இம் முறையாக விலங்கினத்தில் ஆண் விலங்குகள் துணையையும் இனத்தையும் விட்டுத் தனித்து வாழ்வதையே விடற் பொருட்டாகக் கொண்டு தீர்தலும் தீர்த்தலும் குறிப்புணர்த்துவதாகத் தொல்காப்பியம் கூறுவதை நன்கு இதுவரை பலரும் உணரவில்லை. தீர்தல் என்ற சொல்லின் வழக்காட்சியைச் சங்க நூல்களில் கூர்ந்து ஆராய்ந்து பார்த்தால் இச்சொல் விலங்கினத்தில் இத்தகைய குணமுடைய விலங்குவகைகளைக் குறித்தே வருவதைக் காணலாம். பேராசிரியர் "துணையிற் றீர்ந்த கடுங்கண் யானை" என்று வரும் நற்றிணை (108) வரியைக் காட்டியிருக்கிறுர். யானையினத்திலும் இணை கூடினபிறகு ஆண்கள் துணையையும் இனத்தையும் விடுத்து ஒற்றை ஆண்யானையாக வாழ்வதுண்டு. ஆதலின் 'தீர்தல்' என்ற சொல் வழக்கின் ஆழ்ந்த பொருளை உணர்ந்தால்தான் சங்க நூல்களில் விலங்குகளைப் பற்றிய செய்திகளில் வரும் இச் சொல்லின் பொருத்தத்தை நன்கு உணர முடியும்.

பாலுணர்ச்சிக் காலத்தில் இரலை ஆண்கள் செருக்கிய, மதர்த்த நடையுடன் நடக்கும் (A buck stru

during mating season with peculiar mincing gait) என்று விலங்கு நூலறிஞர் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றனர். இந்தச் செருக்கிய நடையையே ஒரு புலவர் 'மதவு நடை' என்றழைக்கிறார்.

> "பதவின் பாவை முனைஇ மதவுநடை
> அண்ணல் இரலை அமர்பிணை தழீஇத்
> தண்ணறல் பருகித் தாழ்ந்துபட் டனவே"
>
> —அகம், 23.

தங்களுக்கு ஊறு நெருங்குகின்றது என்று காணுங்கால் இரலை மான்கள் ஒரு முறையாக எழும்பித் துள்ளிக் குதித்து (Light series of leaps) ஓடும். இதைப் பல அறிஞர்கள் இரலைமானின் தனித்த குணமாகக் கூறுவர். இரலை குதிக்கும்போது 6, 7 அடிகள் மேலே எழும்பிக் குதிக்கும்.

> "திரிமருப் பிரலையொடு மடமா னுகள"
>
> —முல்லைப்பாட்டு, 99.

> "பரலவல் அடைய இரலை தெறிப்ப"
>
> —அகம், 4.

> "வன்பரற் றெள்ளறல் பருகிய விரலைதன்
> இன்புறு துணையொடு மறுவந் துகளத்
> தான்வந் தன்றே தளிதரு தண்கார்"
>
> —குறுந்தொகை, 65.

> "அங்காட் டாரிடை மடப்பிணை தழீஇத்
> திரிமருப் பிரலை புல்லருந் துகள
> முல்லை வியன்புலம் பரப்பிக் கோவலர்"
>
> —அகம், 14.

> "சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை"
>
> —அகம், 304.

"திரிமருப் பிரலை பைம்பயிர் உகள"

—அகம், 314.

மேற்காட்டிய பாடல்களில் "உகள, தெறிப்ப" என்ற சொற்கள் இரலையின் குதிக்கும் செயலையே குறிக்கின்றன. "மறுவந்துகள" என்ற சொல் இரலை திரும்பத் திரும்பக் குதித்தலையே குறிப்பிடுகின்றது. இரலையின் நடையை "தெறிநடை" "தெறித்தல்" என்று குறிப்பிடுவது மிகவும் பொருத்தம். இரப்பர்ப் பந்தைத் தரையில் அடிக்கும்போது மேலெழும்பி எழும்பித் தெறிப்பது போல் துள்ளித் துள்ளிக் குதிக்கின்றன. பெருங்கதை 'துள்ளுநடை இரலை' என்று கூறுகின்றது.

இரலை மானைப்பற்றி ஒரு நுண்ணிய செய்தியைப் புறநானூற்றில் காணுங்கால் மிகுந்த வியப்புண்டாகின்றது. இரலை மான்களுக்குக் கண்களின்கீழ் கீறியது போல் ஒரு வெடிப்புக் காணப்படும். இந்த வெடிப்பில் ஒரு சுரப்பி (gland) இருப்பதாக விலங்கு நூலறிஞர் கூறுவர். இந்தச் சுரப்பி சிறிது ஆழமான பள்ளமாகவும் சுற்றிலும் மயிர் அடர்த்தியானதாகவும் காணப்படும். பாலுணர்ச்சி வரும் காலத்தில் இந்தச் சுரப்பி நன்ருகத் திறந்து ஒருவகை மதநீரைச் சுரக்கும். இச்செய்தியை விலங்கு நூலார் கூறியிருக்கின்றனர்,

"கானன் மேய்ந்து வியன்புலந் தங்கும்
புல்வா யிரலை நெற்றி யன்ன
பொலமிலங்கு சென்னிய பாறுமயி ரவியத்
தன்பனி யுறைக்கும் புலரா ஞாங்கர்
மன்றப் பலவின் மால்வரை பொருந்தியென்
தெண்கண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி
இருங்கலை யோர்ப்ப விசைஇக் காண்வரக்
கருங்கோற் குறிஞ்சி யடுக்கம் பாட" —புறம், 374.

மேற்காட்டிய புறப்பாடலில் இரலை நெற்றிபோலப் பரட்டைத் தலைமயிர் குவியும்படி விடியற் காலையில் பனி பெய்வதாகக் கூறப்பட்டிருப்பதை நன்றாகக் கவனிக்கவேண்டும். இரலை நெற்றிபோல என்று கூறக் காரணம் பலருக்கும் விளங்காது. இரலை மானின் நெற்றியிலிருந்து பனிபோல மதநீர் சுரக்கின்றது. அதனால் இரலையின் நெற்றிக் கீற்றில் இருக்கும் மயிர் நனைந்து சேர்ந்து குவிந்து காணப்படுகின்றது. அது போலச் சிறுவர்களுடைய பரட்டை மயிர் அடங்கிக் குவியும்படி பனிநீர் பெய்கிறது. சங்க நூல்களில் இத்தகைய நுண்ணிய செய்தி கூறப்பட்டிருப்பது வியப்பினும் வியப்பே. (The swollen glands below the eyes of the Black buck attracts attention)

இரலை என்ற சொல் சங்க நூல்களில் வழங்கு மிடங்களிலெல்லாம் இரலை வகை (Black Buck) மானின் அஃதாவது கருமானின் ஆணையே குறித்து வந்தது என்பது மிகவும் கவனிக்க வேண்டிய செய்தி. மானினத்தில் ஆண் மான்களுக்கே தனிச் சிறப்புப் பெயர்கள் வழங்கினர் என்று தெரிகின்றது. அதற்குக் காரணம் மான்களின் வகையை இனம் பிரித்தறிய ஆண் மானின் கொம்புகளே உதவுகின்றன. பெண் மான்களுக்குக் கொம்புகள் சிறப்பாக அமையவில்லை. இரலைவகை மான்களை வடமொழியில் 'மிருகா' என்பர். ஆணுக்கு 'ஏனம்' என்றும் பெண்ணிற்கு 'அரிணம்' என்றும் வழங்கினர். தமிழில் பிற்கால நிகண்டாசிரியர் கள் இந்த வடமொழிப் பெயர்களை யெல்லாம் மானினத்திற்கே பொதுப் பெயராக வேற்றுமையின்றி வழங்கினர். இரலையை ஆங்கிலத்தில் Black Buck அல்லது Indian Antilope என்று அழைப்பர். அறிவிய

லார் Antilope cervicapra என்றழைப்பர். முறுக்கிய கொம்பிருப்பதால் தமிழ் நாட்டில் சில இடங்களில் 'முறுக்குமான்' என்றழைக்கின்றனர். சங்க இலக்கியத்தில் இரலையின் 'இருங்கேழ்' அழகையும் திரி மருப்பின் பெருமையையும் நன்கு உணர்ந்தே இதைப் போற்றிப் பாடியுள்ளனர். விலங்கு நூலாரும் இந்தியாவில் சிறந்த மானாக இதைக் கருதுகின்றனர்.

நவ்வி : (Indian Gazelle)

இரலையின மான்களில் இரலைக் கடுத்த சிறப்புடைய மான் நவ்வி மானாகும். இரலையைவிடச் சிறிதாகவும் மென்மையானதும் சாயல் அழகியதாகவும் (A small gazelle of slender graceful build) காணப்படும் என்பர். தமிழிலக்கியத்திலும் இதே கருத்து இந்த மானைப் பற்றி அக்காலத்தில் கொண்டிருந்தனர் எனத் தெரிகின்றது. பேராசிரியர் தொல்காப்பிய உரையில் 'ஓடும் புல்வாய் என்றதனானே மடனுடையன நவ்வியெனவும் இடைநிகரன உழையெனவும் கொள்க' என்றார். நவ்விமானை மிக மடப்பம் பொருந்தியதாகக் கருதினரெனத் தெரிகின்றது. சேந்தன் திவாகரம் நவ்வி என்ற சொற்கு அழகு என்றொரு பொருள் கூறியிருப்பதையும் கவனிக்கவேண்டும். சங்க நூல்களில் இம்மானைப் பற்றிச் சில செய்திகள்தாம் சில பாடல்களில் வருகின்றன.

"சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை"

—புறம்,

"..........................................இன்சிலை
ஏறுடை இனத்த நாறுயிர் நவ்வி
வலைகாண் பிணையிற் போகி ஈங்கோர்" —அகம், 7.

''கட்படர் ஓதி கிற்படர்ந் துள்ளி
அருஞ்செல வாற்று ஆரிடை ஞெரேரெனப்
பரந்துபடு பாயல் நவ்வி பட்டென''

—அகம், 39.

''செவ்விகொள் வரகின் செஞ்சுவற் கலித்த
கவ்வை நாற்றின் காரிரு ளோரிலே
நவ்வி நாண்மறி கவ்விக் கடன்கழிக்கும்''

—குறுந்தொகை,

''முகைவீ அதிரல் மோட்டுமணல் எக்கர்
நவ்வி நோன்குளம்பு அழுந்தென எள்ளி''

— நற்றிணை, 124.

''பெருங்கவின் பெற்ற சிறுதலை நவ்வி
மடக்கண் பிணையொடு மறுகுவன வுகளச்''

மதுரைக் காஞ்சி, 275-6.

தமிழ் நூல்களில் அழகிய பெண்களின் சாயலுக்கு இம்மானை ஒப்பிட்டுக் கூறுவது வழக்கம். மான்களில் மிகவும் மடப்பம் பொருந்தியதாகவும் பெரிய கண்ணை உடையதாகவும் கருதினதால் பெண்களுக்கு ஒப்பிட்டுக் கூறினர். இதற்குச் சிறிய தலையும் பெரிய கண்ணும் இருப்பதாகப் புறப்பாடல் (21) கூறுகின்றது. மானினத்தில் நவ்விக்கும் இரலைக்கும் அழகிய கண்கள் இருப்பதாகச் சங்கப் புலவர்கள் கருதினர். இவைகளின் கண்களை 'மடக்கண்' என்று அழைப்பர்.

''கழிப்பெயர் களரில் போகிய மடமான்
விழிக்கண் பேதையொடு இனனிரிந் தோடக்
காமர் நெஞ்சமொடு அகலாத்
தேடேஎ நின்ற இரலை ஏறே''

நற்றிணை, 242.

இரலையின் பெண்மானின் கண்ணை, 'விழிக்கண் பேதை' என்று கூறியது அழகிய சொல்லாட்சியாகும். ஒன்றையொன்று தேடும் இரல மானின் ஆணையும் பெண்ணையும் விளக்குமிடத்து ஆணைத்தேடி விழித்துப் பார்க்கும் பெண்மானின் கண்ணை 'விழிக்கண் பேதை' என்றார். இந்த இருமான்களின் கண்களையே பெண்களின் கண்ணிற்கு ஒப்பிட்டுக் கூறுவது மரபாகும். நவ்வியின் மென்மையையும் அழகையும் நோக்கியே அதன் சாயலைப் பெண்களுக்கு ஒப்பிட்டுக் கூறுவது வழக்கம். மான்களிலே இது மிகவும் அழகிய சாயல் உடையது என்று கருதினதால் மதுரைக் காஞ்சியில் 'பெருங்கவின் பெற்ற சிறுதலை நவ்வி' என்று வர்ணிக்கப்படுகின்றதைக் கூர்ந்து நோக்க வேண்டும்.

நவ்விமான் தமிழ்நாட்டில் அரிதாகக் காணப்படும் என்று விலங்கு நூலறிஞர் கூறுவர். கிருஷ்ணை ஆற்றுக்குச் சிறிது தெற்கே இஃது அரிதாக இப்போது காணப்படுவதாகக் கூறுவர். சங்க காலத்திலேயே நவ்விமான் தமிழ் நாட்டில் அரிதாகக் காணப்பட்டமையால் இதைப்பற்றிச் சங்க நூல்களில் சில செய்திகளே காணப்படுகின்றன. நவ்வி ஏறு இனிய குரலைக்கொண்டிருப்பதாக அகப்பாடல் (7) கூறுகின்றது. நவ்வி மான்கள் சிறு சிறு மந்தையாகக் காணப்படும். அகப்பாடலிலும் 'ஏறுடை இனத்த' என்று கூறுவதைக் கவனிக்கவும். நவ்வி மான்கள் 20 அல்லது 30 மான்களாகக் கூட்டமாக வாழும். மந்தையில் சில ஆண்கள் இருக்கும். நவ்வி மான்கள் ஏதாவது தங்களுக்கு ஊறு வரும் என்று எதிர்பார்க்குங்கால் ஒரு முறையான தும்மல் போன்ற ஓசை யெழுப்பும். இந்தி மொழியில்

'தும்மலிடும் விலங்கு' என்ற பொருளில் இதை 'சின்காரா' (Chinkara) என்றழைக்கின்றனர். "இன்சிலை ஏறுடை இனத்த நாறுயிர் நவ்வி" என்று வரும் அகப்பாடல் (7) வரியில் 'நாறுயிர் நவ்வி' என்று கூறுவதைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். வெளிப்படுத்தும் மூச்சு என்ற பொருளில் நாறுயிர் என்ற சொல் நவ்வி மான்கள் வெளியிடும் தும்மல் ஓசையையே குறிக்கின்றது எனத் தெரிகின்றது.

நவ்விமான்கள் பெரும்பாலும் பாலையிலும் வறட்சியான நிலத்திலும் காறுற்றுப் படுகைகளிலும் காணப்படும் என்று விலங்கு நூலார் கூறுவர். சங்க நூல்களிலும் பெரும்பாலும் பாலையில் பாடப் பட்டிருக்கின்றது. நவ்விமான்கள் எதையாவது கண்டு பயந்தால் திடுமெனக் குதித்துப் பாய்ந்து மிக விரைவாக ஓடிச் சிறிது தொலை சென்று நின்று திரும்பிப் பார்க்கும் தன்மையுடையன. "ஆரிடை ஞெரேரெனப்பரந்து படு பாயல் நவ்வி பட்டென" என்று வரும் அகப் பாடல் (39) வரி நவ்வி திடுமென விரைந்து பாய்ந்து ஓடுவதையே குறிக்கின்றது. இதன் பொருள் எளிதாகக் கடக்க முடியாத வழியில் உன்னை நினைந்து வருங்கால் திடுமெனப் பரந்து பாயும் நவ்விமான்கள் என் கண்ணில் பட்டது என்று தலைவன் கூறுவதாக அமைந்திருக்கின்றது. நவ்விமான்கள் இரலைமான்களைப் போலச் சம வெளியிலும், திறந்த புல்வெளிகளிலும் பெரும்பாலும் வாழ்வதில்லை. காறுற்றுப் படுகரையிலும் கரடு முரடான வறட்சியான பகுதியிலுமே வாழ்கின்றன. அகப் பாடலும் 'ஆரிடை' என்று எளிதில் கடக்க முடியாத நிலத்தில் வாழ்வதாகக் கூறுகிறது. இரலைமானைப் போலன்றி நவ்விமான்களுக்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் கொம்பு

உண்டு. நவ்விமானை விலங்கு நூலார் gazelle lennetti என்பர்.

மரையான் (The Nilgai or Blue Bull)

இரலை மானினத்தைச் சேர்ந்த மற்றொரு மான் வகை மரையான் என்று சங்க இலக்கியத்தில் அழைக்கப் படுகின்றது. மரை யா என்றும் அழைக்கப் படும். இந்த விலங்கை இந்தியாவில் பலபகுதிகளிலும் பசுவைப் போன்றதாகக் கருதிக் கொல்வதில்லை. சங்க காலத் தமிழரும் இதைப் பசுவை போலக் கருதினர் என்றே தெரிகின்றது. ஆபோலும் மா, ஆமா என்றழைக்கப் பட்டது போல் ஆ போன்ற மரை, மரைஆன், மரை ஆ என்றழைக்கப்பட்டது. மரைப் பசு என்ற பொருளில் வழங்கினர். விலங்கு நூலறிஞர், இவ் விலங்கு குதிரையைப் போல் (Horse like) காணப்படுவதாகக் கூறுவர். சூடாமணி நிகண்டிலும் மரையானுக்கு மறுபெயராகக் 'கானக் குதிரை' என்று சொல்லப்பட்டிருப்பது வியப்பான ஒப்புமையாகும்.

மரையான் பார்ப்பதற்கு அழகற்ற விலங்காகும். இதன் நிறம் சிறிதே வெண்மை கலந்த கருமையாகும். நீலம் போல் கருமை நிறமாயிருப்பதால் நீலப் பசு என்ற பொருளில் இந்தியில் 'நீல்கை' (Nilgai) என்று பெயரிட்டழைப்பர்.

" புரிமட மரையான் கருநரை நல்லேறு
தீம்புளி நெல்லி மாந்தி யயலது "

—குறுந்தொகை, 317.

'மரையான் கருநரை நல்லேறு' என்று குறுந்தொகை கூறுவதைக் கவனிக்கவும். 'கருநரை நல்லேறு' ஆங்கி

லத்தில் Blue Bull என்றழைக்கப் படுவதை நோக்குக. கருநரை (Black grey) நிறமுடையது என்பதில் ஐயமில்லை. மரையான் மரங்கள் அடர்த்தியாக இல்லாத குன்றுகளில் பெரும்பாலும் காணப்படுகின்றன. வறட்சியான சமவெளிகளிலும் காணப்படுவதுண்டு. வயற்புறங்களில் நுழைந்து விளைச்சலை உண்ணுமெனக் கூறுவர். இவை குன்றுகளில் காணப்படுவதாக விலங்கு நூலார் கூறியது போலவே சங்க நூல்களிலும் மலையிலும் குன்றிலும் வாழ்வதாகவே கூறப்பட்டிருக்கின்றது.

"என்றூழ் நீடிய குன்றத்துக் கவாஅன்
ஓய்பசிச் செந்நாய் உயங்குமரை தொலைச்சி"

—நற்றிணை, 43.

" மலைத்தலை வந்த மரையான் கதழ் விடை "

—மலைபடுகடாம், 331.

" வான்தோய் சிமைய விறல்வரைக் கவாஅன்
துளங்குநடை மரையா வலம்படத் தொலைச்சி
ஒண்செங் குருதி உவறியுண் டருந்துபு
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை "

—அகம், 3.

" மரையான் குழவி குளம்பிற் றுகைக்கும்
வரையக நாட !...... ...... ......

—ஐந்திணை எழுபது, 10.

" மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்"

—கலி, 6.

மரையான்கள் மலைச்சாரலிலிருந்து வருவதாகக் கூறுவதை நோக்க வேண்டும். குன்றத்துக் கவானிலும் வரையகத்திலும் காணப் பட்டதாகக் கூறப்பட்டுள்

ளது. " கானமடமரை " என்று அகப்பாடல் (69) கூறும். கானகத்தில் காணப்படுவதால் கானக் குதிரை என்று நிகண்டு கூறுகிறது. மரையானுக்கு நீண்ட காதிருப்பதை 'மடக்கண் மரையான் பெருஞ்செவி' என்று மலைபடுகடாம் கூறுகின்றது.

மரையான் குதிரையைப்போல் மிக விரைவாக ஓடக் கூடியது. ஓட்டத்தில்தான் இது புலி முதலிய கொடிய விலங்குகளிடமிருந்து தப்பிக்கின்றது.

" மலைத்தலை வந்த மரையான் கதழ்விடை "

—மலைபடு கடாம். 331.

" சிலையொலி வெரீஇய செங்கண் மரைவிடை
தலையிறும்பு கதழு நாறுகொடிப் புறவின் "

—மலைபடுகடாம், 406-7.

'கதழ்விடை' என்று கூறுவதிலிருந்து இதன் விரைவான ஓட்டத்தை நன்கு உணர்த்திருந்தனர் என்று தெரிகின்றது. சங்கநூல்களில் மரையானைப், புலிகள் செந்நாய்கள் கொன்று உண்பதாகப் பல விடங்களில் கூறப்பட்டிருக்கின்றது. இவை ஓடுங்கால் நடை அழகாயிராது. குனிந்து குதித்து ஓடுவது போல் (Slouching gallop) இருக்கும் என்று விலங்கு நூலார் கூறுவர். அகநானூற்றில் இதன் நடை 'துளங்கு நடை' என்று கூறப்பட்டிருக்கின்றது. நற்றிணை 'உயங்கு மரை' என்றது, அகநானூறு 'துளங்கு நடை' என்றது ஒரு முறையான ஆடி அசையும் நடையையே குறிக்கும். மரையான்கள் 4 முதல் 10 வரை மந்தையாகக் காணப் படும். ஒரு மந்தையில் இருக்கும் மரையான்கள் எப்போதும் ஒரே இடத்தில் எச்சமிடும் குணம் உடையவை. திரிந்து மேயும் மரையான்கள் ஓரிடத்தில் கூடு

வதற்கு இந்தக் குணம் ஒருவழியாக அமைவதாக விலங்கு நூலார் கூறுவர். மரைகள் ஓரிடத்தில் கூடும் தன்மையுடையவை என்பதைச் சங்கப் புலவர்கள் தெரிந்திருந்தார்கள் என்று சில பாடல்களிலிருந்து உணர்கிறோம்.

(Nilgai like antilopes have the habit of resorting to the same spot to deposit their droppings forming in this way considerable accumulations. Such a rendevous may be a means of assembling scattered members of a herd.)

> " முனைகவர்ந்து கொண்டெனக் கலங்கிப் பீரெழுந்து
> மனைபாழ் பட்ட மரைசேர் மன்றத்து "
>
> —அகம், 373.

'மரைசேர் மன்றத்து' என்று அகப்பாடல் கூறுவதை நோக்குக. மன்றத்தில் சேர்ந்து இருந்த மரையா சிதறும் படி புலி வேட்டையாடியதாக'

> " மன்ற மரையா விரிய வேறட்டுச்
> செங்கணிரும்புலி குழுமும் "

என்று வரும் குறுந்தொகைப் பாடல் (321) இந்தப் பழக்கத்தை விளக்குகிறது. மரையான் இலைகளை மட்டும் தின்பதில்லை. மரையான்கள் இலந்தை, நெல்லி முதலிய கனிகளை விரும்பி உண்பதாக விலங்கு நூலார் கூறுகின்றனர். மரையான் நெல்லிக் கனிகளை விரும்பி உண்பதாகச் சங்க இலக்கியங்களில் சில பாடல்களில் கூறப்பட்டிருக்கின்றது உண்மையான செய்தியாகும்.

> "கல்லுயர் நண்ணி யதுவே நெல்லி
> மரையின மாரு முன்றிற்
> புல்வேய் குரம்பை நல்லோளூரே"
>
> —குறுந்தொகை, 235.

"பராரை நெல்லி யம்புளித் திரள்காய்
கான மடமரைக் கணநிரை கவரும்"

—அகம், 69.

"பல்கோள் நெல்லிப் பைங்கா யருந்தி
மெல்கிடு மடமரை ஓர்க்கும் அத்தம்"

—அகம், 399.

"மரைபிரித் துண்ட நெல்லி வேலி"

—புறம், 170.

மரைகள் நெல்லிக்காயை விரும்பி உண்பதாகச் சங்கப் பாடல்கள் கூறுவதைக் கவனிக்க வேண்டும். மரை யான் இலைகளை உண்பதை

"............ ............ ............ இலைகவர்
பாடமை ஒழுகிய தண்ணறுஞ் சாரல்
மென்னடை மரையா துஞ்சும்
நன்மலை நாட நின்னல திலளே"

என்று வரும் குறுந்தொகைப் பாடல் (115) கூறு கிறது.

"அங்குழை இருப்பை அறைவாய் வான்புழல்
புல்லுளைச் சிறுஅர் வில்லின் நீக்கி
மரைகடிந் தூட்டும் வரையகச் சீறூர்"

—அகம், 107.

இருப்பை மரத்தின் பூக்களை மரையான் விரும்பி உண் ணும் என்று விலங்கு நூலார் கூறுவர். (The fleshy fallen flowers of the mohwa tree attracts Nilgai as they attract other animals) மரையான்கள் இருப்பைப் பூவைத் தின்னுது கடிந்து வில்லால் அப்பூக்களைச் சேர்க் கும் வேட்டுவச் சிறுவர்கள் வாழும் மலைச் சிற்றூரைப் பற்றி அகநானூறு 107ஆம் பாடலில் இச்செய்தியைக்

கூறுவதைக் காணலாம். மரையான்கள் மந்தையாக வாழ்வதை 'மடமரைக் கணநிரை' (அகம் 69), மரைக் கணம் (அகம் 224) என்ற, சொற்கள் குறிக்கின்றன. சங்கப் பாடல்களில் மரையான்களை மலையருகாமையில் இருந்த ஊர்களில் கண்டதாகக் கூறியிருப்பதைக் காணலாம்.

> "தெறிநடை மரைக்கணம் இரிய மனையோள்
> ஐதுணங்கு வல்சி பெய்துமுறுக் குறுத்த"
>
> —அகம், 224.

> "............ ............ ............தூங்குநிலை
> மரையேறு சொறிந்த மாத்தாள் கந்தின்
> சுரையிவர் பொதியில் அங்குடிச் சீறூர்"
>
> —அகம், 287.

தெறித்த நடையையுடைய மரைக்கணம் வேட்டுவர் ஊரில் காயவைத்த உணவைக் கவர வந்ததை அகநானூறு 224ஆம் பாடல் கூறியுள்ளது. நாள்பலி கொடுக்கப்படாது விடப்பட்ட பாழடைந்த பொதியிலில் தூண் விழும்படி உடலைச் சொறிந்த மரையேற்றைப்பற்றி அகம 287ஆம் பாடல் கூறுவதைக் காணலாம். பாழடைந்து போன ஊர்களிலும் மன்றங்களிலும் பொதியிலிலும் மரையான்கள் கூடும் வழக்கம் இருந்ததைக் கண்டே சங்கப் புலவர்கள் பாடியதாகத் தெரிகின்றது. பதிற்றுப்பத்தில் (3) "ஏறுபுணர்ந், தண்ணல் மரையா அமர்ந்தினி துறையும்" என்ற வரிக்கு உரையெழுதியவர் நகரம் அழிக்கப்பட்டு மரையான்கள் உறங்கு காடாயின என்று கூறியதைக் கூர்ந்து கவனிக்கவும். பாழடைந்த வீடுகளிலும் ஊர்களிலும் மரையான்கள் கூடும் வழக்கம் சங்க காலத்தில் இருந்ததைக் கண்டு பாடினரெனத் தெரிகின்றது.

''கன்றுடை மரையாத் துஞ்சுஞ் சீறூர்க்
கோளிவண் வேண்டேம் புரவே நாரரி''

—புறம், 297.

புறநானூறு 297ஆம் பாடலில் மரையாகன்றுடன் தூங்கும் சிறிய ஊர் இறையிலி நிலமாகவேண்டாம் என்று மருத நிலத்தூரைக் கேட்டது சொல்லப் பட்டுள்ளது. மரையை மானிலிருந்து பிரித்துக் கருதினரென்று தெரிகின்றது. தொல்காப்பியம் இளம்பூரண ருரையில் சொல்லதிகாரத்தில் 'மாவும் மரையும் புலம் படர்ந்தன' என்றால் விலங்கு மா என்பது அறியப்படும் என்றார். மா என்ற சொல் மானைக் குறித்து வழங்கியதாகத் தெரிகின்றது. 'மானும் மரையினமும் மயில் இனமும் கலந்து எங்கும்' என்று வரும் சுந்தரர் தேவாரப்பாட்டு வரியில் மானும் மரையும் தனித்தனியாகக் கூறப்பட்டுள்ளது. மானும் மரையும் நெருக்கமான இனமாயினும் பிரித்துக் கூறவேண்டுமெனக் கருதினர். மரையான் மானைவிட மாட்டிற்கு உருவில் ஒத்துக் காணப்பட்டதால் பிரித்துக் கூறினரென்று தெரிகின்றது. மரத்தில் செய்யப்பட்ட மரைபோன்று புரிவுடன் கூடிய குறுகிய கொம்பு இருப்பதால் 'மரையான்' என்று பெயரிட்டனரென்று கருத இடமுண்டு. கன்னடத்தில் சங்க காலப் பெயரை மறக்காது இன்றும் 'மரைக் குதிரை' என்று மரையானை அழைக்கின்றனர். ஆ போன்ற விலங்கு ஆமா என்று அழைக்கப்பட்டது போல் ஆன்போன்ற மரை 'மரையான்' என்றழைக்கப்பட்டது. மரையானை விலங்கு நூலார் (**Boselaphus tragocamelus**) என்று அழைப்பர்.

உழை (Spotted Deer)

மானினங்களில் இரலையினத்திலிருந்து பிரித்துணரப்படும் மற்றோர் இனம் கலைமானினம் (Deer) என்று கூறப்படும். கலை மானினத்தில் இருவகை மான்கள் சங்க இலக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. உழையென்பது ஒருவகை. கடமா என்பது மற்றொரு வகை. உழையினம் தற்காலத்தில் புள்ளிமான் என்று அழைக்கப்படுகின்றது. உழை யென்ற பெயர் ஆண் மானிற்கும் பெண் மானிற்கும் பொதுப் பெயராக வழங்கிவந்த போதிலும் கலையென்ற பெயர் உழையில் ஆண் மானிற்கு மட்டுமே வழங்கி வந்திருக்கின்றது. ஆண் மானிற்கு மட்டுமே அழகிய கவைத்த கிளைவிட்ட கொம்புகள் இருப்பதால் ஆண் மான்களுக்கு மட்டும் தனிப் பெயராகக் 'கலை' என்ற பெயர் வழங்கப்பட்டது. கலையெனும் பெயரை இந்த இன மான்வகைகளுக்கு இனப் பெயராகப் பொதுப் பெயராக அழைப்பது நல்லது.

சங்க நூல்களில் கலைமானின் கொம்புபற்றிச் சில அருமையான அறிவியற் செய்திகள் காணப்படுகின்றன. கலைமான் தன் கொம்புகளை உதிர்ப்பது அரிய செய்தியாகையால் விலங்கு நூலார் பலர் இதை ஆராய்ந்து எழுதியுள்ளனர். விலங்கு நூலார் கலைமானின் கொம்பு பற்றி ஆராய்ந்து கூறிய செய்திகளைச் சங்க நூல்கள் கூறுவது மிகுந்த வியப்பை அளிக்கின்றது. கலைமானின மான்களின் கொம்புகள் இரலைமானினக் கொம்புகள் போலக் கிளைகளின்றி நேராக வளர்வதில்லை. கொம்புகள் அடியிலேயே கிளையுடன் காணப்படும். மரத்தில் கவைகளுடன் கிளைகள் காணப்படுவது போலக் கொம்பிலும் கவைகள் காணப்படும். இதனால் சங்க நூல்கள்

கலைமானின் கொம்பை 'கவைக்கோடு' என்றும் 'கவை மருப்பு' என்றும் கூறுகின்றன. கலைமானைக் 'கவைக்கலை' என்றும் கலைமானின் தலையை 'கவைத் தலை' என்றும் அழைக்கின்றன.

"புலிக்கோட் பிழைத்த கவைக்கோட்டு முதுகலை"

—ஐங்குறுநூறு, 373.

"வறன்மரத் தன்ன கவைமருப் பெழிற்கலை"

—அகம், 395.

"கவைத்தலை முதுகலை காலி னொற்றிப்'

—குறுந்தொகை, 213.

கிளையுடைய கொம்புடையதை நன்கு உணர்ந்தே 'கவைக் கோடு' (antler) என்றனர். கலைமானின் கொம்பு முதன் முதலில் தோன்றும்போது அக்கொம்பு ஒரே ஒரு கவையாக இருக்கும் (In young deer the antler is a simple spike-with the growth of the animal in the process of periodic renewal it throws out a branch or tine from near its base) கலைமான் நன்கு வளர்ந்து வரும் காலத்தில் தோன்றும் புதிய மறு கொம்புகள் ஒரு கிளைக்கு மேற்பட்ட கிளைகளுடன் வளரும். இதைச் சங்க நூற்புலவர்கள் நன்கு கண்டிருந்தனர்.

"........... ........... ........... பொறிவரிக்
கலைமான் தலையின் முதன்முதல் கவர்த்த
கோடலங் கவட்ட குறுங்கால் உழிஞ்சிற்"

—அகம், 151.

கலைமானின் தலையில் முதன்முதலாகத் தோன்றிய கவர்த்த கொம்பு போல உழிஞ்சில் மரத்தின் கவையான கொம்பு இருந்ததாகக் கூறியிருப்பதைக் காணலாம். கலைமானின் கொம்பு முதலில் தோன்றும்போது ஒரே ஒரு கவையாகக் காணப்படும் என்பதைத் தெளி

வாகக் கூறியிருப்பது அரிய செய்தியாகும். முதிய கலை மானின் கொம்பு சில கிளைகளுடன் இருக்கும் என்பதும் விலங்கு நூலார் கண்டதாகும். இதையும் சங்க நூற்புலவர்கள் நன்கு கண்டிருந்தனர். உழிஞ்சில் மரம் கவை கவையாகக் கிளைவிடும் தன்மையுடையது என்பதைச் செடி நூலார் கண்டுள்ளனர். அதே மரத்தின் மரக்கவையை (Much branched Albizzia amara) கலைமான் கொம்பிற்கு ஒப்பிட்டது அரிய உவமையாகும்.

''பல்கவர் மருப்பின் முதுமான் போக்கிச்''

—அகம், 283.

அகநானூறு பல கவர்த்த கிளைகளையுடைய கொம்பையுடைய முதியமான் என்று தெளிவாகக் கூறியிருப்பதைக் காணலாம். பல கவைகளையுடைய முதியமானின் கொம்பையே 'கவைக் கோட்டு முதுகலை', 'கவைத் தலை முதுகலை' என்று அகநானூற்றுப் பாடல்கள் கூறுகின்றன. கலைமானின் கவைத்த கொம்புகள் வறண்ட மரம்போலிருப்பதாகவும் அகப்பாடல் 395 கூறுவது அழகிய உவமையாகும்.

''அழன்மேய்ந் துண்ட கிழன்மாய் இயவின்
வறன்மரத் தன்ன கவைமருப் பெழிற்கலை''

—அகம். 395.

மழையற்ற வறட்சிக் காலத்தில் காட்டு மரங்களின் நுனிக் கொம்புகள் வறண்டுபோய் இலையற்றுக் காய்ந்து கிடக்கும். இத்தகைய வறண்ட கொம்புகளைக் கலைமானின் கொம்பிற்கு ஒப்பிட்டுக் காடுகளைப் பாதுகாப்பதைக் கூறும் அறிவியல் நூல்கள் Stag headedness என்று கூறும். (The water shortage consequent on any breakdown of this mechanism is rapidly reflected in the

drying up of the top extremities of the tree giving it a condition known as 'Stag - headedness'—Forestry by H. G. Champion) இதே உவமையைச் சங்கப் பாடலும் கையாண்டிருப்பதைக் காணும்போது சங்கப்புலவர் களின் நுண்ணிய அறிவைப் போற்றாதிருக்க முடியாது. கலைமானின் கவை மருப்பிற்கும் வறண்ட மரத்தின் கவைக் கொம்பிற்கும் தோற்றத்தில் உள்ள ஒற்றுமை நேரில் கண்டோர்க்கு நன்கு விளங்கும். முதன் முதலில் தோன்றிய கலைமானின் கவைத்த கொம்பு ஏறக்குறைய ஓராண்டுக் காலத்தில் விழுந்து விடு கின்றது. பின்னர்ப் புதிய கொம்பு முளைக்கின்றது. அதுவும் சிறிது காலத்தில் முற்றி உதிர்ந்து விடுகின்றது. இம் முறையாகக் கலைமான்கள் கொம்புகளை வளர்த்துப் பின்னர் உதிர்த்து விடுவதும் புதியதாக வளர்ப்பதும் இயற்கையில் காணும் மிக வியப்பான செய்தியாகும். இதே செய்தியைச் சங்கநூற் புலவர்கள் நுண்ணிய தாக ஆராய்ச்சி செய்து கண்டு தெளிவாகக் கூறி யுள்ளனர். புல் நிறைந்த செழிப்பான காலத்தில் கொம்புகள் நன்றாக வளர்கின்றன. பின்னர் வறட்சிக் காலத்தில் கொம்புகள் உதிர்ந்து விடுகின்றன. (Stags wear their antlers for a period after the rut and then shed them. The time of shedding varies with age.............. The period of horn growth everywhere coincides with the season when food is most abundant)

> "பொறிகிளர் உழுவைப் போழ்வாய் ஏற்றை
> அறுகோட்டு உழைமான் ஆண்குரல் ஓர்க்கும்"
>
> —அகம், 147.

> "உயங்குநடை மடப்பிணை தழீஇய வயங்குபொறி
> அறுகோட் டெழிற்கலை அருகயம் நோக்கித்"
>
> —அகம், 353.

"அறுமருப் பெழிற்கலை புலிப்பாற் பட்டெனச்!"

—புறம், 23.

"இருகுபுல் மேய்ந்த அறுகோட்டு முற்றல்
அள்ளல் ஆடிய புள்ளி வரிக்கலை"

—நற்றிணை, 265.

"கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலை
வறனுறல் அங்கோ டுதிர வலங்கடந்து
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை"

—அகம், 97.

'அறுகோடு' என்பதற்கு உதிரும் கோடு என்று உரை கூறியுள்ளனர். தானாக இற்று வீழும் கோட்டையே 'அறுகோடு' என்றனர். 'அறுகோட்டு முற்றல்' என்று நற்றிணைப் பாடல் (265) கூறுவது கூர்ந்து கவனிக்கத் தக்கது. முற்றிய கொம்பு அறுந்து வீழ்கின்றது என்பதைத் தெரிந்தே 'முற்றல்' என்று கூறினர். அகநானூற்றுப் பாடலும் (97) 'வறனுறல் அங்கோடு' என்று கூறுவதைக் கவனிக்கவேண்டும். வறண்டுபோன அழகிய கொம்பு உதிர என்று கூறியதைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். அகப்பாடலில் கொம்புதிர்ந்த காலத்தில் கள்ளியங் காட்டிடை வாழ்ந்த கலைமானைப் புலி கொன்றதாகக் கூறியுள்ளனர். வறண்ட மரம் போலிருப்பதாக அகநானூறு 395 ஆம் பாடலும் கூறியுள்ளது. ஆதலின் சங்கப்புலவர்கள் கலைமான்கள் கொம்புதிர்ப்பதை (Shedding of antlers) நன்கு தெளிவாக உணர்ந்து கூறியுள்ளனர் என்பதில் ஐயமில்லை. 'அறு கோடு' என்ற வழக்குக் கலைமான்கள் கொம்புதிர்க்கும் செயலுக்குச் சங்கப் புலவர்கள் வழங்கிய அறிவியற் சொல்லாகும்.

கொம்புகள் உதிர்ந்ததும் திரும்பவும் புதிய கொம்புகள் முளைக்கும். அவ்வாறு முளைக்கும் புதிய கொம்பு முதலில் தோலாலும் மெல்லிய மயிராலும் மூடப்பட்ட சிறிய மொண்ணைக் கொம்பாகத் தோன்றும். இக்கொம்பு மிக மிக மென்மையாகவும் மெத்தெனவும் 'வெல்வெட்' போன்று இருக்கும். இக்கொம்பை முட்டுவதற்கு பயன்படுத்துவதில்லை. இக்கொம்பிற்கு ஊறு ஏற்பட்டால் கொம்பு நன்கு வளராது. இந்தப் புதிய, இளைய கொம்பைப் பற்றியும் சங்க நூல்களில் நுண்ணிய செய்திகள் வருவது மிக்க வியப்பையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றது. (The newly-grown antler is encased in a thick soft skin called 'Velvet'. Its softness and its dense covering mat of fine hairs give it the face and the look of velvet.........when a deer's antlers have reached the limits of growth a ring of bony matter, the 'burr' forms just above the point where the antler unites with its base or pedicel. The ring gradually constricts and so cuts off the flow of blood. As the blood vessels dry up the velvet shrinks, dries and commences to peel off.........stripped of velvet in the solid horn.)

"புள்ளி அம்பிணை உணீஇய உள்ளி
அறுமருப்பு ஒழித்த தலைய தோல்பொதி
மறுமருப் பிளங்கோ டதிரக் கூஉஞ்"

அகம். 291.

உதிர்ந்த கொம்பை ஒழித்த தலையில் தோல் பொதிந்த புதுக் கொம்பான இளங்கொம்புகள் தானே அதிரும்படி கலைமான் கூவியதாக அகநானூறு 291ஆம் பாடல் கூறியுள்ள செய்தி மிக அரிய, பெரிய பொருள் பொதிந்த செய்தியாகும். அறு மருப்பை ஒழித்த தலை என்றதால் கலைமான் கொம்புதிர்த்த செய்தி தெளி

வாகக் கூறப்பட்டுள்ளது. கொம்புதிர்த்துத் தலையில் புதியதாக வளரும் கொம்பை 'மறு கொம்பு' என்பதைத் தெளிவாகக் காட்டவே 'மறுமருப்பு' என்றும், அந்தக்கொம்பு இளங்கொம்பு என்றும் கூறியுள்ளது. அந்த இளங்கொம்பு எவ்வளவு மென்மையானது என்றால் கலைமான் பெண்மானை அழைக்கக் கூப்பிடும் போது அதன் வலிய குரலோசையால் அந்த இளங் கொம்பு நடுங்கி அதிர்ந்தது. இதற்கு மேலும் தெளிவாக இந்த அறிவியற் செய்தியைக் கூறமுடியுமா? உதிர்ந்த கொம்பை, 'அறு மருப்பை' 'முற்றல்' என்று கூறிய அகநானூறு திரும்பி முளைக்கும் புதியகொம்பை 'மறுமருப்பை' 'இளங்கோடு' என்று கூறியதைக் காண்க. சங்கப் புலவர்கள் உவமைகள் வாயிலாகவே இயற்கைப் பொருட்களை, செய்திகளை, நிகழ்ச்சிகளை விளக்குவதில் மிக மிக வல்லவர்கள். கற்பனைகளில் உழன்று இல்லாததை ஒப்பிட்டுப் பொல்லாத மயக்கத்தில் நம்மை ஆழ்த்துவதில்லை. ஆதலின் புதியதாகத் திரும்பவும் முளைக்கும் மறுகொம்பு 'வெல்வெட்' போல மெத்தென்று இருப்பதை மற்றோர் அழகிய உவமையால் விளக்கிச் சென்றனர்.

"சுறவுக்கோட் டன்ன முள்ளிலைத் தாழை
பெருங்களிற்று மருப்பின் அன்ன அரும்புமுதிர்பு
நன்மான் உழையின் வேறெனத் தோன்றி
விழவுக்களம் கமழும் உரவுநீர்ச் சேர்ப்ப"

— நற்றிணை, 19.

தாழைக்கு ஆண்பூ தனியாகவும் பெண்பூ தனியாகவும் காணப்படும். ஆண்பூவின் மகரந்தத் தூள்கள் ஒன்று சேர்ந்து இணைந்து மெத்தென்று மென்மையாக நீண்டு இருக்கும். தாழையின் காய்ந்த ஆண்பூவைத் துணி

களுக்கு மணமூட்டப் பயன்படுத்துவது வழக்கம். இந்த ஆண்பூவை யானையின் கொம்புபோல அரும்பு முதிர்வ தாக நற்றிணை கூறுகின்றது. உருவில் யானையின் தந்தத்திற்கும் தாழையின் ஆண்பூவிற்கும் ஒப்புமை உண்டு. ஆனால் தாழையின் ஆண்பூ உருவிலும் அதை விட முக்கியமாக மென்மைத் தன்மையிலும் கலைமா னின் இளைய கொம்பிற்கு மிகுந்த ஒப்புமையுடையது. தாழையின் ஆண் அரும்பு மெத்தென்று "வெல்வெட்" போலத் தொட்டுப் பார்த்தால் தெரியும். அதே போன்றே உழைமானின் ஆணிற்கு இளங்கொம்பு இருப்பதால் இந்த அழகிய நுண்ணிய உவமை நற்றிணையில் கூறப்பட்டது. யானையின் தந்தம் போலத் தோன்றினும் அதைப்போல உறுதியின்றித் தாழை யின் ஆண் அரும்புபோல மெத்தென்று இருந்ததாக நற்றிணை கூறியதை உரைகூறியவர் பலர் அறிந்து கொள்ளவில்லை. தாழையின் ஆண் அரும்பே மிக்க மணமானதென்பதை உணர்ந்தே தாழையின் அரும்பு முதிர்ந்து விழவுக்களம் கமழ்ந்ததாகக் கூறப் பட்டுள்ளது. 'உழையின் வேறுபடத் தோன்றி' என்று வரும் பாடத்தைவிட 'உழையின் ஏறெனத் தோன்றி' என்ற பாடமே சிறந்தது.

கலைமானின் கொம்பை 'திரி மருப்பு' என்று சில பாடல்கள் அழைக்கின்றன.

"தெள்ளறல் பருகிய திரிமருப் பெழிற்கலை
புள்ளியம் பிணையொடு வதியும் ஆங்கண்"

— அகம், 184.

"பொரிமலர்ந் தன்ன பொறிய மடமான்
திரிமருப்பு ஏறொடு தேரல் தேர்க்குஉட"

— கலித்தொகை, 13.

கலைமானின் கொம்பு கவைத்து இருப்பதோடு சிறிது முறுக்கியும் இருக்கும். இதையே திரிமருப்பு என்று கூறியுள்ளனர். ஆனால் திரிமருப்பு என்ற வழக்கு இரலை யின மான்களின் கொம்பிற்கு உரியதாகச் சங்க நூல் களில் வழங்கியுள்ளது. இரலைக்கே திரிமருப்புச் சிறந்த தாகும். இரலையின மானிற்குச் சங்க இலக்கியத்தில் எந்தப் பாடலிலும் கவைத்த மருப்பிருப்பதாகக் கூறப் படவில்லை. இரலையின மான்கொம்பை 'நெறி கோடு' என்று கூறியிருப்பதற்கு எதிராக 'கவைக் கோடு' என்று கலையினமானின் கொம்பு விளக்கப்பட்டுள்ள தைக் காணலாம். கலைமானிற்குக் கொம்புகள் இணை கூடும் காலத்தில் (Mating season) பெண்மானைக் கவர் வதற்காகப் போரிட உதவுகின்றன. கொடிய விலங்கு களிடமிருந்து தப்ப ஓரளவு கலைமானின் கொம்புகள் உதவுகின்றன. உழைமானைப் பிறமான்வகைகளி லிருந்து எளிதில் பிரித்துணர அதன்புள்ளிகள் நிறைந்த உடல் தோற்றம் உதவுகின்றது.

"செந்நாய் வெரீஇய புகருழை யொருத்தல்"

— அகம், 219.

"புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி" — புறம், 152.

"தெள்ளறல் பருகிய திரிமருப் பெழிற்கலை
புள்ளியம் பிணையொடு வதியும் ஆங்கண்"

— அகம், 184.

"அள்ள லாடிய புள்ளி வரிக்கலை" — நற்றிணை, 265.

"உவரி யொருத்த லுழாது மடியப்
புகரி புழுங்கிய புயனீங்கு புறவிற்"

— குறுந்தொகை, 391.

"புள்ளி அம்பிணை உணீஇய உள்ளி
அறுமருப்பு ஒழித்த தலைய தோல்பொதி"

— அகம், 291.

"கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலை"

— அகம், 97.

"பொரிமலர்ந் தன்ன பொறிய மடமான்"

— கலி, 13.

"உயங்குநடை மடப்பிணை தழீஇய வயங்குபொறி
அறுகோட் டெழிற்கலை அறுகயம் நோக்கித்"

— அகம், 353.

புகர் உழை, புகர்க்கலை, புள்ளியம்பிணை, புள்ளி வரிக்கலை, புள்ளியம் பொறிக்கலை என்ற சொற்கள் உழைமானின் புள்ளியுடைய தன்மையையே சிறப் பாகக் கூறுகின்றன. புகருடையதால் 'புகரி' என்றே குறுந்தொகை அழைப்பதைக் காணலாம். பொரி மலர்ந்ததுபோல் பொறியுடைய மான் என்று கலித் தொகை கூறுகின்றது. வயங்கு பொறிகள் நிறைந்த உடல் என்று அகநானூறு கூறுகின்றது. பொறி போன்ற புள்ளிகள் வயிற்றின் அடிப்பகுதியில் நீண்ட கோடுகள்போல வரிகளாகக் காணப்படும் என்று விலங்கு நூலார் கூறுவர். (Its coat is rufous fawn profusely spotted with white in all ages. The lower series of spots on the flanks are arranged in longitudinal rows and suggest broken linear markings) 'புள்ளி வரிக்கலை' என்று நற்றிணை 265 ஆம் பாட்டில் குறிப்பாகப் புள்ளி களால் அமைந்தவரிகளைக் கூறியிருப்பதைக் காணலாம். புள்ளியும் கொம்பும் உடைய கலைமான் மிக அழகுடைய மானைக் காட்சியளிக்கின்றது 'எழிற்கலை

என்று சங்க நூல்கள் (அகம், 184-353; புறம், 23) கூறுகின்றன. "புள்ளியுழைமான் தோலொன்றுடுத்து" என்று அப்பரும் பாடியிருக்கிறார். கலைமானின் தோல் புள்ளிகளுடன் இருப்பது கலைமானுக்குப் பாது காப்பைத் தருகின்றதென அறிவியலார் கருதுகின்றனர். புள்ளிகள் நிறைந்த மரநிழலில் புள்ளிகள் நிறைந்த கலை மான்களைப் பிரித்துக் காண்பதரிது என்றும் சூழ் நிலையில் மறைந்து விடுகின்றன என்றும் கூறுவர். (A dappled coat is probably protective and makes for better concealment. They harmonize with the broken flecks of light and shade made by sunshine filtering through leaves) சங்கப் புலவர்களும் கலைமானின் புள்ளித்தோல் புள்ளி நிழல் போல இருந்ததைக் கூறியுள்ளனர்,

> "......................................... காலொடு
> கனையெரி நிகழ்ந்த இலையில் அங்காட்டு
> உழைப்புறத் தன்ன புள்ளி நீழல்
> அசைஇய பொழுதிற் பசைஇ வந்திவண்"
>
> —அகம், 379.

காற்றுக் கடுமையாக வீசி இலையுதிர்ந்த மரத்தின் நிழல் அசைபோட்டுக் கொண்டிருந்த புள்ளிமானின் புறம்போலிருந்ததாகக் கூறியது அரிய அழகியஉவமை. உழைமான்கள் திறந்த காடுகளிலும் நீர் அருகிலும் விரும்பி வாழும்.

> "படுமழை பொழிந்த பகுவாய்க் குன்றத்து
> உழைமான் அம்பிணை தீண்டலின் இழைமகள்
> பொன்செய் காசின் ஒண்பழந் தாஅங்
> குமிழ்தலை மயங்கிய குறும்பல் அத்தம்"
>
> — நற்றிணை, 274.

''அத்தக் குமிழின் கொடுமூக்கு விளைகனி
யெறிமட மாற்கு வல்சி யாகும்'' — நற்றிணை, 6.

''உழையணந்து உண்ட இறைவாங்கு உயர்சினைப்
புல்லரை இரத்திப் பொதிப்புறப் பசுங்காய்
கல்சேர் சிறுநெறி மல்கத் தாஅம்
பெருங்காடு இறந்தும் எய்தவந் தனவாய்

— நற்றிணை, 113.

''கவைத்தலை முதுகலை காலி னொற்றிப்
பசிப்பிணிக் கிறைஞ்சிய பருஉப்பெருந் ததரல்
ஒழியி னுண்டு வழுவி னெஞ்சிற்
றெறித்துநடை மரபிற்றன் மறிக்குநிழ லாகி
நின்று வெயில் கழிக்கு மென்ப''

— குறுந்தொகை, 213.

குறுமரமான குமிழ மரத்தின் கனியைக் கவர்ந்து விரும்பி உண்பதாகக் கூறியது உண்மைச் செய்தியே. உழைமான் அணந்து, அஃதாவது முன்கால்களை உயர்த்தி நின்று இலந்தை மரத்தின் கிளைக்களை வளைத்துச் சதை பொதிந்த இலந்தைக் கனிகளை உண்பதாகவும் உதிர்ப்பதாகவும் நற்றிணை 113 ஆம் பாடல் கூறும் இச்செய்தியும் உண்மையானதே, காலினால் உதைத்துப் பசியைப் போக்க மரக்கொம்பை வளைத்த தாகக் குறுந்தொகையும் கூறுகின்றது. உழைமான்கள் இலந்தைக் கனியையும் குமிழங்கனியையும் விரும்பி உண்பதை விலங்கு நூலாரும் பார்த்துள்ளனர்.

''................................புல்மறந்து
அலங்கல் வான்கழை உதிர்நெல் நோக்கிக்
கலைபிணை விளிக்குங் கானத் தாங்கண்'' —அகம், 129.

''பூழ்க்கா லன்ன செங்கா லுழுந்தின்
ஊழ்ப்படு முதுகா யுழையினங் கவரும்''

— குறுந்தொகை, 68.

உழுந்தின் காய்களை உழைமான்கள் உண்பதாகக் கூறு வதையும் காணலாம். புள்ளிமான்கள் புல்லை மறந்து மூங்கில் நெல்லையும் விரும்பி உண்ணும் என்று அகநானூறு 129 ஆம் பாடல் கூறுகின்றது. இதிலிருந்து உழைமான்கள் வயலில் நுழையுமென்பது விளங்கும். புள்ளிமான்கள் காடுகளில் உள்ள புல்வெளி களில் பத்திலிருந்து முப்பதுவரை கூட்டமாக, மந்தை யாக மேயும். இந்தக் கூட்டத்தை ' இனநிரை ' என்று அகப்பாடல் 249 கூறுகின்றது. புள்ளிமான்களில் ஆணும் பெண்ணும் குட்டிகளும் மந்தையாகக் காணப் படும் என்று கூறுவர். பெண் மான் குட்டிகளைப் பாது காக்கும் தாயுணர்ச்சி மிகுந்ததாகப் புறநானூற்றுப் பாடல் (23) குறிப்பிடுகின்றது. புள்ளிமான்களுக்கு மிகப் பெரிய எதிரிகள் புலியும் செந்நாயுமாகும். புலியின் முக்கிய உணவு புள்ளி மான்கள் என்று விலங்கு நூலார் கூறுவர்.

" அறுமருப் பெழிற்கலை புலிப்பாற் பட்டெனச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை "
— புறம், 23.

நீள்வரைச் சிலம்பின் இரைவேட் டெழுந்த
வாள்வரி வயப்புலி தீண்டிய விளிசெத்து
வேறுவேறு கவலைய ஆறுபரிந் தலறி
உழைமான் இனநிரை யோடுங்
கழைமாய் பிறங்கன் மலையிறந் தோரே "
— அகம், 249.

" புலிக்கோட் பிழைத்த கவைக்கோட்டு முதுகலை
மான்பிணை யணைதர வாண்குரல் விளிக்கும் "
ஐங்குறுநூறு, 373.

"திரங்குமரல் கவ்விய கையறு தொகுகலை
அரந்தின் ஊசித் திரள்நுதி அன்ன

*திண்பிலை எயிற்ற செந்நாய் எடுத்தலின்*
*வளிமுனைப் பூளையின் ஒய்யென்று அலறிய*
*கெடுமான் இனநிரை தரீஇய கலையே*
*கதிர்மாய் மாலை ஆண்குரல் விளிக்கும்''*

— அகம், 199.

*" ...... ...... ......வைவெயிற்று*
*ஊனசைப் பிணவின் உறுபசி களைஇயர்*
*காடுதேர் மடப்பிணை யலறக் கலையின்*
*ஒடுகுறங்கு அறுத்த செந்நா யேற்றை''*

— அகம், 285.

காட்டில் மந்தையாக மேயும் மான்களில் ஒரு மானைத் தீண்டிய ஓசை கேட்டதும் உழைமான் கூட்டம் வேறு வேறு காட்டு வழிகளில் விரைந்து ஓடுவதைக் கூறும் அகப்பாடல் (249) உண்மையான காட்சியைப் படம் பிடித்துக் காட்டுவது போல் கூறுவதைக் காணலாம். புலியிடமிருந்து தப்பிய ஆண்மான் தன் துணையை அழைக்க 'ஆண்குரல்' விளித்ததாகக் கூறுவதைக் காணலாம். அகநானூற்றுப் பாடல் 199 அரிய ஒரு செய்தியைக் கூறுகின்றது. காய்ந்துபோன மரல் பூண்டைத் தின்று கொண்டிருந்த கலைமான் கூட்டம் செந்நாய்கள் வேட்டை யாடத் தொடங்கியது கண்டு காற்றடித்துச் சிதறிய பூளைப்பஞ்சு போன்று பதறிப் பல திசைகளிலும் ஓடவே பிறகு அவைகளை ஒன்று சேர்க்கக் கலைமான் 'ஆண்குரல்' விளித்ததாகக் கூறியுள்ளது உண்மையான செய்தியாகவே தோன்றுகிறது. கலைமான்கள் செந்நாய்க் கூட்டத்திற்கு மிகவும் அஞ்சுமென்று விலங்கு நூலார் கூறுவர். 'கெடுமான் இனநிரை'' என்றது காணமற் போன கூட்டத்தையே குறிக்கின்றது. 'ஆண்குரல்' என்று கலைமானின் குரல்

சங்க நூல்களில் குறிப்பிடப்படுவதைக் கவனிக்க வேண்டும். கலைமான் தனது மந்தையைக் கூப்பிடும் 'ஆண்குரலை' புலி உற்றுக் கேட்பதாகவும் அதைக் கேட்டு வேட்டையாடுவதாகவும் சங்கநூல்கள் கூறுவது வேட்டையாளர் நேரில் கண்டு கேட்ட செய்தியாகும். வேட்டையாளர் கலைமானின் குரலைக் கேட்டு எழும் புலியின் உறுமற் குரலையும் கேட்டுப் புலி வேட்டைக்கு எழுவதுண்டு.

"பொறிகிளர் உழுவைப் போழ்வாய் ஏற்றை
அறுகோட்டு உழைமான் ஆண்குரல் ஓர்க்கும்"
— அகம், 147.

கலைமானின் இக்குரலை 'ஆண்குரல்'(Belling) என்று கூறும் வழக்கை உணராது நற்றிணை 174ஆம் பாடலில் 'ஆண் குரல்' என்று வரும் இடத்தில் மனிதனின் குரலாகக் கொண்டனர்.

"ஆளில் அத்தத் தாளம் போகந்தைக்
கோளுடை நெடுஞ்சினை ஆண்குரல் விளிப்பிற்
புலியெதிர் வழங்கும் வளிவழங்கு ஆரிடை"
— நற்றிணை, 174.

தாளிப்பனை காய்ந்து கிடந்த காட்டில் கலைமானின் 'ஆண்குரலைக்' கேட்டு அதை வேட்டையாடச் செல் லும் புலி அதற்கு எதிராக உறுமுக் குரலிடும் அரிய காட்டுவழி என்று நற்றிணை கூறுகின்றது. சங்க நூலில் வழங்கும் சொல்லாட்சியை நன்கு ஆராய்ந்து பொருள் கொள்ள வேண்டும். செந்நாய்கள் மிகக் கொடியவை. கலைமானின் தொடையை ஓட ஓடக் கவ்விக் கிழித்த தாக அகநானூற்றுப் பாடல் 285 கூறுவதை நேரிலே கண்டு வேட்டையாளர் எழுதியுள்ளனர். கலைமானின்

தொடையைக் கவ்வி அறுப்பதாகக் கூறியது இன்றும் காணக் கூடிய செய்தியாகும். கலைமான்கள் தம்மினத்தைச் சேர்க்க அழைக்கக் கூப்பிடும் குரலை நன்றாகக் கேட்டுத் தெளிந்தே சங்க நூற் புலவர்கள் அதைக் குறிப்பாகக் கூறியிருக்கின்றனர். விளிக்கும் என்ற சொல் கூப்பிடும் என்ற பொருளில் வழங்கியுள்ளது. இச் சொல் இன்றும் மலையாளத்தில் அதே பொருளில் பேச்சு வழக்கில் வழங்குகின்றது. கலைமான் பெண்மானிற்கு வெயில் காலத்தில் மரங்கள் வாடிய, காய்ந்த, சூழ்நிலையில் தான்நின்று நிழலைத் தந்ததாகவும் தெளிந்த நீரை விரும்பிப் பருகுவதாகவும் பாடியுள்ளனர்.

> "..........................கொழுங்கொடி முல்லை
> ஆர்கழல் புதுப்பூ வுயிர்ப்பி னீக்கித்
> தெள்ளறல் பருகிய திரிமருப் பெழிற்கலை
> புள்ளியம் பிணையொடு வதியும் ஆங்கண்"
>
> — அகம். 184.

நீரை மூடியுள்ள வீழ்ந்த முல்லைப்பூவை மூச்சுக்காற்றால் நீக்கித் தெளிந்த நீரைப் பருகும் கலைமான் என்று கூறியதைக் கவனிக்க வேண்டும். கலைமானை விலங்கு நூலார் Axis Axis என்று கூறுவர். உழைமானைத் துளுமொழியில் இன்றும் 'உளெ' என்றும் பார்ஜி (Parji) மொழியில் 'உளுப்' என்றும் கூறுகின்றனர். மலையாளத்தில் புள்ளிகளுடைய எலிமானை (Mouse deer) 'உழா மான்' என்று அழைக்கின்றனர். தமிழில் தற்காலத்தில் உழைமான் என்ற பெயரை மறந்துவிட்டுப் புள்ளிமான் என்றும் ஆண்மானைக் கலைமான் என்றும் அழைக்கின்றோம்.

கடமா (The Sambur)

கலைமா (Deer) னினத்தைச் சேர்ந்த வேறொருவகை மான் கடமா என்பதாகும். இந்த மான் காடுகள் நிறைந்த குன்றின் சாரல்களிலும், வயல் வெளிகளுக்கு அண்மையிலும் வாழும். கலைமானினத்தில் மிகப் பெரியது கடமாவாகும்.

"எற்படு பொழுதி னினந்தலை மயங்கிக்
கட்சிக் காணாக் கடமா னல்லேறு
மடமா ணாகுபிணை பயிரின் விடர் முழை
இரும்புலிப் புகர்போத் தோர்க்கும்
பெருங்க னாடனெம் மேறைக்குத் தகுமே"

— புறம், 157.

"வெட்சிக் கானத்து வேட்டுவ ராட்டக்
கட்சி காணாக் கடமா நல்லேறு"

— புறம், 202.

"கல்லென் கானத்துக் கடமா வாட்டி
எல்லு மெல்லின்று ஞமலியு மிளைத்தன"

— குறுந்தொகை, 179.

"கடமை மிடந்த துடவையஞ் சிறுதினைத்
துளரெறி நுண்டுகட் களைஞர் தங்கை"

— குறுந்தொகை, 392.

"கள்ளியங் காட்ட கடமா விரிந்தோடத்"

— திணைமாலை நூற்றைம்பது, 84.

"கடமா தொலைச்சிய கானுறை வேங்கை"

—நாலடி, 300-10.

மேலே காட்டிய ஒரு சில சங்கநூற் பாடல்களில் தான் கடமா கூறப்பட்டிருக்கின்றது. கடமா மலைப்பகுதியில் கானத்தில் வாழ்வதாகக் கூறப்படுகின்றது. கடமா சிறு

சிறு மந்தையாகக் காணப்படும் என்பர். ஒவ்வொரு மந்தையிலும் ஒருசில பெண்மான்களும் ஓர் ஏறும் காணப்படும். இதையே "இனந்தலை மயங்கிய கடமா னல்லேறு" என்று கூறுவதில் உணர்ந்து கொள்ளலாம். "கடமை மிடைந்த துடவையஞ் சிறுதினை" என்று சொல்லியிருப்பதைக் கொண்டு கடமா விளைநிலத்தில் புகும் என்று விலங்கு நூலார் கூறுவதைச் சங்கப்புலவர்கள் அறிந்திருந்தனரெனத் தெரிகின்றது. கடமானிற்கு எதிரி புலியாகுமென்பர். கடமானேறு தன் இனத்தை அழைக்கும் குரலைப் புலிப் போத்துக் கேட்கும் என்று புறம் 157 ஆம் பாடல் கூறுகின்றது. இந்த நிகழ்ச்சியை வேட்டையாளர் பலர் நேரில் கண்டுள்ளனர். கடமான் குரலைக் கேட்டுப் புலி இரவில் வேட்டையாடச் செல்வதைக் கவனித்து வேட்டையாளர் புலியையே வேட்டையாடுவதுண்டு. கடமானைக் கொன்ற புலியை நாலடியாரும் கூறியுள்ளது. கடமாவை விரும்பிக் கானவர் வேட்டை யாடுவதாகவும் கடமா அலைக் கழிக்கப் படுவதாகவும் கூறியுள்ளனர். கடமா அடர்ந்த காடுகளில் காணப்படுவதால் கடமாவைக் காட்டில் கண்டுபிடித்து வேட்டையாட மோப்ப சக்தியுடைய வேட்டை நாய்களைப் பயன்படுத்துவது இன்றும் வேட்டையாளர் கைக்கொள்ளும் வழக்கம். குறுந்தொகைப் பாடல் (179) கடமானை அலைக்கழித்துச் சோர்வுற்ற வேட்டை நாய்களைப் பற்றிக் கூறியிருப்பதைக் காண்க.

"கட்சி காணுக் கடமா னல்லேறு" என்று புறநானூற்றுப் பாடல் 157-ம், 202-ம் கூறுவதன் பொருளைப் பலரும் உணர்ந்திலர். கடமானின் ஆண்கள்

காட்டில் தங்களுக்கென்று உரிமை இருப்பதுபோல வைத்துக்கொள்ள இடத்தைத் தேடிப் போரிட்டு இடம் பிடித்துக் கொள்வதுண்டு என்பதை விலங்கு நூலார் கண்டுள்ளனர். (The males fight for territory. Each stag fights to obtain sole rights over same favoured Valley. The victor becomes the master of the hind which enters it. The Stag's harem is limited to a few hinds) இம்முறையாக இடந்தேடிக் கொண்ட கடமாவின் ஆணிற்குரிய காட்டுப்பகுதியையே 'கட்சி' என்று சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. கட்சி என்றால் பறவைகள் தங்கும் ஆடு என்றும் பொருள் உண்டு. கடமா ஏறு தனக்குரியதாக ஆக்கித் தங்கும் காடும் 'கட்சி' எனப்படும். இனம் இனமாகக் காணும் கடமான் கூட்டத்தில் மயங்கிய கடமான் நல்லேறு (Master of hinds) இருள்வரும் நேரத்தில் தன்னுடைய "கட்சி" (Territory) தெரியாது மயங்கியதாகப் புறம் 157 ஆம் பாடல் கூறியதைக் காணலாம். வேட்டுவர் வெட்சிக் காட்டில் கடமாவை அலைக்கழித்ததால் தன்னுடைய கட்சியைக் காணாது கடமா நல்லேறு மயங்கியதாக மற்றொரு புறப்பாடல் கூறுவதையும் காணலாம். கட்சி என்ற சொல் அரிய அறிவியற் சொல்லாகச் சங்க நூல்களில் வழங்குவதைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். இனம் இனமாக 5 முதல் 10 வரை கடமை மான்கள் காணப்படுவதாகக் கூறுவர். 'இனந்தலை மயங்கி' என்று கூறப்பட்டிருப்பதைக் காண்க. கலைமான் இறைச்சிக்காக மனிதர் நாய்களை வைத்து வேட்டையாடிக் கொன்று உண்பர். இயற்கையாக அமைந்த காவற்காடுகளில் காணப்பட்டதால், மிளையில் காணப்பட்ட விலங்கை 'மிளா' என்றழைத்

தனர். கடமை என்றும் கடமான் என்றும் தற் காலத்தில் அழைப்பர். கன்னடத்தில் 'கடத்தி' என்றழைக்கப்படும். தமிழ்நாட்டில் உள்ள மிகப் பெரிய மான் கடமாவாகும். இதைக் காட்டுமான் என்றும் கூறுவர். விலங்கு நூலார் கடமானை Rusa unicoler nigar என்று அழைப்பர்.

தமிழ் நாட்டில் வாழ்ந்த மான்களின் முக்கியமான எல்லா மான் வகைகளையும் சங்க நூல்கள் கூறுவது வியப்பைத் தருகின்றது. இரலை (Indian Antilope), நவ்வி (Indian gazelle), மரையான் (Blue Bull), உழை (Spotted Deer), கடமா (Sambur) ஆகிய முக்கிய மான் வகைகள் சங்க இலக்கியங்களில் தனித் தனியாகக் கூறப் பட்டிருக்கின்றன. ஆனால் பிற்காலத்து இலக்கியங் களிலும் நிகண்டுகளிலும் இவைகளைப் பிரித்துணராது குழப்பிவிட்டிருப்பதைக் காண்கிறோம். சங்க காலத்தில் இருந்த மானினங்கள் விலங்கு நூற்படி இரு இனங்க ளாக அடங்கும் என்று ஏற்கெனவே விளக்கப் பட்டிருக்கின்றது. இரலை மானினம் என்பது ஓரினம். இதில் இரலை, நவ்வி, மரையான் வகைகள் அடங்கும். கலை மானினம் என்பது மற்றோரினம். இதில் உழை, கடமா வகைகள் அடங்கும். தொல்காப்பியத்தின் வழி இந்த மானினங்களைப் பழந்தமிழர் எந்த முறையில் உணர்ந்திருந்தனரென்று ஆராய்வது பயன் தரும். தொல்காப்பிய மரபியலில்,

> " யாடுங் குதிரையு நவ்வியும் உழையும்
> ஓடும் புல்வா யுளப்பட மறியே "

என்று வரும் சூத்திரத்திற்கு (தொல்-மரபு-கஉ) உரை கூறும் பேராசிரியர் நவ்வியும் உழையும் புல்வாயும்

அடங்குமன்றே அவற்றை மூன்ருக ஓதியதேன் என்று தாமே கேள்வி கேட்டு விடை கூறுவது போலப் புல்வாயில் மடனுடைய நவ்வி யெனவும் இடைநிகரன உழை யெனவும் கொள்க என்று எழுதுகிருர். குதிரை யானை போன்று முற்றிலும் வேற்றுமை கொண்ட விலங்கல்லவாயினும், புல்வாய், நவ்வி, உழையென்பன மானினத்தில் அடங்குமென்றும் மூன்றையும் ஒரே வகை மாணகவும் பேராசிரியர் கருதினரென்றும் தெரிகிறது. ஆனல் சங்க நூல்களில் கூறப்படும் செய்திகளிலிருந்து சங்கப்புலவர்கள் மூன்றையும் ஒன்ருகக் கருதவில்லை என்பது தெளிவு. மானில் மடப்பமுடையதை நவ்வி என்றும், அதற்கடுத்தது உழை என்றும், பெரியது புல்வாய் என்றும் பேராசிரியர் கொண்டனரென்று தெரிகின்றது. தொல்காப்பியமோ சங்க இலக்கியமோ பேராசிரியர் சொல்வதற்கு எந்தச் சான்றையும் தரவில்லை. புல்வாய் என்பது இரலை இன மான்வகையை உணர்த்துவதைப் பேராசிரியர் உணரவில்லை. தொல்காப்பியர் இரலையும் நவ்வியும் உழையும் ஆகிய மூன்றுவகை மான்களையும் தனியே கூறினர். 'ஓடும் புல்வாய்' என்றது இரலை மானையே யாகும். இரலை என்பது அந்த மான்வகையின் ஆணிற்கே சிறப்புப் பெயராக வழங்குமாதலின் அதன் பொதுப் பெயரான 'புல்வாய்' என்ற சொல்லைப் பயன்படுத்தி யிருக்கிருர். ஆதலின் தொல்காப்பியர் சங்கநூல்களில் மிகக் கூடுதலான பாடல்களில் கூறப்படும் இரலைமானை மறந்து மரபு-கஉஆம் சூத்திரத்தில் பாடினர் என்று கொள்ளவியலாது. சங்கநூல்களிலே இரலைமானின் குட்டியை மறியென்று கூறும் வழக்குப் பாடல்களில் பயின்ற வழக்கமாக உள்ளது. ஆதலின்

தொல்காப்பியச் சூத்திரம் மரபு—உக கூறும் 'புல்வாய் இரலைமானே என்பது தெளிவாகின்றது. சங்கநூல்களில் சில பாடல்களில் புல்வாய் என்றே வழங்குகின்றது. சங்கப் பாடல்களில் கூறப்படும் புல்வாய் அதற்குச் சொல்லப்படும் விளக்கத்திலிருந்து இரலை வகைமானே என்பதை வலியுறுத்துகின்றது.

" முல்லைப் படப்பைப் புல்வாய் கெண்டும்
காமர் புறவி னதுவே "

—அகம், 284.

" அதளெறிந் தன்ன நெடுவெண் களரின்
ஒருவ னட்டும் புல்வாய் போல "

—புறம், 193.

" கானன் மேய்ந்து வியன்புலத் தல்கும்
புல்வா யிரலை நெற்றி யன்ன "

— புறம், 374.

" புலப்புல்வாய்க் கலைப்பச்சை "

— புறம், 166.

முல்லை நிலத்திலும் நெடுவெண் களரிலும் வியன் புலத்திலும் கூறப்பட்ட புல்வாய் இரலைவகை மானே என்பதில் சிறிதும் ஐயமில்லை. புறநானூற்றுப் பாடல் (374) 'புல்வாயிரலை' என்று தெளிவாகப் புல்வாயின் ஆணாகிய இரலைமானைக் குறிப்பிட்டுள்ளது. 'புலப்புல் வாய்க்கலை' என்று புறப்பாடல் 166 குறிப்பிடுவதும் புல்வாயின் ஆணான இரலைமானையாகும். " இரலையும் கலையும்புல்வாய்க்குரிய"என்று தொல்காப்பிய மரபியல் கூறுவதைக் கவனிக்க வேண்டும். புல்வாயின் ஆணை இரலை யென்ற பெயராலும் கலையென்ற பெயராலும் அழைக்கலாம் என்று கூறுகின்றது. ஆனல் அதற்

கடுத்த சூத்திரம் கலையென்ற பெயர் உழைக்கும் உரித்து என்று கூறுகின்றது. இதிலிருந்து உழை வேறு, புல்வாய் வேறு உழையானது புல்வாயுள் அடங்காது என்று தெளியலாம். சங்க இலக்கியங் களில் கலையென்ற சொல் உழைக்கே பல பாடல்களில் வழங்கி வந்திருப்பதைக் காணலாம்.

'' புல்வாய் புலியுழை மரையே கவரி
சொல்லிய கராமோ டொருத்த லொன்றும்.''

—தொல்-மர-௬௬.

'' பன்றி புல்வா யுழையே கவரி
யென்றிவை நான்கு மேறெனற் குரிய.''

—தொல்-மர-௬௧.

'' புல்வாய் நவ்வி யுழையே கவரி
சொல்வாய் நாடிற் பிணையெனப் படுமே.''

—தொல்-மர-௫௮.

மேலே காட்டியுள்ள தொல்காப்பியச் சூத்திரங்களில் புல்வாய் உழையினின்று வேருகவும் மரை, நவ்வி ஆகியவைகளினின்று வேருகவும் கருதப்பட்டிருப் பதைக் காணலாம். சங்ககாலத்தில் எளிதில் எங்கும் காணப்பட்ட மான் இரலையேயாகும். சங்க இலக்கியத்தில் பல பாடல்களில் முக்கியமாகக் கூறப் பட்ட மானும் இரலையே யாகும். இதையே தொல் காப்பியர் மரபியற் சூத்திரங்களில் 'புல்வாய்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்ருர் என்பது தெளிவு. இதை யுணர்ந்தே திவாகர நிகண்டும் 'இரலை புல்வா யாகலு முரித்தே' என்று கூறிற்று. தொல்காப்பியர் 'ஓடும் புல்வாய்' என்று கூறியதிலும் பொருள் உள்ளது. மானினங்களில் மிக வேகமாக ஓடக்கூடியது புல்வாய்

எனப்படும் இரலையே. இதன் விரைவு மணிக்கு 50 அல்லது 60 மைல் என்று விலங்கு நூலார் கூறுவர். இத்தகைய விரைவுடைய புல்வாயை 'ஓடும் புல்வாய்' என்று கூறியது பொருத்தமே. 'உயக்கொண்டு புல்வாய் வழிப்படுவாரில்' என்று பழமொழி நானூறு கூறுவது புல்வாயின் ஓட்டம் கருதியேயாகும். 'பாயும் புலி முன்னர்ப் புல்வாய்க்குப் போக்கில்' என்று பழமொழி நானூறு கூறுவது புள்ளிப்புலியின் (Leopard) வேகத்திற்கு புல்வாயின் ஓட்டம் தாங்காது என்று கருதியேயாகும். இதில் வரும் புலியை வரிப்புலி என்று கருதித் [1] தமிழ்நாட்டு விலங்கு நூலறிஞர் ஒருவர் வரிப்புலி அடர்ந்த காட்டில் வாழ்வதாலும் புல்வாய் திறந்த புல்வெளியில் வாழ்வதாலும் இப்பழமொழிப் படி புலி புல்வாயைக் கொல்ல வாய்ப்பு எழாது, ஆதலின் இப்பழமொழி பொருத்தமன்று எனக் கூறினர். புல்வாயைக் கலைமான் என்று கொண்டது தவறு. இங்குக் கூறின புலி வரிப்புலியன்று, சிறுத்தைப்புலி யென்பதை அவர் உணரவில்லை. சிறுத்தைப்புலி (Leopard) புல்வாயைக் கொல்லத்தக்க சூழ்நிலையில் வாழும். சங்க இலக்கியங்களில் புல் வாயைப் (Black Buck) புலி கொன்றதாகச் செய்தி இல்லை. இரலையைக் கொன்றதாகவும் இல்லை. ஆனால் கலைமானைக் (Spotted deer) கொன்றதாகப் பல செய்திகள் உள்ளன. புலி வாழும் சூழ்நிலையில் கலை மானிருப்பதையும் புலியால் கொல்லப்படுவதையும் நன்கு கண்டு உணர்ந்தே சங்க நூலார் இந்தச் செய்தியைப் பல பாடல்களில் பாடினர். புல்வாயைத் (Black Buck) திறந்த வெளியில் ஒருவன் துரத்திப்

1. M. Krishnan.

பிடிப்பது எளிதன்றாதலால் 'ஒருவனுட்டும் புல்வாய் போல ஓடியுய்தல்' என்று புறநானூறு கூறிற்று. ஆனால் இருவர் மூவர் துரத்தினால் பிடிக்க முடியும். காரணம் நேராக ஓடாமல் புல்வாய் திடீரென்று திசை மாற்றிக் குறுக்கே பாயும் குணமுடையது. ஆதலின் ஒருவனுட்டும் புல்வாய் ஓடித் தப்பித்துவிடும் என்றனர். சங்ககாலத்தில் புல்வாய்களைத் துரத்திப் பிடிப்பதும், கலைமான்களை மரத்தின்மேல் ஏறி மடக்கிப்பிடிக்கும் வழக்கமும் (நற்றிணை, 111) இருந்ததாகத் தெரிகின்றது. பழகிய கலைமானை வைத்து மான்களைப் பிடிக்கும் வழக்கத்தைக் கானவர் பயன்படுத்தினர். இரலை யென்ற சொல் இரலைமானின் வகைகளையே குறித்துப் பொதுப்பெயராக வழங்கியிருக்கிறது என்பதை 'இரலை மானேறு' என்ற சொல்லாட்சியே காட்டுகின்றது. இதைப் பேராசிரியர் தொல்காப்பிய மரபியல் சூத்திரம் 589இல் குறிப்பிடுகின்றார். இரலை என்ற ஆண்பாற் பெயர் சாதிப் பெயராக விதந்து கூறப்படும் என்று பேராசிரியர் கொண்டதிலிருந்து இது விளங்கும். புல்வாய், உழை ஆகியவற்றின் ஆண் ஏறெனக் கூறப் படும் என்று கூறிய மரபியலில் "எருமையும் மரையும் பெற்றமு மன்ன" (591) என்று கூறப்படுவதைக் காணலாம். எருமையும் மாடும் மரையும், புல்வாய்க்கும் உழைக்கும் வழங்கிய ஏறென்ற ஆண்பாற் பெயரைப் பெறும் என்று கூறுவதைக் காண்கிறோம். மரையை எருமையுடனும் மாட்டுடனும் சேர்த்துக் கூறப் படுவதைக் காணும்போது மரையைப் பசுவுடன் மக்கள் ஒப்பிட்டுக் கருதியது விளங்குகின்றது. மாடு ஆன் எனப்படும். கருமையான ஆன் காரான் எனப்பட்டது. மரையுடைய ஆன் மரையான் எனப்பட்டது. மரை

யாணைப் பசுவென இந்தியாவில் இன்றும் கருது கின்றனர்.

மரையை மாட்டிற்கே நெருங்கிய உறவுடையதாகக் கருதினது மரையான் என்ற பெயரே விளக்குகின்றது.

"பெற்றமு மெருமையு மரையு மாவே"

—தொல்-மர-சுக.

"எருமையும் மரையும் பெற்றமு நாகே"

—தொல்-மர-சுஉ.

ஆனும் காரானும் மரையுடன் ஆவென்ற பெயர் பெறும் என்றும், நாகென்ற பெயர் பெறும் என்றும் மரபியல் கூறுவதிலிருந்து மரையை எந்த அளவு மாட்டுடனும் எருமையுடனும் நெருங்கிய உறவுடைய தாகக் கருதினர் என்பது தெரிகின்றது. அதனால்தான் மரைக்கு மரையா என்றும் மரையான் என்றும் பெயரிட்டழைத்தனர்.

"ஒட்டகங் குதிரை கழுதை மரையிவைப்
பெட்டை யென்னும் பெயர்க்கொடைக் குரிய"

—தொல்-மர-௫ரு.

மேற்கூறிய சூத்திரத்தில் குதிரை, கழுதையுடன் மரையும் பெட்டையென்ற பெயர் கொள்ளும் என்றது மரை ஒருபால் குதிரையைப் போலிருப்பதன் காரண மாகவே. கானக் குதிரையென்று சூடாமணி நிகண்டு கூறுவதையும் காணலாம். மரபியலில் வழங்கிய பெயர்கள் புறத்தோற்றத்தில் கண்ட ஒப்புமைக் காரணமாகவே வழங்கி வந்ததாகத் தெரிகின்றது. மரை விலங்குநூலார் ஆராய்ச்சிப்படி இரலை மானினத் (Antilopes) தைச் சார்ந்ததாக இருக்கலாம். ஆனால் மரபியலின்படி மரை குதிரைக்கு ஒரு சார்புடைத்தாயும் மாட்டிற்கு நெருங்கிய உறவுடைய

தாகவும் புறத்தோற்றத்தின் அடிப்படையாக அக் காலத்தில் கருதப்பட்டது தெரிகின்றது. கடமா உழை யினத்தைச் சார்ந்ததாகக் கருதப்படாமல் புறத் தோற்றத்தின் அடிப்படையாகக் குதிரை, கழுதை யுடனும் ஆட்டுடனும மரையுடனும் ஒத்ததாகக் கருதப்பட்டதாகத் தெரிகின்றது. ஆனால் தற் காலத்தில் அறிவியல் அடிப்படையாக மரையை இரலை யினத் (Antilopes) துடனும் கடமா (Deer) வைக் கலை மானினத்துடனும் சேர்த்திருக்கின்றனர். தமிழ் நாட்டில் காணப்படும் மான்வகைகளுள் ஐந்து வகை களைச் சங்கப்புலவர்கள் நேரில் கண்டு பாடியுள்ளனர். தமிழ் நாட்டில் சிலவிடங்களில் காட்டுப் புல்வாய் என்று இரலையையும் காட்டுமிளா என்று கடமாவையும் காட்டுமான் என்று கலைமானையும் அழைக்கின்றனர். ஆனால் தற்பொழுது'காட்டாடு' என்று அழைக்கப்படும் மான்வகையைப் பற்றி (Jungle Sheep) யாதொரு செய்தியும் காணப்படாதது வியப்பைத் தருகின்றது. மற்றும் கேழல்மான் அல்லது எலிமான் என்றழைக்கப் படும் மிகச் சிறிய மானைப்பற்றியும் (Mouse deer) நான்கு கொம்புகளையுடைய (The four - horned antilopes) மானைப்பற்றியும் யாதொரு செய்தியும் இல்லை. ஆனால் இந்த மூன்றுவகை மான்களும் தமிழ்நாட்டில் காணப் படுகின்றன. இவைகளைப் பிரித்துணரவில்லை என்று தெரிகின்றது. இதுகாறும் விளக்கப்பட்டதிலிருந்து சங்ககாலப் புலவர்கள் எந்த அளவு அக்காலத்திலேயே ஐந்துவகை மான்களையும் ஆராய்ந்து அறிந்திருந்தனர் என்பதை எண்ணும்போது அவர்களுடைய அறி வாற்றலை வியக்காதிருக்க முடியாது.

## ரு. கேழல்

(The Indian wild Boar)

சங்க இலக்கியங்களில் காட்டுப் பன்றிக்குக் கேழல் என்ற பெயரே பல பாடல்களில் வழங்கியுள்ளது. காட்டுப் பன்றியைப் பற்றிச் சங்க இலக்கியத்தில் வரும் செய்திகளிலிருந்து காட்டுப் பன்றியின் உருவம், நிறம், குணம் ஆகியவற்றை நன்கு உணரலாம். காட்டுப்பன்றியை வீட்டுப்பன்றியிலிருந்து பிரித்துணர உதவுவது முக்கியமாக அதன்முதுகிலும் கழுத்திலும் உள்ள கதிர் போன்று நீட்டியுள்ள (Crest or mane of black bristles) மயிர்க் கற்றையே யாகும். இந்த மயிரொழுங்கைப் 'பிணர்ச்சுவல்' (நற்றிணை, 336), 'பிணர் எருத்து' (மலைபடுகடாம், வரி 246) 'பருஉமயிர் எருத்து' (நற்றிணை, 98) என்று கூறப்பட்டுள்ளது. காட்டுப் பன்றியின் சுவல்மயிர் (Crest) பனைமரத்தின் கம்பிபோல் உள்ள செறும்போடு ஒப்பிட்டுக் கூறப் பட்டது மிகப்பொருத்தமான அழகிய உவமையாகும்.

"இரும்பனஞ் செறும்பி னன்ன பருஉமயிர்ச்
சிறுகட் பன்றி வருதிறம் பார்க்கும்"

—அகம், 277.

பனைமரத்தின் செறும்பும் காட்டுப்பன்றியின் கழுத்து மயிரும் உருவிலும் நிறத்திலும் ஒன்றேபோலத் தோன்றுவது ஒப்பிட்டுப் பார்த்தவர்க்கே தெரியும்.

"வெதிர்வேர் அன்ன பருஉமயிர்ப் பன்றி"

—அகம், 178.

"எய்ம்முள் அன்ன பரூஉமயிர் எருத்தின்
செய்ம்ம் மேவல் சிறுகட் பன்றி"

—நற்றிணை, 98.

"பன்மயிர்ப் பிணவொடு கேழலுகள"

—மதுரைக் காஞ்சி, 174.

மூங்கிலின் வேர் போன்று தடித்தமயிர் என்றது பொருத்தமான உவமம். முள்ளம்பன்றியின் முள் போலக் கழுத்தில் பருத்த மயிர் என்று கூறுவதையும் கவனிக்கவேண்டும். மயிர்க்கற்றையைப் 'பன்மயிர்' என்றும் குறிப்பிட்டுள்ளனர். காட்டுப்பன்றியின் பெண்ணிற்கு நான்கு காம்புகள் உள்ள மடி இருப்பதாகக் கூறியிருப்பதையும் காணலாம். தோல் போன்ற முலையென்று மடியின் தோற்றத்தை விளக்கியிருப்பதையும் கவனிக்க வேண்டும்.

"நான்முலைப் பிணவல் சொலிய கானொழிந்து"

—அகம், 248.

"பிணர்ச்சுவல் பன்றி தோன்முலைப் பிணவொடு"

—நற்றிணை, 336.

"கானப் பன்றித் தோன்முலைப் பிணவல்"

—பெருங்கதை, 52: 51.

விலங்கு நூலார் காட்டுப்பன்றிக்கு நான்கு காம்புகள் (Fout teats) உள்ள மடியுள்ளதைக் குறிப்பிட்டுள்ளனர்.

"இளம்பிறை யன்ன கோட்ட கேழல்"

ஐங்குறுநூறு; 264.

"பிறையுறழ் மருப்பிற் கடுங்கட் பன்றி"

—அகம், 322.

"வளைமருப்பு உறழும் உளைநெடும் பெருங்காய்
நனைமுதிர் முருக்கின் சினைசேர் பெருங்கல்"

—அகம், 223.

"வில்லின் தந்த வெண்கோட்டு ஏற்றை"

—நற்றிணை, 336.

"வயிரத்து அன்ன வையேந்து மருப்பின்"

—அகம், 178.

"புகழா வாகைப் பூவின் அன்ன
வளைமருப் பேனம் வரவுபார்த் திருக்கும்"

—பெரும்பாண், வரி-109-10.

சங்க இலக்கியத்தில் கோடு என்றும் மருப்பு என்றும் காட்டுப் பன்றியின் கடைவாய்ப் பற்கள் (Tushes) அழைக்கப்படுகின்றன. அகத்திப்பூவின் வளைந்த வெண்மையான பூப்போல் காட்டுப் பன்றியின் கொம்பு காணப்பட்டதாகக் கூறியது மிகவும் பொருத்தமான உவமையாகும். பிறைபோன்று இருப்பதாகவும் வயிரம் போல உறுதியாக இருப்பதாகவும் கூறியிருப் பதையும் கவனிக்கலாம். முருக்கமரத்தின் பூப்போல வளைந்து இருப்பதாகக் கூறியது பொருத்தமானதாகும். ஆனால் 'உளை நெடும் பெருங்காய்' என்று அகப் பாடலில் (223) சில பதிப்பாசிரியர்கள் பாடங் கொண்டது உவமைக்குப் பொருத்த மற்றது. முருக்க மரத்தின் காய் வளைந்து புரிவுடையது. அதைக் காட்டுப்பன்றியின் கொம்பிற்கு ஒப்புமை கூற முடியாது. ஆதலின் காட்டுப் பன்றியின் கொம்பிற்கு முருக்கம் பூவே பொருத்தமான உவமையாகும். இதை உணராத சில பதிப்பாசிரியர்கள் "உளை நெடும் பெருங்காய்' என்று பாடங்கொண்டது தவறு. 'உளை

நெடும் பொங்கர்' என்றே பாடங் கொள்ளவேண்டும். 'உலை' என்ற சொல் பூவிற்கே அடைமொழியாக வரும். 'பொங்கர்' என்ற சொல் முருக்கம் பூவிற்கே அடைமொழியாக வரக்கூடியது. ஏனெனில் சில திராவிட மொழிகளில் 'பொங்கரா' என்ற சொல் முருக்க மரத்தை அல்லது கலியாண முருக்க மரத்தையே (கவிர்) குறித்து வழங்கியதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். அழகிய பூங்கொத்திற்குப் 'பொங்கர்' என்ற சொல் சங்க இலக்கியத்தில் வழங்கி வந்துள்ளது. காட்டுப் பன்றியின் தலையானது கீழே கவிந்து உரல்போன்று (an elongate head with an abruptly truncated snout) காணப்படுவதாகச் சங்க நூல்கள் கூறுவது அருமையான விளக்கமாகும்.

> "சேறாேன் அகழ்ந்த மடிவாய்ப் பயம்பின்
> வீழ்முகக் கேழ லட்ட பூசல்"
>
> —மதுரைக், 294-5.

> "புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக்
> கேழற் பன்றி வீழ வயல"
>
> —புறம், 152.

காட்டுப் பன்றியின் முகம் 'வீழ்முகம்' என்றும் உரல் போன்ற தலை யென்றும் கூறியிருப்பதை நோக்குக. உரலிற்கு ஒரு பக்கம் அகன்றும் ஒரு பக்கம் குவிந்து சிறுத்தும் காணப்படுவதைப்போல் பன்றியின் தலை காணப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது அரிய விளக்கமாகும்.

நன்றாக வளர்ந்த காட்டுப் பன்றியின் நிறம் கருமையாக இருக்கும். சேற்றிலே புரண்டு மகிழும் காட்டுப் பன்றி கரியதாகக் காணப்படுவது இயற்கையே.

"நன்பொ னன்ன புனிறுதீ ரேனல்
கட்டளை யன்ன கேழன் மாந்தும்"
...ஐங்குறுநூறு, 263.

"வெதிர்வேர் அன்ன பரூஉமயிர்ப் பன்றி
..........................................
..........................................
வன்பிணி யவிழ்ந்த வெண்கூ தாளத்து
அலங்குகுலை யலரி தீண்டித் தாதுகப்
பொன்னுரை கட்டளை கடுப்பக் காண்வர"
—அகம், 178.

"சிறுகட் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்
சேறுடு இரும்புறம் நீறுடு சிவண"
—நற்றிணை, 82.

"இருடுணிந் தன்ன வேனங் காணின்"
—மலைபடுகடாம், வரி. 247.

"இளம்பிறை யன்ன கோட்ட கேழல்
களங்கனி யன்ன பெண்பாற் புணரும்"
—ஐங்குறுநூறு, 264.

பொன்னைத் தீட்டிப் பார்க்கும் கட்டளைக்கல் போன்று கரிய நிறத்துடன் காட்டுப்பன்றி காணப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. கூதாளத்தின் பொன்னிறத்தாது விழுந்து காணப்பட்ட கரிய காட்டுப் பன்றியின் நிறத் தோற்றம் பொன்னுரைத்த கட்டளைக்கல் போன்று இருந்ததாக அகநானூறு (178) கூறுவது அழகிய உவமை. களாப்பழம் போலக் கரியதாகவும் இருளைத் துணித்து வைத்தாற் போல இருந்ததாகவும் கூறப் பட்டுள்ளது. காட்டுப் பன்றிகள் பொதுவாகக் கருமை யாகவும் சாம்பல் நிறம் கலந்து காணப்படும் என்று விலங்கு நூலார் கூறுவர். இதையே 'சேறுடு இரும் புறம் நீறுடு சிவண' என்று கூறப்பட்டுள்ளது.

காட்டுப் பன்றியின் உணவுப் பழக்கத்தையும் குறிப்பாக எடுத்துக்கூறியுள்ளனர். காட்டுப் பன்றியின் உணவு பெரும் பாலும் காட்டுக்கிழங்குகளே யாகும், மற்றும் வயலில் நுழைந்து விளைந்த பயிரையும் விரும்பித் தின்னும். இதனால் காட்டுப் பன்றியை மனிதருக்குத் தீங்கிழைக்கும் விலங்காகக் கருதுவர். தனது கூரிய முகத்தாலும், வளைந்த கொம்புப் பற்களாலும் (Tushes) கிழங்குகளைத் தோண்டியும் விளைச்சலை அழித்தும் தின்னும்.

"கிழங்ககழ் கேழ லுழுத சிலம்பில்
தலைவிளை கானவர் கொய்தனர் பெயரும்"

—ஐங்குறுநூறு, 270.

"கேழ லுழுத விருஞ்சேறு கிளைப்பின்
யாமை யீன்ற புலவுநாறு முட்டையைத்"

—புறம், 176.

"கறிவள ரடுக்கத்து மலர்ந்த காந்தட்
கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக் கிளையொடு
கடுங்கட் கேழ லுழுத பூழி
நன்னாள் வருபத நோக்கிக் குறவர்
உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை"

—புறம், 168.

"கேழ லுழுத கரிபுனக் கொல்லையுள்"

— ஐந்திணை எழுபது, 11.

கிழங்குகளைத் தோண்டி எடுப்பதற்காகப் பன்றிகள் உழுத நிலத்தில் ஆமைமுட்டைகளைக் கண்டு எடுத்த தாகவும், அதே நிலத்தில் கானவர் உழாது தினை விதைத்து அறுவடை செய்த தாகவும் புறநானூறு கூறுகின்றது. மன்பதையின் பழையவரலாற்றை

ஆராய்ந்த அறிஞர் ஒருவர் (Dr. Eherenfels) பழங் காலத்துத் தாய்வழித் தாயக்குடிகள் தாங்களே உழாது பன்றிகள் உழுதநிலத்தில் தினைவிதைத்து அறுவடை செய்ததாகக் கூறுகின்றார். இச்செய்தி யையே புறநானூறு கூறுவது போலத் தெரிகின்றது. உழவர் உழாது பெற்ற பயனைப் போலன்றி (Produce collecting) கேழலுழுத நிலத்தில் வித்திப் பெறும் பயனையே புறநானூற்றுப்பாடல் 168 கூறு கின்றது. உழவுத் தொழிலே இப்பழக்கத்திலிருந்து தோன்றியதாக மன்பதைவரலாற்று அறிஞர்கள் (Anthropologists) கூறுவர். சங்க இலக்கியத்தில் பலபாடல் களில் மலையிலும் காட்டருகிலும் இருந்த விளைச்சலில் புகுந்து தினையையும் ஐவன நெல்லையும் உண்பதாகக் கூறப்பட்டுள்ளது. விளைச்சலைத் தின்னும் பன்றியின் விருப்பத்தை நன்கு உணர்ந்தே 'செய்ம்ம்மேவல் சிறுகண்பன்றி' என்று நற்றிணை (98) கூறுகின்றது.

"பிணர்ச்சுவல் பன்றி தோன்முலைப் பிணவொடு
கணைக்கால் ஏனல் கைம்மிகக் கவர்தலின்"

—நற்றிணை, 336.

"தினையுண் கேழல் இரியப் புனவன்
சிறுபொறி மாட்டிய பெருங்கல் அடாஅர்"

—நற்றிணை, 119.

"சிறுகட் பன்றிப் பெருஞ்சின வொருத்தல்
துறுகல் லடுக்கத்து வில்லோர் மாற்றி
ஐவனங் கவருங் குன்ற நாடன்"

— ஐங்குறுநூறு, 267.

"கேழ லுழுதெனக் கிளர்ந்த வெருவை
விளைந்த செறுவிற் றோன்று நாடன்"

—ஐங்குறுநூறு, 269.

"சிறுகண் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்
துறுகண் கண்ணிக் கானவர் உழுத
குலவுக்குரல் ஏனல் மாந்தி ஞாங்கர்
விடரளைப் பன்றி வேங்கை அஞ்சாது
கழைவளர் சாரல் துஞ்சும் நாடன்"

—நற்றிணை, 386.

"நெடுந்தாட் செந்தினைக் கொழுந்த கேழல்
குறுந்தாட் பிணவொடு குறுகல் செல்லாது"

—தொல். -மரபியல், பேராசிரியர்மேற்கோள்.

"நல்லேர் நடந்த நசைசால் விளைவயற்
பன்மயிர்ப் பிணவொடு கேழ லுகள"

—மதுரைக்காஞ்சி, 173, 4.

மற்றும் பல பாடல்களில் பன்றி தினைப்பயிரை உண்பதாகக் கூறப்பட்டுள்ளது. விளைச்சலைப் பாதுகாப்பதற்காகக் காட்டுப் பன்றியைப் பொறிவைத்துப் பிடிக்கும் பழக்கம் இருந்ததைச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன.

"ஓங்குமலை வியன்புனம் படீஇயர் வீங்குபொறி
நூழை நுழையும் பொழுதில் தாழாது
பாங்கர்ப் பக்கத்துப் பல்லி பட்டென
மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்ந்துதன்
கல்லளைப் பள்ளி வதியும் நாடன்"

—நற்றிணை, 98.

"முதைச்சுவல் கலித்த மூரிச் செந்தினை
ஓங்குவணர்ப் பெருங்குரல் உணீஇய பாங்கர்ப்
பகுவாய்ப் பல்லிப் பாடோர்த்துக் குறுகும்
புருவைப் பன்றி வருதிறம் நோக்கிக்
கடுங்கைக் கானவன் கழுதுமிசைக் கொளீஇய
நெடுஞ்சுடர் விளக்கம் நோக்கி வந்துநம்"

—அகம், 88.

"விளைபுன சிழத்தலிற் கேழ லஞ்சிப்
புழைதொறு மாட்டிய விருங்க லரும்பொறி"

—மலைபடுகடாம், 193-4.

காட்டுப்பன்றி விளைச்சலை உண்ணவரும் வழிகளில் விசைப்பொறி வைத்துப் பன்றியைப் பிடித்தனர் எனத் தெரிகின்றது. நற்றிணை 98ஆம் பாடலிலும் அகநானூறு 88ஆம் பாடலிலும் காட்டுப்பன்றியே பல்லி சகுனம் பார்த்துப் பொறியில் மாட்டாது தப்பித்துக் கொண்டதாகக் கூறுவது கற்பனைச் செய்தியே. பொறி வைக்கும் வழிகளை உணர்ந்த பன்றிக் கூட்டம் அவ்வழிகளில் பயந்து பார்த்துச் செல்வது இயற்கைச் செய்தியே. இதையே பல்லியின் குரல் கேட்டுக் காட்டுப் பன்றி விளைபுனத்தில் நுழைவதாகக் கற்பனையாகக் கூறினர். காட்டுப் பன்றியைச் சங்க காலத்திலும் இன்றும் விரும்பி உண்ணும் வழக்கம் உள்ளது. இன்றும் உண்பதற்காகவே காட்டுப் பன்றியை வேட்டையாடும் வழக்கம் உள்ளது. காட்டுப்பன்றி மிகுந்த மன வலிமையும் தறுகண்மையும் உடையது. யானை மிக்க உடல் வலிமையுடையதாயினும் மனவலிமை உடையதன்று. காட்டுப் பன்றி உருவில் சிறியதாயினும் வீரமும் தறுகண்மையும் மிக்கது. காட்டுப் பன்றியை விரும்பி உண்ணும் புலியையும் ஆண்பன்றி எதிர்த்துப் போரிடக் கூடியது. சில சமயங்களில் புலியையும் விரட்டியடிக்குமென வேட்டையாளர் கூறுவர். காட்டுப் பன்றியின் இறைச்சியைப் புலியும், சிறுத்தைப்புலியும், செந்நாய்களும் விரும்பி உண்ணும். இச்செய்தியைப் புலி, செந்நாய் ஆகியவைகளைப் பற்றிய கட்டுரைகளில் விளக்கியிருக்கிறேன்.

"சிறுகட் பன்றிப் பெருஞ்சின வொருத்த லொடு
குறுங்கை யிரும்புலி பொரூஉ நாட"

—ஐங்குறுநூறு, 266.

"புலிகொல் பெண்பாற் பூவரிக் குருளை
வளைவெண் மருப்பிற் கேழல் புரக்குங்
குன்றுகெழு நாடன் மறந்தனன்"

—ஐங்குறுநூறு, 265.

"விடரளைப் பள்ளி வேங்கை அஞ்சாது
கழைவளர் சாரல் துஞ்சும் நாடன்"

—நற்றிணை, 386.

புலியொடு பெருஞ்சினத்துடன் ஆண்பன்றி போரிட்டதாக ஐங்குறுநூறு கூறுவதைக் காணலாம். புலியானது நன்கு வளர்ந்த ஆண்பன்றியைத் தாக்குவது எளிதன்று. ஆதலின் பெண்பன்றியையும் பன்றிக் குட்டிகளையும் புலி பெரும்பாலும் கொன்று உண்ணும். பெண் பன்றியையும் குட்டிகளையும் பாதுகாக்கப் புலியுடன் ஆண்பன்றி போராடுவதுண்டு. ஆண்பன்றியொடு வரும் காட்டுப் பன்றிக் கூட்டத்தைத் தாக்கப் புலி அஞ்சுமெனக் கூறுவர். ஐங்குறுநூறு 265ஆம் பாடலில் பெண்பன்றியையும் குட்டியையும் ஆண்பன்றி புலியிடமிருந்து பாதுகாப்பதாகக் கூறியிருப்பது உண்மையான இயற்கையில் நிகழும் செய்தியாகும். வேங்கைப் புலிக்குக் கூட அஞ்சாது மூங்கில் வளர்ந்த சாரலில் தூங்கும் பன்றி என்று கூறப்பட்டுள்ளதையும் நோக்குக.

காட்டுப் பன்றியைச் சங்க காலத்தில் வேட்டையாடும் வழக்கம் இருந்தது. காட்டுப் பன்றியை வேட்டையாடுவது எளிய செயல் அன்று. ஏனென்றால்

காட்டுப் பன்றி மிகவும் அறிவுக் கூர்மையுடைய விலங்கு. மற்றும் தைரியமும் வீரமும் வாய்ந்தது. (Wild boar display great intelligence and few animals show greater courage and determination) காட்டுப் பன்றி தன் கூர்த்த அறிவினால் கானவர் வைத்த பொறியி லிருந்து தப்பித்துக் கொள்வதையே பல்லியின் குரல் கேட்டுத் தப்பித்ததாகச் சங்கப் புலவர் கூறினர். காட்டுப் பன்றியின் மிகுந்த தைரியத்தையும் மனஉரத் தையும் கருதியே சங்கப் புலவர்கள் 'தறுகண்பன்றி' (அகம், 248) 'கடுங்கட்பன்றி' (அகம், 18, 322) 'கடுங்கட் கேழல்' (புறம், 190, புறம், 168) 'பெருஞ்சின ஒருத்தல்' (நற்றிணை, 82, ஐங்குறுநூறு, 266) என் றெல்லாம் சுட்டிக்காட்டிப் பாடினர். பிறநாடுகளிலும் வேட்டைக்குச் செல்வோர் பாடும் பழைய பாடல் களிலும் காட்டுப் பன்றியின் வீரத்தைப் பற்றிச் செய் திகள் வருகின்றன. (The old Hunting Songs of Germany, Austria and Norway are filled with references to the indomitable courage, the fierceness and strength of this splendid animal—Augustus Somerville in "The passing of the forest Gods") சங்க இலக்கியத்திலும் காட்டுப் பன்றி யின் குணங்களாகத் தறுகண்மையும் (indomitable courage கடுங்கண்மையும் (fierceness) பெருஞ்சினமும் கூறப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய வேட்டை யாளரும் புலி வேட்டைக்குச் சென்றாலும் போகும் வழியில் காட்டுப் பன்றியை விரட்டமுடியாது அல்லல் பட்டதைப்பற்றி எழுதியுள்ளனர். எவர்க்கும் அஞ்சாத இவ்விலங்கு புலிவேட்டைக்குச் செல்பவரையும் துணிந்து மீண்டும் மீண்டும் தாக்குமாம். இம் முறை யாக வழியை விலக்கித் தறுகண்மையுடனும் ஆண்மை

யுடனும் நின்ற ஓர் ஆண்பன்றியைப் பற்றி அருமை யான அழகிய செய்தி அகநானூறு 248 ஆம் பாடலில் கூறப்பட்டுள்ளது.

"நகை நீ கேளாய் தோழி அல்கல்
வயநாய் எறிந்து வன்பறழ் தழீஇ
இளையர் எய்துதன் மடக்கிக் கிளையொடு
நான்முலைப் பிணவல் சொலியக் கானுழிந்து
அரும்புழை முடுக்கர் ஆட்குறித்து நின்ற
தறுகட் பன்றி நோக்கிக் கானவன்
குறுகினன் தொடுத்த கூர்வாய்ப் பகழி
மடை செலன் முன்பில்தன் படைசெலச் செல்லாது
அருவழி விலக்குமெம் பெருவிறல் போன்மென
எய்யாது பெயருங் குன்ற நாடன்
செறியரில் துடக்கலில் வரிஇப் புரியவிழ்ந்து
ஏந்துகுவவு மொய்ம்பிற் பூச்சோர் மாலை
ஏற்றிமில் கயிற்றின் எழில்வந்து துயல்வர
வில்வந்து நின்றோற் கண்டனள் அன்னை
வல்லே யென்முகம் நோக்கி
நல்லை மன்னென நகூஉப்பெயர்ந் தோளே"

—கபிலர். அகம், 248

அகநானூற்றில் கூறப்பட்டுள்ள இச்செய்தி இன்றும் வேட்டையாளர் அனுபவத்தில் காணக் கூடிய உண்மை யான செய்தியாகும். இரவில் நாய்களை வைத்துப் பன்றி வேட்டையாட வந்த இளைய வேட்டுவர்கள் தன் குட்டிகளை அணுகாதவண்ணம் வேட்டை நாயைத் தூக்கி எறிந்து போட்டுத் தடுத்துக் கானத்தை விட்டு வந்த ஆண்பன்றி அரிய வழியில் ஆட்களைத் தாக்க எதிர்த்து நின்றது. அதைக் கண்ட தலைவனாகிய கானவன் நெருங்கி அம்பை எய்யவும் தன்னுடன் இருந்த பன்றிக் கூட்டம் ஓடி விடவும் தான் பெயராது

வழியை அடைத்து எதிர்த்து நின்ற ஆண்பன்றியைப் பார்த்து அதன் பெருவிறலை வியந்து அம்பெய்யாது திரும்பிவிட்டான். காட்டுப்பன்றி வேட்டையில் தன் மாலைகள் தாறுமாறாகப் பிய்க்கப்பட்டு வெறும் நூல் கயிறு தோளில் தொங்க வெறுங்கையோடு வந்த தலைவனைப் பார்த்துப் புரிந்து கொண்ட அன்னை தலைவியைப் பார்த்து, 'நிரம்ப நன்றாக இருக்கின்றது, இச் செய்தி' என்று நகைத்தாளாம். கபிலர் பாடிய இச் செய்தி உண்மை நவிற்சியுடன் அழகுடன் கூறப்பட்டிருப்பது போற்றத்தக்கதாகும். இத்தகைய பாடல்களே சங்க இலக்கியத்தை உயர்ந்த இலக்கிய மாக்குகின்றது. இந்த அகநானூற்றுப் பாடலையே வஞ்சித் திணையின் துறைப்பொருளுடையதாக நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் கொண்டது குறிப்பிடத்தக்கது. 'வருவிசைப் புனலைக் கற்சிறைபோல, ஒருவன் தாங்கிய பெருமை' என்னும் வஞ்சித்திணைப்பொருள் கொண்டதாகக் கூறுவர். விரைவாகவரும் வெள்ளத்தைத் தாங்கும் கல்லணைபோல ஒருவனே மேலே வரும் படையைத் தாக்குவதைப்போல் காட்டுப் பன்றியும் தானே தன்னந்தனியாக நின்று வேட்டை நாய்களையும், கானவர்களையும் தலைவனையும் எதிர்த்து நின்ற பெருமை நோக்கியே இதை வஞ்சித் திணைத் துறைப்பொருளுடையதாகக் கொண்டனர். இத்தலைவன் பெற்ற அனுபவத்தைப் போன்றே ஓர் அனுபவச் செய்தியை ஒரு வேட்டையாளர் கூறியிருப்பதை இதுசார்பாகப் படித்து மகிழலாம். (On leaving the bamboos we encountered on our tiger hunt an open part of the forest with thick patches of cannae dotted above and encountered a sow with a litter which not only barred the way but twice charged up

within twenty yards without any provocation. However, she retired after the second demonstration stopping at intervals and trotting back to see that we had not moved. These beasts are a horrid nuisance when stalking—'Sporting days in Southern India' - by Lieutenant Colonel Pollock.) புள்ளிகள் போட்டிருக்கும் இலைகளையுடைய சேம்புச் செடிப்புதரில் (Cannae) குட்டிகளுடன் இருந்த பன்றி இரண்டு முறை தாக்கியது. பின்னர்ச் சிறிது நடந்து சென்று திரும்பிப்பார்த்து மீண்டும் வந்துவந்து பார்த்த தாம். இதே போன்ற செய்தியையே கபிலரும் கூறி யிருப்பது எண்ணி வியக்கத் தக்கதாகும்.

> "கடுங்கட் பன்றியின் நடுங்காது துறந்து
> நாம அருந்துறைப் பேர்தந் தியாமத்து
> ஈங்கும் வருபவோ ஓங்கல் வெற்ப. —அகம், 18.

அஞ்சாமையுடைய பன்றியைக் கண்டும் நடுங்காது' அஞ்சத்தக்க துறையைக் கடந்து தலைவன் வரக்கூடாது என்று தலைவி சொல்வதாகக் கூறப்பட்டுள்ளது. கடுங்கட் பன்றியிருப்பதால் நீர்த்துறைகூட 'நாம அருந் துறை' யாகிவிடுவதாகக் கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். பயம்தரும் துறையென்றது பொருத்தமே. காட்டுப்பன்றியை இன்றும் நாய்களைக் கொண்டே வேட்டை யாடுவர். சங்கஇலக்கியத்திலும் நாய்களைக் கொண்டே வேட்டையாடுவது கூறப்பட்டுள்ளது. நாய் களை முன்னே செலுத்தி மோப்பம் பிடிக்க வைத்துப் பின்னே வரிசையாக வளையமாகச் சிலர் வாயாலோ கருவிகளாலோ ஓசை யெழுப்புவர். அதற்காகவே ஒரு வகைப் பறையும் இருந்ததாகத் தெரிகின்றது. அது 'பன்றிப் பறை' என்று வழங்கப்பட்டது. காட்டுப் பன்றிகளிடமிருந்து சேப்பங்கிழங்கையும் மஞ்சள்

கிழங்கையும் காக்கப் பன்றிப் பறையைப் பயன்படுத்தியதாக மலைபடுகடாம் கூறுகின்றது.

"சேம்பு மஞ்சளு மோம்பினர் காப்போர்
பன்றிப் பறையுங் குன்றகஞ் சிலம்பும்"
— மலைபடுங்கடாம்,343 - 44.

பன்றியின் இறைச்சியைச் சங்ககாலத்தில் விரும்பி உண்டனர்.

"பிணர்ச்சுவல் பன்றி தோன்முலைப் பிணவொடு
கணைக்கால் ஏனல் கைம்மிகக் கவர்தலின்
கல்லதர் அரும்புழை அல்கிக் கானவன்
வில்லின் தந்த வெண்கோட்டு ஏற்றை
புனையிருங் கதுப்பின் மனையோள் கெண்டிக்
குடிமுறை பகுக்கும் நெடுமலை நாட"
—நற்றிணை, 336.

"கழுதிற்சேணோ னேவொடு போகி
யிழுதி னன்ன வானிணஞ் செருக்கி
நிறப்புண் கூர்ந்த நிலத்தின் மருப்பி
னெறிக்கெடக் கிடந்த விரும்பிணரெருத்தி
னிருடுணிந் தன்ன வேனங் காணின்
முளிகழை யிழைந்த காடுபடு தீயி
னளிபுகை கமழா திருயினிர் மிசைந்து"
—மலைபடுகடாம், 243 - 9.

"கொடுவிற் கானவன் கோட்டுமா தொலைச்சிப்
பச்சூன் பெய்த பகழி போல" —நற்றிணை, 75.

வில்லை எய்து காட்டுப் பன்றியைக் கொன்று கொண்டு வந்த இறைச்சியை வெட்டி எல்லோரும் பகிர்ந்து உண்பர். பரணில் கானவன் எய்த அம்பொடு ஓடிப் போன காட்டுப்பன்றி நிறப்புண் (Mortal wound) பட்டதால் நிலத்திலே கொம்புப் பற்கள் புதைந்திருக்க வழியில் பிறர் போகமுடியாதபடி கிடந்தது. அதை

வழிப் போக்கர் காட்டுத்தீயில் பொசுக்கி உண்டனர். இன்றும் பன்றியை உண்போர் இம்முறை யாகவே பொசுக்கி உண்பர். காட்டுப் பன்றிக்கு மற்ற விலங்குகளைக் காட்டிலும் மிக்க கொழுப்பு மிக்க இறைச்சி உண்டு என்பதையும் மலைபடுகடாம் கூறுகிறது. இந்தக் கொழுப்பின் காரணமாகவே காட்டுப் பன்றியின் இறைச்சியை விரும்பி உண் கின்றனர். காட்டுப்பன்றியை இன்றும் துப்பாக்கியால் சுடுபவர்கள் உடனே சில சமயங்களில் பெறுவ தில்லை. சிறப்புண் பட்டு எங்கேயாவது சிலமணி நேரம் கழித்து விழுந்து கிடக்கும் நீர்த்துறைக் கருகி லேயோ அல்லது காட்டு வழிகளிலோ மண்ணைக் கவ்விக் கிடக்கும். இதேபோன்ற செய்தியையே மலைபடு கடாம் கூறுகின்றது. பன்றி வேட்டையாடுபவர் இரவில்,வேட்டையாடுவதையும் சங்கநூல்கள் கூறும்.

"புகழா வாகைப் பூவின் அன்ன
வளைமருப் பேனம் வரவுபார்த் திருக்கும்
அரைநாள் வேட்டம் அழுங்கிற் பகளுட்"

—பெரும்பாண், 109 - 11.

காட்டுப் பன்றியைக் குழியில் பிடிப்பதும் பொறி யில் பிடிப்பது முண்டு. காட்டுப் பன்றிக்கு நல்ல மோப்பசக்தி உண்டு. அதன் காரணமாகக் காட்டுப் பன்றியைக் காற்று வீசும் திசையைக் கண்டுணர்ந்து அதற்கேற்ப நின்று துப்பாக்கியால் சுடுவார்கள். காட்டுப்பன்றி மனிதரின் நாற்றத்தை நன்கு கண்டு கொள்ளும்.

"காற்றுச்சுவ டொற்றுக் கடிபுனங் கவரு
மேற்றிளம் பன்றியி னிருளை வெரூஉம்"

—தொல். பேராசிரியர், (மேற்கோள் - மரபியல்)

பேராசிரியர் காட்டியுள்ள மேற்கோள் செய்யுளில் காற்றின்வழி மோப்பம் பிடித்துக் காட்டுப் பன்றி யானது காவலுடன் இருக்கும் விளைவயலில் பார்த்து நுழைவதாகக் கூறியிருப்பது அரிய செய்தி.

காட்டுப்பன்றி குறுங்காடுகளில் சில சமயங்களில் அடர் காடுகளிலும் காணப்படும் குன்றச்சாரல்களிலும் புதர்களிலும் வாழும். மழைக்காலத்துக்குப் பிறகு விளை வயலில் நுழைந்து பதுங்கி வாழும். சங்க இலக்கியத் தில் காட்டுப்பன்றி வாழுமிடங்கள், சூழ்நிலை தெளி வாகக் கூறப்பட்டுள்ளது. பலாவமல் அடுக்கத்திலும், கள்ளியங்காட்டிலும், துறுகல்லடுக்கத்தும் குறிய ஈச்ச மரங்கள் வளர்ந்த காடுகளிலும் காட்டுப்பன்றி காணப் பட்டதாகக் கூறியுள்ளனர். மற்றும் காட்டுப்பன்றி சேற்றில் புரளும் செய்தியும் கூறப்பட்டுள்ளது. 'அயந்திகழ், சிலம்பிலும்' 'நீலத்து அன்ன அகலிலைச் சேம்பிலும் காட்டுப் பன்றியைக் கண்டு எழுதி யுள்ளமை நேரில் கண்டுகூறியதாகும். வேட்டையாளர் ஒருவர் புள்ளியிட்ட சேம்புப்புதரில் (Canna) கண்டதை எழுதியிருப்பதை ஏற்கனவே சுட்டியுள் ளேன். கழைவளர்சாரலிலும் விளைபுனத்திலும், எருவை விளைந்த செறுவிலும் கேழலைக் கண்டு கூறி யுள்ளனர். கேழலின் பெண்பன்றி செந்நாய்க்குப் பயந் தோடி, செங்காய் உதிர்ந்த ஈந்தைப் பற்றிக் கூறிய செய்தி இயற்கையில் காட்டில் காணக்கூடியது.

"செந்நாய் ஏற்றை கேழல் தாக்க
இரியல் பிணவல் தீண்டலிற் பரீஇச்
செங்காய் உதிர்ந்த பைங்குலை ஈந்தின்''

—அகம், 21.

ஈச்சமரம் முதலிய குறுமரங்கள் புதர்களாக உள்ள காடுகளில் காட்டுப்பன்றிகள் நிறையக் காணப்படும்.

காட்டுப்பன்றி பல குட்டிகளை ஈனும் சக்தியுடையது. ஆதலின் காட்டுப்பன்றி விரைவில் காட்டில் பல்கிப்போய் விடுகின்றது. காட்டுப் பன்றிகள் கூட்டமாகவே காணப்படும். சங்கநூல்களில் "சிறுகட் பன்றி பெருநிரை" (அகம். 94) என்று கிளையொடு காணப்படும் பன்றியைப்பற்றியும் கூறப்படுவது இது சார்பாகக் கவனிக்கவேண்டும். காட்டுப் பன்றியின் நிரைக்குத் தலைமையாக வலிமை பொருந்திய ஆண் பன்றி இருப்பதுண்டு. முக்கியமாக இணைசேரும் காலத்தில் தலைமைக்காக ஆண்பன்றிகள் போரிடும். இந்த ஆண்பன்றிகளை 'Master Boar' என்பர். இந்த வலிமை வாய்ந்த தலைமை தாங்கும் ஆண்பன்றிகளை 'ஒருத்தல்' (நற்றிணை. 82, ஐங்குறுநூறு 366) என்று சங்கநூல்கள் கூறுகின்றன. பெருஞ்சின ஒருத்தல் என்றும் கூறும். ஆணும் பெண்ணுமாகவும், தனித்த ஆணுகவும் மற்றைய காலங்களில் காணப்படுவதுண்டு. வளர்ந்த காட்டுப்பன்றிகள் கருமையாகவும் சாம்பல் நிறங் கலந்து காணப்பட்டாலும் குட்டிகள் பழுப்பு நிறமாகக் கரிய அல்லது மங்கலான வரிகளுடன் காணப்படுமென விலங்கு நூலார் கூறுவர்.

"புலிகொல் பெண்பாற் பூவரிக் குருளை"—ஐங்குறு, 265.

"தாஅ யிழந்த தழுவரிக் குருளையொடு"

—ஐங்குறுநூறு, 268.

தழுவரிக்குருளை பூவரிக்குருளை என்று பொருத்தமாகக் காட்டுப் பன்றியின் குட்டி விளக்கப்பட்டுள்ளது.

சங்க நூல்களில் காட்டுப்பன்றியைப்பற்றியே செய்திகள் மிகுந்து காணப்படினும், ஒருசிலசெய்திகள் வீட்டுப்பன்றியைப் பற்றியும் வருகின்றன. காட்டுப் பன்றியைப் போலக் கழுத்தில் தடித்தமயிரோ நன்ருகவளர்ந்த கொம்புப்பற்களோ வீட்டுப்பன்றிக்குக் கிடையாது.

"கள்ளடு மகளிர் வள்ள நுடக்கிய
வார்ந்துகு சின்னீர் வழிந்த குழம்பி
னீர்ஞ்சே ருடிய விரும்பல் குட்டிப்
பன்மயிர்ப் பிணவொடு பாயம் போகாது
நென்மா வல்சி தீற்றிப் பன்னுட்
குழிநிறுத் தோம்பிய குறுந்தா ளேற்றைக்
கொழுநிணத் தடியொடு கூர்நறுப் பெறுகுவிர்"

—பெரும்பாண், 339 - 345.

"விழியாக் குருளை மென்முலை சுவைப்பக்
குழிவயிற் றுஞ்சுங் குறுந்தாட் பன்றி"

—தொல். மரபு. பேராசிரியர். மேற்கோள்

"நுறுங்குபெய் தாக்கிய கூழார வுண்டு
பிறங்கிரு கோட்டொடு பன்றியும் வாழும்'

—அறநெறிச்சாரம், 168.

சங்ககாலத்திலும் அதற்குச் சிறிது பிற்காலத் திலும், வீட்டுப் பன்றிக்கு அரிசிமாவால் செய்த கூழை ஊட்டி வளர்த்தன ரெனத் தெளிகிரும். நொய்யரிசிக் கூழை உண்டுவளர்ந்த வீட்டுப்பன்றிக்கும் இக்காலம் கழிவுகளையும் குப்பைகளையும் தின்றுவாழும் பன்றிக் கும் எவ்வளவு வேற்றுமை! தற்காலம் மேல்நாடுகளில் வீட்டுப் பன்றிகள் கிழங்குகளையும் காய்கறிகளையுமே உண்ணுகின்றன. சங்ககாலத்தில் வீட்டுப்பன்றிகள்

அரிசிமாவைக் கூழாக உண்டு வாழ்ந்துள்ளன. ஆனால் இன்றோ? இந்தத் தாழ்ந்த நிலைமைக்குக் காரணம் தமிழன் நாகரீகத்திலும் தாழ்ந்தமையேயாகும்.

காட்டுப் பன்றியைச் சங்க இலக்கியத்தில் கேழல் என்றும் ஏனம் என்றும் அழைத்தனர். தொல்காப்பிய மரபியலில் 'இருணிறப்பன்றியை ஏனமென்றலும்' வழக்குண்டு எனக் கூறப்பட்டுள்ளது. கேழற்பன்றி (புறம் 152) என்றும் கூறப்படுவதுண்டு. கேழற்பன்றி என்பது பண்புத்தொகை யென்றும் தொக்குநிற்பது இல்லையென்றாலும் ஒன்றையொன்று விசேடித்து நின்ற தன்மையால் பண்புத்தொகை என்றும் உரையாசிரியர்கள் கூறுவர். மயிலைநாதருரையில் கேழற் பன்றி என்ற சொற்றொடர் சாதிதொக்க பண்புடையது என்று கொள்ளப்பட்டது. கேழலென்பது எய்ப்பன்றி முதலானவற்றை நீக்குதலானும், பொருள் வேறுபாடுடைமையின் ஒருபொருட் பன்மொழியாகா, பண்புத்தொகையுள் அடங்கு மென்க என்று மயிலைநாதர் நன்னூலுரையில் கூறினர். ஆனால் கூர்ந்து கவனித்தால் கேழற்பன்றி என்பது வீட்டுப்பன்றியி லிருந்து காட்டுப்பன்றியைப் பிரித்துணரத் தோன்றிய தொடர்ச்சொல் என்பதுதெளிவு. இதை உரையாசிரியர்கள் உணரவில்லை. எய்ப்பன்றி என்ற சொல் சங்க இலக்கியத்தில் முள்ளம்பன்றிக்கு வழங்கப்படவில்லை. எய்மா என்றும் முளவுமான் என்றுமே வழங்கப்பட்டது. எய்ப்பன்றி முதலானவற்றை நீக்குவதற்காகக் கேழற்பன்றி என வழங்கப்பட்டது என்பதைக்காட்டிலும் வீட்டுப்பன்றியிலிருந்து பிரித்துணரவே கேழல் என்ற சொல் விசேடித்து வந்து காட்டுப்பன்றியை உணர்த்தியதைத் தெளிந்துகொள்ள

வேண்டும். அதுபோலவே வேழக் கரும்பு என்ற சொல் கொறுக்காத் தட்டையைப் போன்ற உருவுடைய கரும்பைக் குறித்தே வந்தது. இதை உணராது யானையினின்று பிரித்துணர வேழக்கரும்பு என்று கொண்டதாகச் சிலர் தலைகீழாகப் பொருள் கொண்டனர். வேழம்போன்ற அஃதாவது கொறுக்காத்தட்டையைப் போன்ற கரும்பு இயற்கையில் உள்ளது. கரும்பில் ஒரு விசேட சாதியைக் குறித்தே வேழக்கரும்பு வழங்கிற்று. பன்றியென்ற சொல் சங்க இலக்கியத்தில் காட்டுப்பன்றியைக் குறித்துப் பல பாடல்களில் வழங்குவதைக் காணலாம். காட்டுப்பன்றியை வீட்டுப்பன்றியிலிருந்து விலக்கிப் பிரித்துக் கூறவே கேழற்பன்றி எனப்பட்டது. சங்க இலக்கியத்தில் கேழல் என்ற சொல் தனித்தே காட்டுப் பன்றிக்கு வழங்கும். காட்டுப் பன்றிக்குக் கேழல் என்ற பெயரையே விலங்குநூற் பெயராகக் கொள்வது நன்று. கேழல் பன்றி என்று புறப்பாடலில் (152) வழங்கிய இடத்தில் வீட்டுப் பன்றியிலிருந்து பிரித்துணரவே கூறப்பட்டது என்பது நன்கு விளங்கும். காட்டில் வாழும் விலங்குகளைக் கொன்ற வல்விலோரியின் ஒரே அம்பைச் சிறப்பிக்க வந்த விடத்தில் வீட்டுப் பன்றியை விலக்கவே கேழற் பன்றி என்று கூறினார். தொல்காப்பிய மரபியலில் ' வேழக் குரித்தே விதந்து களிறென்றல், கேழற் கண்ணும் கடிவரை யின்றே ' எனக் கூறப்பட்டுள்ளது. களிறு என்ற சொல் ஆண் யானைக்கு மட்டுமன்றிக் காட்டுப்பன்றியில் ஆணிற்கும் வழங்கலாம். உரையாசிரியர்கள் வீட்டுப் பன்றியை விலக்கினரில்லை. சங்க காலத்தில் காட்டுப்பன்றிக்கே வழங்கிய கேழல் என்ற சொல் பிற்காலத்தில், தேவார

காலத்தில் 'கேழல்வினை' என்ற வழக்கில் வீட்டுப் பன்றியைக் குறித்து வழங்குவதைக் காணலாம். கேழல் வினை யென்பதையே தற்காலத்தில் 'பன்றித்தனம்' என்கிறோம். பெருங்கதையில் வீட்டுப் பன்றியிலிருந்து பிரித்துணரவே 'கானப்பன்றி' (பெருங்கதை 52, 51) என்று கூறினர். கான மஞ்ஞை என்று வீட்டு மஞ்ஞையிலிருந்து விலக்க, சங்கநூல்களில் வழங்குவது காணலாம். ஆனால் கேழல் என்றசொல் வழங்கிய தால் கானப்பன்றி என்ற வழக்குச் சங்கநூல்களில் இல்லை. கானப்பன்றியென்ற சொல்லின் அடி யொற்றியே தற்காலம் காட்டுப்பன்றி என்று வழங்கு கிறோம். மற்றும் திருவிளையாடற் புராணத்தில் எறுழி என்ற சொல் எறுழ்வலி அமைந்த காட்டுப்பன்றிக்கு வழங்கிற்று. பன்றியின் பெண்பாலிற்குப் பாட்டி யென வழங்கும் என்று தொல்காப்பியம் கூறுவது வழக்கில் இல்லை. காட்டுப் பன்றியை விலங்கு நூலார் Sus Cristatus என்று அழைப்பர். ஆங்கிலத்தில் The Indian wild boar' என்றழைக்கப்படும்.

## சு. நரி, கோநாய், தீநாய்

(The Jackal, The Wolf, The Hyena)

நாயினத்தைச் சார்ந்த விலங்குகளாக நரி, ஓநாய், செந்நாய் ஆகிய விலங்குகளை விலங்கு நூலார் கருதுவர். இந்த மூன்று விலங்குகளும் சங்க இலக்கியத்தில் தனியாகக் கூறப்பட்டுள்ளன. நரியை நாயினத்தைத் தழுவிய விலங்காகக் கருதினதால் 'நாயும் நரியும், என்ற வழக்குத் தோன்றிற்று. சங்க இலக்கியத்தில் நரி என்று வருமிடங்களிலெல்லாம் கணநரியைக் (Jackal) குறிப்பதாகவே தெரிகின்றது. ஏனெனில் நரியின் ஊளையிடும் தன்மையைப் பற்றிக் குறிப்பாகப் பாடியிருக்கின்றனர். அத்தகைய ஊளையிடும் நரியை Jackal என்று விலங்குநூலார் கூறுவர். இந்த ஊளையிடும் நரியையே சங்க நூல்கள் 'கணநரி' எனக் குறிப்பிடுகின்றன. இந்நரிகள் பெரும்பாலும் கூட்டமாகக் காணப்படும். கூட்டமாக மாறிமாறி ஊளையிடும். கூட்டமாக வேட்டையாடுவதுமுண்டு. இம்முறையாகக் கூட்டமாகவே பெரும் பாலும் கண்டதால் சங்க காலத்தில் இந் நரியினத்தைக் 'கணநரி' என அழைத்தனரெனத் தெளிவாகின்றது. இந்தச் சங்க நூற் பெயரையே இந்நரியை (Jackal)க் குள்ளநரியினத்திலிருந்து (Fox) பிரித்துணர, தற்காலத்திலும் பயன் படுத்தலாம். சங்க இலக்கியத்தில் இந் நரியைப் பற்றி இரண்டு முக்கிய செய்திகள் காணப்படுகின்றன. இச் செய்திகளிலிருந்து இந்த நரியினத்தைப் பிரித்துணர முடிகின்றது. முதலில் இந் நரிகள் கூட்டமாக உண

வைத் தேடி உண்பது. நரியினத்தில் இந் நரியினமே இத்தகைய குணமுடையது. ஆதலின் கணநரி என்று அழைத்தது மிகவும் பொருத்தமானது.

''அம்புதொடை யமைதி காண்மார் வம்பலர்
கலனிலர் ஆயினுங் கொன்றுபுள் ளூட்டுங்
கல்லா இளையர் கலித்த கவலைக்
கணநரி இனனொடு குழீஇ நிணனருந்தும்
நெய்த்தோர் ஆடிய மல்லல் மொசிவிரல்
அத்த எருவைச் சேவல் சேர்ந்த''

...அகம். 375.

''பேய்மகள் பற்றிய பிணம்பிறங்கு பல்போர்பு
கணநரி யோடு கழுதுகளம் படுப்பப்'' —புறம், 369.

''தாவின் றுதவும் பண்பிற் பேயொடு
கணநரி திரிதரு மரங்க ணிணனருந்து
செஞ்செவி யெருவை குழீஇ''

—புறம். 373.

அகநானூற்றிலும் புறநானூற்றிலும் 'கணநரி' என்றே கூறப்பட்டிருப்பதை நோக்கவும். கணநரி இனத்தோடு குழுமிப் பிணத்தின் கொழுப்பைத் தின்றதாகக் கூறியிருப்பதையும் கவனிககலாம், இந்தக் கணநரியின் மற்றொரு செய்தியும் சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளது. இந்நரிகள் பிணத்தைத் தின்னும் பழக்கமுடையன. இறந்த விலங்குகளின் தசையோ, எலும்போ கிடந்தால் அதை உண்டு வாழும். இந்த நரியை இதன் காரணமாகத் தோட்டி (Scavenger) என்றழைப்பர். காடுகளில் கழிந்த ஊன் தசைகளையும், வேட்டையாடும் புலி முதலிய விலங்குகள் உண்ட மிச்சிலையும் இந்நரிகள் உண்ணும். இந் நரிகள் காடு

களில் வேட்டையாடும் புலி, சிறுத்தை முதலிய விலங்கு களின் பின்னால் திரியும். வேட்டையாடிய விலங்குகள் உண்டு சென்றபின் எஞ்சியதைத் தின்று இந்நரிகள் வயிற்றை நிறைக்குமென்று கண்டுள்ளனர். வேட்டை யாடும் விலங்குகளின் பின்னால் தொடர்ந்து செல்வதைக் கண்ட சிலர் இந்நரிகள் புலி முதலிய வற்றிற்கு அவைகளின் இரையைக் காட்டிக் கொடுப்ப தாகக் கூறினர். ஆனால் அஃது உண்மை யன்று என்று விலங்கு நூலார் கூறுவர். பழமொழி நானூற்றில் "நரியிற் கூண் நல்யாண்டும் தீயாண்டும் இல்" (102) என்ற பழமொழி வருகின்றது. நரிக்கு உணவு நிறையக் கிடைக்கின்ற நல்ல காலமும் உணவு கிடைக்காத பஞ்சகாலமும் கிடையாது என்பதைக் கண்டுணர்ந்து கூறியுள்ளார். நரியானது பெரும்பாலும் தானே வேட்டையாடி உண்பது கிடையாது. ஆதலால் நரிக்கு உணவுப் பஞ்சம் என்பது கிடையாது. வேட்டை யாடும் விலங்குகள் விட்டுச் சென்ற கழிவுகளையே தின்பதால் அதற்கு என்றும் பஞ்சம் ஏற்படப் போவ தில்லை. புலி முதலிய வேட்டையாடும் விலங்குகளுக்கு மான் முதலிய விலங்குகள் இரையாகும். இந்த இரை யாகும் விலங்குகள் சில காலங்களில் மிகுந்தும் சில காலங்களில் அரிதாகவும் இயற்கையில் காணப்படுமென விலங்கு நூலார் கூறுவர். புலிக்கு ஏற்படும் உணவுப் பஞ்சம் நரிக்கு என்றுமில்லை. நரியின் உணவோ சிறிது. அதுவும் காட்டில் கிடக்கும் கழிவுகள். இயற்கைச் செய்திகளை நன்கு கண்டு உணர்ந்த பழுத்த அனுபவத் தில் கூறப்பட்ட இந்தப் பழமொழியின் உண்மை விளக்கம் பிற்காலத்தாருக்குப் புரியவில்லை.

"இரும்புலி கொண்மார் நிறுத்த வலையுளோர்
ஏதில் குறுநரி பட்டற்றாற் காதலன்"

—கலி. 65.

புலியைப் பிடிக்க வைத்த வலையில் நரி அகப் பட்டது என்று கலித்தொகை கூறுவது புலியைப் பின் பற்றி நரி செல்வதைக் குறிப்பாகக் காட்டுகின்றது.

சங்க நூல்களில் இந் நரிகள் பிணங்களைத் தின் பதைத் தெளிவாகக் கூறியிருப்பதைக் காணலாம்.

"அருங்கவட் டுயர்சினைப் பிள்ளை யூட்ட
விரைந்துவாய் வழுக்கிய கொழுங்கண் ஊன்தடி
கொல்பசி முதுநரி வல்சி யாகும்"

- அகம். 193.

"பாறுபடப் பறைந்த பன்மாறு மருங்கின்
வேறுபடு குரல வெவ்வாய்க் கூகையொடு
பிணந்தின் குறுநரி நிணந்திகழ் பல்ல"

...புறம். 359.

"வம்ப மாக்கள் உயிர்த்திறம் பெயர்த்தென
வெங்கடற்று அடைமுதல் படுமுடை தழீஇ
உறுபசிக் குறுநரி குறுகல் செல்லாது
மாறுபுறக் கொடுக்கும் அத்தம்"

— நற்றிணை, 164.

"வம்பலர் தொலைந்த அருஞ்சுரக் கவலை
அழல்போல் செவிய சேவல் ஆட்டி
நிழலொடு கதிக்கும் நிணம்புரி முதுநரி
பச்சூன் கொள்ளை மாந்தி வெய்துஉற்றுத்
தேர்திகழ் வறும்புலந் துழைஇ நீர்நயந்து
பதுக்கை நீழல் ஒதுக்கிடம் பெறாஅ
அஞ்சுவரு கவலை வருதலின் வருந்திய"

—நற்றிணை, 352.

"தூவெள் ளறுவை மாயோற் குறுகி
இரும்புட் பூச லோம்புமின் யானும்
விளரிக் கொட்பின் வெண்ணரி கடிகுவென்."

—புறம், 291.

மேலே காட்டிய சங்கப்பாடல்கள் எல்லாம் நரி இறந்தவர் பிணத்தைத் தின்பதையே கூறியிருப்பதைக் கவனிக்கலாம். புதியதாகக் கொல்லப்பட்டவரின் உடலில் தசையையும் கொழுப்பையும் உண்டதாகக் கூறப்பட்டுள்ளது. ஆறலைப்போர் கொன்றவர்களைப் புதைக்காது போட்டுவிடுவர் எனச் சங்கநூல்கள் கூறுகின்றன. கொன்று போடப்பட்டவரின் பழைமையாகாத இரத்தம் வரும் புதிய உடல் தசையை எருவைக் கழுகுகளுடன் சேர்ந்து நரிகள் உண்ணும் என்று கூறுவதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். அகநானூறு 275ஆம் பாடல் தெளிவாகக் கணநரி எருவைக் கழுகுடன் சேர்ந்து கொல்லப்பட்டவரின் நிணத்தையும் இரத்தத்தையும் உண்டதாகக் கூறுகின்றது. அகநானூறு 193 ஆம் பாடல் எருவைக் கழுகு தன் குஞ்சுகளுக்கு மர உச்சியில் ஊட்டிய ஊன்தசை வழுக்கிவிழ அது நரிக்கு இரையானதைக் கூறுகின்றது. நற்றிணை 352ஆம் பாடல் நெருப்பைப் போன்ற சிவந்த தலையையுடைய எருவைக் கழுகுடன் போரிட்டு நிணத்தைத் தின்ற நரியைப் பற்றிப் பேசுகின்றது. புறநானூறு 391 ஆம் பாடலில் கழுகும் நரியும் பிணத்தைத் தொடர்ந்து பாதுகாக்கச் சொல்லி ஒரு புலவர் பாடுவதைக் கவனிக்கலாம். இப்பாடல்களில் கூறிய செய்தி அரிய உண்மையான செய்தியாகும். ஏனென்றால் கணநரிகள் பிணந்தின்னிக் கழுகுகளுடன் சேர்ந்து காட்டில் கிடக்கும் கழிவுகளையும் பிணங்களையும் தின்னுமென

விலங்குநூலார் கூறுவர். பிணந்தின்னிக் கழுகு சிவந்த தலையையுடையது. இக் கழுகுகளை எருவையெனச் சங்கநூல்கள் அழைக்கும். இந்த எருவைக் கழுகுகளும் கணநரிகளுமே காட்டிற்குத் தோட்டிவேலை (Scavenging) செய்கின்றன என்பர். பிணந்தின்னிக் கழுகுகளுடன் (Vultures) கழிவுகளுக்கும் பிணத்திற்கும் இந்நரிகள் போரிடுவதுமுண்டாம். (The Jackal will contest with the Vulture for carrion or rotting corpses) இதையே நற்றிணை (352) நிணம்புரி முதுநரி அழல்போல் செவிய எருவைச்சேவலை 'ஆட்டியதாகக்' கூறியுள்ளது மிகவும் வியப்பாகும்.

கணநரிகள் காடுகளிலும் பாலைவனங்களிலும் தோட்டங்களிலும் வீட்டருகிலும் கூடி வாழும். எந்தச் சூழ்நிலையிலும் காணலாம். இந் நரிகளைப் பகலில் காண்பது அரிது. இவைகளை இரவில் ஊளை யிடுவது கொண்டே கண்டறியலாம். இரவுக் காலத்தில் வெளியே வந்து விடியற்காலையில் பதுங்கிவிடும். மனிதர்கள் நடமாடாக் காடுகளிலும் பாலைகளிலும் பகலிலும் காணலாம். பகலில் காண்பதருமையானதால் 'நரிமுகத்தில் விழித்தாற்போல' என்ற வழக்கு ஏற் பட்டது. சங்க நூல்களில் பெரும்பாலும் வறட்சி யான காடுகளின் சூழ்நிலையிலேயே இந் நரி வாழ்வதாகக் கூறப்பட்டிருக்கின்றது. பிணங்களைப் புதைக்கும் முது காட்டிலும் காணப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. இச் செய்திகள் இயற்கையோடு ஒத்த செய்திகளாகும். இந் நரி இரவில் ஊளையிடுவதைக் குறிப்பாகக் கூறி யுள்ளனர்.

" ஞாயிறு கோடா நன்பக லமயத்துக்
கவலை வெண்ணரி கூஉமுறை பயிற்றிக்"

—பதிற்றுப்பத்து. 22 : 34-5.

" நீண்முக நரியின் தீவிளிக் கூவும் "

—மணிமேகலை. 6 : 74.

" நரிக்கூஉக் கடற்கெய்தா வாறு "

—பழமொழி நானூறு. 316.

பதிற்றுப்பத்தில் ஞாயிறு காயும் நடுப்பகலில் இரவில் கூவும் நரி ஊளையிட்டதாகக் கூறியிருப்பதைக் காணலாம். இது வியப்புக்குரிய செய்தியாகக் கூறப்பட்டிருக்கின்றது. மணிமேகலையில் இரவில் இடுகாட்டில் நரியின் ஊளை கேட்டதாகக் கூறப்பட்டுள்ளது. ஊளையிடும் இதன் குணத்தை அடிப்படையாகக் கொண்டு 'ஊளன்' என்று மலையாளத்தில் இந்நரியை அழைப்பர்.

" கொடிவிடு குருதித் தூங்குகுடர் கறீஇ
வரிமரல் இயவின் ஒருநரி யேற்றை
வெண்பரல் இமைக்கும் கண்பறி கவலைக்
கள்ளி நீழற் கதறுபு வதிய
மழைக்கண் மாறிய வெங்காட் டாரிடை"

—அகம். 337.

மழையின்றிப் பாலையாக மாறிய வழியில் கள்ளி மரத்தின் நிழலில் வெயில் தாங்காது கதறிக் கொண்டு இரத்தம் சொட்டும் குடலைத் தின்றுகொண்டு ஒரு தனியான ஆண்நரி காணப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. நரிகளில் சில காலங்களில் ஆண்நரியைத் தனியாகக் காணலாம் எனக் கூறுவர். ஆண்நரி தனியாகக் காண்பதையே அகநானூறு 337 ஆம் பாடல் குறிப்பாகக் கூறுகின்றது. நரிகள் கூட்டமாகச் சில

சமயங்களில் சிறிய விலங்குகளை வேட்டையாடி உண்ப துண்டு எனக் கூறுவர். நரிகள் காட்டில் மேயும் ஆட்டு மந்தையில் புகுந்து குட்டிகளைப் பிடித்துக் கொன்று உண்பதுண்டு. 'நரிக்கு இடம் கொடுத்தால் கிடைக்கு இரண்டு ஆடுகேட்கும்' என்ற பழமொழி இதன் காரணமாகவே தோன்றிற்று.

" தண்டுகால் ஊன்றிய தனிநிலை யிடையன்
மடிவிடு வீளை கடிதுசென் றிசைப்பத்
தெறிமறி பார்க்குங் குறுநரி வெரீஇ
முள்ளுடைக் குறுந்தூறு இரியப் போகும்"

—அகம். 274.

" மறித்துரூஉத் தொகுத்த பறிப்புற இடையன்
தண்கமழ் முல்லை தோன்றியொடு விரைஇ
வண்டுபடத் தொடுத்த நீர்வார் கண்ணியன்
ஐதுபடு கொள்ளி அங்கை காயக்
குறுநரி யுளம்புங் கூரிருள் நெடுவிளி
சிறுகட் பன்றிப் பெருநிரை கடிய"

—அகம். 94.

மேலே காட்டிய அகநானூற்றுப் பாடல்களில் ஆட்டு மந்தையில் குட்டியைப் பார்த்திருக்கும் நரி இடையன் விடும் வீளையோசைக்குப் பயந்து ஓடி ஒளிவதாகக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். கணநரிகள் மானைக் கூடக் கூட்டமாகச் சேர்ந்து வேட்டையாடிக் கொல்லு மென்று விலங்கு நூலார் கூறுவர்.

" காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா
வேலான் முகத்த களிறு" —குறள், 500.

களர்ச் சேற்றில் காலாழ்ந்து புதைந்த யானையை நரி கூடக் கொல்லுமென்றது, நரிகள் கூட்டமாகச் சேர்ந்து கொல்லுமென்பதேயாகும். நிகண்டுகளில் நரிக்கு மறு

பெயராக 'ஓரி' என்ற சொல் கூறப்பட்டுள்ளது. ஓரி யென்பது ஆண்நரியைக் குறிக்கும். முசுக்கலையையும் குறிக்குமென்பர். ஓரி இடுகாட்டில் குரலிடுவதாக "ஊமைக் கூகையும் ஓரியும் உறழ்கதிக்கும்" என்று நீலகேசி கூறுகின்றது.

> " சிறுபூ நெருஞ்சியோடு அறுகை பம்பி
> அழல்வாய் ஓரி அஞ்சுவரக் கதிர்ப்பவும்
> அழுகுரல் கூகையோடு ஆண்டலை விளிப்பவும்"
> —பட்டினப்பாலை, 256-8.

ஓரி யென்ற பெயர் நரிக்குச் சங்ககாலத்திலேயே வழங்கியதாகத் தெரிகின்றது. ஓரியென்ற சொல் ஆண்நரியைக் குறித்து, அதிலும் தனியான நரியைக் குறித்து வழங்கியதாகவும் தெரிகின்றது. 'ஒரு நரி யேற்றை' என்று அகநானூறு (337) கூறுவதை நோக்குக. கணநரிக்கு எதிராக ஒரு தனி நரியை ஓரி யென்று சுட்டிக் காட்டியதாகத் தெரிகின்றது. அது போன்றே ஆண் குரங்கான முசுக்கலையையும் ஓரி யென்று சங்கநூல் கூறும். 'கணக்கலை' என்றதற்கு எதிராக ஓரியென்று தனியாகக் காணப்பட்ட ஆண் குரங்கை அழைத்ததாகத் தெரிகின்றது. தொல் காப்பியத்தில், மரபியலில் "பாட்டி யென்பது பன்றியு நாயும், நரியு மற்றே நாடினர் கொளினே" (620-64) என்று வரும் சூத்திரத்தில் நரி கூறப்பட்டுள்ளது. பெண் நரி பாட்டி யெனக் கூறப்படும். ஆனால் இன்று இப்பெயர் மனிதருக்கு வழங்குகிறது. தாயின் தாய்க்குப் பாட்டி யென்ற சொல் வழங்குவது 'நகைப்புக் கிடமா யிருக்கின்றது. ஓரியென்ற சொல் இன்றும் சிலவிடங் களில் பேச்சு வழக்கில் அருகி வழங்குவது வியப்பாயிருக் கின்றது. நரியின் கூழைப் பார்வையைக் குறித்தே

சிலருடைய சாய்ந்த பார்வையை 'ஒன்றரைக் கண்ண ஓரியான்' என்று நகையாகக் குறிப்பிடுகின்றனர்.

கணநரியைச் சங்க இலக்கியத்தில் 'குறுநரி' (அகம். 94, 274, புறம். 359, நற்றிணை 164, கலி. 65) என்றழைப் பதைக் காணலாம். மலையாளத்தில் கணநரியைக் (Jackal) குறுக்கன் என்றும் ஊளன் என்றும் குறுநரி என்றும் வழங்குகின்றனர். குறுநரி என்று சங்க நூல்கள் குறிப்பிடுவது இன்றும் மலையாளத்தில் வழங்கும் குறுநரியே என்பதில் ஐயமில்லை. 'குறுநரிக்கு நல்ல நாராயங் கொளல்' என்ற பழமொழி (51) கூறும் நரியும் இஃதேயாகும். குறுநரியைக் கொல்ல இரும்பாலான குத்துக்கோலான நாராசத்தைப் பாய்ச்ச வேண்டியதில்லை என்றே இப்பழமொழி கூறுகின்றது. நாராயம் என்பதை நாராயணம் என்னும் அம்பென்று பொருள் கொண்டது வலிந்து கூறியதாகும். கல்லாடத்தில் இதையே 'புன்கூழையங் குறுநரி' என்று இதன் எளிமை கூறப்பட்டது. கணநரியை, குறுநரியை விலங்கு நூலார் Canis Indicus என்பர். சங்க இலக்கியத்தில் குள்ள நரி (The Indian Fox) தனியாகக் கூறப் படவில்லை. ஆதலின் குள்ளநரியைக் கணநரிக்குட் பட்டதாகக் கருதினர் போலும்.

நரியினத்தோடு தொடர்புடைய, ஆனால் நரியின் வேறான ஒரு விலங்கு ஓநாய் என்பதாகும். இதைச் சங்க நூல்களில் கோநாய் என்று கூறுவர். நற்றிணையிலும், களவழி நாற்பதிலும் பழமொழி நானூற்றிலும் மட்டுமே கோநாயைப் பற்றிய செய்தி வருகின்றது,

" போகிய நாகப் போக்கருங் கவலைச்
சிறுகட் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்

சேருடு இரும்புறம் நீருடு சிவண
வெள்வசிப் படீஇயர் மொய்த்த வள்பு அழீஇக்
கோள்நாய் கொண்ட கொள்ளைக்
கானவர் பெயர்க்குஞ் சிறுகுடி யானே''

—நற்றிணை. 82.

'' இணரிய ஞாட்பினு ளேற்றெழுந்த மைந்தர்
சுடரிலங் கெஃக மெறியச்சோர்ந் துக்க
குடர்கொண்டு வாங்குங் குறுநரி கந்தில்
தொடரொடு கோணாய் புரையு மடர்பைம்பூட்
சேய்பொரு தட்ட களத்து.''

—களவழி நாற்பது. 34.

'' பெரியாரைச் சார்ந்தார்மேல் பேதைமை கந்தாச்
சிறியார் முரண்கொண் டொழுகல்—வெறிகொளி
கோநா யினம்வெரூஉம் வெற்ப! புலம்புகின்
தீநாய் எழுப்புமாம் எண்கு'' —பழமொழி. 292.

பழமொழி நானூற்றில் "வெறிகொள் கோநாயினம் வெரூஉம் வெற்ப" எனக் கூறியதைக் கவனிக்க வேண்டும். கோநாய் இனமெனக் கூறப்பட்டுள்ளது. காட்டில் வாழும் நாயின விலங்குகளில் செந்நாயும், ஓநாயும் கூட்டமாகச் சேர்ந்து வேட்டையாடும் குண முடையவை என விலங்கு நூலார் கூறுவர். கோநாய் இனமாக வெறி கொண்டு வருவதைக் கண்டு பயந்த தாகக் கூறுவது உண்மையான செய்தியே. ஓநாய்க் கூட்டத்திற்குக் காட்டில் உள்ள மான் முதலிய விலங்குகள் மிகவும் அஞ்சும். ஓநாய் கூட்டமாக மான் முதலிய விலங்குகளை வேட்டையாடித் தின்னும். ஓநாய்கள் சில சமயங்களில் குழந்தைகளைத் தூக்கிச் செல்லும். சில சமயங்களில் மனிதரைக்கூடத் தாக்கிக் கொல்வதுண்டு என்று விலங்குநூலார் கூறுகின்றனர்.

ஆதலின் வெறி கொண்ட கோநாயினங் கண்டு வெற்பன் அஞ்சியதாகக் கூறியதில் உண்மை யிருக்கின்றது. நற்றிணையில் காட்டுப் பன்றியைக் கொன்ற ஓநாய்களைப் பற்றிய செய்தி கூறப்படுகின்றது. காட்டுப் பன்றியை ஓநாய்கள் தாக்கிச் சேற்றில் புரட்டி அதன் தசைகளைப் பிளந்து கவ்விக் கொன்றதைக் கண்ட கானவர் அந்தக் கோநாய்களை ஓட்டி அவை கொன்ற பன்றியின் தோல் அழிந்த தசையை நிறையக் கைக்கொண்டனர் என நற்றிணை கூறுவது உண்மையான செய்தி யெனவே தெரிகின்றது. செந்நாய்களும் ஓநாய்களும் வேட்டையாடிக் கொன்ற மான்களைக் காட்டில் வாழும் மனிதர்கள் கவர்ந்து உண்பது வழக்கம். இதையே நற்றிணை கூறுவதாகத் தெரிகின்றது. இது போன்ற ஒரு செய்தி நேரில் கண்ட ஒருவர் Sunday Standard (19-11-67) என்ற நாளிதழில் எழுதி யிருந்தார். கோள்நாய் என்ற நற்றிணைச் சொற்கு, கொள்ளும் நாய் என்று பொருள் கொண்டது பொருத்தமின்று. இது செந்நாய் என்று கொள்ளவேண்டிய விடத்தில் செல்லும் நாயெனும் பொருளில் 'செல்நாய்' என்று கொண்டு 'சென்னாய்' என்ற பாடத்தைச் சிறந்த பாடமாகப் பதிப்பித்ததைப் போன்றது. கானவர் வேட்டையாடக் கூட்டிச் சென்ற வீட்டுநாய் 'பரியல் நாய்,' 'கதநாய்' என்றெல்லாம் சங்க நூல்களில் கூறப்படுகின்றது. கோள்நாய், கோணாய் என்பதற்கு வேட்டைக்குதவும் வீட்டு நாய் எனப் பொருள் கொண்டு சிலர் உரையெழுதியது பொருத்த மற்றதாகும். களவழி நாற்பதில் போர்க்களத்தில் குறுநரி இறந்த மனிதனின் குடலைக் கடித்துத் தின்பது தூணில் கட்டப்படாது சங்கிலியுடன் கூடிய கோநாயைப் போலிருந்தது என்று கூறு

வதைக் கவனிக்க வேண்டும். குடல் சங்கிலி போலத் தோற்றமளித்தது. குறுநரி கோநாயைப் போல இருந்தது. கோநாய் குறுநரியைப்போல் இருந்தது என்பதில் பொருத்தம் உள்ளது. ஏனெனில் உருவிலும் நிறத்திலும் ஒப்புமை ஓநாய்க்கும் நரிக்கும் உள்ளது. இந்த விடத்தில் 'கோனாய்' என்பதற்கு வேட்டையாடும் வீட்டு நாய் என்று உரையெழுதியது பொருத்தமற்றது. சங்க காலத்தில் கோநாயெனும் ஓநாயையும் தெளிந்திருந்தனரென நன்கு தெரிகின்றது. ஓநாய் பெரும்பாலும் காட்டிலே காணப்பட்டதால், தென்னிந்தியாவில் அருகிக் காணப்பட்டதால் ஓநாயைப் பற்றி மிக அரிதாகச் சில செய்திகளே காணப்படுகின்றது. செந்நாயைப் பற்றிப் பல செய்திகள் காணப்படும்போது ஓநாயைப் பற்றி மிக வறிதாக ஒன்றிரண்டு செய்திகளே காணப்படுவதற்குத் தமிழ் நாட்டில் ஓநாயின் அருமையே காரணம்.

நாயினத்தைப் போன்றதும் அதற்கு எதிரான புலியினத்தைப் போன்றதுமான ஒரு விலங்கும் தமிழிலக்கியத்தில் இரண்டே பாடல்களில் கூறப்பட்டுள்ளது. இதை இலக்கியத்தில் நாயினமாகக் கொண்டனர். ஆனால் பேச்சுவழக்கில் புலியினமாகக் கருதினர். விலங்கு நூலார் இவ்விலங்கை நாயினத்தில் ஒரு சார் சேர்ந்ததாகவும் புலியினத்தில் மறுசார் சேர்ந்ததாகவும் கருதுவர். இவ்விலங்கு தற்காலத்தில் கழுதைப் புலியென்றும், கழுதைக் குறத்தி யென்றும் (Hyena) அழைக்கப் படுகின்றது. இவ் விலங்கு மயானத்திற் காணப்படுவதொரு விலங்கு என்று மணிமேகலை உரை கூறுவது மிகவும் உண்மையான அரிய செய்தியே யாகும்.

" கடகஞ் செறிந்த கையைத் தீநாய்
உடையக் கவ்வி யொடுங்கா வோதையுஞ்"

—மணிமேகலை: 6 : 114-15.

மயானத்தில் திரியும் ஒருவகை நாயென்று கூறும் இவ் விலங்கு கழுதைப் புலி யெனப்படுவதே யாகும். கழுதைப் புலியே சுடுகாட்டில் எலும்பைத் தின்ன வரும் விலங்காகும். பெரும்பாலும் எலும்பையே தின்று வாழும் இவ் விலங்குக்கு எலும்பைக் கடிக்க வலிய கடைவாய்ப் பற்கள் உண்டு. பெரிய, தடித்த எலும்பையும் எளிதில் கடித்து உண்ணும். இதன் காரணமாகவே மணிமேகலை உலோகத்தால் ஆன கடகஞ் செறிந்த கையைக் கடகத்தோடு சேர்த்து உடையும்படி கடித்துக் கவ்வியதாகக் கூறுகின்றது. காடுகளில் வேட்டையாடும் புலி முதலிய விலங்குகள் விட்டுச் சென்ற மிச்சிலைக் கணநரியும் எருவையும் உண்ணும். அப்படியும் மீந்த எலும்பைக் கழுதைப் புலி கொள்ளுமென விலங்கு நூலார் கூறுவர். மயானத்தில் பிணத்தைத் தின்பதாகக் கழுதைப் புலியையே கூறுவர். ஆதலின் தீநாய் என்பது கழுதைப் புலியே என்பதில் ஐயமில்லை. இந்தக் கழுதைப் புலியைப்பற்றி அரிய ஒரு செய்தி பழமொழி நானூற்றில் வருகின்றது. அனுபவ வாயிலாக அறிந்த ஒரு செய்தியைப் புலவர் கூறுகிறார்.

" பெரியாரைச் சார்ந்தார்மேல் பேதைமை கந்தாச்
சிறியார் முரண்கொண் டொழுகல்—வெறியொலி
கோநா யினம்வெரூஉம் வெற்ப! புலம்புகின்
தீநாய் எழுப்புமாம் எண்கு" ...பழமொழி. 292.

தூங்குகின்ற கரடிகளை எழுப்புகிற கழுதைப் புலியை உவமை கூறியிருக்கிறார். தூங்குகின்ற கரடியை

எழுப்பித் தீநாய் தனக்கே ஊறு தேடிக் கொண்டது. கரடிகள் தூங்குகின்றபோது துப்பாக்கியால் சுட்டால், காயம்பட்ட கரடி பக்கத்தில் படுத்திருக்கும் கரடியைத் தாக்குமாம். யார் ஊறு செய்தார்கள் என்று கண்டு பிடிக்காதாம். இதை வேட்டையாளர் கூறுகின்றனர். தூங்கும்போது கரடியைத் தொந்தரவு செய்தால் தீநாயைக் கரடி தாக்குமென்று கூறியது கரடியின் குணத்தை நன்கு அறிந்து கூறியதாகும். கரடி திடு மெனத் தாக்குவதை வேட்டையாளர் கூறுவர். கரடி விடல் முதலிய வழக்குகள் இக்காரணமாகத் தோன்றி யவையே. தூங்குகின்ற கரடி அருகில் தீநாய் உணவு தேடிச் சென்றிருக்கலாம்; கரடியின் தூக்கம் கெட்ட தால் கரடி தாக்கியிருக்கலாம். இதை அனுபவ வாயிலாகத் தெரிந்த புலவர் அழகிய உவமையாகக் கையாண்டிருக்கிறார். தீநாய் என்பது கழுதைப் புலியைக் குறிக்குமென்பதை உரையாசிரியர்கள் அறிந் திருந்ததாகத் தெரியவில்லை. தீநாயைக் கழுதைப்புலி என்று தமிழில் கூறுவது போல, 'நாய்ப்புலி' என்று பழங்கன்னடத்தில் அழைத்தனர். நாயினத்தைச் சார்ந்ததால் நாயென்றும் புலியைப்போன்று கருப்பு வரிகளை யுடையதால் புலி யென்றும் கூறினர். கழுதை யைப் போன்ற நிறமுடையதால் கழுதைப்புலி யென் றனர்.

சங்க இலக்கியத்தில் நாயினமான நரியில் கண நரியும் ஓநாயும் தீநாயும் கூறப்பட்டிருப்பதை உணர லாம். வெண்ணரி என்று இரு பாடல்களில் குறிப் பிடப்பட்டிருப்பது கணநரியே யாகும். மழைக்காலத் தில் சிறிது கருமை கலந்தும், வெயிற் காலத்தில் வெண்மை கலந்தும் நரியின் நிறம் தெரியும். நரியின்

நிறத்தை உறுதியாகக் கூற முடியாது. அதனால்தான் நரிநிறமென்ற வழக்கிற்குப் பலநிறக் கலப்பு என்ற பொருள் உள்ளது. நரியின் நிறத்தை உறுதியாகக் கூறமுடியாது என்று விலங்கு நூலாரும் கூறுவர். 'வெண்ணரி' (புறம் 291; பதிற்றுப்பத்து, 22 : 35) என்பது நரியினத்தில் காணப்படும் வெள்ளையினத்தைக் குறித்தேயிருக்கும். (I do not if one in a hundred Shikaries could give any accurate description of the Coat. The jackal is very subject to albinism-Augustus Somerville.) பெரும்பாலும் நரி புதர்களில் வாழும். குள்ளநரி குழிகளில் பதுங்கி வாழும். இதனால் 'நரிப்பள்ளம்' எனும் சொல் ஆற்றில் ஆழம் அளந்தறியாத பள்ளத்திற்குப் பெயர். குள்ளநரி வளைந்து வளைந்து உள்ள வழியில் குழிகளுக்குள் வாழுமெனக் கூறுவர். இக்குழிகளை எளிதில் அறிய முடியாது. நரிப் பள்ளம் என்ற வழக்கு இதனால் வந்தது. சங்கப்புலவர் ஒருவருக்கு 'நரிவெரூஉத் தலையார்' என்ற பெயர் காணப்படுகின்றது. நரிகள் பிணத்தையும், கழிவு ஊன்தசைகள், எலும்புகளையும் தின்று வாழுமாதலால் நரிகள் பயப்படும்படியான விலங்குத் தலையோ மனிதன் தலையோ இருக்க முடியாதெனக் கருதி அத்தகைய நரியும் பயப்படும்படியான உருவுடைய தலையை யுடையவராக அப் புலவர் இருந்திருப்பாரெனத் தெரிகின்றது. 'புலித்தலையை நாய் மோத்தலில்' என்றொரு பழமொழி உண்டு. புலியைக் கண்டால் நாய்க்கு மிக்க பயம். அதன் காரணமாக இறந்த புலியின் தலையைக் கண்டால்கூட நாய் பயப்படுமென்பதையே இப்பழமொழி கூறும். ஆனால் நரிகளுக்கு அத்தகைய பயம் கிடையாது. அவைகள் கூடப் பயப்படும்படியான தலை என்பதையே புலவர் பெயர் குறிப்பிடுகின்றது.

சங்ககாலத்தில் கோநாய் (Wolf) என்று வழங்கிய சொல் மறைந்துபோய் ஓநாய் என்ற சொல் பிற்காலத்தில் வழங்கியதாகத் தெரிகின்றது. ஓநாய்களும் ஊளையிடும் குணமுடையன வாகையால் ஓநாய் எனப் பெயரிட்டதாகத் தெரிகின்றது. சங்க இலக்கியத்திலும் சங்கம்மருவிய நூல்களிலும் குறுநரி, கணநரி (The Jackal), கோநாய் (The Wolf), நீநாய் (The Hyena) ஆகிய விலங்குகள் கூறப்பட்டிருப்பது வியப்பைத் தருவதாகும். ஏனெனில் நாயினத்தில் தமிழ்நாட்டில் காணப்படும் விலங்குகள் இவையே என விலங்கு நூலார் விளக்குகின்றனர். இவையுடன் செந்நாயையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். விலங்கு நூலார் தமிழ்நாட்டில் கண்டறிந்த எல்லா நாயின விலங்குகளையும் (The Canidae or the dog family) பழந்தமிழர் தெளிந்திருந்தனரென்பதைக் கவனிக்க வேண்டும். விலங்குநூலார் கணநரியை Canis Indicus என்றும், ஓநாயை Canis Lupus என்றும், நீநாயை Hyaena Striatus என்றும் அழைப்பர்.

---

## எ. செந்நாய்

### (The Wild Dog)

சங்க இலக்கியத்தில் செந்நாயைப் பற்றிச் சில செய்திகள் காணப்படுகின்றன. அச்செய்திகள் விலங்கு நூலார் கண்டறிந்த செய்திகளோடு ஒத்திருப்பது மிகவும் வியப்பைத் தருகின்றது. செந்நாய் என்ற சொற்பெயரே இதன் நிறத்தைக் குறித்துத் தோன்றியது. செந்நாயின் மேல்தோல் சிவப்பு நிறமாக (Distinctive Red Coat) இருப்பதாக விலங்கு நூலார் கூறுவர். செந்நாய் உருவில் வீட்டு நாயைப்போல இருக்கும். இதன் பற்கள் மிகவும் கூர்மையானவை என்று கூறுவர். இந்தக் கூர்மையான பற்களால் மான் முதலிய விலங்குகளின் சதையை அப்படியே கவ்விக் கிழித்து விடுமாம். இதன் கூரிய பற்களைப்பற்றிச் சங்கநூல்களில் சில செய்திகளைக் காணலாம்.

''அரந்தின் ஊசித் திரள்நுதி அன்ன
திண்ணிலை எயிற்ற செந்நாய் எடுத்தலின்''

(அகம், 199)

''பொன்வார்ந் தன்ன வைவால் எயிற்றுச்
செந்நாய் வெரீஇய புகருழை ஒருத்தல்''

(அகம், 219)

அரத்தால் தீட்டப்பட்ட இரும்பு ஊசிகளைத் திரளாக வைத்தாற் போன்ற திண்மையான நிலையையுடைய பற்களைக்கொண்ட செந்நாய் என்று கூறுவதை நோக்குக. மற்றும் "வள்ளெயிற்றுச் செந்நாய்', (அகம். 53), "வையெயிற்றுப் பிணவு" (ஐங்குறுநூறு, 323) என்றும் இதன் கூரிய பற்கள் விளக்கப்பட்டுள்ளன.

செந்நாய்களுக்கு மிகவும் வலிமை பொருந்திய பற்கள் (Powerful equipment of teeth) உண்டென்று விலங்கு நூலார் கூறுவர்.

செந்நாய் பொதுவாகக் காடுகளில்தான் காணப்படும். அதனால் இதைக் காட்டுநாய் என்றழைப்பர். தற்காலத்தில் மைசூர்ப் பகுதிகளில் காணப்படும் காடுகளில் செந்நாய் வாழ்கின்றது. அரிய சுரத்தில் காணப்பட்டதாகவும் (ஐங்குறுநூறு, 297, 354; நற்றிணை, 43), கானகத்தில் காணப்பட்டதாகவும் (அகம். 199), காட்டில் (நற்றிணை, 103; ஐங்குறுநூறு, 354)இருப்பதாகவும் சங்க நூல்களில் செந்நாயைப்பற்றிச் செய்திகள் வருகின்றன. செந்நாயைப்பற்றிய ஒரு முக்கியமான செய்தி சங்க நூலொன்றில் வருவது மிகுந்த வியப்பை அளிக்கின்றது. இச்செய்தி பெரும்பாணாற்றுப்படையில் வருகின்றது. செந்நாய், புலி, சிறுத்தையைப்போன்ற பெரிய விலங்கு அன்று. சிறியதாக இருப்பதால் எளிதாகப் பிற விலங்குகளைக் கொன்று உண்ண முடியாது. அதற்காகவே செந்நாய்கள் கூட்டமாகச் சேர்ந்து ஒற்றுமையாகக் கூடிப் பிற விலங்குகளை வேட்டையாடுகின்றன. இம்முறையாகக் கூட்டமாகக் கூடி வேட்டையாடுவதை விலங்கினங்களிலே செந்நாயின் தனித்த, அரிய தன்மையாக விலங்கு நூலார் கூறுவர். கூட்டமாகச் சேர்ந்து வேட்டையாடுவதால் செந்நாய்க்கு அதன் வன்மை மிகுகின்றது. பசியுடன் வேட்டையாடக் கிளம்பிய செந்நாய்க் கூட்டத்தைக் காட்டில் எந்த வன்மை பொருந்திய கொடிய விலங்கும் எதிர்க்க முடியாது. புலி, சிறுத்தை, கரடியைக்கூடச் செந்நாய்க் கூட்டங்கள் கொன்று தின்று விடும்.(Panther and bear and even tigers have been attacked and killed by wild dogs).

தனித்த புலி தனித்த செந்நாயைவிட மிக வலிமை வாய்ந்ததாக இருப்பினும் செந்நாய்க் கூட்டத்தின் ஒற்றுமையான வலிமையின் முன் பயனற்றதாகி விடுகின்றது. செந்நாய்கள் கூட்டம் கூட்டமாக (hunting in packs) வேட்டையாடும் தன்மையுடையவை என்பது பற்றிய குறிப்பான செய்தி பெரும்பாணாற்றுப்படையில் வருகின்றது.

> ''யானை தாக்கினு மரவுமேற் செலினு
> நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினுஞ்
> சூன்மகள் மாறு மறம்பூண் வாழ்க்கை
> வலிக்கூட் டுணவின் வாட்குடிப் பிறந்த
> புலிப்போத் தன்ன புல்லணற் காளை
> செந்நா யன்ன கருவிற் சுற்றமொடு
> கேளா மன்னர் கடிபுலம் புக்கு
> நாளா தந்து நறவுநொடை தொலைச்சி.'' (வரிகள்.134-141)

தமது வலிமையால் கூட்டமாகக் கொள்ளை கொண்டு செல்லும் குடியிற் பிறந்த, செந்நாய்க் கூட்டம் போன்ற சுற்றமொடு பகைவர்களுடைய நிரையைக் கவர்ந்த காளையைப்பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது. யானையே இடையில் தாக்கினும், பாம்பு மேலே ஏறினும், இடிவிழுந்தாலும் மறத்தைவிடாத வாழ்க்கையையுடைய வலிமையாகக் கூடி உணவைக் கைக்கொள்ளும் குடியில் பிறந்த அக்குடியின் தலைவன் புலிப்போத்திற்கு உவமிக்கப்பட்டிருக்கின்றான். தலைவனுடைய தனித்த வலிமையை நோக்கி அவனைப் புலிப்போத்திற்கு உவமித்த புலவர், தலைவன் பிறந்த குடியை "மறம்பூண் வாழ்க்கை வலிக்கூட் டுணவின் வாட்குடி" என்று விளக்குகிறார். இக்குடியில் வந்த காளையின் சுற்றத்தாரையே, காளையைத் தலைமையாகக் கொண்டு பகைவரின் நாட்டில் புகுந்து நிரை கவரும்

சுற்றத்தாரையே, செந்நாய்க் கூட்டத்திற்கு ஒப்பிட்டு "செந்நாயன்ன கருவிற் சுற்றமொடு" என்று விளக்குகிறார். "தான் குறித்த விலங்கின் மேலே செல்கின்ற நாய் அதனைத் தப்பாமற் கொள்ளுமாறு போன்ற" என்று இங்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர் விளக்கம் கூறியிருக்கின்றார். கூட்டமாக வேட்டையாடும் செந்நாய்க் கூட்டத்திற்கு வலிமையாக, கூட்டமாக உணவைக் கவரும் குடியில் பிறந்த காளையின் சுற்றத்தாரை ஒப்பிட்டது மிக மிகப்பொருத்தமே. அறிவும் பொருட் செறிவும் வாய்ந்த உவமை. செந்நாய் கூட்டமாக வேட்டையாடும்போது எந்தத் தடையும் அதன்முன் நில்லாது. புலி, கரடி முதலிய கொடிய விலங்குகளும் செந்நாய்க் கூட்டத்துக்கு அஞ்சும். இத் தகைய செந்நாய்க் கூட்டம் மிகப் பயங்கரமானதும் கொடுமை வாய்ந்ததுமாகும். இத்தகைய செந்நாய்க் கூட்டத்திற்கு யானை தாக்கினும், பாம்பு மேலேறினும், இடி மேலே விழுந்தாலும் அஞ்சாது மறம் பூண்ட வாழ்க்கையையுடைய வலிக்கூட்டுணவின் வாட்குடிச் சுற்றத்தை ஒப்பிட்டுக்கூறிய நுண்ணிய, செறிந்த புலமையைப் போற்றாமல் இருக்கமுடியாது. தான் குறித்த விலங்கின்மேல் தப்பாமற் சென்று அதைத் தட்டாமல் கொள்ளும் விலங்கு விலங்கினத்தில் செந்நாய்க் கூட்டமன்றி வேறில்லை என்பது விலங்கு நூலார் கண்ட உண்மை. அதுபோல் காளையைத் தலைமையாகக் கொண்ட சுற்றத்தாரும் கூட்டு வலிமையால் குறித்ததைத் தப்பாமல் எந்த இடையூறு வரினும் அஞ்சாது கொள்வர். செந்நாயும் தன் உணவைக் கூட்டுவலிமையினால் பெறுகின்றது என்பது விலங்கு நூலார் கண்ட அரிய உண்மை. செந்நாய் பெறுவதும் 'வலிக் கூட்

டுணவு.' காளையின் சுற்றத்தார் பெறுவதும் 'வலிக் கூட்டுணவு'. எவ்வளவு பொருத்தமான ஒப்புமை! இங்குச் செந்நாயின் அரிய குணத்தை உணர்ந்து சங்கப் புலவர் கையாண்ட அழகிய பொருத்தமான ஒப்பு மையை உணராதபடி 'செந்நாய்' என்ற சிறந்த பாடத்தைவிடுத்து நச்சினார்க்கினியர் 'செந்நாய்' என்று கொண்டு செல்+நாய் என்று பொருட்சிறப்பின்றி, பொருத்தமின்றி உரை யெழுதினார். 'செந்நாய்' என்ற சிறந்த பாடம் அடிக்குறிப்பில் காணப்படுகின்றது. 'செந்நாயன்ன கருவிற் சுற்றம்' என்று கொள்ளுங்கால், பெறப்படும் பொருட் பொருத்தமும் 'சென்னாயன்ன கருவிற் சுற்றம்' என்று கொள்ளுங்கால் வெளியாவ தில்லை. வலிக்கூட்டுணவின் 'வாட்குடி' என்பது சென் னாய்க்குப் பொருந்தாது. வீட்டு நாய்கள் வேட்டை யாடுவது தங்களுடைய உணவிற்கு அன்று. இயற்கை யில் அவை கூட்டமாக வேட்டையாடும் குணமுடை யனவும் அல்ல. 'வேட்டைச் செந்நாய்' என்றே சங்க நூல்களில் அடைமொழி கொடுத்துச் செந்நாயை அழைப்பதைக் கவனிக்க வேண்டும். இந்த அடை மொழி வீட்டு நாய்க்கு வழங்கவில்லை. செந்நாய் வேட்டையாடுவதைச் சங்கப் புலவர்கள் நன்கு அறிந் திருந்தனர் என்று தெரிகின்றது. செந்நாயைப்பற்றி வேறு செய்திகளையும் சங்க நூல்களில் பாடிய புலவர் கள் செந்நாயைப் பற்றிய இச்செய்தியை அறிந்திருக்க முடியாது என்று எவரும் கூறமுடியாது. இயற்கைச் செய்திகளைப் பற்றிய அறிவு மிகவும் குறைந்த பிற் காலத்தில் உண்மையான பொருளை உணரமுடியாத தால் அக்கால அறிவிற்கேற்பச் 'சென்னாய்' என்ற பாடத்தைச் சிறப்பாகக் கொண்டு உரை கண்டனர்.

செந்நாய்கள் கூட்டமாக வேட்டையாடும்போது புலி முதலிய கொடிய விலங்கிற்கும் அஞ்சாது. புலி தனது முயற்சியால் கொன்று உண்ணவிருக்கும் விலங்குணவைக் கூடச் சில சமயங்களில் செந்நாய்கள் பறித்துக் கொள்வதுண்டு என்று விலங்கு நூலார் கூறுகின்றனர். சில சமயங்களில் புலிக்கும் செந்நாய்க்கும் பூசலேற்பட்டு, புலியைச் செந்நாய்கள் கொன்று உண்பதுண்டு என்றும் விலங்கு நூலறிஞர் சிலர் கூறுகின்றனர். புலியைக் கொன்று செந்நாய்கள் உண்பதுண்டு என்பதைத் தமிழர் அறிந்திருந்தனர் என்பது அரிதாக வழங்கும் ஒரு பழமொழியிலிருந்து தெளிவாகின்றது. "புல்லைத் தின்னும் மாடு உதவுகிறதுபோலப் புலியைத் தின்னும் செந்நா யுதவுமோ" என்ற பழமொழியிலிருந்து செந்நாய் புலியையும் தின்னும் என்பதை உணர்ந்தனர் என்பது தெளிவு. *திராவிடப் பழங்குடி மக்களான பைகர்கள், 'பார்வதி முதலில் புலியைப் படைத்தாள், பின்னர் அதைத் துரத்த மகாதேவன் செந்நாய்களைப் படைத்தார்' என்று கதை கூறுவர். புலி செந்நாய்களுக்கு அஞ்சிப் பார்வதியிடம் தஞ்சம் புகுந்தன வென்பர்.

" நெடுங்கை வன்மான் கடும்பகை யுழந்த
குறுங்கை யிரும்புலிக் கோள்வ லேற்றை
பைங்கட் செந்நாய் படுபதம் பார்க்கும்
ஆரிரு ணடுநாள் வருதி"

(குறுந்தொகை, 141)

யானையுடன் போரிட்ட ஆண்புலியின் படுபதத்தைப் பசியுடைய செந்நாய் பார்க்கும் என்று குறுந்தொகை கூறுவதைக் கவனிக்கவும். புலி தனக்காக அடித்த

* 'Myths of Middle India' - Dr. Verrier Olwin.

விலங்குணவைச் செந்நாய்கள் புலியிடமிருந்து கைப் பற்றும் தன்மை விலங்கு நூலார் கூறியதே. யானை யுடன் போரிட்ட புலியைச் செந்நாய்கள் பார்த்திருந்தன என்று கூறுவதைக் கவனிக்க வேண்டும். இது விலங்கு நூலறிஞர் கூறும் செய்தியோடு ஒத்திருப்பது வியப்பிலாழ்த்துகிறது. புலி தான் கொன்ற விலங்கை உண்ணப் போகும்போது செந்நாய்கள் கூட்டமாக நெருங்குவதையும் புலி அக் கூட்டத்தின் வலிமைக்குப் பயந்து கொன்ற விலங்கை விட்டுவிட்டு ஓடுவதையும் சில விலங்கு நூலறிஞர்கள் கண்டறிந்து கூறியிருக் கின்றனர். சங்க காலத்திலேயே செந்நாயின், புலியை யும் கொல்லக்கூடிய கொடிய வலிமையை உணர்ந்தனர் என்பது தெரிகின்றது. இது பிற்காலத்துப் பழமொழி யில் வழங்குவது வியப்பினும் வியப்பே.

செந்நாய்கள் வேட்டையாடும்போது மிகக்கொடிய தன்மை வாய்ந்தவை என்று விலங்கு நூலார் கூறுவர். செந்நாய்கள் வேட்டையாடும்போது தம்முடைய தேவைக்கு மிகுதியாக மான் முதலிய விலங்குகளைக் கொன்று அழித்துவிடும். மற்றும் புலியைப் போன்று தாம் கொன்ற விலங்கை மறைத்து வைத்து மிச்சப் படுத்திச் சில நாட்களுக்கு உணவாக உண்பதில்லை. செந்நாய்கள் காட்டிலுள்ள மான் முதலிய விலங்குகளை வீணாக அழிப்பதினால் செந்நாய்களின் எண்ணிக்கை காடுகளில் மிகாதபடி கானப் பாதுகாவலர் கவனித்துக் கொள்வர். செந்நாய்களைச் சுட்டுக்கொல்வர். செந் நாய்கள் உண்ணும் தேவைக்குமேல் அளவு மீறிப் பிற விலங்குகளைக் கொல்வதால் அவைகள் உண்ணாமல் ஒழித்த விலங்குத் தசைகள் காட்டில் கிடக்கும். இதைச் சங்கநூல்கள் குறிப்பிடுகின்றன.

"என்றூழ் நீடிய குன்றத்துக் கவாஅன்
ஒய்பசிச் செந்நா யுயங்குமரை தொலைச்சி
யார்த்தன வொழித்த மிச்சில் சேய்நாட்
டருஞ்சுரம் செல்வோர்க்கு வல்சி யாகும்"

(நற்றிணை, 43)

"வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சின்னீர்
வளையுடைக் கைய ளெம்மொடு உணீஇயர்"

(குறுந்தொகை, 56)

"வேட்டச் செந்நாய் வேண்டா தொழித்த
காட்டுமா வல்சியர் கரந்தை பாழ்பட"

(பெருங்கதை, உஞ்சைக் காண்டம், காதை 52: 75 - 76 வரிகள்)

மேலே காட்டிய பாடல்களில் வேட்டையாடிய செந்நாய்கள் வேண்டாமல் விட்ட மிச்சத்தைச் சிலர் உண்பர் என்று கூறுவதைக் கவனிக்க வேண்டும். இன்றும் காட்டிலே வாழும் சில பழங்குடி மக்கள் செந்நாய்கள் கழித்த மிச்சத்தை உண்ணும் வழக்கமுடையவர் என்று அறிஞர்கள் கூறுவர். செந்நாய்கள் வேட்டையாடும்போது மானையோ பன்றியையோ பின்பற்றித் துரத்திச் செல்லும். அச்சமயத்தில் எப்பொழுதும் ஒரு நாய் முன்னிருந்து தலைமையாகச் சென்று (Leading) பின்னால் வரும் நாய்களுக்கு எப்படி, எங்கு மடக்குவது, எப்படித் தாக்குவது என்பதற்குரிய வழிகளைக் காட்டும். இறுதியில் மடக்கினவுடன் அந்த மானையோ, பன்றியையோ அரைவட்டமாகச் (Semi - Circle) சூழ்ந்து மேலே பாய்ந்து வாயில் அகப்பட்ட தசைப்பாகத்தைக் கிழித்துப் பிய்த்துவிடும். ஆதலின் செந்நாயிடம் அகப்பட்ட விலங்கு உயிரோடு இருக்கும் போதே கழுத்தோ, தொடையோ அப்படியே சதை

யோடு பிடுங்கப்பட்டுக் குற்றுயிரும் குலையுயிருமாகச் சாகும். புலி முதலிய விலங்குகள் பிற விலங்குகளைக் கொன்று சாகடித்துப் பின்னர் உண்ணும். ஆனால் செந்நாய்கள் மான் முதலிய விலங்குகளை உயிருடன் உண்ணும் கொடுமை மிகுந்தவை. பெரும்பாலும் தண்ணீர் திட்டாக (Pool of water) இருக்கும் இடத்தில் மான் முதலிய விலங்குகளை மடக்கித் தாக்குவது செந்நாய்கள் கையாளும் வேட்டை முறையாகும். குறுந்தொகைப் பாடலில் செந்நாய்கள் வேட்டையாடிய மிச்சம் 'சின்னீரில்' அழுகிக் கிடந்ததாகக் கூறுவதை நோக்குக.

"......................................வையெயிற்று
ஊனசைப் பிணவின் உறுபசி களைஇயர்
காடுதேர் மடப்பிணை யலறக் கலையின்
ஓடுகுறங்கு அறுத்த செந்நா யேற்றை
வெயில்புலந் திளைக்கும் வெம்மைய பயில்வரி"

(அகம். 285)

ஓடும் கலைமானின் தொடையை அறுத்த செந்நாய் என்று கூறுவதைக் கவனிக்கவும். செந்நாய்கள் கலைமானை மடக்கிக் கொண்டு அதன் தசையைக் கடித்து, பிய்த்துத் தின்றுவிடும் தன்மையுடையவை என்று விலங்கு நூலார் கூறுவர். (I have heard of instances when a sambur, followed relentlessly by a pack for several hours has at length succumbed when its entrails were trailing in the ground) குடல்தொங்கி ஓடிய கடமானைச் செந்நாய்கள் கொன்றதை விலங்கு நூலாசிரியர் ஒருவர் (Augustus Somerville in the passing of Forest Gods) கூறியிருப்பதைக் கவனிக்கலாம். தொடையை அறுத்தால் குடல் தொங்குவது இயற்கையே. அகப்பாடல் கூறுவது அரிய உண்மைச் செய்தியே யாகும்.

செந்நாய்கள் பெரும்பாலும் விரும்பி வேட்டையாடி உண்பது மான்களும் காட்டுப் பன்றிகளுமே என்று விலங்கு நூலார் கூறுவர். செந்நாய்கள் ஒரு காட்டில் மிகுந்து விட்டால் மான்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிடும் என்று கூறுவர். செந்நாய்கள் காட்டுப் பன்றியையும், புள்ளிமானையும், மரையினத்தையும் (நற்றிணை, 43) கடமானையும் கொல்வதாகச் சங்கப் பாடல்களில் கூறப்பட்டிருக்கின்றது. விலங்கு நூலாரும் இவ் விலங்குகளையே பெரும்பாலும் செந்நாய்கள் கொன்று உண்பதாகக் கூறுகின்றனர்.

தென்னிந்தியாவில் செந்நாய்கள் வறட்சியான வெயில் காலத்தில் மான் முதலிய விலங்குகள் போதிய அளவு கிடைக்கா விட்டால் பசியால் வாடும். அக்காலத்தில் விலங்குணவிற்கு வழியின்றி வில்வமரத்தின், கருவிளாமரத்தின் உருண்டையான கீழே விழுந்து கிடக்கும் பழங்களை விரும்பி உண்பதாக விலங்குநூலார் கண்டு பிடித்திருக்கின்றனர். அகநானூற்றில் வரும் ஒரு செய்தி இது சார்பாக ஆராயத்தக்கது. செந்நாய்களுக்குப் பயந்த கலைமான் கருவிளாவின் பழத்தில் இருக்கும் துளைவழியாகச் சென்ற காற்றின் ஓசையைக் கேட்டுக் கோவலரின் இசையென்று நினைத்ததாகக் கூறுகின்றது.

“பொன்வார்ந் தன்ன வைவால் எயிற்றுச்
செந்நாய் வெரீஇய புகருழை ஒருத்தல்
பொரியரை விளவின் புன்புற விளைபழம்
அழலெறி கோடை தூக்கலிற் கோவலர்
குழலென நினையும் நீரில் நீளிடை” (அகம், 219)

இதில் கூர்ந்து கவனிக்க வேண்டியது செந்நாயையும் கலைமானையும் விளாம்பழத்தையும் இணைத்துப்

பாடியது. நீரில்லா நீளிடையில் விளாமரத்தின் பழத்தின் துளைவழியாக வரும் ஓசையைக் கேட்டுக் கோவலர் ஊதும் இசையென்று செந்நாய்க்குப் பயந்த கலைமான் பாதுகாப்புக்காக அங்கு வருகின்றது. ஆனால் அவ்விடம் பாதுகாவலாக அமையவில்லை. காரணம் செந்நாய் இருத்தலின். இதிலிருந்து செந்நாய்க்கும் விளாமரத்தின் பழங்கள் விழுந்த இடத்திற்கும் இருந்த நெருங்கிய தொடர்பைச் சங்ககாலப் புலவர்கள் அறிந்திருந்தனரோ என்ற ஐயம் எழுகின்றது. செந்நாய்களுக்குப் பயந்து ஓடும் மான்கள் மனிதர் இருக்கும் இடத்தில் தஞ்சம் புகுவதுண்டு என்பதையும் விலங்கு நூலார் கண்டுள்ளனர்.

மான்களையும் பன்றிகளையும் செந்நாய்கள் வேட்டையாடும் செய்திகள் சங்க நூல்களில் வருமிடங்களை ஆராய்வோம் :

"சிலம்பி வலந்த வறுஞ்சினை வற்றல்
அலங்கல் உலவை அரிநிழல் அசைஇத்
திரங்குமரல் கவ்விய கையறு தொகுநிலை
அரந்தின் ஊசித் திரள்நுதி அன்ன
திண்ணிலை எயிற்ற செந்நாய் எடுத்தலின்
வளிமுனைப் பூளையின் ஒய்யென்று அலறிய
கெடுமான் இனநிரை தரீஇய கலையே
கதிர்மாய் மாலை ஆண்குரல் விளிக்குங்
கடல்போல் கானம் பிற்படப் பிறர்போல்"

(அகம், 199)

மேற்காட்டிய பாடலில் ஒரு பெருங் காட்டில் நடந்த ஒரு நிகழ்ச்சியைப் படம் பிடித்தாற்போன்று புலவர் கூறியிருக்கின்றார். தொகுதியாக இருந்த புள்ளி மான்கள் அலறி அங்குமிங்குமாக ஓடிச் சிதறுகின்றன.

பூளைப்பஞ்சு காற்றடித்துச் சிதறுவதுபோல் சிதறி ஓடின. அந்தச் சிதறிய மந்தையைக் கூட்டுவதற்காக மந்தையிலிருந்த கலைமான் குரல் விளித்து அழைக்கின்றது. இக் காட்சியை விலங்கு நூலறிஞர் உண்மைச் செய்தியென்று ஒப்புக் கொள்வர்.

" இருங்கல் விடரகத் தீன்றிளைப் பட்ட
மென்புனிற் றம்பிணவு பசித்தெனப் பைங்கண்
செந்நாய் ஏற்றை கேழல் தாக்க
இரியல் பிணவல் தீண்டலின் பரீஇச்
செங்காய் உதிர்த்த பைங்குலை ஈந்தின்
பரல்மண் சுவல முரணிலம் உடைத்த"

(அகம், 21)

அகப்பாடல் 21 பன்றியைச் செந்நாயின் ஏற்றைத் தாக்குவதாகவும் பன்றி ஓடுவதையும் கூறுகிறது.

" வள்ளெயிற்றுச் செந்நாய் வயவுறு பிணவிற்குக்
கள்ளியங் கடத்திடைக் கேழல் பார்க்கும்
வெஞ்சுரக் கவலை நீந்தி..........."

(ஐங்குறுநூறு, 323)

" கவிழ்மயிர் எருத்தின் செந்நாய் ஏற்றை
குருளைப் பன்றி கொள்ளாது கழியும்
சுரம்நனி வாரா நின்றனள்" (ஐங்குறுநூறு, 397)

" சிர்ம்பிணவு புணர்ந்த செந்நா யேற்றை
மறியுடை மான்பிணை கொள்ளாது கழியும்
அரிய சுரன்வந் தனரே" (ஐங்குறுநூறு, 354)

ஐங்குறுநூற்றுப் பாடல்களில் செந்நாய் பன்றியை வேட்டையாடக் கவனிக்கும் செய்தியையும் வேட்டையாடாது விட்டுவிடும் செய்தியையும் கூறியிருப்பதைப் பார்க்கும்போது முரண்பாடாகத் தோன்றுகிறது. ஐங்குறுநூறு 323 ஆம் பாடலில் காட்டுப்பன்றி அகம்

படுமா என்று செந்நாய் பார்த்ததாகக் கூறப்பட்டிருக் கின்றது. ஆனால் ஐங்குறுநூறு 354, 397 ஆம் பாடல் களில் பன்றியையும் மானையும் கொள்ளாது விடுவ தாகக் கூறப்பட்டிருப்பது வியப்பான செய்தியாகும். இச் செய்தியைச் சங்கப் புலவர்கள் உண்மையிலேயே நேரில் கண்கூடாகக் கண்டு கூறியதாகத் தெரிகின்றது. இதன் விளக்கம் விலங்குநூல் படித்தவருக்கு விளங்கும். செந்நாய்களுக்குப் பசியெடுக்கும்போது வேட்டை யாடும் குறிப்பும் பசியின்றிப் பழகும்போது வேட்டை யாடாத குறிப்பும் பிற விலங்குகளுக்குச் செந்நாய்களைக் காட்டில் காணுங்கால் நன்கு தெரியுமாம். செந்நாய் களிடம் வேட்டையாடாக் குறிப்பைக் கண்டால் மான் முதலிய விலங்குகள் செந்நாய்களைக் கண்டாலும் கவனிப்பதில்லை. அஞ்சி ஓடுவதும் இல்லை. இதனால் புல் மேயும் கடமான் கூட்டத்தில் செந்நாய்கள் காணப் படுவதும் அவைகளைக் கண்டும் கடமான்கள் கவனிக் காது மேய்வதுமான காட்சியை விலங்கு நூலறிஞர்கள் கண்டு வியப்படைந்திருக்கின்றனர். ஐங்குறு நூற்றில் இந்தச் செய்தியே கூறப்பட்டிருக்கின்றது என்று கருதலாம். ஈர்ம்பிணவு புணர்ந்த செந்நாயேற்றை மான்பிணையைக் கொள்ளாது விட்டுவிடக் காரணம் அதற்குப் பசியில்லாமல் பிணவைப் புணர்ந்த திருப்தி யாக இருக்கும். ஐங்குறு நூற்றில் "கொள்ளாது கழியும்" என்று இரு இடங்களில் கூறப்பட்ட செய்தி செந்நாயின் வியப்புக்குரிய இச்செய்தியை எடுத்துக் காட்டவேயாகும் என்பது தெளிவு.

செந்நாயின் மற்றொரு முக்கிய குணம், கடும் வெயிலில் அடிக்கடி தண்ணீர் இருக்கும் இடத்தில்,

ஈரத்தில் தன் வயிற்றைப் பொருத்தி ஓய்வெடுத்த தென்று (Lie in water) விலங்கு நூலறிஞர் கண்டுள்ளனர்.

" களிறுநின்று இறந்த நீரல் ஈரத்துப்
பால்வீ தோல்முலை அகடுநிலஞ் சேர்த்திப்
பசியட முடங்கிய பைங்கண் செந்நாய்
மாயா வேட்டம் போகிய கணவன்
பொய்யா மரபிற் பிணவுநினைந் திரங்கும்
விருந்தின்வெங் காட்டு வருந்துதும் யாமே"

(நற்றிணை. 103)

நற்றிணைப் பாடலில் வெம்மையான காட்டில் தண்ணீர் இல்லாததால் செந்நாயின் பெண் துணை, யானைபெய்த சிறுநீரின் ஈரத்தில் தன்னுடைய பால் மடியையுடைய வயிற்றைப் பொருத்தி ஆண் துணையை நினைந்து இருந்ததாகக் கூறியிருக்கிறதைக் கவனிக்க வேண்டும். இது சங்கப்புலவர் கண்டு கூறிய மிக வியப்புக்குரிய உண்மைச் செய்தியாகும்.

செந்நாய்கள் கூட்டம் கூட்டமாக (Packs) வாழ்ந் தாலும் பருவ உணர்ச்சி உண்டாகும் காலத்தில் ஆணும் பெண்ணுமாகக் கூடிக் கூட்டத்தை விட்டுப் பிரிந்து போய்த் தனியாக வாழ்க்கை நடத்துகின்றன என்று விலங்கு நூலார் கூறுவர். செந்நாய்கள் இணையாக வாழ்ந்து குட்டிகள் ஈன்றதும் திரும்பவும் கூட்டத்தில் சேர்ந்து விடுகின்றன. செந்நாய்கள் கூட்டம் கூட்டமாகவும், சில காலங்களில் ஆண், பெண் இணையாகவும் காணப்பட்டதைக் கண்ட விலங்கு நூலறிஞர்கள் முதலில் செந்நாய்களில் இரு இனங்கள் உண்டு என்று கருதினர். ஓர் இனம் கூட்டமாக வாழும், மற்றோர்

இனம் இணையாக வாழும் இயல்புடையன என்று கருதினர்கள். ஆனல் மேலும் ஆராய்ந்ததில் பருவ காலத்தில் ஏற்படும் மாற்றமே யொழியச் செந்நாய் களில் இரு இனங்கள் கிடையா என்று முடிவு கண்டனர். சங்க நூல்களில் செந்நாய் இணையாக வாழ் வதைப் பற்றியே மிகுதியாகக் கூறப்பட்டிருக்கின்றது.

> "அத்தக் கேழல் அட்ட நற்கோள்
> செந்நாய் ஏற்றை கம்மென ஈர்ப்பக்
> குருதி யாரும் எருவைச் செஞ்செவி" (அகம், 111)

> "நீரற வறந்த நிரம்பா நீளிடை
> வள்ளெயிற்றுச் செந்நாய் வருந்துபசிப் பிணவொடு
> கள்ளியங் காட்ட கடத்திடை" (அகம், 53)

மேற்காட்டிய அகநானூற்றுப் பாடல்களிலும், ஐங்குறு நூறு, நற்றிணைப் பாடல்களிலும் (ஐங்குறுநூறு 323, 354, 397 ; நற்றிணை 103 ; அகம் 21, 285) ,செந்நாயின் ஏற்றையைப் பற்றியும் பிணவைப் பற்றியும் செய்திகள் வருவதால் சங்கப் புலவர்கள் செந்நாய்கள் பருவகாலத் தில் இணையாக வாழ்வதை நன்கு உணர்ந்தனரென்பது தெரிகின்றது. செந்நாய்கள் இணையாக வாழும்போது தனியாக வேட்டையாடுவதும் உண்மையே. "ஈர்ம் பிணவு புணர்ந்த செந்நா யேற்றை" என்று ஐங்குறு நூறு செந்நாய்கள் பருவகாலத்தில் இணைவதைக் குறிப் பிட்டிருக்கின்றது.

> "இருங்கல் விடரகத் தீன்றிளைப் பட்ட
> மென்புனிற் றம்பிணவு பசித்தெனப் பைங்கண்
> செந்நாய் ஏற்றை கேழல் தாக்க"

என்று வரும் அகநானூற்றுப் பாடல் செந்நாயின் பெண் துணையானது பாறைப் பிளப்பில் குட்டிகளை ஈன்பதும், பசித்திருக்கும் பெண் நாய்க்கு ஆண் நாய்

இரை தேடுவதும் பற்றிக் கூறுவதைக் கவனிக்க வேண்டும். செந்நாய்கள் இணையாக வாழ்வதன் பழக்கத்தை உணர்ந்தே செந்நாயின் ஏற்றையானது "மாய வேட்டம் போகிய கணவன்" என்று வரும் நற்றிணைப் பாடல் வரியில் 'கணவன்' என்றே அழைக்கப்படுகின்றது. குட்டி ஈன்ற பின்னர்க் காணப்படும் பால் மடியைக்கூட ஒரு சங்கப் புலவர் "பால்வீ தோல்முலை" என்று அழகாகக் கூறிச்சென்றுர். செந்நாயை 'Cuon alpinus' என்று விலங்கு நூலார் அழைப்பர்.

காட்டில் வாழும் செந்நாயைப்பற்றிச் சங்கப் புலவர்கள் தெரிந்திருந்த செய்திகள் தற்காலம் விலங்கு நூலறிஞர்கள் கண்ட செய்திகளோடு ஒத்திருப்பதைக் கண்ட எவரும் சங்கப்புலவர்களின் நுண்ணிய அறிவையும் அதை எடுத்துக் கூறிய திறத்தையும் போற்ருதிருக்க முடியாது.

## அ. கரடி

சங்க இலக்கியத்தில் கரடியைப்பற்றிச் சில செய்திகள் காணப்படுகின்றன. கரடி என்ற பெயர் சங்க இலக்கியத்தில் வழங்கவில்லை. எண்கு, உளியம் என்ற பெயர்களே கரடியின் பெயர்களாக வழங்கின. கரடிகள் காடுகளில் வாழ்வதாகவும், கற்பாறைகளும் பெருங்கற்களும் சிதறிக் கிடக்கும் பகுதிகளில் (Outcroppings of rock and tumbled boulders) விரும்பி வாழ்வதாகவும் விலங்கு நூலார் கூறுவர். பாறைகளின் இடுக்குகளிலும் வெடிப்புக்களிலும் வெயிற்கும் மழைக்கும் பாதுகாப்பாகக் கரடிகள் வாழ்வதாகக் கூறுவர். 'குன்றத்துக் கவான்' (அகம், 201), 'மலைச் சுரநீளிடை' (நற்றிணை, 192) 'வரை சேர் சிறுநெறி' (நற்றிணை, 336) ஆகிய சூழலில் கரடிகள் காணப் பட்டதாகச் சங்கநூல்கள் கூறுகின்றன. "குடாவடி யுளியம் பெருங்கல் விடரளைச் செறிய' (திருமுரு காற்றுப்படை 313-314) என்ற வரிகளில் பெரிய பாறைப் பிளப்புகளில் கரடி வாழ்வது குறிப்பிடப் பட்டிருக்கின்றது. 'இட்டில் இரும்புழையில்' கரடி வாழ்வதாக யாப்பருங்கல விருத்தியின் மேற்கோள் பாடல் கூறுகின்றது.

> "படிந்தில சீறடி பரல்வெங் கானத்துக்
> கோள்வல் உளியமுங் கொடும்புற் றகழா"
>
> —சிலம்பு. 13:4-5

கரடி பரல்வெங்கானத்தில் வாழ்வதாகக் கூறி யிருப்பதை நோக்குக.

இரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குருஉமயி ரியாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறிய........''

—திருமுருகாற்றுப்படை, 312-4.

மேற்காட்டிய பாடலில் கரடியின் மயிர் விளக்கப் படுகின்றது. வெட்டிய பனைமரத்தின் புறத்தே காணப் படும் பனைமரக் கம்பிகளைச் செறும்புகள் என்பர். அந்தச் செறும்புகளையொத்து கரடியின் மயிர் இருந்ததாகக் கூறியது பொருத்தமாகும். கரடியின் மயிர் பெரிதாக நீண்டு காணப்படுவதால் (Long shaggy and coarse hair) "எண்கின் பரூஉமயிர் ஏற்றை'' என்று (நற்றிணை, 325) கூறுகிறது. இதன் வலிமை பொருந்திய கையைப் பற்றிச் சங்க நூல்கள், 'பெருங்கை யேற்றை' (அகம், 8) 'பெருங்கை எண்கு' (அகம், 144, 201, 307), 'வண்கை யெண்கு' (அகம், 15) என்று குறிப்பிடுகின்றன. கரடி யின் முன்கால்களில் நகங்கள் (Long and large claws) நீண்டு தந்தம் போல் காணப்படும். கரடியின் முன் கால்களைக் 'கை' என்று சங்க நூல்கள் அழைக்கின்றன.

''பீரிவர் கூரை மறுமனைச் சேர்ந்தல்கிக்
கூருகி ரெண்கி னிருங்கிளை கண்படுக்கும்
நீரி லருஞ்சுர முன்னி யறியார்கொல்''

—ஐந்திணையெழுபது, 32

கரடியின் கூரிய நகங்களைப் பற்றி நற்றிணை 325 ஆம் பாடலிலும் "முரவாய் வள்ளுகிர்'' (Large and long claws) என்று கூறப்படுகின்றது. கரடியின் முனை ஒடிந்த, தடித்த நகத்தைப்பற்றிச் சொல்லியிருப்பது கவனிக்கத் தக்கது. கரடியைப் பார்வைக்கு மிகவும் அழகற்ற விலங்காகக் கருதுவர். கரடி போல இருக்

கிருன் என்ருல் அழகற்றும் மயிர் நீண்டு வளர்ந்தும் காணப்படுகின்ருன் என்பதே பொருளாகும்.

> "கள்ளடு குழிசியுங் கழிமுடை நாற்றமும்
> வெள்ளென் புணங்கலும் விரவி யிருக்கையில்
> யெண்குதன் பிணவோ டிருந்ததுபோல"
>
> —மணிமேகலை, 16. ஆதிரை பிச்சையிட்ட காதை.

நாகரிகமற்ற நாகர்கள் கரடி போல இருந்ததாகக் கூறப்பட்டிருப்பதை நோக்குக.

விலங்கு நூலார் கரடிகள் உணவு உண்பதைப் பற்றிய செய்திகளையே விரிவாகக் கூறியுள்ளனர். சங்க இலக்கியத்திலும் கரடி உணவு தேடுவதைப் பற்றியே பல பாடல்கள் கூறுகின்றன. கரடிகள் பகலெல்லாம் பாறைப் பிளப்பிலேயோ, முழையிலோ உறங்குகின்றன. பொழுது சாயும் காலத்தில் வெளியே இரை தேடச் செல்கின்றன. இரவெல்லாம் உணவுக்காக வெகு தொலைவு அலையும் என்று விலங்கு நூலார் கூறுகின்றனர். இரவில் இரை தேடும் கரடியைப் பற்றிச் சங்க நூல்களில் பல பாடல்கள் குறிப்பிடுகின்றன. இரவில் தலைவியைக் காண வரும் தலைவனுக்கு வரக் கூடிய பல ஊறுகளில் இரை தேடி வரும் கரடியைக் கூறுவது ஒரு சங்க நூல் வழக்கு. நடுநாளிலும் (நற்றிணை, 125) அரை நாளிலும் (அகம். 112) இரவிலும் (நற்றிணை, 336) பானாட் கங்குலிலும் கரடி இரை தேடுவதாகக் கூறப்பட்டுள்ளது.

> "இட்டில் இரும்புழை இருளிய பொழுதே
> பட்டி உளியம் கொட்கும் ஆங்கே
> பொற்றொடி உண்கண் நீர்கில் லாவே
> வெற்ப! வாரன் வியன்மலை யாறே"
>
> —யாப்பருங்கல விருத்தி, மேற்கோள் செய்யுள்.

"வால்வெள் ளருவி வரைமிசை யிழியவும்
கோள்வல் லுழுவை விடரிடை யியம்பவும்
வாளுகி ருளியம் வரையக மிசைப்பவும்
வேலொளி விளக்கினர் வரினே
யாரோ தோழி! வாழ்கிற் போரே."

யா. விருத்தி. மேற்கோள் செய்யுள்

மேலே காட்டிய யாப்பருங்கல விருத்தி மேற்கோள் பாடல்களில் வரும் இயற்கை வர்ணனை தலைவியின் உள்ளுணர்ச்சியை வெளிப்படுத்தும் பகைப்புலனாக, சிறப்பாக அமைந்திருக்கின்றது. சிறிய பாறைப் பிளப்பில் இருளத் தொடங்கியதும் கரடி வெளியே திரியுமென்று கூறியிருப்பது உண்மையான செய்தியாகும். புலி இரவிலே திரியும் விலங்கு. புலி உறுமும் இரவுக் காலத்தில் கரடியும் ஓசையிடுவதாகக் கூறுவதைக் காணலாம்.

"ஆரிடை யுழந்த மாதரை நோக்கிக்
கொடுவரி மறுகும் குடிஞை கூப்பிடும்
இடிதரு முளியமு மினையா தேகென"

—சிலப். புறஞ். ௯௦-௯௯.

இரவில் கோட்டான் குரலிடும் வேளையில், புலி திரியும் நேரத்தில் கரடி கத்தியதாகச் சிலம்பில் கூறப் பட்டிருக்கின்றது. மழைக் காலத்திலும் மேக மூட்டம் இருக்கும் காலத்திலும் கரடிகள் பகலிலேகூட இரை தேடிச்செல்வதுண்டு என்று விலங்கு நூலார் கூறுவர்.

"உருவத் துருவின் நாள்மேயல் ஆரும்
மாரி எண்கின் மலைச்சுர நீளிடை" —நற்றிணை, 192

மாரிக் காலத்தில் வைகறைப் பொழுதிலேயே ஆட்டு மந்தைகளைப் போல கரடிகள் இரை தேடிய

தாகக் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது. "நாளுலா எழுந்த கோள்வல் உளியம்" என்று அகநானூறு (81) விடியற்காலையில் வெளியே உலவும் கரடிகளைப் பற்றிக் கூறியிருக்கின்றது.

கரடியின் உணவு பெரும்பாலும் பழங்களும் பூச்சிகளுமே. கரடிகள் தமக்குத் தேவையான உணவைத் தேடுவதற்காக மிகவும் அலைந்து திரியும். வெயில் காலத்தில் பல செடிகளின் பழங்களைப் பறித்துத் தின்னும். மரத்தில் ஏறித் தேன் கூடுகளை அழித்து உண்பது கரடிகளின் வழக்கம். மரப்பட்டைகளிலும் பாறைகளின் இடுக்குகளிலும் கிடைக்கும் பூச்சி புழுக்களையும் கரடிகள் விரும்பி உண்பதுண்டு. ஆனால் கரடிகளுக்கு மிகவும் விருப்பமான உணவு புற்றில் வாழும் கறையான்களும், இலுப்பை மரத்தின் பூக்களுமேயாகும் என்று விலங்கு நூலார் கூறுகின்றனர். காடுகளில் அகழப்பட்டோ, அழிக்கப்பட்டோ கறையான் புற்றுகள் காணப்படுமாயின் அது கரடியின் வேலையாயிருக்கும் என்று விலங்கின அறிஞர்கள் கூறுகின்றனர். (Their main insect food is termites. Ruined and dug-out termite mounds are evidence that the bears are about.)

> "படிந்தில சீறடி பரல்வெங் கானத்துக்
> கோள்வல் லுளியமுங் கொடும்புற் றகழா"

—சிலம்பு. 13 - புறஞ்சேரியிறுத்த காதை. வரி 4-5.

சிலப்பதிகாரத்தில் கரடிகள் புற்றை அகழும் பழக்கம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. நேரிட்டவரைக் கைக்கொள்ளுதற்கு வலிய கரடியும் தாம் அகழக்கடவ புற்றினை அகழா என்று உரை கூறப்பட்டுள்ளது.

"அகழக் கடவ புற்றினை" என்று சொல்வதில் உள்ள நுண்ணிய கருத்து விலங்கு நூல் படித்தோருக்கு நன்கு விளங்கும். கறையான் புற்றைக் கரடிகள் விரும்பித் தோண்டுவதையும் அழிப்பதையும் சங்க நூல்கள் தெளிவாகக் கூறுகின்றன.

"நாளுலா எழுந்த கோள்வல் உளியம்
ஓங்குசினை இருப்பைத் தீம்பழம் முனையிற்
புல்லளைப் புற்றின் பல்கிளைச் சிதலை
ஒருங்குமுயன் றெடுத்த நனைவாய் நெடுங்கோடு
இரும்பூது குருகின் இடந்திரை தேரும்
மண்பக வறந்த ஆங்கண் கண்பொர" —அகம், 81

"கூனல் எண்கின் குறுநடைத் தொழுதி
சிதலை செய்த செந்நிலைப் புற்றின்
மண்புனை நெடுங்கோ டுடைய வாங்கி
இரைநசைஇப் பரிக்கும் அரைநாட் கங்குல்" அகம், 112

"இருள்கிழிப் பதுபோல் மின்னி வானம்
துளிதலைக் கொண்ட நளிபெயல் நடுநாள்
மின்மினி மொய்த்த முரவுவாய்ப் புற்றம்
பொன்னெறி பிதிரிற் சுடர வாங்கிக்
குரும்பி கெண்டும் பெருங்கை ஏற்றை
இரும்புசெய் கொல்லெனத் தோன்றும் ஆங்கண்"

—அகம், 72

"சிறுபுன் சிதலை சேண்முயன் றெடுத்த
நெடுஞ்செம் புற்றத்து ஒடுங்கிரை முனையின்
புல்லரை இருப்பைத் தொள்ளை வான்பூப்
பெருங்கை எண்கின் இருங்கிளை கவரும்
அத்த நீளிடைப் போகி நன்றும்"

—அகம், 149

"இருங்கிளை எண்கின் அழல்வாய் ஏற்றை
கருங்கோட்டு இருப்பை வெண்பூ முனையின்

பெருஞ்செம் புற்றின் இருந்தலை யிடக்கும்
அரிய கானம் என்னூர்..."

— அகம், 247

"பெருங்கை எண்கினம் குரும்பி தேரும்
புற்றுடைச் சுவர புதலிவர் பொதியிற்
கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து" —அகம், 307

"கவிதலை எண்கின் பரூஉமயிர் ஏற்றை
இரைதேர் வேட்கையின் இரவிற் போகி
நீடுசெயற் சிதலைத் தோடுபுனைந்து எடுத்த
அரவாழ் புற்றம் ஒழிய ஒய்யென
முரவாய் வள்ளுகிர் இடப்ப வாங்கும்
ஊக்கருங் கவலை நீந்தி மற்றிவள்"

—நற்றிணை, 325

"இரவில் அஞ்சாய் அஞ்சுவல் அரவின்
ஈரளைப் புற்றங் காரென முற்றி
இரைதேர் எண்கினம் அகழும்
வரைசேர் சிறுநெறி வாரா தீமே"

—நற்றிணை, 336

மேற்காட்டிய சங்கப் பாடல்களில் கறையான்கள் கூட்டமாக ஒருங்கு முயன்றெடுத்த ஈரமான புற்றுக் குன்றுகளைக் கரடிகள் உடைத்ததாகவும், அகழ்ந்ததாக வும், அழித்ததாகவும் கூறியிருப்பது சங்கப் புலவர்கள் நேரில் கண்டு கூறிய அரிய செய்தியாகும். மின் மினிப் பூச்சிகள் மொய்த்த கறையான் புற்றில் குறும்பி தோண்டும் கரடி இரும்பை அடிக்கும் கொல்லனைப் போல் தோன்றியதாகக் கூறியது அழகிய உவமை. இரும்பைக் காய்ச்சி அடிக்கும்போது தெறிக்கும் நெருப்புப் பொறி மின்மினிப் பூச்சிக்கு ஒப்பிட்டது மிகவும் பொருத்தமாகும். இதில் வரும் செய்தியும்

உண்மையானதே. புற்றுக்குள் இருக்கும் இரையைத் தேடிப் புற்றைத் தோண்டியதாகக் கூறியுள்ளனர். புற்றத்துக்குள் இருந்த கறையான் புழுக்கள், முட்டைகள் ஆகியவற்றை "புற்றத்து ஒடுங்கிரை" "புற்றத்து அல்கிரை" என்றும், 'குறும்பி, குறும்பி வல்சி' என்றும் கூறியுள்ளனர். காதுக்குள் இருக்கும் அழுக்கை இக்காலத்தில் 'குரும்பி' என்று வழங்குவர். புற்றுக்குள் இருக்கும் இரையைக் குறிக்கச் சங்க காலத்தில் இச்சொல் வழங்கியது. கரடிகள் கறையான் புற்றை உடைத்து அதற்குள்ளிருக்கும் இரையை உறிஞ்சி உண்ணும் என்று விலங்கு நூலார் கூறுவர். (Bears are very fond of sucking out their food from Ant hills. They apply their snouts to holes in the termite hills or sometimes dig these holes themselves, then blow air into the earth and finally start sucking for all they are worth. Breaking down a termite mound with its claws, a sloth bear with prodigious huffs and puffs blows away the dense debris and then, sucks the termite up out of their galleries-sloth bears commonly feed by sucking the termites or grubs of insects)

"இரும்பூது குருகின் இடந்திரை தேரும்"

—அகம், 81

"இரைதேர் எண்கின் பகுவாய் ஏற்றை
கொடுவரிப் புற்றம் வாய்ப்ப வாங்கி
நல்லரா நடுங்க உரறிக் கொல்லன்
ஊதுலைக் குருகின் உள்ளுயிர்த்து அகழும்
நடுநாள் வருதல் அஞ்சுதும் யாமென"

—நற்றிணை, 125

ஊது உலையில் காற்று புகுந்து வெளிவரும்போது உண்டாகும் ஒலிபோல் ஓசை செய்து தோண்டி இரை தேடியதாக அகம், 81 ஆம் பாடல் கூறுவதைக்

கூர்ந்து கவனிக்கவும். கொல்லனுடைய ஊது உலை மூக்கில் வரும் ஓசை போலக் கரடி உள்ளுயிர்த்து (sucking) அகழ்ந்ததாக நற்றிணை, 125 ஆம் பாடல் கூறுகின்றது. இச்செய்தியையும் விலங்கு நூலார் குறிப்பிட்டுக் கூறியிருப்பது வியப்பூட்டுகின்றது. சில சங்கப்பாடல்களில் கரடிகள் கறையான் புற்றை அகழும்போது பாம்பைப் பிடித்ததாகக் கூறியிருக்கும் செய்தி ஆராயத்தக்கது.

"துன்புறு தகுந ஆங்கண் புன்கோட்டு
அரிலிவர் புற்றத்து அல்கிரை நசைஇ
வெள்ளரா மிளிர வாங்கும்
பிள்ளை எண்கின் மலைவயி னானே"

—அகம், 257

"காம்பமல் இறும்பில் பாம்புபடத் துவன்றிக்
கொடுவிரல் உளியம் கெண்டும்
வடுவாழ் புற்றின வழக்கரு நெறியே"

—அகம், 88

"ஈயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த
குரும்பி வல்சிப் பெருங்கை யேற்றை
தூங்குதோல் துதிய வள்ளுகிர் கதுவலின்
பாம்புமதன் அழியும் பானாட் கங்குலும்"

—அகம், 8

இரைக்காகக் கறையான் புற்றைத் தோண்டுங்கால் கரடிக் குட்டி பாம்பை வாங்கி எடுத்ததாகக் கூறியிருப்பதை நோக்குக. கறையான் புற்றுகளில் பாம்புகள் வாழ்வதை இன்றும் காணலாம். கறையான்களுக்குப் பாதுகாப்பாகப் பாம்பும், பாம்புக்கு உறையுளாகக் கறையான் புற்றும் இருப்பதாக அறிஞர்கள் கூறுவர். கரடியைப் பாம்பு கண்ட சித்தன் என்று

கூறுவதற்கு அகநானூற்றிலே அடிப்படை இருக்கின்றது. பாம்பு வாழ்வதற்காகக் கறையான் புற்று உதவுவதால் பாம்புக்குத் தச்சன் என்று கறையானை அழைப்பர். பாம்பைப்பற்றிய செய்தி உண்மையாகவே இருக்கலாம் என்று தோன்றுகின்றது.

கரடிகள் விரும்பும் மற்றோர் உணவு இலுப்பையின் பூவாகும். மார்ச்சு - ஏப்ரலில் இலுப்பை மரம் பூத்துப் பூக்களை நிறைய உதிர்க்கின்றது. இலுப்பை மரத்தடியில் தடித்த இதழ்களையுடைய இலுப்பைப் பூக்கள் கம்பளம் விரித்தாற் போன்று கிடக்கும். இப் பூக்களை விரும்பிக் கரடிகள் கூட்டம் கூட்டமாக வரும்.

> ''அத்த இருப்பை ஆர்கழல் புதுப்பூத்
> துய்த்த வாய துகள்நிலம் பரக்கக்
> கொன்றை யஞ்சினைக் குழற்பழங் கொழுதி
> வன்கை யெண்கின் வயநிரை பரக்கும்''

—அகம், 15

> ''பொகுட்டரை யிருப்பைக் குவிகுலைக் கழன்ற
> ஆலி யொப்பின் தூம்புடைத் திரள்வீ
> ஆறுசெல் வம்பலர் நீளிடை யழுங்க
> ஈனல் எண்கின் இருங்கிளை கவரும்
> சுரம்பல கடந்தோர்க் கிரங்குப என்னுர்''

—அகம், 95

> ''வெருக்கடி யன்ன குவிமுகிழ் இருப்பை
> மருப்புக் கடைந்தன்ன கொள்ளை வான்பூ
> மயிர்க்கால் எண்கின் ஈரினங் கவர''

—அகம், 267

> ''நீடுநிலை அரைய செங்குழை இருப்பைக்
> கோடுகடைந் தன்ன கொள்ளை வான்பூ

ஆடுபரந் தன்ன ஈனல் எண்கின்
சேடுசினை யுரீஇ உண்ட மிச்சில்''

—அகம், 331

மேற்காட்டிய செய்யுட்களிலும் மற்றும் அகம். 149, 247ஆம் பாடல்களிலும் கரடிகள் இலுப்பைப் பூவை உண்பதாகக் கூறியிருப்பதைக் கவனிக்கவும். 'ஈனல் எண்கின் இருங்கிளை' என்று குட்டிகளை ஈன்ற கரடிக் கூட்டம் இலுப்பைப் பூவை உண்டதாகக் கூறப்பட்டுள்ளது. கூட்டமாக உண்ணும் வழக்கை இருங்கிளை,' 'ஈரினம்,' 'எண்கினம்' என்ற சொற்கள் குறிப்பிடுகின்றன. 'ஆடு பரந்தன்ன எண்கின்' (அகம், 331) "உருவத் துருவின் நாள்மேயல் ஆரும்'' (நற்றிணை, 192) என்று வரும் வரிகளில் கரடிகள் ஆட்டு மந்தை போல் மேய்வது கூறப்பட்டுள்ளது. இச்செய்திகள் அக்காலத்துக்குப் பொருந்தும். இக்காலத்தில் கரடிகள் மனிதரால் அழிக்கப்பட்டுக் கூட்டமாகக் காண அரிதாகிவிட்டது வருந்தத்தக்கது. கரடிகள் மரத்தில் நன்கு ஏறக் கூடியன. அகநானூறு 331ஆம் பாடல் இலுப்பையின் பூவை 'சேடு சினையில்' உருவி உண்டதாகக் கூறியிருப்பதைக் காணலாம்.

"கீழ்ப்படு தாரம் உண்ணு மேற்சினைப்
பழம்போல் சேற்ற தீம்புழல் உணீஇய
கருங்கோட்டு இருப்பை ஊரும்
பெருங்கை எண்கின் சுரனிறந் தோரே''

—அகம், 171

கீழே கிடந்த இலுப்பையின் பூக்களை உண்ணுது மேல் கிளைகளில் பழம்போல இனிப்பாக இருந்த இலுப் பைப் பூவை உண்பதற்காக மேலே ஏறியதாக அக

நானூறு கூறுவது அரிய செய்தியாகும். மெதுமெது வாக மரத்தில் கரடி ஏறுவதையே 'ஊரும்' என்ற சொல் குறிப்பிடுகின்றது. இலுப்பையின் பழத்தையும் கரடி உண்ணும் என்பதை "ஓங்கு சினை இருப்பைத் தீம்பழம் முனையின்" என்ற அகநானூற்றுப் பாடல் வரி குறிப்பிடுகின்றது. "கொன்றை யஞ்சினைக் குழற்பழங் கொழுதி, வண்கை யெண்கின் வயநிரை பரக்கும்" என்று அகநானூறு கொன்றைப் பழத்தைக் கரடி விரும்பி உண்பதைப் பற்றிக் கூறுகின்றது. கரடி பல மரங்களின் பழங்களையும் உண்ணும் என்று விலங்கு நூலார் கூறுவர்.

சங்க நூல்களில் கரடியைச் சிறு சொற்களில் அழகாக விளக்கியுள்ளனர். 'கூனல் எண்கின் குறு நடைத் தொழுதி' என்று கூனிய முதுகையுடைய கரடி குறுகக் குறுக அடியிட்டு நடக்கும் நடை என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்த திறமை போற்றத் தக்கது. கரடி கருநிறமாகக் காணப்பட்டதை "இருங் கிளை" என்றும் "ஈரினம்" என்றும் கூறினர். கரடியின் குட்டிகள் இளம்பருவத்தில் நன்றாகக் கருப்பாக இருக்கும்.

"வான்புகு தலைய குன்றத்துக் கவாஅன்
பெருங்கை எண்கின் பேழ்வாய் ஏற்றை
இருள் துணிந் தன்ன குவவுமயிர்க் குருளைத்
தோன்முலைப் பிணவொடு திளைக்கும்
வேனில் நீடிய சுரன்இறந் தோரே" —அகம், 201

'இருள் துணிந்தன்ன குவவு மயிர்க் குருளை' என்று பொருத்தமாகவும் அழகாகவும் கரடிக் குட்டியைக் கூறினர்.

"பெருங்கை எண்கினம் குரும்பி தேரும்"
புற்றுடைச் சுவர புதலிவர் பொதியிற்
கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து" —அகம். 307

"பிரிவர் கூரை மறுமனைச் சேர்ந்தல்கிக்
கூருகி ரெண்கி னிருங்கிளை கண்படுக்கும்
நீரி லருஞ்சுர முன்னி யறியார்கொல்"

—ஐந்திணையெழுபது, 32

மேற்கூறிய பாடல்களில் மனிதர்கள் வாழ்ந்து விட்டு விட்ட பாழ் வீடுகளிலும் கடவுளுக்கான பாழடைந்த அம்பலத்திலும் கரடிகள் காணப்பட்டதாகக் கூறியிருப்பதும் உண்மையே. காடுகளுக்கும் அருகாமையில் உள்ள சிற்றூர்களில் இவ்வாறு நிகழ்வதுண்டு. அண்மையில் ருசியாவில் (Russia) இருந்து வந்த செய்திப்படி பாழடைந்த ஊர்களில் வீடுகளில் கரடிகள் தங்கி வாழ்ந்து வரும் வழக்கம் (Bear Villages) கூறப்பட்டுள்ளது கவனிக்கத் தக்கது. (The bear garden, yes, but who ever heard of a bear village? Tajik hunters say that they often see bears living in abandoned huts or felt tents. Now comes word of whole villages inhabited by bears in abandoned settlements) கரடிக்குடும்பம் பாழான மனையில் படுத்துறங்கும் என்று ஐந்திணையெழுபது கூறியுள்ளது.

கரடியைப்பற்றிச் சில பழமொழிகள், பேச்சு வழக்குகள் தமிழ் நாட்டில் வழங்குகின்றன. முதிர்ந்த அனுபவம் காரணமாகத் தோன்றிய இவ்வழக்குகளில் அரிய உண்மைகளைக் காண்கிறோம். திடீரென்று நம்பத்தகாத ஒரு செய்தியை ஒருவன் கூறினால் 'கரடி விடுகிறான்' என்பர். அதுபோலவே 'பூசை வேளையில் கரடி புகுந்தாற்போல' என்றும் கூறுவர். பூசையில் ஓர் இடையூறு தோன்றினால் இந்தப் பழமொழி கூறப்படு

கின்றது. இந்த வழக்குகள் கரடியின் ஒரு தனித்த குணத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை. கரடிக்குத் தன் அருகாமையில் உள்ள பொருட்களைத் தான் காணும் சக்தி உண்டு. தொலைவில் உள்ள பொருட்களைக் காணச் சக்தி வாய்ந்த பார்வை கிடையாது. மோப்ப சக்தியும் குறைவு. கரடிகள் தூங்கும் போதோ, ஓய்வெடுக்கும் போதோ மனிதர்கள் வருவதை, தலைப்படுவதைக் கரடி உடன் உணர்வதில்லை. திடீரென்று எதிர்ப்பட்ட மனிதனைக் கரடி தாக்கிவிடும். கரடியும் எதிர்பாராது, மனிதனும் எதிர்பாராது தலைப்படுங்கால் கரடி தாக்கும். கரடி மனிதனைக் கண்டால் ஓடிவிடும். ஆனால் திடீரென்று கண்டால் தாக்கிவிடும். இதையே அடிப்படையாகக் கொண்டு பழமொழியும் வழக்கும் தோன்றின. கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து, கரடி காணப்பட்டதாகக் கூறியதிலிருந்து காட்டிலே வாழும் தெய்வத்திற்கு பூசையிடுங்கால் கரடி தோன்றி ஊறு விளைத்திருக்கலாம். இக் காரணத்தால் பூசை வேளையில் கரடி புகுந்த பழமொழி தோன்றியிருக்கலாம். கரடி, குட்டிகள் ஈன்ற காலத்தில் மிகக் கொடுமை வாய்ந்தது, மனிதரைக் கண்டால் தனது கால் நகங்களால் மனிதனுடைய முகத்தையும் தலையையும் கீறி இரத்தக் காயங்களை உண்டு பண்ணும் என்று விலங்கு நூலார் கூறுவர். (The bear has an uncertain rough temper. A female bear with cubs is specially dangerous and cases of severe mauling is not uncommon.)

> "ஆற்றிற் கிடக்த முதலைகண் டஞ்சிப் போய்
> ஈற்றுக் கரடிக் கெதிர்ப்பட்ட தன்மைக்கும்"

என்று பிற்காலத்துச் செய்யுளொன்று கூறுகின்றது.

கூற்றுக் கரடியை எதிர்ப்பட்ட மனிதனுடைய நிலைமையை அனுபவ வாயிலாக உணர்ந்தே பாடியிருக்கின்றார்கள். கரடியின் இக் குணத்தை நன்கு உணர்ந்தே "கோள்வல் லுளியமுங் கொடும் புற்றகழா" என்ற சிலம்பு வரிக்கு "நேரிட்டாரைக் கைக்கொள்ளுதற்கு வலிய கரடி தாம் அகழ்க்கடவ புற்றினை அகழா" என்று அடியார்க்கு நல்லார் கூறிய உரை உன்னி இன்புறத் தக்கது. நேரிட்டாரை (People who suddenly come upon with disastrous consequence) கைக்கொள்ளுதல் என்று சொல்லியது அரிய உண்மையைக் கூறுவதாம். அகழக் கடவ புற்றினை என்று கரடியின் கடமையாகக் கொடும் புற்றை அகழ்வதைக் கூறியதும் ஓர் அரிய உண்மைச் செய்தியாகும்.

உரையாசிரியர் நச்சினார்க்கினியர் பத்துப்பாட்டு உரையில் அகமுழவைக் கரடிகை என்றும், அரிகுரல் தட்டை என்பதற்குக் கரடிகை யென்றும், பொருள் கூறியுள்ளார். கரடி கத்தினாற்போல ஓசையுடைமையின் இப் பெயர் பெற்றதென்பர் என்றும் கூறினார். கரடி மிகுந்த ஓசையாகச் சத்தமிடுவதாக விலங்கு நூலார் கூறவில்லை. "இடிதரும் உளியமும் இனையா தேகென" என்று வரும் சிலம்பு வரியில் இடிப்பு என்பதற்கு அதிர்ப்பு என்றும், "உறட்ட டட்டென்ன" பற்பறை கொட்டல் என்றும் கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். இவ்வுரைப்படி கரடி பெரும் ஓசையிடுவதாகக் கருதவில்லை என்பது தெரிகின்றது. கரடி கத்தினாற்போலக் கத்துகிறான் என்ற வழக்குக் கரடியைக் குறித்து வழங்கியதாக இருக்காது. கரடிகை கத்தினாற்போல என்பது கரடி கத்தினாற்போல என

மாறியிருக்கலாம். கரடிகை என்பது கரடு என்ற சொல்லின் அடிப்படையில் தோன்றி யிருக்கலாம். கரடுமுரடான ஓசை தருவதைக் கரடிகை என்றனரோ? மலைபடுகடாம் 'ஊமை யெண்கின் குடாவடி உளியம்' என்று கூறுவதால் கரடியை ஊமையாகக் கருதி யிருப்பது தெளிவு.

கரடியின் பெயர் சங்க நூல்களில் எண்கு என்றே வழங்கி யிருப்பது குறிப்பிடத்தக்கது. பத்துப் பாட்டி லும் சிலப்பதிகாரத்திலும் எண்கு என்றும், உளியம் என்றும் அழைக்கப் படுகின்றது. உரையாசிரியர்கள் காலத்தில் கரடி என்று வழங்கப்பட்டிருக்கின்றது. தெலுங்கு மொழியில் கரடியை 'எலுகு' என்று வழங்கு கின்றனர். இச்சொல் சங்க காலச் சொல்லான 'எண்கு' என்பதன் மறு உருவமே. கரடியின் சங்க காலப் பெயர் தெலுங்கில் இன்றும் காணப்படுவது வியப்பே. உளியம் என்பது இன்னொரு சங்க நூற் பெயர். "நிலனகழ் உளியன், நீலத் தானையன்" என்ற சிலப்பதி காரத்துக் கொலைக்களக் காதை வரிக்கு உரையெழு துங்கால் "நிலன் அகழ்தலால் உளியம் போன்றும்" என்று அடியார்க்கு நல்லார் கூறினர். உளியம் என்ற சொல் உளி போன்று நிலத்தைத் தோண்டுதற்கேற்ப அமைந்த நகத்தைக் குறித்துக் கரடிக்கு வழங்கியது தெளிவாகின்றது. நிலத்தைத் தோண்டும் உளியை உடையவனைக் கன்னமிடும் திருடனைக் குறித்துச் சிலப் பதிகாரத்திலும் மதுரைக் காஞ்சியிலும் 'உளியன்' என்ற சொல் வழங்கியது. இதிலிருந்து 'உளியம்' என்று கரடிக்கு வழங்கியதின் பொருத்தம் நன்கு விளங்குகின்றது. 'குடாவடி உளியம்' என்ற

சொற்றொடர்க்கு உரையெழுதிய அரும்பத உரை யாசிரியர் பிள்ளைக் கரடியைக் குறிக்குமென்றும், இது திசைச் சொல் என்றும் குறிப்பிட்டார். திசைச் சொல்லை விளக்க வந்த தெய்வச் சிலையார் 'குடாவடி யுளியம்' என்றவழிக் குடா என்பது குடகத்தார் பிள்ளைகட்கு இட்ட பெயர் என்று கூறினர். ஆனல் நச்சினர்க் கினியர் பத்துப்பாட்டு உரையில் குடாவடி என்பதற்கு வளைந்த அடிகளை யுடையது என்று பொருள் கூறினர். குடமுழவு போன்ற அடி என்ற வேறுரையும் சிலப் பதிகார அடிக்குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. உரையாசிரியர்கள் கூறும் உரைகளில் மயக்கம் காண் கிறேம். "ஊமை யெண்கின் குடாவடிக் குருளை" என்று வரும் மலைபடுகடாம் (501) வரியில் குடாவடிக் குருளை என்று கூறியிருப்பதைக் கவனிக்கவும். குடா என்ற சொல் பிள்ளைக் கரடியைக் குறிப்பதானல் குருளை என்ற சொல் கண் திறவாக் குட்டியைக் குறித் திருக்கலாம். 'குடாவடி' என்பது சிலப்பதிகாரத்திலும் மலைபடுகடாமிலும் கரடியின் குட்டியைக் குறித்தே வழங்கியிருப்பதைக் கவனித்தால் இது கரடிக் குட்டிக்கு வழங்கிய திசைச் சொல் என்றே தெரிகின்றது. கரடிக் குட்டிக்குத் தெலுங்கு மொழியில் 'குட்டெலுகு' என்று பெயர் வழங்குகின்றது. 'குடா எலுகு' என்பது குட் டெலுகு என மாறியிருக்கலாம். எலு என்ற சொல் நிகண்டுகளில் கூறப்பட்டுள்ளது. ஆதலின் 'குடாவடி' என்ற சொல் கரடியின் குட்டியைக் குறிக்கும் திசைச் சொல் என்பது பொருத்தமானதாகும். இந்தத் திசைச் சொல்லே தெலுங்கு நாட்டில் வழங்கியிருக்கலாம். கிளிக்குக் கூறப்பட்ட தத்தை என்ற திசைச்சொல் மலை யாளத்தில் வழங்குவது காண்க. கரடி என்ற பிற்காலச்

சொல் அது வாழும் இடத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கிய பெயராகத் தோன்றுகின்றது. கரடு என்ற சொல் பாறைகளும் பெருங் கற்களும் நிறைந்த வறட்சியான நிலத்திற்கு வழங்கும். அத்தகைய கரடு நிலத்தில் வாழும் விலங்கை, கரடு நிலத்திற்குரியதாகக் கருதிய விலங்கைக் கரடி எனப் பெயரிட்டழைத்ததாகத் தெரிகின்றது. மலையாளத்தில் இதைப் 'பன்றிக் கரடி' என்று அழைப்பர். பன்றி போன்று நீண்ட முகமும் நிலத்தை அகழுந்தன்மையும் இருப்பதன் காரணமாக இப்பெயர் வந்தது போலும். பிங்கலந்தை நிகண்டில் மிளிறு என்ற பெயர் கரடிக்குச் சொல்லப்பட்டுள்ளது. பாறைகளைப் புரட்டிப் பார்த்து உணவு தேடுவதால் (Rocks displaced) மிளிர்க்கும் விலங்குக்கு மிளிறு என்ற பெயர் வந்தது.

தமிழ் நாட்டில் வாழும் கரடி இமயமலைக் கரடியி லிருந்தும் வேறானது. இக் கரடி இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டும் காணப்படுகின்றது. இதை விலங்கு நூலார் (Sloth bear) அல்லது (Melursus ursinus) என்று அழைப்பர்.

## கூ. வெருகு

### (The Jungle Cat)

வெருகு என்ற விலங்கைப் பற்றிச் சங்க நூல்களில் சில செய்திகள் காணப்படுகின்றன. இச் செய்திகளை ஆராய்ந்து பார்த்தால் வெருகு என்பது காட்டுப் பூனை என்று அழைக்கப்படும் விலங்கே என்பதில் ஐயமில்லை. சங்க நூல்களில் வெருகைப் பற்றி வரும் முக்கியச் செய்தி அது மாலைக் காலத்தில் மங்கிய ஒளியில் காட்டருகே உள்ள ஊர்களில் வேலியோரத்திலும் மனையோரத்திலும் வீட்டுக் கோழிகளை வேட்டை யாடுவதேயாகும். தொல்காப்பிய மரபியலுரையில் பேராசிரியர் 'வெவ்வாய் வெருகு' என்றதற்குக் கூறிய விளக்கம் வெருகு எவ்விலங்கு என்பதைத் தெளிவாக உறுதிப்படுத்துகின்றது. "வெவ்வாய் வெரு கென்ற தனுற் படப்பை வேலியும் புதலும் பற்றி விடக்கிற்கு வேற்றுயிர் கொள்ளும் வெருகினை" என்று பேராசிரியர் கூறிய விளக்கப்படி காணப்படும் விலங்கு காட்டுப் பூனையேயாகும்.

"இலங்குசுடர் மண்டிலம் புலந்தலைப் பெயர்ந்து
பல்கதிர் மழுகிய கல்சேர் அமையத்து
..........................................
..........................................
முனையுழை யிருந்த அங்குடிச் சீறூர்க்
கருங்கால் வேங்கைச் செஞ்சுவல் வரகின்
மிகுபதம் நிறைந்த தொகுகூட் டொருசிறைக்
குவியடி வெருகின் பைங்கண் ஏற்றை
ஊனசைப் பிணவின் உயங்குபசி களைஇயர்

தளிர்புரை கொடிற்றிற் செறிமயிர் எருத்திற்
கதிர்த்த சென்னிக் கவிர்ப்பூ அன்ன
நெற்றிச் சேவல் அற்றம் பார்க்கும்
புல்லென் மாலையும் இனிதுமன் றம்ம'' —அகம். 367

காட்டரண்களுக்கு அருகாமையில் இருந்த சிறிய ஊரில் மனையில் கதிரவன் மறையும் காலத்தில் வரகைக் கொட்டி வைத்திருந்த களஞ்சியக் கூட்டின் ஓரமாகக் காட்டுப் பூனை சேவற் கோழி அடையும் சமயத்தைப் பார்த்துக்கொண்டு காத்திருந்ததாக அகநானூறு (367) கூறுவது சங்கப் புலவர் கண்டே கூறிய செய்தியாகும் என்பதில் ஐயமில்லை. இச் செய்தியைப் படித்த விலங்கு நூலறிஞர் எவரும் இது காட்டுப் பூனையைப் பற்றிய செய்தி என்று உடனே உணர்வர்.

''ஊர்முது வேலிப் பார்நடை வெருகின்
இருட்பகை வெரீஇய நாகிளம் பேடை
உயிர்நடுக் குற்றுப் புலாவிட் டரற்றச்
சிறையும் செற்றையும் புடையுநா ளெழுந்த
பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்துக்
கவிர்ப்பூ நெற்றிச் சேவலிற் றணியும்
அருமிளை யிருக்கை யதுவே மனைவியும்'' —புறம், 326

''மனையுறை கோழிக் குறுங்காற் பேடை
வேலி வெருகின மாலை யுற்றெனப்
புகுமிட னறியாது தொகுபுடன் குழீஇய
பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந் தாஅங்''
—குறுந்தொகை, 139

''குவியிணர்த் தோன்றி யொண்பூ வன்ன
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்
நள்ளிருள் யாமத் தில்லெலி பார்க்கும்
பிள்ளை வெருகிற் கல்கிரை யாகிக்
கடுநவைப் படீஇயரோ நீயே........''
—குறுந்தொகை, 107

" முள்ளுடை மூங்கில் பிணங்கிய சூழ்படப்பை
புள்ளி வெருகுதன் குட்டிக் கிரைபார்க்கும்"

—ஐந்திணை எழுபது, 34

புறநானூற்றிலும் (326) காட்டுப் பூனை வேலியில் வேட்டையாடும் செய்தி வருகின்றது. ஊரிலே இருந்த முதிய வேலியில் வேட்டையைத் தேடிக் கொண்டிருந்த காட்டுப் பூனையைக் கண்ட பெட்டைக் கோழி உயிர் நடுங்கி நாக்கு அடித்துக் கொண்டு அலற அச் சமயம் செத்தையைப் புடைத்துக் கொண்டிருந்த கைம்பெண் கைவிளக்கோடு வர அவ்விளக்கொளியில் சேவலைக் கண்டு அடங்கியது என்று கூறிய செய்தி உண்மையான செய்தியாகும். காட்டுப் பூனை வீட்டில் உள்ளோர் கண்களுக்கு எதிரேகூடச் சில சமயங்களில் கோழிகளைக் கவர்ந்து ஓடிவிடுமென்று விலங்கு நூலார் கூறுவர். வீட்டு வேலியில் மாலைக் காலத்தில் வெருகைக் கண்ட பெட்டைக் கோழி தன்குஞ்சுகளை அழைத்துச் சேர்த்துக் கூட்டி வைத்துக் கொள்வதைக் குறுந் தொகை 139 ஆம் பாடல் கூறுகின்றது. காட்டுப் பூனையின் உணவு எலி முதலிய சிறு விலங்குகளும் பறவைகளும் வீட்டுக் கோழிகளும் என்று விலங்கு நூலார் கூறுவர். நடு இரவில் வீட்டு எலியைத் தேடி வந்த காட்டுப் பூனைக்கு சேவல் இரையாக அகப்பட்ட தாகக் குறுந்தொகை (107) கூறுகின்றது. இச் செய்திகள் இயற்கையில் அன்றாடம், கண்டதைச் சங்கப் புலவர்கள் பாடியதையே காட்டுகின்றது. இச் செய்திகளைக் கண்டே விலங்கு நூலறிஞர்களும் மாலைக் காலத்தில் காட்டுப் பூனை வேட்டையாடுவதைக் குறிப் பிட்டு எழுதினர். (The Jungle Cat is frequently about by day, more usually in the mornings and evenings. It preys on

small mammals, birds and near villages on poultry; There is a record of one making bold to seize its prey even in the presence of the owners.)

காட்டுப் பூனைக்குக் கூர்த்த பார்வை உண்டு எனக் கூறுவர். பார்வையாலேயே வேட்டையாடும் விலங்குகளில் காட்டுப் பூனை முக்கியமானது. இரவிலும் கண்கள் நன்கு தெரியும். காட்டுப் பூனை ஓசையின்றி வேலியில் மறைந்து பார்த்துக் கொண்டிருந்து திடுமெனப் பாய்ந்து தனது இரையைப் பிடித்துக் கொள்ளுமென்பர். கோழி ஏமாறும் சமயத்தைப் பார்க்குமாதலால் 'அற்றம் பார்க்கும்' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மிகக் கூர்மையான பார்வையுடையதாலும், பார்த்துப் பதுங்கிப் பாய்வதாலும "பார்வல் வெருகு" (அகம். 391), 'பார்நடை வெருகு' (புறம். 326) என்று கூறினர். இதன் நடை சிறுத்தைப் புலியின் நடையைப் போன்று பதுங்கிய நடையாகும். வெகு விரைவும் மிக்க வலிமையு முடையது என்பர். அதனால் தன்னைவிடப் பெரிய விலங்குகளைக்கூடத் திடுமெனத் தாக்கிக் கொன்று விடும் என்பர். வெருகின் கூரிய பற்களைப் பற்றிச் சங்க நூல்கள் கூறுகின்றன.

"பார்வல் வெருகின் கூரெயிற் றன்ன
வரிமென் முகைய நுண்கொடி யதிரல்" —அகம், 391

"இருவி சேர் மருங்கிற் பூத்த முல்லை
வெருகுசிரித் தன்ன பசுவீ மென்பிணிக்"
—குறுந்தொகை, 220

"வெருக்குப்பல் உருவின் முல்லையொடு கஞல"
—குறுந்தொகை, 240

"பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையப்
பாசிலை முல்லை முகைக்கும்" —புறம், 117

காட்டுப் பூனையின் முன்பற்கள் (Canines) குவிந்து கூர்மையாக இருக்கும். இதையே முல்லை முகை போன்று இருப்பதாகக் கூறினர். காட்டுப் பூனையின் காலின் அடிப் பாகத்தைக் 'குவியடி' (அகம், 347) என்று கூறினர்.

"வெருக்கடி யன்ன குவிமுகி ழிருப்பை" —அகம், 267

இலுப்பைப் பூவின் குவிந்த பூ வெருகின் குவிந்த அடி போலிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. 'குவியடி' என்று கூறியதற்குக் காரணம் உண்டு. காட்டுப் பூனையின் கால்களில் அதன் விரல்கள் மெதுவான, பஞ்சு போன்ற சிறிய திண்டுகளுக்குள் இருக்கின்றன. இந்தப் பஞ்சுபோன்ற திண்டையுடைய(Deep Cushioned pads) அடியையே 'குவியடி' என்றனர். இந்தக் குவி யடியால் நகங்கள் தரையில் படிவதில்லை. காலடியும் அகலமாக விரிந்து விழுவதில்லை. இதனால் ஓசை செய் யாமல் தனது இரையை அணுக முடிகின்றது. காட்டுப் பூனையின் நிறம் பொதுவாகச் சாம்பல் கலந்த மணலின் நிறமாக இருக்குமென்பர். தென்னாட்டில் காணப்படும் காட்டுப் பூனைகள் கருப்பும் வெள்ளையும் தெளித்தாற் போன்ற நிறமாகக் காணப்படுமென்று விலங்கு நூலார் கூறுவர்.

"முள்ளுடை மூங்கில் பிணங்கிய சூழ்படப்பை
புள்ளி வெருகுதன் குட்டிக் கிரைபார்க்கும்"

—ஐந்திணையெழுபது. 34

படப்பையில் காணப்பட்ட வெருகு புள்ளியுடையதாகக் காணப்பட்டதைச் சங்கநூல் கூறுவதைக் காணலாம். சங்க நூல்களில் மிக அரிதாக வெருகு குட்டி போட்டி ருப்பதைப் பாடியிருப்பது வியப்பைத் தருகின்றது.

"ஈர்முள் வேலிப் புலவுநாறு முன்றில்
எழுதி யன்ன கொடிபடு வெருகின்
பூளை யன்ன பொங்குமயிர்ப் பிள்ளை
மதிசூழ் மீனில் தாய்வழிப் படூஉஞ்" —அகம், 297

மதியைச் சுற்றி மீன்கள் வானத்தில் சூழ்ந்திருப்பதைப் போல வெருகைச் சுற்றி அதன் குட்டிகள் சூழ்ந்திருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. வெருகின் குட்டிகள் பொங்கிய மயிருடன் பூளைபோல அஃதாவது இலவம் பஞ்சுபோல இருந்தது. இந்தக் காட்சி ஓவியம் வரைந்தாற் போலக் காணப்பட்டது எனக் கூறப்பட்டுள்ளது.

சங்க இலக்கியத்தில் வெருகின் கண்ணைப் பற்றியும் அதன் பார்வையைப் பற்றியும் குறிப்பாகப் பாடியுள்ளனர். வெருகின்கண் இளம் பச்சையான நிறமாகக் காணப்படுமென்று விலங்கு நூலார் கூறுவர்.

"குவியடி வெருகின் பைங்கண் ஏற்றை"

என்று அகநானூறு ஆண்பூனையின் பசிய கண்ணைப் பற்றிக் கூறியுள்ளது. வெருகு பார்க்கும் பார்வையைப் பற்றியும் சங்கநூல் குறிப்பாகச் சொல்லியிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

"வெருக்குவிடை யன்ன வெருணோக்குக் கயந்தலைப்
புள்ளூன் தின்ற புலவுநாறு கயவாய்
வெள்வாய் வேட்டுவர் வீழ்துணை மகாஅர்"

—புறம். 324

வேட்டுவரின் சிறுவர்கள் பறவையின் ஊனைத் தின்று புலால் நாற்றம் அடிக்கும் வாயுடன் பிறரை வெருளச் செய்யும் நோக்குடன் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளதை நோக்குக. அவர்களுடைய நோக்கு வெருகின் நோக்குப் போல வெருளச் செய்ததாகக் கூறியது முக்கியமான

தாகும். விலங்கு நூலாரும் காட்டுப் பூனையின் கண்களும் அதன் பார்வையும் மிகக் கொடுமை நிறைந்தவை என்பர் (Its pale green eyes give it a coldly cruel expression). சிறிய விலங்காயிருந்தாலும் காட்டுப் பூனையின் பார்வையும் தோற்றமும் மிகவும் அச்சுறுத்தும், வெருளச் செய்யும். வெருட்டும் இப் பார்வையை 'வெருள் நோக்கு' என்று புறநானூறு கூறியதில் வியப்பில்லை.

இன்னும் நுண்ணிதாக ஆராய்ந்தால் வெருகு என்ற பெயரே காட்டுப் பூனையின் வெருள் நோக்கினால் தோன்றிற்று என்பது தெளிவாகின்றது. இஃது இளம்பூரணரின் தொல்காப்பிய உரையிலிருந்து விளங்குகின்றது. வெரூஉதல் என்ற மெய்ப்பாட்டை விளக்க வந்த இளம்பூரணர் அஃது 'அச்சம்போல நீடு நில்லாது கதுமெனத் தோன்றி மாய்வதொரு குறிப்பு. அதனைத் துணுக்கு என்றுனென்பது' என்று கூறினர். வெரூஉதலைத் தரும் விலங்கை வெருகு என்று இயற்கையறிவோடு வழங்கினர். ஆதலின் மாலை நேரத்தில் வேலியோரத்தில் மங்கிய ஒளியில் திடுமெனத் தோன்றும் காட்டுப் பூனையின் கடும்பார்வையையும் கொடுந் தோற்றத்தையும் பார்த்தே துணுக்குற்று 'வெருகு' என்று பெயரிட்டனர். பேராசிரியரும் மரபியலுரையில் 'வெரூஉத லென்பது விலங்கும் புள்ளும் போல வெருவி நிகழும் உள்ள நிகழ்ச்சி, அஃது அஞ்ச வேண்டாதன கண்ட வழிக் கடிதிற் பிறந்து மாறுவதொரு நெறி,' என்றார். விலங்குகளிலும் புள்ளினும் வெருவும் உள்ள நிகழ்ச்சி என்று கூறி அஞ்ச வேண்டாதன கண்டவழிக் கடிதிற் பிறந்து மாறுவது என்று கூறியது காட்டுப் பூனையைக் கண்டக்கால் ஏற்படும் அச்சத்தையே குறித்து எழுதப்பட்டதோ எனக்

கருதலாம். காட்டுப் பூனையை மனிதர் கண்டால் அஞ்ச வேண்டுவதில்லை. ஆனால் கண்டவழி அதன் கடுமையான தோற்றம் கடிதில் அச்சத்தைத் தோற்று விக்கின்றது. ஆனால் அஃது ஒரு பூனை என்று உணருங்கால் அவ்வச்சம் உடனே மாறிவிடுகின்றது. ஆதலின் வெரூஉதலைத் தருவது வெருகு எனப் பெயர் பெற்றது. காட்டுப் பூனையின் கடுமையான பார்வை கொடுமையான தோற்றம் கோழியை வெருளச் செய்து உயிர் நடுங்கி நாக்கு அடித்துக் கொண்டு அலறச் செய்த காட்சியைப் புறநானூறு கூறுவது இது சார்பாகச் சிந்திக்கத் தக்கது. காட்டுப் பூனையின் குணம் பதுங்கி வருவது. ஓசையின்றி வருவது. மங்கிய ஒளியில் வருவது. மறைந்து வருவது. இவ்விதம் வந்து திடு மெனக் கடுந் தோற்றத்துடன் தாக்குவது. இதனால் பயத்திலேயே பாதிஉயிர் போய்விடுகிறது. வெருகின் கண்களை நாலடியார் கருனைக் கிழங்குக்கு ஒப்பிட்டுக் கூறியதைக் காண்கிறோம்.

> "விருப்பிலார் இல்லத்து வேறிருந்து உண்ணும்
> வெருக்குக்கண் வெங்கருனை வேம்பாகும்"
>
> —நாலடியார். 210

உரை கூறின சிலர் வெந்த பொரிக்கறி என்று கருனை என்ற சொற்குப் பொருள் கூறினர். ஆனால் "கோட் புலிச் சுழல்கண் ணன்ன கொழுஞ்சுவை கருனைமுல்லை" என்ற சீவகசிந்தாமணி (2972) பாடல் வரிக்கு நச்சி னார்க்கினியர் புலிக்கண் போன்ற நிறத்தையுடைய கருனைக் கிழங்கு என்று உரை கூறியுள்ளார். கருனைக் கிழங்கின் பசுமையும் செம்மையும் கலந்த முளைக் கண்ணையே வெருகின் கண்ணுக்கு ஒப்பிட்டதாகத்

தெரிகின்றது. வெருகின் கண்ணை வைடூரியத்திற்கு ஒப்பிட்டுத் திருவிளையாடல் புராணம் கூறுகின்றது. "கழையிலே கார்மயி லெருத்தம் வெருகின்கண் நிறத்த தாய்" என்று கூறுகின்றது. வெருகின் கண்ணின் நடுவில் ஒரு கோடுபோலக் கண் திரை மூடித்திறப்பது போல் வைடூரியத்தின் நடுவிலும் ஒரு கோடுபோல் ஒளி தோன்றும். வைடூரியம் பழுப்பு நிறமாக ஒளியுடன் காண்பது வெருகின் கண்போல (Cat's eye, Chrysoberyl) இருப்பதாக நவமணிகளைப் பற்றிய நூலிலும் கூறப் பட்டுள்ளது. இருளில் வெருகின் கண்திரை விலகி வட்டமாக அதன்கண் காணப்படும். இந்த வட்டத் தையே முத்துப்போல இருப்பதாக அகநானூறு கூறு வதைக் காணலாம்.

"வெருகிருள் நோக்கி அன்ன கதிர்விடு
பொருகாழ் முத்தம் இடைமுலை விளங்க" —அகம், 73

வெருகு இருட்டில் ஒளிவிடும் வட்டக் கண்ணுடன் காணப் பட்டதையே பசுமையும் வெண்மையுங் கலந்த ஒளிவிடும் முத்திற்கு ஒப்பிட்டது மிகவும் பொருத்தம். தொல்காப்பிய மரபியலில் வெருகு கூறப்பட்டுள்ளது.

"மூங்கா வெருகெலி மூவரி யணிலோ
டாங்கவை நான்கும் குட்டிக் குரிய" —தொல். மரபு. 561

வெருகின் பிள்ளையைக் குட்டியென்று கூற வேண்டு மெனக் கூறுகின்றது. சங்க நூல்கள் 'பிள்ளை'யென் றும் குட்டியைக் கூறுகின்றன. வெருகைப் பூசை யென்றும் வழங்கலாம் என்று மரபியல் கூறுகின்றது.

"குரங்கின் ஏற்றினைக் கடுவ னென்றலும்
... ... ... ... ...
வெவ்வாய் வெருகினைப் பூசை யென்றலும்"
—தொல்.மரபு. 623

பூசையென்ற சொல் சில விடங்களில் காட்டுப் பூனைக்கு வழங்கியதாகத் தெரிகின்றது. 'வெவ்வாய் வெருகென்றதனுற் படப்பை வேலியும் புதலும் பற்றி, விடக்கிற்கு வேற்றுயிர் கொள்ளும் வெருகினை, இல்லுறை பூசையின் பெயர் கொடுத்துச் சொல்லலும் (புறம். 117, 326) அமையுமென்றவாறு. வெருகினை விடையென்றலும் போல்வன பலவுங் கொள்க' என்று பேராசிரியர் எழுதிய உரை ஆராயத்தக்கது. வீட்டில் வாழும் பூனையின் பெயரைக் காட்டுப் பூனைக்கு இட்டு வழங்கினர் என்று கூறுகிறுர். சங்க நூல்களில் இல்லுறைப் பூசையைப் பற்றி ஒரு செய்தியையும் காணேம். ஆதலின் இஃது ஐயத்திற்கிடமானது. காட்டுப் பூனைக்கு வழங்கிய பூசையென்ற பெயர் பிற்காலத்தில் வீட்டில் வாழும் பூனைக்குப் பெரும்பாலும் வழங்கியதாகவே தெரிகின்றது. ஏனெனில் சங்க இலக்கியத்தில் வீட்டில் வாழும் விலங்காக நாய் கூறப்பட்டுள்ளது. ஆனல் பூனை கூறப்படவில்லை. சங்ககாலத்தில் பூனையை வீட்டில் வளர்க்கும் பழக்கம் இல்லையென நினைக்க வேண்டியிருக்கின்றது. இல்லுறைப் பூசையே சங்க காலத்தில் இல்லாதிருக்கலாம். பரிபாடலில் பூசையென்ற சொல் பயில்கின்றது. இதிலும் வீட்டுப் பூனையென்று கூற முடியாது. பழமொழியிலும், சிறுபஞ்சமூலத்திலும் வரும் பூசையென்ற சொல் சங்க காலத்திற்குப் பிற்பட்டது. 'குரங்கின் ஏற்றினைக் கடுவன்' என்ற மரபியல் வரிக்கு உரை கூறுங்கால் பேராசிரியர், கடுவன் ஆண் குரங்கென்றும், இதனைக் கடியலாகா தெனப்பட்ட இழுக்கென்னையெனின் மக்கட்கும் வெருகிற்கும் அக்காலத்துப் பயின்றன போலுமாதலின்' என்று எழுதினர். கடுவன் என்ற பெயர் சங்க காலத்தில் புலவர்

களுக்குக் கூட வழங்கியது. இக்காலத்தில் ஆண் பூனைக்கு வழங்குகின்றது. கடுவன் பூனையென்று பெரிய, வளர்ந்த அச்சம் தரும் பூனைக்குத் தான் பெரும் பாலும் இக்காலத்தில் வழங்குவர். கண்டாம் புலி யென்றும் கண்டாம் பூனையென்றும் அழைப்பர். சங்க காலத்தில் மனிதருக்கு அவர்களின் கடுமையான பார் வையாலும் தோற்றத்தாலும் வழங்கியிருக்கலாமெனத் தெரிகின்றது. கடுவன் பூனைபோல இருக்கிறான் என்று இன்றும் வழங்குவர். காட்டுப் பூனையென்று பட்டப் பெயரிட்டுக் கூப்பிடுவதுண்டு. கடுமையான தோற்ற முடையவருக்கும் திருடருக்கும் காட்டுப் பூனை என்ற பெயர்கள் வழங்கக் காண்கிறோம். ஆதலின் கடுவன் என்ற சங்க நூல் வழக்கும் வெருவரு தோற்றத்தினால் காட்டுப் பூனையை ஒப்பிட்டுக் கூறி வழங்கினதாக இருக்கலாம். குரங்கில் ஆணைக் கடுவன் எனலாம் என்று மரபியல் கூறுவது பொருத்தமே. குரங்கின் முகம், முக்கியமாக-பெருத்த ஆண் குரங்கின் முகம் கடுமையானதுதான். அதனால்தான் குரங்கை 'வலி முகம்' என்று இலக்கண உரையாசிரியர்கள் கூறியுள்ள னர். மென்மையான முகமற்றதை 'வலிமுகம்' என்றும் கடுவன் என்றும் வழங்கினர். காட்டுப் பூனைக்கு வெருகு என்ற பெயரும் கடுவன் என்ற பெயரும் அதன் வெருவச் செய்யும் கடுமையான பார்வையா லும் கொடுமையான தோற்றத்தாலும் ஏற்பட்டதே என்பது தெளிவு பெறும். காட்டுப் பூனையைப் பிற மொழிகளிலும் அதே பொருளில் பெயரிட்டு வழங்கு கின்றனர். மலையாளத்தில் 'காட்டுப் பூச்சா' என்றும், கன்னடத்தில் 'காட பெக்கு' என்றும், இந்தியில் 'ஜங்லி பில்லி' யென்றும் வழங்கும். இதை ஆங்கிலத்தில்

Jungle cat என்றும், விலங்கு நூலில் 'Felis chaus' என்றும் அழைப்பர். தமிழ் நிகண்டுகளில் காட்டுப் பூனையின் பெயரையும் நாட்டுப் பூனையின் பெயரையும் சேர்த்து வேற்றுமையின்றி மயங்கி வழங்கியுள்ளனர். படப்பை என்பது வேலி. படப்பையில் காணப்பட்டது போல, படப்பை சூழ்ந்த பாகத்தில் காணப்பட்டதால் 'பாக்கன்' என்றும், கற்பிளப்பிலும் மரப் பொந்திலும் வாழ்வதால் 'விடருகம்' என்றும் வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது. குறவர்கள் இன்றும் காட்டுப்பூனையைப் 'பாக்கன்' என்றும் 'போக்கன்' என்றும் கூப்பிடுகின்றனர். குழந்தைகளைப் பயமுறுத்த பாக்கன் வருவதாகக் கூறுவர். இப் பெயர்கள் சேந்தன் திவாகரத்தில் வடமொழிப் பெயர்களுடன் தமிழ்ப் பெயர்களாகக் காணப்படுகின்றன.

---

## கo. புலி

சங்க இலக்கியத்தில் மிகப் பல பாடல்களில் புலியையும் யானையையும் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. சங்கப் புலவர்கள் காட்டு விலங்குகளில் புலியையும் யானையையும் முக்கியமாகக் கருதினர். இன்றும் வேட்டையாளரும் பிறரும் புலியையும் யானையையும் காட்டில் வாழும் சிறந்த விலங்குகளாகக் கருதுகின்றனர். பல சங்கப் பாடல்களில் புலியையும் யானையையும் இணைத்தே பாடுவதையும் காணலாம். சங்க இலக்கியத்தில் பேசப்படும் புலி வரிப்புலியா, சிறுத்தைப் புலியா என்ற கேள்வி எழலாம். பெரும்பாலும் வரிப் புலியைப் பற்றியே (Tiger) பாடியுள்ளனர். ஆனால் சிறுத்தைப் புலியும் (Panther) சிலவிடங்களில் கூறப் பட்டுள்ளது. அடர்ந்த காடுகளில் வரிப்புலியே பெரும்பாலும் காணப்படும். சிறுத்தைப் புலியில் பெரிய இனமான பெருஞ் சிறுத்தைப் புலியும் புலிகளைப் போலவே அடர்ந்த காட்டில் வாழும் என்று விலங்கு நூலார் கூறுவர்.

வரிப்புலி மலைச்சாரல்களில் அடர்ந்த காடுகளில் வாழ்வதாக விலங்குநூலார் கூறுவர். சங்க நூல்களும் வரிப்புலி வாழ்வதாகக் குறிப்பிடும் இடங்கள் மலைச் சாரல்களும், மூங்கில் நிறைந்த காடுகளும், சோலைகளுமாகும். புலிகள் எப்போதும் ஈரமாக இருக்கும். அடர்ந்த காடுகளிலும் திறந்த காடுகளிலும் சேறும் நீரும் கலந்த சூழ்நிலைகளிலும் வாழும் என விலங்கு நூலார் கூறுவர். சங்க நூல்களில் புலி வாழும் இடங்

கள், சூழல்கள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது உண்மையான தெளிவான செய்தியாகும்.

"பலாவமல் அடுக்கம்" "கழைநரல் சிலம்பு"—அகம், 8

"கழைநரல் சிலம்பின் ஆங்கண் வழையொடு
வாழை யோங்கிய தாழ்கண் அசும்பு" —அகம், 8

"மழைபடு சிலம்பு" —அகம், 12.

"ஆடுகழை நரலும் அணங்குடைக் கவாஅன்"
—அகம், 72.

"பனியிருஞ் சோலை" —அகம், 112.

"கழைதிரங்கு அடுக்கம்" —அகம், 347.

"ஓலிகழை நிவந்த ஓங்குமலைச் சாரல்"
—குறுந்தொகை, 253.

"கல்லகச் சிலம்பு" —அகம், 202.

"தேக்கமல் சோலை" —அகம், 251.

மூங்கிற் காடுகளிலும், பலா மரங்கள் நெருங்கிய மலைச் சாரல்களிலும் மழை மிகுத்துப் பெய்யும் மலைக்காடுகளிலும், வழை மரமும் வாழை மரமும் இயற்கையாக அடர்ந்து வளரும் தாழ்ந்த சேறு நிறைந்த சூழலிலும் புலி வாழ்ந்ததாகக் கூறியிருப்பது உண்மையான செய்தியாகும். அடர்ந்த மலைச்சாரல் காடுகளிலும் தேக்கஞ் சோலைகளிலும் (Sholas) மேற்குத் தொடர்ச்சி மலைக்காடுகளில் புலிகளைத் தமிழ் நாட்டில் காணலாம் எனக் கூறுவர். மலையடுக்கங்களிலும் சிலம்பிலும் புலி வாழ்வதாகக் கூறியுள்ளதையும் கவனிக்கலாம். மலையில் உள்ள சிலம்பில் (Valley) வாழ்வதாக விலங்கு நூலார் கூறுவர். தாழ்கண் அசும்பு (Swamps) நீர் ஊறிக்கொண்டிருக்கும் இடமாகும். புலி வாழுமிடத்

தில் சூழ்நிலையில் காணப்பட்ட செடி, கொடிகளைக் கூட நுனித்துக் கண்டு கூறியுள்ளனர்.

"கொடுமுள் ஈங்கை சூரலொடு மிடைந்த
வான்முகை இறும்பின் வயவொடு வதிந்த
உண்ணாப் பிணவின் உயக்கம் தீரிய" —அகம், 357.

"ஓவிவல் ஈந்தின் உலவை யங்காட்டு
ஆறுசெல் மாக்கள் சென்னி யெறிந்த
செம்மறுத் தலைய நெய்த்தோர் வாய
வல்லியம் பெருந்தலைக் குருளைமாலை
மரல் நோக்கும் இண்டிவர் ஈங்கைய சுரனே,'

—நற்றிணை, 2.

புலிகள் குட்டிகளுடன் இருக்குமிடம், தங்குமிடம் கொடிய முள்ளுடைய ஈங்கையும் இண்டும் சூரலும் உடைய இடம் என்று சொல்லியது மிக நுட்பமான செய்தியாகும். விலங்கு நூலாரும் இந்தச் செடிகளையே குறிப்பிட்டு எழுதியுள்ளனர். இண்டுக் கொடியும் முள்ளுடையது. புலி இக்கொடியினருகாமையில் காணப் பட்டதால் இதைப் புலியிண்டு என்று அழைப்பர். ஈங்கைக் கொடியை Acacia caesia என்றும் இண்டங் கொடியை Pterolobium Indicum என்றும் முள்ளுடைய சூரல் செடியை Zizlyhus oenoplia என்றும் அழைப்பர். (The panther roared and rushed out of the Cave and his impetus carried him on and he sent me flying head over heels into 'seenga Kye' bush (Wait-a-bit bush) The hook shaped thorn caught me and I emerged like a hedgehog covered with spines) பொல்லாக் (Pollock) என்ற வேட்டையா ளர் எழுதியுள்ள உண்மை அனுபவச் செய்தியில் புலிக் குகையைச் சுற்றியிருந்த ஈங்கையையும் அதன்முள்ளை யும் பற்றிக் கூறியுள்ளதைக் காணலாம். ஈங்கை

கன்னடத்தில் சிங்கை எனப்படும். இண்டங் கொடியின் முள்ளை புலிதடுக்கி என்றும் கூறுவர். இண்டும் ஈங்கையும் சூழ்ந்த புதல் புலிக்குக் காப்பாகும். அதுவே புதலுக்கும் காப்பாகுமென்று கூறுவர். ஏனெனில் அந்தப் புதலை நெருங்க மனிதர் அஞ்சுவர். புறநானூற்றில் 'புலிதுஞ்சு வியன்புலம்' கூறப்பட்டுள்ளது. புலிக்கும் புதற்கும் உள்ள தொடர்பையே 'புதற்கு வலியே புலிக்குப் புதலும் வலியாய் விடும்' என்ற பழமொழியில் விளக்கப்பட்டது.

புலி வெயிலின் கடுமையைத் தாங்கக் கூடியதன்று என விலங்குநூலார் கூறுவர். அதனால் பகற்காலத்தில் புலி பெரும்பாலும் கற்குகைகளிலும் புதர்நிறைந்த கற்பிளப்புகளிலும் பதுங்கிக் கிடக்குமென்பர். (The tiger lives in humid evergreen forests, in dry open jungles and even grassy swamps. Forests give the tiger the shelter it needs. Without forests or heavy grass jungles there could be no tiger in India. To escape the heat the tiger takes shelter in cave or covert). சங்க இலக்கியத்தில் பல பாடல்களில் புலி தங்குமிடம், பதுங்குமிடம் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

'துறுகல் விடரளைப் பிணவுப்பசி கூர்ந்தென''

—அகம், 147.

'ஒடுங்களை புலம்பப் போகிக் கடுங்கண்
வாள்வரி வயப்புலி கன்முழை உரறக்''

—அகம், 168.

''வரிவயங் கிரும்புலி வழங்குநர்ப் பார்க்கும்
பெருமலை விடரகம் வரவரி தென்னாய்''

—அகம், 318.

"இருங்கல் விடரகஞ் சிலம்பப் பெயரும்"

—அகம், 232.

"இருண்முகைச் சிலம்பின் இரைவேட் டெழுந்த"

—அகம், 238.

"கன் முழை அடுக்கத்து மென்மெல இயலிச்"

—அகம், 332.

"பைங்கண் வல்லியம் கல்லளைச் செறிய" —அகம், 362.

"கல்லளைச் செறிந்த வள்ளுகிர்ப் பிணவு"

— நற்றிணை, 148.

"....................வேயு யர்ந்து
எறிந்துசெறித் தன்ன பிணங்கரில் விடர்முகை'

—நற்றிணை, 322.

"விடர்முகைச் செறிந்த வெஞ்சின இரும்புலி',

—நற்றிணை, 158.

"விடரளைப் பள்ளி வேங்கை அஞ்சாது"

—நற்றிணை, 386.

"புலியின மடிந்த கல்லளை போலத்" —புறம், 398.

"புலிசேர்ந்து போகிய கல்லளை போல" —புறம், 86.

"ஒடுங்களை புலம்பப் போகிக் கடுங்கண்"—அகம், 168.

கல்முகை, கல்லளை, கன்முழை, இருள்முகை என்பன வெல்லாம் கற்குகையைக் குறிக்கும். கற்பாறைகளில் இயற்கையாகவே காணும் மறைவான பிளப்புகளிலும் வாழ்வதாகக் கூறப்பட்டுள்ளதையும் கவனிக்கலாம். விடரளை, விடரகம், விடர்முகை ஆகியவைகளில் புலி ஒடுங்குவதாகக் கூறியிருப்பதும் உண்மையான செய்தி. மூங்கிலை எடுத்துப் பாறைப் பிளப்பைச் சுற்றி நட்டு

வைத்ததுபோல இருக்குமிடத்தில் கொடிகள் அடர்ந்து மிடைந்த 'விடர்முகை'யில் புலியிருந்ததாக நற்றிணை 322ஆம் பாடல் கூறுவது மிக அரிய தெளிவான செய்தியாகும். புலி படுக்குமிடமாக 'விடரளைப் பள்ளி' என்று குறிப்பிடுவதையும் காணலாம்.

சங்க இலக்கியத்தில் பல பாடல்களில் புலி பிற விலங்குகளைக் கொன்று உண்பதைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. புலியும் யானையும் போரிடும் செய்தியே மிகுந்து காணப்படுகின்றது. ஆமானையும் (Indian Bisan), மரையானையும் (Nilgai), மான்களையும் (Deer and Antilopes), காட்டுப் பன்றியையும் வேட்டையாடுவதைப் பற்றிப் பல பாடல்களில் செய்திகள் வருகின்றன. இச் செய்திகள் விலங்குநூலார், வேட்டையாளர் கூறும் செய்திகளுடன் ஒத்தே காணப்படுகின்றன. புலி பிற விலங்குகளை வேட்டையாடும் முறையை விலங்குநூலார் நன்றாக ஆராய்ந்துள்ளனர். புலியானது பூனையினத்தைச் சேர்ந்தது என்று விலங்குநூலார் கூறுவர். இந்த இன விலங்குகள் இரைக்காக வேட்டையாடும்போது பதுங்கி ஒதுங்கித் தக்க சமயம் பார்த்துத் திடுமெனப் பாய்ந்து தாக்கிக்கொல்லும் எனக் கூறுவர். இரவில் காணும் சக்தியுடைய கண்கள் உண்டு. இரையை ஓசையின்றி நெருங்க நகங்கள் உள்ளடங்கிய கால்களை (Padded feet) உடையன. மெத்தென உள்ள காலடிகளை எடுத்து வைத்து ஓசை செய்யாது அணுகித் திடுமெனப் பாயும் புலியின் பிடிப்பிலிருந்து தப்பிப்பது மிகவும் அரிது. புலியின் கூரிய வளைந்த நகங்கள் சதையில் நன்றாகப் பதிந்துவிடும். புலியின் முன்கால்கள் மிக்க வலிமை யுடையன.

பெரிய விலங்கைக்கூட அடித்து இழுத்துச் செல்லும் சக்தி வாய்ந்தவை.

> " களிற்றிரை தெரீஇய பார்வல் ஒதுக்கின்
> ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல"

—அகம், 22.

சமயம் பார்த்துக்கொண்டே ஒதுங்கிப் பதுங்கிக் கொண்டிருக்கும் புலிபோல என்று அகநானூறு கூறுவது அரிய விளக்கமாகும். புலி பதுங்கியிருந்து தாக்கும்போது பெரும்பாலும் இரையாகும் விலங்குகளைக் கழுத்தைக் கடித்து முறித்துக் கீழே விழச் செய்யும் என்று விலங்கு நூலார் கூறுவர். கழுத்தின் அடிப்பாகமான தொண்டையைக் கவ்வும்போது எந்த விலங்கும் தப்பித்து ஓடுவது அரிது,

> " கறுழ்பொருத செவ்வாயான்
> எருத்து வவ்விய புலி போன்றன "

என்று புறநானூறு (4) கூறுவது உற்றுநோக்கத் தக்கது. மான் முதலியவற்றின் கழுத்தைக் கவ்வி உதிரம் உவற்றியுண்ட புலியைப் பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது. (Coming with slow deliberate approach or bewildering rush it dips under and takes its prey by the throat, draws down and pins its head to the ground and strangles the animal...On rearing upon its hindlegs the tiger seizes the animal's neck in its jaws and bringing one jaw down upon the victim's head and shoulders, grasps the nuzzle.) தொண்டையைக் கடித்துக் கொல்வதுபோலவே இரையாகும் விலங்கின் மேலேறிப் பாய்ந்து கழுத்தைப் பிடித்து முறித்துக் கொல்வதுமுண்டு.

"... ... ... ... ... ... ... பாய்கொள
உறுவெரிந் ஒடிக்கும் சிறுவரிக் குருளை
நெடுநல் யானை நீர்நசைக் கிட்ட
கைகறித் துரறும் மைதூங்கு இறும்பில்"

பிற்காலத்தில் பெரியதாக வளர்ந்த பின்பு ஒரே பாய்ச்சலில் முதுகை ஒடிக்கக்கூடிய குட்டிப்புலி என்று கூறுவதைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். சங்க இலக்கியத்தில் புலி பிற விலங்குகளைக் கழுத்தைக் கௌவிக் கடித்துக் கொல்வதைக் கூறியிருப்பது விலங்குநூலார் கூறிய செய்தியுடன் ஒத்திருப்பது வியப்பைத் தருகின்றது. புலியின் பாய்ச்சலைத் தனியானதெனக் கருதியே "புலிப் பாய்த்துள்" என்று வழங்கினர்.

புலியின் கால்கள் மிக்க வலிமையுடையன எனக் கூறுவர் பெரிய விலங்குகளைக்கூடக் கொன்று தன் குகைக்கு இழுத்துச் செல்லும் எனக் கூறுவர். மிகுந்த ஆற்றலுள்ள இதன் கால்களில் வளைந்த கூர்மையான வலிமையான நகங்கள் உள்ளன. இந்த நகங்களால் விலங்குகளின் தசையைக் கிழித்துவிடும்.

"வாள்வரி வயமான் கோளுகிர் அன்ன
செம்முகை யவிழ்ந்த முண்முதிர் முருக்கின்"

—அகம், 99

"பைங்கண் வல்லியம் கல்லளைச் செறிய
முருக்கரும் பன்ன வள்ளுகிர் வயப்பிணவு"

—அகம், 362.

புலியின் பெரிய, வலிய, வளைந்த நகங்கள் இரத்தம் பூசப்பட்டிருக்கும்போது முருக்க மரத்தின் வளைந்த பூவரும்பை ஒத்திருக்கும் என்று கூறியது உருவிலும் நிறத்திலும் மிகப் பொருத்தமான உவமை.

"கடுங்கண் உழுவை யடிபோல வாழைக்
கொடுங்காய் குலைதொறூஉந் தூங்கும்"

— கலி 43.

நகங்களை மடக்கி உள்ளே வைத்திருக்கும்போது விரல்களையுடைய புலியின் காலடி வாழைக்காயின் குலை போலிருக்கும் என்று கலித்தொகையில் உவமை வருகின்றது. புலியின் விரல்கள் பிஞ்சு வாழைக்காய் போல இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. புலியின் பிடியில் அகப்பட்ட விலங்கு தப்புவது அரிதென்பதை அறிந்தே சங்கப் புலவர்கள் புலிக்கு "கோள்வல்" என்ற அடைமொழி கொடுத்து வழங்கினர். மற்றும் 'புலிக்கோள்' 'கோட்புலி' என்றும் வழங்கினர். கொண்டதை விடாத புலி என்பதைக் குறித்தே 'கோள்வல் ஏற்றை' (குறுந்தொகை 141, அகம் 171, ஐங்குறுநூறு 216, நற்றிணை 36) 'கோள்வல் வேங்கை' (ஐங்குறுநூறு 385), 'இருங்கோள் வயப்புலி' (அகம் 332) 'புலிக்கோள்' (ஐங்குறுநூறு 373) 'கோட்புலி' (நற்றிணை 237) என்றெல்லாம் சங்க நூல்களில் வருகின்றன. சிலப்பதிகாரத்தில் 'கலனசை வேட்கையிற் கடும்புலி போன்று' என்று வரும் கொலைக்களக் காதை வரிக்குக் கூறிய உரையில் கடும்பசியால் ஊனைக் கவ்விவிடாத புலிபோன்று என்று கூறியிருப்பதைக் காணலாம்.

சங்க இலக்கியத்தில் புலியும் யானையும் போரிடுவதுபற்றிப் பல பாடல்கள் கூறுகின்றன. புலியும் யானையும் அடர்ந்த காடுகளில் வாழும் இரு வலிமை பொருந்திய விலங்குகள். இரவுக் காலத்தில் காட்டில் காணப்படும் புலி யானையைத் தாக்கிக் கொல்வது எளி

தன்று. தனித்த பெண் யானையையும் நிரையில் பின் தங்கிய கன்றையும் பெரும்பாலும் புலி தாக்கிக் கொன்று விடும் என்று விலங்குநூலார் கூறுவர். புலி ஆண் யானையைக் கொல்வது மிகவும் அரிதென்பர். சில சமயங்களில் புலியை யானை கொன்றுவிடும்.

"ஒண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் குவவடி
வெண்கோட் டியானை முழக்கிசை வெரீஇக்
கன்றொழித் தோடிய புன்றலை மடப்பிடி
கைதலை வைத்த மையல் விதுப்பொடு
கெடுமகப் பெண்டிரிற் றேரும்" —அகம், 347.

"குறுங்கை யிரும்புலிக் கோள்வ லேற்றை
நெடும்புதற் கானத்து மடப்பிடி யீன்ற
நடுங்குநடைக் குழவி கொளீஇய பலவின்
பழந்தூங்கு கொழுநிழ லொளிக்கு நாடற்கு"

—ஐங்குறுநூறு, 216

"அருவி ஆர்க்கும் பெருவரைச் சிலம்பின்
ஈன்றணி இரும்பிடி தழீஇக் களிறுதன்
தூங்குநடைக் குழவி துயில்புறங் காப்ப
ஒடுங்களை புலம்பப் போகிக் கடுங்கண்
வாள்வரி வயப்புலி கன்முழை உரறக்"

— அகம். 168.

அகநானூறு 347 ஆம் செய்யுள் புலி பாய்ந்ததற்குப் பயந்து கன்றை விட்டுவிட்டு ஓடிய பெண் யானையைப் பற்றிக் கூறுகின்றது. கன்றைக் காணாமல் பெண் யானை கையைத் தலையில் வைத்துக் குரலிடுவதாகக் கூறுவதைக் காணலாம். ஐங்குறுநூறு 216 ஆம் பாடலில் புலி பெண்யானை யீன்ற கன்றைத் தூக்கிக் கொண்டு செல்வதைப் பற்றிக் கூறியுள்ளது. யானையின் குட்டிகளையே பெரும்பாலும் புலிகள் கொன்று

கவரும் என்று விலங்கு நூலார் கூறுவது இது சார் பாகச் சிந்திக்கத் தக்கது. நிரையுடன் கூடியிருக்கும் போது யானையின் கன்றைப் புலி கவர முயன்றாலும் முடியாது. நிரையில் உள்ள ஆண் யானைகள் புலியிட மிருந்து கன்றைக் காக்குமென விலங்குநூலார் கூறுவர். அகநானூறு 168 ஆம் பாடலில் இதே செய்தி கூறப் படுவதைக் காணலாம்.

சங்க இலக்கியத்தில் சில பாடல்களில் யானையைப் புலி கொல்வதாகக் கூறப்பட்டுள்ளது. சில பாடல் களில் புலியை யானை கொல்வதாகப் பாடப்பட் டுள்ளது. சில பாடல்களில் யானையும் புலியும் போரிட்டு ஒன்றை யொன்று வெல்ல முடியாது வலி யிழந்து புண்களுடன் போவதாகப் பாடப்பட்டுள்ளது. இந்த மூன்று செய்திகளும் விலங்கு நூலாரும் வேட்டையாளரும் கண்டறிந்த செய்திகளுடன் ஒத்தே காணப்படுகின்றன.

" ஈன்றணி வயவுப்பிணப் பசித்தென மறப்புலி
ஒளிேறந்து மருப்பின் களிறட்டுக் குழுமும்
பனியிருஞ் சோலை எமியம் என்னுய் " — அகம், 112.

" புலிதொலைத் துண்ட பெருங்களிற்று ஒழிஊன் "
— அகம், 169.

" விடர்முகைச் செறிந்த வெஞ்சின இரும்புலி
புகர்முக வேழம் புலம்பத் தாக்கிக்
குருதி பருகிய கொழுங்கவுள் கயவாய்
வேங்கை முதலொடு துடைக்கும்" —நற்றிணை, 158.

" ..................... உயர்வரைப்
பெருங்கல் விடரகஞ் சிலம்ப இரும்புலி
களிறுதொலைத்து உரறுங் கடியிடி மழைசெத்து "
—நற்றிணை, 344.

" குறுங்கை யிரும்புலிக் கோள்வல் ஏற்றை
பூநுத லிரும்பிடி புலம்பத் தாக்கி " —நற்றிணை, 36.

புலி யானையைக் கொல்வதாக மேலே பாடல்களில் கூறப்பட்டுள்ளது. இச்செய்தி பல பாடல்களில் வருகின்றது. அதுபோலவே யானை புலியைத் தாக்கிக் கொல்வதாகவும், விரட்டிவிடுவதாகவும் சில சங்கப் பாடல்கள் கூறுவது அரிய செய்தியாகும். இந்தச் செய்தியை வேட்டையாளர் சிலர் நேரில் கண்டு வியந்து கூறியுள்ளனர்.

" இரும்பிடி கன்றொடு விரைஇய கயவாய்ப்
பெருங்கை யானைக் கோள்பிழைத் திரீஇய
அடுபுலி வழங்கும் ஆரிருள் நடுநாள் " —அகம், 118.

" வாள்வரி பொருத புண்கூர் யானை
புகர்சிதை முகத்த குருதி வார
உயர்சிமை நெடுங்கோட்டு உருமென முழங்கும் "

—அகம், 148.

" வயங்குவெள் ளருவிய குன்றத்துக் கவாஅன்
கயந்தலை மடப்பிடி இனனே மார்ப்பப்
புலிப்பகை வென்ற புண்கூர் யானை
கல்லகச் சிலம்பிற் கையெடுத் துயிர்ப்பின் "

—அகம், 202.

" கழைகவின் போகிய மழையுயர் நனந்தலைக்
களிற்றிரை பிழைத்தலிற் கயவாய் வேங்கை
காய்சினஞ் சிறந்து குழுமலின் வெரீஇ
இரும்பிடி யிரியுஞ் சோலை " —அகம், 221.

" மாசில் வெண்கோட்டு அண்ணல் யானை
வாயுள் தப்பிய அருங்கேழ் வயப்புலி
மாசிலம் நெளியக் குத்திப் புகலொடு
காப்பில வைகுந் தேக்கமல் சோலை " —அகம், 251.

" இரும்புலி தொலைத்த பெருங்கை வேழத்துப்
புலவுநாறு புகர்நுதல் கழுவக் கங்குல்
அருவி தந்த அணங்குடை நெடுங்கோட்டு "

—அகம், 272.

" ...................... வேங்கை
அடுமுரண் தொலைத்த நெடுநல் யானை " —அகம், 307.

" உழுவையொ டுழந்த வுயங்குநடை யொருத்தல்
நெடுவகிர் விழுப்புண் கழாஅக் கங்குல் "

—அகம், 308.

" இலையொடு மேய்ந்த கேழ்கிளர் யானை
நீர்நசை மருங்கின் நிறம்பார்த் தொடுங்கிய
பொருமுரண் உழுவை தொலைச்சிக் கூர்நுனைக்
குருதிச் செங்கோட் டழிதுளி கழாஅக்
கன்முகை அடுக்கத்து மென்மெல இயலிச் "

—அகம், 332.

" வெண்கோட் டியானை பொருத புண்கூர்ந்து
பைங்கண் வல்லியம் கல்லளைச் செறிய " —அகம், 362.

" குயவரி இரும்போத்துப் பொருத புண்கூர்ந்து
உயங்குபிடி தழீஇய மதனழி யானை " —அகம், 398.

" இரும்புலி தொலைத்த பெருங்கை யானை
வெஞ்சின உருமின் உரறும் " —நற்றிணை, 353.

" களிறுகோட் பிழைத்த கதஞ்சிறந் தெழுபுலி
எழுதரு மழையிற் குழுமும் " —ஐங்குறுநூறு, 218.

" கொடுங்கேழ் இரும்புற நடுங்கக் குத்திப்
புலிவிளை யாடிய புலவுநாறு வேழத்தின்
தலைமருப் பேய்ப்ப கடைமணி சிவந்தநின் "

—நற்றிணை, 39.

" வறுங்கயந் துழைஇய விலங்குமருப் பியானை
குறும்பொறை மருங்கின் அமர்துணை தழீஇக்
கொடுவரி யிரும்புலி காக்கும் " —குறுந்தொகை, 215.

மேற்காட்டிய பாடல்களில் புலியை யானை கொன்றதையும் காயப்படுத்தியதையும், புலியிடமிருந்து தப்பித்ததையும் பற்றிய செய்திகளைக் காணலாம். யானையின் தும்பிக்கையில் அகப்படாது தப்பித்த புலியைப்பற்றி அகநானூறு 118ஆம் பாடல் குறிப்பிடுகின்றது. அகநானூறு 251ஆம் பாடல் யானையின் வாயிலிருந்து தப்பிய புலியைப் பற்றிப் பேசுகின்றது. புலியுடன் நடத்திய போரில் புண்ணுற்று வருந்தும் யானையைப் பற்றி அகம். 45, 202, 308, 398 பாடல்கள் கூறுகின்றன. புலியைக் கொன்று வென்ற யானையைப் பற்றி அகநானூற்றுப் பாடல்கள் 202, 272, 307, 332, நற்றிணைப் பாடல்கள் 39, 353 கூறுகின்றன. புலிக்குத் தப்பிய யானையைப் பற்றி அகநானூறு 118, 221 பாடல்கள் கூறுகின்றன. தன்னுடைய கன்றையுடைய இனத்தைக் காப்பாற்றப் புலியை வென்ற யானையைப் பற்றி அகநானூறு 202 குறுந்தொகை 215 பாடல்கள் கூறுகின்றன. நற்றிணைப் பாடல் (39) புலியை விளையாடிய யானையைப் பற்றிக் கூறியது அரிய செய்தியாகும். புலியை எளிதில் கொன்ற யானையைப்பற்றியே அப்படிக் கூறப்பட்டுள்ளது. அகநானூறு 362ஆம் பாடல் யானையால் காயமுற்று வருந்தும் புலியைப்பற்றிக் கூறியுள்ளது. புலியுடன் போரிட்டதில் புலியால் நீண்ட தசை கிழிக்கப்பட்ட புண்ணோடு காணும் யானையைப்பற்றி அகநானூறு 308 கூறுவது உண்மைச் செய்தியாகும். இந்தச் செய்திகளெல்லாம் சங்கப் புலவர்கள் நேரில் கண்டறிந்து கூறியன போலத் தோற்றுகின்றன. பிற்காலப் புலவர்கள் யானையைப் புலி கொன்றதாகவே ஒரே செய்தியைக் கூறினர். சங்கப் புலவர்கள் யானைக்கும்

புலிக்கும் நடந்த போரில் இயற்கையாகவே நிகழும் பல செய்திகளையும் கண்டறிந்தவர் போலக் கூறினமை மிகுந்த வியப்பை அளிக்கின்றது. இந்தச் செய்திகள் அனைத்தும் பல வேட்டையாளர் இன்று எழுதி வருகின்றனர்.

> " பூம்பொறி உழுவைப் பேழ்வாய் ஏற்றை
> தேங்கமழ் சிலம்பில் களிற்றொடு பொரினே
> துறுகல் மீமிசை உறுகண் அஞ்சாக்
> குறக்குறு மாக்கள் புகற்சியின் எறிந்த "

—நற்றிணை. 104.

நற்றிணைப் பாடலில் குறச் சிறுவர்கள் புலியும் யானையும் போரிடுவதை உயர்ந்த பாறையிலிருந்து கண்டு களித்ததாகக் கூறுவதைக் காணலாம். இம் முறையாகக் காட்டில் நிகழ்ந்தவையைக் கண்டோ அல்லது கண்டார்வாய்க் கேட்டோ சங்கப் புலவர்கள் பாடியதாகத் தெரிகின்றது. தொல்காப்பியத்தில் தடுமாறு பொருளில் வரும் தொழிற் பெயர்க்கு எடுத்துக்காட்டாக உரையாசிரியர்கள் "புலி கொன்ற யானை" "புலி கொல் யானை" என்ற தொடர்களைக் கூறியிருக்கின்றனர். புலியைக் கொன்ற யானை யென்றும் புலியாற் கொல்லப்பட்ட யானை யென்றும் இரு பொருளுடனும் மயக்கமாகி வருமெனக் கூறினர். இந்த எடுத்துக்காட்டு இயற்கையறிவுடன் நுட்பமாகக் கூறப்பட்டுள்ளது. சங்க நூல்களில் புலியைக் கொன்ற யானையும் புலியாற் கொல்லப்பட்ட யானையும் கூறப்பட்டுள்ளன. விலங்கு நூலாரும் இதை உண்மையெனக் கூறுவர். இத்தகைய அரிய உண்மையான இயற்கை நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு தடுமாறு தொழிற் பெயருக்குத்

தொல்காப்பியரே இலக்கணம் வகுத்ததைக் கருதுங் கால் பழந்தமிழரின் அறிவாற்றலைப் போற்றாதிருக்க முடியாது.

புலி யானையுடன் போரிடும் பல செய்திகள் வேட்டையாளர் இன்று கூறும் செய்திகள் போலவே காணப்படும் தன்மை மிக வியப்புக்குரியதாகும்.

புலி தனது இரையாக மான்களையும் பன்றிகளையும் கொன்று உண்பதே வழக்கம் எனக் கூறுவர். இந்த விலங்குகளை எளிதில் கொன்றுவிடும். புலி கொன்ற விலங்குகளை நெடுந்தொலை இழுத்துச் சென்று அல்லது கவ்விச் சென்று பதுக்கி வைத்து உண்ணும் என்று விலங்கு நூலார் கூறுவர். ஆமான் போன்ற மிகப் பெரிய, கனத்த விலங்குகளைக்கூட வாயால் கவ்வி இழுத்துச் சென்றுவிடும் வலிமை புலிக்கு உண்டு எனக் கூறுவர். கொன்ற இடத்தில் உண்ணாது இழுத்துச் சென்று பதுக்கி உண்ணும் குணத்தைப் புலியின் தனிக் குணமாக விலங்கு நூலார் கூறுவர். புலி தான் உண்டது போக மிஞ்சிய உணவைத் தனது குகையிலோ, முழை யிலோ பதுக்கி வைத்துக் கெட்ட நாற்றம் அடித்துப் புழுத்துப் போனாலும் மீண்டும் மீண்டும் அதையே உண்ணும் என்று கூறுவர். புலியின் இக்குணங்களை யும் சங்கப் புலவர்கள் கண்டு கூறியிருக்கின்றனர்.

" ஆடுகழை நரலும் அணங்குடைக் கவாஅன்
ஈருயிர்ப் பிணவின் வயவுப்பசி களைஇய
இருங்களி றட்ட பெருஞ்சின உழுவை
நாம நல்லராக் கதிர்பட உமிழ்ந்த
மேய்மணி விளக்கின் புலர ஈர்க்கும்
வாள்நடந் தன்ன வழக்கருங் கவலை
உள்ளுநர் உட்கும் கல்லடர்ச் சிறுநெறி —அகம், 72.

"... ... ... ... பெரிய
கேழல் அட்ட பேழ்வா யேற்றை
பலாவமல் அடுக்கம் புலவ ஈர்க்கும்
கழைநரல் சிலம்பின் ஆங்கண் வழையொடு
வாழை யோங்கிய தாழ்கண் அசும்பில்" —அகம், 8.

"தடமருப் பியானை வலம்படத் தொலைச்சி
வியலறை சிவப்ப வாங்கி முணங்குநிமிர்ந்து
புலவுப்புலி புரண்ட புல்சாய் சிறுநெறி"

—அகம், 357.

மேலே காட்டிய பாடல்களில் புலி யானையையும், பன்றியையும் கொன்று ஈர்த்துச் செல்வதைக் குறிப்பாகக் கூறியிருப்பதைக் காணலாம். பலாமரங்கள் நிறைந்த அடுக்கத்தில் கொன்ற பன்றியை மூங்கிற் காட்டுக்குள் இழுத்துச் செல்வதை அகநானூறு (8) கூறுவதைக் காணலாம். யானையைக் கொன்று பாறையில் இழுத்துச் சென்றதால் பாறையெல்லாம் இரத்தம் சிந்திச் சிவப்பாகும்படி இழுத்துச் சென்று புல் நிறைந்த இடத்தில் உண்டதாக அகநானூறு 357 ஆம் பாடல் கூறுவதும் கவனிக்க வேண்டியது.

"கொடுவாய்ப் பேடைக் கல்கிரை : தரீஇய
மான்றுவேட் டெழுந்த செஞ்செவி எருவை
வான்தோய் சிமைய விறல்வரைக் கவாஅன்
துளங்குகடை மரையா வலம்படத் தொலைச்சி
ஒண்செங் குருதி உவறியுண் டருந்துபு
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை
கொள்ளை மாந்தரின் ஆனுது கவரும்
புல்விலை மராஅத்த அகன்சே ணத்தங்"

— அகம், 3.

"கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலை
வறனுறல் அங்கோ டுதிர வலங்கடந்து

புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை
இரவுக்குறும் பலற நூறி நிரைபகுத்
திருங்கள் முடுக்கர்த் திற்றி கெண்டும்
கொலைவில் ஆடவர் போலப் பலவுடன்
பெருந்தலை யெருவையொடு பருந்துவந் திருக்கும் ''

— அகம். 97.

'' ஓலிகழை நிவந்த வோங்குமலைச் சாரற்
புலிபுகா வுறுத்த புலவுநாறு கல்லளை ''

— குறுந்தொகை. 253.

புலி தனது இரையாக எந்த விலங்கைக் கொன்றாலும் உடனே அதை இழுத்துச் சென்று பதுக்கி வைத்து உண்ணும் என்று விலங்குநூலார் கூறுவர். இதற்குக் காரணம் புலியின் இரையை நரியும், கழுதைப் புலியும். பிணந்தின்னிக் கழுகுகளும், காக்கைகளும், கழுகுகளும் எப்போதும் திருடித் தின்னக் காத்திருக்கின்றன. இந்தக் கள்வர்களிடமிருந்து தான் கொன்ற இரையைக் காக்கவே புலி பாதுகாப்பாக மறைப்பதாக விலங்கு நூலார் கூறுகின்றனர். (The prey once secured and killed becomes an object of general and unwelcome attention ; hence, the common impulse of the tiger to drag its prey under cover where it can be eaten in seclusion and without interference. After feeding, what is left of the carcase is usually dragged and concealed under bushes, put awany among boulders of a nullah and if there is no suitable hiding place an attempt may be made to cover the food with leaves or with uprooted tufts of grass.........Besides professional hunters, there are professional scavengers like hyenas, jackal, vultures, crows and even eagles with plebian tastes all ready to appropriate a tiger's or a panther's foods Their efforts to conceal and otherwise to secure it arise from and are an answer to, the thieving activities of their

neighbours) புலியும் சிறுத்தைப்புலியும் மறைத்து வைத்த இரை அழுகிப் புழுப்பிடித்துப்போனாலும் உண்ணும் என்று விலங்கு நூலார் கூறுவர்; இதைச் சங்கப் புலவர்கள் அறிந்திருந்தனர். குறுந்தொகை 253 ஆம் பாடலில் புலி தனது இரையைக் கற்குகையில் பதுக்கி வைத்துக் கெடுநாற்றமடித்ததை "புலி புகா வுறுத்த புலவு நாறு கல்லளை" என்று தெளிவாகக் கூறுகின்றது. அகநானூறு (3, 97) மிகத் தெளிவாக "புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை" என்று புலியின் முடைநாற்றமெடுத்த இரையைப் பற்றிக் கூறுகின்றது. இதில் வியப்பைத் தரும் செய்தி அக நானூறு பிணந்தின்னிக் கழுகும் பருந்தும் புலி கொன்ற இரையைக் கள்வர்போலக் கொள்ளையடிப்ப தாகக் கூறுவதுதான். செஞ்செவி எருவை (king vulture) என்பது ஒருவகைப் பிணந்தின்னிக் கழுகு. இதற்குச் சிவந்த காது உண்டு எனக் கூறுவர். கொள்ளை மாந்தரைப் போல, புலிக்கு இரையான மரை யாவின் ஊனைக் கவர்ந்து உண்டதாக அகநானூறு (3) கூறுவது நேரில் கண்ட செய்தி போலவே உள்ளது. அகநானூறு 97 ஆவது பாடல் இன்னும் விளக்கமாகக் கொள்ளையடிக்கும் கள்ளரைப்போல பிணந்தின்னிக் கழுகும், பருந்தும் (plebian eagles) புலி கொன்று போட்ட மானின் ஊனைக் கவர்ந்ததாகக் கூறுவதைக் கவனிக்க வேண்டும். சங்கப் புலவர்கள் புலி தனது இரையை இழுத்துச் சென்று பதுக்குவதையும், கெடு நாற்றமடிக்க வைப்பதையும் நன்கு கண்டறிந்தே பாடி னர் என்பது தெளிவாகின்றது.

மேலே காட்டிய பாடல்களில் புலி யானையையும், மரையாவையும் (Nilgai), கலைமானையும் (chital stag),

காட்டுப் பன்றியையும் (wild boar) கொன்று உணவாகக் கொண்டது கூறப்பட்டுள்ளதைக் காணலாம். புலி பெரும்பாலும் மானினத்தையும் காட்டுப் பன்றிகளையுமே விரும்பி உண்ணும் என்று கூறுவர். ஆனால் தன்னைவிடப் பெரிய விலங்குகளான யானை, ஆமான் (gaur) ஆகியவைகளைக் கொன்றால் அவைகளையும் இழுத்துச் செல்லும் வலிமை வாய்ந்தது எனக் கண்டுள்ளனர். காட்டுப் பசுவைக் கொல்வது எளிதன்று. அரிதாகக் கொன்ற காட்டுப் பசுவைப் புலி இழுத்துச் செல்வதை அகநானூறு 238 ஆம் பாடல் கூறுவது கண்டதைக் கண்டவாறே கூறுவதுபோலத் தோற்றுகின்றது.

"மான்றமை யறியா மரம்பயில் இறும்பில்
ஈன்றிளைப் பட்ட வயவுப்பிணப் பசித்தென
மடமான் வல்சி தரீஇய நடுநாள்
இருண்முகைச் சிலம்பின் இரைவேட் டெழுந்த
பனைமருள் எருத்திற் பல்வரி இரும்போத்து
மடக்கண் ஆமான் மாதிரத்து அலறத்
தடக்கோட்டு ஆமான் அண்ணல் ஏஎறு
நனந்தலைக் கானத்து வலம்படத் தொலைச்சி
இருங்கல் வியலறை சிவப்ப ஈர்க்கும்
பெருங்கல் நாட பிரிதி யாயின்." —அகம். 238.

விலங்குகள் ஒன்றையொன்று கண்டறிய முடியாதபடி நெருங்கி மரங்கள் வளர்ந்த காட்டில் புலி தனது உணவான மானைத் தேடிச் சென்று காட்டுப் பசுவைக் கொன்று பெரிய பாறைப் பரப்பில் இரத்தம் சிவக்க இழுத்துச் சென்றதாகக் கூறுவதைக் கவனிக்க வேண்டும். 'மடமான் வல்சி' என்று கூறுவதிலிருந்து மானை அன்றாட உணவாகக் கருதினரெனத் தெரிகின்றது.

"பணைமருள் எருத்திற் பல்வரி இரும்போத்து" என்று புலியைக் கூறியதையும் கவனிக்க வேண்டும். மான்களைப் புலி மிகுதியாகக் கொன்று உண்பதால் மான்களுக்குப் புலியைக் கண்டால் மிகவும் அச்சம்.

" நீள்வரைச் சிலம்பின் இரைவேட் டெழுந்த
வாள்வரி வயப்புலி தீண்டிய விளிசெத்து
வேறுவேறு கவலைய ஆறுபரிந் தலறி
உழைமான் இனநிரை யோடுங்
கழைமாய் பிறங்கன் மலையிறந் தோரே. "

—அகம், 249.

" துறுகல் விடரளைப் பிணவுப்பசி கூர்ந்தெனப்
பொறிகிளர் உழுவைப் போழ்வாய் ஏற்றை
அறுகோட்டு உழைமான் ஆண்குரல் ஓர்க்கும்
நெறிபடு கவலை நிரம்பா நீளிடை. " —அகம், 147.

" அறுமருப் பெழிற்கலை புலிப்பாற் பட்டென "

" புலிபுறங் காக்குங் குருளை போல. " —புறம், 42.

" கருங்கல் வியலறைக் கிடப்பி வயிறுதின்
றிரும்புலி துறந்த ஏற்றுமான் உணங்கல். "

—அகம், 107.

" புலிக்கோட் பிழைத்த கவைக்கோட்டு முதுகலை. "

—ஐங்குறுநூறு, 373

அகம் 249 ஆம் பாடல் புலியினை அஞ்சிப் புள்ளிமான்கள் நிலைதடுமாறி ஓடுவதைக் கூறுகின்றது. அகம் 147 ஆம் பாடலில் கொம்பையுடைய ஆண்மானின் குரலைக் கேட்டுப் புலி குகையைவிட்டு இரைக்குக் கிளம்புதலைக் கூறுகின்றது. புலி இம்முறையாக மானின் குரலைக் கேட்டு வேட்டையாடுவது உண்மையே. இதை வேட்டையாளர் (Hunters) கூறியுள்ளனர். அகம் 97 ஆம் பாடலில் ஏற்கனவே கள்ளிக்காட்டில் கொம்

புடைய கலைமானைக் கொன்ற புலியைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. மானினத்தைச் சேர்ந்த (Antilopes) மரையாவைப் புலி கொன்று உண்டதை அகநானூறு மூன்றும் செய்யுளில் கண்டோம்.

" மன்ற மரையா விரிய வேறட்டுச்
செங்க ணிரும்புலி குழுமு மதனால் "

—குறுந்தொகை, 321.

" அளைச்செறி யுழுவை கோளுற வெறுத்த
மடக்கண் மரையான் பெருஞ்செவிக் குழவி. "

—மலைபடுகடாம், 505-506.

மரையாவைக் கொன்று உண்பதைப் பிற பாடல்களும் கூறுவதைக் காணலாம். மானினத்தில் பெரியதான கடமானையும் (Sambur) புலி கொல்வதைச் சங்கப் புலவர்கள் கூறியுள்ளனர்.

"எற்படு பொழுதி னினந்தலை மயங்கிக்
கட்சி காணாக் கடமா னல்லேறு
மடமா னாகுபிணை பயிரின் விடர்முழை
இரும்புலிப் புகர்ப்போத் தோர்க்கும்
பெருங்க னாடனெம் மேனறக்குத் தகுமே. "

—புறம், 157.

" கடமா தொலைச்சிய கானுறை வேங்கை."

—நாலடி, 300.

ஆண் கடமான் பெண்மானைக் கூப்பிடும் குரலைக் கேட்கும் புலி என்று கூறியது அரிய செய்தியாகும். அதுபோலவே புலியின் குரலைக் கேட்டு மான்கள் ஓடுவதையும் சங்க நூல்கள் கூறுவதைக் கவனிக்கலாம். இவ்விரு செய்தியும் வேட்டையாளர் பல முறைகள் கூறியுள்ளதேயாகும்.

"பிறையுறழ் மருப்பிற் கடுங்கட் பன்றிக்
குறையார் கொடுவரி குழுமுஞ் சாரல்."

—அகம், 322.

"கடையலங் குரல வாள்வரி உழுவை
பேழ்வாய்ப் பிணவின் விழுப்பசி நோனது
இரும்பனஞ் செறும்பின் அன்ன பரூஉமயிர்ச்
சிறுகட் பன்றி வருதிறம் பார்க்கும்
அத்தமார் அழுவத் தாங்கண் நனந்தலை."

—அகம், 277.

"புலிகொல் பெண்பாற் பூவரிக் குருளை
வளைவெண் மருப்பிற் கேழல் புரக்குங்
குன்று கெழு நாடன் ... ... ..."

—ஐங்குறுநூறு, 265.

"சிறுகட் பன்றிப் பெருஞ்சின வொருத்தலொடு
குறுங்கை யிரும்புலி பொரூஉ நாட."

—ஐங்குறுநூறு, 266.

மேற்காட்டிய பாடல்களில் புலி காட்டுப்பன்றியைக் கொன்று தின்னும் செய்தி கூறப்படுகின்றது, பன்றி வரும் வழியைப் பார்த்துப் புலி பதுங்கியிருந்ததைக் கூறுவதைக் காணலாம். புலியிடமிருந்து குட்டிகளைப் பாதுகாக்க ஆண் பன்றி புலியுடன் போரிடுவதையும் கூறியிருப்பதைக் காணலாம். காட்டுப்பன்றி மிகவும் நெஞ்சுரம் படைத்த விலங்கென விலங்கு நூலார் கூறுவர். குட்டிகளைப் பாதுகாக்கப் புலியையும் எதிர்த்துப் போராடுவதுண்டு. புலி வேட்டையாடி உண்டபின் உண்ட மகிழ்ச்சியில் புல்லில் புரளு மென்பர். "முணங்கு நிமிர்ந்து புலவுப் புலி புரண்ட புல்சாய் சிறுநெறி" என்று அகநானூறு கூறுவதைக் காணலாம்.

புலி வேட்டையாடும்போது காட்டு விலங்குகள் நீர் உண்ணச் செல்லும் பழக்கமான வழியிலோ யானை போன்ற விலங்குகள் காட்டில் செல்வதற்கு அமைத்துக் கொண்ட தடங்களிலோ பதுங்கிக் கொண்டு பார்க்கும். மாலைக் காலத்திலோ, விடியலிலோ, இரவிலோ காத்திருக்குமென வேட்டையாளர் கூறுவர். காடுகளில் மான்கள் முதலிய விலங்குகள் அன்றாடம் நீர்நிலையை நோக்கிச் செல்லும் தடங்களை எளிதில் காணலாம். வேட்டையாளர் இத்தடங்களிலோ நீர்நிலைக் கருகாமையிலோ பதுங்கி இவ்விலங்குகளைக் கொல்வர். இத்தகைய தடங்களைச் சங்கப் புலவர்கள் நன்கு அறிந்திருந்தனர். அவைகளை 'மானதர்' என்றழைத்தனர். மான் என்ற சொல் இங்கு விலங்குகளைப் பொதுவாகக் குறிக்கும்.

" ஒடுங்களை புலம்பப் போகிக் கடுங்கண்
வாள்வரி வயப்புலி கன்முழை உரறக்
கானவர் மடிந்த கங்குல்
மானதர் சிறுநெறி வருதல் நீயே. " —அகம், 168.

" கான மானதர் யானையும் வழங்கும்
... ... ... ... ... ... ...
அரவும் புலியும் அஞ்சுதக வுடைய
இரவழங்கு சிறுநெறி தமியை வருதி. " —அகம், 318.

'கானமானதர்' என்று அகநானூறு (318) கூறுவதை நோக்குக. வேட்டையாளர் இதை 'game trail' என்பர்.

" ஈண்பிணவு ஒடுக்கிய இருங்கோள் வயப்புலி
இரைநசைஇப் பரிக்கு மலைமுதற் சிறுநெறி."

—நற்றிணை, 332.

" கழைகவின் அழிந்த கல்லதர்ச் சிறுநெறிப்
பரலவல் ஊறற் சிறுநீர் மருங்கில்
பூநுதல் யானையொடு புலிபொருது உண்ணும். "

—நற்றிணை, 333.

மலையில் உள்ள சிறு தடத்தில் இரையைத் தேடிப் புலி சென்றதாக நற்றிணை (332) கூறுவதைக் கவனிக்க வேண்டும். அத்தகைய சிறுநெறி சேருமிடத்தில் பரலுடைய பள்ளத்தில் ஊறிய நீர்த்தடத்திற்கு அருகில் புலி யானையைக் கொன்றதாக நற்றிணை 333 ஆம் பாடல் கூறுவதையும் காணலாம். இச்செய்திகள் விலங்கு நூலார் கண்டறிந்து எழுதிய செய்திகளே யாகும். இருட்காலத்தில் 'கானமானதர்' வரவேண்டா என்று கூறுவதன் காரணம் என்ன? அந்தச் சிறு நெறியில் (game trails) புலி "பார்வல் ஒதுக்கின் ஒளித்தி யங்கும்," ஆதலின் அந்தத் தடத்தில் வரவேண்டா எனக் கூறுகின்றார். புலியானது தனக்கு உணவாகும் விலங்குகள் நீரைத் தேடிச் செல்லுங்கால் அவற்றைப் பின் தொடர்ந்து பதுங்கிச் செல்வதுமுண்டு என வேட்டையாளர் கூறுவர்.

" நெடுவிளிக் கோவலர் கூவல் தோண்டிய
கொடுவாய்ப் பத்தல் வார்ந்துகு சிறுகுழி
நீர்காய் வருத்தமொடு சேர்விடம் பெறாது
பெருங்களிறு மிதித்த அடியகத்து இரும்புலி
ஒதுங்குவன கழிந்த செதும்பல் ஈர்வழி."

—அகம், 155.

நீரைத் தேடிச் சென்ற யானையைப் புலி பின்பற்றிப் பதுங்கிச் சென்றதாகக் கூறுவதைக் காணலாம்.

இரவில் புலி இரைதேட வேட்டைக்கு எழுவதைப் புறநானூற்றுப் பாடல்கள் கூறுகின்றன. உடம்பைத் திமிர் முறித்து எழுந்து குகையை விட்டுச் செல்வதாகக் கூறுவதைக் காணலாம்.

" அணங்குடை நெடுங்கோட் டளையகம் முனைஇ
முணங்குநிமிர் வயமான் முழுவலி யொருத்தல்

ஊனசை யுள்ளந் துரப்ப விரைகுறித்துத்
தான்வேண்டு மருங்கின் வேட்டெடுழுந் தாங்கு. ''

—புறம், 52.

'' ... ... ... முணங்குசிமிர்ந்
தளைச்செறி யுழுவை யிரைக்குவந் தன்ன
மலைப்பரு மகல மதியார் சிலைத்தெழுந்து. ''

—புறம், 78.

இரவில் புலி உறுமும் குரல் கேட்டால் காட்டுவிலங்கு கள் பாதுகாப்பைத் தேடுமென்பர். புறநானூற்றில் புலி இரை வேட்டெழுதலை அரசனொருவன் பகைவரை மதியாது போருக்குச் சென்றதற்கு ஒப்பிட்டுக் கூறப் பட்டிருக்கின்றது. காட்டில் செல்லும் புலி எந்த விலங்குகளையும் மதிக்காது போகுமென்பர். (Although a killer like his larger cousin, he has not the disdain for all other living creatures). இந்தக் குணத்தையே பிற அரசரை மதியாது பெருமிதமாகப் போர்க்குச் சென்ற செயலுக்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றது. புலி இரவுக் காலத்தில் காட்டில் செல்லுங்கால் அதைப் பார்த்தோ அல்லது அதன் குரல் கேட்டோ பிற விலங்குகள் பதுங் கும். குரங்குகள் கூக்குரலிட்டுக் கிளைகளில் தாவி உயரப் போகும். குரங்குகளில் ஒரு முதிய பெண் குரங்கு உச்சிக் கிளையில் அமர்ந்து தொலைவில் வரும் புலியையும் கண்டுணர்ந்து தனது கூட்டத்தினருக்கு எச்சரிக்கை யாகக் குரல் காட்டும். உடனே குரங்குகள் கூட்ட மாகக் கிளைகளில் மேலேறிக் கூக்குரலிடும். குரங்கு களின் இந்த வழக்கம் வேட்டையாளர்க்கும் பிற விலங்குகளுக்கும் புலி தொலைவில் வருவதை அறிந்து கொள்ள உதவுகிறது. குரங்குகள் காடுகளில் மிகவும் அஞ்சும் எதிரி வரிப்புலியும் சிறுத்தைப் புலியுமாகும்.

சிறுத்தைப்புலி குரங்குகளை உண்பதையே மிகவும் விரும்புமெனக் கண்டு பிடித்துள்ளனர். குரங்குகள் புலியைக் கண்டு மிகவும் அஞ்சும் தன்மையைச் சங்கப் புலவர்கள் தெரிந்திருந்தனர்.

" புலியுரி வரியதள் கடுப்பக் கலிசிறந்து
நாட்பூ வேங்கை நறுமலர் உதிர
மேக்கெழு பெருஞ்சினை யேறிக் கணக்கலை
கூப்பிடூஉ உகளுங் குன்றகச் சிறுநெறி." —அகம், 205.

புலியின் வரியையுடைய தோல்போல வேங்கைப் பூக்கள் பாறையில் தாவிக் கிடக்க அதைக் கண்ட குரங்குக் கூட்டங்கள் புலியெனக் கருதி மேலே எழுந்த பெரிய கிளைகளில் ஏறிக் கூக்குரலிடும் என்று சொல்லப் பட்டிருப்பதைக் காணுங்கால் சங்கப் புலவர்களுடைய நுண்ணிய அறிவைப் போற்றாதிருக்க முடியாது. புலியின் உருமும் குரலைக் கேட்டவுடன் குரங்குகள் குன்றின்மேல் ஏறியதாக ஐங்குறுநூறு (274) கூறு வதையும் காணலாம்.

" மந்திக் கணவன் கல்லாக் கடுவன்
ஒண்கேழ் வயப்புலி குழுமலின் விரைந்துடன்
குன்றுய ரடுக்கங் கொள்ளு நாடன்."

—ஐங்குறுநூறு, 274.

குரங்கு புலிக்கு அஞ்சுவதைப் பற்றிக் கூறப்பட்டுள்ள இன்னொரு செய்தியும் வியப்பைத் தருகின்றது.

" ஒண்கேழ் வயப்புலி.........
.........இடியுமிழ் தழங்குகுரல்
கைக்கோண் மறந்த கருவிரன் மந்தி
யருவிடர் வீழ்ந்ததன் கல்லாப் பார்ப்பிற்கு
முறிமே யாக்கைக் கிளையொடு துவன்றிச்

சிறுமை யுற்ற களையாப் பூசல்
கலைகை யற்ற காண்பி னெடுவரை.''
—மலைபடுகடாம், 309-315.

புலியின் உருமும் குரலைக் கேட்ட தாய்க்குரங்கு கையி லிருந்த குட்டியைக் கைப்பிடியிலிருந்து விட்டுவிட மலைப்பிளப்பில் விழுந்த குட்டியை எடுக்க முடியாது குரங்குகள் கூடிக் கூக்குரலிட்டதாக மலைபடுகடாம் கூறுகிறது. புலிக்குக் குரங்குகள் அஞ்சுவதை இச் செய்தி நன்கு விளக்குகின்றது.

புலி காட்டில் வாழும் விலங்குகளைக் கொன்று உண்ணுவது பொதுவான வழக்கம். ஆனால் சில சமயங்களில் சில புலிகள் ஆடுமாடுகளைக் கொன்று உண்ணும் பழக்கத்தைக் கொண்டுள்ளன. மேய்வதற்கு வரும் மாடுகளைக் கொன்று உண்ட புலி அந்தப் பழக்கத்தை எளிதில் விடுவதில்லை. சங்ககாலத்திலும் மாடுகளைக் கவர்ந்த புலிகள் இருந்தனவெனத் தெரி கின்றது.

'' ஏகல் அடுக்கத் திருளளைச் சிலம்பின்
ஆகொள் வயப்புலி யாகுமஃ தெனத்தம்
மலைகெழு சீறூர் புலம்பக் கல்லெனச்
சிலையுடை யிடத்தர் போதரு நாடன்.'' —அகம், 52.

பசுவைக் கொல்லும் புலியைக் கொல்லக் கானவர் வந்த தாகக் கூறுவதையும் காணலாம். இதைவிட முக்கிய மான செய்தி யொன்றையும் சங்கப் புலவர்கள் கூறி யுள்ளனர். சங்க காலத்திலேயே மனிதரைக் கொன்று உண்ணும் புலிகள் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

'' இருண்மயங் கியாமத் தியவுக்கெட விலங்கி
வரிவயங் கிரும்புலி வழங்குநர்ப் பார்க்கும்
பெருமலை விடரகம் வரவரி தென்னாய்.'' —அகம், 218.

" என்றுகான் மடிந்த பிணவுப்பசி கூர்ந்தென
மான்ற மாலை வழங்குநர்ச் செகீஇய
புலிபார்த் துறையும் புல்லதர்ச் சிறுநெறி."

—நற்றிணை, 29.

" ஒலிவல் ஈந்தின் உலவை யங்காட்
டாறுசெல் மாக்கள் சென்னி யெறிந்த
செம்மறுத் தலைய நெய்த்தோர் வாய
வல்லியம் பெருந்தலைக் குருளை மாலை" —நற்றிணை, 2

" ஈன்றின் பிணவின் உட்குபசி களைஇயர்
ஆளியங்கு அரும்புழை ஒற்றி வாள்வரிக்
கடுங்கண் வயப்புலி ஒடுங்கும் நாடன்."

— நற்றிணை, 322.

" பேழ்வா யிரும்புலி குஞ்சரம் கோட்பிழைத்துப்
பாழூர்ப் பொதியிற் புகாப்பார்க்கு மாரிடை,"

— ஐந்திணை யெழுபது, 29.

மனிதரைக் கண்டால் காட்டு விலங்குகள் ஒதுங்கிச் செல்வதே வழக்கம். புலிகூடக் காட்டில் மனிதரைக் கண்டால் ஒதுங்கிச் செல்லுமென வேட்டையாளர் கூறுவர். ஆனால் சில சமயங்களில் புலி தற்செயலாக மனிதனைக் கொன்று சுவை கண்டு விட்டால் மீண்டும் மனிதரையே கொன்று உண்ண விரும்புமாம். காடுகளில் நடமாடும் மனிதரைக் கொல்வது காட்டு விலங்குகளைக் கொல்வதைவிடப் புலிக்கு எளிதாக இருப்பதால் புலி ஆட்கொல்லியாக (Man - eater) மாறிவிடுவது வழக்கமாம். இத்தகைய ஆட்கொல்லிப் புலி காடுகளில் மனிதரை நடமாடும் தடங்களில் பதுங்கிப் பாய்ந்து கொன்றுவிடும். மாடுமேய்க்கும் ஆட்களை மாலைக்காலத்தில் வழிபார்த்திருந்து கொல்வது வழக்கம். இந்த ஆட்கொல்லிப் புலிகளுக்கு வேட்டை

யாளரே அஞ்சுவர். சில சமயங்களில் புலியை வேட்டை யாடச் சென்ற வேட்டையாளரையே அவர்களைப் பின் தொடர்ந்து புலியே வேட்டையாடுவதுண்டாம். அக நானூறு 218 ஆம் பாடல் காட்டு வழியில் மனிதரைக் கொல்லப் புலி பதுங்கிப் பார்ப்பதைக் கூறுகின்றது. நற்றிணை இரண்டாம் பாடலும் 29 ஆம் பாடலும் வழியில் சென்றவர்களைக் கொன்ற புலியைப் பற்றிக் கூறுகின்றன. ஆட்கள் நடமாடும் வழியில் ஒரு குகை யில் பதுங்கிக் கொல்லப்பார்க்கும் புலியைப்பற்றி நற்றிணை 322 ஆம் பாடல் கூறுகின்றது. பாழான ஊரிலே நடமாடும் மனிதரை உணவுக்காகப் புலி பார்த் ததாக ஐந்திணை யெழுபது கூறுகின்றது. ஆட் கொல்லிப் புலிகள் (Man - eaters) சங்க காலத்திலேயே இருந்தமை சங்கப் புலவர்கள் கூறியுள்ளதிலிருந்து நன்கு விளங்குகின்றது.

புலி வேட்டையாடச் செல்லுங்கால் ஒரு குறிப் பிட்ட தடத்தின் வழியாகவே போய்வரும் வழக்கத்தை வேட்டையாளர் கண்டுள்ளனர். புலியின் இப்பழக்கம் காரணமாக வேட்டையாளர் புலியை எளிதில் சுட்டுக் கொல்லுவர்.

> " ... ... ... பிறங்குமலைப்
> புல்லரை யோமை நீடிய
> புலிவழங் கதர கானத் தானே."
>
> — ஐங்குறுநூறு, 316.

> " புன்கண் யானையொடு புலிவழங் கத்தம்."
>
> —ஐங்குறுநூறு, 386.

புலி வழங்கும் அதர், புலிவழங்கும் அத்தம் என்று ஐங்குறுநூறு கூறுவதைக் காணலாம். காட்டில்

வாழும் ஆண் புலிகள் தங்களுக்கென வேட்டையாட எல்லை வகுத்துக்கொண்டு வாழுமெனக் கூறுவர். (A tiger settles in a favoured locality and establishes its right over this territory) சீவக சிந்தாமணியில் (1226) கூறப் படும் பழமொழியில் இச்செய்தி வருவது வியப்பைத் தருகின்றது. "புலிக்குத் தன் காடும் பிற காடும் ஒக்கும்" என்று கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு புலிக்கும் 'தன் காடு' என்று ஒன்று உள்ளதை இப்பழ மொழி குறிப்பிடுகின்றது.

புலி குட்டிபோடும் காலத்தில் புதர் நிறைந்த குகையில் மறைவான இடத்தில் குட்டிபோடுமென்பர். சங்க நூல்களிலும் புலி குட்டி போடுவதைப்பற்றிக் கூறியுள்ளனர்.

" ... ... ... விடர்முகை
ஈன்பிணவு ஒடுக்கிய இருங்கோள் வயப்புலி."

—நற்றிணை, 332.

" கல்லளைச் செறிந்த வள்ளுகிர்ப் பிணவின்
இன்புனிற் றிடும்பை தீரச் சினஞ்சிறந்து

—நற்றிணை, 148.

" வேங்கை வெறித்தழை வேறுவகுத் தன்ன
ஊன்பொதி அவிழாக் கோட்டுகிர்க் குருளை
மூன்றுடன் ஈன்ற முடங்கர் நிழத்த
துறுகல் விடரளைப் பிணவுப்பசி கூர்ந்தெனப்
பொறிகிளர் உழுவைப் போழ்வாய் ஏற்றை."

—அகம், 147.

மேலே காட்டிய நற்றிணைப் பாடல்கள் பெண் புலி குகையில் குட்டி போடுவதைக் கூறுகின்றன. அக நானூறு 147 ஆம் பாடல் மிக வரியதொரு செய்தியைக் கூறுகின்றது. ஈன்று 'ஊன்பொதி' அவிழாத மூன்று

குட்டிகள் குகையின் மூலையில் கிடந்ததைப் பற்றிக் கூறிய செய்தி மிக அரிய செய்தியாகும். புலிகள் இரண்டு அல்லது மூன்று குட்டிகளையே பெரும்பாலும் ஈனும் என விலங்கு நூலார் கண்டுள்ளனர்.

புலிகளில் சிறுத்தைப்புலி மரத்தில் நன்கு ஏறும் என்று விலங்கு நூலார் கூறுவர். வரிப்புலி நீரிலும் நீந்தக்கூடியதெனக் கூறுவர்.

> " நெடுவரை மருங்கில் வரம்பற இழிதரும்
> கடுவரற் கலுழி நீந்தி
> வல்லியம் வழங்கும் கல்லதர் நெறியே."
>
> —யாப்பருங்கல விருத்தி-மேற்கோள்.

விரைவாக நீர் செல்லும் கான்யாற்றை நீந்திச்சென்ற புலியைப்பற்றிக் கூறியிருப்பதைக் கவனிக்கவும்.

சங்க நூல்களில் பெரும்பாலும் காட்டில் வாழும் வரிப் புலியைப் பற்றியே (Tiger) பல செய்திகள் காணப் படுகின்றன. அடர்ந்த காட்டில் வாழும் பெருஞ் சிறுத்தைப் புலியைப் (Panther) பற்றியும் செய்திகள் காணப்படுகின்றன. ஆனல் குறுங் காடுகளிலும், பாறைகள் குன்றுகளிலும், காட்டுச் சார்பான ஊர் அருகாமையிலும் வாழும் சிறிய சிறுத்தைப் புலியைப் (Leopard) பற்றிய செய்திகள் சங்கநூல்களில் மிகுதி யாகக் காணப்படவில்லை. சங்கநூல்களில் வரிப்புலி யையும் (Tiger), பொறிப் புலியையும் (Panther) ஒன்றுகக் கருதியே பலவிடங்களில் பாடப்பட்டிருப்பதைக் காண லாம். ஆனல் அவைகளைப் பிரித்துணர்ந்து சில பாடல் களில் தெளிவாகக் கூறியிருப்பதையும் காண்கிறோம். காட்டுச் சூழலில் இருள்சூழ்ந்த இடத்தில் வரிப்புலியை யும் பொறிப் புலியையும் எளிதில் பிரித்துணர்வது எளி

தன்று என்பதைக் கண்டு வேட்டையாளரும் (Shikaries) கூறியுள்ளனர். பொறிப்புலியை வரிப்புலி யெனக் கருதி மயங்குவதுண்டு. வரிப்புலிக்கு உடலில் வளைந்த வரிகள் உண்டு. பொறிப் புலிக்கு அவ்வரிக்கு இணையாகப் பூப்போன்ற புள்ளிகள் வரிசையாகக் காணப்படுகின்றன. வரிசையாக இப் பொறிகள் காணப்படுவதால் வரியா, புள்ளியா என்பதைக் கண்டு பிடிப்பது எளிதன்று. (An examination of a panther skin will show that the spots or rather rosettes are arranged in rows corresponding to the stripes on a tiger skin, the difference between the animals being hard to discern at distances over thirty yards.........Thus the large panther is often mistaken for a tiger — Sporting Days in Southern India - Leiut. Colonel A.J.O. Pollock). இதன் காரணமாகவே சங்கப் புலவர்கள் வரிப்புலியையும் பெருஞ்சிறுத்தைப் புலியையும் அஃதாவது பொறிப் புலியையும் (Large Panther) 'இரும் புலி' (அகம் 27, 92, 158, 171, 216, 261, 272; நற்றிணை 36, 65, 344; குறுந்தொகை 47, 141, 215, 321, 343; புறம் 19, 202) என்ற பெயரில் பெரிய புலி என்ற பொருளில் கூறினர். வலிய புலி என்ற பொருளில் 'வயப்புலி' (அகம் 22, 52, 251, 347) என்றும் 'வயமான்' (அகம் 14, 73, 99; ஐங்குறுநூறு 304) என்றும், 'வல்லியம்' (அகம் 362; நற்றிணை 2) என்றும் கூறினர். பெரிய புலி என்றும், வலிய புலி என்றும் கூறக் காரணம் புள்ளிகளையுடைய சிறுத்தைப் புலியிலிருந்து பிரித்துணரவே என்பதை நன்கு தெளிந்துகொள்ள வேண்டும். சிறுத்தைப்புலி (Leopard) அடர்ந்த காட்டில் வாழ்வதில்லை. ஊர்களின் அருகிலே அடிக்கடி காணப்படும். வீடுகளில் உள்ள

ஆடுமாடுகளையும் நாய்களையும் பிடித்துத் தின்னும். காட்டில் வாழும் பெருஞ் சிறுத்தைப்புலி போன்று (Panther) பொறிகளை உடையதாயினும் அதைப்போல வலிமையுடையதன்று. அடர்ந்த காட்டில் வாழ்வதன்று. இந்தச் சிறுத்தைப் புலியினின்று - சிறுபுலியினின்று பிரித்துணரவே பெரும்புலி யென்ற பொருளில் 'இரும்புலி' என்று பல பாடல்களில் வழங்கினர். இன்றும் பேச்சு வழக்கிலும் கன்னட மொழியிலும் கொலாமி (Kolami), கடபர்மொழியிலும் 'பெரும் புலி' என்றும் 'பெத்தபுலி' என்றும், தெலுங்கில் 'பெப் புலி' என்றும் வரிப்புலிக்குப் (Tiger) பெயர்கள் வழங்கி வருவது சங்ககாலப் பெயரான 'இரும்புலியுடன்' ஒத்து வருவது வியப்பைத் தருகின்றது. மலையாளத்தில் பொறியுடைய புலியைக் குறிக்க 'புள்ளிப்புலி' (Panther and Leopard) என்றே வழங்குகின்றனர். வரிப்புலியைக் 'கடுவாய்' என்று தமிழில் வழங்குவதுபோல் அழைக்கின்றனர். கொலாமி (Kolami) மொழியிலும் 'கெடியாக்' (Kediak) என்று வரிப்புலியை அழைப்பதுவும் கவனிக்கத் தக்கது. புலி என்ற சொல்லே முதலில் புள்ளி என்ற சொல்லிலிருந்து தோன்றி, புள்ளியுடைய புலியை அஃதாவது சிறுத்தைப் புலியைக் குறித்து வழங்கியிருக்க வேண்டும். புள்ளியுடைய புறாவை 'புலிப்புறா' என்று நாட்டுமக்கள் அழைப்பதைக் காணலாம். புள்ளிப் புலியைக் குறித்த புலியென்ற சொல் பின்னர்ப் புலியின விலங்குகளுக்குப் பொதுவாக வழங்கலாயிற்று. வேங்கை என்ற சொல்லும் வெம்மையான கை என்ற பொருளில் புலியினுடைய வலிய கையைக்குறித்து வழங்கியதாகத் தெரிகின்றது. புலி பிற விலங்குகளை வேட்டையாட அதன் முன்கால்களையே, அஃதாவது

கைகளையே பெரிதும் பயன்படுத்துகின்றது. புலியின் கையும் வாயும் கொடியவை எனக் கருதினமையால் வேங்கை, கடுவாய் என்ற பெயர்கள் தோன்றின.

பெருஞ்சிறுத்தைப் புலியின் உடலில் காணப்படும் புள்ளி போன்ற, பூப்போன்ற வளைந்த வரியைப் 'பூம்பொறி' என்று கூறினர். ஆங்கிலத்தில் இதையே Rosette என்று கூறியதை இது சார்பாக நினைத்துப் பார்க்கலாம். பெருஞ் சிறுத்தைப் புலியின் (Panther) பொறியைக் குறிப்பாக எடுத்துக் கூறியுள்ளனர். "பொறிகிளர் உழுவை" (அகம் 147; நற்றிணை 205) என்று சங்க இலக்கியத்தில் பெருஞ் சிறுத்தைப்புலி அழைக்கப் பட்டுள்ளது.

> " புலிப்பொறி வேங்கைப் பொன்னிணர் கொய்து நின் "
>
> —ஐங்குறுநூறு, 396.

> " புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய "
>
> —புறம், 13.

> " புலிப்பொறி யன்ன புள்ளியம் பொதும்பிற் "
>
> —நற்றிணை, 391.

வரிப்புலியின் வரிகளும் பல பாடல்களில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. 'வாள் வரி வயப்புலி' (அகம் 168, 249), 'வாள் வரி வயமான்' (அகம் 99) 'வரி வயங்கு இரும்புலி' (அகம் 216) என்றும், 'வாள்வரி' (அகம் 252) என்றேயும் புலியை அழைத்திருப்பதும் கவனிக்க வேண்டும். 'கொடுவரி இரும்புலி' (அகம் 27, 92) என்றும், 'கொடுவரி' (அகம் 322) என்றேயும் புலியை அழைத்திருப்பதையும் காணலாம். 'பல்வரி இரும் போத்து' என்று அகநானூறு 238ஆம் பாடல் கூறுகின்றது. புலியின் வரிகள் வளைந்து கொடுவாள்

(Sickle) போல் உடலில் காணப்படுவதால் வாள்வரி என்றும் கொடுவரி என்றும் பொருத்தமாகக் கூறப்பட்டது. 'குயவரி இரும்போத்து' (அகம் 398), 'குறிவரி இரும்புலி' (நற்றிணை 65) எனக் கூறுவதையும் நோக்குக. புலியின் வரிகள் உடலில் வளையம் போல் திரும்பி ஒன்றுசேராது கொடுவாள் உருவில் இருக்கின்றன. கடற்கரையில் அலை அடித்துக் கருமணல் வரித்த வரிபோன்று இருப்பதாக நற்றிணை (323) கூறுவது மிக அரிய உவமையாகும். "புலிவரி எக்கர்" என்று நற்றிணை கூறுகின்றது. புலியினத்தின் வரியையும் பொறியையும் சங்கப்புலவர்கள் தெளிந்திருந்தனர் என்பது தெளிவு. புலியினத்தின் வரியையும் பொறியையுமுடைய தோலை,

"வரியும் புள்ளியு மயங்கு வான்புறத்
துரிவை மேகலை யுடீஇப் பரிவொடு"

— வேட்டுவ வரி. 29-30.

என்று சிலப்பதிகாரம் கூறுவது பெருஞ்சிறுத்தைப் புலியின் உடலில் பொறிகள் (Rosettes) வரிசையாக அமைந்த தோலைக் குறித்ததாகு மெனலாம். பெருஞ்சிறுத்தைப் புலி அடர்ந்த காட்டில் வாழ்வதாகவும் வரிப்புலியின் குணங்களை யுடையதாகவும் விலங்கு நூலார் கூறுவர். இப் புலியைத் தற்காலத்தில் 'தெண்டுப்புலி' என்றும் வழங்குவர்.

புலியின் வரியும் பொறியும் சேர்ந்த உருவம் வேங்கைப் பூக்கள் கற்பாறையில் விழுந்தாற்போல இருப்பதாகவும், வேங்கை மரத்தின் தழையும் பூவும் புலிக்குட்டி போல இருப்பதாகவும் சங்க நூல்களில் பல பாடல்கள் கூறுவதைக் காணலாம்.

"கருங்கால் வேங்கை வீயுதி துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை"

— குறுந்தொகை, 47.

"புலிப்பொறி வேங்கைப் பொன்னிணர் கொய்துநின்"

—ஐங்குறு நூறு, 396.

"வான்கண் விரிந்த பகன்மரு ணிலவிற்
சூரன் மிளிஇய சார லாராற்
றேங்கண் மிசைய வேங்கை யொள்வீப்
புலிப்பொறி கடுப்பத் தோன்றலின்"

—அகம், 228.

"அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட் டொள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறங் கடுக்கும்" —புறம், 202.

"கருங்கா லினவேங்கை கான்றபூக் கன்மேல்
இருங்கால் வயவேங்கை யேய்க்கும்"

—திணைமாலை நூற்றைம், 26.

"குறவ ரூன்றிய குரம்பை புதைய
வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்
புலிசெத்து வெரீஇய புகர்முக வேழம்"

— அகம், 12.

"புலியுரி வரியதள் கடுப்பக் கலிசிறந்து
நாட்பூ வேங்கை நறுமலர் உதிர" —அகம், 205.

"கல்லயற் கவித்த கருங்கால் வேங்கை
அலங்கலந் தொடலை அன்ன குருளை"

—நற்றிணை, 383.

அடர்ந்த காட்டில் மங்கிய ஒளியிலும், நிலவு வெளிச்சத்திலும் மஞ்சளான ஒள்ளிய வேங்கைப் பூக்கள் கரிய பாறையில் வீழ்ந்து கிடப்பது புலியின் தோல்போன்று

இருப்பதாகக் கூறியது பொருத்தமான அரிய உவமை. புலியின் தோல் மஞ்சள் நிறமானதும் கரிய வரிகளுடையதுமாகும். பெருஞ்சிறுத்தைப் புலியின் பொறிகளுடன் கூடிய மஞ்சள் உடலும் வேங்கைப் பூக்கள் விழ்ந்த பாறை போலவும் வேங்கைப் பூக்கள் நிறைந்த கிளைகள் போலவும் தோன்றியதாகக் கூறியதும் பொருத்தமானதேயாகும். புலி வழங்கும் அடர்ந்த காடுகளில் வேங்கை மரமும் இயற்கையில் காணப்படுவதையும் உணரவேண்டும்.

"விடர்முகைச் செறிந்த வெஞ்சின இரும்புலி
புகர்முக வேழம் புலம்பத் தாக்கிக்
குருதி பருகிய கொழுங்கவுள் கயவாய்
வேங்கை முதலொடு துடைக்கும்"

—நற்றிணை, 158.

வரிப்புலி யானையைக் கொன்று தன்வாயில் இருந்த இரத்தத்தை வேங்கை மரத்தின் அடிமரத்தில் துடைக்கும் என்று நற்றிணைப் பாடல் கூறியதிலிருந்து வேங்கை மரச் சூழலில் புலியைக் கண்டு சொல்லியிருப்பதைக் காணலாம். வேங்கைமரம் என்ற பெயரே வேங்கை மரத்தின் இத்தோற்றத்தால் தோன்றிற்று என்பதையும் உணரவேண்டும். 'பாயா வேங்கை' என்று வேங்கை மரத்தைக் கூறுவர். வேங்கையின் பூவைப் பறிக்கும்போது குறமகளிர் 'புலி, புலி' எனக் கூறுவர். அதுகேட்டு உண்மையாகவே புலி என்று கருதி அதைக் கொல்ல ஆடவர் வருவர் என்ற செய்திகளையும் சங்கநூல்கள் கூறுகின்றன.

"ஒலிசினை வேங்கை கொய்குவஞ் சென்றுழிப்
புலிபுலி என்னும் பூசல் தோன்ற"

—அகம், 48.

"பொன்னேர் புதுமலர் வேண்டிய குறமகள்
இன்னு விசய பூசல் பயிற்றலின்
ஏகல் அடுக்கத் திருளளைச் சிலம்பின்
ஆகொள் வயப்புலி யாகுமஃ தெனத்தம்
மலைகெழு சீறூர் புலம்பக் கல்லெனச்
சிலையுடை யிடத்தர் போதரு நாடன்"

—அகம், 52.

இச் செய்தியிலிருந்து பிற்கால இலக்கியத்தில் வேங்கை மரம் மகளிர் 'புலி, புலி' என்று பறித்தால் பூக்கும் என்று கதை கட்டி விட்டனர். வேங்கை மரப்பூ உதிர்ந்த தோற்றம் புலி போலத் தோன்றும் என்பது வெறும் கற்பனையன்று. உண்மைச் செய்தியே என்பதை அறிய ஒரு வேட்டையாளரின் அனுபவம் உறுதுணை புரிவது சங்கப் புலவர்கள் எந்த அளவு நுணுக்கமாக இயற்கையின் நிலையையும் நிகழ்ச்சிகளை யும் ஆராய்ந்து கூறினர் என்பதைக் காட்டுகின்றது. தென்னாட்டில் ஏறக்குறைய 70 ஆண்டுகட்கு முன் பல விலங்குகளை வேட்டையாடிய 'போலக்' (Leiut Colonel Pollock) தாம் எழுதிய நூலில் கீழ்வருமாறு ஓர் அனுபவச் செய்தியைக் கூறுகிறார்.

I saw something white more under a tree close to me. It was the panther's belly and I immediately fired. We waited for sometime before approaching the body and I pointed out the wound to the chief who declared that he thought it was flower which had dropped from an overhanging Kino tree. It turned out to be Leopard and we were surprised how so small an animal can kill a full grown buffalo.

புலியின் வயிற்றைப் பார்த்துச் சுட்டதைக் கண்ட நண்பர் அது புலியில்லை என்று கூறி, அது மேலே

கவிழ்ந்திருந்த வேங்கையின் (Kino tree) பூக்கள் எனக் கூறினராம். ஆனால் கூர்ந்து பார்க்கையில் வேங்கையின் பூக்கள் எனக் கருதிய வொன்று கொல்லப்பட்ட சிறுத்தைப் புலியாகக் கிடந்ததாம். இச் செய்தியிலிருந்து வேங்கைப் பூவைப் புலி யெனக் கருதி ஏமாந்த வேட்டையாளரின் அதே அனுபவத்தையே சங்க காலப் புலவரும் அடைந்தே வேங்கைப் பூவிற்குப் புலியின் உடலை உவமையாகக் கூறினரென்று தெரிகின்றது. அதன் காரணமாக வேங்கை மரத்திற்குப் புலியின் மறுபெயரான வேங்கை என்ற சொல் வழங்கிற்று என்பதுவும் தெளிவாகின்றது. வேங்கை மரத்திற்குக் காரணப் பெயர் ஏற்படப் பிறிதொரு சான்றும் கூறலாம். வேங்கை மரம் நம் நாட்டுக்கு மலேயா நாட்டிலிருந்து பல நூற்றாண்டுகளுக்கு முன் பரவி, காடுகளில் இந்தியாவின் சொந்த மரம்போல் வளர்கின்றது எனச் செடி நூலார் கூறுவர். வெளிநாட்டிலிருந்து வந்த வேங்கை மரத்திற்கு அதன் சூழ்நிலையில் அதைப்போன்றே காணப்பட்ட ஒரு விலங்கின் நிற, உருவ அடிப்படையில் காரணத்தோடு பெயரிட்டது இயல்பே.

சங்க இலக்கியத்தில் சிறுத்தைப் புலியின் புள்ளிகள் நிறைந்த உடலை நன்கு உணர்ந்தே "புலிப்பொறி அன்ன புள்ளியம் பொதும்பில்" (நற்றிணை, 391) என்று பாடியுள்ளனர். ஏனெனில் விலங்கு நூலாரும் வேட்டையாளரும் சிறுத்தைப் புலியின் உடலில் உள்ள பொறிகள், மரங்கள், செடிகளின் நிழலும் ஒளியும் போல இருப்பதால் தங்கள் உருவை எளிதில் பிறர் அறியாதபடி மறைத்துவிடுகின்றன எனக்

கூறுவர். (A leopard can hide his whole body whereas a tiger can't hide his head. By repeating broken lights and shadows, the rosettes on a leopard deceive the eyes and obscure the body contours—The Passing of Forest Gods by Augustus Somerville). புள்ளியம் பொதும்பு புலிப் பொறி போல இருப்பதால் சிறுத்தைப் புலியைப் புள்ளியம் பொதும்பெனக் கருதுவது இயற்கையே. இது போன்றே புள்ளிமான் மரங்களின் புள்ளி நிழல் போலத் தோன்றி மறைந்து கொள்கின்றதென விலங்கு நூலார் கூறுவர். இச் செய்தியும் சங்கநூற் புலவருக்குப் புதிய செய்தியன்று.

"உழைப் புறத்தன்ன புள்ளி நீழல்"

என்று அகநானூறு (379) கூறுவதைக் கவனிக்கலாம். இயற்கைச் சூழ்நிலையில் விலங்குகளைச் சங்கப் புலவர்கள் நுனித்துக் கண்டுணர்ந்ததையே வேங்கைப்பூ பற்றிய உவமையும் புள்ளி நிழலைப் பற்றிய உவமையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. இயற்கையின் சூழலை (Natural environment) இந்த அளவு நுனித்து அறிந்து எழுதின புலமையை அந்தக் காலத்தில் வேறே எந்த நாட்டு இலக்கியத்திலும் காணமுடியாது.

புலியின் கண் சிவந்து காணப்படும் என்று சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளது.

"மன்ற மரையா இரிய வேறட்டுச்
செங்க ணிரும்புலி குழுமு மதனால்"

—குறுந்தொகை, 321.

"புத்தகற் கொண்ட புலிக்கண் வெப்பர"

—புறம், 269.

" ஒடுங்கா வயத்திற் கொடுங்கேழ்க் கடுங்கண்
இரும்புலி கொண்மார் நிறுத்த வலையுளோர் "

—கலி, 65.

'செங்கலிரும்புலி' (நற்றிணை 148; அகம் 92) என்று பிற பாடல்களும் கூறும். இரவில் சிறிது வெளிச்சத்திலும் புலியின்கண் தீப்போல ஒளிவிடுமெனக் கூறுவர். புலியின்கண் கொடுமை வாய்ந்ததாகக் காணப்படுவதால் 'கொடுங்கண்' 'கடுங்கண்' (கலி. 43, 65) என்று கூறுவர். புலி கொடிய விலங்காயினும் அழகிய தோற்றமுடையது. ஆதலின் 'அருங்கேழ் வயப் புலி (அகம். 251) என்றும் 'கொடுங் கேழ் இரும்புலி' (கலி. 65; நற்றிணை. 36) (fierce beauty) என்றும் 'ஒண் கேழ் வயப்புலி' (நற்றிணை. 65; அகம். 347; ஐங்குறுநூறு,274) என்றும் புலியின் கொடிய அழகைக் குறிப்பிட்டனர். புலியைப் பற்றி ஓர் அரிய செய்தி சங்க நூல்களில் காணப்படுகின்றது. வரிப்புலியும் சிறுத்தைப் புலியும் குரலிடும் ஒலியைப் பற்றியும் சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளது. சங்க நூல்களில் புலியின் குரல் 'குழுமும்,' 'உரறும்' என்று கூறப்பட்டுள்ளது. 'தழங்கு குரல்' (மலைபடுகடாம், 311) என்றும் புலியின் குரல் கூறப்பட்டுள்ளது. புலியின் குரலாக இன்னோர் ஓசையையும் சங்கநூற் புலவர்கள் கூறியுள்ளது ஆராயத்தக்கது. அகநானூறு 272 ஆம் பாடலில் 'கடையலங் குரல் வால்வரி உழுவை' என்று கூறப்பட்டுள்ளது.

" புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி "

—பெரும்பாண், 156.

" கடைதயிர்க் குரல வேங்கை "

—சிந்தாமணி, 2717.

" இரும்புலிக் கிரிந்த கருங்கட் செந்நாகு
நாட்டயிர் கடைகுரல் கேட்டொறும் வெரூஉம் "

—தொல்காப்பியம், அகத்திணை, சூத்திரம். 41.
நச்சினார்க்கினியர் மேற்கோள்.

அகநானூற்றில் புலியின் குரல் கடைவதுபோல என்று கூறப்பட்டிருப்பதையே தயிரைக் கடையும்போது மத்து ஒலிப்பதுபோன்று இருப்பதாகப் பிற்கால நூல்கள் கூறின. ஆனால் வேட்டையாளர் ஆராய்ச்சிப்படி இத்தகைய ஒலியை எழுப்பும் புலி வரிப்புலியன்று. பெருஞ் சிறுத்தைப் புலியும் சிறிய சிறுத்தைப் புலியுமே இத்தகைய குரலெழுப்புமெனக் கூறுவர். (The guttural sawing of the panther echoes along gamepaths, 'Ah—hah ! Ah—hah ! ah—hah !—This is the jungle by Kenneth Anderson) கடையுங் குரல் என்று மிக நுட்பமாகக் கேட்டறிந்து கூறியிருப்பது வியப்புக்குரியது. காட்டு விலங்குகளின் குரலைக் கூர்ந்து கேட்டுக் குறிப்பிட்டிருப்பதைச் சங்க நூல்களில் காணலாம். புலியின் பழகிய குரலாக உறுமும் குரலே குறிக்கப்பட்டுள்ளது. இடியுறுமுவது போன்று புலி உறுமுவதாகக் கூறப்பட்டிருக்கின்றது.

புலியைப் பற்றிச் சங்க இலக்கியத்தில் வழங்கியுள்ள இரு செய்திகள் நாட்டு மக்களிடையே வழங்கிய கற்பனைச் செய்திகளாகத் தெரிகின்றன. சங்க இலக்கியத்தில் இத்தகைய கற்பனைச் செய்திகள், செவிவழிச் செய்திகள் அருகிக் காணப்படுகின்றன. பெரும்பாலும் உண்மைச் செய்திகளே காணப்படும் சங்க இலக்கியத்தில் இத்தகைய கற்பனைச் செய்திகளும் அருகிக் காணப்படுகின்றன. புலி ஒரு விலங்கை உணவுக்காகக் கொல்லும்போது கொன்ற விலங்கு இடது பக்கத்தில்

விழுந்தால் அதை உண்ணாது என்பது ஒரு செய்தி யாகும். இது புலவர்கள் கற்பனையில் எழுந்த செய்தியே யாகும், உண்மைச் செய்தி யன்று. புலிக்கோ அல்லது பொதுவாக விலங்குகளுக்கோ இத்தகைய மான உணர்ச்சி கிடையாது. மனிதருக்கு மான உணர்ச்சி, பெருமித உணர்ச்சி ஊட்டுவதற்காகச் சங்கப் புலவர்கள் இந்தக் கற்பனையைப் புலியின்மேல் ஏற்றினர் எனத் தெரிகின்றது. இது சார்பாகக் கவரிமாவை 'மானமா' ஆக்கிய கற்பனையைக் கவனிக்க வேண்டும். இது பின்னர் ஒரு கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

"தொடங்குவினை தவிரா அசைவில் நோன்தாள்
கிடந்துயிர் மறுகுவ தாயினும் இடம்படின்
வீழ்களிறு மிசையாப் புலியினுஞ் சிறந்த
தாழ்வில் உள்ளம் தலைத்தலைச் சிறப்ப"

—அகம், 29.

"கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலை
வறனுறல் அங்கோ டுதிர வலங்கடந்து
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை"

—அகம், 97.

"இடம்படு அறியா வலம்படு வேட்டத்து
வாள்வரி நடுங்கப் புகல்வந்து ஆளி"

—அகம், 252.

புலி வேட்டையாடும்போது இடப்புறமாக விழ்ந்ததை உண்ணாது என்பது இயற்கையில் காணப்படும் நிகழ்ச்சி யன்று. புலிக்கு இடமோ, வலமோ என்பது தெரி யாது. புலி வலது கையால் (காலால்) இரையாகும் விலங்கை அடிக்கும்போது இடது பக்கம் அவ் விலங்கு வீழ்ந்தால் அஃது இயற்கையான நிகழ்ச்சியாகும். அது

மற்றக் கொடிய விலங்குகளுக்கும் ஒக்கும். ஆனல் புலி தன் இரையான விலங்கை அடிக்குங்கால் வலது கையால் அடித்து வலது பக்கமே வீழ்ந்தால் அது சிறந்த செய்தியாகும் என்பது கருதியே புலிக்கு உயர்வு, பெருமிதம், மானம் ஆகிய மனிதரின் குணங்களை ஏற்றிச் சங்கப் புலவர்கள் கற்பித்துக் கூறினர் என்பதை உணராது இக்காலத்துப் புலவர்கள் இதை உண்மைச் செய்தியைப் போல மாணவர்க்குப் பாடங் கற்பிப்பது வருந்தத்தக்கது.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று வள்ளுவர் கூறிய அறிவியல் இலக்கணத்தை உணர்ந்தார் எது அறிவியல் செய்தி, எது கற்பனைச் செய்தி என்பதை உணர்வர். புலியின் பெருமிதத்தைப்பற்றிச் சங்கப்புலவர்கள் கூறியதில் பெரிதளவு உண்மை யுண்டு. அடர்ந்த காட்டில் புலியைப் போன்று எதையும் மதிக்காது தான் தான் அரசன் என்று கருதும் விலங்கு எதுவுமில்லை என்பதை விலங்கு நூலார் கண்டுள்ளனர். விலங்குகளுக்கு அரசு என்று கருதப்படும் சிங்கம் கூடப் புலியைப்போன்று பெருமிதமும் துணிவும் உடையதன்று என்பதை விலங்கியலார் கண்டுள்ளனர். புலியின் இத்தகைய சிறப்பைக் கண்டே சங்கநூற் புலவர்கள் இந்தக் கற்பனையைப் புலிக்குக் கூறினர் எனத் தெரிகின்றது. இதன் காரணமாகவே பிற்காலப் புலவர்கள் "புலி பசித்தாற் புல்லைத் தின்னுது" எனக் கூறினர். புறநானூற்றிலும் புலி யானையைக் குறிவைத்துக் கொல்லாது தப்பின் எலியைக் குறிவைக்காது என்று கூறினர்.

" ..........................................ஓங்குவரைப்
புலிபார்த் தொற்றிய களிற்றிரை பிழைப்பின்
எலிபார்த் தொற்ரு தாகு மலிதிரைக் "

—புறம், 237.

ஆனால் இச்செய்தி இயற்கையில் கண்ட உண்மை யன்று. ஏனெனில் புலி பசித்தால் தவளையைக் கூடப் பிடித்துத் தின்னு மென்பதை விலங்கு நூலார் கண்டுள்ளனர். பசித்த புலிக்கு யாதோர் இரையும் சில நாட்களுக்குக் கிடைக்காவிட்டால் ஆடு மாடுகள் போடும் சாணத்தில் வெளிப்படும் வண்டுகளைக்கூடத் தின்னு மென்பர். (Tigers when hard pressed by hunger will eat frogs and cattle droppings for the beetles) *கென்னத் ஆண்டர்சன் (Kenneth Anderson) என்ற பெயர்பெற்ற வேட்டையாளர் ஒரு புலியின் வாழ்க்கையை வர்ணிக்கும்போது முள்ளம்பன்றியால் புண்ணுற்ற புலி வேட்டையாட முடியாமல் வற்றிய குளத்தில் இருந்த தவளைகளையும் நண்டுகளையும் பிடித்து உண்பதைக் கூறியிருக்கிறார். நத்தையையும் வெட்டுக்கிளிகளையுங்கூட, கடும்பசியைத் தணிக்க உண்ணுமாம். ஆதலின் புலிக்கு எந்த உணவும் விலக்கல்ல என்பதை உணரவேண்டும். நாலடியாரில் இந்த உண்மைச் செய்தியை உணர்ந்து ஒரு புலவர் பாடியிருப்பது வியப்பைத் தருகின்றது.

" உறுபுலி ஊனிரை இன்றி ஒருநாட்
சிறுதேரை பற்றியுந் தின்னும் "

—நாலடியார். 193.

நாலடியாரில் கூறிய செய்தி அரிய உண்மையான செய்தியாகும்.

* This is the jungle—Kennth Anderson.

சங்க நூல்களில் வரும் பிறிதொரு செய்தியும் உண்மையானதா என்பது ஆராயத்தக்கது.

''நனந்தலைக் கானத் தாளி யஞ்சி
இனந்தலைத் தரூஉ மெறும்கிளர் முன்பின் ''

—அகம், 78.

''இடம்படுபு அறியா வலம்படு வேட்டத்து
வாள்வரி நடுங்கப் புகல்வந்து ஆளி
உயர் நுதல் யானைப் புகர்முகத் தொற்றி
வெண்கோடு புய்க்குந் தண்கமழ் சோலை ''

—அகம், 252.

''ஆளி நன்மான் அணங்குடை யொருத்தல்
மீளி வேழத்து நெடுந்தகை புலம்ப
ஏந்தல் வெண்கோடு வாங்கிக்குருத் தருந்தும் ''

—அகம், 381.

''அருவி ஆர்க்கும் பெருவரை அடுக்கத்து
ஆளி நன்மான் வேட்டெழு கோளுகிர்ப்
பூம்பொறி உழுவை தொலைச்சிய வைந்நுதி
ஏந்து வெண் கோட்டு வயக்களிறு இழுக்கும்
துன்னருங் கானம் என்னாய் நீயே ''

—நற்றிணை, 205.

ஆளி யென்ற ஒரு விலங்கைப் பற்றிய செய்திகள் மேற்காட்டிய பாடல்களில் கூறப்பட்டுள்ளன. ஆளி என்ற விலங்கு யானையின் தந்தத்தைப் பிய்த்து அதன் குருத்தை உண்ணும் கொடுமை வாய்ந்ததென்று கூறப் பட்டுள்ளது. மற்றும் இந்த ஆளியைக் கண்டு புலி அஞ்சி நடுங்குவதாகவும், புலி இரைக்காக அடித்துக் கொன்ற களிற்று யானையை ஆளி பறித்துச் செல்லும் என்றும் கூறப்பட்டுள்ளது. யானைகள் மிகவும்

அஞ்சும் விலங்காக ஆளி கூறப்பட்டுள்ளது. இயற்கையில் காடுகளில் ஆளியென்ற விலங்கோ ஆளிபோன்ற விலங்கோ உண்டா என்பது ஆராயத்தக்கது. அத்தகைய விலங்கு இயற்கையில் கிடையாது. இதைச் சிலர் சிங்கமெனக் கொண்டனர். சிங்கம் அடர்ந்த காடுகளில் காணப்படும் விலங்கு அன்று. புலி வாழும் சூழ்நிலையில் சிங்கம் வாழாது. மற்றும் சிங்கம் தமிழ் நாட்டில் என்றும் இயற்கையில் வாழ்ந்த விலங்கு அன்று. அதனுல்தான் சங்கப்புலவர்கள் சிங்கத்தைப் பற்றி யாதொரு செய்தியும் கூறவில்லை. பிற்காலப் புலவர்கள் உண்மைச் செய்திகளை அறியாது, சிங்கம் தமிழ் நாட்டில் வாழும் விலங்காகக் கருதி எழுதிச் சென்றனர். சங்க இலக்கியத்தில் சிலபாடல்களில் 'வயமான்' என்பதற்குச் சிங்கம் என்று சிலர் உரை கூறினர். இது தவறு. புலியெனப் பொருள் கொள்ள வேண்டிய இடத்தில் சிங்கமெனப் பொருள் கொண்டமை பொருந்தாது.

" மனையுறை குரீஇக் கறையணற் சேவல்
பாணர் நரம்பின் சுகிரொடு வயமான்
குரற்செய் பீலியி னிழைத்த குடம்பைப்

—புறம், 318.

இதில் வயமான் என்பதற்குச் சிங்கம் என்று பொருள் கொண்டுள்ளது பொருந்தாது. வயமான் என்று வரும் பலபாடல்களிலும் புலி யென்றே பொருள் கொண்டுள்ளனர். சிங்கத்தின் பிடரி மயிர் என்று கொண்டு பொருள் கூறினர். தினைக்கதிர் போன்று வாலின் நுனியில் மயிர்க்கற்றையை யுடைய புலி என்பதே நேரிய, பொருத்தமான, உண்மையான பொருள். வாலின் நுனியிலிருந்து வீழ்ந்த மயிரை வைத்து ஊர்க்

குருவி கூடுகட்டுவதையே கூறியுள்ளார். விலங்கின் வாலின் பெயர் பீலி என்றும் வழங்கும். புலியின் வாலை விடுத்துச் சிங்கத்தின் தலைக்குப் பொருள்தேடச் சென்றது, கற்பனை உணர்ச்சி பிற்காலத்தில் காணப்பட்டதாலேயாகும். சிங்கம் தமிழ்நாட்டில் என்றும் இயற்கையில் வாழவில்லையாதலால் தமிழில் சிங்கத்திற்கு உரிய பெயர் கூடக் கிடையாது.

ஆளியென்பது சிங்கமன்று. பதிற்றுப்பத்தில் "இரும்புலி கொன்று பெருங்களிறு அடூஉம் அடும் பொறி வயமா னனையை" என்ற வரி (75 : 2) வருகின்றது. இங்கு வயமான் என்பது சிங்கத்தைக் குறித்தேயெனத் தோன்றுகிறது. இச் செய்தி செவிவழிச் செய்தியேயெனத் தோன்றுகின்றது. ஆனால் இயற்கையில் உண்மையற்றது. அரசனின் பெருமையை உயர்த்தி(?)ந்து கூறவே கற்பனையாகக் கூறப்பட்டது. சிங்கமும் புலியும் இயற்கையில் ஒரே சூழ்நிலையில் இந்தியாவில் எங்கும் காணப்படவில்லை. ஆதலின் சிங்கமும் புலியும் போரிடுவது காணக்கூடாத செய்தியாகும். ஆளி நன்மானைப் பற்றிச் சங்கப்பாடற் செய்தி வடநூலில் இருந்து வந்த செய்தியாகவே தெரிகின்றது. வடநூலில் இத்தகைய கற்பனையான புராணச் செய்திகள் மிகுந்து காணப்படுகின்றன. ஆளியை 'அத்தியாளி' என்று பிற்கால நூல்கள் கூறும். நிகண்டுகளில் யானையாளி யென்றும் இதையே அறுகு, பூட்கை யென்றும் கூறப்பட்டுள்ளது. யானையினுடைய கையும் புலியினுடைய உடலும் அல்லது சிங்கத்தினுடைய உருவும் கலந்த விலங்காகக் கூறுவர். இத்தகைய விலங்கு இயற்கையில் கிடையாது. தற்காலத்தில் சில அறிஞர்கள்

இந்த விலங்கைக் காண்டாமிருகத்தைக் கண்டு கற்பனை யாகக் கூறப்பட்ட விலங்காகக் கருதுகின்றனர். ஏனென்றால் இந்தியாவில் சில பகுதிகளில் முற்காலத் தில் காண்டாமிருகமும் புலியும் ஓரே சூழலில் காணப் பட்டன. ஆளிபற்றிய சங்கச் செய்திகள் வடமொழியி லிருந்து வந்தனவாகத் தெரிகின்றது. நிகண்டுகளில் சிங்கத்தின் பெயர்களாகத் தூயதமிழ்ப் பெயர், தனிப் பெயர் எதுவுமில்லை. புலியின் பெயரையே சிங்கத் திற்குச் சேர்த்துக் கூறுவதையும் காண்கிறோம். சிலப் பதிகாரத்தில் காட்சிக் காதையில் ஆளியும் சிங்கமும் புலியும் தனித்தனியே கூறப்படுவதும் கவனிக்கத் தக்கது.

புலிகள் வாழுமிடங்களை நன்குதெரிந்தே சங்கப் புலவர்கள் பாடியுள்ளனரென்பது விளக்கப் பட்டுள் ளது. அகநானூற்றில் 357 ஆம் பாடலில் புலிகள் வாழும் ஒரு காட்டின் பெயரையே குறிப்பிட்டிருப் பதைக் காணலாம். 'உம்பற்பெருங் காட்டில்' வாழ்ந்த புலிகளுக்கு அஞ்சி யானைக்கூட்டம் அந்தக் காட்டை விட்டு விலகிச் செல்லும் என்று கூறப்பட்டுள்ளது. வேட்டையாளர் பலர் வயநாட்டுக் காடுகளில் பெரிய புலிகள் மிகுத்துக் காணப்பட்டதைப் பற்றி எழுதி யுள்ளனர். இன்றும் வயநாட்டுக் காடுகளில் புலிகள் உள்ளன. புலி காட்டில் எதற்கும் பயப்படாத விலங் காயினும் நெருப்பைக் கண்டால் மிகவும் அஞ்சும். இதையே 'ஞெலிகழை முயங்கழல் வயமா வெரூஉம்' என்று ஐங்குறுநூறு (307) கூறுகிறது. சங்க இலக்கியத் தில் புலியைப் பல பாடல்களில் 'இரும்புலி' என்றே கூறியுள்ளனர். இரும்புலி என்பதற்குச் சிலவிடங்களில்

'கரிய புலி' என்று பொருள் கொண்டனர். இது தவறு. பெரிய புலி என்ற பொருளிலே சிறுத்தைப் புலியினின்றும் பிரித்துணர்த்தவே 'இரும்புலி' என்று வரிப்புலியைக் குறித்துக் கூறினர். சிறுத்தைப் புலியில் கரும்புலி தமிழ்நாட்டில் மிக அரிதாகக் காணப் படுவதுண்டு. அதுபோலச் செம்புலி என்றோர் இனமும் மிகமிக அரிதாகத் தென்படுவதுண்டு. கரும்புலி மிகவும் வலிமை வாய்ந்ததென்பர். மறவர் குலத்தில் சில பிரிவுகள் கரும்புலி செம்புலி என்று பெயர் கொடுத்து அழைக்கப்படுகின்றன.

புலியைப்போல வலிய விலங்கு, கொடிய விலங்கு தமிழ் நாட்டில் இல்லை. இந்த விலங்கைப் பற்றிச் சங்கநூல்களில் பல பாடல்களில் செய்திகள் காணப்படுவதிலிருந்து புலியைக் காட்டு விலங்குகளில் மிக முக்கிய விலங்காகச் சங்கப் புலவர்கள் கருதினரெனத் தெளிவாகின்றது. இன்று வேட்டையாளர் புலி வேட்டையையே பெரிய வேட்டையாகக் கருதுவர். அந்த வேட்டையாளர் கண்ட செய்திகளில் பல அரிய செய்திகளைச் சங்க நூல்கள் கூறுவது மிக மிக வியப்புக்குரியதாகும். சிறுத்தைப் புலியையும், காட்டில் வாழும் புள்ளிப்புலியையும் Panthera pardus என்றும் வரிப்புலியை Panthera Tigris என்றும் விலங்கு நூலார் அழைப்பர்.

# கக. யானை

சங்க இலக்கியத்தில் மிகப்பல பாடல்களில் கூறப் படும் விலங்கு யானையாகும். யானையைத் தமிழ் நாட் டில் சிறந்த விலங்காகப் பண்டைக் காலத்தில் கருதின ரென்று தெரிகின்றது. காட்டு விலங்குகளில் யானை யும் புலியுமே விரிவாக சங்க இலக்கியத்தில் விளக்கப் பட்டுள்ளன. யானையிலும் காட்டுயானை யென்றும் பழகிய யானையென்றும் பிரித்துக் கருதினர். காட்டில் வாழும் பழகாத யானையைக் 'கான யானை' (அகம் 157; குறுந்தொகை. 79) என்றனர். 'மராஅ யானை' என்று அகப்பாடல் (13, 18) கூறுவது பழகாத காட்டு யானையைப் பற்றியே யாகும். மரபு என்ற சொல் பழகியது என்ற பொருளுடையது என்பதை இது சார் பாக எண்ணிப் பார்க்க வேண்டும். தற்காலத்தில் கான யானையைக் காட்டானை என்று மக்கள் வழங்குவர். சங்க இலக்கியத்தில் வரும் செய்திகள் பெரும்பாலும் காட்டானையைப் பற்றியவையே.

காட்டுயானை வாழும் சூழ்நிலை, காணப்படும் சுற் றுச் சார்பு புலி வாழும் சூழ்நிலையே என்பதைத் தெளி வாகச் சங்கநூற் பாடல்களிலிருந்து உணரலாம். புலியைப்பற்றிப் பாடப்படும் குறிஞ்சித் திணைப் பாடல் களில் யானையைப் பற்றியும் கூறியிருப்பதைச் சங்க நூல்களில் பரக்கக் காண்கிறோம். யானைகள் குன்று களும் மலைகளும் சூழ்ந்த அடர்ந்த ஈரம் நிறைந்த காடு களில் காணப்படுகின்றன. காடுகள் நிறைந்த குன்று களிலும் பள்ளத்தாக்குகளிலும் ஆறுகள் நிறைந்த மலை நாட்டிலும் மேற்குத் தொடர்ச்சி மலைக்காடுகளிலும்

தமிழ்நாட்டில் யானைகள் நிறையக் காணப்படுகின்றன. சோலைகளிலும் காணப்படுகின்றன. முக்கியமாக மூங்கிற் காடுகள் நிறைந்த குன்றுகளிலும் மலைகளிலும் யானைகள் விரும்பிவாழும். (Elephants seem to prefer country where the terrain is hilly or undulating covered with tall forests. As their main food supply is bamboo, they are always to be found in areas where bamboos grow in profusion. A. S.)* யானை வாழுமிடங்களாக 'வரையகஞ் சிலம்பு' (அகம் - 332) 'துன்னருஞ் சோலை (குறுந்தொகை 88) 'வாழை யோங்கிய தாழ்கணசும்பு' (அகம் 8) 'கழை திரங்கடுக்கம்' (அகம் 347) 'பனியிருஞ் சோலை' (அகம் 112) 'மலை முதல் அடுக்கம்' (அகம் 148) 'குன்றத்துக் கவாஅன்' (அகம் 202) 'நெடுங்கழை நிவந்த நிழல்படு சிலம்பு' (நற்றிணை 392) என்று சங்க நூல்கள் கூறுகின்றன. சங்க நூல்களிலிருந்து யானை வாழுமிடம் ஈரம் நிறைந்த நிழலுள்ள காடுகளும் மலைச் சாரல்களும் குன்றுகளும் மூங்கிற் காடுகளும் என்று தெரிகின்றது. விலங்கு நூலாரும் இதே சூழ்நிலையை விளக்கியுள்ளார்கள். யானை இத்தகைய சூழ்நிலையில் வாழ்ந்தாலும் மிகவுயர்ந்த குளிர் மிகுந்த மலைகளிலும் யானைகள் காணப்படுவதுண்டு. வறட்சியான காடுகளிலும் சில காலங்களில் காணப்படுவதுண்டு. கான யானை வாழும் சூழ்நிலையிலே புலியும் வாழ்வதால் யானைகள் காட்டில் புலியை எதிர்ப்படுவதும் தலைப்படுவதும் இயற்கையே. ஆதலின் புலிக்கும் யானைக்கும் அடிக்கடி நிகழும் பிணக்கம், போர் முதலிய செய்திகள் சங்க நூல்களில் மிகுதியாகக் கூறப்பட்டுள்ளன. சங்க நூல்களில் சிங்கத்தைப் பற்றிய தெளிவான

* Augustus Someville - The passing of forest gods.

செய்திகள் கிடையா. சீவக சிந்தாமணி, கம்ப ராமாயணம் ஆகிய பிற்கால நூல்களில் அரிமா கரிமாவை வென்றதாகவும் சிங்கத்தைக் காட்டரசன் என்று கூறும் செய்திகளைக் காணலாம். சிங்கம் வாழும் சூழ்நிலை புல்லும் புதரும் நிறைந்த வடநாட்டு முல்லை நிலங்களாகும். ஆதலின் அடர்ந்த காடுகளில் வாழும் யானையும் புல்லும் புதரும் நிறைந்த இடங்களில் முல்லை நிலங்களில் வாழும் சிங்கமும் எதிர்ப்படல் இயலாது. இயற்கைக்கு முரணான இந்த வடநூற் செய்தியைப் பிற்காலப் புலவர் போற்றினராயினும் சங்க நூல்கள் இச்செய்தியைக் கூறவில்லை. இயற்கையில் காணப்படும் உண்மைச் செய்தியான புலியும் யானையும் தலைப் படலையே கூறினர். யானைகள் உருவிலும் கனத்திலும் பெரிதாயினும் குன்றுகளிலும் மலைகளிலும் நன்கு ஏறக்கூடிய தென்பதை விலங்கு நூலார் கண்டுள்ளனர். இந்திய யானைகளை 'அன்னிபால்' (Hannibal) என்ற வீரன் மிக உயரமான ஆல்ப்ஸ் மலையைக் கடக்க வைத்தான், என்ற செய்தியை வரலாற்றாசிரியர்கள் வியந்து எழுதியுள்ளனர். பிற்கால நூலான பன்னிரு பாட்டியல் யானை வாழுமிடமாக மூவகை நிலங்களைக் கூறியுள்ளது. கிரிசரம், வனசரம், நதிசரம் என்று கூறுவதைக் காணலாம். ஆனால் யானை வாழும் சூழ்நிலையாக இம் மூன்று நிலங்களைக் கூறியது பொருத்தமற்றதாகத் தெரிகின்றது. அடர்ந்த காடுகள் நிறைந்த மலையும் குன்றும் ஆறும் நீர் நிறைந்த இடங்களுமே யானை வாழுமிடம் என்பதை விலங்கு நூலார் கூறியபடி சங்க நூல்களும் சொல்லியுள்ளன. மலையிலும் காட்டிலும் ஆற்றிலும் வாழ்வதாகக் கூறினால் பொருத்தமானதாகும்.

யானையை விடப் பெரிய விலங்கு தமிழ் நாட்டில் இல்லை. திருக்குறளில் 'பரியது' என்று யானையைக் கூறியது காணலாம். யானையின் தனித்த சிறந்த உறுப்புகள் அதன் தந்தமெனப்படும் மருப்பும் துதிக்கையு மாகும். யானையின் மருப்பை 'வெண்கோடு' என்று சங்க நூல்கள் கூறும். ஆண்யானைக்கே மருப்புள்ளதாகச் சங்க நூல்கள் கூறுவது விலங்கு நூலாரும் கண்டதே. யானையின் தந்தம் பால்நிற வெண்மை யானதென்பதை 'பால் மருப்பு' என்று கலித்தொகை கூறும். யானையின் மருப்பு அதன் வாயில் பொருந்தியிருந்த தென்பதை உணர்ந்திருந்தனர். யானையின் மருப்பு முளைக்கும் பகுதியைக் 'குருத்து' என்றனர். 'திண்ணிலை மருப்பின் வயக்களிறு' என்று அகநானூறு 211ஆம் பாடல் உறுதியான மருப்புடைய தனித்த வலிய களிற்று யானையை விதந்து கூறுவதைக் காணலாம். யானையின் மருப்பு வளைந்திருக்கும் தன்மையால் பிறைக்கு ஒப்பிட்டுக் கூறுவதைக் காணலாம். யானையின் நீண்டு வளைந்த மருப்பைப் போற்றினர்.

"மாசில் வெண்கோட்டு அண்ணல் யானை"

—அகம், 251.

"வெயில்தின வருந்திய நீடுமருப்பு ஒருத்தல்"

—அகம், 207.

"இலங்கேந்து மருப்பி னினம்பிரி யொருத்தல்"

—மலைபடுகடாம், 297.

"காடு மீக்கூறும் கோடேந் தொருத்தல்"

—அகம், 65.

காடே மிகுதியாகப் புகழ்ந்து கூறும் பெரிய நீண்ட கொம்பை ஏந்திய யானை என்று கூறுவதைக் காண

லாம். யானையின் மருப்பு மேல் நோக்கி வளைந்து காணப்படுவதால் 'ஏந்து மருப்பு' எனப்பட்டது. 'தட மருப்பு' என்றும் அழைத்தனர். 'வலனுயர் மருப்பு' (Clockwise) என்றும் கூறினர். சங்க காலத்திலேயே யானையின் கொம்பை மிக விலையுயர்ந்ததெனக் கருதினர். 'முத்துப்பட முற்றிய உயர் மருப்பு' என்றும் 'வெண்கோடு பயந்த ஒளிதிகழ் முத்தம்' என்றும் புறநானூற்றில் கூறப்படுவதிலிருந்து யானையின் கொம்பில் முத்துப் பிறப்பதாகக் கருதினரென்பது தெரிகின்றது. ஆனால் யானையின் கொம்பில் முத்துப் பிறப்பது கற்பனைச் செய்தியே யாகும். யானையின் கொம்பு அதன் பல்லே என்பதை அறிந்து நெடுநல் வாடை (117) 'எயிறு' என்றழைத்தது.

யானையின் உறுப்புக்களில் மிகவும் வியப்புக்குரியது, தனித்தது அதன் தும்பிக்கையே. 'தூம்பு கை'யே தும்பிக்கையாகும். மற்றைய விலங்குகளுக்கு இத்தகைய கை கிடையாது. வளைந்த ஊது கொம்பு போல யானையின் தும்பிக்கை தூக்கிப் பிடிக்குங்கால் தோன்றுவதால் 'தூம்புகை' என்று அழைக்கப்பட்டது.

"தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து"

—புறம், 19.

"ஓய்களி றெடுத்த நோயுடை நெடுங்கை
தொகுசொற் கோடியர் தூம்பி னுயிர்க்கும்"

—அகம், 111.

யானையின் கையைத் துதிக்கை யென்றும் வழங்குவர். 'துதி' என்ற சொல் சங்க நூல்களில் நீர்ப் பறவைகளின் விரல்களுக்கிடையே உள்ள சவ்வுத் தோலைக்

குறித்து வழங்கும். யானைக்கும் தும்பிக்கையின் நுனியில் தோலுடன் ஒரு விரல் போன்ற உறுப்புக் காணப்படுவதால் அதைத் துதிக்கை என்றனர். யானையின் கையை 'தடக்கை' (நற்றிணை 376 ; அகம் 344) என்றும் 'ஏந்துகை' (அகம் 317) என்றும் அதன் வளைந்த தன்மையைக் குறித்துக் கூறினர். யானையின் கையில் தோல் சிறுசிறு மடிப்புடன் திரைத்துக் காணப்படும். அதனால் 'பிணர்த்தடக்கை' (குறிஞ்சிப் பாட்டு. வரி 163) என்று குறிப்பிடுவர்.

> "வெளிற்றுப் பனந்துணியின் வீற்றுவீற்றுக் கிடப்ப
> களிற்றுக் கணம்பொருத கண்ணகன் பறந்தலை"
>
> —புறம், 35.

சருச்சரையுடைய கை என்பதால் பனை மரத் துண்டிற்குப் பொருத்தமாக ஒப்பிட்டுப்பாடினர். யானையைக் கையுடைய விலங்கென்று கருதிக் 'கைம்மான்' (புறம் 320) என்றும் அழைத்தனர். யானையின் கை அறிவியற்படி அதன் மூக்கும் மேலுதடும் சேர்ந்து மாறிய உறுப்பாகும். தேவாரத்தில் 'நெடுமூக்கு' என்றே அதன் துதிக்கை அழைக்கப்படுகின்றது. யானையின் கையைத் 'தொய்யலங் தடக்கை' என்று கலித்தொகை (18) அழைக்கின்றது. யானையின் கை கம்பிச் சுருள்போலத் தொங்கி மேலே எழுமாதலால் 'தொய்யலங் தடக்கை' என்று அழைக்கப்பட்டது. இதையே அழகாகப் புறநானூறு (22) 'தூங்கு கையா னோங்கு நடைய' என்று கூறிற்று. சீவக சிந்தாமணியில் (2154) 'யானைக்கு நிலந்தோயு முறுப்புகள் மூன்று' என்று கூறப்பட்டுள்ளது. யானையின் கை நிலத்தைத் தொட வேண்டுமென்று கருதினர்.

"ஈர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கை"

—சிறுபாண், 19.

"இரும்பிணர் தடக்கை யிருநிலஞ் சேர்த்தி"

—குறிஞ்சிப்பாட்டு, 163.

"வலனுயர் மருப்பின் நிலன்ஈர்த் தடக்கை
அண்ணல் யானைக்கு அன்றியும் கல்மிசைத்"

—நற்றிணை, 194.

நிலத்தில் ஈர்த்துச் செல்லத்தக்கதாக தும்பிக்கை இருத்தல் யானைக்குச் சிறப்பு என்று கருதினர்.

யானையின் கால்களின் அமைப்பையும் சங்க நூல்கள் தெளிவாகக் கூறியுள்ளன. யானையின் கால் தூண்கள் போலிருப்பதாக விலங்கு நூலார் கூறுவர். இத்தகைய கால்களை மற்றைய விலங்குகளில் காண்பது மிகவுமரிது. 'களிற்றுத் தாள் புரையுந் திரிமரப்பந்தர்' என்று பொருநராற்றுப்படை (187) யானையின் கால்களுக்குத் தூண்களை ஒப்பிட்டுக் கூறுவதைக் காணலாம். யானையின் காலில் தனித்த, வியப்புக்குரிய பகுதி அதன் முழந்தாளாகும். மனிதனின் முழந்தாள் போல் யானைக்கு அமைந்துள்ளது. முழந்தாளை மனிதனைப்போல மடக்கி முட்டிக்கால் போடக்கூடிய விலங்கு யானையைத் தவிர விலங்கினத்தில் எந்த விலங்கும் கிடையாது என்பதை அறிஞர்கள் எழுதியுள்ளனர். கேளிக்கை அரங்குகளில் யானையைப் பழக்கி ஆட்டம் காட்டுபவர்கள் யானையை முழங்காலை மடக்கி நிற்க வைப்பதைப் பார்த்திருக்கலாம். சங்க நூல்களில் யானைக்கு மட்டுமே 'முழந்தாள்' கூறப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

"கடுங்கண் யானை நெடுங்கை சேர்த்தி
முடங்குதாள் உதைத்த பொலங்கெழு பூழி"

—அகம், 63.

"மறப்புலி உழந்த வசிபடு சென்னி
உறுநோய் வருத்தமொ டுணீஇய மண்டிப்
படிமுழம் ஊன்றிய நெடுநல் யானை
கைதோய்த் துயிர்க்கும் வறுஞ்சுனை
மைதோய் சிமைய மலைமுத லாறே" —அகம், 119.

"மூங்கில் மிசைந்த முழந்தா ளிரும்பிடி." —கலி, 50.

"முழந்தா ளிரும்பிடிக் கயந்தலைக் குழவி"

—குறுந்தொகை, 394.

"வயவுப்பிடி முழந்தாள் கடுப்பக் குழிதொறும்
விழுமிதின் வீழ்ந்தன கொழுங்கொடிக் கவலை"

—மலைபடுகடாம், 127. 128.

யானையின் முழந்தாளின் சிறப்பைப் பற்றி விலங்கு நூலார் கூறியுள்ளனர்.

(Their legs are unique in that they are straight and their 'knees' flex forward like ours. The knees are their front legs and are really their wrists. It is with their front feet or 'hands' that they deliver deadly kicks. I. T. S.)* முடங்கு தாள் உதைத்துப் பூழியாக்கியதாக அகநானூறு கூறுவது யானை முழந்தாளை மடக்கி உதைப்பதையேயாகும். யானை தண்ணீர் குடிப்பதற்காக மண்டி போட்டு முழந்தாளை மடக்கி ஊன்றியதாகக் கூறியதையும் கவனிக்க வேண்டும். 'முழந்தாளேய்க்கும் துளையரைச் சிறுரல்' என்று பெரும்பாணாற்றுப் படையும் 'முழந்தாளிரும் பிடி' என்று குறுந்தொகையும் யானையின் முழந்தாளைக் குறிப்பிட்டுக்

* The Dynasty of Abu — Ivan T. Sanderson.

கூறியதைக் காணலாம். மலைபடுகடாம் யானையின் முழந்தாளைத் தெளிவாக ஓர் உவமை வாயிலாக விளக்கியிருப்பது போற்றத்தக்கது. கவலைக் கிழங்கு நிலத்தடியில் முற்றி வருங்கால் மடங்கியே வளைந்து காணப்படும். நேராக வளராது. அதுபோல யானையின் முழந்தாளடி இருந்ததாகக் கூறியது மிகவும் பொருத்தமே. "யானைக்கும் அடி சறுக்கும்' என்றொரு பழமொழி வழங்குகின்றது. யானைக்கு முழந்தாளிருப்பதால் அடி சறுக்காது. அப்படி அடி சறுக்கினாலும் முழந்தாளால் ஊன்றிக் கொள்ள முடியும் என்பதை உணர்ந்தே யானைக்கு அடி சறுக்குவது அரிதான நிகழ்ச்சியென்று கருதினர். அத்தகைய யானைக்கும் அரிதாக அடி சறுக்கச் செய்யும் என்றனர்.

யானையின் காலடியைப் 'பறை கண்டன்ன பாவடி நோன் தாள்' என்று அகநானூறு 211ஆம் பாடல் கூறுகின்றது. யானையின் பாதத்தைக் 'கறையடி' என்றும் 'பாவடி' என்றும் சங்க நூல்களில் பல பாடல்களில் கூறப்பட்டுள்ளது. யானையின் குதிக் கால் எலும்பைச் சுற்றிய தசை நடக்கும்போது நன்றாக நிலத்தில் பதிந்து பாவி இருக்கின்றது என்று விலங்கு நூலார் கூறுகின்றனர். யானை தரையில் நடக்கும்போது அதன் சுவடு காலடியைவிடப் பெரிதாக விழுகின்றது.

(When placed on firm soil, the toes are splayed out and the circumference of the entire foot increases considerably — A. S.)

இதனால்தான் யானைக்குக் 'கறையடி', 'பாவடி' இருப்பதாகக் கூறினர். யானையின் கால் நகங்கள் பெரியவை. ஆனால் உறுதியற்றவை.

"பழூஉப்பல் லன்ன பருவுகிர்ப் பாவடி"

—குறுந்தொகை, 180.

"பிணனுகைத்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தாள்
அண்ணல் யானை யருவிதுக ளவிப்ப"

—சிறுபாண், 199 - 200.

யானையின் மார்பெலும்புகள் மொச்சைப் பயற்றின் காய்ந்த காய்கள்போல இருப்பதாகச் சிந்தாமணி உவமித்துக் கூறியதை இதுசார்பாக எண்ணிப் பார்க்க வேண்டும். 'பொருவில் யானையின் பழுப்போற் பொங்கு காய்க்குலை யவரை' என்று சிந்தாமணி (1561) கூறுவதைக் கவனிக்க வேண்டும். மார்பெலும்பைக் குறித்தே பழு என்ற சொல் வழங்குகின்றது. யானையின் மார்பெலும்பு நீண்டு மேல் நோக்கி வளைந்து கூர்மையாக இருக்கும். (Vertebrae with long upward pointing spines) அது போன்றே யானையின் கால் நகங்கள் இருந்ததாகக் குறுந்தொகை கூறுகின்றது. யானையின் அடிச் சுவட்டைப் 'பறையடி' என்றும் யானைக் குட்டியின் அடிச்சுவட்டைத் 'துடியடி' என்றும் பறைக்கும் துடிக்கும் ஒப்பிட்டுக் கூறினர்.

யானையின் தலையைக் 'கயந்தலை' என்று சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. யானையின் கன்றையும் கயந்தலை என்று கூறுவது தொல்காப்பியத்தில் காணப் படுவது.

"நிலஞ்செலச் செல்லாக் கயந்தலைக் குழவி"

—நற்றிணை, 171.

"முழுந்தா ளிரும்பிடிக் கயந்தலைக் குழவி"

—குறுந்தொகை, 394.

"கயந்தலை மடப்பிடி புயங்குபசி களைசியர்"

—நற்றிணை, 137.

"கயந்தலை மடப்பிடி பயம்பிற் பட்டெனக்"

—அகம், 165.

யானையின் தலை மிகப் பெரிதாகினும் உள்ளே கடற் பஞ்சு போன்று (sponge) மெல்லிய எலும்புகளும் வறிதான அறைகளும் உள்ளதாகலின் இதன் தலை மிக மென்மையானது. யானையின் பெரிய தலை கனமானதாக இருந்தால் அதன் தலையைத் தூக்கவோ அசைக்கவோ முடியாதென்று விலங்கு நூலார் கூறுவர். சங்க இலக்கியத்தில் யானைக் குட்டியின் தலை மிக மெல்லியது என்று கருதி கயந்தலை என்றழைத்தனர். கயமுனி, கயமுனிக் குழவி என்றும் அழைத்தனர். கய வென்ற சொல் மென்மை யென்ற பொருள் தரும் என்று தொல்காப்பியம் கூறும். யானையின் தலையை மத்தகம் என்று பிற்காலத்தில் அழைத்தனர். பால் சுரக்கும் மடி மனிதருக்கு இருப்பதுபோல் யானைக்கு மார்பில் இருப்பது வியப்புக்குரிய செய்தியாகும். ஏனைய விலங்குகளுக்கு முலைகள் இம்முறையாக அமையவில்லை. மற்றும் யானைக்கு இருமுலைகள் உள்ளன.

"கவைமுலை யிரும்பிடிக் கவுண்மருப் பேய்க்கும்
குலைமுதிர் வாழைக் கூனிவெண் பழங்"

—பெரும்பாண், 358 - 359.

பெரும்பாணாற்றுப் படை பெண் யானையின் கவைத்த முலையைப் பற்றிக் கூறியுள்ளது. சீவக சிந்தாமணி 2154ஆம் பாட்டின் உரையில் சிறந்த யானையின் உயரம் ஏழுமுழம் இருக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. கை, பின்கால், முன்கால், தாலவட்டம், கொம்

பென்கிற ஐந்தாற் கொல்வன என்றும் கூறுகின்றது. நிலந்தோயும் உறுப்பு மூன்றும் நிலந் தோய்வன என்றும் கூறுகின்றது. கொல்லும் உறுப்பு ஐந்தில் நான்கு பொருத்தமாக உள்ளன. ஆனால், தாலவட்டம் என்று சொல்லப்படும் யானையின் வாலைக் கொல்லும் உறுப்பாகக் கொண்டது பொருத்தமுடையதன்று. ஏழு முழம் உயரம் என்று கூறியது அறிஞர்கள் கூறுவதுடன் பெரிதும் ஒத்திருப்பது வியப்பைத் தருகின்றது. ஏழு முழம் என்பது $10\frac{1}{2}$ அடியாகும். நன்றாக வளர்ந்த இந்திய யானை $10\frac{1}{2}$ அடி உயரத்துக்கு மேல் காணப்படாது என்பதே பல அறிஞர்களின் கருத்தாகும். (Thc Indian elephant rarely exceeds 10 ft. 6 inches at the shoulders. A. S.) யானைகள் நூறு ஆண்டு கள் வரை வாழ்வதாக அறிஞர்கள் கருதுகின்றனர். சீவகசிந்தாமணியில்—(2500) யானையின் பருவ நிலைகள் கூறப்பட்டுள்ளது ஆராயத்தக்கது. களிற்றுக் கன்று கள் 2500. கவுளைக் கண்டு இகழும்படி மதமடைத்தன 2500, பூ மதம் பொழிதற்கு நின்றன 2000, மேக மனைய மதத்தினவாகிய யானை 3500 என்று யானைத் திரளைப் பிரித்துக் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. ஆண் யானைக்கு மதம் பொழிய 15 வயதில் தொடங்கு கின்றது. ஆண் யானை பருவமடைந்த (Adolescent) ஓர் ஆண்டுக்குள் மதம் பொழியத் தொடங்குகின்றது என்று சொல்வர். பூ மதம் பொழிவதற்கு நின்றன என்று கூறிய யானைகள், இவைகளே மதம் பொழியும் பருவத்தில் இருந்தன. அடைத்திருக்கும் மதம் வெளிப்படாது இருப்பதையே பூ மதம் என்றனர். கன்றுப் பருவம், அதற்கடுத்த பருவம், மதம் உண்டாகி அடைத்திருக்கும் பருவம், பிறகு மதம் பொழியும் பருவம் என்று பிரித்தனரென்று தெளிவாகின்றது.

காட்டு யானைகளைக் கற்பாறைகளுக்கும் குன்று களுக்கும் ஒப்பிடுவது சங்க நூல் வழக்கு. பாறைக்கும் துறு கல்லிற்கும் ஒப்பிட்டது காட்டில் ஏற்பட்ட காணப்பட்ட மயக்கமே. காட்டில் துருத்திக் கொண் டிருக்கும் பாறைபோல (out crops of elephantine rocks) அசையாதிருக்கும் யானையானது தொலைவில் காண் போர்க்குத் தோற்றுவது இயற்கையே. சில வேட்டை யாளர்கள் கூட அவ்வாறு மயங்கி ஏமாந்துள்ளனர்.

"........................... ......துறுகல்
துகள்சூழ் யானையிற் பொலியத் தோன்றும்"

—குறுந்தொகை, 279.

"................................வேழம்
இரும்பிணர்த் துறுகற் பிடிசெத்துத் தழூஉம்"

ஐங்குறுநூறு, 239.

"பிடிமடிந் தன்ன கன்மிசை"

—அகம், 178.

"பிடிமடிந் தன்ன குறும்பொறை"

—அகம், 269.

"மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெய லுழந்த விரும்பிணர்த் துறுகல்"

—குறுந்தொகை, 13.

மழையில் நன்றாக சாடப்பட்ட துறுகல் (Outcrop of rock) நன்றாகக் கழுவப்பட்ட யானைபோல இருந்ததாகக் கூறுவதைக் காணலாம். பெண் யானை கீழே படுத்து உறங்கும்போது பாறையைப்போல் காணப்பட்டதாகக் கூறுவதை நோக்குக. தூங்கும் யானையின் முதுகுத் தோற்றத்தைக் கண்டே 'தூங்கானை மாடம்' என்ற பெயரால் ஒருவகை மாடக் கோயிலுக்குப் பெயர்

கொடுத்தனர். அதனைப் பிற்காலத்தில் தவறுதலாக வட மொழியில் கஜபிருஷ்டம் என்று யானையின் பின்பாகத் தோடு ஒப்பிட்டனர். தென்னையின் காய்ந்து வாடின இலை மடலின் தலைப்பகுதியை 'வண்டோடு' என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது. இந்த வண் டோட்டின் உருவம் போல யானையின் பின்பக்கம் தோன்றுவதாகக் கூறுவதையும் காணலாம்.

> "குன்றுறழ் யானை மருங்கு லேய்க்கும்
> வண்டோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த"
>
> —பெரும்பாண், 352-353.

உருவ அமைப்பில் யானையின் பின்பக்கம் போல வாடிய மடலின் தலைப்பகுதி இருப்பதைக் கண்டோர் புரிந்து கொள்வர்.

யானையின் நெற்றியிலும் துதிக்கையின் மேற் பகுதியிலும் இளஞ்சிவப்பான புள்ளிகள் காணப்படும். இதை 'பூநுதல்' என்று புறநானூறு 119 கூறுகின்றது. "பூம்பொறி" (நற்றிணை 317) என்றும் சொல்லப்படும். 'பொறி நுதல்' என்று அகநானூறு (78) கூறுகின்றது. 'புகர் முகம்' என்று குறுந்தொகை (284) அழைக்கின் றது. இந்தப் புள்ளிகளை (Fleshy and pink spots) தெறு ழம் பூவைப் போன்றதென ஒப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். தெறுழம்பூ இளஞ்சிவப்பு நிறமுடையது என்பதை அறியவேண்டும். யானை நீரில் குளித்த காலத்தில் கரிய நிறமாகத் தோன்றும். ஆதலால் யானையைக் 'கரி' என்றழைத்தனர். யானையின் காது முறம் போல இருப்பதாகக் கூறுவது சங்கநூல் வழக்கு. 'முறஞ்செவி' (புறம் 339, நற்றிணை 376) என்று கூறு வர். யானை புழுதியை வாரி முதுகில் போட்டுக்கொள்

ஞம் குணமுடையது. கரிய பாறையின்மேல் தூசி படிந்திருப்பது புழுதி படிந்த யானை போலிருப்பதாக உவமித்துள்ளனர். "நீருடிய களிறுபோல வேறுபட்ட வினையோவம்" என்று பட்டினப்பாலை (48-49) கூறுவது அழகிய உவமை. தூசி படிந்த ஓவியம் புழுதியாடிய யானைபோல இருந்தது என்று கூறப்பட்டுள்ளது. 'செந்நிலைப்படு நீருடி' என்று அகப்பாடல் (227) கூறுகின்றது. யானை தன் துதிக்கையால் பொருள்களை முதுகின்மேல் எளிதாக விசிச் செலுத்துவதை யாவரும் பார்த்திருக்கலாம்.

"கையிடை வைத்தது மெய்யிடைத் திமிரும்
முனியுடைக் கவளம் போல நனிபெரிது"

—நற்றிணை, 360.

யானையைப் போல் மற்ற விலங்குகள் கையைப் பயன்படுத்தமுடியாது.

"களிறுகவு ளடுத்த வெறிகற் போல
ஒளித்த துப்பினை யாதலின் வெளிப்பட"

—புறம், 30.

"............ ............ ............ யானை தன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே"

—புறம், 101.

யானையின் கையில் அகப்பட்ட கல் எறியப்படுவது கொம்பிடை வைத்த கவளம் வாய்க்குச் செல்வது ஆகிய செய்கைகளை யாரும் தடுக்க முடியாது என்று கூறியுள்ளது யானையின் மறைந்துள்ள வலிவையும் அதற்கு யாவரும் அஞ்சுவதையும் குறிக்கவே யாகும்.

யானை தூங்குவதில்லை என்று பலர் நினைக்கின்றனர். ஆனால் அறிஞர்கள் யானை தூங்குவதைக் கண்டுள்ளனர். யானை நின்று கொண்டும் தூங்கும். சாய்ந்து கீழே படுத்தும் உறங்கும். யானைகள் தூங்கும் நேரம் மிகவும் குறைவு (They sleep usually lying on their sides, snoring gently through their trunks.)

"சிலம்பிற் போகிய செம்முக வாழை
அலங்கல் அந்தோ டசைவளி யுறுதொறும்
பள்ளி யானைப் பருஉப்புறந் தைவரும்"

—அகம், 302.

"பள்ளி யானையின் வெய்ய உயிரினை"

—நற்றிணை, 253.

"............ ............ ......... வேங்கை
வீயா மென்சினை வீயுக யானை
ஆர்துயி லியம்பு நாடன்"

—குறுந்தொகை, 247.

"பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம்புகல் மழகளி றுறங்கும் நாடன்"

—அகம், 102.

"வேலி னிற்றித் தோயா நெடுவீழ்
வழிநா ளூசலிற் கோடை தூக்குதொறுந்
துஞ்சுபிடி வருடு மத்தம்"

—நற்றிணை, 162.

"துஞ்சுகளி றெடுப்பும்"

—நற்றிணை, 125.

பள்ளியானை என்று அகநானூறு கூறுவதைக் காணலாம். யானை படுத்துத் தூங்குவதையே கூறியுள்

ளனர். யானை தூங்கும்போது குறட்டை விடுவதை 'உயிர்ப்பு' என்றும் "துயிலியம்பும்" என்றும் கூறியுள்ளனர். யானையின் மூச்சுக் காற்றால் வேங்கைப்பூ கீழே விழும் என்று குறுந்தொகை கூறுகின்றது. அகநானூற்றில் 'படாப் பைங்கண் பாடு பெற்று, நிலையினும் பெயராது மழகளிறு உறங்குவதாகக் கூறியுள்ளதைக் காணலாம். தனியானை ஆடாது அசையாது கண்ணை மூடி உறங்குவதுண்டு; அந்த யானையின் அருகில் செல்வது கேடுதரும் என்று வேட்டையாளர் கூறுவர். யானை தூங்குவது குறைவாதலால் 'படாப் பைங் கண்' என்றனர். மூடாத கண் மூடி உறங்கிற்று என்று கூறினர். 'படா அப் பைங்கண்' என்ற அகநானூறு 125ஆம் பாடலும் கூறுகின்றது. யானை பொதுவாக உறங்குவது குறைவு என்ற கருத்து சங்க காலத்திலும் இருந்ததாகத் தெரிகின்றது.

யானை தன்னுடைய துதிக்கையைத் தூக்கிக் கூக்குரலிடுவதைச் (Trumpeting) சில பாடல்களில் கூறியுள்ளனர்.

" புலிப்பகை வென்ற புண்கூர் யானை
கல்லகச் சிலம்பிற் கெயெடுத் துயிர்ப்பின்
—அகம், 202.

"படிமுழம் ஊன்றிய நெடுநல் யானை
கைதோய்த் துயிர்க்கும் வறுஞ்சுனை" —அகம், 119.

"ஓய்களி றெடுத்த நோயுடை நெடுங்கை
தொகுசொற் கோடியர் தூம்பி னுயிர்க்கும்"
—அகம், 111.

"நீர்நசைக் கூக்கிய வுயவல் யானை
யியம்புணர் தூம்பி னுயிர்க்கு மத்தம்"
—ஐங்குறுநூறு, 377.

"கார்ப்பெய லுருமிற் பிளிறிச் சீர்த்தக
விரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச்
சினந்திகழ் கடாஅஞ் செருக்கி மரங்கொல்பு"

—குறிஞ்சிப்பாட்டு, 162-164.

"மையல் யானை யயாவுயிர்த் தன்ன
நெய்யுலை சொரிந்த மையூ னோசை"

—புறம், 261.

சினத்துடன் தாக்கும்போது கையை மேலே தூக்கி, தூம்புவிடும் ஓசைபோல (Trumpeting) ஒலி விடுமென் பர். "தூம்பி னுயிர்க்கும்" என்று இதையே சங்க நூல்கள் கூறுகின்றன. புண்ணுற்றுலோ, பயத்துடன் இருக்கும்போதோ அடித்தொண்டையில் முழங்கும் (Deep throated roar) என்பர். யானை இடி உறுமு வது போல ஓசை செய்வதாகச் சங்கநூல்கள் கூறும். இந்த ஓசையைப் 'பிளிறுதல்' என்ற பெயரால் அழைத்தனர். நிலத்தில் தும்பிக்கையைச் சேர்த்தி ஒரு முறையான ஓசையையும் (astonishing noise by rapping on hard ground with the tips of their trunks) செய்யுமென்பர். கையை எடுத்து ஓசையிடுவதையும் கையை நிலத்தில் வைத்து ஓசையிடுவதையும் சங்கப் புலவர்கள் கூறியுள்ளனர். மகிழ்ச்சியுடனும் திருப்தி யுடனும் இருக்குங்கால் யானை வேறொரு முறையான ஓசையை யெழுப்பும். (A small squeaking seems to indicate pleasure and a low purring in the throat for content- ment.) யானை திருப்தியுடன் இளைப்பாறும்போது வெளி விடும் ஓசையைக் காய்ச்சிய நெய்யுலையில் ஆட்டிறைச்சி பொரிக்கப்படுங்கால் எழும் ஓசைக்கு ஒப்பிட்டுப் புறநானூறு கூறியிருப்பதைக் காணலாம். யானையிடும்

ஓசைகளைக் கூர்ந்து கவனித்தே சங்கப் புலவர்கள் பாடியுள்ளனர்.

யானைகள் வெயிற்காலத்தில் வறட்சியினால் வெகு தொலைவு நீரைத் தேடி அலையும் என்று அறிஞர்கள் கூறியுள்ளனர். யானைகள் நீர்நிலையில் படிந்து திளைக்கும் செய்தியும் கூறியுள்ளனர். யானை படிந்த நீர்நிலை சேறும் சகதியுமாக மாறித் தோன்றும். யானைகள் கூட்டமாகக் கூடி நீர்நிலைக்குச் செல்லுங்கால் கன்றுகள், பெண் யானைகள் முதலில் நீரில் படிந்து விளையாடின பிறகு ஆண் யானைகள் நீரில் இறங்குவதுண்டு என்று கூறுவர். வறட்சியுற்ற காலத்தில் ஆண் யானையானது கொம்பால் வறண்டுபோன ஆற்று மணலைத் தோண்டி நீரை ஊறும்படி செய்து குடிப்பதுண்டு என்பதைக் கண்டுள்ளனர்.

"வெயில் வெய்துஉற்ற பரலவல் ஒதுக்கில்
கணிச்சியிற் குழித்த கூவல் நண்ணி
ஆன்வழிப் படுநர் தோண்டிய பத்தல்
யானை இனநிரை வெளவும்
கானந் திண்ணிய மலைபோன் றிசினே"

—நற்றிணை, 240

"கல்லூற்று ஈண்டல கயன்அற வாங்கி
இரும்பிணர்த் தடக்கை நீட்டி நீர்கொண்டு
பெருங்கை யானை பிடியெதி ரோடும்
கானம் வெம்பிய வறங்கூர் கடத்திடை"

—நற்றிணை, 186

"வேட்டச் சிறூர் அகன்கட் கேணிப்
பயநிரைக் கெடுத்த மணிநீர்ப் பத்தர்
புன்தலை மடப்பிடி கன்றொடு ஆர

வில்கடிந் தூட்டின பெயரும்
கொல்களிற் ஞெருத்தல் சுரன்இறந் தோரே''

—நற்றிணை, 92.

''வறுமை கூறிய மண்ணீர்ச் சிறுகுளத்
தொடுகுழி மருங்கில் துவ்வாக் கலங்கல்
கன்றுடை மடப்பிடிக் கயந்தலை மண்ணிச்
சேறுகொண் டாடிய வேறுபடு வயக்களிறு''

—அகம், 121.

''ஆறுசெல் வம்பலர் சேறுகிளைத்து உண்ட
சிறுபல் கேணிப் பிடியடி நசைஇக்
களிறுதொடூஉக் கடக்கும் கான்யாற்று அத்தம்''

—அகம், 137.

'' மிஞிறுார் கடாஅங் கரந்துவிடு கவுள
வெயில்தின வருந்திய நீடுமருப்பு ஒருத்தல்
பிணரழி பெருங்கை புரண்ட கூவல் ''

அகம், 207.

'' சூர்ச்சுனை துழைஇ நீர்ப்பயங் காணாது
பாசி தின்ற பைங்கண் யானை''

அகம், 91.

'' ... ... ... ... பெருங்களிற்
றினம்படி நீரிற் கலங்கிய பொழுதில் ''

அகம், 212.

'' உரல்போ லடிய வுடம்புயங் கியானை
யூறுநீ ரடங்கலி னுண்கயங் காணாது
சேறுசுவைத் துத்தஞ் செல்லுயிர் தாங்கும்
புயறுளி மாறிய போக்கரு வெஞ்சுரம் ''

—கலி, 13.

'' அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாஅய் காடென்றார் அக்காட்டுள்

துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண் ணுங் களிறெனவு
முரைத்தனரே ''

— கலித்தொகை, 11.

மேலே காட்டிய நற்றிணைப் பாடல்களில் மாடு மேய்க்கிறவர்கள் வேட்டுவர்கள் தோண்டிச் சேர்த்து வைத்த தண்ணீரை யானைக்கூட்டம் கவருவதாகக் கூறப்பட்டதைக் காணலாம். கன்றோடு கூடிய பெண் யானைகளுடன் தண்ணீர் குறைவாக இருந்த குளத்தில் குளித்துச் சேற்றை மேலே பூசிக்கொண்ட களிற்றைப் பற்றி அகநானூறு கூறுகின்றது. விலங்குகளில் யானை வெயிலைத் தாங்காது. ஆதலின் நீர் நிலைகளை நாடிப் பலமைல்கள் காடுகளில் அலைந்து திரியும். அகநானூறு 121 ஆம் பாடல் கன்றுடன் பிடிகள் குளத்தில் சேறு கலந்த நீரில் குளித்து எழும் செய்தி கூறப்பட்டுள்ளது. யானைகள் கூட்டமாக நீர் நிலைகளுக்குச் செல்லுங்கால் முதலில் யானைக்கன்றுகளைக் குளிக்க விடும். வறட்சியான காலத்தில் கன்றுகளும் பிடிகளும் நீர் குடித்துக் குளித்த பின் ஆண்யானைகள் காத்திருந்து எஞ்சிய நீரைக் குடிக்கும். பிடிகளும் குட்டிகளும் கலக்கிய நீரில் குளிக்கும் என்று சில அறிஞர்கள் கண்டு கூறியுள்ளனர். (The chivalrous leader allowed the babies of the herd to drink first—even despite his thirst, let a mother elephant give her baby a small bath. And when all the herd had drunk, the patient leader stepped in last to have his drinks—S. V. O. Somander - The Hindu.)

நற்றிணைப் பாடலில் (186) ஆண்யானையானது கல்லூற்றில் கிடைத்த சிறிது நீரைத் தும்பிக்கையால்

உறிஞ்சித் தன்னுடைய துணையான பெண்யானைக்குக் கொடுக்க ஓடியதாகக் கூறியிருப்பதைக் காணலாம். கலித்தொகைப் பாடல் (11) மிக அழகாக ஆண்யானை யின் தனிப்பழக்கத்தை எடுத்துக் கூறுகின்றது. மேலே அறிஞர் கூறியதுபோலவே யானைக் குட்டிகள் குளித்துக் கலக்கிய நீரைப் பெண்யானை குடித்த பிறகு ஆண்யானை பின்னர் குடித்ததாகக் கூறிய கலித்தொகைச் செய்தி சங்கப் புலவர் நேரில் கண்டு கூறிய அரிய செய்தி யாகும். நீரில்லாமல் வாடிய யானை ஈரமான சேற்றைச் சுவைத்ததாகவும் சுனையிலிருந்த பாசியைத் தின்று தாகத்தைத் தணித்ததாகவும் சங்கநூல்கள் கூறுவது ஆராய்தற்குரியது. யானைகள் நீரின்றிப் பேய்த்தேரைக் கண்டு ஓடியதாகவும் கூறியுள்ளனர். நீரில்லாக் காலத்து யானைகள் தும்பிக்கையை எடுத்துக் கூக்குரலிடும் என்றும் கூறப்பட்டுள்ளது. அகநானூற்றில் 'தொடு குழி' என்றும் 'களிறு தொடூஉக் கடக்கும்' என்றும் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். இவ் விடங்களில் 'தொடு' என்பது தோண்டி என்ற பொருளிலே வந்திருப்பதாகத் தெரிகின்றது. யானைகள் தங்கள் கொம்புகளால் வறண்ட ஆற்றுப் படுகையைத் தோண்டுவதும் ஊற்றுநீர் நிரம்பியதும் குடிப்பதும் சில அறிஞர்கள் கண்ட காட்சியாகும். கான்யாற்றில் களிறுதோண்டி நீரை வரவழைத்துக் குடித்துக் கடந்த தாக அகநானூறு 137 கூறுவதாகக் கொள்ள வேண்டும். யானைகள் கோடைகாலத்து நீரின்றி உணவின்றி வாடுவதைப்பற்றிப் பல சங்கப்பாடல்கள் கூறுவது உண்மை யென்றே கருத வேண்டும்.

" நீரற வறந்த நிரம்பா நீளிடைக்
கயந்தலைக் குழவிக் கவியுகிர் மடப்பிடி

குளகுமறுத் துயங்கிய மருங்குல் பலவுடன்
பாழூர்க் குரம்பையில் தோன்றும் ஆங்கண் "

—அகம், 229.

" நீர்நசைக் கூக்கிய வுயவல் யானை
யியம்புணர் தூம்பி னுயிர்க்கு மத்தம் "

—ஐங்குறுநூறு, 377.

" நீர்நசைக் கூக்கிய வுயவல் யானை
வேனிற் குன்றத்து வெவ்வரைக் கவான்
ஊரான் கன்றொடு புகுதரு நாடன்"

நீரில்லாமல் கோடைகாலத்து யானைகள் நெடுந் தொலைவும் அலையும் என்பதைச் சங்கப்புலவர்கள் அறிந்திருந்தனர். நீரில்லாமல் இருந்த நீண்ட காட்டில் குட்டியுடன் பெண்யானை உணவுண்ணமல் வாடிய தாகவும் அதன் உடம்பு பாழ்பட்ட ஊரில் இருந்த குடிசைபோல மெலிந்து தோன்றியதாகவும் அகநானூறு கூறுவதைக் காணலாம். தாகத்தைத் தணிக்க நீரில்லாமல் யானைகள் தும்பிக்கையைத் தூக்கிக் கூக்குரலிடுவதும், நிலத்தில் படிந்து தும்பிக்கையைச் சார்த்திப் பெருமூச்சு விடுவதும் கூறப்பட்டுள்ளது. வெயில் நின்று வருந்தியதாகவும் வெயிலில் உழன்ற தாகவும் யானையைப் பற்றிக் கூறியுள்ளது.

யானைகள் பரிய உடலுடைய தாயினும் ஆற்றி லும் குளத்திலும் நீரில் நன்ருக நீந்தும். காற்றை மூக்கு வழியாக இழுத்து உடலை நீரில் மிதக்கும்படி செய்து கொண்டு நீரில் எளிதில் நீந்தும். யானைகள் சில சமயங்களில் நீர்ச்சுழலிலோ புதை சேற்றிலோ மாட்டிக்கொள்வதை அறிஞர்கள் கண்டுள்ளனர். (The elephants were concentrated on watching the antics of one of their party who was standing in the stream and sub-

merged to a depth of four feet. Making frantic efforts to turn round, it only succeeded in sinking deeper into the water Finally it threw itself bodily on to the water and in this position, floating partially, it managed to free its legs from whatever was gripping them. A few powerful lunges carried it to the back where it emerged literally trembling with exhaustion......I realised with horror that a few more steps would have taken me on to a belt of quicksand, one of the treacherous steps that make of these rivers a living nightmare —A. S.)

" நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத்து
உரவுச்சினந் தணித்துப் பெருவெளிற் பிணிமார் "
—மலைபடுகடாம், 325 - 326.

" இமிழ்பெயல் தலைஇய இனப்பல கொண்மூத்
தவிர்வில் வெள்ளந் தலைத்தலை சிறப்ப
கன்றுகால் ஒய்யுங் கடுஞ்சுழி நீத்தம்
புன்தலை மடப்பிடிப் பூசல் பலவுடன் " —அகம், 68.

நெடுஞ்சுழியில் அகப்பட்ட யானையைக் காப்பாற்றி அதன் சினத்தைத் தணித்துப் பாகர்கள் கட்டையில் கட்டியதை மலைபடுகடாம் கூறியிருப்பதைக் காணலாம். மழை மிகுதியாகப் பெய்து வெள்ளப் பெருக் கெடுத்த காட்டாற்றில் கடுஞ்சுழியில் மாட்டிக்கொண்டு யானைக் கன்றினால் நீந்த முடியாமல் கால் ஓய்ந்து போவதைக் கண்டு பெண்யானை கூச்சலிடுவதை அகநானூறு கூறுவது உண்மையாகவே கண்ட காட்சி போலத் தோன்றுகின்றது. 'காலாழ் சேற்றில் யானையை நரியடும்' என்று வள்ளுவர் கூறியதும் இது சார்பாக நினைக்கத்தக்கது. சங்கப்புலவர்கள் தங்களுடைய தனித்தனி அனுபவத்தைப் பாட்டில் புகுத்தி அதைப் பொதுச்சொத்தாகத் தமிழர்க்கு தந்தமை போற்றத்தக்கது.

யானை ஆற்றிலும் வெள்ளத்திலும் நீந்தும்போது தன்னுடைய தும்பிக்கையை மட்டும் வெளியே நீட்டிக்கொண்டு நீந்தும். இந்தச் செய்தியை அரிஸ்டாட்டில் என்ற கிரேக்க அறிஞர் எழுதியபோது அதை அவரது கற்பனை யென்று நம்பினர். இடைக்காலத்திலும் இதை நம்பவில்லை. ஆனால் இச்செய்தியைச் சங்கப்புலவர்கள் அக்காலத்திலேயே கூறியுள்ளனர்.

> " என்றூழ் உழந்த புன்றலை மடப்பிடி
> கைமாய் நீத்தங் களிற்றொடு படீஇய "
>
> —அகம், 43.

திடீரென்று மழை மிகுதியாகப் பெய்ததால் கையை மேலே நீட்டி நீந்திச்சென்ற பெண்யானையின் கையையும் மறைக்கும்படி வெள்ளம் வந்தது என்று அகநானூறு கூறுகின்றதைக் காணலாம்.

யானையின் உணவுப்பழக்கத்தைப் பற்றியும் சங்க நூல்களில் பல செய்திகள் காண்கிறோம். யானை பெரும்பாலும் காட்டில் மரஞ்செடி கொடிகளின் தழைகளை, இலைகளைப் பறித்துத் தின்னும். துதிக்கையால் இலைக் கொம்புகளைக் கொடிகளை வளைத்து வாயில் போடுவதால் யானை உண்ணும் இம்முறையைக் 'கவளம்' என்று சங்கநூல்களில் அழைத்தனர். யானையின் உணவே கவளம் என்று பெயர் பெற்றது.

> " எல்லி மலர்ந்த பைங்கொடி அதிரல்
> பெரும்புலர் வைகல் அரும்பொடு வாங்கிக்
> கான யானை கவளங் கொள்ளும் " —அகம், 157.

> " அருவி தந்த நாட்குர லெருவை
> கயநா டியானை கவள மாந்தும் "
>
> —குறுந்தொகை, 170.

அதிரல் கொடியைக் கவளங்கொள்ளும். எருவைச் செடியைக் கவளமாக விழுங்கும் என்று குறிப்பிடுதலைக் காணலாம். யானை இலைகள் கிளைகள் கொடிகள் ஆகிய வற்றை வளைத்துப் பெருமளவாக வாயில் திணித்துக் கொள்வதால் கவளம் என்ற சொல்லின் அடிப்படையில் கபளீகரம் என்ற வழக்குத் தோன்றியது. யானை விரும்பி உண்ணும் இலைகளையுடைய மரத்தையே பிற் காலத்தில் 'கவளம்' (Sterculiaceae, Helicteres Isora) என்ற பெயரால் அழைத்ததையும் காண்கிறோம். யானைகள் விரும்பி உண்ணும் மரஞ்செடி கொடிகளை யும் சங்கப் புலவர்கள் தெரிந்தே கூறியுள்ளனர். காடு களைப் பாதுகாக்கும் அலுவலர்கள், அறிஞர்கள் இதைப்பற்றிக் கூறிய செய்திகளும் சங்கநூற் செய்தி களுடன் ஒத்து வருவதையும் காண்கிறோம். யானை யின் முக்கிய உணவு பசிய மூங்கில்களாகும். காடு களில் மரஞ்செடிகொடிகளின் இலைகள், கொழுந்து கள், மென்கொம்புகள் யானைக்கு உணவாகின்றன. சில மரங்களின் மென்மையான பசிய பட்டைகளையும் உரித்துத் தின்னும். நன்கு செழித்து வளர்ந்த நீண்ட புற்களையும் விரும்பி உண்ணும். மற்றும் தாழை, குட்டைப்பனை, குட்டை ஈச்சம் போன்ற மரங்களைச் சிறியதாக இருக்கும்போது கிழங்கொடு பறித்து உண்ணும். தேங்காய், தென்னங்கீற்று ஆகியவைகளை விரும்பி உண்ணும். காட்டுமரப் பழங்கள், காய்கள் ஆகியவையும் உணவாகும். நெல்லிக்காய், தாழங் காய், கடுக்காய், ஈச்சங்காய், மாம்பழம், வாழைப் பழம் ஆகியவைகளைப் பறித்துத் தின்னும். மனிதர் பயிரிடுவனவாகிய வாழை, கரும்பு, சோளம் ஆகிய பயிர்கள் யானைக்கு மிகவும் விருப்பமான உணவாகும்.

விளைநிலங்களில் நுழைந்து யானை அவைகளை அழிக்கும். 'ஆனைக்கு வாழைத்தண்டு' என்பது பழமொழி. 'யானை வாயில் அகப்பட்ட கரும்பு போல' என்பதும் அனுபவ முதுமொழி. யானை காடுகளிலும் விளைநிலங்களிலும் புகுந்து உண்ணும்போது வீணாக அழிப்பதே மிகுதியாகும். யானைகள் கூட்டமாகச் சேர்ந்து பல நாட்கள் உண்ட காடு பாழடைந்த போர்க்களம் போலிருக்குமென்று ஓர் அறிஞர் கூறுகின்றார். (The former feeding grounds of a herd can easily be identified by the quantity of mangled timber which lies about over an area of many acres. When elephants have been feeding in the same area for several weeks the whole region is as devastated as a battlefield and takes years to recover its former fertility.—R. C.)* யானை செய்யும் இத்தகைய அழிவையே புறநானூற்றுச் செய்யுள் 184 தெளிவாக விளக்கியுள்ளது.

" காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினும் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்
... ... ... ...
... ... ... ...
... ... ... ...
யானை புக்க புலம்போலத்
தானு முண்ணான் உலகமுங் கெடுமே "

—புறம். 184.

நெல்லை அறுத்து யானைக்கு உணவாக ஊட்டினால் மா அளவு நிலமானாலும் பல நாட்களுக்கு வரும். ஆனால் யானை தனியே நூறு செறுவினதான

* Richard Carrington—Elephants.

நிலத்தில் புகுந்து உண்டால் வாய்க்குள் புகுவதை விட அழிப்பதே மிகும் என்று இயற்கைச் செய்தியை 'யானைபுக்க புலம்போல' என்ற உவமை வாயிலாக எடுத்துக் கூறியது மிகவும் போற்றத் தக்கது. யானை காடுகளின் அருகேயுள்ள விளைநிலத்தில் புகுந்து பயிரை உண்டு அழிப்பதையும் கூறியுள்ளனர். தினைப் புனத்தில் இரவுக் காலத்தில் மேயும் யானையைப் பற்றிய செய்தி பல பாடல்களில் கூறப்பட்டுள்ளது.

"இரவுப்புன மேய்ந்த வுரவுச்சின வேழம்"

—அகம், 309.

"தினைமேய் யானை யினனிரிந் தோடக்
கல்லுயர் கழுதிற் சேணோ னெறிந்த
வல்வாய்க் கவணின் கடுவெடி ஒல்லெனை"

—அகம், 392

"ஏனலஞ் சிறுதினை காக்குஞ் சேணோன்
ஞெகிழியிற் பெயர்ந்த நெடுநல் யானை"

—குறுந்தொகை, 357.

"இரவின் மேயல் மருஉம் யானைக்
கால்வல் இயக்கம் ஒற்றி நடுநாள்"

—அகம், 292.

யானைகள் இரவுக் காலத்திலேயே பெரும்பாலும் உணவுதேடி மேயும். இரவில் மேயும் பழக்கமுடைய யானையின் காற்சுவட்டை ஒற்றிச் சென்று நள்ளிரவில் பரண் மேலிருந்து விரட்டுவதை அகம் 292ஆம் பாடல் கூறுவதைக் காணலாம்.

யானை காடுகளில் மூங்கிலையும் மூங்கில் முளையையும் விரும்பி உண்பதைப் பல பாடல்கள் கூறுகின்றன.

" ...... ...... ...... சோலை
முளைமேய் பெருங்களிறு வழங்கு மலை "

—அகம், 148.

" முளைவளர் முதல மூங்கின் முருக்கிக்
கிளையொடு மேய்ந்த கேழ்கிளர் யானை" —அகம், 218.

" குவையுடைப் பசுங்கழை தின்ற கயவாய்ப்
பேதை யானை சுவைத்த
கூழை மூங்கிற் குவட்டிடை யதுவே "

—குறுந்தொகை, 179.

ஈன்றுநா ளுலந்த மென்னடை மடப்பிடி
கன்றுபசி களைஇய பைங்கண் யானை
முற்று மூங்கில் முளைதரு பூட்டும்
வென்வேற் றிரையன் வேங்கட நெடுவரை

—அகம், 85.

" வழுவப் பிண்டம் நாப்பண் ஏமுற்று
இருவெதிர் ஈன்ற ஏற்றிலைக் கொழுமுளை
சூன்முதிர் மடப்பிடி நாண்மேயல் ஆரும்
மலைகெழு நாடன் கேண்மை பலவின்"

—நற்றிணை, 116.

" வாங்குகோ னெல்லொடு வாங்கி வருவைகன்
மூங்கின் மிசைந்த முழந்தா ளிரும்பிடி "

—கலித்தொகை, 50.

" நெற்கொ ணெடுவெதிர்க் கணந்த யானை "

—குறிஞ்சிப்பாட்டு, 35 வரி.

யானை மூங்கிற் காடுகளிலே மிகுத்துக் காணப்படுவதைச் சங்கநூல்கள் கூறும். யானை மூங்கிலை ஒடித்தும் பிடித்தும் விடுவதுகூட அழகிய காட்சியாகச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன. சங்க நூல்களில்

வரும் ஒரு செய்தி ஆராய்தற்குரியது. அகநானூறு 85ஆம் பாடலில் குட்டியீன்ற பெண் யானைக்கு முற்றாத மூங்கில் முளையை ஆண் யானை தருவதாகக் கூறியுள்ளது. ஆனால் நற்றிணை 116 ஆம் பாடலில் பெருமூங்கிலின் (Bambusa arundinaceae) கடைசியாக முதிர்ந்த கொழுமுளையை, சூல் முற்றிய மடப்பிடி தின்றதால் கர்ப்பம் அழியும், வழுவும் என்று கூறப்பட்டுள்ள செய்தி ஆராய்தற்குரியது. மூங்கில் நெல்லையும் யானை உண்ணும் என்று கலித்தொகையும், குறிஞ்சிப் பாட்டும் கூறுகின்றன. மூங்கில் ஒரு புல். மூங்கிலைப் போன்றே புல்லினத்தைச் சேர்ந்த பனைக் கன்றுகள், ஈச்சங் கன்றுகள் ஆகியவற்றைக் கிழங்கொடு பறித்து உண்ணும் என்பதையும் சங்க நூல்கள் குறிப்பாகச் சொல்லுகின்றன.

"பைங்காய் நல்லிடம் ஒரீஇய செங்காய்க்
கருங்களி ஈந்தின் வெண்புறக் களரி
இடுநீறு ஆடிய கடுநடை ஒருத்தல்
ஆட்பெறல் நசைஇ நாட்சுரம் விலங்கித்
துனைதரும் வம்பலர்க் காணாது அச்சினம்
பனைக்கான்று ஆறும் பாழ்நாட்டு அத்தம்"

—நற்றிணை. 126.

"வேனில் வெற்பில் கானலங் காய
முனையெழுந் தோடிய கெடுநாட் டாரிடைப்
பனைவெளி றருந்து பைங்கண் யானை"

—அகம், 187.

வெண்புறக்களர் நிலத்திலிருந்து ஈச்சமரத்தைப் பறித்து இடுநீறுபோல உப்பு மண்ணைப் பூசிய யானை பனை மரத்தை வேரொடு பறித்துப் பசி ஆறும் என்று நற்றிணை கூறுகிறது. யானை கொறுக்கந்தட்டை யென்

கிற நீண்ட நாணல் போன்ற புல்லை விரும்பி உண்ணும். இப்புல் குளங்கள், நீர்நிலையோரங்களில் அடர்த்தியாகக் காணப்படும்.

" அருவி தந்த நாட்குர லெருவை
கயனா டியானை கவள மாந்தும் "

—குறுந்தொகை, 170.

அருவியில் அடித்துக்கொண்டு வரப்பட்ட அன்று மலர்ந்த பூக்கொத்துடைய கொறுக்காந் தட்டையைக் குளத்தைத் தேடிச் சென்ற யானை கண்டு உணவாக உண்டது என்று குறுந்தொகை கூறுகின்றது. இது செடிநூலில் (Typha elephantina) எனப்படும். யானைகள் பேய்க்கரும்பை (wild sugarcane) விரும்பி உண்பதால் வேழம் என்ற பெயரே யானைக்கும் ஆகுபெயராக வழங்கிற்று. "காம்பு கண்டன்ன தூம்புடை வேழத்து" என்று ஐங்குறுநூறு கூறுவதால் மூங்கில் போன்றது வேழம் என்று கருதினது தெரிகின்றது. வேழம் என்பது பேய்க்கரும்பு எனப்படும். வேழக்கரும்பு எனப்படும். மூங்கிலுக்கு இதன் காரணமாக வேழம் என்ற பெயர் வழங்கிற்று. மூங்கில், பேய்க் கரும்பு (Saccharum spontaneum) கொறுக்காந் தட்டை ஆகிய மூன்றும் யானைக்கு விருப்பமான உணவாகும். யானை விரும்பி உண்ணும் கொடியாக அதிரல் என்ற செடி சங்க நூலில் கூறப்பட்டுள்ளது.

" எல்லி மலர்ந்த பைங்கொடி அதிரல்
பெரும்புலர் வைகல் அரும்பொடு வாங்கிக்
கான யானை கவளங் கொள்ளும் "

—அகம், 157.

மாலைக் காலத்தில் பூக்கும் இந்த அதிரல் கொடியைப் புனலிக்கொடி என்று உரையாசிரியர்கள் கூறுவர். இக் கொடியைச் செடி நூலில் Derris scandens என்று கூறுவர். செடி நூலும் மாலைக் காலத்தில்தான் இது பூக்குமென்று கூறுகின்றது. இந்தக் கொடியை யானை விரும்பி உண்பதைத் தற்காலத்தில் நாட்டு மக்களும் நன்கு உணர்ந்தே "ஆனை கெல்லிக்கொடி" என்று அழைக்கின்றனர். யானை பறித்துத் தின்னும் கொடி என்பதே அதன் பொருள். கலித்தொகையில் 'வளகின் குளகை' யானை உண்பதாகக் கூறப் பட்டுள்ளது. இதை யானை உண்பதாகத் தற்கால அறிஞர்களும் கூறியுள்ளனர்.

"புணர்நிலை வளகின் குளகமர்ந் துண்ட
புணர்மருப் பெழில்கொண்ட வரைபுரை செலவின்
வயங்கெழில் யானைப் பயமலை நாடலின்" —கலி 43.

"இளகு காழகிற் சந்தனப் பொதும்ப ரெவ்விடனும்
வளகு மேய்ந்து சேவகங் கொளுமாமத மொழுக்கும்"

—தணிகைப் புராணம் 39. திருநாட்டு. 39.

வளகு என்பது செடிநூற்படி Kydia Calycina என்ற குறுமரத்தைக் குறிக்கும். வளகின் குளகு தின்னு மென்றதில் 'குளகு' என்ற சொல் கவனிக்கத்தக்கது. விலங்குகளின் தழையுணவை இச்சொல் குறித்தாலும் யானை விரும்பித் தின்னும் தழையுணவையே முக்கிய மாகக் குறிக்கும். யானை விரும்பி உண்ணும் தழை களைச், செடிகளைப் பழந்தமிழர் நன்குகக் கண்டறிந்திருந் தனரென்பது சங்க நூல்களிலிருந்து தெளிவாக விளங்கு கின்றது. காட்டு விலங்குகளைப் பற்றிய செய்திகளை ஆராய்ந்த தமிழ்நாட்டு அறிஞரான எம். கிருஷ்ணன்

அவர்கள் காட்டு யானைகள் வாகை, சூரை, உன்னம், வக்கணை முதலிய மரங்களின் தழைகளைத் தின்னுவதாகக் கூறியுள்ளார். தேக்க மரத்தின் கொழுந்துகளையும் உன்ன மரத்தின் பட்டைகள் (grewia) வளகு மரத்தின் பட்டைகள் (Kydia Calycina) ஆகியவைகளையும் விரும்பி உண்பதை நேரில் கண்டு எழுதியுள்ளார். இவ்வறிஞர் கூறியது போலவே யானை வளகினை உணவாகக் கொண்டதைக் கலித்தொகையும் தணிகைப் புராணமும் கூறுவது கவனிக்கத் தக்கது. தாழங்காய்கள், தான்றிக் காய்கள், ஈச்சங்காய்களை விரும்பி உண்ணும் என்றும் கூறுகிறார். நெல்லிக் காய்களையும் மிகவும் விரும்பி உண்ணும் என்று இதே அறிஞர் கூறியுள்ளார்.

“ கயந்தலை தழீஇய கறையடி இரும்பிடி
நயந்தலை நீங்கிய நாரின் முருங்கை
வெண்பூங் கவள முனைஇ நெல்லிப்
பைங்கா யமிழ்தம் பல்வயி னடக்கி
யாறுசெல் வம்பலர் சேறுகிளைத் திட்ட
உவலைக் கேணி யவலடுத் துலாவவும் ”

—பெருங்கதை - 52 : 64 - 69.

முருங்கையின் பூவை வெறுத்து நெல்லிக்காயை யானை உண்டதாகப் பெருங்கதை கூறுவதைக் காணலாம். விளாங்கனிகளை யானை விரும்பி உண்ணும் என்று புறநானூறு கூறுகின்றது.

“ மன்ற விளவின் மணவீழ் வெள்ளில்
கருங்க ணெயிற்றி காதன் மகனொடு
கான விரும்பிடிக் கன்றுதலைக் கொள்ளும் ”

—புறம், 181.

" சிறுகண் யானைப் பெருங்கை யீரினம்
குளவித் தண்கயங் குழையத் தீண்டிச்
சோலை வாழை முணைஇ யயலது
வேரல் வேலிச் சிறுகுடி யலறச்
செங்காற் பலவின் தீம்பழ மிசையும்
மாமலை நாட தாம நல்கென "

—நற்றிணை, 232.

யானை விளாங்கனியையும் சோலை வாழையையும் பலாவின் பழத்தையும் உண்ணுமென்பதைச் சங்க நூல்கள் கூறுகின்றன. சில அறிஞர்கள் யானை சில குறிப்பிட்ட இன மரங்களின் பட்டைகளையும் இலைகளையும் (Leguminoseae) மிகவும் விரும்பி உண்ணும் என்று கூறியுள்ளனர். தமிழ் மொழியிலும் கன்னட மொழியிலும் யானை விரும்பி உண்ணும் மரங்களைக் கவளம் என்று அழைக்கும் வழக்கு குறிப்பிடத்தக்கது. Helicteres Isora என்ற மரத்தின் இலைகளை உண்பதைப் பற்றி எம். கிருஷ்ணன் கூறியுள்ளார். அந்த மரத்தைக் கவளம் என்று தமிழில் அழைக்கின்றனர். கன்னடத்தில் இதையே 'கவணை, கவரிகி' என்றழைக்கின்றனர். யானை விரும்பும் Sterculia urens என்ற மரத்தையும் கவளம் என்றழைக்கின்றனர். இதே இனமான Sterculia Alata என்ற மரத்தைத் தமிழில் 'யானை தோண்டி' என்கின்றனர். மலையாளத்தில் 'போத்துத் தோண்டி' என்கின்றனர். போத்து என்பது ஆண் யானை. யானை இவைகளை அழித்துத் தின்பதால் இப் பெயர் வந்தது. இந்த அறிஞர் Careya arborea என்ற மரத்தின் பழத்தை யானை விரும்பி உண்பதாகக் கூறியுள்ளார். இந்த மரத்தைக் கன்னடத்தில் 'கவளம்' என்றே அழைக்கின்றனர். ஆதலின் அனுபவ வாயி

லாக யானை விரும்பும் செடி மரங்களைக் கூடச் சங்கப் புலவர்களும் மக்களும் தெரிந்து வைத்துள்ளனர் என்பதைக் காணும்போது வியப்படையாமல் இருக்க முடியாது. சங்க இலக்கியத்தில் வேறு சில மரங்களின் பட்டைகளையும் யானை உண்பதாகக் கூறியிருப்பதை ஆராய வேண்டும்.

"... ... ... களிறுதன்
உயங்குநடை மடப்பிடி வருத்த நோனாது
நிலையுயர் யாஅந் தொலையக் குத்தி
வெண்ணார் கொண்டு கைசுவைத் தண்ணாந்
தழுங்க னெஞ்சமொடு முழங்கும்
அத்த நீளிடை யழப்பிரிந் தோரே"

— குறுந்தொகை, 307.

"... ... கவைமுறி யாஅத்து
நாரரை மருங்கி னீர்வரப் பொளித்துக்
களிறுசுவைத் திட்ட கோதுடைத் ததரல்"

—அகம், 257.

"உம்ப லகைத்த வொண்முறி யாவும்"

—மலைபடுகடாம், 429.

"பெருங்களி றுரிஞ்சிய மண்ணரை யாஅத்
தருஞ்சுரக் கவலைய வதர்படு மருங்கின்"

—அகம், 17.

"புன்றலை மடப்பிடி யுணீஇய ரங்குழை
நெடுநிலை யாஅ மொற்றி நனைகவுட்"

—அகம், 59.

"உரல்கால் யானை யொடித்துண் டெஞ்சிய
யாஅ வரிநிழற் றுஞ்சும்
மாயிருஞ் சோலை மலையிறந் தோரே"

—குறுந்தொகை, 232.

" ... ... ... ... யானைதன்
கொன்மருப் பொடியக் குத்திச் சினஞ்சிறந்
தின்று வேனி லின்றுணை யார
முளிசினை யாஅத்துப் பொளிபிளந் தூட்டப்
புலம்புவீற் றிருந்த நிலம்படு வெஞ்சுரம் "

—அகம், 335.

" பொத்தில் காழ வத்த யாஅத்துப்
பொரியரை முழுமுத லுருவக் குத்தி
மறங்கெழு தடக்கையின் வாங்கி யுயங்குநடைச்
சிறுகட் பெருநிரை யுறுபசி தீர்க்கும்
தடமருப் பியானை கண்டனர் தோழி "

—குறுந்தொகை, 255.

" கான யானை தோனயந் துண்ட
பொரிதா ளோமை வளிபொரு நெடுஞ்சினை
அலங்க லுலவை யேறி யொய்யெனப் "

—குறுந்தொகை, 79.

" ... ... ... முளிசினை
ஓமை குத்திய வுயர்கோட் டொருத்தல்
வேனிற் குன்றத்து வெவ்வரைக் கவாஅன் "

—குறுந்தொகை, 396.

" கரும்பகட் டொருத்த னடுங்கக் குத்திப்
போழ்புண் படுத்த பொரியரை யோமை "

—அகம், 397.

" கயந்தலை மடப்பிடி யுயங்குபசி களைஇயர்
பெருங்களிறு தொலைத்த முடத்தா ளோமை "

—நற்றிணை, 137.

" பெருந்தன் குளவி குழைத்த பாவடி
இருஞ்சே றாடிய நுதலகொல் களிறு
பேதை ஆசினி ஒசித்த " —நற்றிணை, 51.

" வள்ளுகிர்ப், பிடிபிளந் திட்ட நாரில் வெண்கோட்டுக்
கொடிறுபோல் காய வாலிணர்ப் பாலை "

நற்றிணை, 107.

" களிறுபுறம் உரிஞ்சிய கருங்கால் இலவத்து
அரலை வெண்காழ் ஆலியிற் றூஉம்"

—அகம், 309.

மேலே காட்டப்பட்ட சங்கப் பாடல்களில் யானை யானது ஆச்சா, ஓமை மரத்தை உணவாகக் கொள் வதைப் பற்றிப் பல செய்திகள் வருவதைக் காணலாம். யா என்று சங்க நூல்களில் அழைக்கப்படும் மரம் ஆச்சா மரமாகும். (Hardwickia binata) இதன் கொழுந்துகளையும், மென் கொம்புகளையும் யானை விரும்பி உண்ணும் என்று கூறப்பட்டுள்ளது. ஆச்சா மரத்தைக் கீழே விழும்படி கொம்பால் குத்திச் சாய்த்து அதன் நாரைப் பொளித்து அதில் கிடைக்கும் நீரை உண்ணும் என்று கூறப்பட்டுள்ளது. ஆச்சா மரத்தின் பட்டையை உரித்துத் தின்னும் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆச்சா மரத்தைத் தள்ளி மற்றப் பிடிகளுக்கும், கன்றுகளுக்கும் உணவாக்கும் களிற் றைப் பற்றியும் சொல்வதைக் காணலாம். இதில் மிகவும் வியப்பான செய்தி என்னவென்றால் யானை ஆச்சா மரத்தையும், ஓமை மரத்தையும் (Kingiodendron pinnatum) தன் கொம்பால் குத்தி அந்த மரங்களி லிருந்து ஊறி வெளியாகும் எண்ணெய் போன்ற சாற்றை, நீரைக் குடிப்பதாகும். குறுந்தொகை 255ஆம் பாட்டில் பொத்தல் இல்லாத ஆச்சா மரத்தின் வளர்ந்த அடிமரத்தை உருவும்படி கொம்பால் குத்தித் தன் கையால் அதன் சாற்றை மற்ற யானைகளுக்குச்

கொடுத்துப் பசியைத் தீர்க்கும் என்று கூறியிருப்பதைக் காணலாம். அதேபோலக் குறுந்தொகை 396ஆம் பாட்டிலும் அகம் 397ஆம் பாட்டிலும் ஓமை மரத்தைக் குத்தி மரத்தில் போழப்பட்ட புண்ணையுண்டாக்கிய ஆண் யானையைப் பற்றிக் கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். ஓமை மரத்தின் தோலை விரும்பி உண்டதாகவும், ஓமை மரத்தைத் தள்ளிக் குட்டியானைகள், பெண் யானைகளின் பசியைத் தீர்த்ததாகவும் கூறியதையும் காணலாம். ஆச்சா, ஓமையின் அடிமரத்தைக் குத்தி அதிலிருந்து வரும் நீர்ச்சாற்றை யானை உண்பதாகக் கூறும் செய்தி உண்மையானது, நேரில் கண்டு கூறியதென்றே தெளிவாகின்றது. இந்த இரு மரங்களுக்கும் அடிமரத்தினுள்ளே பிசின் போன்ற நீர் உள்ளே இருக்கின்றது. ஆச்சா, ஓமை மரத்தின் அடிமரத்தை இரும்பால் ஆன குத்துக் கோலால் குத்தி எண்ணெயை எடுத்து அதை 'வார்னிஷ்' முதலியவற்றிற்குத் தற்போது பயன்படுத்துகிறார்கள் என்று செடிநூல் கூறுகின்றது. (Trees of Hardwickta binata species above 5 ft in girth are tapped for an oil. A hole is bored into the tree with an auger about 3 ft above the surface of the soil and must reach the pith. A tree will give from four to sixteen gallons of oil —N. L. Bor in Manual of Indian Forest Botany. when the heart wood of K. Pimata is tapped, a tree yields 4—16 gallons of the oleo-resin and can be tapped again after a decade—Indian Forester—November 1928,) ஆச்சா மரத்திலும், ஓமை மரத்திலும் அடிமரத்தில் வைரம் பாய்ந்த உள்பாகத்தில் குத்தித் துளையுண்டாக்கினால் 4 முதல் 16 காலன்வரை எண்ணெய்ச் சாறு கொடுக்கும் என்று செடிநூலார்கள் எழுதியுள்ளார்கள். குத்தினால் எண்ணெய்ச் சாறு கிடைப்பதை

யானைகள் உணர்ந்திருந்தன. கொம்பால் குத்தி உண்டன என்பதைச் சங்கநூல்கள் கூறுவது மிக அரிய நுண்ணிய வியப்புக்குரிய செய்தியாகும். குறுந்தொகை 255ஆம் பாட்டில் 'பொத்தில்காழ அத்த யாஅத்து' என்று கூறியதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். பொத்தல் இல்லாத வைரம் பாய்ந்த யாமரத்தை யானை கொம்பால் குத்தியதாகக் கூறியதைக் காணலாம். பொத்தல் உள்ள மரமாயிருந்தால் ஏற்கனவே சாறு எடுக்கப்பட்ட மரம், அது சாறு தராது என்று யானைக்குத் தெரிந்திருந்தது. ஒரு தடவை குத்திச் சாறெடுத்தால் 4 ஆண்டுக்குப் பிறகுதான் திரும்பவும் சாறு எடுக்கமுடியும் என்று செடிநூல் கூறுவதைக் காண்க. வைரம் பாய்ந்த மரத்தில்தான் சாறு கிடைக்கும் என்பதையும் உணர்ந்து 'காழ்' உள்ள மரம் என்று சங்கப் புலவர் கூறியுள்ளார். ஆச்சா, ஓமை மரங்களின் வைரம் பாய்ந்த அடிமரம் கருஞ்சிவப்பாகவும் மிகவும் உறுதியாகவும் மிகக் கனமாகவும் இருப்பவை என்று செடிநூலார் கூறுவர். மிகவும் கெட்டியாக இருந்ததால் யானையின் கொம்பு குத்தும் போது உடைந்து போனதாக அகநானூறு 335ஆம் பாடல் கூறுவதும் உண்மைச் செய்தியாகவே தோன்றுகின்றது. ஓமை மரத்தில் யானை குத்தியதால் அதன் சிவந்த வைரம் பாய்ந்த அடிமரத்தில் ஏற்பட்ட துளையில் சிவந்த சாறு வெளியாவதைப் போழப்பட்ட புண் போல இருந்ததாக அகநானூறு கூறுவதையும் நோக்குக. ஆச்சா மரத்தையும் ஓமை மரத்தையும் பிளந்து பொளித்து உணவாக யானைக் கூட்டத்திற்குக் களிறு கொடுத்ததாகக் கூறியிருப்பதிலிருந்தும், இந்த மரங்களின் கொழுந்துகள், இலைகள், மென்கொம்புகள்,

தோல், பட்டை, நார், அடிமரத்தின் நடுச்சாறு ஆகியவைகளை உண்டதாகக் கூறியதிலிருந்தும் சங்கப் புலவர்கள் எவ்வளவு நுட்பமாகக் காட்டில் யானைகளின் வாழ்க்கையைக் கவனித்துக் கூறினர் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இந்த இரண்டு மரங்களையும் பொதுவாக யானைகள் விரும்பி உண்ணும் Leguminoseae இனச் செடிகளைச் சார்ந்தவை என்பதையும் உணர வேண்டும். மற்றும் ஆசினி (Artocarpes Hirsuta) மரத்தைத் தள்ளியதாகவும், வெட்பாலை (Wrightia tinctoria) மரத்தைப் பிளந்ததாகவும் முள்ளிலவ மரத்தின் தோலை உரித்ததாகவும் கூறியதையும் காணலாம். களிறுகள் மரத்தைத் தள்ளுவதும், கிளைகளை வளைத்து வாங்கிப் பிடிகளுக்கும் குட்டிகளுக்கும் கொடுப்பதும் சங்க நூல்களில் கூறப்பட்டது போல அறிஞர்களும் கூறியுள்ளனர். (The bulls push over the trees and pull down branches and the females and young partake the results. R. C.) யானை மரத்தை நிலத்தில் சாய்ப்பதைத் 'தொலைத்து' என்று சங்க நூல்கள் கூறுகின்றன.

" கிளைபா ராட்டுங் கடுநடை வயக்களிறு
முளைதரு பூட்டி வேண்டுகுள கருந்த " — அகம், 218.

வலிய களிறு தன்னுடைய குடும்பத்துக்கு மூங்கிலை உணவாக உதவிப் பின்னர்த் தானும் வேண்டிய உணவு கொண்டதாக, 'கிளை பாராட்டும்' என்று அகநானூறு கூறியது கவனிக்கத்தக்கது. இதுகாறும் கூறியவைகளிலிருந்து இவ்வளவு நுண்ணியமாக யானைகளின் உணவைத் தற்கால அறிஞர்கள்கூட ஆராய்ந்திருப் பரோ என்பது ஐயத்திற்கிடமாயுள்ளது!

யானைக்குப் பகையான விலங்கு காட்டில் வேங்கைப் புலி என்பது ஏற்கனவே புலியைப் பற்றி எழுதியுள்ள கட்டுரையில் விளக்கியுள்ளேன். யானையைப் புலிக்குப் பகையாகச் சங்கநூல்களில் பல பாடல்களில் கூறப்பட்டுள்ளது. யானையைப் புலி கொல்வதும் புலியை யானை கொல்வதும் ஏற்கனவே புலியைப்பற்றிய கட்டுரையில் விளக்கியுள்ளேன். புலி வழங்கும் சூழ்நிலையிலேயே யானை வழங்குவதைப் பல சங்கப் பாடல்கள் கூறுகின்றன. 'புன்கண் யானையொடு புலிவழங் கத்தம்,' என்று ஐங்குறுநூறு (383) கூறுவதைக் காணலாம். யானையையும் புலியையும் வேங்கை மரச்சூழலில் கூறுவதையும் காணலாம். மூங்கிற் காடுகளில் இரண்டையும் அடிக்கடி கூறியுள்ளனர். வேங்கைப் புலியின் வரிக்கும் சிறுத்தைப் புலியின் புள்ளிக்கும், வேங்கை மரத்தின் பூக்கள் போலிருப்பதால் பூத்த வேங்கை மரத்தின் கிளையையும் வேங்கைப் பூக்கள் விழுந்த கரும் பாறையையும் இருள் சூழ்ந்த சூழ்நிலையில் மங்கிய ஒளியில் பார்க்கும்போது புலியென மயங்குவதைச் சங்கப் புலவர்கள் கூறியுள்ளதை ஏற்கனவே விளக்கமாகக் கூறியுள்ளேன். இம்முறையாக மயங்கும் விலங்குகளாகக் குரங்குகளும், யானையும் சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளன.

"ஓங்கல் மிசைய வேங்கை யொள்வீப்
புலிப்பொறி கடுப்பத் தோன்றலிற் கயவாய்
இரும்பிடி இரியுஞ் சோலை" —அகம், 228.

"வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்
புலிசெத்து வெரீஇய புகர்முக வேழம்
மழைபடு சிலம்பிற் கழைபடப் பெயரும்"

—அகம், 12

" ... ... ... நனை கவுள்
காய்சினஞ் சிறந்த வாய்புகு கடாத்தொடு
முன்னிலை பொறாஅது முரணிப் பொன்னிணர்ப்
புலிக்கேழ் வேங்கைப் பூஞ்சினை புலம்ப
முதல்பாய்ந் திட்ட முழுவலி யொருத்தல் "

—அகம், 227.

" உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண் டதன்முதற் குத்திய மதயானை
நீடிரு விடரகஞ் சிலம்பக் கூய்த்தன்
கோடுபுய்க் கல்லா துழக்கு நாடகேள் "

—கலி, 38.

" கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு
நெடுவரை மருங்கிற் றுஞ்சும் யானை
நனவிற்றான் செய்தது மனத்த தாகலிற்
கனவிற் கண்டு கதுமென வெரீஇப்
புதுவ தாக மலர்ந்த வேங்கையை
யதுவென வுணர்ந்தத னணிநல முருக்கிப்
பேஎ முன்பிற்றன் சினந்தணிந் தம்மரங்
காணும் பொழுதி னேக்கல் செல்லாது
நாணி யிறைஞ்சு நன்மலை நன்னாட "

—கலி, 49.

" மறப்புலிக் குழூஉக்குரல் செத்து வயக்களிறு
வரைசேர் பெழுந்த சுடர்வீ வேங்கைப்
பூவுடைப் பெருஞ்சினை வாங்கிப் பிளந்துதன்
மாயிருஞ் சென்னி யணிபெற மிலைச்சி "

—பதிற்றுப் பத்து, 41 : 7 - 10.

" ... ... கதழ்வாய் வேழ
மிருங்கேழ் வயப்புலி வெரீஇ யயலது
கருங்கால் வேங்கை யூறுபட மறலிப்
பெருஞ்சினந் தணியுங் குன்ற நாடன் "

—நற்றிணை, 217.

வேங்கை மரம் பூத்துப் பரவிய தோற்றம் யானையின் சிறுகண்களுக்குப் புலிபோலத் தோற்றியதால் மிரண்டு சென்றதாகக் கூறப்பட்டுள்ளது. யானைகளுக்கு நல்ல கூர்மையான பார்வை கிடையாது. ஆனால் அவை நல்ல மோப்பசக்தி யுடையன. யானைக்கு நேர்பார்வை குறைவு. ஆனால் பின்பக்கம் பார்க்கக் கூடியவை என்று கூறுவர். நேராக உள்ளதொான்றைத் தாக்கும்போது அதற்குக் குறி தப்பிவிடும். (To see forward they must raise their heads and look down their 'noses' so that their aim is unreliable when heading at something straight on. I. T. S.) சங்க நூல்களில் வேங்கை மரத்தின் அடிமரத்தை யானை தன் கொம்பால் தாக்கிக் குத்துவதாகக் கூறப்பட்ட செய்தி ஆராயத் தக்கது. யானை புலியின்மேல் கொண்ட சினத்தால் கறுவம் வைத்துக் கொண்டிருக்கும். நன்ருகப் பூத்த வேங்கை மரத்தைப் புலியென நினைத்துத் தாக்குவதாகக் கலித்தொகை கூறுவதும் ஆராய வேண்டிய செய்தி. புலியைத் தாக்கி வென்ற யானை தூங்கும்போது கனவு கண்டதாகவும் அச்சமயம் வெருண்டு போய் விழித்து எதிரே கண்ட புதியதாகப் பூத்த வேங்கை மரத்தைப் புலியென்று தாக்கிப் பின்னர் மரமென்று உணர்ந்ததாகக் கூறியிருப்பதையும் காணலாம். கரும்பச்சை இலைநிறைந்த சூழ்நிலையில் வேங்கை மரம் புதியதாக மஞ்சள் பூக்களுடன் பூத்தது புலியின் உடல் போன்று தோன்றியிருக்கலாம். யானைக்கு நினைவு வலிமை கூடுதலாக உண்டு என்று விலங்கு நூலார் கூறுவர். தனக்கு ஊறு செய்தவரை எளிதில் மறக்காது, திரும்ப அவருக்குத் தீங்கு செய்யும் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர்; சிலர் மறுக்கின்றனர்.

யானைகள் கனவு காண்பதுண்டு என்றும் சிலர் கூறுகின்றனர். கலித்தொகைப் பாடலில் யானை புலியின்மேல் கறுவம் வைத்திருந்ததாயும் அதன் காரணமாகப் பூத்த வேங்கை மரத்தைப் புலியென்று தாக்கினதாகவும் கூறப்பட்டுள்ளது. தான் தாக்கி வென்ற புலியைப் பற்றிக் கனவு கண்டதாகவும் கூறப்பட்டுள்ளது. யானை வேங்கையின் அடிமரத்தைப் பாய்ந்து தாக்கிக் கொம்பால் குத்திக் கொம்பை எடுக்க முடியாமல் ஆட்டி உழன்றதைச் சிவபெருமானின் கைலாய மலையை இராவணன் எடுக்க முயன்று கைமாட்டிக் கொண்டதனோடு ஒப்பிட்டுக் கலித்தொகை கூறியுள்ளது நினைந்து இன்புறத்தக்கது. வேங்கை மரக் கிளையைப் பிளந்து தன் தலைமேலே கிளையை வாரிப் போடுவதையும் பதிற்றுப்பத்து கூறியுள்ளது. இச் செய்திகள் ஆராயத்தக்கன. இவை உண்மையாக இருக்கலாமெனத் தோன்றுகின்றது.

யானை மிகவும் பலம் பொருந்திய விலங்காதலால் புலி பெரிய யானையைத் தாக்குவதற்கு அஞ்சும். ஆனால் சில சமயங்களில் வளர்ந்த யானையைக் கூட வேங்கைப் புலி தாக்குவதுண்டு. யானை பெரியதாயினும் பலம் பொருந்தியதாயினும் இயற்கையில் அச்சம் மிகுந்த விலங்கு. ஆதலின் புலிக்கு அஞ்சும். புலியை விட்டு விலகிச் செல்ல விரும்பும். ஆனால் புலி தனக்கோ தன் குட்டிகளுக்கோ தீங்கு செய்வதைக் கண்டால் யானை தற்காப்புக்காகப் போரிடும். பெண் யானை கூடப் புலியைத் தாக்கித் தும்பிக்கையால் தூக்கி எறிந்தோ காலால் மிதித்தோ கொன்றுவிடும். ஆண் யானை தன்னுடைய கொம்புகளால் குத்தி நிலத்தில்

புலியைச் சாத்திக் கொன்றுவிடும். (A tusker may ram a tiger through a few times with his tusks.........After that the elephant goes off and washes himself thoroughly)

" மாசில் வெண்கோட்டு அண்ணல் யானை
வாயுள் தப்பிய வருங்கேழ் வயப்புலி
மாநிலம் நெளியக் குத்திப் புகலொடு
காப்பில் வைகுந் தேக்கமழ் சோலை "

—அகம், 251.

" நிலவுநிற மருப்பிற் பெருங்கை சேர்த்தி
வேங்கை வென்ற வெருவரு பணைத்தோள்
ஓங்கல் யானை யுயங்கிமதந் தேம்பிப் " —அகம், 295.

யானை புலியை நிலத்தொடு சேர்த்து நிலம் நெளியக் கொம்பால் குத்தியதாகக் கூறுவதைக் காணலாம். யானை புலியைக் கொல்வதைப் பல விடங்களில் சங்க நூல்களில் சொல்லப்பட்டுள்ளது. யானையானது புலியைக் கொன்றதும் நீரில் தன்னுடலை நன்ருகக் கழுவிக் கொள்ளும் என்று சாண்டர்சென் என்ற அறிஞர் கூறியுள்ளதைப் பார்க்கலாம். இச்செய்தியைச் சங்க நூல்களும் கூறுவது வியப்பைத் தருகின்றது.

" இனையொடு மேய்ந்த கேழ்கிளர் யானை
நீர்நசை மருங்கின் நிறம்பார்த் தொடுங்கிய
பொருமுரண் உழுவை தொலைச்சிக் கூர்நுனைக்
குருதிச் செங்கோட் டழிதுளி கழாஅக்
கன்முகை அடுக்கத்து மென்மெல இயலிச் "

—அகம், 332.

" உழுவையொ டுழந்த உயங்குநடை யொருத்தல்
நெடுவகிர் விழுப்புண் கழாஅக் கங்குல் "

—அகம், 308.

" இரும்புலி தொலைத்த பெருங்கை வேழத்துப்
புலவுநாறு புகர்நுதல் கழுவக் கங்குல்
அருவி தந்த அணங்குடை நெடுங்கோட்டு "

—அகம், 272.

" தொன்றுபடு துப்பொடு முரண்மிகச் சினைஇக்
கொன்ற யானைச் செங்கோடு கழாஅ
வழிதுளி பொழிந்த இன்குரல் எழிலி "

—நற்றிணை, 247.

மேய்ந்த யானைக் கூட்டம் நீரைக் குடிக்க வரும்போது நீர்த்துறையில் பதுங்கியிருந்த புலியைக் கொன்ற ஆண் யானை இரத்தத்தால் சிவந்த கூர்ந்த கொம்பைக் கழுவிச் செல்லும் என்று அகநானூறு (332) கூறுவது அரிய செய்தி. புலியொடு போரிட்டுப் பெற்ற நீண்டதான கிழிந்த புண்ணை இரவில் யானை கழுவின தாகவும், புலியைக் கொன்ற யானை தன்னுடைய நெற்றியைக் கழுவ நீர்வீழ்ச்சிக்குச் சென்றதாக வும், புலியைக் கொன்ற யானை சிவந்த தந்தங்களைக் கழுவ மழை பொழிந்து உதவியதாகவும் மற்றப் பாடல் கள் கூறுவதைக் காணும்போது இச்செய்தி சங்கப் புலவர்களுக்கு நன்கு தெரிந்த செய்தியென்று தெளிவா கின்றது. யானையைப் புலி கொல்வது எளிதன்று. ஆனால் சங்க நூல்களில் யானையைக் கொன்ற புலியைப் பற்றியும் பல பாடல்கள் வருகின்றன. இச்செய்திகள் மிகைபடக் கூறியதாகத் தெரிகின்றது. யானைக் கன்றைப் புலி கவருவதையே விலங்கு நூலார் கூறுகின் றனர்.

" குறுங்கை யிரும்புலிக் கோள்வ லேற்றை
நெடும்புதற் கானத்து மடப்பிடி யீன்ற

நடுங்குநடைக் குழவி கொளீஇய பலவின்
பழந்தூங்கு கொழுநிழ லொளிக்கு நாடற்கு ''

—ஐங்குறுநூறு, 216.

புதரில் ஈன்ற நடுங்கும் யானைக்குட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடிய புலியை ஐங்குறுநூறு கூறுவதைக் காணலாம். யானையிடமிருந்து தப்பிப் பயந்து ஓடிய புலியைப் பற்றியும் சங்கப் பாடல்கள் (அகம் 118, 221) கூறுகின்றன.

யானையைப் பாம்பு கடித்தால் இறந்து விடும் என்று அறிஞர் சாண்டர்சென் கூறுகிறார். யானையின் காலிலும் தும்பிக்கை முனையிலும் நச்சுப் பாம்புகள் கடித்தால் யானை இறந்துவிடும் என்று கூறுகின்றார். (Elephants are very susceptible to snake bites, especially on their feet and on the tips of their trunks. In fact they succumb to snake bite as fast as we do). பர்மாக் காடுகளில் வேலை செய்து பழகிய யானைகளை மரத்தில் கூடு கட்டி முட்டையிட்டுப் பொரிக்கும் இராசநாகங்கள் (King Cobras) துதிக்கையில் கடித்துக் கொன்று விடுவதைப் பற்றி ஓர் அறிஞர் கூறுகிறார். ஆனால் காரிங்டன் என்ற அறிஞர் பாம்புகளின் நஞ்சு யானைகளைக் கொல்லும் வலியற்றது என்கிறார். பாம்பு கடித்தால் யானை மிகவும் வலியெடுத்து வருந்தும் என்று ஒரு குறுந்தொகைப் பாடல் கூறுகின்றது.

'' சிறுவெள் ளரவின் னவ்வரி குருளை
கான யானை அணங்கி யாஅங் ''

—குறுந்தொகை, 119.

சிறிய நல்லபாம்பு கடித்ததால் யானை வருந்தியதாகக் குறுந்தொகை கூறியுள்ளது. யானையை மலைப்பாம்பு

விழுங்குவதாகச் சில செய்திகள் சங்க நூல்களில் வருகின்றன.

" மாமடல் அவிழ்ந்த காந்தளஞ் சாரல்
இனஞ்சால் வயக்களிறு பாந்தட் பட்டெனத்
துஞ்சாத் துயரத் தஞ்சுபிடிப் பூசல்
நெடுவரை விடரகத் தியம்புங் "

—நற்றிணை, 14.

" தாவில் பெரும்பெயல் தலைஇய யாமத்துக்
களிறகப் படுத்த பெருஞ்சினை மாசுணம்
வெளிறில் காழ்மரம் பிணித்து நனியிளிர்க்கும் "

—நற்றிணை, 261

" கயங்கண் டன்ன வ கன்பை யங்கண்
மைந்துமலி சினத்த களிறுமத னழிக்குந்
துஞ்சுமரங் கடுக்கு மாசுணம் விலங்கி "

—மலைபடுகடாம், 259 - 261.

நற்றிணைப் பாடல்களில் யானையைப் பெரும்பாம்பு விழுங்கியதாகக் கூறுவதைக் காணலாம். களிற்றை விழுங்கிய பெரும்பாம்பு இயற்கையில் இல்லை. மலைபடுகடாத்தில் பெரும்பாம்பு களிற்றின் வலிமையை அழித்ததாகக் கூறியுள்ளது. பெரும்பாம்பு காடுகளில் இருப்பது. இதன் கொடிய தன்மையைக் கருதி யானையைப் பெரும்பாம்பு விழுங்குவதாகக் கருதினரென்று தெரிகின்றது. இந்தக் கருத்து சமணர்களிடையே பழங்காலத்தில் இருந்ததாகத் தெரிகின்றது. யானையை விழுங்கும் பாம்பைப் பிற்காலத்தில் திருஞானசம்பந்தர் பாடுகின்றார். இந்தச் செய்தி பிற்காலத்தில் புராணச் செய்தியாகவே மாறிவிட்டது. 'ஆனை கொண்டான்' என்றொரு பாம்பு இருந்ததாகக் கருதப்பட்டது. இதே பெயர் (Anaconda) அமெரிக்கா

வில் ஒரு பெரும் பாம்பிற்கு இடப்பட்டதாகத் தெரிகின்றது.

> " வெண்கோட் டியானை விளிபடத் துழவும்
> அகல்வாய்ப் பாந்தட் படாஅர்ப்
> பகலும் அஞ்சும் பனிக்கடுஞ் சுரனே "

—அகம், 68.

அகநானூற்றில் யானையானது பாம்புச் செடியைக் கண்டு பாம்பென்று பயந்ததாகக் கூறப்பட்டுள்ளது பாம்பைப்போன்ற உருவுடைய போலிச்செடிகள் உண்டு என்று செடி நூலார் கூறுவர். யானையும் பாம்பைக் கண்டு பயப்படும் என்று சிலர் கருதுகின் றனர். இச்செய்தியும் ஆராய்தற்குரியது. சங்க இலக் கியத்தில் முதலையானது யானையைப் பிடித்து இழுத்து நீரில் அமிழ்த்தி மறைப்பதாகக் கூறுவதையும் காண் கிறோம்.

> " நீர்நிறங் கரப்ப ஊழுறு புதிர்ந்து
> பூமலர் கஞலிய கடுவரற் கான்யாற்றுக்
> கராஅந் துஞ்சுங் கல்லுயர் மறிசுழி
> மராஅ யானை மதந்தப ஒற்றி
> உராஅ ஈர்க்கும் உட்குவரு நீத்தம் "

—அகம், 18.

> " உரவுக்களிறு கரக்கு மிடங்க ரொடுங்கி
> இரவி னன்ன விருநீங்கு வரைப்பிற்
> குமிழி சுழலுங் குண்டுகய முடுக்கர் "

—மலைபடுகடாம், 211 - 213.

> " தாட்படு சின்னீர்க் களிறட்டு வீழ்க்கு
> மீர்ப்புடைக் கராஅத் தன்ன வென்னை "

—புறம், 104.

தண்ணீரில் விழுந்த பூக்கள் காணுற்று நீரை மறைக் கவே அதில் மறைந்திருந்த முதலை யானையை அதன் வலிமை போக உறுதியாக இழுத்ததாக அகநானூறு கூறுகின்றது. களிற்று யானையை இழுத்துக் கயநீரில் மறைத்த முதலையையும் களிற்று யானையைக் கொன்று வீழ்க்கும் இழுப்புச்சக்தியுடைய முதலையையும் சங்க நூல்கள் கூறுவதைக் காணலாம். ஆனால் முதலைக்கு யானையை நீரில் இழுக்கும் சக்தி இருப்பதாகத் தெரிய வில்லை. இச்செய்தியும் முதலையின் சக்தியை வியப்ப தற்காகக் கூறப்பட்டதாகத் தெரிகின்றது. இந்தச் செய்தியிலிருந்துதான் கஜேந்திர மோட்சம் என்ற புராணக்கதை பிற்காலத்தில் தோன்றியதாகத் தெரி கின்றது. யானை பெரிய விலங்காயினும் பயந்த குண முடையது என்பது முன்னரே விளக்கப்பட்டது. நாய்க்குக் கூட அஞ்சுமென்பர். உறையூருக்குக் கோழி யென்று பெயர் வரக் காரணம் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

" முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனா புரிந்தென் "
—சிலப்பதிகாரம் 10 : 247 - 248.

யானையை வென்ற கோழி தோன்றினவிடம் வலி யுடைத்தென்று கருதி அவ்விடத்து அதன் பெயராலே சோழன் ஊர் கண்டதாக உரை எழுதப்பட்டுள்ளது. யானையைக் கோழி வென்ற இடம் வலிவுடையது என்ற கதைபோல வேட்டை நாய் துரத்திய முயல் நாயை எதிர்த்து நின்ற இடம் வலியுடைத்து என்று கோட்டையை அவ்விடத்தில் கட்டியதான வரலாறும் வேலூர்க் கோட்டையைப் பற்றி வழங்குகின்றது. யானையைக் கோழி வென்றிருக்குமா என்ற கேள்

விக்கு விடை கூறுவது போல சதுர்வேதி என்ற அறிஞர் தாம் நேரில் கண்ட ஒரு செய்தியை எழுதியுள்ளார். இந்த அறிஞர் இந்தியாவின் காடுகள் பாதுகாப்புத் துறைத் தலைவராக இருந்து ஓய்வு பெற்றவர். அவர் யானையைத் தாக்கிய கோழியை நேரில் கண்டு எழுதியுள்ளார். (At bifurcation in the pilibit forests, once a mere hen suddenly charged at my elephant that had unknowingly transgressed the sacred precincts of the chicks it was rearing. My wife saw a jungle hen once shooing away a tiger from approaching its progeny. M. S. Chaturvedi in Illustrated Weekly of India—October. 1. 1967.)

தன்னுடைய குஞ்சுகளைப் பாதுகாக்க யானையைத் தாக்கிய கோழியைக் கண்டதுபோலப் பழங்காலத்துச் சோழ மன்னன் கண்டிருந்ததாலேயே அந்த நிகழ்ச்சி நடந்த இடம் வலிமை வாய்ந்ததென்று அங்கு தலைநகரத்தை நிலைநிறுத்தினன். சிறிய விலங்குகள் தங்கள் குட்டிகளைப் பாதுகாக்கவும் உரித்தான இடத்தைப் (Territory) பாதுகாக்கவும் பெரிய விலங்குகளோடு போரிடு மென்பதை அறிஞர்கள் கண்டுள்ளனர். ஆதலின் உறையூருக்குக் கோழி என்ற பெயர்க் காரணம் உண்மையாக நடந்த ஒரு பழங்கால நிகழ்ச்சியிலிருந்தே தோன்றியிருக்கும். கோழியைத் தலைநகராகக் கொண்டு உறைந்த சோழ அரசுக்கு முதலில் கோழியர் என்று பெயர் வந்திருக்கலாம். கோழியர், கோழர், சோழர் என்று மாறியிருக்கலாம்.

காட்டிலே யானைகள் கூட்டமாகவே வாழ்வன. ஒரு நிரையில் சில பெண் யானைகளும் சில ஆண் யானைகளும் குட்டிகளும் காணப்படும். ஒரு நிரையில் ஏறக்குறைய 30 யானைகளாவது காணப்படும்.

ஒவ்வொரு நிரையும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவையாக இருக்கும். இக்குடும்பத்தைக் 'கிளை' என்று சங்க நூல்கள் அழைக்கும். இந்த யானை நிரைகளுக்கு முதிர்ந்த பெண் யானையொன்று தலைமை வகிக்கும் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால் எம். கிருஷ்ணன் போன்ற அறிஞர்கள் பெரியதொரு ஆண் யானையே யானைநிரைக்குத் தலைவனாக இருப்பதாகக் கருதுகின்றனர். (It has been said that a cow leads the herd and not the bull. That is not quite true. No doubt an old cow does seem to decide the movements of the herd but the big bull, when present does make his presence felt—M. Krishnan in 'The Hindu' 1960 ... ... But what surprised me most was the sight of a magnificent specimen of a tusker whom I had never seen making his appearance from behind the trees ... ... obviously this was the leader of the herd who came in response to the danger call trumpeted by the herd. He came in steady gait as if in command of the situation and his appearance was the signal for the herd to move from the area—G. V. Kurup in 'The Sunday Standard' April 5, 1970.) சங்க இலக்கியத்திலும் பிற்கால இலக்கியத்திலும் இந்த யானைத் தலைவனை குறித்துச் சில செய்திகள் வருகின்றன. யானைக் கூட்டத்துத் தலைவன் ஆண் யானையே என்ற செய்தி தற்காலம் உண்மையெனக் கருதப்படுகின்றது.

"இருங்களிற்று இனநிரை யேந்தல்"

—குறுந்தொகை, 180.

" கன்றுடை மருங்கிற் பிடிபுணர்ந் தியலும்
வலனுயர் மருப்பின் நிலனீர்த் தடக்கை
அண்ணல் யானைக்கு அன்றியும் கல்மிசைத்

—நற்றிணை, 194.

" அலகி லானைக ளனேகமு மவற்றெடு மிடைந்த
திலக வாணுதற் பிடிகளுங் குருளையுஞ் செறிந்த
வுலவை நீள்வனத் தாதமே யொத்ததவ் வூதத்
தலைவனே யொத்துப் பொலிந்தது சந்திர சயிலம் "

—கம்பராமாயணம் - வரைக்காட்சி 7.

குறுந்தொகைப் பாட்டு ஏந்தல் என்று கூறுவது இந்த யானைக் கூட்டத்தின் தலைவனை ஆண் யானையையே. 'இனநிரை யேந்தல்' என்றதால் யானைக்கூட்டத்தின் தலைவன் (Herd bull) என்பது விளங்கும். குறுந்தொகையில் இப்பெயர்க்குக் கூறிய விளக்கத்தில் 'குழூஉப் புறந்தருதல் குஞ்சரத் தியல்பே' என்று யானையின் இயல்பை விதந்து கூறியதைக் குறிப்பிட்டு உ. வே. சாமிநாதய்யர் யானைக் கூட்டத்தைப் பாது காக்குங் களிற்றை ஏந்தலெனவும் யூதநாதனெனவும் வழங்குவர் என்று கூறினர். இந்த யானைத் தலைவனைப் பிற்காலத்தில் யூதநாதன் என்று கூறினும் சங்க இலக்கியத்தில் அண்ணல் என்றும் ஒருத்தல் என்றும் பிற பெயர்களாலும் அழைத்தனர். இதை யானையுள் அரசன் என்று பிற்காலத்தில் அழைக்கலாயினர். யானையரசன் தன் மதத்தால் மற்ற யானைகளைக் கெடுத்து விடும் என்று சீவக சிந்தாமணியில் கூறப்பட்டுள்ளது. சீவக சிந்தாமணி இந்த யானையை 'அரசுவா' (3087) என்று அழைத்தது. இந்த அரச யானையை அதன் மத நாற்றத்திலிருந்தே கண்டு கொள்ளலாம் என்றது. 'யானையுள் அரசன்' என்றும் அழைத்தது.

" உடுவுறும் பகழி வாங்கிக் கடுவிசை
யண்ணல் யானை யணிமுகத் தழுத்தலின்"

—குறிஞ்சிப்பாட்டு, 170—171.

"இலங்கேந்து மருப்பி னினம்பிரி யொருத்தல்
விலங்கன் மீமிசைப் பணவைக் கானவர்
புலம்புக் குண்ணும் புரிவளைப் பூசல்"

—மலைபடுகடாம், 297-299.

மலைபடுகடாத்தில் வரும் ஒருத்தல் என்ற சொற்கு யானைத்தலைவன் என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறினார். கலித்தொகை முதற்பாட்டில் வரும் 'களிற்று ஒருத்தல்' என்ற வரிக்கு எழுதிய உரையில் களிறு என்பது ஆண் ஆயினும் இந்த இடங்களில் அச் சொல் யானையென்ற பொருளில் சாதிப்பெயராய் நின்று, அதனையடுத்த ஒருத்த லென்பது அதன் ஆணைக் குறிக்கும் என்று கூறினார். இந்த யானைத் தலைவனின் செயலையும் அழகிய உவமையால் கலித்தொகை விளக்குகின்றது. பாண்டவர்கள் இருந்த அரக்கு மாளிகையைக் கௌரவர்கள் கொளுத்தினர். அந்த நெருப்பினின்று வீமன் நால்வரையும் தப்பிக்க வைத்துப் பாதுகாத்தான். இது, காட்டில் நெருப்புச் சூழ எரிந்தபோது வழி உண்டாக்கித் தன் இனத்தைத் தப்பிக்க வைத்துத் தன் இனத்தோடு சேர்ந்த தலைவனை யானையைப் போல் இருந்தது என்று கலித்தொகை கூறுகின்றது. யானைத் தலைவனை (Herd bull) களிறு தன் குடும்பத்தைப் பாதுகாக்க முன்வராது என்று சில அறிஞர்கள் கருதி வந்தார்கள். ஆனால் அது தவறு என்று சில அறிஞர்கள் இப்போது கருதுகின்றனர். இந்த அண்ணல் யானை, களிற்று யானை சில சமயங்களில் யானைக் கூட்டத்தைப் பாதுகாக்க முன் வருவதையும் எதிரியைத் தாக்குவதையும் கவனித்துள்ளனர். களிற்று யானை தன் குடும்பத்தை முன்னே போக விட்டுத் தான் தனியே நின்று எதிரியைக் கவனித்துக்

கொண்டு இருப்பதையும் கண்டுள்ளனர். (No doubt the herd bull is usually content to look after his own hide but on occasion he will certainly cover the retreat of the herd, and even actively induce the rest of the herd to go away, while he stands gaurd. I have myself witnessed such conduct — M. Krishnan.)

" கன்றரைப் பட்ட கயந்தலை மடப்பிடி
வலிக்குவரம் பாகிய கணவ னோம்பலின்
ஒண்கேழ் வயப்புலி பாய்ந்த தென் "

—மலைபடுகடாம் 307 - 309.

" கயந்தலை மடப்பிடி இனனே மார்ப்பப்
புலிப்பகை வென்ற புண்கூர் யானை "

—அகம், 202.

" குறிவரி இரும்புலி அஞ்சிக் குறுநடைக்
கன்றுடை வேழம் நின்றுகாத்து அல்கும்
ஆரிருள் கடுகிய அஞ்சுவரு சிறுநெறி "

— நற்றிணை, 85.

மலைபடுகடாத்தில் வலிமைக்கு வரம்பு கூறக்கூடிய படி அவ்வளவு பலமுடைய கணவனாகிய ஆண் யானை மடப் பிடியையும் அதன் வயிற்றின் அடியில் பதுங்கிய குட்டி யையும் பாதுகாப்பதால் வலிய வேங்கைப் புலி பயந்து பாய்ந்து ஓடியதாகக் கூறியிருப்பதைக் காணலாம். குட்டிகளுடன் கூடிய பெண் யானைக் கூட்டத்தைக் காக்க ஆண் யானை குறுகிய காட்டு வழியில் இருள் சூழும் காலத்து நின்றுகொண்டு காத்துக் கொண்டு தங்கியிருக்கும் என்று நற்றிணை கூறுகின்றது. இதில் 'நின்று காத்து அல்கும்' என்ற வரி 'standing gaurd' என்று அறிஞர் கூறிய செய்கையைக் குறிப்பதைக் காணலாம். "குழூஉப் புறந்தருதல் குஞ்சரத் தியல்பே"

என்று தன் குழுவைப் பாதுகாப்பது யானையின் இயல்பு என்று கூறியிருப்பதையும் கவனிக்கவேண்டும். இதன் காரணமாகவே கூட்டத்தில் இருந்த மிக வலிய யானையை (Herd bull) யானைத் தலைவன் என்று சங்க காலத்தில் கருதினர். இனஞ்சால் வயக்களிறு (நற்றிணை 14) இனஞ்சால் வேழம் (அகம் 197) என்று கூறப்படுவதிலிருந்து இனத்தில் சிறந்த களிறு தலைவனாக விளங்கிற்று என்பது தெரிகின்றது.

யானைகள் காட்டில் கூட்டமாகப் போகும்போது பிடிகளும் குட்டிகளும் முன்னால் போகின்றன. பின்னால் ஆண் யானைகள் போகும். ஆண் யானைகளில் இளம் யானைகள் ஓர் அணியாகவும் முதிர்ந்த யானைகள் வேறாகவும் சில சமயங்களில் செல்லுமென்பர். இத்தகைய காட்சியைச் சங்கப்புலவர் கண்டதாகத் தெரிகின்றது. 'இருங்களிற் றினநிரை' (குறுந்தொகை 180) 'பெருங்களிற் றினநிரை' (அகம் 357) என்ற வழக்கு சங்க நூல்களில் வருவதைக் காணலாம். அகநானூற்றின் முதல் தொகுதிக்கு 'களிற்று யானை நிரை'' என்று பெயர் சூட்டப்பட்டிருப்பதைக் காணலாம். களிற்று யானைகள் கூட்டம் வரிசையாகச் செல்லும் அழகிய காட்சி போல அகநானூற்றுப் பாடல்கள் முதல் தொகுதியில் செல்வதாகக் கொண்டனர். களிற்று யானை நடையைப் பீடுநடையாக, பெருமித நடையாகக் கருதினர். 'ஏறுபோற் பீடு நடை' என்று கூறினர். 'மங்கல மழகளிறனைய செல்கையன்' என்று பிற்காலத்தில் களிற்று யானை நடையைப் போற்றினர். 'களிற்றினியலி வெம்போர்ச் செழியனும் வந்தான்' என்று புறநானூறு (79) கூறுவதை

யும் காணலாம். இதையே பிற்காலத்தில் கம்பரும் இராமனுடைய நடைக்கு உவமையாகக் கூறினர். யானைகள் கூட்டமாக (Herd) வாழ்வதையே 'கிளை' என்றனர். கிளை என்பது குடும்பம். அவை கூடி வாழ்வதையே 'கிளை பாராட்டும்' (அகம் 218) 'பய நிரை' (நற்றிணை, 92) 'இனஞ்சால் வயக்களிறு' (நற்றிணை, 14) 'இனனே மார்ப்ப' (அகம், 202) என்று பலமுறையாகக் கூறினர். பெண் யானையைப் பிடி என்றழைத்தனர். குட்டியுடன் கண்ட தாயைக் 'கயந் தலை மடப்பிடி' (அகம், 202, மலைபடுகடாம், 307) என்று ஒன்ருகச் சேர்த்துக் கூறினர். கயந்தலை என்று யானைக்கன்றை அழைத்தனர். யானைக்கன்றின் தலை மிக மெல்லியதெனக் கருதினர். கயமுனிக் குழவி கயந்தலைக் குழவி என்றும் அழைத்தனர். தொல்காப் பியத்திலேயே கயந்தலை யானையின் கன்றைக் குறித்து வழங்கியது.

விலங்கு நூலார் காடுகளில் தனியாக மேயும் பெரிய, வலிய களிற்று யானையை அடிக்கடி பார்த்திருக் கின்றனர். இந்த ஆண்யானை யானைநிரைக்கு அருகி லும் சில சமயம் நிரையில் சேர்ந்தும் காணப்படுவ துண்டு. இதையே தலைமை யானையாகச் (Herd bull) சங்கநூல்களில் கருதினர். இந்த வலிய யானையை 'ஒருத்தல்' என்று சங்க நூல்களில் கூறுகின்றனர். இந்த ஒருத்தல் யானையினத்தோடு சேருவதையும் பிரிந்து இருப்பதையும் சங்க நூல்கள் கூறுவதைக் கவனிக்க வேண்டும். விலங்கு நூலார் நிரையில் உள்ள வலிய களிறு (Herd bull) சில சமயங்களில் நிரையை விட்டுத் தனியே திரிவதையும் கண்டுள்ளனர். நிரை

யுடன் சேராது தனியாகவே காணப்படும் வலிய களிறுகளையும் கண்டுள்ளனர். இத்தகைய தனியான களிறு மிகப் பெரியதாயும் வலியதாயும் யானைக் கூட்டம் மதித்து நடப்பதாகவும் இருக்கும் என்று அறிஞர்கள் கூறுவர். (A solitary elephant is always a bull usually one sufficiently mature and large to command the notice of the herd bull.........A lone bull is not a true solitary like a lone bull gaur. Given the opportunity, he will rejoin the herd. Even the herd bull does not always stay with his farmily. Periodically he leaves the herd though he usually keeps not too far away—M. K.) இந்தத் தனியானையைச் சங்க நூல்களில் வலிய யானையாகவும் பெரிய யானையாகவும் கூறப்பட்டுள்ளது. ' காடுமீக் கூறுங் கோடேந் தொருத்தல்" என்று அகநானூறு (65) கூறுவதைக் காணலாம். காடே புகழும்படி அவ்வளவு பெரிய கொம்பையுடைய தலையான யானையென்று குறிப்பிடப்பட்டுள்ளது. தலைமையானையாகவும் கூறப்பட்டுள்ளது. ஒருத்தல் என்பது யானைத்தலைவனென்னும் பொருளில் வருமென்று உரையாசிரியர்கள் கூறினர். மலைபடுகடாத்தில் 'இலங்கேந்து மருப்பி னினம்பிரி யொருத்தல்' என்ற வரிக்கு (297) உரை கூறிய நச்சினார்க்கினியர் தன்னினத்தைப் பிரிந்த யானைத் தலைவனைப் பிடித்தற்கு வேட்டுவர் ஆரவாரித்தார்கள் என்று கூறுகிறார். தலையான இந்த யானை தன் கூட்டத்தைப் பிரிந்து தனித்து இருந்ததை மலைபடுகடாம் தெளிவாகக் கூறியுள்ளது.

" பான்மருண் மருப்பி னுரல்புரை பாவடி
யீர்நறுங் கமழ்கடாஅத் தினம்பிரி யொருத்த
லாறுகடி கொள்ளும் வேறுபுலம் படர்ந்து "

—கலி. 21.

பால்போன்ற வெண்மையான கொம்பும் உரல் போன்ற பாவும் அடியையும் கொண்ட மதம் பொழி யும் இனத்தைப் பிரிந்த ஒருத்தல் யானை என்று கலித் தொகை கூறுவது கவனிக்கத்தக்கது. இந்த ஒருத்தல் யானைக் கூட்டத்தில் சேருவதாகக் கூறும்போது யானைக் கூட்டத்தைப் பாதுகாக்கவோ, பெண்யானை யைப் பாதுகாக்கவோ கூடியதாகக் கூறியிருப்பதையும் நோக்கவேண்டும்.

" இனந்தலைத் தரூஉ மெறுழ்கிளர் முன்பின்
வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத்துப்
பொறிநுதற் பொலிந்த வயக்களிற் றொருத்தல்
இரும்பிணர்த் தடக்கையின் ஏமுறத் தழுவக்
கடுஞ்சூன் மடப்பிடி ஒடுங்குஞ் சாரல் "

—அகம், 78.

அகநானூற்றில் நடுங்கும் மடப்பிடியைத் தழுவிப் பாது காப்புத் தந்த வலிமிகுந்த பெரிய களிற்றொருத்தல் 'இனந்தலைத் தரூஉம்' என்று கூறப்பட்டுள்ளது. இனத் தில் சேருவதையே கூறியிருப்பதைக் காணலாம். 'தலைத்தரூஉம்' என்ற சொல் முன்னால் பிரிந்த ஒருத்தல் திரும்பிச் சேர்ந்ததையே குறிக்கின்றது.

" சொல்ல வல்லிற்றும் இலனே அல்லாந்
தினந்தீர் களிற்றிற் பெயர்ந்தோன் இன்றும்
தோலாவா றில்லை தோழிநாஞ் சென்மோ "

—அகம், 32.

பிரிந்து சென்ற தலைவன் திரும்பவும் தலைவியை நாடி வீட்டிற்கு வந்ததற்கு இனத்தில் நீர்ந்த களிறு திரும்ப வும் இனத்தில் கூடியதை ஒப்பிட்டு அகநானூறு கூறு வதைக் கவனிக்க வேண்டும். நிரையில் (Herd) பிரிந்த தனித்த யானையையும், திரும்பவும் இனத்தில் சேர்ந்த

யானையையும் தெளிவாகச் சங்கநூல்கள் கூறியிருப்பது அரிய வியப்பான செய்தியாகும். 'தீர்தல்' என்ற சொல்லாட்சியை ஏற்கனவே விளக்கியுள்ளேன். தீர்தல் நிகழ்ச்சி இனத்திலிருந்து ஆண் விலங்குகள் பிரிவதையே குறிக்கும். இனத்தில் பிரிதலும் இனத்தில் சேருதலும் யானை ஒருத்தலுக்குக் கூறப்பட்டுள்ளது. சேருவதைத் 'தலைத்தருதல்' என்றும் குறிப்பிட்டுள்ளனர். திடீர் என்று சேருவதையே இது குறிக்கும். ஒரு என்ற சொல் தனிமையென்ற பொருளிலும், ஒன்று என்ற பொருளிலும் வழங்குகின்றது. ஒருத்தல் என்ற சொல் இந்த பொருளடிப்படையில் தோன்றியிருக்கலாம். மற்றும் 'ஒரீஇ' என்ற சொல் தனியே விலகும் நிகழ்ச்சியைக் குறிக்கும். ஒருத்தல் என்ற சொல்லே அரிய பொருளுடைய சொல். இனத்தில் காணாது தனித்தேயிருக்கும் யானைக்குச் (lone bull) சங்க நூலார் வழங்கிய அழகிய ஆழம் பொதிந்த சொல் ஒருத்தலாகும்.

" வாயிழி கடாஅத்த வான்மருப் பொருத்தலோடு "

—கலி, 46.

" மிஞிறுார் கடாஅங் கரந்துவிடு கவுள
வெயில்தின வருந்திய நீடுமருப்பு ஒருத்தல் "

—அகம், 207.

" கருங்களி ஈந்தின் வெண்புறக் களரி
இடுநீறு ஆடிய கடுநடை ஒருத்தல் "

—நற்றிணை, 126.

" கல்லூர் பிழிதரும் புல்சாய் சிறுநெறிக்
காடுமீக் கூறுங் கோடேந் தொருத்தல்
ஆறுகடி கொள்ளும் அருஞ்சுரம் பணைத்தோள் "

—அகம், 65.

" புலிக்கேழ் வேங்கைப் பூஞ்சினை புலம்ப
முதல்பாய்ந் திட்ட முழுவலி யொருத்தல் "

—அகம், 22.

மேலே காட்டின பாடல்களிலும் வேறு பாடல்களிலும் சங்க நூல்களில் ஒருத்தலைப் பற்றிய செய்திகள் கூறப் பட்டுள்ளன. இந்த ஒருத்தல் எப்பொழுதும் மிகுந்த வலிமையுடையதாகவே கூறப்பட்டுள்ளது. முழு வலியையுடையதாகவும், வயக்களிறு என்றும் கூறப் பட்டுள்ளது. இதன் கொம்புகளை வலிமையானதாக வும், சிறந்த வெண்மையானதாகவும் நீண்டதாகவும் கூறியுள்ளனர். பெரும்பாலும் மதம் பொழிந்து கொண்டிருக்கும் ஒருத்தல் என்றும் கூறுவர். கடு நடையையுடையதாகும் எனவும் கூறுவர். விலங்கு நூலாரும் இந்தத் தனியானைகள் மிகப் பெரிதாகவும் வலிமையுடையதாகவும் இருக்குமென்று கூறுவர். நிரையில் உள்ள முதன்மையான பெரிய ஆண்யானையை (Herd bull) அண்ணல் என்றும் வயக்களிறு என்றும் பெருங் களிறு என்றும் கூறுவர். ஒருத்தலை மலையாளத் தில் ஒற்றை யானை, ஒற்றையன் என்று கூறுவர். இதற்கு மிகவும் அஞ்சுவர். இந்த ஒற்றை யானைகளில் ஒற்றைக் கொம்பன் யானை மிகவும் வலிமை மிக்கது என்று கருதுகின்றனர். இந்த ஒற்றைக் கொம்பன் யானையைப்பற்றி ஒரு குறிப்பு சங்க நூல்களில் வருகின்றது.

" கடாஅங் கழீஇய கதனடங்கி யானைத்
தடவுநிலை யொருகோட் டன்ன
ஒன்றிலங் கருவிய குன்றிறந் தோரே "

—நற்றிணை, 18.

ஒரு கொம்புடைய யானையென்றும் அது வளர்ந்திருந்த தாகவும் கூறியுள்ளனர். இதை இலங்கையில் தெய்வத் தன்மை வாய்ந்ததாகக் கருதுவர்.

யானையின் காதல் வாழ்க்கையை ஆராய்ந்து எழுதி யுள்ளனர். இனஞ் சேரும்போது ஆண்யானை பெண் யானையிடம் மிக அன்பாக நடந்து கொள்ளும். பெண் யானைக்காக ஆண் யானைகள் தமக்குள் போரிடுவ துண்டு. போரில் தோற்ற ஆண்யானை 'ஒற்றையன் யானையாக' மாறி விடுவதுண்டு. ஆண்யானைகள் போரிடும்போது மிகக் கடுமையாகத் தலையை முட்டித் துதிக்கையை வளைத்துப் பலமணி நேரம் போரிடும். இக் காட்சியைக் காட்டில் காண்பது மிக அரிது. இந்தப் பயங்கரக் காட்சியைச் சில அறிஞர்கள் கண்டு எழுதி யுள்ளனர். 'குன்றேறி யானைப்போர் கண்டற்றால்' என்று வள்ளுவரும் பாடியுள்ளார். காட்டிலே யானைப் போர் எவ்வளவு பயங்கரமென்றால் அதைக் குன்றின் மேலேறிப் பார்த்தால் பயமும் வருத்தமுமின்றிப்பார்க்க லாம் என்று கூறினர். ஆண்யானை பெண்யானையுடன் இருக்கும்போது எப்போதும் சேர்ந்தே காணப்படும். ஆண்யானையும் பெண் யானையும் துதிக்கையைத் தழுவி இன்புறும். பெண் யானைக்கு ஆண் யானை விருப்பமான உணவை எடுத்துக் கொடுத்து அன்பைக் காட்டும். (The males make passes at the females, date them regularly, shower them with little gifts, neck them outrageously and go steady with them for months. I. T. S.)

சங்க நூல்களில் ஆண்யானை பெண்யானைக்கு அன்பு பாராட்டுவதையும் பெண்யானைக்கு உணவாக யாமரத்தின் இலைகள், மூங்கில் முளைகள் ஆகிய வற்றைத் தருவதையும் பல பாடல்கள் கூறுகின்றன.

வறட்சியான பாலையில் பெண்யானைக்கு நீரைக் கையில் மொண்டு எடுத்துச்சென்ற ஆண் யானையைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. தலைவன் தலைவிக்கு அன்பு காட்டு வதை ஆண் யானை பெண்யானைக்கு அன்பு பாராட்டுவ துடன் ஒப்பிட்டுச் சங்க நூல்கள் கூறுகின்றன. மடப் பிடி தழுவிய யானை, அமர்துணை தழுவிய யானை, பிடி பசி களைந்த யானை என்றெல்லாம் ஆண் யானையின் அன்பு பாராட்டலைப் பல பாடல்களில் கூறியுள்ளனர். இவ்வளவு அன்புடன் இருந்தாலும் குட்டி ஈன்றதும் ஆண்யானை பெண்யானையைப் பிரிந்து விட்டுவிடும் என்று அறிஞர்கள் கூறுவர். குட்டி ஈன்ற பின் அன்பு குறைந்து மறைந்து விடுகின்றது.

> " துணையிற் றீர்ந்த கடுங்கண் யானை
> யணையக் கண்ட வங்குடிக் குறவர் "
>
> —நற்றிணை, 108.

நற்றிணைப் பாடல் துணையை விட்டுச் சென்ற, தீர்ந்த ஆண்யானையைப்பற்றிக் கூறுவதைக் காணலாம். பெண் யானைக்குட்டி ஈன்றதும் ஆண் யானை தன் துணையைக் கவனிப்பதில்லை. ஆனால் சங்க இலக்கியத் தில் குட்டி ஈன்ற பெண்யானைக்கு ஆண்யானை உணவு தருவதாகவும், புலி அதன் குட்டியைக் கவராது பாது காப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

> " அருவி ஆர்க்கும் பெருவரைச் சிலம்பன்
> ஈன்றணி இரும்பிடி தழீஇக் களிறுதன்
> தூங்குநடைக் குழவி துயில்புறங் காப்ப
> ஓடுங்களை புலம்பப் போகிக் கடுங்கண்
> வாள்வரி வயப்புலி கன்முழை உரறக் "
>
> — அகம். 168.

" ... ... ... ... ... ... ... சாரல்
ஈன்றுநாள் உலந்த மென்னடை மடப்பிடி
கன்றுபசி களைஇய பைங்கண் யானை
முற்று மூங்கில் முளைதரு பூட்டும் "

— அகம், 85.

அகநானூற்றில் குட்டி ஈன்ற பிடியைத் தழுவிய ஆண் யானை, குட்டி தூங்கும்போது புறத்தே புலி தன் குட்டியைக் கவராதபடி பாதுகாத்ததாகக் கூறியுள்ளதைக் காணலாம். குட்டி ஈன்ற பெண் யானைக்கும் குட்டிக்கும் பசியைப் போக்க முற்றாத மூங்கிலின் முளையைக் கொடுத்து ஊட்டும் என்று கூறியுள்ளனர்.

பெண் யானைகள் குட்டிகளை மிகவும் அன்பாகப் போற்றி வளர்க்கும் என்று அறிஞர் கூறுவர்.

" பெருங்களிறு உழுவை அட்டென இரும்பிடி
உயங்குபிணி வருத்தமொடு இயங்கல்செல் லாது
நெய்தற் பாசடை புரையும் அஞ்செவிப்
பைதலங் குழவி தழீஇ ஓய்யென
அரும்புண் ணுறுநரின் வருந்தி வைகுங்
கானக நாடற் கிதுவென யானது "

—நற்றிணை, 47.

" ஒண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் குவவடி
வெண்கோட் டியானை முழக்கிசை வெரீஇக்
கன்றொழித் தோடிய புன்தலை மடப்பிடி
கைதலை வைத்த மையல் விதுப்பொடு
கெடுமகப் பெண் டிரிற் றேரும் " —அகம், 347.

" ... ... ... ... கயவாய்க்
கன்றுடை மருங்கிற் பிடிபுணர்ந் தியலும்
வலனுயர் மருப்பின் நிலன்சேர்த் தடக்கை
அண்ணல் யானைக்கு அன்றியும் கல்மிசை "

— நற்றிணை, 194.

பெண்யானை தன் மருங்கிலேயே, தன் வயிற்றினடியி லேயே குட்டியை வைத்துப் பாதுகாப்பதாகச் சங்கநூல்கள் கூறுகின்றன. புலிக்குப் பயந்து தன் குட்டியைத் தழுவி இருக்கும் பெண்யானையைப் பற்றிக் கூறியுள்ளனர். புலிக்குப் பயந்து கன்றை வயிற்றின் பக்கம் சேர்த்து நின்ற பிடியைப் பற்றி "கன்றரைப் பட்ட கயந்தலை மடப்பிடி" என்று மலைபடுகடாம் கூறுவதைக் காணலாம். அகநானூறு 347ஆம் பாடல் வேறொரு செய்தியைக் கூறுகின்றது. புலி பாய்ந்ததைக் கண்டு ஆண்யானை முழக்கிட அதனால் பயந்து கன்றை விட்டு விட்ட பெண்யானை அதைத் தேடி அலைந்தது, குழந்தையைத் தொலைத்த தாய் தேடி அலைவது போலிருந்தது என்று கூறியுள்ளதைக் காணலாம். பெண்யானையின் தாயன்பு இதில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. பெண்யானை கன்று ஈனும் நிகழ்ச்சியை நற்றிணை 392, 397ஆம் பாடல்கள் குறிப்பாகக் கூறியுள்ளன.

பெண் யானை 16 ஆண்டிலிருந்து 20 ஆண்டு ஆகும்போது குட்டி போடத் துவக்குகின்றது. ஆண் யானை பருவத்தை அடையும்போது மதம் உண்டாகின்றது. கண்ணிற்கும் வாயிற்கும் இடையிலுள்ள சில சுரப்பிகளிலிருந்து (glands) மதம் பொழியத் துவக்குகின்றது. மதநீர் கருமையாக பிசின் போன்று இருக்கும். கன்னத்தில் பாய்ந்து வாய்க்குள்ளும் வரும். 'வாய்புகு கடாஅத்து' என்று அகம் (78), புறம் (93) கூறுவதைக் காணலாம். இதை மும்மதம் என்று பிற்காலத்தில் கூறினர். ஆனால் யானைக்கு ஓர் இடத்திலிருந்துதான் மதம் பொழிகின்றது. 'கண்ணயற் பிறந்த கவுளிழி கடாஅத்து' என்று பெருங்கதை கூறுவது பொருத்தம். சீவக சிந்தாமணியில் (2500) யானை

களின் பருவ நிலைகள் கூறப்பட்டுள்ளது. களிற்றுக் கன்றுகள் கவுளை வண்டு இகழும்படி மதமடைத்தன, பூ மதம் பொழிதற்கு நின்றன, மேகமனைய மதத்தின வாகிய நாகம் என்று கூறியுள்ளது. ஆறு வயது வரை களிற்றுக் கன்றுகளைத் தாயுடன் காணலாம். மதம் பொழிய 15, 16 ஆண்டுகள் ஆகுமென்பர். கவுளை வண்டு இகழும்படி மதமடைத்தன, 6 வயதுக்கும் 15 வயதுக்கும் உட்பட்ட களிறுகள். பூ மதம் பொழி தற்கு நின்றன, பருவமடைந்த யானைகள். பருவ மடைந்த ஓராண்டுக்குள் அடைத்திருந்த மதம் திறந்து கொண்டு பொழிகின்றது. (Musth starts during the adolescence of male elephant and first really bursts out about the year of their maturity. I. T. S.)

மேகமனைய மதத்தினவாகிய களிறுகள் ஆண்டு தோறும் மதம் பொழிவன. யானை ஏன் மதம் பொழிகின்றது என்பதை இதுவரைத் தெளிவாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. மதம் பொழிவதற்கும் இணை கூடுவதற்கும் தொடர்பு இருப்பதாக அறிஞர் கள் கூறுகின்றனர். ஆனாலும், இணைகூடும் ஆசை உண்டாவதற்கு ஆண் யானைக்கு மதம் உண்டாக வேண்டிய இன்றியமையாமை கிடையாது. மதம் உண்டாதல் புதிராகவே உள்ளது. யாதாகிலும் நோயால் ஏற்படலாம் என்று சில அறிஞர்கள் கருது கின்றனர். பெண் யானைகளுடன் நெருங்கி வாழும் போது ஆண் யானைகளுக்கு மதம் உண்டாவது மிகுதி என்று சிலர் கருதுகின்றனர். சங்க இலக்கியத்தில் யானை மதம் பொழிதலைப் பல பாடல்கள் கூறுகின் றன. யானையின் மதம் நாறுவதாகவும் வண்டுகள் அந்த நாற்றத்தால் மொய்ப்பதாகவும் கூறியுள்ளனர்.

ஒற்றையனுக இருக்கும் யானையையும் மதம் பிடித்த யானையென்றே சங்கநூல்கள் கூறுகின்றன. மதம் வருவது வலிய உடற்கூறு உடைய ஆண் யானைகளுக்கே என்று அறிஞர்கள் கூறுவர். சங்க இலக்கியத்திலும் வலிய பெரிய யானைகளுக்கே மதம் பொழிவதாகக் கூறியுள்ளனர். வயக்களிறு, வான்மருப் பொருத்தல், அண்ணல் யானைகளுக்கு மதம் பொழிவதாகக் கூறியுள்ளனர்.

" மிஞிறுார் கடாஅங் கரந்துவிடு கவுள
வெயில்தின வருந்திய நீடுமருப்பு ஒருத்தல் "

—அகம், 207.

" வாயிழி கடாஅத்த வான்மருப் பொருத்தலோ
டாய்பொறி யுழுவை தாக்கிய பொழுதின் "

—கலி, 46.

" வரிஞிமி றார்க்கும் வாய்புகு கடாஅத்துப்
பொறிநுதற் பொலிந்த வயக்களிற் றொருத்தல்
இரும்பிணர்த் தடக்கையின் ஏமுறத் தழுவக்
கடுஞ்சூன் மடப்பிடி நடுங்குஞ் சாரல் "

—அகம், 78.

" கடாஅங் கழீஇய கதனடங் கியானைத்
தடவுநிலை யொருகோட் டன்ன " —நற்றிணை, 18.

" நெடுநிலை யாஅ மொற்றி நனைகவுட்
படிஞிமிறு கடியுங் களிறே "

—அகம், 59.

" படாஅப் பைங்கண் பாவடிக் கயவாய்க்
கடாஅம் மாறிய யானை போலப்
பெய்துவறி தாகிய பொங்குசெலற் கொண்மூ "

—அகம், 125.

யானையின் மதத்தைச் சங்க நூல்கள், 'கடாம்' என்று அழைத்தன. மதம் பொழிந்து நின்று போவதைக் 'கடாஅம் மாறிய' யானை என்று அகநானூறு கூறுவதைக் காணலாம். மழைமேகம் மழையைப் பெய்து வறிதாகியதுபோல யானைக்கு மதம் வற்றியது என்று கூறினர். யானை மதநீரைக் கழுவுவதாகவும் கோபம் அடங்கியதாகவும் மற்றொரு சங்கப் பாடல் கூறுகின்றது. மதம் பிடித்த காலத்தில் யானை எதிரில் எதையும் தாக்கும் குணமுடையது. பழகிய யானையாக இருந்தாலும் உடனே காலைக் கட்டி விடவேண்டும். ஆனால் சில சமயத்தில் மதம் பிடித்த யானை சோம்பலாகத் தூங்குவதுபோல் அசையாது நிற்கும். மதம் பிடிப்பது திடீரென்று உண்டாகின்றது. வறட்சிக் காலத்தின் தொடக்கத்தில் மதம் உண்டாவதாகக் கருதுகின்றனர். சங்க இலக்கியத்தில் மதம் பிடித்த யானையின் வன்முறைச் செயல்கள் பல பாடல்களில் கூறப்பட்டுள்ளது. மதம் பிடித்த யானை பைத்தியம் பிடித்தது போலிருப்பதாகவும், மயக்கமாக இருப்பது போலத் தோன்றுவதாகவும் (unbalauced or crazy) விலங்குநூலார் கூறுவர். சங்க நூல்களில் மதம் பிடித்த யானை பைத்தியம் பிடித்தது போலிருப்பதாகவும், மயக்கம் கொண்டதாகவும் கருதினர். 'மையல் வேழம்' (குறிஞ்சிப் பாட்டு 165) 'மையல் யானை' (புறம் 261) 'மையலங்கடாஅஞ் செருக்கி' (அகம் 307) என்று மதம் பிடித்த யானையின் பைத்திய நிலையைக் கூறினர். நிறையழிந்த யானையென்றும் கூறுவர். மதம் பிடித்த பழகிய யானையை நீர்த் துறைக்குக் கூட்டிச் செல்லுங்கால் பறையடித்துச் செல்வர் என்று கலித்தொகை கூறுகின்றது.

" நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க வென்ன "

—கலி, 56.

" இருதலைப் பணில மார்ப்பச் சினஞ்சிறந்து
கோலோர்க் கொன்று மேலோர் வீசி
மென்பிணி வன்றொடர் பேணாது காழ்சாய்த்துக் "

—மதுரைக் காஞ்சி, 380 - 382.

மதயானை அங்குசக்கோல் போடுவாரைக் கொன்று மேலே அமர்ந்திருப்போரை வீசி எறிந்து சங்கிலியை அறுத்துச் சென்றதாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். மதயானைகள் காட்டில் மரங்களைச் சாய்ப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. மதம் பிடித்த யானை 'உயங்கித் தேம்புவதாகவும்' கூறப்பட்டுள்ளது. உயங்குவது என்பது சோம்பி அசைந்து போவது.

" கொன்றுசினந் தணியாது வென்றுமுரண் சாம்பாது
இரும்பிடித் தொழுதியின் இனந்தலை மயங்காது
பெரும்பெயற் கடாஅஞ் செருக்கி வளமலை
இருங்களிறு இயல்வரும் பெருங்காட்டு இயவின் "

—அகம், 298.

" படாஅப் பைங்கண் பாவடிக் கயவாய்க்
கடாஅம் மாறிய யானை போலப் "

—அகம், 125.

" பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம்புகல் மழகளி றுறங்கும் நாடன் "

—அகம், 102.

மேலே காட்டிய பாடல்களில் மதம் பிடித்த களிற்றின் செயலற்றமை கூறப்பட்டுள்ளது. கொன்று சினத்தைத்

தணித்துக் கொள்ளாது, வென்று பகைமையைக் குறைக்காது பெண்யானைக் கூட்டத்துட் சென்று சேராது மிகுதியாகப் பெய்யும் மதத்தால் செருக்கி நடக்கும் களிறு என்று அகப்பாடல் கூறுவது அழகிய விளக்கமாகும். தூங்காத கண்ணோடு, பசியுடைய கண்ணோடு மதயானை இருந்ததாகவும் கூறியுள்ளார். குறத்தி பாடிய குறிஞ்சிப் பாட்டைக் கேளாது நின்ற இடத்தில் நின்று இடம் பெயராது தூங்காத கண்கள் தூங்கினாற்போலத் தூங்கும்களிறு என்று அகநானூறு 102ஆம் பாடல் கூறுவது, அறிஞர்கள் கூறுவதுடன் மிகவும் ஒத்திருப்பதைக் காணலாம். இங்கு 'குரலுங் கொள்ளாது' என்பதற்கு, தினைக்கதிரைத் தின்னாது என்று வலிந்து பொருள் கூறக் காரணமில்லை. குறிஞ்சிப் பாட்டைக் கேட்டு அசையாதிருந்ததாகக் கூறினதும் இவ்விடத்தில் பொருத்தமாயில்லை. மதமயக்கில் கேட்காது அசையாது தூங்காமல் தூங்கி இருந்ததாகவே கொள்ள வேண்டும். (During the period in musth the elephant appears in a drowsy, contemplative state standing solitary and quiescent by some pool or stream. I. T. S.)

மதம் பிடிக்கும் காரணத்தை இன்னும் அறிவியல் ஆராய்ச்சியில் கண்டு பிடிக்கவில்லை. ஆனால் யானையின் மதம் சில செடிகொடிகளின் இலைகளைத் தின்பதால் மிகுதியாகின்றது என்று சங்க நூலாரும் பிற்கால நூலாசிரியர்களும் கருதினர்.

" காமங் காம மென்ப காமம்
அணங்கும் பிணியு மன்றே நுணங்கிக்
கடுத்தலுந் தணிதலு மின்றே யானை
குளகுமென் றாண்மதம் போலப்
பாணியு முடைத்தது காணுநர்ப் பெறினே "

—குறுந்தொகை. 136.

குறுந்தொகை 136ஆம் பாட்டு யானைக்கு மதம் உண்டாகும் செய்தியை மனிதருக்குக் காதல் உண்டாகும் செய்தியோடு அழகாக ஒத்திட்டுக் கூறியுள்ளது. காமம் காமம் என்று புரியாதபடி சொல்கின்றார்கள். அது தொடங்குவதுமில்லை; தணிவதுமில்லை; வருத்துவதும் அன்று; நோயும் அன்று. குளகு மென்ற யானைக்கு மதம் வருவது போல பாணி யுடைத்துக் காணுநர்ப் பெறினே என்று கூறப்பட்டுள்ளது. யானைக்கு மதம் திடீரென்று தோன்றி மறைவது போன்றே காதலும் தோன்றி மறைகின்றது. காதல் எப்போது தோன்றும் என்று சொல்ல முடியாது. காமம் யானை மதத்தைப் போல வருத்துவதென்றோ நோய் என்றோ கூறமுடியாது. குளகுமென்ற யானைக்கு மதமிகுவது போல காதலுண்டாகக் காணவேண்டியவரைக் கண்டால் காதல் உண்டாகும் என்று கூறியுள்ளார். (A bull in musth if placed in the presence of a female who is in heat will copulate with her in which case he will usually grow quieter and seem partially redeemed of his madness—R. C.)

மதம் பிடித்த யானையருகில் பெண்யானையைக் கொண்டு வந்தால் அதனுடன் ஆண்யானை புணர்ந்து மதந்தணியும் என்று அறிஞர் கூறியதைக் கவனிக்க வேண்டும். மதயானை பெண்யானையுடன் புணர்வதைப் பற்றியும் சங்க நூல்களில் (அகம் 78) கூறப்பட்டுள்ளது. காணுநர்ப்பெறின் காதல் தோன்றுவது போல மதம் உண்டாவதும் பெண்யானையின் நெருக்கத்தால் மிகுவதாகவும் பெண்யானையைப் புணர்வதால் குறைவதாகவும் சங்க நூலார் கருதினரென்று தோன்றுகின்றது. சில அறிஞர்கள் இந்தக் கருத்தையும் ஓரளவு கொண்டுள்ளனர். (Frequently male elephant in

close contact with females during this period developed this condition and further observation have led to the conclusion that musth while undeniably having some bearing on sex was due to a specific disorder which appeared to attract some of these animals during this period much as flu will attack human at certain seasons during the year. I. T. S.) மதம் உண்டாவதற்குக் காரணம் கூறமுடியாதது போல, காதல் உண்டாவதற்கும் காரணம் கூற முடியாது என்பதைக் குறுந்தொகைப் பாடல் குறிப்பாக உணர்த்துகின்றது.

சீவக சிந்தாமணியில் (750) வரும் ஒரு செய்தி ஆராய்தற்குரியது.

> " நாறு மும் மதத்தி னாலே நாகத்தை யிரிக்கும் நாக
> மாறிய சினத்த தன்றி யதிங்கத்தின் கவளங் கொண்டால்
> வேறுநீர் நினைந்து காணீர் யாவர்க்கும் விடுக்க லாகா
> நாறித்தே னொழுகுங் கோதை நம்பிக்கு மன்ன
> ளென்றான் "

அதிங்கம் என்ற செடியைக் கவளமாகக் கொண்டால் யானை மதம் மிகும். அச்சமயத்தில் தன்னுடைய இனமான பிற களிற்றுயானைகளை வென்று விரட்டும். அதன் துதிக்கையில் உள்ள அதிங்கத்தழையை யாரும் கவரமுடியாது. அதுபோலச் சீவகனிடம் அகப்பட்ட கந்தர்வதத்தையை யாரும் கவரமுடியாது என்று கூறப்பட்டுள்ளது. அதிங்கம் என்பது குன்றி மணிச் செடியாகும். வடநாட்டில் இதே அதிங்கம் மற்றொரு செடியாகும். இது தமிழ் நாட்டில் கிடையாது. குன்றி மணித்தழையைத் தின்ற யானைக்கு மதம் மிகுமா என்பது ஆராயவேண்டிய செய்தி. குன்றி மணிச்செடி இனிய சுவை யுடையது என்பது உண்மையே. ஆனால்

அதிங்கம் (liquorice) என்பது குன்றிமணியைக் குறிக்கின்றதா என்பது தெளிவாகத் தெரியவேண்டும். மதம் பொழியும் காலத்தில் அஃது ஊறும் சுரப்பியில் சில செடி கொடிகளின் தழையை வைத்து முதிய யானைகள் அழுத்துவதாகச் சில யானைப் பாகர்கள் கூறுவதாக அறிஞர் சாண்டெர்சன் கூறுகின்றார். ஆனால் இது மதத்தைக் குறைப்பதற்கும் நிறுத்துவதற்கும் செய்வதாகக் கூறினர். ஆனால் தமிழிலக்கியத்தில் யானைக்கு சில செடிகளைத் தின்றால் மதம் கூடுதலாகும் என்று வரும் செய்தி ஆராயத்தக்கது. மற்றும் யானையின் மதம் ஏழிலைப் பாலை மரம் பூத்திருக்கும் போது நாறுவதுபோல நாறும் என்று பிற்கால உரையாசிரியர்கள் கூறினர். 'பூநாறு கடாஅஞ் செருக்கி' என்ற மணிமேகலை வரிக்கு (19 : 22) உரையெழுதும்போது இவ்வாறு கூறியுள்ளார். ஏழிலைப் பாலையின் பூ (Alstonia Scholaris) இரவில் பூக்கும் போது காமத்தைத் தூண்டும் என்று மலையாளத்தில் ஒரு கருத்து நிலவுகின்றது. பூத்த ஏழிலைப்பாலை மரத்தை மதம் பிடித்த யானை பொடிப்பொடியாக்கியதாகக் கம்பராமாயணம் (வரை. 7) கூறுகின்றது. பூத்த ஏழிலைப்பாலை மரம் மதம் பிடித்த யானைபோல நாறினதால் தனது எதிரி என்று எண்ணித் தாக்கியதாகக் கூறப்பட்டிருக்கின்றது. புறப்பொருள் வெண்பாமாலையில் யானை வென்றியில் ஒரு செய்தி வருகின்றது. இரண்டு யானைகளைப் போர்க்கு விடுங்கால் யானைக்கு அதிமதுரத்தின் கவளம் தரப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. 'கஞ்சுகம் வாய்த்த கவளம்' என்று கூறப்படுவது, அட்டிமதுரத் தழையுணவையே யாகும் என்று உரையினால் தெரிகின்றது. அதிமதுரத்தை யானைக்குக் கொடுத்து மதம் மிகுதியா

கச் செய்து யானைகளைப் போரிடச்செய்து வெற்றி தோல்வி பார்த்தனர் என்பது தெளிவாகின்றது. இச் செய்தியும் ஆராய வேண்டிய அரிய செய்தியாகும். யானை மதம் வேங்கைப் பூப்போல நாறும் என்று கம்பர் இன்னொரு பாட்டில் கூறுகின்றார்.

காட்டில் காணப்படும் தனித்த ஆண்யானைகள் சில சூழ்நிலைகளில் மனிதர்களைக் கண்டால் கொல்லும் ஆட்கொல்லியாக (Rogue) மாறுவதுண்டு. இத்தகைய ஆட்கொல்லி யானைகளைப் பற்றியும் சங்க நூல்களில் செய்திகள் வருகின்றன. ஆட்கொல்லியாக ஒற்றை யானைகள் மாறுவதற்குத் தெளிவான காரணங்கள் தெரியவில்லை. ஆனால் பல அறிஞர்களும் யானை ஆட்கொல்லியாக மாறக் காரணம் மனிதர்களே என்று கூறுகின்றனர். யானையை அம்பெய்தோ துப்பாக்கியால் சுட்டோ உடலில் காயமேற்படுத்துகின்றார்கள். காயத்தினாலும் புண்களாலும் வருந்தும் யானை மனிதரைக் கண்டால் தாக்கும் ஆட்கொல்லியாக மாறுகின்றது. இதைப் பழந்தமிழர் தெரிந்திருந்தனரெனக் கருதலாம். 'மறைந்தியானை பாய்ச்சி விடல்' என்ற முதுமொழி பழமொழி நானூற்றில் (62) உள்ளது. யானையை மதம்படுமாறு செய்தலுக்கு யானைமேல் அம்பைப் பாய்ச்சி விடுதல் என்று பொருள் கூறப்பட்டுள்ளது. யானையைக் காயப்படுத்திவிட்டால் அஃது ஆட்கொல்லியாக மாறுமென்பதை உணர்ந்திருந்தனர். சங்க இலக்கியத்தில் ஆட்கொல்லி யானையாகக் கூறப்படுவது தனித்த களிற்று யானையே யாகும். (The lone-bull elephant may not be dubbed a 'rogue' just because he is alone. Deliberate killer elephants are as rare as true man eating tigers. yet they do exist.................The real killers

seem to be individuals that are utterly soured on life and that will attack other elephants as readily as they will man. They also lash out at little in offensive animals and rip up palm trees. I. T. S.) சங்க இலக்கியத்தில் ஆட் கொல்லிகளாக 'ஒருத்தல்' யானைகளையே கூறியிருப்பதைக் காணலாம். ஆட்கொல்லி யானை பனை, ஈச்சம் முதலிய மரங்களைக் கூடத் தாக்கிப் பிடுங்கி யெறியும் என்று சாண்டெர்சன் கூறுவதைக் கவனிக்கவேண்டும்.

'பைங்காய் நல்லிடம் ஒரீஇய செங்காய்க்
கருங்களி ஈந்தின் வெண்புறக் களரி
இடுநீறு ஆடிய கடுநடை ஒருத்தல்
ஆட்பெறல் நசைஇ நாட்சுரம் விலங்கித்
துனைதரும் வம்பலர்க் காணாது அச்சினம்
பனைக்கான்று ஆறும் பாழ்நாட்டு அத்தம்''

—நற்றிணை, 126.

ஆட்களைக் கொல்ல விரும்பிப் பகற் காலத்தில் காட்டு வழியில் குறுக்கே நின்று பார்த்த யானை புதியதாக யாரும் வருவதைக் காணாமல் பனைமரத்தை வேரோடு பிடுங்கிச் சினத்தைத் தணித்தது என்று நற்றிணைப் பாடல் கூறியதைக் காணலாம். அறிஞர் சாண்டெர்சன் சொன்ன செய்தியை அப்படியே கூறியுள்ளதைப் போற்றாமல் இருக்க முடியாது. ஆட்கொல்லியானை மிகவும் தந்திரத்துடன் ஆட்கள் நடமாடும் காட்டுவழியில் பதுங்கியிருந்து ஆட்களைக் கொல்லுவதைப் பலர் கண்டுள்ளனர்.

''முனைபாழ் பட்ட ஆங்கண் நாட்பார்த்துக்
கொலைவல் யானை சுரங்கடி கொள்ளும்''

—அகம், 247.

"சிறுகண் யானை யாள்வீழ்த்துத் திரிதரு
நீளிடை யருஞ்சுர மென்பநம்."

—ஐங்குறுநூறு, 314.

பகல் காலத்திலேயே காட்டுவழியில் ஆளைப்பார்த்துக் கொண்டு காத்திருப்பதையும், திரிந்து கொண்டிருப்பதையும் சங்க நூல்கள் கூறுவதைக் காணலாம். இது போன்ற செய்திகளை வேட்டையாளரும் காட்டில் வாழும் மக்களும் கூறியுள்ளனர். யானைகள் ஓரிடத்தில் சேரும் என்ற கருத்து பன்னிரு பாட்டியலில் கூறப்பட்டுள்ளது. யானை சேருமிடம் என்பதைப் பற்றி யானை நூலில் கூறியிருந்தனர். ஒரு யானை சென்றவிடத்தில் பல யானைகள் சேரும் என்று கருதினர்.

யானைகள் பெரிய உடலுள்ள விலங்குகளாயினும் செங்குத்தான சரிவுகளிலும் மலைகளிலும் (Mountains and Steep slopes) நடந்து உணவு தேடிச் செல்லும் என்று அறிஞர்கள் கூறுவர். செங்குத்தான உச்சிச் சரிவுகளிலும், பாறை இடுக்குகளிலும் மலைகளிலும் யானைகள் தங்கள் முன்னங் கால்களால் நிலத்தைத் தட்டிப் பார்த்துத் தடங் கண்டுபிடித்துச் செல்லும் என்று கூறியுள்ளனர். யானைகள் குன்றுகளிலும் காடுகளிலும் போகும்போது உண்டுபடுத்தும் தடங்கள் மிக எளிதானதாகவும் இரண்டு இடங்களுக்குக் குறுக்கே குறைந்த தூரமுடையதாகவும் இருக்குமென்று கூறுவர். காட்டில் வாழும் பழங்குடிகள் யானைப் பாதைகளையே காடுகளில் செல்வதற்கு வழியாகப் பயன்படுத்துகின்றனர். மற்றக் காட்டு விலங்குகளும் இந்தத் தடங்களைப் பயன்படுத்துகின்றன.

காட்டு விலங்குகள் செல்லும் பாதையை 'மானதர்' என்று சங்க நூல்கள் அழைக்கும். யானை உண்டாக்கிய பாதையை 'களிறதர்' அதாவது யானைவழி என்று சங்க நூல்கள் வழங்கின. இந்தப் பாதையைப் பிற்காலத்தில் 'யானைத் தண்டம்' (Elephant path) என்று அழைத்தனர்.

"கான நாடன் வரூஉம் யானைக்
கயிற்றுப்புறத் தன்ன கன்மிசைச் சிறுநெறி"

—அகம், 128.

"பாடின பாணிக் கேற்ப நாடொறுங்
களிறு வழங்கதர்க் கானத் தல்கி"

—பொருநராற்றுப்படை, 48-49.

"கான விருப்பை வேனல் வெண்பூ
வளிபொரு நெடுஞ்சினை யுகுத்தலி னூர்கழல்பு
களிறுவழங்கு சிறுநெறி புதையத் தாஅம்"

—குறுந்தொகை, 329.

"மூங்கைமேய் பெருங்களிறு வழங்கும்
மலைமுதல் அடுக்கத்த சிறுகல் ஆறே."

—அகம், 148.

"பசும்பழப் பலவின் கானம் வெம்பி
விசும்புகண் அழிய வேனில் நீடிக்
கயங்கண் அற்ற கல்லோங்கு வைப்பின்
நாறுயிர் மடப்பிடி தழீஇ வேறுநாட்டு
விழவுப்படர் மள்ளரின் முடிவெடுத் துயிரிக்
களிறதர்ப் படுத்த கல்லுயர் கவாஅன்
வெவ்வரை அத்தஞ் சுட்டிப் பையென"

—அகம், 189.

"கான மானதர் யானையும் வழங்கும்"

—அகம், 318.

"வரைசெறி சிறுநெறி நிரைபுடன் செல்லுங்
கான யானை கவினழி குன்றம்"

—அகம், 128.

"நீர்நசைக்கு ஊக்கிய உயவல் யானை
வேனிற் குன்றத்து வெவ்வரைக் கவாஅன்
நிலஞ்செலச் செல்லாக் கயந்தலைக் குழவி"

—நற்றிணை, 171.

களிறு வழங்கதர், களிறுவழங்கு சிறுநெறி என்று அழைக்கப்படுவதைக் காணலாம். மழையின்றிக் குளங்கள் வற்றிய காலத்தில் நீரைத் தேடிச் சென்ற களிறு செங்குத்தான மலையில் வழியை உண்டாக்கியதாக அகநானூறு கூறுவதைக் கவனிக்க வேண்டும். யானை உணவைத் தேடி மலைகளில், மலையடுக்கங்களில் செறிந்த சிறு நெறியை உண்டாக்கிக் கூட்டமாகச் செல்லும் என்று அகநானூறு (148,123) கூறுவதையும் கவனிக்க வேண்டும். யானை உண்டாக்கிய பாதைகளை மலைகளைக் கடக்க மக்கள் பயன்படுத்தியதையும் அகப் பாடல்கள் கூறுகின்றன.

(At first many of these chiffs appeared inaccessible to any animal but a baboon) but we found that elephants had made regular paths zigzagging backward and forward like a road on a swiss mounain.................Elephants make such difficult paths with great skill on dangerous ledge and steep slopes.)

கலித்தொகை 50ஆம் பாட்டு யானையானது மலைமே லேறி வருடை (Tahr) ஏறும் இடத்தில் தூங்கும் என்று கூறுவது காணலாம்.

"மூங்கில் மிசைந்த முழந்தா ளிரும்பிடி
தூங்கிலை வாழை நளிபுக்கு ஞாங்கர்

வருடை மடமறி யூர்விடைத் துஞ்சும்
இருள் தூங்கு சோலை இலங்குநீர் வெற்ப''

—கலி. 50.

வருடையாடு (Nilgris Tahr) மலை உச்சிகளிலும் செங்குத்தான சரிவுகளிலும் 4,000 அடிக்குமேல் காணப்படும் என்பது ஏற்கனவே விளக்கப்பட்டது. வருடையாடு இருக்கும் உயரத்தில் யானை சென்றதாகவும் புலி ஊறு செய்யாத இடத்தில் தூங்கியதாகவும் கலித்தொகை கூறியது அரிய செய்தியாகும். கயிற்றைப் போட்டாற் போன்று யானை சிறிய வழியைச் செய்ததாக அகநானூறு கூறுகின்றது. நற்றிணையில் (171) நீருக்காக அலைந்த யானையுடன் குன்றின் வெம்பிய செங்குத்தான சரிவில் யானைக்குட்டி நடக்க முடியாது மேய்ச்சலுக்கு வந்த மாடுகளுடன் ஊர்க்குள் வந்ததாகக் கூறியிருப்பதைக் காணலாம். ஆனாலும் யானை 5 அடி ஆழமுள்ள பள்ளத்தைக் கடக்க முடியாது.

''துளிபெயல் பொறித்த புள்ளித் தொல்கரை
பொருதிரை கிவப்பின் வரும்யாறு அஞ்சுவல்
ஈர்ங்குரல் உருமின் ஆர்கலி நல்லேறு
பாம்புகவின் அழிக்கும் ஓங்குவரை பொத்தி
மையின் மடப்பிடி இனையக்
கையூன்றுபு இழிதரு களிறெறிந் தன்றே''

—நற்றிணை, 114.

'' மடவோள் தழீஇய விறலோன் மார்பில்
புன்தலைப் புதல்வன் ஊர்பிழிந் தாங்குக்
கடுஞ்சூல் மடப்பிடி தழீஇய வெண்கோட்டு
இனஞ்சால் வேழங் கன்றூர்பு இழிதரப்
பள்ளி கொள்ளும் பனிச்சுர நீந்தி ''

—அகம், 971.

மேலே காட்டிய நற்றிணைப் பாடலில் ஆற்றின் கரையைக் கடக்கக் களிறு கையைத் தரையில் ஊன்றி இறங்கினதாகக் கூறப்பட்டுள்ளது. அகநானூறு 197ஆம் பாட்டில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த யானைமேலே யானைக் குட்டி ஏறி இறங்கியதாகக் கூறியதைக் கவனிக்கலாம். யானைக்குட்டி ஏறி இறங்கியது, தகப்பன் மார்பில் மகன் ஏறி இறங்கியது போல இருந்ததாகக் கூறியதைக் கவனிக்கலாம். யானைக்குட்டி ஆற்றில் நீந்தும்போது தாயானையின் முதுகின்மேல் ஏறிக்கொண்டு செல்லும் என்று அறிஞர் கூறுவர். அதேபோன்ற குட்டியானையின் செய்கை அகநானூற்றில் கூறப்பட்டுள்ளது.

யானைகள் நடக்கும்போது கப்பல் கடலில் செல்வது போல ஆடி அசைந்து நடப்பதாக அறிஞர்கள் எழுதியுள்ளனர். Nautical gait என்று இதைக் கூறுவர். இதை நன்கு உணர்ந்தே சங்கப் புலவர்களும் நிலத்தில் செல்லும் யானையைக் கடலில் செல்லும் கப்பலுக்கு ஒப்பிட்டுக் கூறினர்.

"நெடுஞ் சுழிப்பட்ட நாவாய் போல" —மதுரைக்-379.

"கந்துநீத் துழிதருங் கடாஅ யானையும்"

—மதுரைக்-383

"மீன்கொள் பரதவர் கொடுந்திமில் நளிசுடர்
வான்தோய் புணரி மிசைக்கண் டாங்கு
மேவரத் தோன்றும் யாஅவுயர் நனந்தலை
உயவல் யானை வெரிநுச்சென் றன்ன
கல்லூர் பிழிதரும் புல்சாய் சிறுநெறிக்
காடுமீக் கூறுங் கோடேந் தொருத்தல்"

—அகம், 65.

கடலிற் செல்லும் நாவாய்க்கும், திமிலுக்கும் நிலத்தில் நடக்கும் யானையை ஒப்பிட்டிருப்பதைக் காணலாம். களிறுக்கும் கப்பலுக்கும் அடிப்படையான ஒப்புமை அவைகளின் இயக்கத்தில் இருப்பதை உரையாசிரியர்கள் காட்டவில்லை. அகநானூற்றுப் பாடலில் (65) யானை குன்றில் ஏறி இறங்கியது பரதவருடைய திமில் போலத் தோன்றிற்று என்று கூறப்பட்டுள்ளது. (The nautical roll of a big bull going away slightly uphill is most pronounced. I. T.S.) யானை குன்றின் மேல் ஏறிய வழி வாடிவற்றியயானையின் முதுகுபோல இருபக்கமும் மிகச் சரிந்து குறுகியதாக இருந்ததாகக் கூறியுள்ளதையும் காணலாம்.

யானைகள் வாழும் இடங்களையும் நாடுகளையும் சங்க நூல்கள் கூறுகின்றன. குடநாடும், ஆய்நாடும் ஏழில்மலை நாடும், பழனி மலையும் யானைகள் நிறைந்தன என்று கூறப்பட்டுள்ளன. இக்காலத்திலும் இந்த நாடுகளில் உள்ள காடுகளில்தான் யானைகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. சங்க நூல்களில் ‘உம்பற்காடு’ என்ற காட்டில் யானைகள் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இஃது ஆனைமலைக்காடென்று கருதலாம். வேங்கடத்தைச் சுற்றிய காடுகளில் புல்லியின் நாட்டில், தொண்டையர் நாட்டில் யானைகள் மிகுதியாக இருந்ததாகச் சங்க நூல்கள் கூறுகின்றன. பிற்காலத்தில் நாலாயிர திவ்ய பிரபந்தமும் இதையே கூறியுள்ளது. சேரநாட்டிலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைக்காடுகளில் இன்றும் யானைகள் மிகுதியாக உள்ளன. ‘வேழமுடைத்து மலைநாடு’ என்று அவ்வையார் பிற்காலத்தில் பாடினதாகக் கூறுவர். ஆய் நாடான திருவாங்கூர் நாட்டில் யானைகள் மிகுத்துக் காணப்பட்டதால் ஆய்

நாட்டு யானை ஒரு சூலில் பத்துக் கன்றுகள் ஈனுமோ என்று ஒரு புலவர் கேட்டார். மயிலைநாதர் எழுதிய நன்னூல் உரையில் வெளிநாட்டு யானைகள் கூறப் பட்டுள்ளதைக் காணலாம். பர்மா நாட்டு 'அருமண வன்' யானையையும் 'பப்பூவன்' யானையையும் பற்றிக் கூறியிருப்பது மிக அரிய செய்தியாகும். பெய ரியலில் ஆண்பாற் பெயரை விளக்கும் போது "இக் குதிரை 'சோனகன்', இவ்வியானை 'பப்பூவன்' என்பன வும் அருமணவன், சாத்தன், கொற்றன் ... ..." என்று மயிலைநாதர் உரைகூறிச் சென்றார். சோனகர்கள் குதிரையைத் தமிழ் நாட்டில் இறக்குமதி செய்ததால் 'சோனகன்' என்று கூறியது பொருத்தமே. யானை யைப் 'பப்பூவன்' என்று கூறியதையும் கவனிக்க வேண்டும். இந்தப் பெயர் 'பப்பரவன்' என்று உரையில் கூறப்பட்டாலும் பிரதிபேதமாகக் காட்டப்பட்டப் 'பப்பூவன்' என்ற பெயரே பொருந்தியதாகும். உலகத் தில் ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் இரு முக்கிய சாதி யானைகள் இருப்பதாக அறிஞர் கருதுகின்றனர். மலேயாவிலும், ஈழத்திலும், சுமத்ராவிலும் யானைகள் வேறானவை என்று கருதினர். மற்ற நாடுகளில் உள்ள யானைகள் இவைகளில் சிறிது வேறானவை என்றும் கருதுகின்றனர். பர்மாவில் ஒரு சாதியும் போர்னியோத் தீவுகளில் மற்றொரு சாதியும் உண்டு எனக் கருதுபவர் களும் உண்டு. இந்தச் சாதியானைகளில் ஈழத்து யானை யையும் பர்மா நாட்டு யானையையும் தமிழர் தெரிந்தே இருந்தனர். பர்மா யானையை 'அருமணவன்' என்று அழைத்தனர். அருமணநாடு பர்மாவைக் குறிக்கும். நியூகினித் தீவில் 'பப்புவா' (Papua) என்ற பகுதி இன்றும் அதே பெயரில் உள்ளது. இந்த நாட்டில்

உள்ள யானையை 'பப்பூவன்' என்று மயிலைநாதர் கூறினர். உலகத்திலுள்ள யானைகளில் இந்தியா ஆப்பிரிக்கா பெரிய யானைகளைத் தவிர்த்துக் குள்ள யானைகள், (Loxodent cyclotis) ஆப்பிரிக்காவில் ஒரு பகுதியிலும் (Bush country) சுமத்ரா, ஜாவாக் காடுகளிலும் திமோர் நாட்டுக்குப் பக்கத்திலுள்ள நியூகினித் தீவின் காடுகளிலும் வாழ்வதாகக் கூறுகின்றனர். இவை $6\frac{1}{2}$அடி உயரமிருப்பதாகக் கூறுவர். (The little forest loxodent on the other hand seems truly —though anybody would have hard time proving it — to be divided into a few distinct geographical races. There appear to be such races. (1) in the Guinea coast forest block (2) from the niger to Ubangi—Congo (3) in the inner Congo basin. I, T. S. நியூகினித் தீவுகளில் ஒரு தனி வகையான யானை இருப்பதைச் சாண்டெர்சன் கூறியது போல மயிலைநாதர் நியூகினித் தீவின் 'பப்புவா (papua) பகுதியில் இருந்த 'பப்பூவன்' என்ற யானையைக் கூறியிருப்பது வியப்பைத் தருகின்றது. திமோர் தீவுக்கு அருகில் பப்பூவா நாடு உள்ளது. திமோர் நாட்டுப் பச்சைக் கருப்பூரத்தை 'தீமுரன் பச்சை' என்று சிலப்பதிகார உரை கூறுகின்றது. ஜாவா, சுமத்ரா, திமோர் முதலிய தீவுகளுடன் பழந்தமிழர்க்கு வணிகத் தொடர்பு இருந்தது. இராசேந்திர சோழன் ஜாவா, சுமத்ரா தீவுகளை வென்றவன். ஆதலின் 'பப்புவா' நாட்டின் யானையைத் தமிழ் நாட்டிற்குப் பழந்தமிழர் கொண்டு வந்திருப்பர். ஆதலின் பர்மா, பப்புவா நாட்டு யானைகளைத் தமிழர் நன்கு தெரிந்திருந்தனர் என்று கருதவேண்டும்.

" பல்வகைத் தேயம் கொல்களிறு பிறக்கும்
பல்வகைத் தேயமாம் என்மனூர் புலவர் "

—பன்னிருபாட்டியல் - இனவியல் 165.

பன்னிரு பாட்டியலில் களிறுகள் பிறக்கும் தேயம் பல என்று கூறி அதை விளக்கச் சீனம் போன்ற பல காடுகள் தேய மெனப்பட்டன என்று கூறியதைக் காணலாம். ஆதலின் பிறநாட்டு யானைகளையும் தமிழர் கண்டறிந்தனர் என்பது தெளிவு. யானை நூல் என்ற நூல் தமிழ் நாட்டில் வழங்கி அழிந்து போனதாகத் தெரிகின்றது. அதில் 'யானையரசன்' இலக்கணம் கூறப்பட்டுள்ளது என்று உரையாசிரியர்கள் கூறியுள்ளனர். பன்னிரு பாட்டியலில் வரும் யானை வாழும் மூவகை நிலம், மூவகை அளவு, பல்வகைத் தேயம், உறுப்பு, வருணம், வயது முதலியவை யானை நூலில் இருந்து எடுக்கப்பட்டிருக்கலாம். நூற்களில் யானையின் உயரம், நீளம், உடலின் சுற்றளவு அளவினிற் குறையாதிருப்பது நிறைவு என்று கூறினர். யானைகளின் வயது இவ்வளவு என்றும் கூறினர். யானைகளில் பலவகைச் சாதியும் குணங்களும் நடைகளும் கூறியுள்ளனர். அவைகளில் சில பொருந்தும். சில பொருந்தா. ஆனால் யானை நூல் நமக்குக் கிடைக்காதது பெரும் இழப்பாகும். நிகண்டுகளில் யானையின் உடலில் 25 பாகங்களுக்கு மேல் தனிப்பெயர்கள் காணப்படுகின்றன. இதிலிருந்து யானையைப் பற்றி எந்த அளவு தெரிந்திருந்தனர் என்பது தெளிவாகின்றது.

சங்க காலத்திலேயே யானைகளைப் பிடித்துப் பழக்கும் வழக்கம் இருந்தது. யானைகளைக் குழியில் பிடிக்கும் வழக்கு சங்க காலத்தில் இருந்தது.

" மரப்பயம்பின் பொறைபோற்றது
நீடுகுழி யகப்பட்ட
பீடுடைய வெறும்முன்பிற்
கோடுமுற்றிய கொல்களிறு
நிலைகலங்கக் குழிகொன்று
கிளைபுகலத் தலைக்கூடியாங்கு "

—புறம், 17.

" குழியிடைக் கொண்ட கன்றுடைப் பெருநிரை
பிடிபடு பூசலின் எய்தா தொழியக் "

—அகம், 211.

" திருவீழ் மார்பின் தென்னவன் மறவன்
குழியிற் கொண்ட மராஅ யானை
மொழியின் உணர்த்துஞ் சிறுவரை யல்லது "

—அகம், 13.

" கயந்தலை மடப்பிடி பயம்பிற் பட்டெனக்
களிறுவிளிப் படுத்த கம்பலை வெரீஇ "

—அகம், 165.

யானைகள் வழக்கமாக போகும் தடங்களில் குழிகளைத் தோண்டி அதன்மேல் மரம் செடி கொடிகளைப் போட்டு மூடிவைத்து விடுவர். இரவில் அவ்வழியே வரும் யானைகளின் கனத்தை மரம் செடிகள் தாங்காது ஒடிந்து விழ யானை குழியில் விழுந்துவிடும். இந்தக் குழிகளைப் 'பயம்பு' என்றனர். இந்த யானைகளைப் பழக்கப் படுத்த வேண்டும். குழியிலே கொண்ட 'மராஅயானையை' மொழியினால் உணர்த்துஞ் சிறு காலம் என்று அகநானூறு கூறுவதைக் காணலாம். பழகாத யானை மனிதர் சொல்லும் கட்டளைகளைப் புரிந்து கொள்ளப் பழக்கப் படுத்துவதையே அகநானூறு கூறுகின்றது. சில சமயங்களில் குழியைக்

குத்தி மண்ணைத் தூர்த்து வெளியேறி விடும் என்று சங்கநூல்கள் கூறுவதும் உண்மையே. அருங்கரையைக் கவியக் குத்தித் தப்பித்ததாகப் பட்டினப்பாலை கூறும். யானையைப் பிடிக்க வேறு இரண்டு முறைகள் உள்ளன என்று அறிஞர்கள் கூறுவர். மைசூரில் 'கெட்டா' (Khedda) என்ற முறைப்படி யானைகளைப் பிடிப்பார்கள். யானைகளை மூன்று பக்கமும் சுவர் போல மூங்கில்களால் எழுப்பிய ஓர் இடத்தில் துரத்தி பழகிய யானைகளைக் கொண்டு கயிற்றால் கட்டிப்பிடிப்பது இம்முறையாகும். 'கெட்டா' முறையை 'வாரி' என்று அழைத்தனரென்று தெரிகின்றது.

வாரிக் கொள்ளா வரைமருள் வேழம்

— மலைபடுகடாம். 572.

" உருத்தெழு பெரும்படைக் கொடுபுறங் காட்டிப்
படைத்தொழு வாரியி னிடைப்படப் புகுத்தி
உருள்படி போல வருட காரன்
போக்கிட மின்றி யாப்புற வடைப்ப."

— பெருங்கதை 3-27: 53-56.

" கணிகை யிரும்பிடி யணிநல நசைஇயப்
பிடியொடு போந்த பெருங்களிற் றொருத்தலை
வீசிய விளையர் வாரியுள் வளைஇ
மதந்தலை நெருங்கி மதக்களிறு வலியாக்
கதந்தலை யழியக் கந்தொ டார்த்துச்
சாம கீத வோசையிற் றணிக்கும்
நூலறி பாகரொடு மேலறிவு கொள்ளா"

— பெருங்கதை 1: 44: 58 - 64.

வாரி கொள்ளா வேழம் என்பதற்கு நச்சினார்க்கினியர் யானை படுகின்ற இடத்தில் கொள்ளாத யானை

கள் என்று உரை கூறினதைக் காணலாம். அதாவது வாரி என்ற முறையால் கவரப்படாது போரில் கிடைத்த யானைகள் என்று கூறுகிறார் யானையை அகப்படுத்துமிடம் என்று உரை கூறப்பட்டதையும் காணலாம். யானையைக் 'கெட்டா' (Khedda) முறைப் படி அகப்படுத்துவதையே வாரியென்று அழைத்தன ரென்பது, 'போக்கிட மின்றி யாப்புற வடைப்ப' என்று கூறியதனாலும், 'வாரியினிடைபடப் புகுத்தி' என்றதனாலும் தெளிவாகத் தெரிகின்றது. போக இடமின்றி கட்டி வளைத்துப் பிடிக்குமிடத்தில் இடைப் படப் புகுத்திப் பிடித்தல் 'கெட்டா.' முறையில்தான் உண்டு என்பதை அறியவேண்டும். இந்த முறைப்படி ஓர் போர் முறையும் (encircling) இருந்த தென்று பெருங்கதை கூறுகின்றது. பெண்யானையை வைத் துப் பிடிபட்ட யானைகளைப் பழக்குவதுண்டு என்பதை யும் பெருங்கதை கூறுகின்றது. வாரியுள் வளைத்த யானைகளைத் தூணில் கட்டி சாமகீதம் பாடி அதன் சினத்தைத் தணித்தனர். யானை நூலறிந்த பாகரைப் பற்றிக் கூறியுள்ளனர். இதிலிருந்து 'கெட்டா' (Khedda) முறையும் பழந்தமிழர்க்குத் தெரிந்ததே யென்பது தெளிவு. இதுவே இப்போது யானை பிடிக்கச் சிறந்த முறையாகக் கருதப்படுகின்றது. வாரி முறையினால் கூடுதலான யானைகளைப் பிடிக்கலாம் என்று தெரிகின்றது. மற்றொரு முறை பெண் யானை யைக் காட்டில் விட்டு அதன் மேல் பாகன் மறைந்து கொண்டு காட்டில் ஆண்யானையை அதனருகில் வரும் படி செய்து பிடிப்பதாகும். பழகாத ஆண்யானை பழகிய பெண்யானையை விரும்பி வருங்கால் யானையின் காலில் கயிறை வீசிக் கட்டிப் பிடித்து விடும் இந்த

முறையைச் சங்க காலத்தில் ஆரியர் கையாண்டதாகத் தெரிகின்றது.

"... ... ... ஆரியர்
பிடிபயின்று தரூஉம் பெருங்களிறு போலத்
தோள்கந் தாகக் கூந்தலிற் பிணித்தவன்
மார்புகடி கொள்ளே னாயின் ஆர்வுற்று"

— அகம், 276.

ஆரியர்கள் பிடியானையைப் போக விட்டுக் களிற்று யானையுடன் பழகவைத்துப் பிடிப்பதையே அகநானூறு கூறுகின்றது. பரத்தையரைத் தேடிச் சென்ற தலைவனைப் பிடித்துத் தன்னுடன் வைத்துக் கொள்வதாகத் தலைவி கூறுமிடத்தில் வந்த இந்த உவமை மிக அழகும் பொருட்சிறப்பும் உடையது.

"வயல்விளை யின்குள குண்ணாது நுதறுடைத்
தயினுனை மருப்பிற் றங் கையிடைக் கொண்டெனக்
கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா விளைஞர் கவளங் கைப்பக்"

— முல்லைப்பாட்டு 33 - 36.

முல்லைப்பாட்டில் வடமொழியால் யானையைப் பயிற்றுவிக்கும் பழக்கம் கூறப்பட்டுள்ளது. ஆதலின ஆரியர்களுக்கென பிடிக்கும் முறையும் பயிற்றும் முறையும் இருந்ததெனத் தெரிகின்றது. சீவக சிந்தாமணி யானைப் பேச்சென சில சொற்களைக் கூறுகின்றது. உரையில் யானைப் பேச்சான வடமொழிகளாவன 'அப்புது அப்புது, அது, ஆது, ஐஐ' என்பன என்று கூறப்பட்டுள்ளது. ஆனல் கூறப்பட்ட சொற்கள் வடமொழியாகக் காணேம். கன்னட மொழிபோலத் தோற்றுகின்றது. மலைபடுகடாத்தில்

'விரவு மொழி பயிற்றும் பாகர்' (327) என்று கூறினதால் அக்காலத்தில் பாகர்கள் தமிழ் ஆரியம் முதலிய பல மொழிகளை விரவி யானைப் பேச்சாகக் கையாண்டனர் என்று கருதலாம். யானையைப் பயிற்றுவிக்கப் பயன் படுத்திய கருவியைக் 'கவைமுள்' என்றனர். இது அங்குசம் எனப்படும். யானையைப் பழக்குதலை வணக்குதல் என்று சீவகசிந்தாமணி கூறுகின்றது. வேலைகளைச் செய்யப் பயிற்றுவிக்கப் பட்ட யானையை 'வினைநவின்ற' யானை என்று மதுரைக்காஞ்சி கூறுகின்றது. பழகிய யானைகளைக் கொண்டு பழகாத யானைகளைப் பிடிப்பதும் பழக்குவதும் இன்றுமுள்ள வழக்கம். 'யானையால் யானையாத்தற்று' என்று வள்ளுவர் கூறுவதும் இதைக் கருதியாகும். யானைகளைச் சங்ககாலத்திலேயே போர்க்கும் மற்ற தொழில்களுக்கும் பழக்கினரென்று தெரிகின்றது. பழகிய யானையை ஒரு சிறு பிள்ளைகூட நடத்தலாம் என்பதை அறிஞர்கள் கூறுவர்.

"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல"

— புறம், 94.

பழகிய யானை சிறுவர்களுக்கும் கீழ்ப் படிவதை புறநானூறு கூறுகின்றது. யானைகளைப் பெரிதும் போர்க்குப் பயன்படுத்தினர். யானையின் கொம்பால் கோட்டைக் கதவுகளை இடித்துப் புகுதல் பழக்கம். யானைமேல் ஏறி மன்னர்கள் போர் புரிவது பாடப்பட்டுள்ளது. போர் யானையைக் கொல்வது பெருவீரமாகக் கருதப்பட்டது. யானைகள் தலையால் கோட்டைக் கதவைத் தள்ளாதிருக்க கூர் முனையுள்ள கொண்டை

பொருத்தப்பட்ட, அயில்கதவம் அக்காலத்திலேயே இருந்தது. யானைகள் நடக்காதபடி இரும்பு முட்கள் தரையில் போடப்பட்டன. யானை நெருஞ்சி என்பன நெருஞ்சி முள்போல் இரும்பால் செய்தவை. முனை தேயாதிருக்க யானையின் கொம்புக்கு இரும்பால் பூண் போடப்பட்டது. யானைகளுக்கு சங்க காலத்தில் நெய் சேர்த்த சோறும், கரும்பும், நெற்கதிரும் சேர்த்துக் கொடுத்ததைச் சிலபாடல்கள் கூறுகின்றன. யானைக்கு நெய்மிதிகவளம் தருவதைச்சிலபாடல்கள்கூறுகின்றன. யானையை நன்றாகக் குளிப்பாட்டும் வழக்கம் இருந்தது. மாசறக்கழுவிய யானைபோல என்று பல பாடல்கள் கூறுகின்றன. குளிப்பாட்டி நெய்பூசி பளபளவென ஆக்கினர் என்று தெரிகின்றது. நெய்யணி குஞ்சரம், என்று கார் நாற்பது (128) கூறுவதைக் காணலாம். யானைகளை நடத்தபாகர்களும் வினைஞர்களும் இருந்தனர். யானையை அணி செய்யும் வழக்கமும் இருந்தது. யானையின் நெற்றியில் பொன்னால் செய்த ஓடை என்ற அணிகலத்தைப் பூட்டினர் இரட்டை மணி ஒலிக்க யானை நடப்பது வழக்கம். மதம்பிடித்த யானைக்குமுன் பறையடித்துச் செல்வது வழக்கமாயிருந்தது. பெண் யானையைப் பழக்கி அதன்மேல் ஏறி மகளிர் ஊர்ந்து வெற்றிகொள்வதைப் பிடி வென்றி என்றனர்.

யானையை வேட்டையாடும் வழக்கமும் இருந்தது. 'யானை வேட்டுவன் யானையும் பெறுமே என்று புறநானூறு கூவதைக் காணலாம். யானையை வேட்டையாடுவது அரியசெயலாகக் கருதினர். அக்காலம் அம்பாலும் ஈட்டியாலும் வேட்டையாடினர். தற்காலம் துப்பாக்கியால் வேட்டை யாடுகின்றனர்.

" களிற்றுமுகந் திறந்த கவுளுடைப் பகழி
வால்வினைப் புகவிற் கானவர் தங்கை"

— அகம், 132.

" வரிமாண் நோன்ஞாண் வன்சிலைக் கொளீஇ
அருநிறத் தழுத்திய அம்பினர் பலருடன்
அண்ணல் யானை வெண்கோடு கொண்டு"

— அகம், 61.

" விரிமலர் மராஅம் பொருந்திக் கோறெரிந்து
வரிநுதல் யானை யருநிறத் தழுத்தி" —அகம், 172.

யானையைப் பலர் சூழ்ந்து அம்பெய்து கொல்லும் வழக்கம் இருந்ததை அகநானூறு கூறுகின்றது. யானையைக் கொல்ல வேண்டுமானால் அதன் நெற்றியில் மூளையை ஊறு செய்யும் படியோ அல்லது பக்கவாட்டத்தில் அதன் நெஞ்சை ஊடுருவும் படியோ துப்பாக்கியால் சுடவேண்டுமென்பர். வேறு இடங்களில் சுட்டால் யானை உடனே சாகாது. இந்த இடங்களில் அம்பெய்து கொல்லும் வழக்கம் சங்க காலத்திலேயே இருந்தது. யானை முகத்தைப் பிளந்த அம்பு என்று கூறுவதைக் காணலாம். யானையை உயிர் வாங்கும் இடத்தில் அழுத்திய அம்பு என்று கூறுவதையும் காணலாம். அருநிறம் என்று கூறுவது யானையின் உயிர்நிலை இடங்களையே யாகும். யானையைக் கொல்வது அதன் கொம்புக்காகவே. சங்க காலத்தில் மழவர்களும் சில குறிஞ்சிநில மக்களும் யானை இறைச்சியைத் தின்றனர்.

" புலிதொலைத் துணீஇய பெருங்களிற் றொழியூன்
கலிகெழு மழவர் காழ்கோத் தொழித்ததை
ஞெலிகோற் சிறுதீ மாட்டி யொலிதிரைக்"

—அகம், 114.

" வெண்கோடு கொண்டு வியலறை வைப்பவும்
பச்சூன் கெண்டி வள்ளுகிர் முணக்கவும்
மறுகுதொறு புலாவஞ் சிறுகுடி அரவம்"

— நற்றிணை. 114.

புலிகொன்று விட்ட யானையின் தசையை வற்றலாக்கி உண்டதாகக் கூறுவதைக் காணலாம். ஆப்பிரிக்காவில் இன்றும் யானையின் இறைச்சியைத் தின்பது வழக்கம். யானையின் கொம்பை எடுத்து பாறையில் காயவைத்தலும் குடிசையருகில் தரையில் ஊன்றி உலரவைப்பதும் சங்கநூல்களில் கூறப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் பிடியானையையும் கன்றையும் பரிசிலாகக் கொடுப்பது அரசர்களுடைய பழக்கமாக இருந்தது. யானையைப் போர்க்குப் பயன்படுத்தும் முக்கிய விலங்காகக் கருதினர். யானையாற் பகைவருடைய உண்ணும் நீர் தரும் காப்புடைய பொய்கையைக் கலக்குவித்து நீரைக் கெடுக்கும் வழக்கம் இருந்தது. யானைக் கால்களால் மிதிப்பித்துப் பகைவருடைய உயிரை வாங்குவதும் வழக்கமாயிருந்தது. யானையில் ஆண் யானையைக் களிறென்றனர். பெண்யானையைப் பிடியென்றனர். களிறு என்றசொல் ஆண்யானையையும். ஆண்பன்றியையும் குறித்து வழங்கும் என்று மரபியல் கூறுகின்றது. யானைக்கும் பன்றிக்கும் ஓர் ஒற்றுமை கண்டதாலே களிறு என்ற பெயர் இரண்டுக்கும் வழங்கிற்று. இந்தப் புறஒற்றுமையைக் கண்டு சில நூற்றாண்டுகளுக்கு முன் அறிஞர்கள் கூடப் பன்றிக்கும் யானைக்கும் நெருங்கிய உறவு இருப்பதாகக் கருதினர். ஆனால் பல ஆராய்ச்சிக்குப் பிறகு இது தவறு என்று கண்டனர். மலையாளத்தில் பிடி என்ற சொல்



யானை



பன்மயிர்ப் பேரெலி



கருப்பை



வெள்ளெலி



வெளில்



தீர்வை



கீரி



கவரிமா



வாவல்

ஒட்டகம் பன்றி ஆகியவைகளின் பெண்ணினத்திற்கு வழங்குவதையும் காணலாம். சங்க காலத்தில் யானையைக் குஞ்சரம் என்ற பெயராலும், வாரணம் என்ற பெயராலும் அழைத்தனர். தடுத்தலின் பெயர் வாரணம், வாரணை என்று நிகண்டுகள் கூறுகின்றன. வாரணம் என்ற யானைக்குள்ள தடைகளைத் தடுத்தல் குணத்தால் ஏற்பட்டதாகத் தெரிகின்றது. மனிதர்கள் அணைகட்டும் கரைகளைக் காட்டில் யானைகள் தகர்த்து விடும். தந்திக் கம்பங்கள், வேலிகள் முதலிய தடைகளைக் காட்டானைகள் நீக்கி விடுவதை அறிஞர்கள் கண்டுள்ளனர். (A raiding herd can do an enormous amount of damage in a very short time, not only to the crops but to telegraph poles, dam embankments and similar obstructions which may get their way. At time they will try to prevent the construction of a fence. R. C.)

'களிறு பொரக் கரைந்த கயவாய்க் குண்டுசுனைக் கருங்கற் கான் யாறு' என்று நற்றிணை கூறுவதிலிருந்து யானை மணற்கரைகளைக் கரைத்துத் தகர்க்கும் குணமுடையது என்பது தெரிகின்றது.

" வெண்கோடு நயந்த அன்பில் கானவர்
இகழ்ந்தியங் கியவின் அகழ்ந்த குழிசெத்
திருங்களிற் றினநிரை தூர்க்கும்"

— அகம், 21.

அகநானூறு குழிகளைத் தூர்க்கும் யானையைப் பற்றிக் கூறுவதைக் காணலாம்.

" பல்லோர் துஞ்சு நள்ளென் யாமத்
துரவுக்களிறு போல்வந் திரவுக்கதவ முயறல்"

— குறுந்தொகை, 244.

நடுஇரவில் தலைவன் வீட்டுக் கதவைத் தட்டுதல் யானை வீட்டுக்கதவைத் தட்டுதல் போல இருந்தது என்று குறுந்தொகை கூறுவதைக் காணலாம். காட்டில் கூடாரமடித்தால் யானை உள்ளே என்ன இருக்கின்றது என்று ஆராய்வதற்காக நீக்கிப் பார்க்கும் என்று அறிஞர்கள் கூறுவர்.

யானையைப் பற்றி ஒரு கற்பனைச் செய்தியையும் சங்க நூல்களில் காண்கிறோம். ஆளி யென்ற விலங்கு யானையின் கொம்பைப் பிடுங்கிக் குருத்தைத் தின்பதாகக் கூறியுள்ளனர். ஆளியின் குட்டி பால் குடிக்கும் இளம் வயதில் முதல் வேட்டையிலேயே களிற்றைக் கொன்றதாகக் கூறப்பட்டுள்ளது. இந்தச் செய்திகள் அகநானூற்றில் (78, 252 381) பொருநராற்றுப்படையில் (139-142) சொல்லப்பட்டிருக்கின்றன. ஆளி என்பது புலியன்று; சிங்கமும் அன்று சங்க இலக்கியத்தில் சிங்கத்தை 'உழுவை' என்பர். சிங்கத்தைப்பற்றிய விளக்கம் சங்க இலக்கியத்தில் கிடையாது. செவிவழிச் செய்தியாகச் சிங்கத்தைப் பற்றிக் கூறியதைக் காண்கிறோம். ஆனால் ஆளியைப் பற்றி விளக்கமாகக் கூறியிருப்பதால் சிங்கத்தைவிட ஆளியைப்பற்றிய செய்திகளை நன்கு தெரிந்திருந்தனர். பிற்காலத்தில் ஆளியி னுருவம் கோயிற்சிலைகளில் காணப்படுகின்றது. இஃது உண்மையான விலங்கைக் காட்டாது கலப்பான கற்பனை விலங்காக (Hybrid animal) உள்ளது. இந்தக் கற்பனை விலங்கைப் போன்றதே அகநானூறு கூறும் ஆளி இருக்குமென்று தெரிகின்றது. இது நிகண்டுகளில் 'அத்தியாளி' என்று கூறப்படும். யானை யாளிக்கு மறுபெயர்களாக அறுகு, பூட்கை என்ற பெயர்களும் உள்ளன. இச்செய்தி வடநாட்டில் இருந்து வந்திருக்க

லாம். சிலர் யாளியைச் சிங்கமெனக் கொண்டனர். யானையின் தும்பிக்கையுடைய முகமும் சிங்கத்தின் உடலும் கொண்ட கலப்பு விலங்காக அத்தியாளியைக் கல்லில் காட்டியுள்ளனர்.

யானையைப் பிற்காலத்தில் பல பெயர்களால் அழைத்தனர். அதன் நடை காரணமாகத் 'தூங்கல்' என்றனர். தொங்கிய வாயினால் 'நால்வாய்' என்றனர். மதமா, மந்தமா, மருண்மா, மதகயம் என்பன மதம் பொழிவதன் காரணமாக வந்தன. கறையடி, பொங்கடி என்று அதன் கால் அமைப்புக் காரணமாகக் கூறினர். பூட்கை என்று அதன் தொளையுள்ள கையின் காரணமாகக் கூறினர். அதன் பரிய உருவை நோக்கி உவா, உம்பல் என்றனர். வேழக் கரும்பை விரும்பி உண்பதால் வேழம் என்றனர். கரிய நிறம் காரணமாகக் கரி என்றனர். யானைக்குப் பல பெயர்கள் இருப்பதிலிருந்தும் யானையின் உறுப்புகள் பலவற்றிற்கும் தனிப்பெயர்கள் இருப்பதிலிருந்தும் யானையைப் பற்றிப் பழந்தமிழர் மிக நன்றாக ஆராய்ந்திருந்தனர் என்பது தெளிவு. யானையைப்பற்றி உண்மையான பல அரிய நுண்ணிய செய்திகளையும் சங்க நூல்கள் கூறுவதைக் காணும்போது இந்த வியப்புக்குரிய விலங்கைச் சங்கப் புலவர்கள் நன்றாக ஆராய்ந்து பாடிச் சென்றனர் என்று கொள்ள வேண்டும்.

யானையைக் காட்டும் உருவ எழுத்துக்கள் மொகெஞ்சதரோ, அரப்பா நாகரிகத்தில் காணப்படுகின்றன. சீனாவில் மிகப் பழங்காலத்தில் எழுதப்பட்ட உருவ எழுத்துக்களில் யானையை நமது தமிழ் எழுத்தான 'யா'வைத் தலைகீழாக எழுதினாற் போல

எழுதினர். அதில் நான்கு கால்களும் துதிக்கையும் வாலும் காட்டப்பட ஆறு கோடுகள் ஓர் உடலுடன் சேர்க்கப்பட்டு எழுதப்பட்டன. யானையைக் குறிக்கும் உருவ எழுத்துப் பின்னர் சீனமொழியில் முதல் அமைச்சரைக் குறித்து வழங்கிற்று. தமிழிலும் 'யா' என்ற எழுத்து தலைகீழாக எழுதப்பட்டால் யானையின் உருவெழுத்துப் போலத் தோன்றுவதைக் காணலாம். யானைக்கும் ஆண், ஆண்டவன் என்ற சொற்களுக்கும் தொடர்பிருப்பதாகக் கருதலாம். ஆதலின் யானையைக் குறிக்கும் எகிப்தியச் சொல்லாகிய (Abu) 'ஆப்' (Aub) என்பதும் யானையென்ற தமிழ்ச்சொல்லும் மிகப் பழங்காலத்திலே தொடர்புடைய வரலாறு உடையவை என்று கருதலாம்.

## கஉ. நீர்நாய்

(The Smooth Indian Otter)

சங்க நூல்களில் நீர்நாய் என்ெருரு விலங்குபற்றிச் சில செய்திகள் காணப்படுகின்றன. தற்காலத்தில் நீர்நிலைகளில் மிக அரிதாகக் காணப்படும் இவ் விலங்கை சங்கப் புலவர்கள் கண்டு தெளிந்து பாடியுள்ளனர் நீர்நாய் வாழும் சூழ்நிலையைச் சங்கப் புலவர்கள் தெளிவாக விலங்கு நூலார் கூறியதை ஒத்தே சொல்லியிருப்பது வியப்பைத் தருகின்றது. சங்க நூல்களில் கீழ்வரும் பாடல்கள் நீர்நாயைப்பற்றிக் கூறுகின்றன.

"சுடர்ப்பூந் தாமரை நீர்முதிர் பழனத்
தந்தூம்பு வள்ளை யாய்கொடி மயக்கி
வாளை மேய்ந்த வள்ளெயிற்று நீர்நாய்
முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியும்"

—அகம், 6.

"குழற்காற் சேம்பின் கொழுமடல் அகலிலைப்
பாசிப் பரப்பிற் பறழொடு வதிந்த
உண்ணாப் பிணவின் உயக்கஞ் சொலிய
நாளிரை தரீஇய எழுந்த நீர்நாய்
வாளையோ டுழப்பத் துறைகலுழ்ந் தமையின்"

—அகம், 336.

"பொய்கை நீர்நாய்ப் புலவுநாறு இரும்போத்து
வாளை நாளிரை தேரும் ஊர"

—அகம், 391

"ஒண்செங் குரலித் தண்கயங் கலங்கி
வாளை நீர்நாய் நாளிரை பெறூஉம்
தெருஅ வுறையரா வராஅலின் மயங்கி

—புறம், 283.

" அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்
வாளை நாளிரை பெறூஉ மூரன் "

—குறுந்தொகை, 364.

" பொய்கைப் பள்ளிப் புலவுநாறு நீர்நாய்
வாளை நாளிரை பெறூஉ மூர "

—ஐங்குறுநூறு, 63.

" நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதின் அல்லி அயலிதழ் புரையும் "

—அகம், 16.

" அருளா யாகலோ கொடிதே இருங்கழிக்
குருளை நீர்நாய் கொழுமீன் மாந்தித்
தில்லையம் பொதும்பிற் பள்ளி கொள்ளும் "

—நற்றிணை, 195.

" வாளை வாளின் பிறழ நாளும்
பொய்கை நீர்நாய் வைகுதுயில் ஏற்கும்."

—நற்றிணை, 390

மேலே காட்டப்பட்ட பாடல்களில் கூறப்பட்ட நீர்நாய் எது என்பதை ஆராயவேண்டும். விலங்கு நூலார் மூன்று வகை நீர் நாய்கள் (The common otter, The smooth Indian otter, The clawless otter) இந்தியாவில் காணப்படுவதாகக் கூறுவர். இந்த மூன்றுவகை நீர் நாய்களும் தென்னிந்தியாவிலும் காணப் படுகின்றன. குளிர் மிகுந்த மலைகளில் குன்றுகளில் உள்ள அருவி களிலும் குளங்களிலும் ஒருவகை நீர்நாய் (The common otter) வாழ்கின்றது. சங்க நூல்களில் கூறப்பட்டது இதுவன்று நகமற்ற நீர்நாய் (clawless otter) உண்டு. இது நீலகிரி, குடகு, பழனி மலைகளில் உயர்ந்த சரிவு களில் காணப்படுகின்றது. இதுவும் சங்க நூல்கள்

கூறும் நீர்நாய் அன்று. இவை இரண்டையும் விலக்கினால் மிஞ்சுவது விலங்கு நூலார் கூறும் 'The smooth Indian otter' என்பதே. இதுவே சங்க நூல்கள் கூறும் நீர் நாய் என்று உறுதியாகக் கூறமுடியும். இந்த நீர் நாய்தான் சமவெளிப் பகுதிகளில் காணப்படுவது. சங்கநூல்களில் பேசப்படும் நீர்நாய் மருதம், நெய்தல் சூழ்நிலையான சமவெளிப் பகுதியிலேதான் கூறப்படுகின்றது. மலையிலும் குன்றிலும் கூறப்படவில்லை. இந்த நீர்நாய் விலங்குநூலார் கண்டபடி பெரிய ஏரி, குளங்களின் கரைகளிலும், ஆறு, கால்வாய் அருகிலேயும் வாழ்வது. (It lives by the margins of lakes and streams and in large tanks and canals. It hunts in flooded fields, creeks and estuaries and on the coast goes out after fish into the open sea) மற்றும் நீர்நிறைந்த வயல்களிலும் கடற்கழிலும் வாழும் இயல்புடையது. இந்த நீர்நாய் வாழும் இடங்களாக விலங்கு நூலார் கூறிய இடங்களிலேயே வாழ்வதாகச் சங்கப் புலவர்கள் நீர்நாயைக் குறித்துப் பாடியிருப்பதால் சங்க நூல்கள் கூறியுள்ள நீர்நாய் 'The smooth Indian otter' என்பதில் ஐயமில்லை. சிலப்பதிகாரத்தில் இந்த நீர் நாயைப் பற்றிக் கூறும் செய்தி இன்னும் உறுதிப்படுத்துகிறது. பொய்கையிலே (lakes) இது வாழ்வதை அகம். 386, 336 ஆம் பாடல்களும், ஐங்குறுநூறு 63, நற்றிணை 390 ஆகிய பாடல்களும் குறிப்பிடுகின்றன. தண்கயத்தில் (Tank) காணப்பட்டதைப் புறம் - 283 ஆம் பாடல் குறிப்பிடுகின்றது.

" வயலுழைப் படர்குவ மெனினே யாங்குப்
பூநா நிலஞ்சிப் பொருகய லோட்டி
நீர்நாய் கௌவிய நெடும்புற வாளை

மலங்குமிளிர் செறுவின் விலங்கப் பாயிற்
கலங்கலு மூண்டிக் காரிகை யாங்கண் "

:—சிலப்பதிகாரம் - நாடுகாண்காதை - 77 - 81

குளத்திலே கயல்மீன்களை ஓட்டிய நீர்நாய் வாளை மீனைக் கௌவ அது தப்பித்து மலங்கு துள்ளுகின்ற வயலில் குறுக்கே பாயும் என்று சிலம்பு கூறுவது கண்டதைக் கண்டவாறே கூறும் செய்தியாகத் தெரிகின்றது. நீர்நாய் கயல்மீனையும் வாளை மீனையும் வேட்டையாடுவது கண்டு கண்ணகி கலங்குவாள் என்று கூறப்பட்டுள்ளது. 'நீர்முதிர் பழனத்துள்' நீர்நாய் இருந்ததை அகம். (6) கூறுவதையும் நோக்குக. நீர் நிறைந்த வயல்களில் காணப்பட்டதாகக் 'கூறியிருப்பதால் இந்த நீர்நாய் The smooth Indian otter எனக் கொள்வது உறுதியாகிறது. மற்றும் நற்றிணை 193ஆம் பாடலில் நீர்நாய் கடற்கழியில் இருப்பது கூறப்பட்டுள்ளது. தில்லை மரம் கடற்கரையிலே சூழலாக வளரும் குறுமரம் என்பர். இம்மரம் பிற விடங்களில் இயற்கையில் கூட்டமாகக் காணமுடியாது. நீர்நாய் தில்லையம்பொதும்பில் தூங்கினதாகக் கூறியதிலிருந்து கடற்கரையிலும் காணப்பட்டமையைச் சங்கப் புலவர்கள் தெரிந்தனர் என்பது தெளிவு. இச்செய்தியும் விலங்கு நூலார் இந் நீர்நாய் வாழும் இடத்தைப் பற்றிக் கூறியதோடு ஒத்துள்ளது. நீர்நாய் வாழும் சூழ்நிலை சங்கநூல்களில் மிகப் பொருத்தமாக உண்மையாக விளக்கப்பட்டுள்ளது. "முள்ளரைப் பிரம்பின் மூதரிலும்," "அரிற்பவர்ப் பிரம்பிலும்' வாழ்வதாகக் கூறப்பட்டுள்ளது. பிரம்பு, நாணல் முதலியவற்றில் நீர் நாய் வாழ்வதாக விலங்கு நூலார் கூறுவர். தாமரை, வள்ளைக் கொடிகளிலும், சேம்பின்

அகலிலை அமைத்த பாசிப்பரப்பிலும் வாழ்ந்ததாகச் சங்கநூல்கள் கூறுகின்றன. மற்றும் செங்குரலிக் கொடியின் சூழலிலும், தில்லையம்பொதும்பிலும் வாழ்ந்ததாகக் கூறுவதும் உண்மையான செய்தியே. சங்கப்புலவர்கள் எந்த அளவு நுட்பமாக இன்ன செடியில் இன்ன கொடியில் இன்ன சூழலில் வாழ்ந்தது என்று நேரில் கண்டு மறவாமல் கூறியது மிகவும் போற்றற்குரியது. விலங்கு நூலாரும் நீர்நாய் செடிகளின் வேர்த்தூறுகளிலும் பிரம்புத் தூறுகளிலும். கொடிப்புதர்களிலும் வாழ்வதாகக் கூறுகின்றனர். (lairs in hollows beneath the roots of trees growing by the water's edge or lies up in reed beds, fern brakes and bushes)

நீர்நாயின் உடல் வழுவழுப்பாய்க் கருமையாய் (Darkish), கருமை கலந்த செம்பழுப்பாய் இருக்குமென்பர். இதையே 'இரும்போத்து' என்று அகம் கூறுகிறது. இதன் முகத்தில் மூக்கிற்கு மேலே மயிர் ஒரு வரியாக ஒழுங்காகக் காணப்படும். இதன் காரணமாகவே 'வரிப்புற நீர்நாய்' என்று குறுந்தொகை கூறுகின்றது. மீனைக் கடித்துத் தின்னவும், வழுக்கித் தப்பாமல் கௌவவும் நீர் நாய்க்குத் தடித்த கூரிய பல் உண்டு. "வெள்ளெயிற்று நீர்நாய்" என்று அகம் கூறும். நீர்நாய் இரவுக் காலத்தில் மீன்களை வேட்டையாடும் விடிய விடிய மீன்களை வேட்டையாடும் என்று விலங்கு நூலார் கூறுவர். இரவுக் காலத்தில் நீர்நாய் மீன் வேட்டை யாடுவதைக் காண்பது எளிதல்லவானதால் சங்கப் புலவர்கள் விடியற்காலையில் இவை வேட்டையாடுவதையே பெரும்பாலும் கண்டிருக்கின்றனர். அதன் காரணமாகவே 'வாளை நாளிரை' நீர்நாய் பெறுவதாக எல்லாப் பாடல்களிலும் கூறியுள்ளனர்,

காலை உணவை நாளிரை என்றனர். வாளை மீனையே பெரிதும் உணவாக உண்டதாகச் சங்கப் புலவர்கள் கூறியது உண்மைச் செய்தி, நீர்நாய் வேட்டையாடும் போது தன் உணவுத் தேவைக்கு மீறி மீன்களைக் கொன்றுவிடும் கொடிய தன்மையுடையது. இவை கூட்டமாகவும் மீன்களை வேட்டையாடுவதுண்டு. மீன்களை வேட்டையாடும்போது நீரைக் கலக்குவ துண்டு. மீன்களை அலைக்கழிப்பதுமுண்டு. இதையே "வாளையோடு உழப்பத் துறை கலுழ்ந்தமையின்" என்று அகப்பாடல் கூறுவதை நோக்குக. "ஒண்செங் குரலித் தண்கயங் கலங்கி' என்று புறநானூறு கூறு வதைக் கவனிக்கவேண்டும். சிலப்பதிகாரத்தில் நீர் நாய் கயலை ஓட்டியதாகக் கூறுவதைக் கவனிக்க வேண்டும். நீர்நாய் வேட்டையாடும்போது உழப்பு வதும், கலக்குவதும், ஓட்டுவதும் உண்டு என்பதைச் சங்கப் புலவர்கள் நன்கு தெரிந்திருந்தனர். வாளை மீன் பிறழவும் அதை நீர்நாய் உண்டது பொய்கையில் பகலில் துயில்வதாக நற்றிணை 390ஆம் பாடல் கூறு கின்றது. பகற்காலத்தில் நீர்நாய் வெளியே வராது இருப்பதைத் தெரிந்தே பாடியுள்ளனர். நற்றிணை 195 ஆம் பாட்டிலும் நீர்நாய் மீனைத் தின்று தின்று பகலில் தூங்குவது கூறப்பட்டுள்ளது.

நீர்நாய்கள் நீர்ப்பரப்பில் வழுக்கி விளையாடுதலை (Water sliding) விலங்கு நூலறிஞர்கள் கண்டு எழுதியுள் ளனர். நீர்நாய்கள் குடும்பமாக இத்தகைய சறுக்கு விளையாட்டில் ஈடுபடுமாம். இக்காட்சி மிக அழகான தென்பர். இதே முறையான ஒருகாட்சியைக் கம்ப ராமாயணம் கூறுவது வியப்பைத் தருகின்றது.

> "வலி நடத்திய வாள் என வாளைகள்பாய
> மீலை நடத்திய திரைதொறும் உருள்வன நீர்நாய்
> கலிநடக் கழைக் கண்ணுளர் என நடம்கவின
> பொலிவு உடைத்து எனத்தேரைகள் புகழ்வன போலும்'
>
> —கம்ப - கிட் - பம்பா. 23.

திரைதொறும் உருள்வன நீர்நாய் என்றும் அக்காட்சி கழைக்கூத்தர் சறுக்குவது போலத் தேரைகள் கருதின என்று கம்பர் கூறியுள்ளதிலிருந்து நீர்நாய்களின் வழுக்கும் விளையாட்டை நன்கு தெரிந்தே கம்பர் பாடினரென்று கருதலாம்.

சங்க நூல்களில் நீர்நாயின் ஆணை 'இரும்போத்து' என்றும்' பெண்ணைப் 'பிணவு' என்றும், குட்டிகளைப் 'பறழ்' என்றும் கூறியுள்ளனர். அகம். 336ஆம் பாடல் குட்டியொடு தங்கியிருந்த தன் துணைக்கு இரை தேடியதாகக் கூறுவதைக் காணலாம். குட்டிகள் நன்ருக வளரும் வரை நீர்நாய்கள் அவைகளைக் காத்து வளர்க்கும் என்று விலங்கு நூலார் கூறுகின்றனர். நீர் நாய்கள் ஆணும் பெண்ணுமாக வாழ்வது இயல்பு. சங்க நூல்களிலும் ஆணும் பெண்ணுமாகவே கூறியுள்ளனர்.

நீர் நாய் என்று அழைக்கப்பட்டாலும் நாய்க்கும் நீர்நாய்க்கும் யாதொரு தொடர்பும் இல்லை. இந்திய மொழிகளில் பலவற்றிலும் நீர்நாய் என்ற பொருளிலேயே பெயர் வழங்குவது தமிழ்ப் பெயரின் அடிப்படையிலோ திராவிடமொழிப் பெயரின் அடிப்படையிலோ இருப்பதாகத் தெரிகின்றது. மீன்களை வேட்டையாடுவதன் காரணமாக நீர்நாய் எனப்பட்டதோ என ஐயம் எழுகிறது. நீர்நாய்க் குட்டிகளை

இளம்பருவத்தில் தனிப்படுத்தி வளர்த்தால் நாயைப் போலவே மனிதனின் பின்னர் வருமாம். நீர் நாயைக் கன்னடத்தில் 'நீருநாய்' என்றும், தெலுங்கில் 'நீருகுக்கா' என்றும், இந்தியில் 'பானிகுத்தா' என்றும் ஒரே பொருளில் வழங்குவர். தமிழ் நாட்டில் சிலவிடங்களில் 'மீனுய்' என்று இதை அழைக்கின்றனர்.

---

# கரு. எலி

சங்க இலக்கியத்தில் மூன்று வகை எலிகளைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. ஆனால், இந்த எலிகளைத் தெளிவாகப் பிரித்துணராது பிற்காலத்தோர் உரையெழுதினர். இல் எலி, கருப்பை எலி, வெள்ளெலி என்ற மூன்று வகை எலிகள் கூறப்பட்டுள்ளன. இல்லெலி என்றே சங்கநூல்களில் வழங்கி வந்த எலி வீட்டில் வாழ்ந்த எலி என்பதில் ஐயமில்லை. இந்த எலி வீடுகளில் எளிதாகக் காணக்கூடியது.

> "திங்கள் கல்சேர்பு கனையிருண் மடியின்
> இல்லெலி வல்சி வல்வாய்க் கூகை
> கழுதுவழங் கியாமத் தழிதகக் குழறும்"
>
> —அகம், 122.

> "வல்சி யின்மையின் வயின் வயின்மாறி
> இல்லெலி மடிந்த தொல்சுவர் வரைப்பிற்"
>
> —புறம், 211.

> "நள்ளிருள் யாமத் தில்லெலி பார்க்கும்
> பிள்ளை வெருகிற் கல்கிரை யாகி"
>
> —குறுந்தொகை, 107.

இல்லெலியைக் கூகை வேட்டையாடியதையும் காட்டுப் பூனை தேடியதையும் கூறியுள்ளதைக் காணலாம். வீட்டில் வறுமை காரணமாக உணவின்றி எலிகள், கூட்டமாக மடிந்ததாகக் கூறியுள்ளதைப் பார்க்கலாம். வீட்டில் இடம் விட்டு இடம் மாறி மடிந்ததாகக் கூறப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில்

காணப்படும் இல்லெலி The common House rat என்றும் விலங்கு நூலில் Rattus Rattus என்றும் அழைக்கப்படும்.

கருப்பை எலி என்றோர் எலி சங்க நூல்களில் சொல்லப்படுகின்றது.

"வேனிற் கோங்கின் பூம்பொகுட் டன்ன
குடந்தையஞ் செவிய கோட் டெலி யாட்டக்
கலியார் வரகின் பிறங்குபீ ளொளிக்கும்'

—புறம், 321.

"கவைமுட் கள்ளிப் பொரியரைப் பொருந்திப்
புதுவர கரிகாற் கருப்பை பார்க்கும்
புன்றலைச் சிருஅர் வில்லெடுத் தார்ப்பிற்"

—புறம், 322.

"பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்
புன்புலந் தழீஇய வங்குடிச் சீறூர்" —புறம், 324.

"வன்பாலாற் கருங்கால் வரகின்
அரிகாற் கருப்பை அலைக்கும் பூழின்"

—புறம், 384.

"வில்லுடை வைப்பின் வியங்காட் டியவின்
..............................................
..............................................
வரிப்புற வணிலொடு கருப்பை யாடா"

—பெரும்பாண், 82 - 85.

கருப்பை எலி புன்புலத்தில் வாழ்ந்ததாகவும் கருங்கால் வரகு விளையும் வன்பாலில் காணப்பட்டதாகவும் கவைமுட்கள்ளியில் பதுங்கியிருந்ததாகவும் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். காட்டருகாமையில் வறட்சியான கள்ளிக் காடுகளில் (Found sometimes in heavy serul sorrounded by forest) காணப்படும் எலியை

விலங்கு நூலார் Metad என்ற வகை எலி என்பர். கரிசல் மண் நிலத்தில் இந்த எலி காணப்படுமென்பர். பருத்தி விளைந்த இடத்தில் மிகுதியாகக் காணப்படும் என்று விலங்கு நூலார் கூறுவர். (In cotton fields which they favour so much, metads can become a serious pest) பருத்தி வேலியில் கருப்பை காணப்பட்டதைத் தெளிவாகப் 'பருத்தி வேலிக்கருப்பை' என்ற வரி குறிப்பிட்டுள்ளது. கரிசல்மண்ணில் வரகு நன்கு விளையும். இந்த வரகு விளையும் வன்பாலிலும் (Block cotton soil) கள்ளியிலும் (Prickly pear Hedge) கண்டதாக விலங்கு நூலார் கூறும் எலி கருப்பை எலியென்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்த எலிக்குப் பெரிய, குவிந்த காதுகள் (Large rounded ears) உண்டென விலங்கு நூலார் கூறுவர். புறநானூறும் (321) கோங்கு மரத்தின் (Yellow sick cotton tree) மொக்கைப்போல் வளைந்து குவிந்த செவியென்று சொல்லியிருப்பதைக் கவனிக்க வேண்டும். இந்த எலியைக் 'கோட்டெலி' என்று புறநானூறு அழைக்கின்றது. கொல்லையில் வரப்பில் காணப்பட்டதால் கோட்டெலி என்று அழைக்கப்பட்டதென்று கூறுவர். இதைக் காட்டெலி என்றும் சிலர் கூறுவர். இது கருநிறமானதால் 'கருப்பை' என்றழைத்ததாகத் தெரிகின்றது. இதன் தோலில் சாம்பல் நிறமான மென் மயிர் அடர்த்தியாகக் காணப்படும். நிகண்டுகளில் இவ்வெலியைக் 'காரெலி' என்றனர். கல்லாடத்தில் கருப்பையின் வாலிற்குக் கொன்றையின் கரிய நீண்ட பழம் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. கடுக்கைச் சிறுகாய் அமைந்த வால் கருப்பை' என்று கூறியிருப்பதைக் காணலாம். கருப்பையின் வால் 6

அங்குல நீளமானதென்பர். கடுக்கையின் சிறுகாயும் அதே நீளமும் நிறமும் வரியும் அமைப்பும் உடையதைக் கண்டிருக்கலாம்.

வெள்ளெலி என்றோர் எலி சங்க இலக்கியத்தில கூறப்பட்டுள்ளது.

> "குன்றி அன்ன கண்ண குரூஉ மயிர்ப்
> புன்தாள் வெள்ளெலி மோவாய் ஏற்றை
> செம்பரல் முரம்பில் சிதர்ந்த பூழி
> நன்னாள் வேங்கைவீ நன்களம் வரிப்பக்
> கார்தலை மணந்த பைம்புதற் புறவின்"
>
> —அகம், 133.

குன்றிமணிபோலக் கருமையான கண்மணியுடைய எலி என்று கூறப்பட்டுள்ளது. வெள்ளெலிகள் பழுப்பு நிறமாகக் (Greyish brown) காணப்படும். வறட்சியான நிலங்களில், பாலைப் பகுதிகளில வெண்மை கலந்த பழுப்பு நிறமாகக் காணப்படும். 'குரூஉ மயிர் என்றது இந்தப் பழுப்பு நிறத்தையே குறித்ததாகும். இந்த எலி செம்பரல் முரம்பில், சிதர்ந்த பூழியில் காணப்பட்டதாகக் கூறியதிலிருந்து இந்த எலி விலங்கு நூலின்படி எது என்பதை ஐயமறத் தெளிந்து கொள்ளலாம். எலியினத்தில் ஒரே ஒரு வகை எலியை வளைக்குப் பக்கத்தில் குவித்துள்ள புது மண்ணால் கண்டுபிடித்து விடலாம். (The presence of mole rat is always made drawn by a pile of fresh earth resembling a large mole-hill, hence its name, mole - rat.)

அகநானூறு 133 ஆம் பாடல் செம்பரல் முரம்பில் சிதர்ந்த பூழியில் வேங்கைப் பூ வீழ்ந்து களத்தை வரித்ததுபோல் இருந்ததாகக் கூறுகின்றது. வெள்ளெலி எடுத்துப் போட்ட பூழி சிதர்ந்து இருப்பதாகக்

கூறியதை நோக்குக. வெள்ளெலியின் வளைகள் நீண்டு மிகுதியாகக் காணப்பட்டால் வெளியே விட்டு விட்டுப் புதுமண் குவித்துக் காணப்படுமென்பர். இதையே அகநானூறு கூறுவதாகத் தெரிகின்றது. பூழி என்பது புதியதாகத் தோண்டியெடுக்கப்பட்ட மண்ணைக் குறிக்கின்றது. குழிப் பூழியைப் போல் இது வளைப் பூழி. இத்தகைய வளைப் பூழியை எடுத்துப் போகும் எலி என்பதில் ஐயமேயில்லை. இந்த எலி வறட்சியான நிலத்திலும் வாழும்; தோட்டங்களிலும் விளைச்சல் நிலங்களின் அருகிலும் வாழும். (The Indian mole - rat commonly lives in cultivated plains and gardens not pasture lands but is found even in waste lands.)

இந்த வெள்ளெலிகள் வளைகளைக் குறுக்கும் நெடுக்குமாக உள்ளே சுரங்கப் பாதைகளை வைத்துள்ளது போல அமைத்துக் கொள்ளும். வளைகள் வாய் திறந்து காணப்பட்டாலும் இவ்வெலி தூங்கும் அறைக்கு அருகில் அமைத்திருக்கும் வெளியே வரும் வளையின் வாய் மூடியிருக்கும். பொய் வளையாக முடுக்குத் தெரு போல இவ்வளை இருக்கும். இந்தப் பொய் வளை வழியாக எலி வேறு வழியின்றி மாட்டிக் கொண்டால் தப்பித்து ஓடிவிடும். திறந்த வளைகளின் வழி வெளிவராது. இந்தப் பொய்வளை வழியாக வெளியே வந்து தப்பிக்கும் இதன் செயலை நாட்டுப் புற மக்கள் தெரிந்து வைத்துள்ளனர். மூடிய பொய் வளையின் வாயில் உள்ள மண்ணைத் தள்ளிவிட்டு வெளியே ஓடும் இந்தத் துளையைப் பொய்ப்பான், (Bolt holes) என்று இன்றும் நாட்டு மக்கள் வழங்குகின்றனர். இந்த எலிகள் விளைச்சலைப் பாழாக்கும்

முற்றிய கதிர்களை விளைச்சலிலிருந்து கொண்டு வந்து வளைக்குள் உள்ள அறைகளில் சேர்த்து வைக்கும். இதை நன்கு உணர்ந்த குடியானவர்கள் பஞ்சகாலத்தில் இந்த வளைகளைத் தோண்டி உணவைத் தேடுவர். (The burrows of mole - rats and gerbilles are often dug up by hungry people for the hoards of grain stocked during the harvest time.)

> "விளைபதச் சிறிட நோக்கி வளைகதிர்
> வல்சி கொண்டளை மல்க வைக்கும்
> எலிமுயன் றனைய ராகி யுள்ளதம்
> வளன்வலி யுறுக்கு முளமி லாளரொடு"
>
> —புறம், 190.

முற்றி விளைந்த கதிர்களிலிருந்து தன் உணவை நிறையைத் தேடி வளைக்குள் வைக்கும் எலியினுடைய முயற்சியைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. புறநானூறு கூறும் இந்த எலி வெள்ளெலி (mole - rat) ஆகவே இருக்கும்.

வெள்ளெலிக்கு அகன்றவாய் உண்டென்று விலங்கு நூலார் கூறுவர். அகநானூறும் இந்த எலியின் வாயை 'மோவாய்' (Broad muzzle) என்றே கூறுவதைக் காணலாம். இச்செய்தியும் வெள்ளெலி எதுவென உறுதியாகக் காண உதவுகின்றது. வெள்ளெலியைச் சிலர் (gerbille) எனப்படும் எலி என்று கொண்டனர்: சென்னைப் பல்கலைக்கழக அகராதி அவ்வாறு கொண்டது. சங்க இலக்கியத்தில் காணும் செய்திகள்வழி ஆராய்ந்து பார்த்தால் தவறாகவே தோன்றுகின்றது. வெள்ளெலியை(Mole - rat) என்றே கொள்ள வேண்டும். இந்த எலியை விலங்கு நூலார் (Bandicota Bengalensis) என்று கூறுவர். இந்த வெள்

வெளி பெருச்சாளி இனத்தைச் சார்ந்த மிகச் சிறிய எலியாகும்.

> "வாய்ப்பறை அசாஅம் வலிமுந்து கூகை
> மையூன் தெரிந்த நெய்வெண் புழுக்கல்
> எலிவான் சூட்டொடு மலியப் பேணுதும்"
>
> —நற்றிணை, 83.

நற்றிணைப் பாடலில் (83) 'எலிவான்' என்பதை 'வான் எலி' என்று கொண்டு வெள்ளெலி என்று பொருள் கொண்டனர். இந்த வெள்ளெலியும் இதே எலியாகவே இருக்கலாம். வான் சூட்டோடு' என்று கொண்டு எலியின் வெண்மையான சூட்டிறைச்சி என்று கொள்வது பொருத்தமென்று தோன்றுகிறது.

நிகண்டுகளில் காரெலி, சிறெலி, அகழெலி, இல்லெலி, பெருச்சாளி ஆகிய எலிகளின் பெயர்கள் வருகின்றன. காரெலி கருப்பையாகும். சிறெலியும் பெருச்சாளியும் (Bandicoot rat) ஓரினமெனவே தோன்றுகின்றது. இரண்டும் சீறுவன. அகழெலி என்பது அகழான் என்றழைக்கப்படுகின்றது. இதை (field mice) என்பர். இது தவிர நாட்டு மக்கள் சருகெலி (Bush rat), கொல்லை எலி அல்லது புல்லெலி (Mole - rat) என்ற பெயர்களையும் வழங்குவர். சருகெலி மரத்திலும் புதர்களிலும் வாழ்வது. சிறெலி என்பது வெள்ளெலியே என்று தெரிகின்றது, பெருச்சாளி போல இந்த வெள்ளெலியும் சீறுவதும் உடல் மயிரைச் சிலிர்ப்பதும் ஆகிய செயல்களை யுடையது. இவை தவிர, சுண்டெலி (House mouse) என்பது வீட்டில் வாழ்வது. இதை யெல்லாம் நாட்டுப் புற மக்கள் நன்கு தெரிந்துள்ளனர். சங்க இலக்கி

யத்தில் எலிகளில் முக்கியமான மூன்று எலிகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன வென்பதைத் தெளிந்து கொள்ளவேண்டும்.

## கசு. அணில்

சங்க இலக்கியத்தில் சில சிறு விலங்குகளைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. குட்டி போட்டுப் பாலூட்டும் விலங்குகளில் (Mammals) சங்கநூல்களில் கூறப்படும் சிறு விலங்குகள் அணில், கருப்பை எலி, வெள்ளெலி ஆகியவையே. இவை மூன்றும் கொறிக்கும் விலங்குகள் (Rodents) எனப் படும். ஓந்தி, பாம்பு முதலியவை முட்டையிட்டுப் பொரிப்பவை. ஊர்வனவற்றைச் சார்ந்தவை. இவை களை விலங்குகள் என்று விலங்கு நூலார் கொள்வ தில்லை. பாலுண்ணிகளையே (Mammals) விலங்குகள் எனக் கொள்வர். நிகண்டுகளிலும் முட்டையிட்டுப் பொரிப்பவையை 'அண்டசம்' என்ற தனிப் பெயரால் அழைப்பதைக் காணலாம்.

அணிலைப் பற்றிய செய்திகள் சில பாடல்களில் கூறப்பட்டுள்ளன.

> "அத்த நண்ணிய வங்குடிச் சீறூர்
> மக்கள் போகிய வணிலாடு முன்றிற்
> புலப்பில் போலப் புல்லென்
> றலப்பென் றோழியவ ரகன்ற ஞான்றே"
>
> —குறுந்தொகை, 41.

> "அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து,
> மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப"
>
> —குறுந்தொகை, 49.

> "அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
> காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா"—புறம், 246.

"வேனல் வரியணில் வாலத் தன்ன
கான ஊகின் கழன்றுகு முதுவீ" —புறம், 307.

"......இலவத் தலங்குசினை பயந்த
பூளையம் பசுங்காய் புடைவிரிந் தன்ன
வரிப்புற வணிலொடு கருப்பையா டாது"
—பெரும்பாண், 83-85.

"சூரற் புறவி னணில்பிளிற்றுஞ் சூழ்படப்பை
யூர்கெழு சேவ லிதலொடு—போர்திளைக்குந்"
—ஐந்திணை எழுபது, 38.

"தோன்றுபூ விலவத் தங்கட் டொகையணி லனைய
பைங்காய்
கான்றமென் பஞ்சியார்ந்த மெல்லணை யாழ்கை"
—சீவகசிந்தாமணி, 1701.

மேற்காட்டிய பாடல்களில்தான் அணிலைப்பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. அணிலின் வரியிட்ட முதுகைச் சங்கப் பாடல்கள் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். வெள்ளரிக்காயின் மேல் உள்ள வரிபோல் அணிலின் முதுகில் வரிகள் இருந்ததாகப் புறநானூறு கூறுவது அழகிய பொருத்தமான உவமை. அணிலின் வாலின் உருவம், தோற்றம் ஊகம்புல்லின் கழன்று விழும் பூவை ஒத்திருப்பதாகக் கூறியது நுட்பமான இயற்கை ஒப்புமையாகும். ஊகம்புல்லின் முற்றிய பூக்கதிரையும் அணிலின் வாலையும் எதிரே கையில் வைத்துக் கொண்டு பார்ப்போருக்கு இந்த உவமையின் பொருத்தம் விளங்கும். ஊகம் புல்லின் கதிர் போன்ற பூவில் காணும் முள்ளை 'ஊவா முள்' என்று இன்றும் நாட்டுப் புறங்களில் வழங்குகின்றனர். ஊக்கு (Pin) என்ற நாட்டுப் புற வழக்கும் ஊகு என்ற சங்கச் சொல்லின் மாற்றுருவமே. இலவ

மரத்தின் முதிர்ந்த காய் வெடிக்கும்போது பஞ்சுப் பிசிர் நீட்டிக் கொண்டிருப்பதை அணிலிற்கு ஒப்பிட்டுப் பெரும்பாணாற்றுப்படையும், சீவகசிந்தாமணியும் கூறுகின்றன. அணிலின் மேல்தோல் பஞ்சு போன்ற மெல்லிய மயிர்களால் சூழப்பட்டிருப்பதையே இலவம் பஞ்சுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளார். அணில் வாய்ப்பற்கள் ஊசிபோல் இருப்பதாகக் குறுந்தொகைப் பாடல் கூறுகின்றது. நீர் முள்ளிச் செடியின் கூரியமுள்போல அணிலின் பல் இருப்பதாகக் கூறியிருக்கின்றது. அணிலின் முன் பற்கள் கூரியவை. விலங்குநூலார் உளி போன்று (Chisel) இருப்பதாகக் கூறுவர். தேயத் தேய வளரும் தன்மையுடையவை.

வரிப்புறமுடைய அணிலில் இரண்டு வகை உண்டென விலங்குநூலார் கூறுவர். தென்னிந்தியாவிலும், தமிழ் நாட்டிலும் காணப்படும் அணிலிற்கு மூன்று வரிகளும் வட இந்தியாவில் மிகுதியாகக் காணப்படும் அணிலிற்கு ஐந்து வரிகளும் உண்டு என்பதை விலங்கு நூலார் கண்டுள்ளனர். தொல்காப்பியர் மரபியலில் "மூங்கா வெரு கெலி மூவரி யணிலொடு" (சூ. 561) என்று வரும் வரியில் மூன்று வரியுடைய அணிலென்று குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். இந்த மூன்று வரியணில் ஐந்து வரியணிலைப்போல மக்களிடம் நெருங்கிவாழாது என்பர். காட்டை ஒட்டிய நாட்டுப் புறங்களில் பெரும்பாலும் காணப்படும் (The five striped squirrel is not found in forest but has forsaken forests to live with man and about his dwellings and fields......The three striped palm squirrel on the otherhand is a forest animal. It has a particularly

shrill bird like call which is repeated again and again.) குறுந்தொகைப் பாடலில் (43) மக்கள் விட்டு விட்டுப் போகிய இடத்தில் இந்த அணிலைக் கண்டதாகக் கூறியிருப்பது இது சார்பாகக் கவனிக்கத் தக்கது. சங்ககாலத்திலும் மக்களிடம் நெருங்கிப் பழகாத விலங்காக இதைக் கருதினரென்று தெரிகின்றது. சூரற்புறவிற்கடுத்த படப்பையின் சூழலில் அணிலை ஐந்திணை எழுபது கூறுகின்றது. பெரும்பாணாற்றுப் படையில் கழுதைச் சாத்து செல்லும் சுங்கப் பெரு வழியில் அணிலும் கருப்பையும் ஆடாது என்று சொல்வதையும் காண்க. மனிதர் செல்லும் வழியில் அணில் ஆடுவதில்லை என்பதையே பெரும்பாண் கூறுவதாகத் தெரிகின்றது. இந்த அணில் அடிக்கடி கத்துவதைப் பிளிற்றும் (shrill) என்று ஐந்திணை எழுபது கூறுகின்றது. இந்த அணிலை விலங்குநூலார் 'Funambulus palmarum' என்று அழைப்பர். ஆங்கிலத்தில் 'The three-striped palm squirrel' என்பர். ஐந்து வரியுடைய அணிலையும் (The five-striped palm squirrel) தொல்காப்பியர் தெரிந்தே அதனினின்றும் விலக்கி 'மூவரியணில்' என்று கூறினரென்று கருத இடமுண்டு.

மூவரியணிலைத் தவிர்த்து மற்றோர் அணிலையும் சங்கநூல்களில் இரண்டு பாடல்களில் கூறியுள்ளனர். இதை வெளில் என்று அழைக்கின்றனர். இதற்கு அணில் என்றே பொருள் கூறியிருப்பினும் இது மூவரியணில் அன்று என்றே தெரிகின்றது.

"காடுகால் யாத்த நீடுமரச் சோலை
விழைவெளில் ஆடுங் கழைவளர் நனந்தலை"

—அகம். 109

"ஏனலங் காவலர் ஆறு தார்த்தொறுங்
கிளிவிளி பயிற்றும் வெளிலாடு பெருஞ்சினை"

—அகம், 12.

இந்த வெளில் எனும் அணில் ஆடுவதாகக் கூறப்படும் சூழ்நிலை நெருங்கிய காடும் நீண்ட மரச் சோலையும், பெருஞ்சினை மரங்களுமாகையால் இந்த அணில் விலங்கு நூலார் குறிப்பிடும் 'The Indian giant squirrel' ஆகவே இருக்கலாம். இது பெரிய அணில். அடர்ந்த காடுகளில் உயர்ந்த கிளைகளில் உச்சியில் (Deciduous and moist evergreen forests of peninsular India) வாழ்வது. இந்த அணில் கருமை நிறமானது. வெளில் என்ற பெயர் வெண்மையின்மையைக் குறித்துக் கருமையானது என்ற பொருளில் வழங்கினதாகத் தோன்றுகின்றது. இந்த அணில் மரத்திற்கு மரம் வெகுதூரம் தாவிக் குதிக்கும். வெளில் சோலையில் ஆடும் என்று இதையே குறித்தனர் போலும். தினைப்புனக்காவலர் கூவுந்தோறும் அதைக் கேட்டுப் பயந்து கிளிபோலக் கத்தியதாகக் கூறுவதையும் காணலாம். சிறிய ஓசையைக் கேட்டாலும் பயந்து ஓயாது கத்தும். குரலிலிருந்து இந்த அணிலைக் காட்டில் கண்டுபிடித்துக் கொள்ளலாம் என்று விலங்கு நூலார் கூறுவர். இந்த அரிய அணிலை The Indian Giant squirrel என்று ஆங்கிலத்திலும் Rafinfa Indica என்று விலங்கு நூலிலும் வழங்குவர்.

———

## கரு. முயல்
## (The Indian Hare)

சங்க இலக்கியத்தில் காட்டு முயலைப்பற்றிச் செய்தி கள் வருகின்றன. காட்டு முயல்களெனப்படும் முய லினம் தமிழ் நாட்டிலும் இந்தியாவிலும் காணப் படுவது. தற்காலம் வீட்டில் வளர்க்கும் வெள்ளை முயல் தமிழ் நாட்டில் இயற்கையில் வாழ்வதன்று. விலங்கு நூலார் குழிமுயல்களைத் (Rabbits) தனி இன மாகக் கொள்வர். காட்டு முயல்கள் (The Indian Hare) ஊர்களுக்கு அருகாமையிலும் விளைச்சலிலும் காணப் படும். காட்டுச் சாரலிலும் காணப்படுமென்பது 'காட்டுச் சாரோடும் குறுமுயல்' என்ற தொல்காப்பிய மேற்கோள் செய்யுள் வரி காட்டுகின்றது.

" சிறியிலை நெல்லிக் காய்கண் டன்ன
குறுவிழிக் கண்ண கூரலங் குறுமுயல்
முடந்தை வரகின் வீங்குபீள் அருந்துபு
குடந்தையஞ் செவிய கோட்பவர் ஒடுங்கி
இன்றுயி லெழுந்து துணையொடு போகி
முன்றிற் சிறுநிறை நீர்கண் டுண்ணும்
புன்புலந் தழீஇய பொறைமுதற் சிறுகுடித்"

—அகம், 394.

" முயற்பறழ் உகளும் முல்லையம் புறவிற்
கவைக்கதிர் வரகின் சீறூர் ஆங்கண் "

—அகம், 384.

" காடுறை இடையன் யாடுதலைப் பெயர்க்கும்
மடிவிடு வீளை வெரீஇக் குறுமுயல்

மன்ற இரும்புதல் ஒளிக்கும்
புன்புல வைப்பினெஞ் சிறுநல் லூரே "

—அகம், 394.

" நறும்பூம் புறவி னொடுங்குமுய வீரியும்
புன்புல நாடன் மடமகள் "

—ஐங்குறுநூறு, 421.

" எல்லுமுய லெறிந்த வேட்டுவன் அம்சுவல்
............................................................
வன்புலக் காட்டுநாட் டதுவே அன்புகலந்து "

—நற்றிணை, 59.

சங்க இலக்கியத்தில் காட்டு முயல்கள் புன்புலத்திலும் காட்டு நாட்டிலும் முல்லை நிலத்திலும் வாழ்வதாகக் கூறப்பட்டுள்ளது. வீட்டுக்கருகிலே பயமின்றி மேயும் தன்மையாய் முன்றிலிலும் மன்றத்திலும் காணப் பட்டதாகக் கூறியுள்ளனர். விலங்கு நூலாம் காட்டு முயல்கள் வீட்டுத் தோட்டத்திலும், நடமாடுந் தடங் களிலும் இரவில் காணப்படுமென்பர். காட்டு நாட்டில் முயல் வாழ்வதாகக் கூறியது தெளிவான செய்தியாகும். (Large tracts of bush and jungle alternating with cultivated plains afford them ideal conditions) புதரும், குறுங்காடும் விளைவயலும் அமைந்த சூழ் நிலையில் முயல் மிகுந்து காணப்படும் என்று விலங்கு நூலார் சொல்வதற்கேற்ப முயல் முல்லைப் புறவிலும் புன்புலத்திலும் வன்புலத்திலும் காணப்பட்டதாகச் சங்க நூல்கள் கூறுவது மிகவும் பொருத்தமே. முயலின் கண்கள், காது ஆகியவை பற்றிச் சங்க நூல் கள் கூறுகின்றன. முயலின் கண்கள் பெரியன என்றும் அவை பளிங்கு போலவும் நெல்லிக் கனியின் உருவம் போலவும் காணப்பட்டதாகவும் கூறியிருப்ப

தைக் காணலாம், மழைக் காலத்தில் நீரில் மொக்குள் தோன்றுவது போல பொகுட்டு விழியையுடைய கண்ணையுடைய தெனவும் கூறப்பட்டுள்ளது.

> " நீருட் பட்ட மாரிப் பேருறை
> மொக்கு ளன்ன பொகுட்டு விழிக் கண்ண
> கரும்பிடர்த் தலைப பெருஞ்செவிக் குறுமுயல்
> உள்ளூர்க் குறும்புதற் றுள்ளுவன வுகளும்
> தொள்ளை மன்றத் தாங்கட் படரின் "
>
> —புறம், 333.

> " சிறியிலை நெல்லிக் காய்கண் டன்ன
> குறுவிழிக் கண்ண கூரலங் குறுமுயல் "
>
> —அகம், 284.

நெல்லிக்காயின் அளவும், திரண்டு உருண்ட தன்மையும் பளபளப்பான தன்மையும் நிறமும் முயலின் கண்களுக்கு மிகவும் பொருத்தமே. தமிழ் நாட்டில் காணப்படும் காட்டு முயலுக்கு விலங்கு நூலார் Blacknaped Hare என்று பெயரிட்டுள்ளனர். இப்பெயர் இம்முயலிற்குக் கழுத்தில் உள்ள கருப்பு நிறப்பகுதியின் காரணமாக வந்ததாகும். இதையே "கரும்பிடர்த்தலை" என்று சுட்டிக்காட்டிப் புறநானூறு கூறுவது எண்ணி இன்புறத்தக்க செய்தியாகும். காட்டு முயலின் காதை 'பெருஞ் செவிக் குறு முயல்'. (புறம் 33) 'நெடுஞ் செவிக் குறுமுயல்' (பெரும்பாண் 116, புறம். 334, 339) என்று கூறுகின்றதைக் காணலாம். முயலின் காது நீண்டு குறுகி முடங்கி இருக்கும். ஆதலின் 'குடந்தையஞ் செவிய' என்று அகநானூறு (284) கூறுகின்றது. இதன் காது மிக்க நீண்டதென்று விலங்கு நூலார் கூறுவர். 'முள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையு

நெடுஞ்செவிக் குறுமுயல்' என்று பெரும்பாணாற்றுப் படை கூறுவது அழகிய பொருத்தமான உவமை யாகும்.

> காமரு பழனக் கண்பி னன்ன
> தூமயிர்க் குறுந்தா ணெடுஞ்செவிக் குறுமுயல்"
>
> —புறம், 334.

விளை வயலில் விளைந்த பைஞ்சாய்க் கோரையைப் போலத் தூய மயிரையுடைய குறுகிய தாளையுடைய நெடிய காதுகளையுடைய முயல் என்றது காட்டு முயலிற்குப் பொருத்தமான வர்ணனை யாகும்.

காட்டு முயல் புல்லையும் இலைகளையும் தின்று வாழும்.

> " பதவுமே யல்பற்றி முயற்பற மோம்புஞ்
> சீறா ரோளே நன்னுதல்"
>
> —தொல். மரபு. பேராசிரியர் மேற்கோள்.

> " தாளிமுத வீடிய சிறுநறு முஞ்ஞை
> முயல்வந்து கறிக்கு முன்றிற்
> சீறூர் மன்னனைப் பாடினை செலினே "
>
> —புறம், 328.

அறுகம் புல்லை மேய்வதாகவும் முஞ்ஞைச் செடியைக் கறித்துத் தின்பதாகவும் கூறப்பட்டுள்ளது. அக நானூறு 281-ஆம் பாடலில் திரண்ட கதிர்விடும் வரகின் தாளை அருந்தி வளைந்த கொடியில் பதுங்கி யிருந்து தூங்கியெழுந்து முன்றிலில் காணட்பட்ட சிறிதாக நிறைந்த நீரைக் கண்டு உண்ணும் என்று கூறியது இயற்கைச் செய்தியே யாகும். காட்டு முயல் கள் விடியற் காலையில் பனிநீரைப் புல்லில் அருந்தும் என்பர்.

காட்டு முயலைச் சங்க காலத்தில் விரும்பி உண்டனர். காட்டுப் பன்றியின் இறைச்சியைப் போல முயலின் இறைச்சியும் சுவை மிக்கதாகக் கருதினர். ஆதலின் முயலை நாய் கொண்டும், அம்பெய்தும் வேட்டையாடினர். வலையில் பிடிப்பதும் வழக்கம். வளைதடி யெறிந்து முயலைக் கொல்வது கூறப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். வளைதடியை (Boomerang) 'குறுங்கோல்' (புறம் : 389), 'மாலை வெண்காழ்' (அகம். 394) எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

" புன்றலைச் சிறுஅர் வில்லெடுத் தார்ப்பிற்
பெருங்கட் குறுமுயல் கருங்கல னுடைய
மன்றிற் பாயும் வன்புலத் ததுவே "

—புறம், 322

" பகுவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித்
தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி
முள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையு
நெடுஞ்செவிக் குறுமுயல் போக்கற வளைஇக் "

—பெரும்பாண். 112 - 115.

" குருளைக் கோட்பட லஞ்சிக் குறுமுயல்
வலையிற் றப்பாது மன்னுயி ரமைப்ப "

—தொல். மரபியல். மேற்கோள்.

" மலர்பிணைத் தன்ன மாயிதழ் மழைக்கண்
முயல்வேட்டு எழுந்த முடுகுவிசைக் கதநாய்"

—நற்றிணை, 252

நாய்களைவிட்டுப் புதர்ச் செடிகளை வெட்டி அழித்து வேலி போல வலை போட்டு வளைத்து முயல்கள் தப்பித்துப் போக முடியாதபடி மடக்கி முயல் வேட்டையாடுவதைப் பெரும்பாண் தெளிவாக விளக்குகின்றது.

வில்லின் நாணொலி கேட்டு அஞ்சி ஓடும் முயலையும் புறநானூறு கூறுகின்றது.

> "குறுங்கோ லெறிந்த நெடுஞ்செவிக் குறுமுயல்
> நெடுநீர்ப் பரப்பின் வாளையொ டுகளுந்து"—புறம், 339.

> " மாலை வெண்காழ் காவலர் வீச
> நறும்பூம் புறவி னொடுங்குமுய லிரியும்
> புன்புல நாடன் மடமகள் " —ஐங்குறுநூறு, 421.

வளை தடி கொண்டு முயலைக் கொல்லுவது பற்றி மேலே காட்டிய பாடல்கள் கூறுவது அரிய செய்தியாகும். முயலின் இறைச்சியில் கொழுப்பு மிக்கு இருக்கும்.

> " வன்புலத்துப் பகடுவிட்டுக்
> குறுமுயலின் குழைச்சூட்டொடு " —புறம், 395

> " குறுமுயலி னிணம்பெய்தந்த
> நறுநெய்ய சோறென்கோ " —புறம், 396.

முயலின் கொழுப்பு நிறைந்த நெய்ச் சோற்றை விரும்பி உண்டனரென்று புறநானூறு கூறுகின்றது. முயலின் இறைச்சி மெதுவாக இருக்கும் என்பதைக் 'குழைச்சூட்டொடு' என்று புறநானூறு கூறுவதில் விளங்குகின்றது. முயலின் இறைச்சி மிக்க மெதுவானது என்பர். அதனால் விரும்பி உண்பர். முயலின் இறைச்சியின் சுவையை நோக்கியே 'முயல் விட்டுக் காக்கை தினல்' என்ற பழமொழியும், 'தீற்றுதோ நாய் நட்டால் நல்ல முயல்' என்ற பழமொழியும் தோன்றின. நாயை நட்புக் கொண்டால் நல்ல முயல் இறைச்சியைத் தரும் என்பது நாயைக் கொண்டு முயல் வேட்டையாடும் வழக்கிலிருந்து தோன்றியது.

முயல் விளையும் பயிரிலோ, வளர்ந்த புல்லிலோ நன்கு மறைந்து கொள்ளும் புல்லைக் காலால் தள்ளிப்

பார்த்து ஒரு பள்ளத்தை உண்டு பண்ணி அதில் ஒடுங்கித் தூங்கும். குறுமுயல் மன்ற இரும்புல்லில் ஒளிந்து கொள்வதாக அகம் 394ஆம் பாடல் கூறுகின்றது.

" நறும்பூம் புறவி னொடுங்கு முயலிரியும்
புன்புல நாடன் மடமகள் " —ஐங்குறுநூறு, 421.

" காமரு பழனக் கண்பி னன்ன
தூமயிர்க் குறுந்தா ணெடுஞ்செவிக் குறுமுயல்
புன்றலைச் சிறுஅர் மன்றத் தார்ப்பிற்
படப்பொடுங் கும்மே...............பின்பு.........."

—புறம், 334.

காட்டு முயல் புல்லில் பதுங்குவதையும் மறைவதையும் பற்றிச் சங்கப் புலவர்கள் உணர்ந்திருந்தனர். (Scraping the blades of grass it makes out a hollow. In this 'form' it settles down to sleep. Sometimes they lie in fallow fields) புன்புலத்தில் ஒடுங்குவதாகவும், படப்பொடுங்குவதாகவும் கூறியதை நோக்குக. படப்பொடுங்குவ தென்பது புல்லில் ஒடுங்கி மறைவதையே குறிக்கின்றது. இவ்வாறு ஒடுங்கிக் கிடக்கும் முயலை யாரும் கண்டுபிடிக்க முடியாது. முயல் ஓடும்போது நின்று திரும்பிப் பார்க்கும். முயல் வில்லோசை கேட்டு இரியும் என்றும், முயல் துள்ளி உகளும் என்றும் கூறப்பட்டுள்ளது. முயல் பகற் காலத்தில் புல்லிலும் புதரிலும் ஒடுங்கிப் பதுங்கி வாழும். உழுபடைச் சாவிலும் தூங்கும். முயல் உடலைக் குறுக்கி ஒடுங்கிப் பதுங்கியிருப்பதை நன்கு உணர்ந்த சங்கப் 'புலவர்கள் கூரலங் குறுமுயல்' (அகம், 284) என்றும், 'கோட்பவர் ஒடுங்கி' (அகம், 284) என்றும், 'இரும்புதல் ஒளிக்கும்' (அகம், 394) என்றும், புறவி

றெடுக்கும்' (ஐங்குறுநூறு, 421) என்றும், 'படப் பொடுங்கும்' (புறம், 334) என்றும் அதைப் பற்றிக் கூறினர். முயலின் முன் கால்கள் குறுகிப் பின் கால்கள் நீண்டு மடக்கியிருக்கும். ஆதலால் முயல்கள் துள்ளிக் குதித்து ஓடும். இதையே சங்க நூல்களுள் 'உகளும்,' 'துள்ளுவன உகளும்' என்று குறிப்பாகச் சொல்லினர். விலங்கு நூலார் சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள முயலை 'Lepus nigricollis' என்பர். 'Indian hare' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும்.

---

## கசு. முளவுமா

(Porcupine)

முளவுமா, முளவுமான் என்ற பெயர்கள் சங்க நூல்களில் முள்ளம் பன்றியைக் குறித்து வழங்கும் பெயர்களாகும். இந்த விலங்கு காட்டுப் பன்றியை உருவிலும் தோற்றத்திலும் ஓரளவு ஒத்திருப்பதால் முள்ளம் பன்றி என்று தற்காலத்தில் அழைக்கின்றனர். ஆனால் பன்றியினத்திற்கும் இதற்கும் யாதொரு தொடர்பும் கிடையாது. ஆதலின் முள்ளம் பன்றி என்ற பெயரைவிட விலங்கு நூலில் முளவுமா என்ற சங்கப் பெயரைப் பயன் படுத்துவது நன்று. முள்ளை யுடைய விலங்கு முளவுமா என்றழைக்கப்பட்டது. எய் என்றும், எய்மான் என்றும் சங்க நூல்களில் அழைக்கப்படும். முள்ளம் பன்றியின் மேற்புறத்தில் கழுத்திலிருந்து தொடங்கி நீண்ட முட்கள் உள்ளன. இதை 'எய்ம்முள்' என்று சங்க நூல்களில் அழைப்பர். நீண்ட கோலின் நுனியில் இரும்பு முள்ளைச் செருகி எறிவதற்காகப் பயன்படும் ஊசியை எறியூசி என்பர். இந்த எறியூசியை எய் என்றும் அழைப்பர். இந்த எறியூசி போன்ற எய்களை உடலில் நிறைய உடைய தால் எய்மான் என்றழைக்கப்பட்டது. முள்ளம் பன்றி தன் உடலில் உள்ள முள்ளை எதிரிகள் மேல் எறிவதாக ஒருநம்பிக்கையுண்டு. இத்தகைய நம்பிக்கை மிகப் பழங்காலத்தில் இருந்திருக்கலாம். இன்றும் இந்தியா முழுமையும் தமிழ் நாட்டிலும் இந்த நம்பிக்கை நாட்டு மக்களிடையே நிலவுகின்றது. இந்த

நம்பிக்கையின் அடிப்படையாகவே எய்யும் விலங்கு என்ற பொருளில் எய், எய்மான் என்ற பெயர்கள் எழுந்தன வென்று தெரிகின்றது.

> " மொய்த்த முட்டன துடற்றலை துளைப்ப முடுகிக்
> கைத்த லத்தினிமி ரக்கடிது கன்றிவிசிறும்
> மெய்த்த மெய்ப்பெரிய கேழலென..."
>
> —கம்பராமாயணம், விராதன், 33.

> " மெய்யுருவி வையுறு முனைமுள்ளை
> யெய்யுதறின....................."
>
> —சீகாளத்திப் புராணம், 86.

கம்பராமாயணம் முதலிய பிற்கால நூல்களில் எய்மா தன் உடலில் உள்ள கூரிய முள்ளை உதறினதாகவும் விசிறினதாகவும் கூறியிருப்பதைக் காணலாம். ஆனால் முள்ளம் பன்றி தன் உடலில் உள்ள முள்ளை உதறுவதோ, விசிறுவதோ, எய்வதோ இயற்கையில் நடப்பதன்று என்பதை விலங்கு நூலார் கண்டுள்ளனர். முள்ளம்பன்றியின் முள் பிற விலங்குகளின் உடலில் குத்தினால் அதை எடுப்பது எளிதன்று. அதனால் முள் முள்ளம் பன்றியின் உடலிலிருந்து பிய்க்கப்பட்டு விடும், உடைந்து விடும் இந்த நிகழ்ச்சியைக் கண்டே முள்ளம் பன்றி முள்ளை எறிவதாகவும் எய்வதாகவும் கொண்டனர். சங்க இலக்கியத்தில் இந்த நம்பிக்கையைப் பற்றி யாதொரு குறிப்பும் காணப்படவில்லை. மலைபடுகடாத்தில் முள்ளம் பன்றியின் முள்ளால் தாக்கப்பட்ட கானவனைப் பற்றிய செய்தி வருகின்றது.

> " சேயளைப் பள்ளி யெஃகுறு முள்ளி
> னெய்தெற விழுக்கிய கானவ ரழுகை"
>
> —மலைபடுகடாம், 300 - 301.

எஃகு போன்ற முள்ளினால் எய்ம்மா கானவனைத் தெறுவதாகவே கூறுகின்றதே யொழிய முள்ளை எய்ததாகக் கூறவில்லை. முள்ளம் பன்றி தன்னுடைய எதிரிகளை வெகுவிரைவாகப் பின்னோக்கி ஓடித் தாக்கும். அப்போது முள்ளம் பன்றியின் பின்னோக்கின முட்கள் எதிரியைத் தாக்கித் துளைக்கும். ஒடிந்த முள் எதிரிகளின் உடலில் பதிந்து மிகுந்து வலிதரும். முள்ளம் பன்றியின் முட்களால் தாக்கப்பட்டு இறந்து போன சிறுத்தைப் புலியையும் வரிப்புலியையும் பற்றி விலங்கு நூலார் எழுதியுள்ளனர். நீர் அருந்தும் துறையில் சிறுத்தைப் புலியுடன் போரிட்ட முள்ளம் பன்றியின் வீரத்தைப் பற்றி ஒரு வேட்டையாளர் எழுதியிருக்கின்றார். முள்ளம் பன்றியின் கழுத்தில் அடர்த்தியாக மென்மையான முட்கள் காணப்படும். இந்த முட்களைப் பன்றியின் கழுத்தில் உள்ள கற்றை மயிர்களுடன் ஒப்பிட்டு "எய்ம்முள் அன்ன பரூஉமயிர் எருத்தின்" பன்றியென நற்றிணை (98) கூறுகின்றது. (Its neck and shoulders are crowned with a crest of bristles of 6 to 12 inch long. The quills on the back are very profuse) முள்ளம் பன்றியின் முள் அதன் மயிரின் மறு உருவமே யாகும் என்று விலங்குநூல் கூறும். முள்ளம் பன்றியின் முட்கள் மிகவும் கூரியவை. உடலில் தைத்தால் எடுப்பது எளிதன்று. மிக்க வலியைத் தரும். எய்தெற வருந்திய கானவ ரழுகையை மலைபடுகடாம் கூறியுள்ளது. முள்ளம் பன்றியின் முட்களைக் குறுகிய ஈச்ச மரத்தின் கூரிய முள்ளுடைய இலை வேய்ந்த குடிசையின் தோற்றத்திற்கு ஒப்பிட்டுப் பெரும்பாணாற்றுப்படை கூறியுள்ளது.

"ஈத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை
மான்ரேற் பள்ளி மகவொடு முடங்கி"

—பெரும்பாண். 88 - 89.

எய்ப்புறம் குடிசையில் வேய்ந்த காட்டீச்ச இலைகள் போல இருந்ததாகக் கூறியது அழகிய உவமையாகும். இந்த ஒப்புமையைக் கண்டே ஆங்கிலத்தில் குற்றீச்ச மரத்திற்கு (Phoenix humilis) Porcupine Wood என்ற பெயர் கொடுத்தனர். முள்ளம்பன்றி மரம் என்ற பெயர் சங்க இலக்கிய உவமையுடன் எவ்வளவு ஒத்து வருகின்றது.

"கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி
எய்போற் கிடந்தானென் னேறு"

—பு. வெ. மாலை—வாகைப். 22

அம்புகள் உடல் முழுவதும் தைப்பக் கிடந்த வீரன் முள்ளம்பன்றி போல இருந்ததாகக் கூறப்பட்டுள்ள உவமை எண்ணி மகிழத்தக்கது. கணை என்ற சொல் தமிழில் அம்பு என்ற பொருளுடையது. துளு மொழியில் கணை முள்ளம்பன்றி முள்ளைக் குறித்து வழங்குவதை இது சார்பாகக் கவனிக்கத்தக்கது.

முள்ளம்பன்றி பகற்காலத்தில் குகையிலோ, முழையிலோ தூங்கும். கரடுமுரடான பாறை நிலங்களில் குன்றுச் சாரல்களில் வாழும். சேயளைப் பள்ளியில் வாழ்வதாக மலைபடுகடாம் (வரி 300) கூறுவதைக் காணலாம். நெடிய முழையாகிய இருப்பிடத்தில் தங்கும் எய்ப்பன்றி என்று நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார். முள்ளம்பன்றி இரவிலே உணவு தேட வெளிவரும். சங்க நூல்களிலும் முள்ளம்பன்றி

இரவுக் காலத்தில் காணப்பட்டதைப் பற்றிய செய்தி கள் வருகின்றன.

> " இயங்குநர்ச் செகுக்கும் எய்படு நனந்தலைப்
> பெருங்கை எண்கினம் குரும்பி தேரும்"
>
> —அகம், 307.

இராக்காலத்தில் யானையும் கரடியும் முள்ளம்பன்றியும் காட்டுவழியில் காணப்படும் என்று அகநானூறு கூறு வதை நோக்கவும். இரவுக் காலத்தில் முள்ளம் பன்றியை வேட்டையாடியதைப்பற்றி நற்றிணை 285 ஆம் பாடலும் குறிப்பிட்டுள்ளது. முள்ளம்பன்றியின் இறைச்சியை மிகச் சுவையுடைய இறைச்சியாகச் சங்க காலத்தில் கருதினரென்று தெரிகின்றது. இன்றும் காட்டுப்பன்றியின் இறைச்சியையும் முள்ளம்பன்றி யின் தசையையும் சுவையுடையதென விரும்பி உண்ணு கின்றனர்.

> " மான்கண் மகளிர்க் கான்றோ ரகன்துறைச்
> சிலைப்பாற் பட்ட முளவுமான் கொழுங்குறை
> விடர்முகை யடுக்கத்துச் சினைமுதிர் சாந்தம் "
>
> —புறம், 374.

> " முளவுமாத் தொலைச்சிய பைங்கிணப் பிளவை
> பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ "
>
> —மலைபடுகடாம், வரி. 176 - 177.

> " பெரும்பெய ராதி பிணங்கரிற் குடநாட்
> டெயினர் தந்த வெய்ம்மா னெறிதசைப்
> பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் ளமலை
> வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய "
>
> —புறம், 177.

" ............................... சாரல்
கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை
தேங்கமழ் கதுப்பின் கொடிச்சி மகிழ்ந்துகொடு
காந்தளஞ் சிறுகுடிப் பகுக்கும் "

—நற்றிணை, 85.

" இரவில் வருதல் அன்றியும் உரவுக்கணை
வன்கைக் கானவன் வெஞ்சிலை வணக்கி
உளமிசைத் தவிர்த்த முளவுமான் ஏற்றையொடு
மனைவாய் ஞமலி ஒருங்குபுடை ஆட
வேட்டுவலம் படுத்த உவகையன் காட்ட "

—நற்றிணை, 285.

" ஓட்டியல் பிழையா வயநாய் பிற்பட
வேட்டம் போகிய குறவன் காட்ட
குளவித் தண்புதல் குருதியொடு துயல்வர
முளவுமாத் தொலைச்சும் குன்ற நாட "

—அகம், 182.

" முளவுமாத் தொலைச்சிய முழுச்சொ லாடவர் "

—புறம், 325.

" முளவுமா வல்சி யெயினர் தங்கை "

—ஐங்குறுநூறு. 364.

முள்ளம்பன்றியை வேட்டையாடுவதில் சங்ககாலத்தில் ஆடவர் விருப்பமுடையவராக இருந்தனர் என்பது தெரிகின்றது. முளவுமாத் தொலைச்சிய முழுச்சொலாடவர் என்று புறநானூறு கூறுகின்றது. எயினர் முள்ளம்பன்றியை விரும்பிக் கொன்று அதன் வெட்டின தசையை அரசர்க்குக் காணிக்கையாகக் கொடுத்தனர். கானவன் முள்ளம்பன்றியைச் சாரலில் (hillsides) கொன்றதாகவும் நீர்த்துறையில் கொன்றதாகவும் கூறியுள்ள செய்திகள் உண்மையானவையே. புற

நானூற்றுப் பாடல் (374) வரிக்கு உரை கூறியவர் நீர்த்துறைக் கண்ணிருந்த முள்ளம்பன்றியை வேட்டஞ் செய்தல் வேட்டுவர் மரபு என்று கூறியிருப்பதைக் காண்க. முள்ளம்பன்றியை வேட்டையாடிய முறையைப் பற்றியும் சங்க நூல்கள் கூறுகின்றன. இரவில் வேட்டையாடும்போது மோப்பம் பிடிக்கும் வேட்டை நாய்களைப் பயன்படுத்தினர். நாய்களுடன் வந்த குறவன் காட்ட மலைமல்லிகைப் புதரில் இருந்த முள்ளம்பன்றியைக் குன்ற நாடன் கொன்றதாக அகநானூறு (182) கூறுவதைக் கவனிக்க வேண்டும். நெஞ்சிலே அம்பைப் பாய்ச்சிக் கொன்று வீட்டிற்குக் கொண்டுவந்த முள்ளம்பன்றியைக் கண்டு வீட்டு நாய்கள் குதித்ததாக நற்றிணை கூறுவதைக் காணலாம். முள்ளம்பன்றியை நாய்களை வைத்து வேட்டையாடுதலே இன்றும் வழக்கமாகும். முள்ளம்பன்றியின் இறைச்சி மிகவும் கொழுப்பை யுடையது. இதன் தசையைப் பிளந்து பகிர்ந்து கொள்வர். 'பைஞ்ஞிணம் பெருத்த' வென்றும் 'பைந்நிணப் பிளவை' என்றும் கூறப்பட்டுள்ளது. இதன் நெய்யுடைய கொழுப்புத் தசையைச் சோற்றுடன் சேர்த்துப் புழுக்கி உண்டன ரென்று புறநானூறு 177 ஆம் பாடலும் சிந்தாமணி 1233 ஆம் பாடலும்கூறுகின்றன.

முள்ளம்பன்றி நிகண்டுகளில் முட்பன்றி, முண்மா என்று அழைக்கப்பட்டுள்ளது. சல்லியம் என்ற பெயர் வடமொழியிலிருந்து வந்தது. முள்ளம் பன்றியை விலங்குநூலார் Hystrix Indica என்றழைப்பர். முள்ளம்பன்றியைப் போல் மற்றொரு சிறிய விலங்கையும் தமிழ்நாட்டில் காண்கின்றோம்

இதை மருட்டுப்பன்றி (Hedge hog) என்பர். இது முள்ளம்பன்றி இனத்தைச் சேர்ந்ததன்று. பூச்சித் தின்னிகளில் (Insectivores) ஒன்று. மூஞ்சூறும் இந்த இனத்தைச் சேர்ந்தது. இதற்குக் குறுகிய சிறிய முட்கள் உண்டு. பந்துபோல் சுருட்டிக் கொள்ளும். நிகண்டுகளில் இதைக் கிருட்டி, கோலம், கிரிகிரி என்றழைக்கின்றனர். பயமுறுத்துவதற்காக இதன் முட்கள் இருப்பதால் பந்துபோல சுருட்டி மருட்டுவ தால் 'கிரிகிரி' என்றனர். 'கிரிகிரி' செய்தல் என்ற பேச்சு வழக்கு இதிலிருந்து தோன்றிற்று.

## கஎ. மலைவாழ் விலங்குகள்

சங்க இலக்கியத்தில் சில விலங்குகள் பற்றிய செய்திகள் அருமையாகக் காணப்படுகின்றன. தமிழ் நாட்டில் வாழும் சில மலைவாழ் விலங்குகளும் வடநாட்டில் காணும் விலங்குகளும் அரிதாகக் கூறப்பட்டுள்ளன. மலைவாழ் விலங்குகளில் ஒருவகை மலைக் கிரியைப் பற்றிச் சங்க இலக்கியத்தில் ஒரே ஒரு செய்தி வருகின்றது. தமிழ் நாட்டில் உயரமான மலைகளில் வாழும் விலங்குகள் வருடை, நீலகிரி கருங்குரங்கு, ஊகக் குரங்கு, மலைக் கிரி, மலை நீர்நாய், 'மார்ட்டென்' (Marten), ஆகியவை என்று விலங்கு நூலார் கூறுவர். இந்த விலங்குகளில் வருடை, கருங்குரங்கு, ஊகக் குரங்கு ஆகியவை சங்க நூல்களில் கூறப்பட்டிருப்பதை ஏற்கெனவே விளக்கியுள்ளேன். மலையில் வாழும் கிரி மலைபடுகடாத்தில் கூறப்பட்டுள்ளது. 'மார்ட்டென்' என்ற கம்பள மயிருடைய விலங்கு நீலகிரி மலையில் காணப்படுகிறது. இதைப் பற்றிச் சீவகசிந்தாமணி சில செய்திகளைக் கூறியுள்ளது.

மலையில் வாழும் ஒருவகை நீர் நாயைத் தவிர (The Common Otter) விலங்கு நூலார் தமிழ் நாட்டு மலைகளில் கண்ட மற்ற மலைவாழ் விலங்குகளெல்லாம் தமிழ் இலக்கியத்தில் சொல்லப்பட்டுள்ளன. இந்த விலங்குகளெல்லாம் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் முக்கியமாக நீலகிரி, பழனி, ஆனைமலை ஆகிய மலைகளில் காணப்படுகின்றன. (In the hilly areas of the peninsula the Nilgiri langur, the lion-tailed macaque, the Malabar Civet and the stripe-necked mangoose are characteristic ani-

mals. In the Nilgiris are found animals with those found in Assam and such characteristic Himalayan animals as the 'Thar', the pine marten, and the European otter) மலையாளத்தில் காணும் புனுகுப்பூனை சங்க இலக்கியத்தில் கூறப்படாவிட்டாலும் சிலப்பதிகாரத்திலும் பிற்கால நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. கீரிப்பிள்ளை தொல்காப்பியத்தில் மூங்கா என்ற பெயரில் வழங்கியுள்ளது.

"மூங்கா வெருவெலி மூவரி யணிலோ
டாங்கவை நான்குங் குட்டிக் குரிய"

— தொல். மரபியல், 6.

மூங்கா தொல்காப்பியத்தில் கிரிப் பிள்ளையைக் குறித்து வழங்கியிருப்பினும் சங்க இலக்கியத்தில் மூங்கா வென்ற பெயரோ கீரிப்பிள்ளையோ குறிப்பிடப்படாதது விளக்க முடியாத புதிராக உள்ளது. கீரிப்பிள்ளையைப் பற்றிய செய்தி தமிழிலக்கியத்தில் சிலப்பதிகாரத்தில் பஞ்சதந்திரக் கதையைக் கூறுங்கால் வருகின்றது. மராத்தி முதலிய மொழிகளில் 'மங்கூஸ்' என்ற பெயரில் கிரிப் பிள்ளை அழைக்கப்படுகிறது. வடமொழியிலிருந்து இப்பெயர் வந்ததாகத் தெரியவில்லை. மூங்கா என்ற சொல்லுடன் மராத்தியப் பெயர் நெருங்கிய தொடர்புடையது. மூங்கா என்ற சொல் ஊமை என்ற பொருளில் கீரிப்பிள்ளைக்கு வழங்கியதாகத் தோன்றுகிறது. பிற்காலத்தில் ஊமை என்ற பெயரே நிகண்டுகளில் கீரியைக் குறித்து வழங்கியுள்ளது. மராத்தியில் வழங்கும் கிரியின் பெயர் ஆங்கிலத்தில் கீரிக்குப் பெயராக வழங்கினும் மராத்திப் பெயர் தமிழிலிருந்து வந்திருக்கவேண்டும். தோட்டந் துரவுகளில் எளிதில் காணப்படும் கீரி வகையைத் தமிழில் மூங்கா என்றழைத்தனர்.

இந்தக் கீரியை (Common Mangoose) வீட்டில் வளர்க்கும் பழக்கம் இருந்தது. பேராசிரியர் மூங்கா, வெருகு, எலி, அணில் ஆகியவை ஒரு பிறப்பு என்று கருதி அவை குட்டி என்ற பெயர் பெறும் என்று கூறியது பொருத்தமின்று. விலங்கு நூற்படி இவை ஒரு பிறப்போ ஓர் இனமோ அன்று. பேராசிரியர் கீரியும் நாவியும் போல் பலவற்றைக் குட்டி என்று சிறு பான்மை கொள்ளலாம் என்றும், நாவியை மூங்காவின் விகறபம் என்றும் கொண்டது ஓரளவில் உண்மை யடிப்படையுடையது. இவை இரண்டும் ஒரே இன மென சில விலங்கு நூலார் கருதினர். மலைபடுகடாத் தில் மலையில் வாழும் விலங்காகத் 'தீர்வை' என்ற பெய ரில் ஒருவகைக் கீரி சொல்லப்பட்டுள்ளது.

"மீமிசைக் கொண்ட கவர்பரிக் கொடுந்தாள்
வரைவாழ் வருடை வன்றலை மாத்தகர்
அரவுக் குறும்பெறிந்த சிறுகட் டீர்வை"

—மலைபடுகடாம், வரி, 502-504.

மலையில் வாழும் வருடையோடு, பாம்பின் குறும்பை அடக்கிய சிறிய கண்ணையுடைய தீர்வை என்ற கீரி மலை படுகடாத்தில் கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கலாம். வருடையாடு வாழும் மலையுயரத்தில் காணப்படும் கீரி வகை நாம் தோட்டத் துரவுகளினருகில் காணும் கீரி யாக இருக்க முடியாது. மலையிலே வாழும் தனித்த ஒருவகைக் கீரியையே விலங்கு நூலார் கூறியுள்ளனர். இந்தக் கீரி இளஞ் சிவப்பாகக் காணப்படும். வாயிலி ருந்து ஒரு கறுப்புக்கோடு கழுத்துவரை இருபக்கங் களிலும் காணப்படும். இதைச் செங்கீரி என்று மலை யாளத்தில் வழங்குவர். தமிழில் பேச்சு வழக்கில் சாரைக்கீரி என்றும், கன்னடத்தில் கெம்புக் கீரி என்

றும் வழங்குவர். இந்தக் கீரிதான் ஆசியாவிலுள்ள கீரி வகைகளில் மிகப் பெரியது. தென்மேற்கு மலைத் தொடர்ச்சிகளில் (Western Ghats) உயரத்தில் காணப் படுகிறது. இந்தக் கீரி மிகவும் வல்லமை பொருந்திய தென்றும், கொடுமை வாய்ந்த தென்றும் மலையாளத் தில் கருதுவர். ஆதலின் அடங்காத சிறு பிள்ளைகளைப் பயமுறுத்த 'செங்கீரியைத்தான் இவனை அடக்க விட னும்' என்று கூறுவர். இந்தச் செங்கீரியே தீர்வை என்று சங்க நூல் குறிப்பிடும் கீரியாகும். அரவின் குறும்பை அடக்குவதில் வல்லது என்று மலைபடுகடாம் கூறுகின்றது. பாம்பை வெல்லும் விலங்காகத் தமிழ் இலக்கியத்தில் கீரியே கூறப்பட்டுள்ளது. சாரைக் கீரி யென்ற பெயர் சாரைப் பாம்பைக் கொல்வதென்று வழங்கியிருக்கலாம். இந்த மலைவாழ் கீரியை விலங்கு நூலார் 'The Stripe-necked mangoose' என்றும் 'Hespestes vitticolis' என்றும் கூறுவர். வடமொழியில் 'தமனிய நகுலம்' என்று அழைக்கப்படுவது இதுவே யாகலாம். கீரிப்பிள்ளையைப் போன்று உருவுள்ள மற்றொரு விலங்கு புனுகுப் பூனையாகும். இதை நாவி என்று பிற் கால நூல்களும் சிலப்பதிகாரமும் கூறும்,

"காசறைக் கருவு மாசறு நகுலமும்
பீலி மஞ்ஞையு நாவியின் பிள்ளையும்"

(காட்சிக்காதை, வரி ௫௨, ௫௪)

காசறைக் கரு கத்தூரிமானைக் குறிக்கும். இந்த மானி லிருந்து எடுக்கப்படும் மணமுடைய பொருளும், நாவி யிடமிருந்து பெறப்படும் மணப் பொருளும் சங்க இலக்கியத்தில் 'நானம்' எனப்படும். இதை மகளிர் கூந்தலுக்கு மணமூட்டப் பயன்படுத்தினர். கத்தூரி மான் இமயமலையில் மட்டும் காணப்படுவது. புனுகுப்

பூனைகளை ஊர்களின் அருகாமையிலுள்ள பாறைகளிலும் காடுகளிலும் மற்றும் மலைகளிலும் காணலாம். புனுகுப் பூனைகள் தமிழ் நாட்டில் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டே (Prehistoric) வாழ்ந்து வந்ததாகக் கண்டுள்ளனர். சங்க இலக்கியத்தில் இதைப்பற்றி யாதொரு செய்தியும் காணமுடியவில்லை. ஆனால் புனுகுப் பூனையின் பழைய பெயராக 'மறுவி' என்ற சொல் வழங்கியிருப்பதை நிகண்டுகளிலிருந்து தெரிகின்றோம். சேந்தன் திவாகரம் கத்தூரியின் பெயர் மறுவி, நாவி, மான்மதம், துருக்கம், நரந்தம், நானம், மறுவல் என்று கூறுகின்றது. பிங்கலந்தை நிகண்டு நாவியின் பெயர் மறுவி, மிருகமதம் என்று கூறியுள்ளது. சூடாமணி நிகண்டு நாவியின் பெயர் மறுவி என்று கூறியுள்ளது. மூன்று நிகண்டுகளும் மறுவி என்ற பெயரைக். கூறியுள்ளன. மறுவல் என்ற பெயரும் உள்ளது. சேந்தன் திவாகரம் கஸ்தூரி மானையும் நாவியையும் ஒன்ருகக் கருதி இரண்டின் பெயர்களையும் கூறியுள்ளது. மலையாளத்தில் நாவியைவெருகு என்றும், மெருகு, ஒட்டு மெரு என்றும் வழங்குகின்றனர். வெருகு என்ற சொல் காட்டுப் பூனைக்குத் தமிழிலும் மற்ற திராவிடமொழிகளிலும் வழங்குகின்றது. மெருகு என்ற மலையாளச் சொல் வெருகின் மறு உருவமோ அல்லது மறுவி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபோ என்று கருத வேண்டியுள்ளது. காட்டுப் பூனையைப் போல் முகத்தோற்றமும் உருவும் உடையதால் வெருகு என்ற பெயர் சில திராவிட மொழிகளில் புனுக்குப்பூனைக்கு வழங்கினதாகத் தெரிகின்றது. இதே தோற்றமும் இனமுமான மரநாயையும் (Toddy Cat) வெருகு என்றும், மெருப்பட்டி என்றும் சில

திராவிட மொழிகளில் வழங்கினர். திராவிட மொழிகளில் வெருகு என்ற சொல் தோற்றத்தில் ஒப்புமை காரணமாகக் காட்டுப்பூனை, கீரிப்பிள்ளை, மரநாய் ஆகியவைகளைக் குறித்து வழங்கியுள்ளது. புனுக்குப் பூனை புழுகு என்று சிலப்பதிகாரத்திலும், சிந்தாமணியிலும் உரைகளில் கூறப்பட்டுள்ளது.புனுகுப் பூனையே விலங்கு நூலார் Small Indian Civet அல்லது Niverricula Indica என்றழைப்பர்.

தொல்காப்பியத்தில் மரக்கோட்டில் வாழும் விலங்குகளின் பிள்ளைகட்குக் குட்டி என்ற பெயர் கூறப்பட்டுள்ளது. மரக்கோட்டில் வாழும் குரங்கு வகைகளைச் சங்க நூல்களில் கூறியிருப்பினும் குரங்கு போன்ற பிறிதொரு விலங்கான தேவாங்கைப் (Lemur) பற்றி ஒரு செய்தியையும் காணுதிருப்பது வியப்பை தருகின்றது. ஆனால் இந்த விலங்கு சீவக சிந்தாமணியில் கூறப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. சீவக சிந்தாமணியில் அரிய சில விலங்குகளும் மரங்களும் கூறப்பட்டுள்ளன. சீவக சிந்தாமணியில் தேவாங்கை 'மகண் மா' என்று கூறப்பட்டுள்ளது.

" மைந்தரைப் பார்ப்பன மாமகண் மாக்குழாம்
சந்தன மேய்வன தவழ்மதக் களிற்றினம் "

—சிந்தாமணி, 1902.

மனிதரைப் பார்ப்பனவாகிய மகண் மாக்குழாம் என்று கூறப்பட்டுள்ளது. மகண்மா பார்ப்பதில் ஏதோ ஒரு வியப்புக்குரிய செய்தியாயிருப்பதால்தான் 'பார்ப்பன' என்று குறிப்பிட்டுள்ளனர். இது காட்டில் வாழ்வதாகவும் சந்தன மரத்தில் காணப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. மனிதரைப் பார்ப்பதில் வியப்புக்குரிய

விலங்கு எதுவென்று ஆராய்ந்தால் இது தற்காலத்தில் தேவாங்கு என்று கூறப்படும் விலங்கே என்று கொள்ளலாம். அடர்ந்த காடுகளில் இரவிலோ மாலைக் காலத்திலோ செல்லுங்கால் விழித்த பெரிய கண்களை மூடாது உற்றுப் பார்க்கும் விலங்கு தேவாங்காகவே இருக்க முடியும் என்று ஒரு விலங்கு நூலறிஞர் சொல்வதை இது சார்பாகத் கவனிக்க வேண்டும். (During the nocturnal visits in forests none is so fearful and daring as those eyes of tiger and none so steady and unblinking as those of slow loris seldom seen..............Its bulging marble-like eyes will hypnotize anyone though his face looks like that of baby-Badshaw) தமிழ்நாட்டில் சில விடங்களில் இதைக் 'காட்டுப்பாப்பா' என்றழைக்கின்றனர். இதன் பார்வையில் மந்திர சக்தியிருப்பதாகக் கருதுகின்றனர். குழந்தைகளை நோய்களிலிருந்து காக்கத் தேவாங்குக் கயிறு போடுவது இன்றும் வழக்கமாக உள்ளது. காட்டுப்பாப்பா என்ற பெயரைப் போன்றே ஆப்பிரிக்காவில்' இதைப் 'புதர்பாப்பா' (Bush baby) என்றழைகின்றனர். மலையாளத்தில் 'குட்டி சிராங்கு' என்றும் "அரமனைக்குட்டி" என்றும், பேச்சு வழக்கில் வழங்குகின்றனர். குட்டி என்ற மலையாள வழக்கு பாப்பா என்ற பொருளையே தருகின்றது. மரக் கோட்டில் வாழும் விலங்குகளின் இளமைப் பெயர் குட்டி என்று மரபியல் கூறுவதைக் காணலாம். பாப்பா, குட்டி என்ற சொற்களே விலங்குப் பெயராகத் தேவாங்கிற்கு வழங்குவதை நோக்க வேண்டும். தேவாங்கின் முகம் பார்த்தால் ஒரு குழந்தையின் முகம் போல இருக்குமென்பர். இதன் காரணமாகவே பாப்பா என்றும், குட்டி என்றும் அழைக்கின்றனர். தேவாங்கை மலையாளத்துக் குறவர்கள் 'அரமனைக்

குட்டி' என்று கூறுவர். அரண்மனையில் வாழும் குட்டி என்பதே இதன்பொருள். அரண்மனையில் அழகுக்கு வளர்த்திருக்கலாம். இதை வளர்க்கும் வழக்கம் இன்றும் உள்ளது. "மகண் மாக்கள், அம்பொலைாயத் தூணினுன் பாவையை யாடவரென......... நோக்கி" என்று காஞ்சிப் புராணம் (நகரேற்று. 86) கூறுவதிலிருந்து இவ்விலங்கு அரண்மனைகளில் வளர்க்கப்பட்டிருப்பது தெரிகின்றது. தேவாங்கை 'வடக்கு நோக்கி' என்றும் வடமலையாளத்தில் வழங்குகின்றனர். தேவாங்கின் கண்கள் வெளிச்சத்தைத் தாங்காது. ஆதலின் ஞாயிற்றை நோக்கி நிற்காது என்பர். ஞாயிற்றின் எதிர்த்திசையில் முகத்தைத் திருப்பியிருக்கும் என்ற நம்புக்கை நிலவிவருகின்றது. இந்தக் குணத்தால் தேவாங்கு பார்க்கும் திசையை வைத்துக் கொண்டு நடுக்கடலில் கப்பல்களில் செல்வோர் திசைகளைக் காணலாம் என்று கூறுகின்றனர். இதன் காரணமாகவே தேவாங்கை 'வடக்கு நோக்கி' (Mariners Compass) என்று கூறினர். 'குட்டி சிராங்கு' என்ற சொல்லும் இதை வலியுறுத்தும். சிராங்கு என்ற சொல் தமிழிலும் மலையாளத்திலும் கப்பலோட்டி என்ற பொருளில் வழங்குகின்றது. இது அரேபியச் சொல்லாகும். திசை காணக் கப்பல்களில் பயன் படுத்தியதால் குட்டிக்கப்பலோட்டி என்ற பொருளில் இப்பெயர் தோன்றிற்று. திருவாங்கூர்ப் பகுதிகளில் இதை 'நீற்றின் கூட்டுத் தேவாங்கு' என்று அழைக்கின்றனர். காடுகளில் பெரிய இலைகளைத் தைத்துக் கூடுகட்டிக் கூட்டமாக வாழும் நெருப்புப் போன்று கடிக்கும் எறும்புகளின் முட்டைகளைத் தேவாங்கு விரும்பி உண்பதால் இப்பெயர் பெற்றது. தேவாங்கு

எறும்பு முட்டைகளையும் பறவை முட்டைகளையும் விரும்பி உண்பது உண்மையே. கன்னடத்தில் 'அடவி மனுனசன்' 'மலை மனுய்சன்' என்றழைக்கின்றனர். மனிதரைப் போலக் காணப்படுவதால் இப்பெயர் பெற்றது. 'மகண்மா' என்ற பெயரில 'மக' என்ற சொல் மனிதன் என்ற பொருளையும் குழந்தை என்ற பொருளையும் தருவதைக் கவனித்தால் இப்பெயர் தேவாங்கையே குறிக்கின்றது என்பது தெளிவு பெறும். மகன்றில் என்பது போல மகண்மா என்ற பெயரும் மனித ஒப்புமையைக் குறித்துத் தோன்றியதாக இருக்கலாம்.

மலைவாழ் விலங்குகளில் வேறொன்றைச் சீவக சிந்தாமணி கூறியுள்ளது. இந்த விலங்கு 'பூசையிற் பெரியது,' பன்மயிர்ப்பேரெலி, மலையில் அகழ்வது என்று சீவக சிந்தாமணி குறிப்பிட்டுள்ளது. இந்த விலங்கைப் பற்றிச் சிந்தாமணியில் வரும் செய்திகளிலிருந்து இந்த அரிய விலங்கு கற்பனை விலங்கன்று உண்மையான விலங்கு என்பதைத் தெளிந்து கொள்ளலாம். இந்த விலங்கிலிருந்தே எலிமயிர்க் கம்பலம் கிடைப்பதாகச் சிந்தாமணி கூறுகின்றது. இந்தப் போர்வையைத் தரும் 'எலி' எது என்பதை ஆராய்வதற்கு விலங்கு நூலறிவு இன்றியமையாதது. உரையாசிரியர் நச்சினார்க்கினியர் எலி என்றே கொண்டார். நல்லூர் ஞானப்பிரகாசர் எலி என்று கொள்வது பொருத்தமில்லை என்று உணர்ந்து எலி என்பதற்கு ஒருவகை ஆடு என்று பொருள் கொண்டார். ஆட்டின் மயிரிலிருந்து கம்பலம் செய்யப்படுவதை எண்ணியே அம்முறையாகப் பொருள் கொண்டாரெனத் தெரிகின்றது. ஆனால் எலிமயிர்ப் போர்வையைத் தந்த

'எலி' எலியுமன்று. ஆடுமன்று என்பது சிந்தாமணியில் கூறப்படும் செய்திகளை விலங்கு நூலறிவோடு ஆழ்ந்து ஆராயுங்கால் தெளிவாகின்றது.

விலங்குகளின் மயிர்த்தோலைக் கம்பலமாகவும் போர்வையாகவும் முற்காலத்தில் பயன்படுத்தின ரென்று தெரிகின்றது. இல்பொருளுவமையாக ஆமை மயிர்க் கம்பலம் என்பது இலக்கண உரைகளில் கூறப்படுவதைக் காணலாம். ஆமைக்கு மயிர் இல்லை. ஆதலின் ஆமை மயிர்க் கம்பலம் இயற்கையில் காணக் கூடியதன்று. பன்மயிர்க் கம்பலம் உள்ளதை உணர்ந்தே அதற்கு எதிராக ஆமை மயிர்க் கம்பலம் இல்பொருளுவமையாகக் கூறப்பட்டதாகத் தெரி கின்றது.

எலிமயிர்ப் போர்வையை அரசர்கள் பயன் படுத்தியது சிந்தாமணி கூறும் செய்திகளிலிருந்து விளங்குகின்றது. திறைப் பொருளாகவும், காணிக் கைப் பொருளாகவும் எலிமயிர்ப் போர்வை அரசர் களுக்குத் தரப்பட்டதாகத் தெரிகின்றது.

> " வயிரமணிக் கலன்கமழுங் கற்பகநன் மாலை
> உயிரைமதஞ் செய்யுமதுத் தண்டொடுடை யாடை
> செயிரினறுஞ் சாந்துசிலை யம்புமணி யயில்வாள்
> மயிரெலியின் போர்வையொ டெம் மன்னன் விடுத்
> தானே"
>
> —சிந்தாமணி 1874.

கலுழவேகன் எலிமயிர்ப் போர்வையோடே கலன் முதலியவற்றை வரவிட்டானென்பதை இப்பாடல் குறிப்பிடுகின்றது. அரிய பொருள்கள் அரசர்க்குத் தரப்படுவதைச் சிலப்பதிகாரமும் சிந்தாமணியும் குறிப்

பிடுகின்றன. அத்தகைய அரிய பொருள்களில் ஒன்று எலிமயிர்ப் போர்வை. இந்த எலிமயிர்ப் போர்வை குளிரைத் தாங்க ஒரு போர்வையாகவும், அழகுக்காக ஓர் அரிய ஆடையாகவும், திரைக்குரிய ஒரு துணியாகவும் பயன்பட்டதைச் சிந்தாமணி குறிப் பிடுகின்றது.

> "கொங்கு விம்முபூங் கோதை மாதரார்
> பங்க யப்பகைப் பருவம் வந்தென
> எங்கு மில்லன வெலிம யிர்த்தொழிற்
> பொங்கு பூம்புகைப் போர்வை மேயினர்"
>
> —சிந்தாமணி 2680.

முன்னர்க் கூதிர்காலத்தே குளிரை அஞ்சி மேகலையை நீக்கி முத்தையும் சிந்தினவர்கள் பின்னர்ப் பனிப் பருவம் வந்ததாகத் தொழிலினையும் புகையினையு முடைய எங்குமில்லனவாகிய எலிமயிர்ப் போர்வையை மேவினார் என்று நச்சினார்க்கினியர் கூறினார். பனிக் காலத்துக் குளிரைத் தாங்க எலிமயிர்ப் போர்வையை மாதர் பயன்படுத்தினர் என்று கூறுவதை நோக்குக.

> "உருவ மார்ந்தன வுரோமப் பட்டுடுத்
> தெரியும் வார்குழை சுடர விந்திர
> திருவின லன்னதார் திளைப்பத் தேங்குழல்
> அரிபெய் கண்ணியர்க் கரங்க ணுயினான்"
>
> —சிந்தாமணி, 2425.

செந்நிறமான உரோமப் பட்டாடையை, எலிமயிரால் செய்த பட்டாடையை ஆடவரும் அணிந்தனர் என் பதும் மேலே கூறப்பட்டுள்ளது.

> "பனிமயிர் குளிர்ப்பன பஞ்சின் மெல்லிய
> கனிமயிர் குளிர்ப்பன கண்கொளாதன

எலிமயிர்ப் போர்வைத் தெழினி வாங்கினர்
ஒலிமயிர்ச் சிகழிகை யுருவக் கொம்பனார் ''
—சிந்தாமணி, 2471.

எலிமயிர்ப் போர்வையால் செய்த உருவு திரையைச் சாந்தி கழிக்கும் அமளியைச் சுற்றி வளைத்தனர் என்று கூறுவதைக் காணலாம். எலிமயிர்ப் போர்வையை வேறு உள்துணியுடன் தைத்துத் திரையாகப் பயன்படுத்தினர். மற்றும் இவ்வெலி மயிர்க் கம்பலம் மன்னருக்குத் திரையாகத் தரும் பொருளாகச் சிந்தாமணி 2686ஆம் பாடல் கூறுகின்றது. சிலப்பதிகாரத்திலும் பட்டினும் மயிரினும் நுண்ணிதாகச் செய்த ஆடைகளைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. மயிராடை எலிமயிர்ப் போர்வை எனக் கூறப்பட்டுள்ளது. இந்த எலிமயிர்ப் போர்வையை விலையுயர்ந்த நுகர்ச்சிப் பொருள்களுடனும் (Luxuries) பொன்னுடனும் மணியுடனும் சேர்த்துச் சிலப்பதிகாரம் கூறுவது கவனிக்கத் தக்கது.

சிந்தாமணியில் இவ்வெலி மயிர்ப் போர்வையின் தன்மை நன்மை முதலியவும் குறிப்பிடப்பட்டுள்ளன. பனிப்பருவம் வந்ததும் எலிமயிர்ப் போர்வையை குளிர் நடுக்கத்தை நீக்க வெம்மை தரும் ஆடையாகப் பயன்படுத்தியதாகக் கூறப்பட்டுள்ளது.

'' செங்நெ ருப்பு ணுஞ் செவ்வெ லிம்மயிர்
அங்நெ ருப்புள வாய்பொற் கம்பலம்
மன்ன ருய்ப்பன மகிழ்ந்து தாங்கினர்
என்ன ரொப்புமில் லவர்க ளென்பவே ''
—சிந்தாமணி, 2686.

நெருப்பைத் தின்னும் எலி மயிர்க் கம்பலம், அந்த நெருப்பினளவு வெம்மையாவென்று ஆராய்ந்த

பொலிவினையுடைய கம்பலம் என்று நச்சினார்க்கினியர் உரை கூறுகின்றார். நெருப்பினைத் தின்பதென்பது நெருப்பின் சூட்டை வாங்கிய பின் விடாது வைத்திருப்பதைக் குறித்தேயாகும். நெருப்பின் சூட்டை வாங்கிய எலிமயிர்ப் போர்வை அதே நெருப்பினளவு வெம்மையாக இருக்கும் என்பதையும் குறிப்பிட்டுள்ளனர். அஃதாவது வாங்கின சூட்டை விடாது வைத்திருக்குமென்பதே யாகும்.

எலிமயிர்ப் போர்வையைப் பற்றிக் கூறிய சிந்தாமணி ஆசிரியர் ஒரு பாட்டில் அவ்வெலியையும் விளக்கியுள்ளார்.

"புகழ்வரைச் சென்னிமேற் பூசையிற் பெரியன
பவழமே யனையன பன்மயிர்ப் பேரெலி
அகழுமிங் குலிகமஞ் சனவரைச் சொரிவன
கவழயா னையினுதற் றவழுங்கச் சொத்தவே"

—சிந்தாமணி, 1898.

பூனையில் பெரியது பன்மயிர்ப் பேரெலி என்று விளக்கியுள்ளார். எலியைவிடப் பெரியது என்பதைக் குறிக்கப் 'பேரெலி' என்று குறிப்பிட்டுள்ளார். பூனையைவிடப் பெரியன என்றும் கூறியுள்ளார். ஆதலால் எலியுமன்று, பூனையுமன்று என்பது தெளிவு. ஆடெனவும் கருதமுடியாது. இதன் மயிர் பவழம் போன்று சிவந்த நிறமென்று கூறப்பட்டுள்ளது. 'பன்மயிர்ப் பேரெலி' என்று கூறப்பட்டதிலிருந்து மயிர் நிறைந்து அடர்த்தியாகப் பெற்ற எலி என்பது தெளிவாகின்றது. இவ்வெலி வாழ்ந்த இடமோ 'புகழ் வரைச் சென்னி'. உயர்ந்த மலையுச்சியில் வாழ்ந்தனவாகக் கூறப்பட்டுள்ளது. மற்றும் இவை அகழ்வதாகவும் தோண்டுவதாகவும், கூறப்பட்டுள்ள

தையும் நோக்குக. இச்செய்திகள் மிக முக்கிய மானவை. எலி மயிர்ப் போர்வையைத் தரும் எலி, உருவில் பெரிய எலி போன்றது. பூனையிலும் பெரியது. பவழம்போலச் சிவந்த நிறமுடையது. பன்மயிர்கள் அடர்த்தியாகப் பெற்றிருப்பது. மலை யுச்சியில் வாழ்வது. இதிலிருந்து அடையப்பெறும் எலி மயிர்ப் போர்வையோ மிகுந்த வெப்பமுடையது; நடுங்கும் குளிரை நீக்குவது; காற்றுப் புகாதது; மிகவும் மென்மை யுடையது; பனிக் காலத்தில் அணிவது, கிடைத்தற்கரியது. மேற்கூறிய விளக்கத் திற்குப் பொருந்தும் 'பன்மயிர்ப் பேரெலி இயற்கையில் எது என்று ஆராயுங்கால், மிகவும் வியப்புக்குரிய ஓர் உண்மை வெளிப்படுகின்றது. இந்தப் பேரெலி இமய மலையிலோ, நீலகிரி மலை முதலிய மேற்குத் தொடர்ச்சி மலைகளிலோ வாழும் ஒரு விலங்கு என்று தெளிவா கின்றது. இது விலங்கு நூலார்க் கூறும் (Weasel) இனத்தைச் சார்ந்ததென்று தெரிகின்றது. இந்த இன விலங்குகளுக்கு (Weasel family) சிந்தாமணியில் வர்ணிக்கப்பட்ட 'பன்மயிர்' (fur) இருப்பதாக விலங்கு நூலார் கூறுவர். இவ்விலங்குகள் மலைகளில் மிக வுயரத்தில் வாழ்வன. அங்குள்ள குளிரையும் பனி யையும் (Snow) தாங்கவே பன்மயிர்த் தோலைப் பெற்றுள்ளன. சிந்தாமணியில் 'பூசையிற் பெரியன' என்று இவ்வெலியைக் குறிப்பிடும் பாடலுக்கடுத்து வரும் பாடல்களில் இது சார்பான சூழலைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. 'வீழ்பனிப் பாறை' (Snow falling mountains) யும், இலவங்கம், கருப்பூர மரங்களும் கூறப்படுவதிலிருந்தும், வருடை (Tahr or mountain goat) கூறப்படுவதிலிருந்தும் உயர்ந்த மலைகளில், பனி

வீழும் மலைகளில் இவ்வெலிகள் காணப்பட்டனவாகத் தெரிகின்றது. வருடை மலையுச்சியில் வாழும் விலங்கு என்பதை விலங்கு நூலார் குறிப்பிட்டுள்ளனர். கருப்பூரம், இலவங்கம் ஆகிய மரங்கள் மலைகளில் வளர்வன. இந்தச் சூழலில் வர்ணிக்கப்பட்டுள்ள 'பன்மயிர்ப் பேரெலி' 'Weasel' இனத்தைச் சேர்ந்தது என்பதில் ஐயமில்லை. இமாலய மலையில் வாழும் ஒரு வகை (Weasel) இனத்தைச் சார்ந்த விலங்கு சிவப்பு நிறமாகவும் கருஞ்சிவப்பாகவும் காணப்படுமாம். இதை 'The Himalayan Weasel' என்பர். பாறைகளில் அகழ்ந்து வாழும். 5000 அடியிலிருந்து 16,000 அடி வரை மலையுயரத்தில் வாழும். மலைக் காடுகளில் காணப்படும். இது போன்றே (Weasel) இனத்தில் ஒரு பிரிவைச் சேர்ந்த ஒரு வகை விலங்கு நீலகிரியில் காணப்படுகின்றது. இதை 'Nilgiris Marten' என்பர். இது குடகு நாட்டிலும், திருவனந்தபுர மலைகளிலும் காணப்படுகின்றது. இது முன் பாகத்தில் சிவந்து காணப்படும். (Deep brown from head to rump, the fore-quarters being reddish) வால் மிகவும் நீண்டு உடலில் முக்கால் பங்கு அளவு இருக்கும். நீலகிரி மலையில் 1800 கி. மீ. க்கு மேல் காணப்படுவது. இதே வகையான விலங்கு (Stone Marten) இமாலய மலையிலும், காசுமீர மலைகளிலும் காணப்படுகின்றது. கற்பாறைகளிலும் மரப் பொந்திலும் வாழ்வது. இதன் உரு பூனையும் அணிலும் கலந்தது போலிருக்குமென்பர். இளஞ் சிவப்பாகக் காணப்படும். மேற்கூறிய மூன்று வகை விலங்குகளில் ஒன்றாகவேயிருக்கும். சிந்தாமணியில் கூறப்பட்டுள்ள 'பன்மயிர்ப் பேரெலி. இந்த விலங்குகளுக்கு மென்மையான மயிரை

யுடைய தோலுண்டு. சிவப்பாகவோ, கருஞ்சிவப் பாகவோ இளஞ்சிவப்பாகவோ இவைகளின் நிறம் காணப்படும். இந்த விலங்குகளை வேட்டையாடி இவைகளின் அழகிய மயிர்த் தோல்களைக் (fur) குளிரைப் போக்கும் ஆடையாகவும் அழகுக்குரிய ஆடையாகவும் தற்காலம் பயன்படுத்துகின்றனர். இவ்விலங்குகளின் மயிர்த் தோல்கள் வெம்மை தருவன, மென்மையானவை. அணிந்தால் காற்றுப் புகாதவை. ஆதலின் இந்த விலங்குகளில் ஒரு வகையே பன்மயிர்ப் பேரெலியாகும். சிந்தாமணி கூறும் எலி மயிர்ப் போர்வையைத் தரும் பன்மயிர்ப் பேரெலி விலங்கு நூலார் கூறும் 'Weasel' இனத்தைச் சேர்ந்த விலங்கு என்பது தெளிவாகும். இது 'நீலகிரி மார்ட் டென்' (Nilgiris Marten) என்ற விலங்காகவும் கருத லாம். நீலகிரி மலையில் உயரத்தில் வாழும் விலங்கு களாக விலங்கு நூலார் கூறியவைகளில் வருடை, ஊகம், கருங்குரங்கு, நீலகிரி கீரி (தீர்வை) ஆகிய வைகளை சங்க நூல்கள் குறிப்பிட்டுள்ளபோது 'நீலகிரி மார்ட்டென்' என்ற விலங்கை சீவகசிந்தாமணி கூறி யிருக்கலாம் என்று பாடல் சான்றுகளைக் கொண்டுக் கருதுவது பொருத்தமே. இந்த 'மார்ட்டென்' என்ற விலங்கை தெரிந்துள்ள துளு நாட்டினர் தங்களுடைய துளு மொழியில் 'பெரு' என்று இதை அழைக் கின்றனர். வெருகு என்பதே 'பெரு' என்று மாறின தாகத் தோன்றுகிறது. வெருகு என்ற சொல் திராவிட மொழிகளில் காட்டுப் பூனைக்கே பெரும் பாலும் உருமாறி வழங்குகின்றது. துளு மொழியில் பூனைக்கு வழங்கும் வெருகு என்ற சொல்லே 'மார்ட் டென்' என்ற அழகிய மயிருடைய விலங்கையும்

குறித்து வழங்குவது சிந்தாமணியில் பூனையிற் பெரியது என்று இதே விலங்கைப் பற்றிக் கூறும் செய்தியுடன் ஒத்திருப்பது கூர்ந்து கவனிக்க வேண்டியதாகும். ஆதலின் 'பன்மயிர்ப் பேரெலி' என்று சிந்தாமணி குறிப்பிடும் விலங்கு 'நீலகிரி மார்ட்டென்' என்று விலங்கு நூலார் கூறுவதாகவே இருக்க வேண்டும்.

"இந்திர கோப நிறத்த பன்மயிர்ப் பேரெலி யகழ்ந்து..................." என்று பிற்காலக் கூர்ம புராணம் குறிப்பிடுகின்றது. இந்திர கோபப் பூச்சியின் நிறத்தை ஒப்பிட்டுக் கூறியது மிகவும் பொருத்தம். இந்திர கோபப் பூச்சியின் உடல் சிவப்பாக, 'வெல்வெட்,' (Velvet) போலத் தொடுவதற்கு மெத்தென்று இருக்கும். இதையே எலிமயிர்ப் போர்வைக்கு ஒப்பிட்டிருப்பது மிகமிகப் பொருத்தம். பெருங்கதையிலும் வெப்பப் படுத்தற்குரியதாக "எலிப்பூம் போர்வை" (பெருங்கதை 1; 47: 179) கூறப்பட்டுள்ளது. இந்த எலிமயிர்ப் போர்வையால் ஆடவர் அணியும் சட்டைகள் தைப்பதைப் பற்றியும் சிந்தாமணி கூறுகின்றது.

> "முதுமரப் பொந்து போல முழுமையும் புண்க ளூற்றுச்
> கிதுமருந் தென்ன நல்லா ரிழுதுசேர் கவளம் வைத்துப்
> பதுமுகன் பாவை மார்பி னெய்க்கிழி பயிலச் சேர்த்த
> நுதிமயிர்த் துகிற்குப் பாயம் புகுகென நூக்கி னானே"
>
> —சிந்தாமணி, 819.

காயம் பட்டவர்களுக்குக் காற்றுப் புகாதபடி எலிமயிர்ப் படத்தினால் செய்த சட்டையை அணிவித்தாரெனக் கூறுகின்றது. எலிமயிர் ஆடை தோலாடையானதினால் உள்ளே சீலையடைச்சின சட்டை யென்று கூறுவதை நோக்குக. மார்க்கோ போலோ தனது

நூலில் 'குப்ளாய்க்கான்' என்ற அரசனின் கூடாரத்தில் அறைகளைச் சீலையடைச்சின இந்த எலிமயிர்த் தோலைத் தைத்த திரைகளால் அமைத்திருந்ததாகக் கூறுவதைக் காண்க. சீவகசிந்தாமணியில் கூட சாந்தி கழிக்கும் அமளியைச் சுற்றி திரையாக எலிமயிர்த் திரை இருந்ததாகக் கூறுவதைக் காண்க. இன்றும் மயிர்த் தோலால் செய்யப்படும் ஆடைகளுக்கு உள்ளே துணி தைத்து அணிவது வழக்கம். மயிர்த் தோலாடையானதினுல் காற்றுப் புக வழியில்லை. இத்தகைய ஆடை ஆங்கிலத்தில் 'Fur coat' எனப்படும். மேல் நாட்டில் மகளிர் கழுத்துக்கு அணியும் அரிய, விலையுயர்ந்த ஆடை இவ் விலங்குகளின் மயிர்த் தோலைப் பாடம் செய்து அமைக்கப்பட்டவையே யாகும். இதை 'Mink coat' என்று கூறுவர். இந்த விலையுயர்ந்த மயிராடைகளை அரசரும் சிமான்களும் வாங்கி மகளிர்க்குப் பரிசாகக் கொடுத்தல் வழக்கம். பல்லாயிரக் கணக்கான இவ்விலங்குகள் கனடா முதலிய நாடுகளில் இவ்வாடைக்காக வேட்டையாடிக் கொல்லப்பட்டன.

இந்த எலி மயிர்ப் போர்வையைப் பற்றிச் சிந்தாமணி கூறியிருப்பது இன்றும் உண்மையாகவுள்ளது.

> "எங்கு மில்லன வெலிம யிர்த்தொழிற்
> பொங்கு பூம்புகைப் போர்வை மேயினர்"

எனக் கூறும்படி புகழ்வாய்ந்த நடிகைகளும், அரசிகளும், சீமாட்டிகளும் இன்று இந்த ஆடைகளை (Furs) அணிகின்றனர். அரிதாகக் கிடைப்பதும் மயிரிலே வேலைப்பாடு செய்யப்பட்டதும் பொங்கிப் புகைபோல அவ்வளவு மெல்லிதாகக் காணப்பட்டதாக, சிந்தாமணி கூறிய ஆடை இன்றும் மேல் நாட்டில் வழங்குவது பெரிதும் வியப்பே. நச்சினார்க்கினியர் கூறிய உரை

சில விடங்களில் பொருத்த மின்மையை உணரலாம். நெருப்பை உண்ணும் என்றார். புகையினையும் தொழி லினையும் உடைய தென்றார். எலி மயிர்ப் போர்வை யில் நெருப்புமில்லை, புகையுமில்லை. சூட்டை வாங்கி விடாது வைத்திருப்பதால் வெம்மையுடையது. புகை போன்று மென்மையானது. பாலாவி, புகை, நுரை ஆகியவைகளை ஆடைகளின் மென்மைக்கு உவமிப்பது வழக்கம். சிந்தாமணி 1898-ஆம் பாடலில் பேரெலி இங்குலிகத்தை அகழ்ந்து அஞ்சன வரையில் சொரிவது யானையின் நுதலில் தவழும் பட்டுக் கச்சை யொத்த தென்று கூறப்பட்டுள்ளது. 'பன்மயிர்ப் பேரெலி' (Weasel) கற்பாறைகளில் வாழ்வது, தோன்றுவது என்று விலங்கு நூலார் கூறுவதைக் கவனிக்கும்போது இவ்வெலி பாறையைத் தோண்டிச் சிவந்த கற்களைத் தள்ளியதையே கற்பனையாகக் கூறினதாகத் தெரிகின் றது. (Weasels are built more for underground work to follow a mouse or rat down into the depths of its furrow)

அழகுணர்ச்சி மிக்க அக்காலத்தில் 'பஞ்சினும் மெல்லிய' மயிர்ப் பட்டாடையை, எலிமயிர்ப் போர் வையை ஆடவர் ஆடைக்கும் சட்டைக்கும் மகளிர் போர்வைக்கும் சாந்தி அமளியைச் சுற்றி வளைக்கும் உருவு திரைக்கும் குளிர்நீக்கும் கம்பலத்திற்கும் பயன் படுத்தியதைப் பற்றி சிந்தாமணி கூறுவது அரிய பெரிய உண்மையான செய்தியாகும். இது புராணச் செய்தியன்று, பொருந்தாச் செய்தியன்று என்று உணரவேண்டும். இக்கம்பலம் தரும் எலியும் எலியு மன்று; பூனையுமன்று. விலங்கு நூலார் கூறும் 'மார்ட் டென்' என்ற விலங்கு என்பதையும் தெளிய வேண்டும்.

# கஅ. கடல்வாழ் விலங்குகள்

(Marine Mammals)

சங்க இலக்கியத்தில் கடல்வாழ் விலங்குகள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன என்பதைக் கேட்டால் பலர் வியப்புறுவர். கடலில் வாழும் திமிங்கிலம் குட்டி போட்டு பால் கொடுக்கும் விலங்கே யாகும். மீன் போன்ற உருவமுடைய விலங்குகள் கடலில் உள்ளன என்பதை விலங்கு நூலார் ஆராய்ந்து கண்டறிந்தனர். இந்தியக் கடல்களில் திமிங்கிலம் (Whales), கடல்பன்றி (The Dugong), டால்பின் (Dolphin) என்ற மூன்று வகை விலங்குகள் வாழ்கின்றன. இந்த விலங்குகளில் திமிங்கிலத்தைப் பற்றித் தெளிவான செய்திகள் காணப் படுகின்றன. இவை உருவில் பெரிய மீன்கள் போன்று தோன்றினும் மீன்கள் போல முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பதில்லை. குட்டி போடுகின்றன. ஆதலின் விலங்குகளே யென்பர். திமிங்கிலத்தைச் சங்க நூல் களில் பெருமீன் என்று வழங்கினர். பெருமீன் என்று சங்க நூல்களில் வருமிடத்தில் பெரியமீன் என்று சிலர் பொருள் கொண்டது தவறு. நற்றிணையில் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் ஓர் இடத்தில் மட்டும் பெருமீன் என்பதற்குத் திமிங்கிலம் என்று பொருள் கொண்டது பொருத்தமானதாகும். பிங்கலந்தை நிகண்டு பெருமீனின் பெயர் யானைமீன், பனைமீன், திமிலம் என்று சொல்லி யிருப்பதைக் காணலாம். யானைமீனை விழுங்குமீனின் பெயர் திமிங்கிலம் என்றும், திமிங்கிலத்தை விழுங்குமீனின் பெயர்

திமிங்கிலகிலம் என்றும் பிங்கலந்தை கூறுகின்றது. யானைமீன் என்பது திமிங்கிலத்தையே குறித்து வழங்கியது. கடலானை, நீரானை என்ற சொல் மலையாளத்தில் இன்றும் திமிங்கிலத்தைக் குறித்து மீனவர்களிடையே வழங்குவதைப் பார்க்கலாம். யானைமீனையே கடலானை என்று சொல்கிறார்கள். யானைமீனை விழுங்கும் மீன் திமிங்கிலம். திமிங்கிலத்தை விழுங்கும் மீன் திமிங்கிலகிலம் என்பது கற்பனையில் எழுந்ததேயாகும். ஆனால் சங்க இலக்கியத்தில் பெருமீன் எனப்படும் யானைமீனைப் பற்றிக் (Whale) கற்பனைச் செய்திகள் இல்லை. சங்க இலக்கியத்தில் மூன்று பாடல்களில் 'பெருமீன்' என்ற பெயர் காணப்படுகின்றது.

"குறியிறைக் குரம்பைக் கொலைவெம் பரதவர்
எறியுளி பொருத ஏமுறு பெருமீன்
புண்ணுமிழ் குருதி புலவுக்கடல் மறுப்பட
விசும்பணி வில்விற் போகி பசும்பிசிர்த்
திரைபயில் அழுவம் உழக்கி உரனழிந்து
நிரைதிமில் மருங்கில் படர்தருந் துறைவன்"

—அகம், 210.

"கயிறுகடை யாத்த கடுநடை யெறியுளித்
திண்டிமிற் பரதவ ரொண்சுடர்க் கொளீஇ
நடுநாள் வேட்டம் போகி வைகறைக்
கடன்மீன் தந்து கானல் குவைஇ"

—நற்றிணை, 388.

அகப்பாடல் 210 பரதவர் எறியுளியால் தாக்கிய பெருமீனைப் பற்றிக் கூறியுள்ளது. அந்த எறியுளி எப்படி அமைக்கப்பட்டிருந்தது, பயன்படுத்தப்பட்டது என்பதை நற்றிணை 388 ஆம் பாடல் தெளிவாகக் கூறியுள்ளது. கயிற்றின் நுனியில் கட்டப்பட்டுக் கடலில்

விரைவில் செல்லும் எறியுளியை வைத்துக்கொண்டு பெரிய திமில் படகுகளில் பரதவர் நடுஇரவில் விளக்கு களைக் கொளுத்திக் கொண்டு வேட்டையாடிக் காலை யில் திரும்புவர் என்று கூறியுள்ளது. கயிற்றில் கட்டப்பட்ட எறியுளியால் தாக்கிக் கொல்லும் பெரு மீன் திமிங்கிலமாகவே இருக்க முடியும். இம்முறை யாகத் திமிங்கிலத்தையே பழைய காலத்திலும், சில காலத்திற்கு முன்னரும் வெளி நாடுகளிலும் வேட்டை யாடி வந்தனர். பல படகுகளை வைத்துக் கொண்டு வேட்டையாடுவர் என்பதை 'நிரை திமில்' என்று அகப்பாடல் கூறுவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். மார்க்கோ போலோ (Marco polo) என்பவர் 13ஆம் நூற்றாண்டில் இந்தியக் கடலில் திமிங்கில வேட்டை யைப் பற்றிக் கூறியுள்ளார். சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள எறியுளியைப் பயன்படுத்தித் தாக்கிய தையும் அந்த எறியுளிகள் வலிய கயிறுகளில் கட்டப் பட்டிருந்ததையும் சொல்லியிருக்கின்றார். அகப்பாடல் (210) இன்னும் தெளிவாக எறியுளியால் தாக்கப்பட்ட திமிங்கிலம் என்ன செய்தது என்பதைக் கூறியிருப்பது திமிங்கில வேட்டையைப் பற்றிப் படித்தவர்கள் நன்கு புரிந்து கொள்வர். மார்க்கோ போலோவும் இதே செய்தியைக் கூறியுள்ளார். எறியுளிகள் பல தாக்கிய திமிங்கிலம் இரத்தம் இழந்து துள்ளிக் குதித்துக் கடல் பரப்பை அலைக்கழிக்கும். அப்படி அலைக்கழிக்கும் போது கடலில் மூழ்கி மூழ்கி எழும். தன்னுடைய மூடித் திறக்கக்கூடிய மூக்கு வழியாக மூச்சு விடும் போது கடல் பரப்பின் மேல் நீரை வெகு உயரத்திற் குப் பீச்சியடிக்கும். அலைக்கழித்து வலிவை இழந்து இறுதியில் சோர்ந்து போய் மிதக்கும். திமிங்கில

வேட்டையாளர் கூறும் இச் செய்தியை ஒத்தே அகநானூறு 210ஆம் பாடலும் புண்ணுமிழ் குருதி புலவுக் கடல் மறுப்பட, திமிங்கிலம் பாய்ந்ததாகக் கூறியுள்ளது. கடல் பரப்பெல்லாம் இரத்தம் பாய்ந்து மறுப்பட்டதாகக் கூறியுள்ளதை நோக்குக. கடல் மீனொன்று கடல் பரப்பை மறுப்படச் செய்ய முடியாது. பெரிய திமிங்கிலமே அப்படிச் செய்ய முடியும். மறுப்படச் செய்த திமிங்கிலம் 'பசும்பிசிர்த் திரை பயில் அழுவம் உழக்கியதாகக்' கூறியதைக் கவனிக்க வேண்டும். அலைகள் மோதும் கடற் பரப்பில் சிறு துளிகள் மேலெழும்பியதாகக் (Fount of water) குறிப்பிட்டது திமிங்கிலம் நீரைப் பீச்சியடிப்பதைக் குறித்தேயாகும். எறியுளியால் தாக்கப்பட்ட திமிங்கிலம் கடலில் மூழ்கினாலும் அது பீச்சியடிக்கும் நீர்த்திவலைகளைக் கொண்டு கடலில் இருக்குமிடத்தைத் திமிங்கில வேட்டையாளர் கண்டு பிடிப்பர் என்று கூறுவர். இவ்வாறு மூழ்கியும் எழுந்தும் வாலால் வீசியடித்தும் உழக்கும் திமிங்கிலம் இறுதியில் 'உரனழிந்து' மிதக்கும் என்று திமிங்கில வேட்டையாளர் கூறுவர். வலியிழந்து கிடப்பதையே "உரனழிந்து நிரைதிமில் மருங்கில் படர்தரும்" என்று அகநானூறு கூறுகின்றது. எறியுளியால் தாக்கப்பட்ட திமிங்கிலத் தருகில் படகுகள் இருந்தால் சில சமயங்களில் திமிங்கிலத்தின் வாலால் அடிக்கப்பட்டும் பீச்சியடிக்கும் நீரால் தூக்கப்பட்டும் அவை கவிழ்வதுண்டு. திமிங்கிலத்தை இரவுக் காலத்தில் வேட்டையாடுவதும் உண்மையே. வலிய கயிற்றில் கட்டப்பட்ட எறியுளியை வைத்தே (Harpoon) கடலில் வேட்டையாடுவது அண்மைக் காலம்வரை நிலவி வந்த பழக்கமாகும். அகநானூற்றுப் பாடல்கள் இரண்டும்

கூறுவது திமிங்கில வேட்டை யென்பதில் சிறிதும் ஐயமில்லை. பெரிய கொம்புடைய சுறுமீனைக் கூட இம் முறையாகவே வேட்டையாடினரென்று தெரி கின்றது.

" கொல்வினைப் பொலிந்த கூர்வா யெறியுளி
முகம்பட மடுத்த முளிவெதிர் நோன்காழ்
தாங்கரு நீர்ச்சுரத் தெறிந்து வாங்குவிசைக்
கொடுந்திமிற் பரதவர் கோட்டுமீ னெறிய"

—குறுந்தொகை, 304.

பெரிய கொம்பன் சுறுமீன்கள் 30 அடி வரை நீண்டு வளருமென்று கூறுவர். இவ்வளவு பெரிய கொம்பன் சுறு மீன்களைத் திமிங்கிலத்தைப் போல் வேட்டையாடினரெனத் தெரிகின்றது. கூரிய வாயை யுடைய எறியுளியை உறுதியான மூங்கில் கோலில் பொருத்தி நீர்ப்பரப்பில் எறிந்து பின்னர் விசையோடு வாங்கினர் என்று கூறுவதைக் கவனிக்கவேண்டும். மிக அண்மைக் காலத்திலும் இந்த முறையிலேயே மேல் நாடுகளில் திமிங்கிலத்தையும் பெரிய மீன்களை யும் வேட்டையாடி வந்தனரென்பதை இது சார்பாகக் கருத வேண்டும்.

" அலவனொடு பெயரும் புலவுத்திரை நளிகடற்
பெருமீன் கொள்ளுஞ் சிறுகுடிப் பரதவர்
கங்குல் மாட்டிய கனைகதிர் ஒண்சுடர்
முதிரா ஞாயிற்று எதிரொளி கடுக்குங்
கானலம் பெருந்துறைச் சேர்ப்பன் "

—நற்றிணை, 219.

" மான்ற மாலை மகிழ்ந்த பரதவர்
இனிதுபெறு பெருமீன் எளிதினின் மாறி
அலவன் ஆடிய புலவுமணல் முன்றில் "

—நற்றிணை, 239.

நற்றிணையில் மேலிரு பாடல்களில் பெருமீனைப் பற்றிக் குறிப்பு வருகின்றது. பெருமீனை நடுக்கடலில் வேட்டையாடச் செல்லும் பரதவர் திரும்பித் திசை யறிந்து வருவதற்காகக் கொளுத்திக் கரையில் வைத்த சுடரொளி, உதிக்கும் இளஞாயிறுபோலத் தோன்றிய தாக நற்றிணை 219 ஆம் பாடல் கூறுகின்றது. மாலைக் காலத்துத் தாம் வருந்தாது பெற்ற பெருமீனை எளிதில் விற்றுக் கள்குடித்துப் பரதவர் களித்ததாக நற்றிணை 239 ஆம் பாடல் கூறுகின்றது. வருந்தாது பெற்ற பெருமீன் என்றது சில சமயங்களில் தானாக, இயற்கை யாக இறந்து கரையில் ஒதுங்கும் திமிங்கிலத்தைப் பற்றிய செய்தியாக இருக்கலாம். இந்தியக் கடற்கரை களில் அவ்வாறு அரிதாகத் திமிங்கிலங்கள் கடற்கரை யில் ஒதுங்குவதுண்டு. அதை மீனவர் உண்பதுண்டு. வேட்டையாடுங்கால் புண்ணுறப் பெற்ற திமிங்கிலங் கள் தப்பியோடிச் சில சமயங்களில் கடற்கரையில் மிதப்பதுண்டு. ஆகவே நற்றிணையில் குறிப்பிடப்படும் பெருமீன் திமிங்கிலமே. இதற்குப் பெரிய மீன் என்று வெறுமனே பொருள் கொண்டது தவறு. இது போன்றே 'பெருமரம்' என்று தனியாக ஒரு மரத் தைக் குறிப்பிட்டு வருமிடங்களில் பெரிய மரம் என்று தவறுதலாகப் பொருள் கொண்டுள்ளனர். பெருமரம் என்ற பெயர் இன்றும் நாட்டு மக்களிடையே மிக உயர மாக வளரும் தனித்த ஒரு மரத்தைக் குறித்து (Ailanthes excelsa) வழங்குவதை அறியாது பொருள் எழுதியுள் ளனர். பெருமீன், பெருமரம், பெருநாள், பெருஞ் சோறு, பெரும்பலி ஆகிய சங்க நூல் வழக்குகள் குறிப்பிட்ட, தனிப்பட்ட ஒரு பொருளைத் தருவதை உணராது பொதுப்படச் சிலர் பொருள் கூறிச் சென்றனர்.

திமிங்கிலத்தைப் பெருமீன் என்று அழைத்தனர் என்று தெளிந்தோம். திமிங்கிலத்தில் எந்த வகைத் திமிங்கிலம் அகநானூற்றில் (210இல்) சொல்லப்பட்டுள்ளது என்பதையும் உய்த்துணரலாம். எறியுளி பொருத ஏமுறு பெருமீன் புண்ணுமிழ் குருதி புலவுக் கடல் மறுப்பட விசும்பணி வில்லிற் போகிப் பசும் பிசிர் திரைபயில் அழுவத்தில் விட்டு உழக்கி உரனழிந்து நிரைதிமில் மருங்கில் ஒதுங்கியதாகக் கூறப்பட்டுள்ளது. விசும்பணி வானவில்லிற் பாய்ந்து சென்றதாகக் கூறியதைக் கவனிக்க வேண்டும். விசும்பின் நிறம் நீலம். கடலின் நிறமும் நீலம். வானவில் பல நிறங்களையுடையது. நீலமும் சிவப்பும் இரண்டு ஓரங்களிலும் இடையில் மற்ற நிறங்களுடன் வானவில் காணப்படும். இந்தியக் கடலில் காணப்படும் பெரிய திமிங்கிலம் 'Blue Whale' என்று அழைக்கப்படும், இது நீல நிறமான உடல் உடையது. இதுதான் கடலில் பெரும்பாலும் காணப்படுவது. இதன் அடிப்பாகம் மஞ்சள் நிறமும் உடலில் சில பாகங்களில் வெண்மையும் கருமையும் ஆகிய நிறங்களும் காணப்படும். நீலநிறமான திமிங்கிலம் கடற்பரப்பு மறுப்படச் சிவந்த இரத்தம் விட்டுக் கடலில் துள்ளிப்பாயும்போது வானவில்லைப்போலக் காணப்பட்டது இயற்கையே. பாதுகாப்பைத் தேடும் திமிங்கிலம் என்ற பொருளில் 'ஏமுறு பெருமீன்' என்றழைக்கப்பட்டது. அகநானூற்றில் கூறப்பட்ட திமிங்கிலம் Blue Whale என்பதே. இது 74 அடி நீளம் வளர்வதுண்டு. 80 டன் (Tonnes) நிறையுடன் காணப்படும் இந்தத் திமிங்கிலத்தை Balenoptera Musculus என்றழைப்பர்.

பெருமீனைப் போன்றே திமிங்கில வகையைச் சேர்ந்த ஒரு வகைத் திமிங்கிலத்தைப் பனைமீன் என்று மதுரைக்காஞ்சி குறிப்பிட்டுள்ளது.

" பனைமீன் வழங்கும் வளைமேய் பரப்பின்
வீங்குபிணி நோன்கயி றரீஇ யிதைபுடையூக்
கூம்புமுதன் முருங்க வெற்றிக் காய்ந்துடன்
கடுங்காற் றெடுப்பக் கல்பொரு துரைஇ
நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் போல "

—மதுரைக்காஞ்சி, 375-379.

பனைமீன் பிங்கலந்தை நிகண்டுப்படி ஒரு பெருமீனாகும். பெருமீனின் பெயர் யானைமீன், பனைமீன் திமிலம் என்று பிங்கலந்தை கூறும். கம்பராமாயணத்தில் பனைமீனைப்பற்றிச் செய்தி வருகின்றது.

" ஒள்ளிய பனைமீன் றுஞ்சுந் திவலைய "

—கம்பரா. கடறுவுபடலம். 23.

" ........பனைமீன் றிமிலோடு தொடர்ந்து துள்ள "

—கம்பரா. கடறுவுபடலம். 50.

இதைத் 'தாலமீன்' என்றும் குறிப்பிடுகின்றார்

" உய்த்த கூம்புடை நெடுங்கல மோடுவ கடுப்பத்
தைத்த அம்பொடும் திரிந்தன தாலமீன் சாலம் "

—கம்பராமாயணம், 6-6-25

அம்புகளால் தாக்கப்பட்ட மீன்கள் பெரிய மரக் கலங்கள் ஓடுவதுபோல் ஓடின என்று கம்பர் கூறுகின்றார். பனைமீன் பெருமீன் எனப்பட்டதால் இஃது ஒரு வகைத் திமிங்கிலமே எனத் தெரிகின்றது. தக்கயாகப்பரணிக்குப் பழைய உரை எழுதினவர் 'யானையை விழுங்கு மீன்கள் இக்கடலிலுமுள, அவை பனைமீனென்றும் யானை மீனென்றும் மோங்கிலென்றும் அனுவிஷமென்றும் பெயருடையன' என்றார்.

யானையை விழுங்கு மீன்கள் பனைமீனென்றும் யானைமீனென்றும் பெயருடையன என்று கூறி யுள்ளதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். யானைமீன் திமிங்கில மென்பது விளக்கப்பட்டுள்ளது. யானையை விழுங்கு மீன் என்று பனைமீனும் கூறப்படுவதால் இதுவும் திமிங்கில வகையைச் சேர்ந்ததென்றே கொள்ளவேண்டும். தினையென்ற சொல் சிறுமையை யும் பனையென்ற சொல் பெருமையையும் குறிக்கும் என்பது திருக்குறளாட்சியிலிருந்து தெளிவு பெறும். ஆதலின் பனைமீன் என்றதற்குப் பொருள் பெருமீன் என்பதே. பனைமீனை வடமொழியில் தாலமீன் என்றனர். பனை மரத்திற்கும் பனைமீனுக்கும் யாதொரு தொடர்புமில்லை. இதை யுணராது சிலர் பனைமீன் என்பதற்குப் பனையன் என்றும், பனையன் றேளி மீன் என்றும் பொருள் கொண்டனர். பனையன், பனையன்றேளி என்ற மீன் கெளுத்தி மீன் வகையைச் சார்ந்த பனையேறிக் கெண்டை எனப்படும் மீனுகும். இந்தப் பனையேறிக் கெண்டைக்கும் (Anabas Scandens or Climbing Perch) பனைமீனுக்கும் யாதோர் ஒற்றுமை யுமில்லை. பனையேறிக் கெண்டை பெரிய மரக்கலம் போல் பெரிதன்று. பெருமீன் என்று கொள்ள முடி யாது. இது நிலத்தில் நகரக் கூடியதாகையாலும் நிலத்தில் நெடுநேரம் வாழக் கூடியதாலும், மேலேறக் கூடியதாலும் கற்பனையாகப் பனைமரத்தில் ஏறும் என்று கொண்டு பனையேறிக் கெண்டை என்றனர். ஆனால் பனைமீன் இதுவன்று.

"உள்வளைந் துலாய சின்னை யொண்சுருப் பனைமீ னாறை
தெள்விளித் திருக்கை தந்தி திமிங்கில மிரிந்து பாய்ந்த"

—கந்தபுராணம், கடல்பாய்படலம்—11

கந்த புராணத்தில் கூறப்படும் பனைமீன் பனையேறிக் கெண்டையன்று. தந்தியென்பது யானை மீன் என்றே தெரிகின்றது. திமிங்கிலமும் கூறப்பட்டுள்ளது. பனைமீன் என்பது யானைமீன் போன்றதொரு சொல் வழக்கு. பெரியதைக் குறிக்க யானையென்ற சொல்லை அடையாகக் கொடுத்துச் சொல்லமைத்துக் கொள்வது நூல் வழக்கும் பேச்சு வழக்குமாகும். பனையென்ற சொல்லும் அதே பொருளில் அடைமொழியாக அக்காலத்தில் வழங்கியதையே பனைமீன் என்ற சொல் வழக்குக் காட்டுகின்றது. பனைமீன் வழங்கும் வளைமேய்ப் பரப்பில் கடுங்காற்றெடுத்துப் பாய்மரம் முறிந்து பாய்கள் கிழிந்து, கயிறுகள் தளர்ந்து நெடுஞ்சுழலில் மாட்டிய கப்பலின் நிலைமை என்ன வென்று சொல்ல முடியும்! ஏற்கனவே காற்றால் அலைக்கழிக்கப்பட்ட கப்பல் பனைமீனால் தாக்கப்பட்டால் என்ன ஆகும் என்பதை உய்த்துணர வைக்கவே "பனைமீன் வழங்கும் பரப்பில்" நெடுஞ் சுழலில் கடுங்காற்றால் அலைக்கழிப்பட்ட கப்பலென்று கூறியுள்ளனர் என்பதைத் தெளிந்து கொள்ள வேண்டும். இந்தியக் கடல்களில் நீலத் திமிங்கிலத்தைப் போன்று வேறு திமிங்கிலங்களும் உள்ளன. இவைகளில் ஒன்றாகப் பனைமீனைக் கொள்ளவேண்டும். (Three other species of Balaenoptera occur in Indian Seas and are likely to be stranded in the Indian shores. The Finner Whale or Common Rorquals is second in size to the Blue Whale with average length of 65 ft.) நான்கு வகைத் திமிங்கிலங்கள் உள்ளன என்பர். நீலத் திமிங்கிலத்திலிருந்து வேறுபட்ட மற்றோர் இனத் திமிங்கிலம் இந்தியக்கடல்களில் காணப்படுகின்றது. இது செம்

மீன் (Sperm Whale) என்று அரிதாகச் சில இடங்களில் வழங்கப்படும். இதற்கு மிகப் பெரிய தலை உண்டு. இத்தலையில் நிறையக் கொழுப்பு இருக்கும். இதனால் பெருந்தலைத் திமிங்கலமென்றும் கூறுவர். இதன் வயிற்றிலிருந்து கிடைக்கும் மணமுடைய பொருளே மீனம்பர் எனப்படும். இந்த மீனம்பர் செம்மீன் வயிரம் என்றழைக்கப்படும். கடல்படு ஐந்து செல்வங் களில் ஓர்க்கோலை என்று அழைக்கப்படுவது இந்த மீனம்பரென்றே தெரிகின்றது. இந்த மீனம்பரை (Ambergis) மருந்துப்பொருளாக இன்றும் பயன்படுத்து கின்றனர். திமிங்கிலங்களில் ஒருவகைத் திமிங்கிலமே பனைமீன் என்று கொள்ளவேண்டும்.

பிங்கலந்தை நிகண்டு பெருமீனெனக் கூறுவதில் திமிலம் என்பதொன்று உள்ளது. இந்தத் திமிலம் என்பதும் திமிங்கில வகையைச் சேர்ந்ததே. பெரு மீனைத் திமிலம் என்று கூறிய பிங்கலந்தை அதை யானைமீனாகக் கொண்டு அதை விழுங்கும் மீன் திமிங்கிலம் என்றும் திமிங்கிலத்தை விழுங்கும் மீன் திமிங்கிலகிலம் என்றும் கூறிற்று. திமிங்கிலத்தை விழுங்கும் திமிங்கிலம் இயற்கையில் கிடையாது. நீலத் திமிங்கிலம் கடலில் உள்ள ஒருவகை இறுவைத் தின்றே வாழ்கின்றது. பெருந்தலைத் திமிங்கிலம் கடம்பான் (Cuttle fish) மீனைத் தின்று வாழ்கின்றது. திமிங்கிலத்தைத் தின்று வாழும் திமிங்கிலம் கற்பனைச் செய்தியாகும். திமிங்கிலத்தில் பல அளவின உள்ள தைக் கண்டு இப்படி எழுதினர் போலும். திமிலம் என்ற திமிங்கிலத்தைக் குறிக்கும் சொல் தமிழ்ச் சொல்லே என்று தெரிகின்றது. திம்மை, திமிலி,

திமைத்தல் என்ற சொற்களெல்லாம் பருமையையும் தடித்த உருவையும் குறிக்கும். திமிலம் என்ற சொல்லும் பருமையான, தடித்த உருவுடைய மீனைப்போன்ற திமிங்கிலத்திற்கு வழங்கியிருக்கலாம். திமிலம் என்ற சொல் பெருமீனைக் குறித்து வழங்கியது. திமிலத்திற்கும் பெரிய மீனை வடமொழியில் திமிங்கிலம் என்று பெயரிட்டுத் திமிலத்தைத் தின்னுவது என்ற பொருளில் படைத்துக் கொண்டுள்ளனர் என்று தெரிகின்றது. திமிங்கிலத்திற்கும் பெரிய மீனைத் திமிங்கிலகிலம் என்றனர். கம்பர் 'தேசமு நாலுஞ் சொல்லுந் திமிங்கிலகிலங்களோடு' என்று பாடியுள்ளார். திமிங்கிலம், திமிங்கிலகிலம் என்ற சொல் வழக்குகள் திமிலம் என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து வழங்கியதெனத் தெரிகின்றது. திமிங்கிலம் என்ற சொல் வடமொழியிலிருந்து வந்த இந்தி, மராத்தி முதலிய மொழிகளில் வழங்கவில்லை. திராவிடமொழிகளிலேயே வழங்குகின்றது. வடமொழியில் 'திமி என்றும் வழங்குகின்றது. திமில் என்ற சொல் பெரிய படகு, மரக்கலம் என்ற பொருளில் தமிழில் வழங்குகின்றதும் கவனிக்கத்தக்கது.

தக்கயாகப்பரணி உரையில் யானைமீன், பனைமீன் கூறப்பட்டிருப்பதோடு மோங்கிலென்றும் அனுவிஷமென்றும் இரு பெரு மீன்கள் பெயர்களை உரையெழுதினவர் கூறியுள்ளார். மோங்கில் என்பது ஓங்கிலாகும். சந்தி பிரிக்குங்கால் மோங்கிலென்று தவறுதலாகப் பதிப்பித் துள்ளனர். ஆழ மறியும் ஓங்கில், மேளமறியும் அரவம் என்பது ஒரு முதுமொழி. ஓங்கிலென்றே அரிதாக மக்களிடையே பேச்சு வழக்கில் வழங்கு

கின்றது. இந்த ஓங்கிலென்பது Dolphin ஆகலாம். அல்லது Junny என்ற பெரியதொரு மீனாகவும் இருக்க லாம். இதைச் சில தமிழ் நாட்டு மீனவர் கள்வேலன் என்றும் வழங்குவர். கொம்பன் சுறாவை 'வேளா' என்று அழைப்பர். இந்த மீன் (Dolphen) வலையில் தப்பித் தவறி அகப் பட்டால் உடனே வெளியே எடுத்து விடுவர். இது வலையில் அகப்பட்டு இறந்தால் பெரிய பாவம் என்று கருதுவர். இந்த மீனை நம் பழைய மூதாதைகளெனவும், கடல் புத்திரர் எனவும் கருதுவர். கடல் புத்திரர் என்ற பெயர் இன்றும் வழங்குகின்றது. இந்த மீனைப் பற்றிப் பழங்குடி மக்க ளிடையே பல கதைகள் வழங்குகின்றன. கிரேக்க நூல்களிலும் விவிலிய நூலிலும் இந்த மீனைக் கடவுள் தன்மை மிகுந்த விலங்காகவும் கடல்வாழ்நருக்கு வழி காட்டியாகவும் கூறப்பட்டுள்ளது. ஓங்கிலைப் பெரு மீனாகக் கொண்டனர். இதுபோன்ற கடல்பன்றி (Dugong) எனப்படும் மற்றொரு கடல் வாழ் விலங்கை யும் பெரு மீனாகக் கொண்டனர். ஆனால் இவைகளைப் பற்றிச் சங்கநூல்களில் யாதொரு செய்தியுமில்லை ஆதலின் சங்க நூல்களில் குறிப்பிடப்படும் பெருமீன் திமிங்கிலமே (Whale) என்பதில்யாதோர் ஐயமுமில்லை.

## ககூ. பறக்கும் விலங்கு

### (Indian Flying Fox)

சங்க இலக்கியத்தில் வெளவாலைப் பற்றி சில பாடல்கள் கூறுகின்றன. வெளவால் விலங்கு நாற்படி பறக்கும் விலங்காகக் கருதப்படும். வெளவால் முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பதில்லை. குட்டி போட்டு வளர்க்கின்றது. ஆதலின் விலங்காகக் கருதப்படும்.

" பசைபடு பச்சை நெய்தோய்த் தன்ன
சேயுயர் சினைய மாச்சிறைப் பறவை
பகலுறை முதுமரம் புலம்பப் போகி"

—அகம், 244.

" வேம்பின் ஒண்பழம் முணைஇ இருப்பைத்
தேம்பால் செற்ற தீம்பழன் நசைஇ
வைகுபனி உழந்த வாவல் சினைதொறும்
நெய்தோய் திரியில் தண்சிதர் உறைப்ப"

—நற்றிணை, 279.

" உள்ளூர் மாஅத்த முள்ளெயிற்று வாவல்
ஓங்கல் அஞ்சினைத் தூங்குதுயில் பொழுதின்
வெல்போர்ச் சோழர் அழிசியம் பெருங்காட்டு
நெல்லியம் புளிச்சுவைக் கனவி யாஅங்கு"

—நற்றிணை, 87.

" தாஅ வஞ்சிறை நொப்பறை வாவல்
பழுமரம் படரும் பையுண் மாலை"

—குறுந்தொகை, 172.

" குறுஞ்சினை வேம்பி னறும்பழ முணீஇய
வாவ லுகக்கு மாலையும்"

—ஐங்குறுநூறு, 339.

" செல்லிய முயலிப் பாஅய சிறகர்
வாவ லுகக்கு மாலையாம் புலம்ப"

—ஐங்குறுநூறு, 378.

மாலைக் காலத்தில் பழமரங்களைத் தேடி வெளவால் போவதைச் சங்க நூல்கள் சொல்லியுள்ளன. தமிழ் நாட்டில் பழமரங்களைத் தேடிச் செல்லும் பழந்தின்னி-வெளவால் விலங்கு நூற்படி Indian Flying Fox அல்லது pterodus giganteus என்றழைக்கப்படும். இது துரிஞ்சில் என்று அழைக்கப்படும் வெளவாலின் வேறானது. வெளவால் வேப்பம் பழத்தையும் இலுப்பைப் பழத்தையும் விரும்பி உண்பதாகச் சங்க நூல்கள் கூறுவது உண்மைச் செய்தியே யாகும். உள்ளூர் மாமரத்தில் தங்கியிருந்த வெளவால் அழிசிக் காட்டு நெல்லிக்காயின் புளிச்சுவையை விரும்பிக் கனவு கண்டதாக நற்றிணை 87ம் பாடல் கூறியுள்ளது. பழந்தின்னி வெளவால் கள் மாமரத்தின் பூவை விரும்பி உண்ணும் என்று விலங்கு நூலார் கூறியுள்ளனர். பனிக்காலத்தில் வெளவால் பனியைப் பொருட் படுத்தாது செல்வது கூறப்பட்டுள்ளது. வெளவாலின் சிறகு பாய் போன்ற சிறகு என்றும் பச்சைத் தோலில் நெய் பூசினாற் போல இருக்கும் என்றுங் கூறியது அழகிய விளக்கம். சங்க நூல்களில் வெளவாலை வாவல் என்றனர். இப்பெயர் இன்றும் மலையாளத்தில் வழங்குகின்றது. 'கடவாதல்' என்றும் மலையாளத்தில் கூறுவர்.

———

## உ௦. வளர்ப்பு விலங்குகள்

(Domesticated animals)

சங்க நூல்களில் காணும் செய்திகளிலிருந்து சங்க காலத்தில் வீட்டிலும் நாட்டிலும் பழக்கி வளர்த்த விலங்குகள் எவை யெனக் காணலாம். சங்க காலத்தில் ஆடு, மாடுகளைப் போற்றி வளர்த்தனர். எருமைகளை வளர்த்தனர். இவை தவிர ஒட்டகம், கழுதை, கோவேறு கழுதை ஆகியவைகளையும் பயன்படுத்தின ரென்று தெரிகின்றது. அரசர்கள், வணிகர்கள் முதலியோர் யானை, குதிரைகளைப் பயன்படுத்தி வந்தனர். வீட்டு விலங்குகளென்று சங்க நூல்களில் நாய் ஒன்றுதான் கூறப்பட்டுள்ளது. வீட்டுக்குள் பழக்கப்பட்ட விலங் காகப் பூனையைப் பற்றிக் கூறப்படாமலிருப்பது வியப்பே. சங்க நூல்களில் வீட்டுப் பூனையைப் பற்றி யாதொரு செய்தியுமில்லை. "வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்" என்ற மரபியல் சூத்திர வரிக்குப் பொருள் கூறிய பேராசிரியர் "வெவ்வாய் வெருகென்ற தனூற் படப்பை வேலியும் புதலும் பற்றி விடக்கிற்கு வேற்றுயிர் கொள்ளும் வெருகினை இல்லுறை பூசை யின் பெயர் கொடுத்துச் சொல்லலும் அமையு மென்றவாறு" என்று கூறினர். வெருகிற்கு இல்லுறை பூசையின் பெயர் கொடுக்கப்பட்டது என்று பேராசி ரியர் கருதியது பொருத்தமன்று. காட்டு விலங்குகளாக, பழக்கப்படா விலங்குகளாக இருந்தவையே பின்னர் மக்களால் பழக்கப்பட்டு நாட்டு விலங்குகளாகவும், வீட்டு விலங்குகளாகவும் மாறின. சங்க காலத்தில்

வீட்டுப்பூனை இருக்கவில்லை என்பது சங்க நூல்களி லிருந்தே உணரலாம். இல்லாத வீட்டுப்பூனையின் பெயரால் சங்க காலத்தில் இருந்த வெருகிற்குப் பெயரிட் டழைத்தனர் என்று கூறுவது பொருத்தமன்று என்பது விளங்கும். பேராசிரியர் காலத்தில் வீட்டுப்பூனை இருந்ததைக் கருதி, அதற்குப் பூசை யென்ற பெயர் சேரநாட்டில் வழங்கியதை எண்ணி இல்லுறை பூசையின் பெயர் காடுறை வெருகிற்கு வழங்கும் என்று கருதினர். பரிபாடலில் பூசையென்ற சொல் பயின்று வரினும் இச்சொல் வீட்டுப் பூனையைக் குறித்து வழங்கி யதாக உறுதியாகக் கூறமுடியாது. பழமொழியிலும், சிறுபஞ்ச மூலத்திலும் வரும் பூசை யென்ற சொல் சங்க காலத்திற்குப் பிற்பட்டது. தொல்காப்பியர் காலத்தில் வீட்டுப்பூனை இருந்ததென்று கருத முடியாது. உலகிலே எகிப்தில்தான் முதன் முதலில் வீட்டுப் பூனை பழக்கப்படுத்தப் பட்டதாகத் தெரி கின்றது. வீட்டுப்பூனையைப் பற்றிச் சங்க நூல்களில் யாதொரு குறிப்புமில்லாததால் இது சங்க காலத் திற்குப் பிறகு தமிழ் நாட்டிற்கு வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கலாம். சங்க காலத்தில் நாய்களை வளர்த்து வந்தனர். மனைவாழ் ஞமலியைப் பற்றிப் பல செய்திகள் வருகின்றன. வேட்டை நாயைப்பற்றியும் செய்திகள் காணப்படுகின்றன. கட மான்களையும், காட்டுப் பன்றியையும் வேட்டையாட வேட்டை நாய்களைப் பயன்படுத்தியதை முன்னரே விளக்கியுள்ளேன். வேட்டுவர்கள் வேட்டை நாயைப் பயன்படுத்தினர். "கானுயர் வாழ்க்கைக் கதநாய் வேட்டுவர்" என்று புறநானூறு (33) கூறுகின்றது. நாயை ஞமலி என்றும், ஞாளி என்றும் அழைத்தனர்.

விலங்குகளில் நாய்தான் மனித வரலாற்றில் மிகப் பழங் காலத்தில் பழக்கப் படுத்தப்பட்டது.

சங்க காலத்தில் மாட்டினத்தையும் ஆட்டினத்தை யும் விரும்பி வளர்த்தனர். இவைகளை விரும்பி வளர்த் தோர் கோவலர், ஆயர் எனப்பட்டனர். முல்லை நிலத் தில் மாடும், ஆடும் மந்தைகளாக வளர்க்கப்பட்டன. தமிழ்நாட்டில் இன்றும் கொங்கு நாட்டிலே காங்கேயம் பகுதியில்தான் சிறந்த உயர்ந்த இன மாடுகள் காணப் படுகின்றன. இந்தக் காங்கேய இனமாடுகள் சங்க காலத்திலேயே இருந்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

> "சேண்பரன் முரம்பி னீர்ம்படைக் கொங்கர்
> ஆபரந் தன்னபல் செலவிற்பல்........"

—பதிற்றுப் பத்து, 77. வரிகள், 10-11.

> "கயிறுகுறு முகவை மூயின மொய்க்கும்
> ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த"

—பதிற்றுப்பத்து, 22. வரிகள். 14-15.

கொங்கர்கள் நிறைய மாடுகளை உடையவர்கள் என்று பதிற்றுப்பத்து இரண்டு இடங்களில் குறிப்பிடுவதி லிருந்து சங்க காலத்திலேயே காங்கேய இனமாடுகள் கொங்கு நாட்டில் பரவியிருந்தன என்பது விளங்கும். இந்தக் காங்கேய இனமாடுகளைக் 'காரி' என்று கலித் தொகை குறிப்பிடுகின்றது.

> "மணிவரை மருங்கின் அருவி போல
> அணிவரம் பறுத்த வெண்காற் காரியும்
> மீன்பூத் தவிர்வரும் அந்திவான் விசும்பு போல்
> வான்பொறி பரந்த புள்ளி வெள்ளையுங்"

—கலி, 103.

" வள்ளுருள் நேமியான் வாய்வைத்த வளைபோலத்
தெள்ளிதின் விளங்குஞ் சுரிநெற்றிக் காரியும்
ஒருகுழை யவன்மார்பில் ஒண்டார்போ லொளிமிகப்
பொருவறப் பொருந்திய செம்மறு வெள்ளையும்
பெரும்பெயர்க் கணிச்சியோன் மணிமிடற் றணிபோல
இரும்பிணர் ரெருத்தி னேந்திமிற் குராலும்
அணங்குடை வச்சிரத்தோன் ஆயிரங் கண்ணேய்க்குங்
கணங்கொள் பல்பொறிக் கடுஞ்சினப் புகரும்
வேல்வலா னுடைத்தாழ்ந்த விளங்குவெள் துகிலேய்ப்ப
வாலிது கிளர்ந்த வெண்காற் சேயுங்"

—கலி, 105.

சுரி நெற்றி, வெண்கால், கருமை நிறம் ஆகிய குணங்களையுடைய காளை காங்கேயம் இனத்தைச் சேர்ந்தவை யென்பதில் ஐயமில்லை. இந்த இனச் சார்பான காளையையே 'மயிலைக்காளை' என்று இக் காலத்தில் அழைப்பர். காரியைச் சிறப்பாகக் கலித் தொகை கூறுவதையும் காணலாம். இது தவிர சிவந்த உடலில் வெள்ளைப் புள்ளி உடைய மாடும், கபிலை நிறமுடைய குரால் மாடும், செம்மறுவுடைய வெள்ளை மாடும், காலில் வெள்ளை நிறமுடைய சிவந்த நிறமுடைய மாடும் கலித்தொகையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் காரியைத்தவிர மற்ற நிறமுடைய மாடுகள் தனித்த இனமாகக் கருத முடியாது. மற்றவை யெல்லாம் கலப்பினமாகவே (Nondescript) கருத வேண்டும். காரி, வெள்ளை, சிவலை என்று நிறத்தி னடிப்படையாகக் கலித்தொகையில் வழங்கப்பட்ட பெயர்கள் இன்றும் வழங்குகின்றன. சங்க காலத்தி லேயே மாடுகளின் இனவளர்ச்சிக்காகப் பொலிகாளை களைப் போற்றி வளர்க்கும் வழக்கம் இருந்தது. நல்லேறுகளை நிரையில் சேர்த்து மேய்ச்சலுக்கு

அனுப்பும் வழக்கம் இருந்த தென்பதும் சங்க நூல்களி விருந்து தெரிகின்றது. "ஏறுடைப் பெருநிரை" என்று அகம் 213 ஆம் பாடல் கூறுவதைக் காணலாம். "துளங்கிமில் நல்லேற்றினம்" என்று கலிப்பாடல் (106) கூறுவதைக் கவனிக்க வேண்டும். பொலிகாளை "நல்லேறு" என்று சங்க நூல்களில் அழைக்கப்படும். எருமைகளைக் கோட்டினம் என்றும், பசுக்களைக் கோவினம் என்றும், ஆடுகளைப் புல்லினம் என்றும் கலித்தொகை அழைக்கின்றது. பசுக்களை நல்லினம் என்றும் அழைக்கின்றது. குடப்பால் கறக்கும் மாடுகளைக் 'குடஞ் சுட்டு நல்லினம்' என்று கூறுவதைக் காணலாம்.

எருமைகளை நீர் நிறைந்த சூழ்நிலையான மருதத்தி லேயே கூறியுள்ளனர். எருமையைக் 'காரான்' என்று அழைத்தனர். மாடு, எருமைகளின் மேய்ச்சல் முறை களையும் பழந்தமிழர் நன்கு தெளிந்திருந்தனர். மாடுகள் புல் மேய்வதற்கென்றே புல் முளைத்த நிலங்களை விட்டிருந்தனர். "விடுநில மருங்கிற் படுபுல் லார்ந்து" என்று மணிமேகலை கூறுவதைக் காணலாம். மாடுகளை யும் எருமைகளையும் விடியற்காலத்தில் மேய்க்கும் வழக்கம் இருந்தது. வெயிற் காலத்தில் விடியற்காலை யில் மேய்ப்பது சிறந்த பழக்கம் என்று இக்காலத்து அறிஞரும் கூறுகின்றனர். (The grazing habits must be changed in summer months by allowing the animals to graze in the morning and evening instead of moontime to avoid exposure to the sun during the hottest part of the day (Dr. D. N. Mullick - Physiological efficiency of animals in the tropics - Indian Farming. February 1961) இதே கருத்தைப் பழந்தமிழரும் கொண்டிருந்தனர். "எருமை

சிறுவீடு மேய்வான் பரந்தன காண்" என்று ஆண்டாள் கூறுவதைக் காணலாம். விடியற்காலையில் மாட்டை மேய்ச்சலுக்கு அனுப்பும் வழக்கம் இருந்தது. பிற் பகலில் மாடுகளை மேய்க்க விடுகையைப் 'பெருவீடு' என்று திருப்பள்ளி யெழுச்சி வியாக்கியானத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆட்டினத்தில் செம்மறியாடு, வெள்ளாடு என்று இரு இனங்கள் வழங்கப்பட்டன. யாடு, மை என்ற சொற்கள் ஆட்டினத்திற்குப் பொதுவாக வழங்கின. துரு துருவாடு, துருவை என்ற சொற்கள் செம்மறி யாட்டைக் (Sheep) குறித்து வழங்கின.

"தோப்பிக் கள்ளொடு துருஉப்பலி கொடுக்கும்"

—அகம், 35

"ஆடுதலைத் துருவின் தோடே மார்ப்பக்"

—அகம், 274.

"சிறுதலைத் துருவின் பழுப்புறு விளைதயிர்"

—அகம், 394.

"ஆடுதலைத் துருவின் தோடுதலைப் பெயர்க்கும்"

—நற்றிணை, 169.

செம்மறியாடுகளை மந்தையாக இடையர் வளர்த்தனர். ஆட்டுமந்தை தோடு எனப்பட்டது. செம்மறியாட் டைப் போல் வெள்ளாட்டையும் (goats) வளர்த்தனர். துரு வென்ற செம்மறி யாட்டின் பெயர் அதன் செம்மை கலந்த நிறத்தைக் குறித்து வழங்கிற்று. அது போல் வெள்ளை நிறத்தின் காரணமாக வெள்ளா டென்ற பெயர் வழங்கிற்று.

"பூங்கொடி அவரைப் பொய்யதள் அன்ன
உள்ளில் வயிற்ற வெள்ளை வெண்மறி

மாழ்கி யன்ன தாழ்பெருஞ் செவிய
புன்தலைச் சிறுரோ டுகளி மன்றுழைக்
கவையிலை ஆரின் அங்குழை கறிக்கும்''

—அகம், 104.

'' நிலைக் கோட்டு வெள்ளை நால்செவிக் கிடாஅய் ''

—அகம், 156.

'' தகர்விரவு துருவை வெள்ளையொடு விரைஇக்
கல்லென் கடத்திடை கடலி னிரைக்கும்
பல்யாட் டினநிரை யெல்லினிர் புகினே''

—மலைபடுகடாம், வரி. 414-416.

'' கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கு
மிடுமுள் வேலி யெருப்படு வரைப்பின்

—பெரும்பாண், வரி. 153-154.

வெள்ளாட்டின் கொம்பு 'நிலைக் கோடு' என்றும் காது கவிந்துள்ளதை 'நால் செவி' என்றும் 'தாழ் பெரும் செவி' என்றும் விளக்கப்பட்டுள்ளது. மொச்சைக் காயில் உள்ளீடற்ற காய்போல வெள்ளாட்டுக்குட்டி காணப்பட்டதாகக் கூறுவதையும் ஆத்திச் செடியின் இலைகளை வெள்ளாடு கறிப்பதையும் அகநானூறு கூறுகின்றது. வெள்ளாடு ஆத்திச் செடியின் இலைகளை விரும்பி உண்பது இன்றும் காணக்கூடிய உண்மைச் செய்தியாகும். செம்மறியாடு அறுகம் புல்லைத் தின்பதாகக் கூறுவதையும் வெள்ளாடு இலைகளைத் தின்பதாகக் கூறுவதையும் கவனிக்க வேண்டும். கொங்கு நாட்டில் மாட்டினத்தில் சிறந்த இனத்தைக் குறிப்பிட்டது போல ஆட்டினத்திலும் சிறந்த இனத்தைப் பூழி நாட்டில் காணப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

" யாரணங் குற்றனை கடலே பூழியர்
சிறுதலை வெள்ளைத் தோடுபரந் தன்ன
மீனார் குருகின் கானலம் பெருந்துறை"

—குறுந்தொகை, 163.

" மரம்பயில் சோலை மலியப் பூழியர்
உருவத் துருவின் நாண்மேயல் ஆரும்"

—நற்றிணை, 192.

பூழிநாடு என்பது மலையாளத்தில் பொன்னனியைச் சேர்ந்த பகுதியாகும். இதைச் சேர அரசர்கள் வென்ற தாகச் சங்க நூல்கள் கூறும். இந்தப் பூழிநாட்டிலும் அதற்கருகிலும் இன்றும் சிறந்த இன வெள்ளாடுகளைக் காண்கிறோம். இவை பிறபிறக் கலப்பின்றி வெண்மை யாகவே காணப்படுகின்றன. நிறையப் பால் தருகின் றன. இந்த இனத்தைத் 'தலைச்சேரி ஆடு' (Tellicherry goat) என்று தனியான சிறந்த இனமாக இன்று அறிஞர் கருதுகின்றனர். இந்த இன ஆட்டையே சங்க நூல் கூறும் பூழியர் ஆடாகக் கருத வேண்டும்.

ஒட்டகம் தமிழ்நாட்டுக்குரிய விலங்கன்று. ஆனல் தொல்காப்பியர் காலத்திலேயே ஒட்டகம் தமிழ் நாட்டில் பயன்படுத்தப் பட்டிருக்கும்.

" ஒட்டக மவற்றோ டொருவழி நிலையும்"

—மரபியல், 18.

" ஒட்டகம் குதிரை கழுதை மரையிவை
பெட்டை யென்னும் பெயர்க்கொடைக் குரிய"

—மரபியல், 58.

ஒட்டகத்திற்கு மரபுப் பெயர்கள் வழங்குமளவு பழகிப் போய் விட்டதாகத் தெரிகின்றது. சங்க இலக்கியத்தில் இரு பாடல்களில் ஒட்டகம் சொல்லப்பட்டுள்ளது.

" குறும்பொறை யுணங்குந் தகர்வெள் ளென்பு
கடுங்கால் ஒட்டகத் தல்குபசி தீர்க்கும்
கல்நெடுங் கவலைய கானம் நீந்தி"

—அகம், 245.

" ஓங்குசினை யொட்டகந் துயின்மடிந் தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறைகிற்"

—சிறுபாணற்றுப்படை, வரிகள் 154-155.

ஒட்டகத்தைப் பாலைப்பாங்கான நிலத்தைக் கடப்பதற்குப் பயன்படுத்தியதை அகநானூறு 245ஆம் பாடல் கூறுகின்றது. பாறைகளில் வறண்டிருந்த எலும்பை ஒட்டகம் தின்றதாகக் கூறியிருப்பது செவி வழிச் செய்தியாகத் தோன்றுகின்றது. ஒட்டகம் எலும்பைத் தின்பது உண்மையன்று. ஒட்டகம் தூங்கும் போது அதன் முதுகு நெளிந்திருப்பது அகில் மரங்கள் குவித்து வைத்தது போல இருந்ததாகக் கூறியது ஒட்டகத்தின் உருவத்தைக் குறிப்பாக உணர்த்துகின்றது. ஒட்டகம் இந்தியாவிற்கு வெளிநாட்டில் இருந்து வந்ததெனத் தெரிகின்றது. ஆனால் தமிழ்நாட்டில் கி. பி. முதல் நூற்றாண்டிற்கு முன்னரே பயன்படுத்தி இருக்க வேண்டும். ஒட்டகம் என்ற பெயர் வடமொழியிலிருந்து தமிழில் வழங்கியதென்று தெரிகின்றது.

சங்க இலக்கியத்தில் 'அத்திரி' என்றொரு விலங்கு வழங்குகின்றது.

" கழிச்சேறு ஆடிய கணைக்கால் அத்திரி
குளம்பினுஞ் சேயிறா ஒடுங்கின
கோதையும் எல்லாம் ஓதைவெண் மணலே"

—நற்றிணை, 278.

" கழிச்சுறு எறிந்த புட்டாள் அத்திரி
நெடுநீர் இருங்கழிப் பரிமெலிந் தசைஇ
வல்வில் இளையரோ டெல்விச் செல்லாது "

—அகம், 120.

" கொடுநுகம் நுழைந்த கணைக்கால் அத்திரி
வடிமணி நெடுந்தேர் பூண ஏவாது "

—அகம், 350.

" அகவரும் பாண்டியும் மத்திரியு மாய்மாச்
சகடமுந் தண்டார் சிவிகையும் பண்ணி "

—பரிபாடல், 10 : 16 - 17

" தாரணி மார்பனொடு பேரணி யணிந்து
வான வண்கைய னத்திரி யேற
மானமர் நோக்கியும் வைய மேறிக் "

சிலப்பதிகாரம், 6 : 118 - 120.

அத்திரி என்னும் விலங்கைக் குதிரை போன்று பயன் படுத்தியதாகத் தெளிவாகின்றது. நெய்தல் நிலத்தில் கழிகளிலும் சேற்றிலும் மணலிலும் செல்வதற்கு அத்திரி உதவியதாகத் தோன்றுகின்றது. கணைக்கால் அத்திரியின் குளம்பில் சேயிறு ஒடுங்கினதாகக் கூறிய தைக் காணலாம். அத்திரியின் மேல் இவர்ந்து செல்வது வழக்கமாக இருந்தது. நுகத்தில் பூட்டித் தேரிழுக்கவும் பயன்படுத்தினர். நீராடுந் துறைக்கு விழாக்காலத்தில் அத்திரியில் இவர்ந்து பெருவணிகர்கள் செல்வதைச் சிலப்பதிகாரமும் பரிபாடலும் கூறியுள்ளது. கோவலன் இராசவாகனமாகிய அத்திரி யேறினான் என்று அடியார்க்குநல்லார் உரை கூறியதி லிருந்து கோவேறு கழுதை என்ற பெயர் வந்த முறை விளங்குகின்றது. அத்திரி என்ற விலங்கு ஆண் கழுதையும் பெண் குதிரையும் இணைந்து பெற்ற கலப்

பின விலங்கு. இது பொதி சுமக்க நன்கு உதவும். சங்க காலத்தில் இவ்விலங்கு கடல் வழியாக இறக்குமதியாகி யிருக்கலாம்.

குதிரையைப் பற்றியும் சங்க நூல்களில் பல பாடல்களில் செய்திகள் வருகின்றன. தேரில் பூட்டியும் இவர்ந்து போர் புரியவும் குதிரைகள் பயன் பட்டன. மழவர் என்றொரு வீரர் குதிரைகளை ஓட்டுவதில் சிறந்தவராகக் கருதப்பட்டனர். "மழவர் ஓட்டிய உருவக் குதிரை" என்று அகநானூறு அவருடைய அழகிய வடிவான குதிரைகளைக் குறித்துக் கூறியுள்ளது. குதிரைகள் தமிழ்நாட்டிற்கு இறக்குமதியானதை மார்க்கோ போலோ பிற்காலத்தில் கூறியிருக்கிறார். சங்க காலத்திலேயே குதிரை தமிழ்நாட்டில் கடல் வழியாக இறக்குமதி செய்யப்பட்டதை "நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்" என்று வரும் பட்டினப் பாலைவரி குறிப்பிடுகின்றது. காவிரிப்பூம்பட்டினத்தில் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. பிற்காலத்தில் காயல்பட்டினத் துறைமுகத்தில் குதிரைகள் கப்பல் வழியாக இறக்குமதியாயின. குதிரைகளில் வெள்ளைநிறக் குதிரைகளைச் சிறப்பாகக் கருதினர். "பால் புரை புரவி நால்குடன் பூட்டி" என்று பொருநராற்றுப்படை கூறுகின்றது.

"பல்புரிந் தியறல் உற்ற நல்வினை
நூலமை பிறப்பின் நீல உத்திக்
கொய்ம்மயிர் எருத்தம் பிணர்படப் பெருகி
நெய்ம்மிதி முனைஇய கொழுஞ்சோற் றார்கை
நிரலியைந் தொன்றிய செலவிற் செந்தினைக்
குரல்வார்ந் தன்ன குலவுத்தலை நன்னான்கு
வீங்குசுவல் மொசியத் தாங்குநுகம் தழீஇப்

பூம்பொறிப் பல்படை ஒலிப்பப் பூட்டி
மதியுடை வலவன் ஏவலின் இகுதுறைப்
புனல்பாய்ந் தன்ன வாமான் திண்டேர்க் ''

— அகம், 400.

அகநானூறு நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர் செல்வதை விளக்கமாகக் கூறுகின்றது. சங்க காலத்திலேயே புரவி நூல் என்ற ஒரு நூல் குதிரைகளின் இலக்கணம் கூறியதெனத் தெரிகின்றது. நீல மணியாலாகிய நெற்றிச் சுட்டியும் அழகாகக் கழுத்து மயிர் வெட்டப்பட்டும் குதிரைகள் காணப்பட்டன என்று கூறப்பட்டுள்ளது. மார்க்கோ போலோ எழுதிய நூலில் சோழநாட்டில் இறக்குமதியான குதிரைகளுக்கு நெய்கலந்த சோறு அளிக்கப்பட்டதும் அதனால் குதிரைகள் விரைவில் மெலிவுற்று, வலிவற்றுப் போவதும் கூறப்பட்டுள்ளது. பொருத்தமற்ற உணவு கொடுத்ததன் காரணமாக குதிரைகளை இழந்து மேலும் மேலும் குதிரைகளை அரேபியாவிலிருந்து வாங்குவதையும் கூறுவதைக் காண்கிறோம். சங்க காலத்திலேயிருந்தே இத்தகைய பொருந்தா உணவான நெய்கலந்த சோற்றைக் குதிரைக்களித்து வந்த செய்தி (அகம், 400) குறிப்பிடத்தக்கது.

கழுதையும் சங்க காலத்தில் தமிழ் நாட்டில் பயன்படுத்தப்பட்ட பழகிய விலங்காகும். கழுதை இன்றும் இந்திய நாட்டில் "கட்ச்" (Cutch) பகுதிகளில் பாலைவனத்தில் இயற்கையாக, பழக்கப்படாத நிலையில் வாழ்கின்றன. கழுதைகள் பழங்காலத்திலேயே பழக்கப்படுத்தப்பட்டு, பொதிசுமக்கும் விலங்காகப் பயன்படுத்தப்பட்டன.

" பொறைமலி கழுதை நெடுநிரை தழீஇய
திருந்துவாள் வயவர் அருந்தலை துமித்த "

—அகம், 89.

" நிரைப்பரப் பொறைய நரைப்புறக் கழுதைக்
குறைக்குளம்பு உதைத்த கற்பிறழ் இயவின்
வெஞ்சுரம் போழ்ந்த அஞ்சுவரு கவலை "

—அகம், 207.

" நெடுஞ்செவிக் கழுதைக் குறுங்கால் ஏற்றைப்
புறநிறைப் பண்டத்துப் பொறையசாஅக் களைந்த"

—அகம், 343.

" வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
வெள்ளை வரகுங் கொள்ளும் வித்தும் "

— புறம், 392.

" புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்
தணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கு
முல்குடைப் பெருவழிக் கவலை காக்கும் "

—பெரும்பாண், 79 - 81.

கழுதைகளை நிரையாக ஓட்டிச் சென்று பொதிசுமக்கப் பயன்படுத்தினர். அரிய சுரங்களைக் கடக்கவும் சாத்தொடு செல்லவும் கழுதைகள் பயன்பட்டன. கழுதையின் நிறம் 'நரைப்புறம்' (grey back) என்று கூறப்பட்டுள்ளது. கழுதையின் வாய் 'வெள்வாய்' என்று சொல்லப்பட்டது பொருத்தமே. நெடுஞ்செவி, அணர்ச்செவி என்று கழுதையின் காது கூறப்பட்டதோடு 'குறுங்கால்' என்றும் கழுதையின் கால்கள் குறிப்பிடப்பட்டது. பகைவர்களை வென்று அவர் நிலத்தைக் கழுதை பூட்டிய ஏரால் உழுது பின்னர்க் கொள்ளும் வரகும் விதைத்து விடுதல் வழக்கம் என்பதையும்

அறிகிறோம். தொல்காப்பியர் காலத்திலேயே குதிரையும் கழுதையும் தமிழ் நாட்டில் நன்கு பழக்கப்பட்ட விலங்குகளாக இருந்தன. ஆதலின் மரபியலில் இவற்றிற்குரிய பெயர்கள் விளக்கப்பட்டுள்ளன. குறிப்பாகக் குதிரையுள் ஆணிற்கு 'சேவல்' என்ற பெயர் வழங்கும் என்று தொல்காப்பியம் கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

## உக. கவரிமா

சங்க இலக்கியத்தில் கூறப்படும் பிற நாட்டு விலங்குகளில் கவரிமா என்பது மொன்ருகும். இக் கவரிமாவைப் பற்றித் திருக்குறளும் கூறியுள்ளது.

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின்" (969)

என்று வரும் குறள்பாட்டு யாவரும் அறிந்தவொன்று. இக்குறளுக்கு உரையாசிரியர்கள் அனைவரும் ஏறக் குறைய ஒரே பொருள்படும்படி உரை கூறிச் சென்றனர். தன் மயிர்த்திரளின் ஒருமயிர் நீங்கினும் உயிர் வாழாக் கவரிமாவை ஒப்பார் மானம் எய்துங் கால் உயிர் நீங்குபவர் என்று பரிமேலழகர் பொருள் கூறினர். ஒரு மயிர் நீங்கின் கவரிமாவைப் போன்ற மானமுடையார் மானம் அழியவரின் உயிர் விடுவர் என்று மணக்குடவர் பொருள் கூறினர். பரிப்பெருமாளும் மணக்குடவர் கூறிய முறையில் உரைத்தார். பரிதியார் இன்னும் விளக்கமாகக் கூறுவதுபோல் ஒரு மயிர் சிக்கினல் பிராணனைவிடும் கவரிமான்போல மானம் வந்தால் பிராணனை விடுவர் நல்லோர் என்ருர். காளிங்கரோ அதைவிட ஒருபடி தாண்டி தன் கற்பனையை உலவவிட்டு, "தனக்கு அலங்காரம் ஆகிய மயிற்க்கற்றையின் ஒரு மயிர் போகின் மானித்துப் பின் உயிர்வாழாது அம்மயிர் துவக்குண்ட இடத்து நின்று வற்றி விடூஉம் கவரிமா அன்ன கடப்பாடுடையார்" என்று கூறினர். இந்த உரைகளிலிருந்து தெரிவது என்ன? உரையாசிரியர்கள் கவரிமாவைப்பற்றித்

தெளிவாக அறிந்தவர்கள் அல்லர் என்பது தெரிகின்றது.

சங்கப் பாடல்களில் இயற்கையை உள்ளது உள்ள படியே கூறும் உணர்வு மிகுந்து காணப்படுவதை யாவரும் அறிவர். ஆனால் பிற்காலப் பாடல்களில் இல்லாததை உள்ளதுபோல விதந்துகூறும் போக்கைக் காண்கின்றோம். சங்கப் புலவர்கள் கவரிமாவைப் பற்றித் தெரிந்து இருந்தனர் என்பதைச் சங்க நூலில் இரு இடங்களில் வரும் குறிப்புகளிலிருந்து அறிகின்றோம். கவரிமா வாழும் இடத்தை, சூழ்நிலையை நன்றாக அறிந்திருந்தனர் என்று தெரிகின்றது. செவிவழிச் செய்தியாகவோ, கண்டாரிடம் கேட்டதாகவோ, நூல்வழி அறிந்ததாகவோ இருக்கலாம்.

"நரந்தை நறும்புன் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனை பருகி யயல
தகரத் தண்ணிழற் பிணையொடு வதியும்
வடதிசை யதுவே வான்றோ யிமயம்"

என்று வரும் புறநானூற்றும் பாடலில் (132) நரந்த புல்லை மேய்ந்த கவரி குவளைப்பூ நிறைந்த சுனையில் நீர்பருகி அருகில் இருந்த தகரமர நிழலில் தன் துணையொடு வாழும் வடதிசையில் வானை அளாவும் இமயம் இருப்பதாகக் கூறப்பட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

"கவிர்ததை சிலம்பிற் றுஞ்சுங் கவரி
பரந்திலங் கருவியொடு நரந்தங் கனவும்
ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்"

எனவரும் பதிற்றுப்பத்துப் பாடல் வரிகளில்-11: 21-23 கவரி வாழுமிடம் இமயம் என்றே கூறப்பட்டிருக்

கின்றது. கவரி இமயத்தில் மிக உயரத்தில் வாழும் விலங்கு, ஆரியர் வாழுமிடத்தில் இருக்கும் விலங்கு என்பதைச் சங்கப்புலவர்கள் தெரிந்து வைத்திருந்தனர் என்பது தெளிவு. கவரிமா தமிழ் நாட்டு விலங்கன்று.

இமயமலையில் மயிர்த்திரளோடு வாழும் அத்தகைய விலங்கு யாது என ஆராய்ந்து பார்க்க வேண்டும். இமயமலையில் வாழும் விலங்குகளில் மனிதரோடு பழகி வாழும் விலங்கு 'யாக்' (Yak) எனப்படும் விலங்கேயாகும். இதையே கவரிமா என்று சங்கப்பாடல்கள் கூறுகின்றன. கவரியை ஈந்த விலங்கு கவரிமா எனப்பட்டது. பனிக்கரடி இமயமலையில் வாழினும் மனிதரால் நெருங்கமுடியாத கொடிய விலங்கு. திபெத்திய மொழியில் 'யாக்' என்று அழைக்கப்படும் கவரிமா எருதுபோன்றதொரு பொதி விலங்காகும். உயர்ந்த மட்டத்திலுள்ள பனிப்பாறைகளிலும், அடிவாரத்திலும் வாழ்வது. உலகத்திலேயே குளிர்ந்த பகுதியான உயர்ந்த மலைகளில் வாழும் விலங்குகளில் இது சிறப்பானது. இது காட்டிலும் வாழும். வீட்டிலும் வளர்க்கப்படுவதுண்டு. உயர்ந்த இடத்தில் குளிர்ந்த சூழ்நிலையில் வாழ்வதால் இதற்குக் கடுங்குளிரைத் தாங்கத் தடித்த மயிர்க்கற்றைகளாலான உடற்போர்வை இருக்கின்றது. இதன் மயிர் நிறைந்த தோலையே சிறந்த ஆடையாகவும் மயிரினால் செய்த ஆடையைப் பாயாகவும் திபெத்தியர் பயன்படுத்துகின்றனர். எவரெஸ்ட் முதலிய மலையுச்சிகளில் ஏறுபவர்களும் இவ்விலங்கின் மயிர்க்கற்றையை ஆடைகளில் பயன்படுத்துகின்றனர். திபெத்தில் வாழும் மக்கள் இவ் விலங்கிலிருந்து பெறும் மயிராடையைப் பெரும்பாலும் உடுத்துகின்றனர். இத்தகைய

தடித்த ஆடைகள் இல்லையெனில் மனிதர் இங்கு உயிர் வாழ்வது இயலாது.

வள்ளுவர் இவ் விலங்கைப்பற்றி உண்மையான, இயற்கைக்குப் பொருத்தமான செய்தியை உவமையாகப் பயன்படுத்தியிருக்கிறார். உண்மையறிவு குறைந்த பிற்காலத்தில் உரையாசிரியர்கள் கற்பனையும் உண்மைக்குப் புறம்பானதுமான ஒரு கதையைக் கவரிமாவின்மேல் பொதியேற்றி உலவவிட்டனர் என்று கருத வேண்டியிருக்கின்றது. நேரிய பொருள் ஒன்று இருக்க உரையாசிரியர்கள் கூறிய பொருள் வேறொன்றாக விருக்கக் காண்கிறோம். **மயிர்க்கற்றையை இழந்தால் தான் வாழுமிடத்தில் உயிர்வாழமுடியாத கவரிமாவைப்போல, மானத்தை இழக்கும் சூழ்நிலையில் மானமுடையோர் உயிரோடு வாழமாட்டார்.** என்பதுதான் இக் குறளுக்கு நேரிய பொருள். சங்கப்புலவர்கள் கவரிமாவைப் பற்றி உண்மையான செய்தியை அறிந்திருந்த போது, வள்ளுவர் கவரிமாவைப்பற்றி நன்றாகத் தெரியாதிருந்தார் என்று கருதுவதற்குக் காரணம் யாதுமில்லை. கவரிமாவைப்பற்றித் தாம் பின்னும் தெளிந்த செய்தியையே வள்ளுவர் அழகிய உவமையாகக் கையாண்டிருக்கிறார் என்பதை உணர வேண்டும். இயற்கையில் உண்மையாகக் கண்ட செய்தியை உணராத பிற்காலத்துப் புலவர்களும் ஆசிரியர்களும் உயர்வு நவிற்சியின் காரணமாகக் கற்பனையில் மூழ்கி நுண்மாண் நுழைப்புலத்தைக் காட்டினர். ஒருமயிர் நீங்கின் வாழாத கவரிமா இன்றும் அன்றும் இயற்கையில் காணக்கூடாத தொன்றும். விலங்கிற்கு அத்தகைய மான உணர்ச்சி

உண்டு என்பதை அறிவியலார் எவரும் ஒப்பார். விலங்கிற்கு அத்தகைய நுண்ணிய உணர்வு இருப்பதாக விலங்கு நூலார் கூறவில்லை. மானம் எனும் உணர்ச்சி பகுத்தறிவும் அறிவிலிருந்தும் பிறப்பது. தமிழில் உயர்திணையில் விலங்குகள் சேர்க்கப்படவில்லை. ஆதலால் இந்தக் கற்பனைக் கதை எப்படி எழுந்ததென்று தெரியவில்லை. இதன் அடிப்படையாகப் பல கற்பனைகள் பரவலாயின. பரிதியார், மயிர் சிக்கினால் பிராணனை விடும் கவரி என்று கூறினர். ஒரு மயிரை இழந்து உயிரை விடுவதாகக் கூறுவதை விட, மயிர் நீங்கி உயிரைவிடுவதாகக் கூறுவதைவிட, மயிர் சிக்கி உயிரைவிடுவதாகக் கூறுவது பொருத்தம் என்று எண்ணினர் போலும். பெருங்கதையில் அவ்வாறே கூறப்பட்டுள்ளது. ஆனால் காளிங்கர் கற்பனையின்மேல் ஒரு கற்பனையை ஏற்றினர். தனக்கு அலங்காரம் ஆகிய மயிர்க்கற்றையில் ஒரு மயிர் போகின் மானித்து உயிர்வாழாது என்று அலங்காரமாகக் கூறிச் சென்றார். கவரிமாவை நேரிலோ அல்லது படத்திலோ பார்த்தவர்கள் அப்படியொன்றும் அலங்காரமான 'கூந்தல்மாவாக'க் கவரிமாவைக் கருதார்கள். மகளிரின் கூந்தலை அலங்கரிக்கக் கவரிமாவின் மயிர்க்கற்றை உதவினதே தவிர கவரிமாவுக்கு அத்தகைய அலங்காரம் அதன் மயிரிலிருந்து கிடைப்பதாகத் தெரியவில்லை! சீவகசிந்தாமணி 'மானக்கவரி' (2120) என்று கொண்டது. கம்பர் "மானமா வனைய காட்சியர்" என்று பாடினர். ஆனால் மானத்தைத் தமிழர் ஒரு கவசமாக, போர்வையாகக் கருதினரென்று தெரிகின்றது. அந்த மானத்தை இழந்தால் உயிர் வாழக் கூடாது என்று கருதினர்.

சங்க காலத்திலேயே கவரியின் மயிரைக் கூந்தலழுக்கு மகளிர் பயன்படுத்தியதாகத் தெரிகின்றது.

"கவரி முச்சிக் கார்விரி கூந்தல்
ஊசன் மேவற் சேயிழை மகளிர்"

என்று வரும் பதிற்றுப்பத்துப் பாடல் வரிகள் (43: 1-2) சேயிழை மகளிரின் கூந்தலுக்குக் கவரி தந்த உதவியைக் கூறியிருக்கின்றது. அக்காலத்திலேயே, தமிழ் மகளிர் கூழைக்கற்றையை நெடிதாக்கவோ, இழந்த மயிரை நிறைக்கவோ கவரிமயிரை நம்பினர். மயிரை இழந்த மகளிரே உயிரை இழக்கவில்லையெனும்போது, கவரி மயிரை யிழந்து உயிரை விட்டதாகக் கூறுவது கற்பனையே தவிர வேறன்று. கவரிமாவின் மயிர் மகளிர் கூந்தலுக்கு உதவியதுபோல, கூந்தல் மாவிற்கு உதவியிருப்பதை, "ஆய்மயிர் கவரிப் பாய்மா" என்று வரும் பதிற்றுப்பத்துப் பாடல்வரி தெரிவிக்கின்றது. குதிரையின் தலையாட்டத்திற்கு, நிறமூட்டிய கவரிமயிர் உதவி வருவது இன்றும் காணப்படும் செய்தியாகும். இந்த வகையில் அன்று மகளிரின் தலையலங்காரத்திற்கும் குதிரையின் தலையலங்காரத்திற்கும் ஓர் ஒப்புமை இருந்தது. ஆனால் இன்று மகளிரின் தலையலங்காரத்திற்குக் குதிரையின் வாலுக்கும் (Pony Tail) ஒப்புமை காண்பது நகைப்புக்கிடமாகின்றது. கவரியில் இருந்துதான் சவரி மயிர் தோன்றியது. கவரி என்ற சொல்லே சவரி ஆயிற்று. கவரிமயிரினால் செய்த சாமரம் கவரி என்று அழைக்கப்பட்டது. கவரி என்ற சொல் முதலில் அழகிய மயிர்க்கற்றையைக் குறித்துப் பின்னர் அந்த மயிர்க்கற்றையைத் தரும் விலங்கிற்குப் பெயராயிற்று.

கவரிமாவின்மேல் வள்ளுவர் கொள்ளாக் கற்பனைக் கதையை உரையாசிரியர்கள் ஏற்றியபிறகு, நிகண்டாசிரியர்கள் அதன் அடிப்படையில் கவரிமாவை 'மானமா' என்றழைக்கலாயினர். கவரிமா மானத்திற்கு இலக்கணம் வகுத்த மாவாயிற்று. கவரிமா என்று அழைக்கப்பட்ட விலங்கை பிற்காலத்தில் 'கவரிமான்' என்று அழைக்கலாயினர். அதனால் ஆனினத்தைச் (Bovine) சேர்ந்த கவரிமாவை மானினத்தில் சேர்த்து மருளலாயினர். மாவென்றால் விலங்கென்றே பொருள். மான் என்று மானினத்தில் சேர்த்தது பொருத்தமன்று. மேற்கூறியவைகளிலிருந்து கவரிமா 'மானமா' அன்று என்பது தெளிவுபெறும். வள்ளுவரும் அதை மான்மாவாகக் கையாளவில்லை என்பதும் தெரியப் பெறும்.